
கலைஞரின்
கடிதங்கள்



33

13.03.2002 - முதல்
11.07.2002 - வரை

சீதை பதிப்பகம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 33

13.03.2002 - 11.07.2002

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் அன்பழகன் நூலக இயக்கம்
சென்னை-18
அறிவாலயம்

தலைவர் கலைஞர்

சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549/97907 06548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்

9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

AVAILABLE @ :

GOWRA AGENCIES

NO : 1 SAMY STREET,
SAI BABA TEMPLE BACK SIDE
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.

GOWRA PUTHAGA MAIYAM

9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்

எண்.1 சாமி தெரு,
சாய் பாபா கோவில் பின்புறம்
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்

KALAIGNARIN KADITHANGAL

விலை : ரூ.300.00


CODE :2300

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஓய்வு
கலைஞரின் செயலாளர்கள்
பொருள் : கடிதம்
© உரிமை :
பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை–2.
ISBN :

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE
© RIGHTS :
PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
CLASSIC PRINTERS, CHENNAI - 2.
ISBN :

4224O
894.8116
கலை.ச

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் அன்பழகன் நூல் இலையம்
சென்னை-113
உரிமைக்கான அறிவாயுதம்



அம்மாவுக்கு...

கௌரா பதிப்பகக் குழுமம்

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

"கலைஞரின் கடிதங்கள்" அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய – பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை – சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் – பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் "அணி"யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 36 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் “கோகிலாம்பாள் கடிதங்கள்”, இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய “அன்னைக்கு’, "தம்பிக்கு”, “நண்பர்க்கு’, "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் “தம்பிக்கு” கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய “உடன்பிறப்புக்கு” கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில்

கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம் ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க." என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

"எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, "அன்பு நண்பா !" என விளித்து, "ஜாக்குலின்கள்" என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் "முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ’

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

"காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி"
"மகுடி ஊதும் மகானுபாவர்கள்’’
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
"கண்ணீரும் பன்னீரும்”

“படமும் பாடமும்”
“மூலவர் மூவர் முரசொலி”

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். -

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

"நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!"
"எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?"
"கண்ணுக்கு விருந்தானாய் - மனப் புண்ணுக்கு மருந்தானாய்!"
"அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?”
"இடர் எது வரினும், ஏற்பேன்"
"பறித்து வராத பாரிஜாதம்"

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! “யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!”

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. **4051 கடிதங்களைக் கொண்ட54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	ஆண்டு	பக்கம்
2632. உயிரைக் கொடுத்தேனும் உறுதிமொழி காப்போம்!	13-3-2002	23
2633. மறுப்பதால் பயனில்லை; மறு பரிசீலனை செய்திடுக!	15-3-2002	27
2634. அதை நினைத்துப் பெருமூச்சு விடுவோம்!	17-3-2002	32
2635. இந்த ஜனநாயகக் கொலை, இனியும் தொடருவதோ?	18-3-2002	36
2636. விவசாயிகளின் வயிற்றில் அடிக்காதீர்கள்!	19-3-2002	40
2637. இதையும் கொஞ்ச காலம் ரசிப்போம்!	20-3-2002	43
2639. பாலா! என்ன நடக்கிறது இந்த நாட்டில்?	21-3-2002	48
2638. கல்கி இதழ் சரியாகக் கணித்துக் கூறியுள்ளது!	22-3-2002	51
2640. மாற்றம் எதுவுமில்லை என்பதற்காக மகிழ்கிறோம்!	24-3-2002	53
2641. கழகப் பொதுக்குழு கண்டுள்ள முடிவு!	26-3-2002	57
2642. அரசு தடுக்குமா? அவலம் தொடராமல்!	27-3-2002	59

2643. பட்ஜெட் பாதிப்புக் கண்டனக் கூட்டங்கள்!	29-3-2002	66
2644. ஆகும் நெறியும்; விடியலுக்கு அறிகுறியும்!	1-4-2002	71
2645. மதுராந்தகத்தின் பவள விழா!	2-4-2002	73
2646. மினி பட்ஜெட் தந்தவர்களின் மினி எமர்ஜென்சி!	3-4-2002	76
ஆணையர் எழுதிய கடிதமும் அது அமலாகும் விதமும்!	06-04-2002	84
2648. பார்; பார்; அன்றும் பார்! இன்றும் பார்!	7-4-2002	90
2649. பாபு ஜெகஜீவன் பாராட்டு; பாப்பாக்கள் அறிவரோ?	8-4-2002	93
வாய் தவறியது அல்ல; வாய்மை தவறிய செயல்!	12-04-2002	98
2650. நிதி அமைச்சருக்குத் தேவை நிதானப் பார்வை!	10-4-2002	102
2650. காவிரிப் பிரச்சினை: துரோகம் செய்தது யார்?	11-4-2002	107
2651. பாமரர் நிறைந்த பட்டிக்காடு; பஞ்சாயத்து சபையில் அவர்களே பலர்!	13-4-2002	117
2653. மாபெரும் துரோகமா? மனச்சாட்சி பதில் கூறுமா?	14-4-2002	120
2654. உழவர் துயர் துடைக்க ஓரணியில் திரள்வீர்!	16-4-2002	126
2655. திசை திருப்பும் தீர்மானம்; திரை விலக்கும் உண்மைகள்!	17-4-2002	130
2656. பெண்ணுரிமைப் போர் பெரும் வெற்றி பெற!	19-4-2002	136

2657. உளவுத்துறையே உனக்கேன் இந்தக் கறை?	21-4-2002	140
2658. அம்பேத்கர் பெயர் சொல்லி ஓர் அபாண்டமா?	22-4-2002	145
2659. கட்டுரையாளரைக் கைகுலுக்கிப் பாராட்டுவேன்!	23-4-2002	150
2660. முடிச்சு போட்டால் நான் பொறுப்பல்ல!	24-4-2002	156
2661. எதிர்க்கட்சி வரிசையினர் எண்ணிப் பார்த்திட!	25-4-2002	160
2663. விரல் நுனியில் புள்ளி விபர வேடிக்கை பாரீர்!	28-4-2002	166
2664. தமிழா! தடந்தோள் தட்டிக் கிளம்பிடடா!	29-4-2002	171
2665. ஆட்டுக்குட்டித் திருட்டும் ரூ.5 லட்சம் களவும் ஒன்றாகுமா?	30-4-2002	174
2666. அந்த நாள் ஞாபகம் வந்ததே! நண்பனே, நண்பனே!	1-5-2002	178
2667. துரோகத்தைப் பற்றி இவர்களா பேசுவது?	2-5-2002	183
2668. முகமூடி கிழித்தெறிவோம் வாரீர்!	3-5-2002	190
2670. விடுதலை நாள் வெள்ளிவிழாக் கவிதை!	5-5-2002	194
2671. வணிகர், நுகர்வோர் நலன் நாடிய கழக ஆட்சி!	8-5-2002	202
2672. சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றக் கோரி இந்தியப் பிரதமருக்கு தலைவர் கலைஞர் கடிதம்	9-5-2002	209

2673. மனமாற்றம் போக்கிட மறு சிந்தனை தேவை!	10-5-2002	215
2674. சவுக்கடி சர்க்காரும் சரித்திர உண்மையும்!	11.5.2002	219
2675. புதிய மக்களவைத் தலைவர் மனோகர் ஜோஷிக்கு தலைவர் கலைஞர் வாழ்த்து	12-5-2002	224
2676. ஜனநாயக வேடத்தில், சர்வாதிகார வேங்கை!	12-5-2002	225
2677. பொய்க்கோட்டை, பொல பொலவென உதிரும்!	13-5-2002	231
2678. அன்னையைப் பற்றி அண்ணா, எம்.ஜி.ஆர்., சிவாஜி!	14-5-2002	235
2676. தமிழ்ச் சாதி என அணி வகுப்பது எப்போது?	15-5-2002	242
2680. நான் ஆற்ற வேண்டிய பணியையும் ஏற்று நடத்திடுக!	16-5-2002	246
2681. ''காலுசக் படுகொலை!'' தலைவர் கலைஞர் கண்டனம்	17-5-2002	251
2682. கூழாங்கல்லும் வைரமும் ஒன்றெனக் கூறுவதோ?	19-5-2002	253
2683. கேள்வி கேட்கக் கூடும்; கேலி பேசவும் கூடும்!	20-5-2002	257
2684. செயலில் செம்மை வேண்டி இந்தச் சிறுகதை!	21-5-2002	261
2685. விவசாயிகள் ஏந்திய விளக்கு! பாரதி மோகன் மறைவுக்கு தலைவர் கலைஞர் இரங்கல்	21-5-2002	265
2686. மீலாடி நபி வாழ்த்து	25-5-2002	266

2687. கட்டுப்பாடு குலையாமல் கழகப் பயணம் செல்க!	26-5-2002	267
2688. வேல் போல் பறந்து வெற்றி பறித்திடு!	31-5-2002	269
2689. இடைத்தேர்தல்: வாக்குப்பதிவு நாளில் உடன்பிறப்புகளுக்கு கலைஞர் வேண்டுகோள்	31-5-2002	270
2690. அனைத்து வாக்குச்சாவடிகளிலும் அராஜகம் - அலங்கோலம்	2-6-2002	271
2691. அரசியலில் இருந்து யாரை விலகச் சொல்கிறீர்?	7-6-2002	274
2692. 'இருந்தும் கெடுத்தான்' எனும் நிலையை இனியும் கழகம் அனுமதிக்காது!'	10-6-2002	279
2694. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்	14-6-2002	284
2695. ஆர்ப்பாட்டப் பேரணியில் போர்ப்பாட்டு முழங்க வருக!	15-6-2002	287
2696. தமிழ் வளர்ப்போம் என்று தமிழ் அழிப்பார்!	20-6-2002	292
2697. கண் இமைக்காத கழகமெனும் காளை!	21-6-2002	296
2698. மொழிப்போரில் ஒரு களம் (1)	23-6-2002	298
2699. மொழிப்போரில் ஒரு களம் (2)	24-6-2002	303
2700. மொழிப்போரில் ஒரு களம் (3)	25-6-2002	309
2701. மொழிப்போரில் ஒரு களம் (4)	26-6-2002	315
2702. மொழிப்போரில் ஒரு களம் (5)	27-6-2002	320

2703. மொழிப்போரில் ஒரு களம் (6)	28-6-2002	326
2704. மொழிப்போரில் ஒரு களம் (7)	29-6-2002	333
2705. வளமும் வலிமையும் வழங்கும் வற்றாத ஜீவநதி!	30-6-2002	338
2706. மூன்றெழுத்திலே மூச்சிருக்கும்!	1-7-2002	343
2707. அநீதியை எதிர்த்து நாம் நடத்தும் அறப்போர்!	2-7-2002	347
2708. போர் முனைக்குப் புறப்பட்டோம்! மும்முனைப் போராட்டம்; கல்லக்குடி களம்! (1)-நெஞ்சுக்கு நீதி முதல் பாகத்தில் எழுதியது!	3-7-2002	351
2709. அறப்போர் நாள் ஜூலை 15 என அறிவிப்பு!	4-7-2002	357
2710.எதிரிகள் கோடி இட்டழைப்பினும் தொடோம்!	5-7-2002	363
2711. குருடர்களும் பார்த்தனர்; கூனர்களும் நிமிர்ந்தனர்!	6-7-2002	368
2712. மூவரை அடைக்கும் கொட்டடியில் எட்டுபேர் நாங்கள்!	8-7-2002	374
2713. அரியலூர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பு!	9-7-2002	381
2714. அண்ணாவும் ஐயாயிரவரும் சிறைப்பட்ட கொடுமை!	10-7-2002	388
2715. சிறையை ஜீவிய பூமி ஆக்கிக் கொண்டவர்கள்!	11-7-2002	394

2700. உயிரைக் கொடுத்தேனும் உறுதிமொழி காப்போம்!

உடன்பிறப்பே,

1998ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் பா.ஜ.க.வுடன் அ.தி.மு.க. அணி சேர்ந்து போட்டியிட்ட போதும், அதன் தொடர்ச்சியாக அவர்கள் பா.ஜ.க. - அ.தி.மு.க. கூட்டணி ஆட்சி அமைத்த போதும், அந்த அணியையும் ஆட்சியையும் தி.மு.க. எதிர்த்தது. ஆனால் அ.தி.மு.க.வுடன் பா.ஜ.க. உறவு நீண்ட காலம் நீடிக்கவில்லை. தாங்கள் விரும்புகிற ஜனநாயக விரோத செயல்களுக்கெல்லாம் திரு.வாஜ்பய் அவர்கள் இடம் தராத காரணத்தாலும், தி.மு.க. வின் மாநில ஆட்சியைக் கலைக்க மறுத்து விட்ட காரணத்தாலும், ஜெயலலிதாவின் அ.தி.மு.க., திரு.வாஜ்பய் ஆட்சியைக் கவிழ்க்க முனைந்தது.

நாடு தழுவிய நாடாளுமன்றத் தேர்தல் உடனே நடை பெறுவதைத் தவிர்க்க, தி.மு.கழகம், வாஜ்பய் அரசுக்கு ஆதரவு தந்தது.

ஆனாலும் ஒரு வாக்கு வித்தியாசத்தில் வாஜ்பய் அரசு கவிழ்க்கப்பட்டது!

மீண்டும் 1999-ல் நடைபெற்ற நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில், தேசிய ஜனநாயகக் கூட்டணி அமைக்கப்பட்டு, அதில் தி.மு.க.வும் இடம் பெற்றது. சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்பும், அவர்களுக்கு நேசக்கரம் நீட்டப்படும் என்ற உறுதிமொழியும் கொண்ட பிரகடனம் வெளியிடப்பட்டு, அதனை திரு. வாஜ்பய் அவர்கள் வெளியிட்ட நாளில் டெல்லியில் அந்த அணியில் தி.மு.க. பங்கேற்றது. இதுநாள் வரையில், சிறுபான்மையோர்க்கு விரோதமான மதவாதத்தை எதிர்த்து வந்த கருணாநிதி, பா.ஜ.க.வுடன் ஒரு கூட்டணியில் இடம் பெறலாமா? என்று பல குரல்கள் எழுந்தன. அப்போது பெரியவர்

பாரத ரத்னா சி.சுப்பிரமணியம் சொன்னார், கலைஞர் கருணாநிதி இருக்குமிடத்தில், சிறுபான்மையோர்க்கு எப்போதும் பாதுகாப்பு உண்டு! மதவாதமும் தலைகாட்டாது! என்று!

அன்று மேற்கொண்ட உறுதியை, மறவாத காரணத்தினால்தான், இன்று கூட பிரதமர் திரு. வாஜ்பய் அவர்கள், உச்சநீதிமன்ற தீர்ப்பு வெளியாவதற்கு முன்பாக, அயோத்தியில் சர்ச்சைக்குட்படாத பகுதியில் ராமர் கோயில் கட்டுவதற்கான அடையாள பூசை நடத்த எக்காரணத்தைக் கொண்டும் அரசு அனுமதிக்காது என்று திட்டவட்டமாக உறுதிமொழி அளித்திருக் கிறார்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இணைந்த போது, அந்த அணியின் சார்பில் எடுக்கப்பட்ட நிலை, மேலும் மேலும் உறுதிபட்டுக் கொண்டு வருவதற்கு தெளிவான அடையாளமாக பிரதமர் வாஜ்பய் அவர்கள் தெரிவித்துள்ள கருத்தை, மத நல்லிணக்கத்தைக் குறிக்கோளாகக் கொண்டுள்ள தி.மு.கழகம்; எப்படி வரவேற்காமல் இருக்க முடியும்?

தொடக்க காலத்தில் பா.ஜ.க.விலிருந்து தொலை விலிருந்த தி.மு.க., தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இணைந்தது அரசியல் ரீதியாக எடுக்கப்பட்ட நிலை மாற்றமே தவிர, மத நல்லிணக்கம் - மதச்சார்பின்மை ஆகியவற்றுக்கு எதிரான ஒன்றாக அது இல்லை! எப்போதும் இருக்கவும் இருக்காது!

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருப்பதே தவறு என்று இன்றைக்கும் நம்மைத் தாக்கித் தூற்றிக் கொண்டிருக்கிற அருமைக் கம்யூனிஸ்டு கட்சி நண்பர்கள், நமக்கு முன்பே 1967-ல் பொதுத் தேர்தல் முடிந்த பிறகு, பஞ்சாப், உத்திர பிரதேசம், பீகார் ஆகிய மூன்று மாநிலங்களில், அகாலிதளம், பாரதிய கிரந்தி தளம், ஜனசங்கம் அடங்கிய கூட்டணி அரசுகளில் அங்கம் வகித்தவர்கள் தான்!

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி தான் அங்கம் வகித்தது என்பார்கள்! ஜனசங்கத்தின் பரிணாம வளர்ச்சி தான் பா.ஜ.க.! மார்க்சிஸ்ட் கட்சி அமைச்சரவையில் இடம் பெறாவிட்டாலும், நிபந்தனையுடன் கூடிய ஆதரவை அந்த அரசுகளுக்கு தர ஒப்புக் கொண்டது. 1977-ல், மத்தியில் மொராஜி தலைமையில், அமைந்த ஜனதா கட்சி ஆட்சியில் அமைச்சரவையில் திரு.வாஜ்பய்,

திரு. அத்வானி போன்றோர் இடம் பெற்றிருந்தனர். மார்க்சிஸ்ட் கட்சி, அந்த ஆட்சிக்கு வெளியிலிருந்து ஆதரவு வழங்கியது.

1989-90-ல் திரு. வி.பி. சிங் பிரதமராக இருந்தபோது, இடது சாரி கம்யூனிஸ்டுகளும், பாரதிய ஜனதா கட்சியும் வெளியிலிருந்து ஆதரவு அளித்தன. இந்த நிலை ஏற்கெனவே ஏற்கப்பட்ட தேர்தல் உடன்பாட்டின் அடிப்படையில் எடுக்கப்பட்டதாகும்.

அரசியல் சூழல்கள் காரணமாக ஏற்பட்ட மாறுதல்கள் என்பதற்காகவே இதனை எடுத்துக்காட்டினேனே அல்லாமல், எந்தவொரு கட்சியையும் விமர்சிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் அல்ல!

அன்றைக்கு திரு. வாஜ்பய் அரசு, தன் இஷ்டத்துக்கு ஆட மறுத்த காரணத்தால் அதனைக் கவிழ்த்த அ.தி.மு.க., இப்போது மீண்டும் இன்றுள்ள மத்திய ஆட்சியுடன் உறவாடத் துடிக்கிறது. இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்புகூட, உச்சநீதிமன்றம் செல்வி ஜெயலலிதா அவர்களுக்கு கவர்னர் பாத்திமா பீவி பதவிப் பிரமாணம் செய்து வைத்தது செல்லாது என்று தீர்ப்பு வழங்கியபோது, அந்த அம்மையார் முதலமைச்சர் பதவி விலக நேரிட்ட நேரத்தில் - பிரதமர் வாஜ்பய் கொடும்பாவி கொளுத்தப்பட்டு, சட்ட அமைச்சர் பொன்னையன் அவர்களே முன் நின்று, சாஸ்திரி பவன் எதிரில் - சட்டம் கடமையைச் செய்ததா? சதிகாரர் சொற்படி நடந்ததா? என்று கோஷம் போடவும், கொடும்பாவி கொளுத்தல் பல இடங்களில் நடைபெற்று, மத்திய அரசு தூண்டுதலால்தான் உச்சநீதிமன்றம் அப்படி தீர்ப்பளித்தது என்று அ.தி.மு.க. அமைச்சர்களும், அ.தி.மு.க. ஏடுகளும் எழுதவும், பேசவுமான நீதிமன்ற அவமதிப்பு ஏராளமாகவும், தாராளமாகவும் நடைபெற்றதையெல்லாம் கூட மத்தியில் இருப்பவர்கள் மறப்போம்! மன்னிப்போம்! என்று விட்டு விடுவார்கள் என நம்பி, அவர்கள் இருக்கும் திக்குநோக்கி அ.தி.மு.க. ஓடுகிறது.

இது ஒரு தடமாற்றம்தான் எனினும், தன்மானம் என்பது கேள்விக்குறியாகிவிட்ட மாற்றம்! அல்லது அதை துச்சமாகக் கருதிவிட்ட மாற்றம்!

சிறுபான்மையோருக்காக இன்று குடம்குடமாகக் கண்ணீர் வடித்து, திடீரெனப் பெரியார், அண்ணா இருவர் மீதும் பாசம் பொங்க பாராட்டுகளை வாரியிறைத்துக் கொண்டுள்ள

கம்யூனிஸ்டு நண்பர்கள், பெரியாரை விமர்சித்து வெளியிட்ட நூல்களையும், அண்ணாவையும், திராவிட இயக்கத்தையும் விமர்சித்து எழுதிய கட்டுரைகளையும் மறந்து விடுவதற்கில்லை எனினும், அந்தப் புதிய நேசம் அரும்பியிருப்பதை நாம் பாராட்டி வரவேற்கத்தான் வேண்டும் - இந்த தடமாற்றத்தில் தன்மானம் பறிபோகவில்லை! - தந்திரம் பளிச்சிடுகிறது என்றாலும், தடமாற்றத்தை நாம் தடுத்திட முனைய வில்லை!

ஏனெனில், தி.மு.க. அணியில், கம்யூனிஸ்டு கட்சிகளும், இந்திய யூனியன் முஸ்லீம் லீகும், பிறகு இந்திய தேசிய லீகும் இருந்த கால கட்டங்களில் அந்த அணியின் ஆலோசனைக் கூட்டங்களில் கூட, முஸ்லீம் லீக் கலந்து கொண்டால் அது வகுப்புவாத இயக்கம், ஆகவே நாங்கள் அவர்களுடன் அமர்ந்து பேசமாட்டோம். தனியாக தி.மு.க.வுடன் பேசுகிறோம் என்றவர்கள் கம்யூனிஸ்டுகள்! பொது மேடைகளில் கூட அப்துல் சமத் அவர்களோ, அப்துல் லத்தீப் அவர்களோ கலந்து கொண்டால் அந்த மேடைக்கு வர மறுத்தவர்கள் கம்யூனிஸ்டுகள்!

இப்போது அவர்களின் மாற்றத்துக்கு காரணம் எதுவாக இருப்பினும், இருக்குமிடத்தில் இருக்க மாட்டோம் என இயம்பிய அந்த வெறுப்பு அகன்று விட்டதற்காக மகிழ்வது தவறல்ல அல்லவா?

உடன்பிறப்பே, மீண்டும் கூறுகிறேன்! பெரியவர் பாரத ரத்னா சி.எஸ். அவர்கள் கூறியதுபோல, நாம் இருக்குமிடத்தில் மதவாதமோ, மதவெறியோ நுழைந்திட முனையாது! பெரியார் அவர்களால் அறிவுறுத்தப்பட்டு, அண்ணா அவர்களால் வழி நடத்தப்பட்ட நாம், அவர்கள் நமக்கு வழங்கியுள்ள கொள்கை உறுதியை நம் உயிரைக் கொடுத்தும் காத்திடத் தயங்க மாட்டோம்!

அன்புள்ள,

மு.க.

13-3-2002

2701. மறுப்பதால் பயனில்லை; மறு பரிசீலனை செய்திடுக!

ஒரு தனி மாவட்டமாக கழக ஆட்சியிலே உருவான அரியலூர் மாவட்டத்தை, எந்தவித கோரிக்கையோ, முறையீடோ இல்லாமல், தன்னிச்சையாக அ.தி.மு.க. அரசு தேவையில்லாமல் ஆளுநர் உரையிலே பெரம்பலூர் மாவட்டத்தோடு இணைக்கப்படும் என்று அறிவித்ததின் காரணமாக, அரியலூர் மாவட்ட மக்கள் கிளர்ந்தெழுந்து போராட்டத்திலே ஈடுபட்டுள்ளார்கள்.

அதுகுறித்து எதிர்க்கட்சிகள் சார்பில் ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டுள்ளது. அந்தப் பிரச்சினை பற்றி அரசு ஒரு பதிலை தர விரும்பினால், ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுக்கப்பட்டிருக்கும்போது, அதை அவையிலே எடுத்துக் கொண்டு அவர்களின் கருத்துக்களையும் தெரிந்து அரசின் சார்பிலே பதில் சொல்வது தான் முறையாக இருக்கும். அப்படித்தான் கடந்த காலங்களில் நடைபெற்று வந்துள்ளது. ஒத்திவைப்புத் தீர்மானம் எதிர்க்கட்சிகளின் சார்பில் தரப்படாவிட்டால், அப்போது அரசு தனது கருத்தை சட்டசபை விதி 110-ன் கீழ் அளிக்கலாம். ஆனால், எதிர்க்கட்சிகள் சார்பில் ஒத்தி வைப்புத் தீர்மானம் தரப்பட்டுள்ள நிலையில் அதனையெடுத்துக் கொள்ளாமல், எதிர்க்கட்சிகளுக்கு வாய்ப்பு தராமல், முதலமைச்சர் அறிக்கையைப் படித்தது தவறான முன்மாதிரியாகும். முதலமைச்சர் பேரவை விதி 110-ன் கீழ் அறிக்கை படித்ததாக சில ஏடுகளில் வெளி வந்துள்ளது. ஆனால் ஆங்கில ஏடு ஒன்றில், (எக்ஸ்பிரஸ்) பா.ம.க.வினால் எழுப்பப்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானத்தையொட்டி ஜெயலலிதா பதில் கூறியதாக (Responding to an adjournment motto sought by the PMK) செய்தி வந்துள்ளது. மேலும் முதலமைச்சர் ஜெயலலிதா, தனது அறிக்கையில் அதிக மாவட்டங்களை உருவாக்குவது என்பது, அரசுக்குத் தேவையற்ற நிதி சங்கடத்தை உருவாக்கும் என்று தெரிவித்துள்ளார். ஆனால் இந்தக் கருத்து, கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே கிருஷ்ணகிரி மாவட்டம் தர்மபுரி

மாவட்டத்திலிருந்து பிரிக்கப்பட்டு தனியாக அமைக்கப்படும் என்று செல்வி ஜெயலலிதா அரசு அறிவித்தபோது எங்கே போயிற்றோ?

இரண்டாவதாக, மாவட்டப் பிரிவினை என்பது வருவாய்த்துறை அமைச்சரின் அதிகாரத்தின்கீழ் உள்ளது. அந்தப் பிரச்சினையிலே அந்தத் துறையின் அமைச்சருக்கு வாய்ப்பு தராமல் முதல்வரே 110வது விதியின் கீழ் அறிக்கை படித்திருக்கிறார். அமைச்சரவைக்கு கூட்டுப் பொறுப்பு என்பதின் அடிப்படையில் கூட அதைப் பொருட்படுத்தாமல் விட்டுவிடலாம்.

ஆனால் 110வது விதியின்கீழ் ஓர் அறிக்கையினை அவையில் படிக்கும்போது, அதன்மீது விவாதம் செய்வதற்கு வாய்ப்பு கிடையாது என்பதால், அந்த அறிக்கையிலே எந்த ஒரு கட்சியையோ அல்லது ஆட்சியையோ குறை கூறியோ குற்றஞ்சாட்டியோ குறிப்பிடுவது தவிர்க்கப்பட்டிருக்கலாம். ஆனால் முதலமைச்சர் படித்த அறிக்கையிலே, கடந்த கால தி.மு.க. ஆட்சி மீது குற்றஞ்சாட்டிவிட்டு, பிறகு அந்தக் கட்சியின் சார்பிலே பதில் சொல்வதற்கு வாய்ப்பளிக்க மறுப்பது என்ன நியாயம் என்பதை நடுநிலையாளர்கள் தான் கூறவேண்டும். கூறிடத் தயக்கமெனில், சிந்தித்தாவது பார்க்கவேண்டும்.

புதிய மாவட்டங்களை உருவாக்குவது என்பது, அந்தப் பகுதியின் வளர்ச்சி குறித்தும், அந்தப் பகுதி மக்களின் நன்மையைக் கருதியும் அரசினால் செய்யப்படும் நற்காரியமாகும். தி.மு.கழக ஆட்சியிலே நான் முதலமைச்சராக இருந்தபோது 14-1-1974 அன்று புதுக்கோட்டை மாவட்டம் அமைக்கப்பட்டது. முதலமைச்சராக இருந்த திரு.எம்.ஜி.ஆர். அவர்களால் அறிவிக்கப்பட்டிருந்தாலுங்கூட, 1989-91ஆம் ஆண்டு தி.மு.கழக ஆட்சிக் காலத்திலேதான் திருவண்ணாமலை, நாகப்பட்டினம் ஆகிய இரண்டு மாவட்டங்களும் உருவாக்கப்பட்டன. 1996ஆம் ஆண்டிற்குப் பிறகுதான் தி.மு.கழக ஆட்சியிலே நாமக்கல், திருவள்ளூர், தேனி, திருவாரூர், அரியலூர் ஆகிய ஐந்து மாவட்டங்களும் உருவாக்கப்பட்டன. கழக ஆட்சியிலே புதிதாக மாவட்டங்களை உருவாக்கியது மாத்திரமல்ல, அதற்கான கட்டிடங்களும் கட்டப்பட்டுத் திறக்கப்பட்டன. 1991ஆம் ஆண்டு முதல் 1996வரை நடைபெற்ற செல்வி

ஜெயலலிதாவின் ஆட்சிக் காலத்தில் வருவாய்த் துறைக்கான சில அலுவலகங்கள் கட்டுவதற்காகச் செய்யப்பட்ட செலவு 10கோடியே 12 இலட்சம் ரூபாய்தான். 1996ஆம் ஆண்டிற்குப் பிறகு தி.மு.கழக ஆட்சிக் காலத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்கள் தூத்துக்குடியில் 4 கோடி ரூபாய் செலவிலும், சென்னையில் 9 கோடி ரூபாய் செலவிலும், விழுப்புரத்தில் 4 கோடி ரூபாய் செலவிலும், திருவண்ணா மலையில் 5 கோடியே 77 இலட்சம் ரூபாய் செலவிலும், நாமக்கல்லில் 6 கோடியே 14 இலட்சம் ரூபாய் செலவிலும், கரூரில் 6 கோடியே 16 இலட்சம் ரூபாய் செலவிலும், திருவாரூரில் 6 கோடியே 93 இலட்சம் ரூபாய் செலவிலும், நாகப்பட்டினத்தில் 6 கோடியே 61 இலட்சம் ரூபாய் செலவிலும், திருவள்ளூரில் 5 கோடியே 61 இலட்சம் ரூபாய் செலவிலும், தேனியில் 5 கோடியே 94 இலட்சம் ரூபாய் செலவிலும் கட்டிமுடிக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டன. ஆக 10 மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகங்கள் சுமார் 60 கோடி ரூபாய் செலவிலும், அது தவிர சுமார் 15 கோடி ரூபாய் செலவில் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டிடங்களும், வருவாய் வட்டாட்சியர் அலுவலகக் கட்டிடங்களும் கட்டப்பட்டுள்ளன.

முதலமைச்சர் ஜெயலலிதா, தனது அறிக்கையிலே அரியலூர் மாவட்டம் உருவாகி ஏறத்தாழ ஓராண்டு ஆனபிறகும் கூட, தி.மு.கழக ஆட்சியிலே காவல்துறைக் கண்காணிப்பாளருக்கு அலுவலகம் அமைக்கப்பட வில்லை என்று கூறியிருக்கிறார். அரியலூர் மாவட்டம் 1-1-2001 முதல்தான் செயல்படத் தொடங்கியது. அதற்குப் பிறகு 4 மாதங்கள்தான் கழக ஆட்சி நடைபெற்றது. பிறகு அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்று 10 மாதங்கள் ஆகின்றன. எனவே அரியலூர் மாவட்டத்திலே காவல்துறைக் கண்காணிப்பாளருக்கு அலுவலகம் அமைக்கப்பட வில்லை என்றால், அதற்கு யார் பொறுப்பு என்பதை முதலமைச்சர் ஜெயலலிதா உட்பட எவரும் புரிந்து கொள்ள முடியும்!

அதிகாரி குழுவின் பரிந்துரைக்கு மாறாக அரியலூர் தனி மாவட்டமாக தி.மு.க. ஆட்சியிலே உருவாக்கப்பட்டது என்று முதல்வர் ஜெயலலிதா தனது அறிக்கையிலே குற்றஞ்சாட்டியிருக்கிறார். அரியலூர் மாவட்டத்தை தனியாகப் பிரிக்காமல், குழுவின் பரிந்துரைபடியே தி.மு.கழக அரசு பிடிவாதமாக இருந்திருக்குமேயானால், அங்கே நடைபெற்ற

போராட்டம் காரணமாக பலபேர் உயிரிழக்க நேர்ந்திருக்கும். கழக அரசைப் பொறுத்தவரையில், குழுவின் பரிந்துரையைவிட மக்களின் உயிரும், உடமையும், அமைதியும் முக்கியம் என்று கருதியதால் தான், அந்த இரண்டு மாவட்ட மக்கள் பிரதிநிதிகளை யெல்லாம் சென்னைக்கே அழைத்து வைத்து, தலைமைச் செயலகத்திலே இரண்டு முறை பேச்சுவார்த்தை நடத்தியும் சுமுக முடிவு ஏற்படாத சூழலில், அதற்குப் பிறகுதான் அரியலூரை தனி மாவட்டமாக அறிவிக்கிற முடிவு எடுக்கப்பட்டது. மாவட்டங்களைப் பிரிக்க நினைப்போர் அதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்க வேண்டாமா என்று முதல்வர் கேட்டிருக்கிறார். அனைத்து ஏற்பாடுகளையும் செய்து வைத்துக் கொண்டு தான் மாவட்டம் புதிதாக தொடங்கப்பட வேண்டுமென்ற அவசியமில்லை. இன்னும் சொல்லப்போனால் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்திலே தொடங்கப்பட்ட மாவட்டங்களுக்குக் கூட, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகக் கட்டிடம் தி.மு.கழக ஆட்சியிலேதான் கட்டப்பட்டது என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

கடந்த பட்ஜெட்டில் கிருஷ்ணகிரி மாவட்டம் தனியாக, அமைக்கப்படும் என்று ஜெயலலிதா அரசினால் அறிவிக்கப்பட்ட போது, எல்லா ஏற்பாடுகளையும் செய்துகொண்டுதான் அறிவித்தார்களா? இல்லை. அறிவிக்கப்பட்டு சுமார் ஓராண்டு ஆகியும் அது அறிவிப்போடு மட்டுமே, இருக்கின்றது. அதைப் பற்றி நேற்று செல்வி ஜெயலலிதா கூறும்போது, நிதிநிலைப் பற்றாக்குறை காரணமாக அதை இன்னும் செயற்படுத்த இயலவில்லை என்று கூறியிருக்கிறார். நிதிநிலை பற்றாக்குறை என்பது அவருடைய ஆட்சிக்கு மட்டுமே உரிய இலக்கணமா? தி.மு.கழக ஆட்சியிலே செய்யப்படவில்லை என்றால் ஏன் என்று காரணம் கேட்கும் செல்வி ஜெயலலிதா, அவர் அறிவித்ததை மட்டும் வசதியாக மறந்து விடுவது நல்ல வேடிக்கை! அரியலூர் மாவட்டம் உருவாக்கப்பட்டதால் தொடர் செலவினம் 4 கோடி ரூபாய் என்றும், தொடரா செலவினம் 12 கோடி ரூபாய் என்றும், இது தேவையா என்றும், முதல்வர் தனது அறிக்கையிலே கேட்டிருக்கிறார். 20 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் வரவு செலவு திட்டத்தைத் தாக்கல் செய்யும் ஓர் அரசு, தொடர் செலவினம் 4 கோடி ரூபாய் என்பதற்காக அறிவிக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்ற ஒரு புதிய மாவட்டத்தை கலைப்பது நியாயந்தானா?

இந்தப் பிரச்சினையில் தி.மு.கழக அரசு, ஏதோ ஓர் இன மக்களை மற்ற இனத்தவர்களிடமிருந்து பிரித்து அவர்களுக்கென ஒரு மாவட்டத்தை உருவாக்க இதனைச் செய்துள்ளது என்று, புழுதியை வழக்கம்போல வாரி இறைத்துள்ளார். அதிலும் ஒரு மாவட்டத்தை சிறிய மாவட்டமாகவும், மற்றொரு மாவட்டத்தை பெரிய மாவட்டமாகவும் கழக அரசு பிரித்து விட்டதாகவும் குறை கூறியிருக்கிறார். இரண்டு மாவட்டங்களைப் பிரிக்கும்போது ஒவ்வொன்றும் சரிபாதியாக இருக்கின்ற அளவிற்கு பிரிக்க இயலாது. மாநிலங்களேகூட சில பிரிக்கப்பட்டுள்ளதை நினைவு கூர்ந்தால், அளவிலும், மக்கள் தொகையிலும் ஒரு பகுதி, மற்றொரு பகுதியைவிட குறைவாக இருப்பதை உணர முடியும்.

வெறும் வாதப் பிரதிவாதங்களில் ஈடுபடாமல், மக்களின் உணர்வுகளை அலட்சியப்படுத்தாமல், அறிவித்த முடிவை மறு பரிசீலனை செய்து அரியலூர் மாவட்டம் தனித்தியங்க வழி காண்பதே நலம் பயக்கு மென வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அன்புள்ள,

மு.க.

15-3-2002

2702. அதை நினைத்துப் பெருமூச்சு விடுவோம்!

உடன்பிறப்பே,

சட்டசபை என்பது சண்டைச் சபையல்ல! விவாதம் நடத்தி முடிவுகள் மேற்கொள்ளும் ஜனநாயக மன்றம்!

விதிமுறைகளுக்கு மாறாகவும், அவற்றை மீறியும் பேசவோ, நடக்கவோ தொடங்கி, அதற்குரிய உயர்ந்த மரபைக் கெடுத்தவர்கள் யார் என்று வரலாறு சுட்டிக் காட்டிக்கொண்டிருக்கிறது.

ஆளும் தரப்பு - எதிர் தரப்பு என இரு வரிசையினர், வாதப் பிரதிவாதங்களில் ஈடுபடும்போது, எதிர் தரப்பு சற்றுக் காரசாரமாக இருக்கும். ஆளும் தரப்புதான் அடக்கி வாசிக்க வேண்டும். இரு தரப்பிலும் இயல்பாகவே இந்த அரசியல் பண்பாடு இருந்தால்தான் அது வெற்றிகரமாக அமையும்.

இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போர் நடந்து கொண்டிருந்த போது, மூதறிஞர் இராஜாஜி ஆட்சியில், எதிர் வரிசையிலிருந்து அறிவு மேதை சர்.எ.டி. பன்னீர்செல்வம் அவர்கள் இந்தித் திணிப்பை எதிர்த்து ஆவேசமாகப் பேசிக்கொண்டிருந்தார்.

அப்போது குறுக்கிட்ட இராஜாஜி அவர்கள், தமிழ் நாட்டில் இரண்டு பேர்தான் இந்தியை எதிர்க்கிறார்கள். ஒருவர் பெரியார் ஈ.வெ. ராமசாமி, மற்றொருவர் பசுமலை சோமசுந்தர பாரதியார் என்று கூறினாராம்.

உடனே எ.டி. பன்னீர்செல்வம், ஆமாம்! உண்மை தான்! இரண்டு பேர் எதிர்க்கிறார்கள். ஆனால் இந்தியைத் திணிப்பது நீங்கள் ஒருவர்தான். எனவே இரண்டு பேர் என்ற பெரும்பான்மைக்குக் கட்டுப் படுங்கள் என்றாராம்.

அந்த எதிர்பாராத பதிலை இராஜாஜி அவர்கள், சிரித்தவாறு ரசித்தார் என்று, அவரது பண்பாட்டைப் பாராட்டுவார்கள்.

பெருந்தலைவர் காமராசர் முதலமைச்சராக இருந்த போது, நான் எதிர்க்கட்சித் துணைத் தலைவர். ஒரு நாள் அவையில் பேசிய எம்.எஸ். மணி என்ற தி.மு.க. உறுப்பினர், திருச்சியில் தங்கக் கட்டுப்பாடு சட்டத்தை எதிர்த்து, முதலமைச்சர் காமராஜர் சென்ற காரின் குறுக்கே ஊர்வலமாக வந்த பொற்கொல்லர்களில் ஒருவரை முதலமைச்சர் கன்னத்தில் அடித்து விட்டதாகக் கூறிவிட்டார். அது ஊர்ஜிதமாகாத செய்தி! அவையில் அதிகம் பேசிடாத பெருந் தலைவர் அவர்கள், திடீரென எழுந்து நான் ஒன்றும் எந்தப் பொற் கொல்லரையும் கன்னத்தில் அடிக்கவில்லை என்றார்.

உடனே நான் மெல்ல எழுந்து, கன்னத்தில் அடிக்க வில்லையென்றால் பிறகு எங்கே தான் அடித்தீர்கள்? என்று கேட்டேன்.

அதற்கு அவர் செல்லக் கோபமாக ஒரு சிரிப்பு சிரித்து விட்டு கேலியா? நான் யாரையும் அடிக்கவே இல்லேண்ணேன் என்று பதில் அளித்தார். இதற்காக யாரும் ஆளுங்கட்சியான காங்கிரஸ் வரிசையிலிருந்து டே! டாய்! டூய்! உக்காருடா! என்றெல்லாம் கூச்சல் போடவில்லை.

பெருந்தலைவருக்குப் பிறகு, பெரியவர் பக்த வத்சலம் அவர்கள் முதல்வராக இருந்தபோது, தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் சகோதரர் அரங்கண்ணல் அவர்கள், இந்தி எதிர்ப்பு மொழிப் புரட்சி குறித்து கனல் கக்கப் பேசிவிட்டு, முதல்வர் பக்தவத்சலத்தைப் பார்த்து, உங்களுக்கோ தள்ளாத வயது; பதவி விலகி ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள் என்று முத்தாய்ப்பாகப் பேச்சை முடித்தார்.

ஆனால் அன்றைய ஆட்சித் தலைவரான பக்தவத்சலம், அரங்கண்ணல் பேச்சுக்காக ஆத்திரப் படாமல், அமைதியாக எழுந்து எனக்கு ஒன்றும் தள்ளாத வயதில்லை - தள்ளுகிற வயதுதான் - இது போன்ற பேச்சுக்களை ஒதுக்கித் தள்ளுகிற வயது தான் என்ற கருத்துப்பட பதில் அளித்தார்.

அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, எதிர்க்கட்சி (காங்கிரஸ்) துணைத் தலைவர் கே. விநாயகம் அவர்கள், அண்ணாவையும், அரசையும் விமர்சித்துப் பேசி விட்டு, Your days are numbered (உமது நாட்கள் எண்ணப்படுகின்றன) என்று கூறினார்.

உடனே அண்ணா எழுந்து My steps are measured (என் அடிகள் அளந்து வைக்கப்படுகின்றன) என்று பதில் அளித்தார். ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இரு தரப்பாரும் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள்.

திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்த போது, திருச்செந்தூருக்கு நீதி கேட்டு நான் நடத்திய நெடிய பயணத்தை திரு. கணேசன் என்ற அ.தி.மு.க. உறுப்பினர் கேலி செய்து, கலைஞர், மதுரையிலிருந்து 8 நாட்கள் திருச்செந்தூருக்கு நெடிய பயணம் மேற் கொண்டார். திருச்செந்தூர் கோவிலுக்குள் முருகனின் வேல் எங்கே என்று தேடி இவர் போனார் - ஆனால் பாவம்! இவரைப் பார்க்க விரும்பாமல் திருச்செந்தூர் முருகனே ராமாவரம் தோட்டத்துக்கு வந்து விட்டார் என்று கூறினார்.

உடனே நான் எதிர்க்கட்சி வரிசையிலிருந்து எழுந்து, ஓ! அப்படியா? நான் இதுவரையில் திருச்செந்தூர் முருகனின் வேல்தான் காணாமற் போனதாக நினைத்தேன். மாண்புமிகு உறுப்பினர் கூறுவதைப் பார்த்தால், முருகன் சிலையே களவு போயிருக்கிற உண்மை இப்போதுதான் தெரிகிறது! என்றேன்.

சிறிது நேரம் கழித்து முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள், சபாநாயகரைப் பார்த்து - கணேசன் சொன்னதையும், கலைஞர் சொன்ன பதிலையும் அவைக் குறிப்பிலிருந்து அகற்றிவிடலாம் என்று, புன்னகை புரிந்தவாறு சொன்னார்.

அப்போது அ.தி.மு.க. வின் தோழமைக் கட்சியான மார்க்சிஸ்ட் கட்சியின் தலைவர் உமாநாத் எழுந்து, இதெல்லாம் ரசிக்கத் தக்க விஷயங்கள்! இதை அவைக் குறிப்பிலிருந்து அகற்றுவது பாராளுமன்ற மரபல்ல!

என்று குறிப்பிட்டார். எம்.ஜி.ஆர். அவர்களும் அதற்கு மேல் வலியுறுத்தாமல் விட்டு விட்டார்.

இப்படி நான் எதிர்க்கட்சி வரிசையில் இருந்த போதும், ஆளுங்கட்சியில் இருந்த போதும், எத்தனையோ வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்று அவையின் மரபும், பண்பாடும் விதிமுறைகளும் காப்பாற்றப்பட்டிருக்கின்றன.

அடிக்கடி குறுக்கிட்டு அவையில் அ.தி.மு.க. உறுப்பினராக இருந்த அண்டே அவர்கள் கடுமையாக வாதிடுவார். முதல்வராக

இருக்கும்போது ஒரு முறை நான் சொன்னேன். என்னுடைய நண்பர் உட்கார்ந்தால் அண்டே! எழுந்தால் சண்டை! என்று!

அவரும் சிரித்துக் கொண்டார்.

இதெல்லாம், இதுபோன்ற இன்னும் பலவெல்லாம் சட்டமன்றத்தின் வசந்த காலம்!

அதை நினைத்துப் பெருமூச்சு விடுவோம்!

அன்புள்ள,

மு.க.

17-3-2002

2703. இந்த ஜனநாயகக் கொலை, இனியும் தொடருவதோ?

உடன்பிறப்பே,

நேற்று சட்டமன்றத்தின் வசந்த காலம் பற்றி எழுதியிருந்தேன்.

சட்டமன்றத்தில் புயல் வீசிய நேரங்களையும் மறந்து விடக் கூடாதல்லவா?

அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள், அ.தி.மு.க.வை உருவாக்கியபோது தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் 185 பேரில் சுமார் 10 பேர் அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்களாக மாறி எம்.ஜி.ஆர். தலைமையில் எதிர் வரிசையில் அமர்ந்திருந்தனர்.

பொதுவாக, கேள்வி நேரம் முடிந்த பிறகுதான் அவையில் விளக்கம் கோருவதற்கும், ஒழுங்குப் பிரச்சினை எழுப்புவதற்கும் வாய்ப்புண்டு. ஆனால் அதற்கு மாறாக, 1972 நவம்பர் 13ஆம் நாள் அ.தி.மு.க. சார்பில் எம்.ஜி.ஆர். அவர்கள், ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை தி.மு.க. ஆட்சி மீது கொண்டுவந்து, கேள்வி நேரத்துக்கு முன்பே அதை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று விதிகளுக்குப் புறம்பாக கோரியதின் விளைவாகவும், அந்த நேர்மாறான போக்கிற்கு அன்றைய கம்யூனிஸ்டு கட்சி, காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் ஆதரவளித்ததின் காரணமாகவும், சிறு சலசலப்பு ஏற்பட்டு, அவையை 1972 டிசம்பர் 2-ம் தேதிக்கு ஒத்தி வைப்பதாக அறிவிக்கப்பட்டு, அவ்வாறே அவை அந்நாளில் கூடியபோது - சபாநாயகர் மீதே நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஆளுங்கட்சியினால் கொண்டு வரப்பட்டு, அத் தீர்மானத்தை கழக ஆட்சியின் அவை முன்னவர் நாவலர் நெடுஞ்செழியன் முன்மொழிந்து பேசி, அன்றைய தினமும் அவையில் சலசலப்பும், கூச்சலும் கலந்த நிலையில் சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறியது.

இந்த நிகழ்ச்சிகள் ஆடிக்காற்று அடித்தது போல என்றால், அருமை நண்பர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக வீற்றிருந்து 1987ஆம் ஆண்டு மறைந்த பிறகு - ஜானகி அம்மையாரும், ஜெயலலிதா அம்மையாரும் இரண்டு அணிகளைத் திரட்டி, ஜானகியம்மையார் ஆட்சிக்கு எதிராகச் சட்டமன்றத்தில் ஜெயலலிதா அணியினர் கிளர்ந்தெழுந்து நடத்திய போராட்டம் 28-1-1988 அன்று பெரும் பூகம்பமாக வெடித்தது - புயல் சூறாவளியாகவே வீசியது!

ஆம்! பேரவையில் ஒரு யுத்தமே நடைபெற்றது. செருப்புகள், சோடா பாட்டில்கள் சரமாரியாக வீசப்பட்டன. பேரவைத் தலைவரான பி.எச். பாண்டியன் கடுமையாகத் தாக்கப்பட்டார். ஜெயலலிதா அணியினரால்!

கடைசி நிமிடத்தில் காங்கிரஸ் கட்சி, ஜானகி அணிக்கு எதிராகத் திரும்பி, ஜெயலலிதா அணியை ஆதரித்தது! இரு அணிகள் மோதலில், அத்தனை ஒலி பெருக்கிகளும் உடைக்கப்பட்டு; அதன் கம்பிகளையே ஆயுதங்களாகக் கொண்டு உறுப்பினர்கள் ஒருவருடன் ஒருவர் மோதி போரிட்டுக் கொண்டனர். இரத்தம் ஒழுகிட ஒழுகிட உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியே வந்து அலறிய காட்சிகள், ஏடுகளில் பெரிய அளவில் வெளிவந்தன. இதோ அவற்றில் சில படங்கள்! அவைத்தலைவர் பாண்டியனும் அமைச்சர்கள் சிலரும் காயப்பட்டதைக் காட்டும் சான்றுகளாக! எப்படியோ, ஜெயலலிதா அணியினர் நடத்திய போராட்டத்தினால் 24 நாள் ஜானகியம்மாள் ஆட்சி, உடனடியாகக் கலைக்கப்பட்டு 30-1-1988 அன்று கவர்னர் ஆட்சி அறிவிக்கப்பட்டது.

இப்படி அவைக்குள் போராட்டம் நடத்தினால் தனது பேச்சைக் கேட்டு தி.மு.க. ஆட்சியை ராஜிவ் காந்தி கலைத்து விடுவார் என்றுதான், அடுத்து 1989-ல் ஆட்சிக்கு வந்த தி.மு.க., 5-3-1989 அன்று பட்ஜெட் படிக்க முன் வந்த போது; செல்வி ஜெயலலிதாவின் ஆணைப்படி, அ.தி.மு.க. உறுப்பினர்கள் என் கையில் இருந்த பட்ஜெட்டைப் பிடுங்கினார்கள்.

அதைக் கொடுக்க மறுத்த என் முகத்தில் குத்தி, என் மூக்குக் கண்ணாடியை உடைத்தார்கள். அமைச்சர் தம்பி வீரபாண்டி ஆறுமுகம் மண்டையில் வெட்டி இரத்தம் பெருக்கெடுக்கச் செய்தார்கள். தன்னைத் தாக்கி விட்டதாக ஜெயலலிதா அவர்கள்,

கூப்பாடு போட்டு நாடகம் நடித்தும்கூட, பிரதமர் ராஜிவ் அவர்கள் கழக ஆட்சியைக் கலைத்திட உடன்படவில்லை.

உடன்பிறப்பே, நான் சுட்டிக்காட்டியுள்ள இந்த நிகழ்வுகள் எல்லாம் சட்டமன்றத்துக்குள், சட்ட மன்ற உறுப்பினர்களுக்குள் அணிகள் பிரிந்து நடை பெற்றவைகளாகும். ஆனால் இதோ, நேற்றையதினம் புவனேசுவரத்தில் ஊர்வலமாகச் சென்ற விசுவ இந்து பரிட்சத், பஜ்ரங் தளம் ஆகியவற்றைச் சார்ந்தவர் 500க்கும் மேற்பட்டவர்கள், ஒரிசா சட்டமன்றத்துக்குள் போலீஸ் தடையையும் மீறி உடைத்துக் கொண்டு, பேரவை வளாகத்துக்குள் புகுந்து முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களின் அறைகளை உடைத்தும், கல் வீசித் தாக்கியும், தடிகளைக் கொண்டு அங்கிருந்த உடைமைகளை நொறுக்கியும் ஜெய்! ராம்! ராம்! என்று முழங்கியவாறு அட்டகாசம் புரிந்துள்ளனர்.

சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசுப் பணியாளர்கள் அலறியடித்து ஓடியிருக்கின்றனர்.

முதலமைச்சர் நவீன்பட்நாயக் உள்ளிட்ட அமைச்சர்கள், தங்கள் அறைகளைத் தாளிட்டுக் கொண்டு உயிர் தப்பியுள்ளனர்.

பேரவை உள்மண்டபத்தை உட்புறமாகப் பாதுகாவலர்கள் பூட்டிக் கொண்டதால், அழிவு அந்த அளவுடன் நின்றிருக்கிறது!

போலீசாரின் தடியடிப் பிரயோகத்தில் ஏராளமானவர்கள் காயமடைந்துள்ளனர்.

பிரதமர் வாஜ்பய் அவர்கள், அதிர்ச்சி தெரிவித்து சட்டத்தை மதிக்காத இந்த வன்முறைச் செயலைக் கடுமையாகக் கண்டித்துள்ளார்.

அண்மையில் பாராளுமன்றத்தில் தீவிரவாதிகள் தாக்குதல்! அது பகைநாட்டின் சதியென்று அனுமானிக்கப்படுகிறது! அதற்கு முன்பே காஷ்மீர் சட்டமன்றத்தில் தீவிரவாதிகள் வன்முறைத் தாக்குதல்!

தற்போது; ஊர்வலமாகவே வந்து விசுவ இந்து பரிட்சத் மற்றும் பஜ்ரங் தள தொண்டர்கள் ஒரிசா சட்டமன்றத்துக்குள் நுழைந்து இத்தகைய வன்முறை வெறியாட்டம் நடத்துவதென்றால்,

இதுவரை நாடாளுமன்றங்கள், சட்டமன்றங்கள் போன்ற இந்திய ஆட்சி மன்றங்களில் அவைக்குள் உறுப்பினர்களிடையே நடைபெற்ற போராட்டம், இப்போது வெளியிலிருந்து வரும் தாக்குதலாகவே, அதுவும் நம் நாட்டைச் சேர்ந்தவர்களாலேயே நடத்தப்படுவது - நாசத்துக்கு வித்திடும் செயலாகும்.

இந்த நாட்டின் ஜனநாயகக் கூறுகள் எந்த அளவுக்கு மரபுகளை மீறியும், விதிமுறைகளை உடைத்துக் கொண்டும், சேதப்படுத்தப்படுகின்றன என்பதைச் சிந்தித்து, இந்தச் சிறுமைத்தனங்களிலிருந்து, மக்களாட்சியின் மாண்பைக் காப்பாற்றவும், மதவெறிக்குச் சாவுமணி அடிக்கவும் குடிமக்கள் ஒவ்வொருவரும் முன்வந்தாக வேண்டும்!

அன்புள்ள,

மு.க.

18-3-2002

2704. விவசாயிகளின் வயிற்றில் அடிக்காதீர்கள்!

உடன்பிறப்பே,

செல்வி ஜெயலலிதா அரசு, திடீரென 950 நெல் கொள்முதல் நிலையங்களை மூடுவதற்கு ஆணை பிறப்பித்துள்ளது. விவசாயப் பெருங்குடி மக்கள் தங்கள் வாழ்க்கை பதராகப் போய்விடுமென்று பதறிக் கதறுகிறார்கள். நெல் விளைத்து பயன்பெறக் காத்திருந்தோரின் நெஞ்சில் முள் குத்தியது போலப் பிப்ரவரி திங்களில் பெய்த பெருமழையில் பல கோடி ரூபாய் மதிப்புள்ள பயிர்கள் நாசமுற்றுப் பெரும் பாதிப்புக்கு ஆளாயினர்.

இந்தச் சங்கடமான சூழ்நிலையில், கொள்முதல் நிலையங்களும் மூடப்படுவது, கிணற்றில் விழுந்தவன் தலையில் பாறாங்கல்லைத் தூக்கிப் போடுவது போலாகும்.

இதே காலகட்டத்தில் கடந்த ஆண்டு விவசாயிகளிடம் சுமார் 15 இலட்சம் டன் கொள்முதல் செய்யப்பட்டதற்கு மாறாக, இந்த ஆண்டு அதில் பாதி அளவே 7.50 இலட்சம் டன் மட்டுமே கொள்முதல் செய்யப்பட்டிருப்பதாகத் தகவல் தரப்பட்டுள்ளது. அரசு தரப்பில் பத்து இலட்சம் டன் வரை கொள்முதல் செய்யப்போவதாக அறிவித்தும்கூட, அரசின் நடவடிக்கையைப் பார்க்குமிடத்து, விவசாயிகள் நம்பத் தயாராக இல்லை.

கடந்த ஆண்டு தி.மு.க. ஆட்சியின்போது, அரசின் கையிருப்பில் போதுமான நெல் இருந்த போதிலும், அறுவடை செய்து ஆவலுடன் காத்திருந்த விவசாயிகள் வயிற்றிலே அடிக்கக் கூடாது என்ற உணர்வுடன், எல்லா நெல்லையும் கொள்முதல் செய்தோம்.

இவர்களோ, புழுத்த அரிசி என்று பொய்யும், பொல்லாங்கு முரைத்துப் பொதுமக்களை திசை திருப்பி ஏமாற்றுவதில் காலம் கழித்து, உண்மை உலகுக்குத் தெரிந்த பிறகு அதை

வெளிப்படுத்தியவர்களைச் சிறையில் தள்ளும் சிறுமதி படைத்தவர்களாகவே தம்மைக் காட்டிக் கொண்டனரே தவிர, இப்போது மிகவும் பாதிக்கப்பட்டுத் துன்புறும் விவசாயிகளின் துயர் துடைக்க எண்ணிடுவதாய்த் தெரியவில்லை.

இவர்களுக்கு விவசாயிகள் பாதிக்கப்பட்டால் என்ன? தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டால் என்ன? அரசு அலுவலர் பாதிக்கப்பட்டால் என்ன? உம் என்றால் சிறைவாசம், ஏன் என்றால் வனவாசம் என உறுமிய ஜார் மன்னன் பாணியில், ஆட்சிச் சக்கரத்தைச் சுழற்றலாம் என்ற நம்பிக்கையின் உச்ச கட்ட உயரத்திலே நின்று கொக்கரித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த உயரத்திலிருந்து விழுந்தால் அதல பாதாளத்திற்குச் செல்ல வேண்டுமென வரலாறு கற்பிக்கும் பாடத்தை வசதியாக மறந்து விடுகிறார்கள்.

அதனால்தான் விவசாயப் பெருமக்கள் வீதிக்கு வந்து போராடும் நிலையை வெகு வெகு அலட்சியமாகக் கருதுகிறார்கள். காவேரி டெல்டா விவசாயச் சங்கத் தலைவர் மன்னார்குடி ரெங்கநாதன் அவர்கள், வட்டங்களில் இருந்த நேரடிக் கொள்முதல் நிலையங்களை மூடி விட்ட காரணத்தால் சிறிய விவசாயிகள், தங்கள் நெல்லை தொலைதூரமுள்ள கொள்முதல் நிலையங்களுக்குக் கொண்டு செல்ல மூட்டை ஒன்றுக்கு பத்து ரூபாய்க்கு மேல் அதிகச் செலவாகிறது என்ற நிலைமையைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

40 ஆயிரம் விவசாயிகள் பாதிக்கப் பட்டிருப்பதாகவும், கோட்டூர், திருத்துறைப்பூண்டி, திருவாரூர் பகுதிகளில் மட்டும் 50 ஆயிரம் டன் நெல் தேங்கிக் கிடப்பதாகவும் ஏடுகள் செய்தி வெளியிட்டுள்ளன. மற்றொரு விவசாயச் சங்கத் தலைவர் கல்யாணம் அவர்கள், 25 ஆண்டு காலத்தில் இது போன்ற குழப்பம் நெல் கொள்முதலில் வந்ததில்லை என்று சுட்டிக் காட்டி விட்டு மேலும் கூறும்போது, அரசாங்கம் விவசாயிகளின் உயிரோடு விளையாடுவதாகவும், தரங்கம்பாடி வட்டத்தில் கிளையூர் என்ற கிராமத்தில் நேரடி கொள்முதல் நிலையத்திலிருந்து பணம் கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு ஒரு விவசாயி, தனது பெண்ணின் திருமணத்தை ஏற்பாடு செய்திருந்ததாகவும், கொள்முதல் நிலையம் மூடப்பட்ட காரணத்தினால், அவர் திடீரென

மாரடைப்பு நோயினால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்.

இறுதிக் கட்டமாகவும், முழுமையாகவும் கடந்த ஆண்டு 19 இலட்சம் டன் நெல், தி.மு.கழக ஆட்சியில் கொள்முதல் செய்திருக்கும்போது, இப்போது திடீரென மிகப் பெரும்பாலான கொள்முதல் நிலையங்களை மூடியதற்கு அரசுத் தரப்பில் என்ன காரணம் கூறினாலும், அது அவதிப்பட்டுக் கொண்டிருக்கும் விவசாயிகளின் கண் கலக்கத்திற்கு உரிய சமாதானமாகாது.

எனவே அமைச்சர்கள் உறுதிமொழி கூறியபடி, விவசாயிகளின் கவலையைத் தீர்க்க, அவர்களின் நெல்லைக் கொள்முதல் செய்திட ஏற்ற நடவடிக்கை எடுப்பதே இன்றைக்குக் கட்சி சார்பற்ற முறையில் அனைவரும் எதிர்பார்க்கக் கூடியதாகும்.

அன்புள்ள,

மு.க.

19-3-2002

2705. இதையும் கொஞ்ச காலம் ரசிப்போம்!

உடன்பிறப்பே,

நான்கு இடங்களில் அளித்த நாமினேஷன்களையும் தள்ளி விட்டார்கள். அதற்குக் கருணாநிதிதான் காரணம் என்று சட்டமன்றப் பொதுத் தேர்தலின்போது, ஒரு மூச்சு அழுது புலம்பி, சாதாரண மக்களை ஏமாற்றி தனது கட்சியை வெற்றி பெற வைத்தார், செல்வி ஜெயலலிதா!

ஏற்கெனவே இரண்டு ஆண்டு தண்டனை பெற்றிருந்த காரணத்தால், முதல் நாமினேஷன் செல்லவில்லை. அது சட்டப்படி நடைபெற்ற காரியம்.

அடுத்து, ஒருவர் இரண்டு தொகுதிகளுக்கு மேலாக நாமினேஷன் தாக்கல் செய்தாலே, தாக்கல் செய்யப்பட்ட அவரது நாமினேஷன்கள் அத்தனையும் செல்லாமற்போகும்.

இதுவும் தேர்தல் விதிமுறைப்படி நடைபெற்றது.

என் நாமினேஷன்களை கருணாநிதிதான் செல்லாமல் ஆக்கிவிட்டார் என்று ஜெயலலிதா ஊரெல்லாம் புளுகியதற்கு ஒத்துப்பாடியவர்கள், சட்டம் படித்த அவரது கூட்டணிக் கட்சியினர் என்பதுதான் ஆச்சர்யம்!

சரி! இவைகள் எல்லாம் முடிந்து அவரது தண்டனை நீதிமன்றத்தில் ரத்து செய்யப்படுவதற்கு முன்பே, அவரது சக நண்பர்களான பத்திரிகையாளர்கள் தடுத்து எழுதியும் கூடக் கேளாமல், கவர்னர் பாத்திமா பீவியிடம் ஜெயலலிதா பதவிப்பிரமாணம் செய்து கொண்டு முதலமைச்சரானார்.

அப்படிச் செய்து கொண்டது செல்லாது என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பு அளித்தவுடன், அந்தத் தீர்ப்பு பிரதமர் தலையிட்டு வழங்கப்பட்டது என்று இங்கு சட்ட அமைச்சராக இருந்த பொன்னையனே முன்னின்று குற்றம்சாட்டி, அவர்

முன்னிலையிலும், அமைச்சர்கள் முன்னிலையிலும் பிரதமர் வாஜ்பய் கொடும்பாவி கொளுத்தப்பட்ட அநாகரிகச் செயலும், நீதிமன்ற அவமதிப்புச் செயலும் பகிரங்கமாகவே நடைபெற்று அந்தப் படங்கள் பத்திரிகைகளிலும் வெளிவந்தன.

இடைக்காலமாக, சும்மா முதலமைச்சர் ஒருவர் நியமிக்கப்பட்டு, பிறகு அம்மா முதலமைச்சராக முடிசூட்டிக் கொண்டார்.

இந்த அம்மா 1991-ல் ஆட்சிக்கு வந்த போதும் சரி, இப்போது வந்துள்ள போதும் சரி, இந்தியாவில் தமிழகத்தை முதல் மாநிலமாக ஆக்கப் போகிறேன் என்று கூறுவதும், உடனே சில கட்சிகளும், பத்திரிகைகளும் வரிந்து கட்டிக்கொண்டு, அம்மா இனிமேல் ஓர் ஆரோக்யமான, நாகரிகமான அரசியலை நடத்தவும், தமிழ் மாநிலத்தை முதல் மாநிலமாக ஆக்கிடவும் முடிவு செய்து களம் இறங்கி விட்டார். எனவே அந்தப் பண்பாடுமிக்க ஆரோக்கிய அரசியலுக்கு, அனைத்துக் கட்சிகளும் ஒத்துழையுங்கள் என்று உபதேசம் செய்ய ஆரம்பித்து விடுவதும் ஒன்றும் புதிய விஷயமல்ல!

1991-ல் இவர் ஆட்சிக்கு வந்தவுடன், பாஞ்சாலங் குரிச்சியில் தி.மு.க. ஆட்சியில் உருவாக்கப்பட்ட கட்டபொம்மன் கோட்டைவாசல் சாலையில் 'கருணாநிதி தோரண வாயில் என்பதை அகற்றிவிட்டு 'சுந்தரலிங்கம் தோரண வாயில் அமைக்கப் போகிறேன் என அறிவித்தார். உண்மை என்னவென்றால், தி.மு.க. ஆட்சியில், பாஞ்சாலங்குறிச்சியில் கட்டபொம்மன் கோட்டை அமைத்தபோதே சுந்தரலிங்கம் தோரண வாயிலும் அமைக்கப் பட்டிருந்தது என்பதுதான்! இவரது அரசியல் ஆரோக்யத்துக்கு இது ஒரு சான்று!

1992-ல் ஜூன் 3 என் பிறந்த நாளுக்காக, வழக்கம் போல விழா நடத்த கலைவாணர் அரங்கம் கேட்டு 92 ஏப்ரல் 30-ந்தேதியே விண்ணப்பக் கடிதம் அனுப்பியிருந்தும், விழாக்குழுவுக்கு 92 - மே 15-ந்தேதியன்று வந்த கடிதம் அனுமதி மறுக்கப்பட்டுத்தான் வந்தது! இதுவும் இவரது அரசியல் ஆரோக்யத்துக்குச் சான்றுதான்!

அந்தக் காலகட்டத்தில், இவர் ஆட்சியில் தடா சட்டத்தில் கைது செய்யப்பட்டு, மதுரை சிறையில் அடைக்கப்பட்டிருந்த சுப்புலட்சுமி ஜெகதீசன், ஜெகதீசன் இருவரையும் சந்திக்க நான்

மதுரை சென்று இறங்கியதும், அவர்களைப் பார்க்கக் கூடாதென்று திடீர்த் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, நான் சென்னை திரும்பி வந்து நீதிமன்றத்திலே வழக்காடி, நீதிமன்ற தீர்ப்புக்குப் பிறகே மதுரை சென்று சிறையில் அவர்களைக் காண முடிந்தது! இதுவும் இந்த அம்மையார் கடைப்பிடித்த ஆரோக்கிய அரசியல்தான்!

கடந்த கால நிகழ்ச்சிகள், இது போல இன்னும் கணக்கிலடங்காதவை பல இருக்கின்றன.

1987-ல் எம்.ஜி.ஆர். மறைந்த பிறகு ஜானகி அம்மையார் ஆட்சி 24 நாட்களும், அதன் பிறகு கவர்னர் ஆட்சி சுமார் ஓராண்டும் நடைபெற்றுங்கூட, எம்.ஜி.ஆர். நினைவிடம் வெறும் செங்கற்கள் அடுக்கிய நிலையில் இருந்ததே தவிர, யாரும் ஏறெடுத்துப் பார்க்கவில்லை.

1989-ல் தி.மு.க. ஆட்சி அமைந்தவுடன், எம்.ஜி.ஆர். நினைவிடத்தை அண்ணா நினைவிடத்துக்கு அடுத்த நிலையில் பொலிவுடன் அமைத்தோம்.

1991-ல் ஆட்சிக்கு வந்த செல்வி ஜெயலலிதா, அந்த நினைவிடத்தை மேலும் விரிவுபடுத்திக் கட்டி, நினைவிட வாசலில் பிர்மாண்டமான இரட்டை இலைச் சின்னத்தைத் தோரணவாயிலாக அமைக்கச் செய்தார்.

1996-ல் மீண்டும் தி.மு.க. ஆட்சி அமைந்தபிறகு, கடந்த ஐந்தாண்டு காலமும் அந்த இரட்டை இலை வாசல் முகப்பை நாம் மாற்றி அமைக்கவோ, அகற்றி விடவோ நினைக்கக் கூட இல்லை.

ஆனால் இப்போது, இந்த அம்மையார் ஆட்சிக்கு வந்ததும், வராததுமாக அண்ணா நினைவிடத்து முகப்பு வாசலில் உள்ள தோரணவாயிலில் இருபுறமும் உள்ள உதயக் கதிர் போன்ற கோடுகளை உதயசூரியன் சின்னமெனக் கூறி அவற்றை ஒரே நாளில் இடித்தும், தேய்த்தும் அகற்றிவிட்டார்கள். அது உதயசூரியன் சின்னம் என்று அந்த வளைவுகளில் அமைக்கப்பட்ட தல்ல!

பொதுவாகக் கட்டிடங்கள், வீடுகள் இவற்றின் வளைவுப் பகுதிகளில் மேலெழும் கதிர்கள் போல அமைப்பது, கட்சிச் சார்பற்ற இடங்களிலும் இயற்கையானதே!

இதோ! சென்னை எழும்பூர் கண் மருத்துவமனைப் படத்தையும், ஆழ்வார்ப்பேட்டையில் உள்ள வீடு ஒன்றின் முகப்புப்

படத்தையும் 'கதீட்ரல் சர்ச் முகப்பின் படத்தையும் இக்கடிதத்துடன் இணைத்துள்ளேன்.

(நல்லவேளை! தமிழ்நாடு முழுதும் யார் வீட்டு முகப்பிலும் இது போன்ற உதயக் கதிர் அமைப்புகள் இருத்தலாகாது என்று உத்தரவு போடாமல் இருக்கிறார்களே! அதற்காக மகிழ்ச்சி அடையலாம்.)

ஆரோக்கிய அரசியல் - அ.தி.மு.க. - தி.மு.க. - இரண்டையும் ஒப்பிட்டுப் பார்த்து நடுநிலையாளர்கள் ஒரு முடிவுக்கு வர வேண்டுமென்பதற்காகவே எல்லாப் படங்களையும் பார்வைக்கு வைத்துள்ளேன்.

தொடர்ந்து ஆண்டிப்பட்டி இடைத் தேர்தல்! அதிலே அரசியல் ஆரோக்கியம் கொடி பிடித்து உயர்ந்ததா? அல்லது தடியெடுத்துத் தாண்டிக் குதித்ததா? என்பதை ஜனநாயகவாதிகள் தெளிவாகவே உணருவார்கள்!

தேர்தல் நேரத்தில் எதிர்க்கட்சிக்கான உரிமைகள் பறிக்கப்படக் கூடாது என்ற தேர்தல் ஆணைய விதிமுறைக்கு விரோதமாக, தேர்தல் பிரச்சாரத்துக்குச் சென்ற எனக்கு குடகனாறு அரசினர் விடுதியில் தங்க 5-2-2002 அன்று அனுமதி அளித்துவிட்டு, அந்த அனுமதியை 6-2-2002 அன்று ரத்து செய்து கடிதம் அனுப்பி வைத்து, எங்கள் வேண்டுகோளின்படி அனுமதியை ரத்து செய்ததாகப் புளுகினார்களே - அடடா! என்னே அம்மையாரின் தலைமையிலான கட்சி ஆட்சியின் ஆரோக்கிய அரசியல்! என்று ஜனநாயக தேவதை புகழ்கீதம் பாடுகிறதே!

அதற்குப் பிறகு பதவியேற்பு விழாவுக்கு அழைக்கப்பட்டு, அரசியல் நாகரிகம் காத்திட விழாவுக்கு சென்ற எதிர்க்கட்சித் தலைவருக்கு ஆறாவது வரிசையில் இடம்போட்டது உச்சகட்ட ஆரோக்கிய அரசியல் அல்லவா!

அதை உடனடியாகச் சுட்டிக்காட்டிய என்னை, ''கண்ணயமற்றவன், ''பெருந்தன்மையில்லாதவன்'', ''புலம்புகிறான்'' என்றெல்லாம் மலர்(?) போன்ற சொற்களால் அர்ச்சனை செய்தது அரசியல் ஆரோக்யம் என்றுதானே அம்மையார் அகராதியில் எழுதியிருக்கிறது?

பெண்களுக்கு அதிக சதவீதம் ஒதுக்குவது உங்கள் 15 அம்சத் திட்டம் என்கிறீர்கள்! உங்கள் அமைச்சரவையில் இருந்த மூன்று பெண்களை இப்போது ஒருவராக்கி விட்டீர்களே? என்றும்,

பேருந்து கட்டணம் உயர்த்தப்பட்டிருப்பதால், இனி போக்குவரத்துக் கழகத்துக்கு வருமானம் அதிகம் வருமே என்று விளக்கியும், பேரவையில் பேசிய பொன்முடி மீது கடுமையாகப் பாய்ந்து,

* பூமாலை
* குரங்கு
* பேச அருகதையற்றவர்கள்
* வெட்கமில்லாதவர்கள்

என்ற வார்த்தைகளை அள்ளி வீசியது - அம்மவோ! எத்துணை உயர்ந்த

சிறந்த

மதிப்பு வாய்ந்த ஆரோக்கிய அரசியல்!

இந்த ஆரோக்கிய அரசியலைப் புகழ்ந்து

* ஆலவட்டங்கள் சுழலட்டும்!
* முரசுகள் முழங்கட்டும்!
* மணிகள் ஒலிக்கட்டும்!
* டேய்! டூ! உக்காருடா!

இதுவே ஆரோக்கிய அரசியலின்
ஆகாயமளாவ ஒலிக்கும் கோரஸ் கோஷமாகட்டும்!
உடன்பிறப்பே, இதுகண்டு உளம் சோராதே!
இதையும் கொஞ்ச காலம் ரசிப்போம்!

அன்புள்ள,

மு.க.

20-3-2002

2706. பாலா! என்ன நடக்கிறது இந்த நாட்டில்?

உடன்பிறப்பே,

இலட்சிய எழுத்தாளர் நண்பர் வல்லிக்கண்ணன் பற்றிய புத்தகம் ஒன்றைப் படிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அதில் கட்டுரை தீட்டியுள்ள கமலவேலன் என்பார், தமிழறிஞர் மு.வரதராசனார், பேரறிஞர் அண்ணா ஆகியோர் கடித இலக்கியம் வளர்த்ததையும், அண்ணா அவர்கள் விட்டுச் சென்ற அப்பணியை கலைஞர் கருணாநிதி அவர்கள், முரசொலி நாளேட்டின் மூலம் தனது தம்பியர்க்குக் கடிதங்களை எழுதி வருகிறார் என்றும், என்னையும் மறவாமல் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆம்! அரசியல் கடிதங்கள் ஆயிரமாயிரம் எழுதியிருக்கிறேன். எண்ணற்ற இலக்கியக் கடிதங்கள், அதுவும் நெருக்கடி நிலை காலத்தில் நெஞ்சை மெல்லத் திறந்து காட்டும் பலகணி போல இரு பொருள் கொண்ட பல நூறு கடிதங்கள். சிந்தை அணு ஒவ்வொன்றிலும் நிறைந்த அண்ணன் மறைந்த போது இதயத்தைத் தந்திடு அண்ணா! என்று, எழுதுகோலைக் கண்ணீரில் நனைத்த கவிதைக் கடிதம். நம்முடன் இருந்து இயக்கப் பணிகளுக்காக உழன்று உயிர் நீத்த உடன்பிறப்புகளுக்காக தென்பாண்டிக் கடல்முத்தே! தீர்ந்ததோ உந்தன் வாழ்வு! என்றும், போய்விட்டாயா போர்வாள் மீசைக்காரா! என்றும், எங்கள் சேதுநாட்டு செல்லக்கிளி எங்கே? என்றும் எத்தனை எத்தனையோ கடிதங்கள்!

அந்த உடன்பிறப்புகளுக்காக எழுதிய கடிதம் போல், இன்று ஓர் கடிதம் எழுத பேனாவை எடுக்கின்றேன். இந்த உடன்பிறப்பு, நமை விடுத்துப் போய்விட்டான் என்று நம்பி இந்தக் கடிதம் எழுதுவதா? இல்லை, இருக்கின்றான் என்ற உறுதியுடன் இக்கடிதம் தீட்டுவதா? புரியவில்லையே என்ற புலம்பலுடன் இதனை எழுதுகிறேன்.

கோயில் கொடிமரம் போல் நெடிதுயர்ந்த வடிவும், வைரம் பாய்ந்த தேக்குமரமெனத் தேகமும், காலா உன்னைக் காலால் மிதிக்கிறேன் வாடா எனப் பாடிய பாரதிக்கு நிகராக நெஞ்சுரம் வாய்ந்த பாலா! எனப் பெருமை கொள்ளும் பாலன் எனும் பெயரும் பூண்டு, உறையிலிருந்து உருவியெடுத்த வாள் உயிர் பெற்று நடப்பது போல் கம்பீரமும் கொண்டு, கழகப்பணி புரிந்த காளையன்றோ நீ!

மூன்று மாத காலமாக உன்னைக் காணவில்லை. இதோ! அதோ! இன்று கண்டுபிடிப்போம்! நாளை கண்டுபிடிப்போம்! என்று காவல்துறை அதிகாரிகள் உறுதியளித்தவண்ணமிருந்தனர். மனைவி மக்கள் கதறினர், கண்ணீர் வடித்தனர். மூத்த மகன் செல்வன் மணிமாறன் நீதிமன்றத்தில் முறையிட்டுக் கொண்டான்.

அதற்குள்ளாகப் பழி! நீ உலவிய பாசறை மீதே போடப்பட்டது! யாரோ தெருவில் போவோர் வருவோர், போட்ட பழியல்ல! தேர்ந்தெடுக்கப்பட்ட ஆட்சித் தலைவியே கட்டிவிட்ட பொய்ப்பழி! இப்படியும் எண்ணத் தோன்றுகிறதென்று!

அதனால்தான் போலும்! நீ மறைந்தாய் என்றோர் சேதி இப்போது வந்துள்ளதெனினும், ஏழு நாட்களுக்கு முன்பே, அவை நடுவே மறைந்த பாலன் என்ற வார்த்தை தெரிந்தோ தெரியாமலோ வெளிப்பட்டு, பின்னர் உள்ளுக்குள் போய்விட்டது!

பாலா! நாங்கள் இப்போது என்ன செய்வது? தீயிட்டுக் கருக்கிச் சாம்பலாக்கி விட்டனர் உன்னை! என்ற தகவலை நம்பி அழுது சோர்வதா? இல்லை, உன் மகன் மணிமாறன் அடித்துச் சொல்வது போல் நீ இருக்கிறாய் என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு ஆறுதல் பெற்று, தேடுதலைத் தொடர்வதா?

என்ன நடக்கிறது நாட்டில் என்றே தெரியவில்லையே பாலா! - அரசுக் கட்டிலில் அமர்ந்திருப்போர் யாராயினும், நடப்பது நம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு என்ற தெம்பும், அரசு இயந்திரம் பொதுவாகச் செயல்படும், நடுநிலையுடன் இயங்கும் என்ற நம்பிக்கையும், நீதி - நியாயம் - காவல்துறையினரின் பாதுகாப்பு இவையனைத்தும் - அத்துறையிலிருப்போரும் மனிதர்கள் தானே அவர்களுக்கும் மனைவி, மக்கள் மட்டுமின்றி, மனச்சாட்சியும் உண்டே என்ற வகையில் பாரபட்சமின்றிச் செயல்படும் என்ற ஐயுறவற்ற நிலையும் கடைப்பிடிக்கப்படும் என்ற எதிர்பார்ப்பும்கூட, கனவாகத் தோன்றி கலைந்து விடும் போலிருக்கிறதே!

புகார் கொடுத்தவர்களையே குற்றவாளி என விசாரிக்கும் புனித ராஜ்யத்தில்(?) ஆட்சியிலிருப்போர் ஆணைப்படி, அநீதியோ நீதியோ அதைப்பற்றிக் கவலைப்படாமல் அதிகாரிகள் ஆடித்தானே தீர வேண்டும் - அதுதானே இங்கும் நடக்கிறது. ஏன் இந்த நிலை?

எவர் ஆண்டால் நமக்கென்ன? என்றே நாளோட்டும் ஏழையாய், தரித்திரராய், பட்டினிப் படையினராய், என்றும் ஒன்றுபோல் வாழ்ந்திடக் கற்ற ஏ, பாரத புத்திரரே!

என வல்லிக்கண்ணன் வருந்துவது, வறுமை நிலையில் வாடுவோரைக் கண்டு!

இந்த வரிகள், பாலா! உன்னைப் போல காணாமற் போனவர்களின் கதி என்ன என்பதறியாது, கட்டுக்கதைகளினால், கற்பனைச் செய்திகளினால், கலங்கித் தவிப்போரைப் பார்த்து எவர் ஆண்டால் நமக்கென்ன? என்று எண்ணியதின் விளைவன்றோ இது என வேதனையுடன் இடித்துக் காட்டுவதாகவும் அமைந்துள்ளதல்லவா?

பாலா! நீ இன்னும் இருக்கின்றாய் என்ற நினைப்புடனே, உன் மனைவி, ஆம் அந்தச் சகோதரியின் மாங்கல்யம் அவர் கழுத்திலே தொங்கிக் கொண்டிருக்கிறது!

நீ இல்லை! போய் விட்டாய்! உன் உயிரைப் போக்கி விட்டனர் உன்மத்தர்கள் என்று உறுதிபட எண்ணிடவும் என் இதயத்துக்கு வலிவு இல்லை!

வருவாய் என் முன்னால்! வந்து வழக்கம்போல் குனிந்த தலை நிமிராமல் என்னிடம் பேசுவாய்! என்று நம்பிக்கொண்டு நானுமிருக்கிறேன்.

சண்டாளர்கள் உன் மேனியைக் கொளுத்திச் சாம்பலாக்கி விட்டார்கள் என்றால், அவர்களுக்கும், அவர்களை ஏவி விட்டவர்களுக்கும் அந்தச் சாம்பல் தூளே சகாரா பாலைவனப் புயலாக கிளம்பி சமாதி எழுப்பட்டும்.

இந்தச் சாபத்திற்கெல்லாம் வேலையில்லாமல், நீ சடுதியில் வர மாட்டாயா? வந்து எங்களைக் காண மாட்டாயா?

அன்புள்ள,

மு.க.

21-3-2002

2707. கல்கி இதழ் சரியாகக் கணித்துக் கூறியுள்ளது!

உடன்பிறப்பே,

கேள்வி:- தினத்தந்தி (மார்ச் 21) முதல் பக்கத்தில் பெட்டிச் செய்தியாக வெளியிடப்பட்டுள்ள ஒரு பேட்டியை,உங்களுக்கு அப்படியே வெட்டி அனுப்பியுள்ளேன். இதற்கு உங்கள் பதில் என்ன?

பதில்:- தி.மு.க.வினர் தொலைபேசிகளும் செல்போன்களும் ஒட்டுக் கேட்கப்படுவதாக நானோ அல்லது நமது நாடாளுமன்ற உறுப்பினர்களோ, இட்டுக் கட்டிச் சொல்லவில்லை!

லஞ்ச ஒழிப்பு போலீஸ் உயர் அதிகாரி கூறினார் என்று 'தினத்தந்தி' இதழ் வளாகத்திலிருந்து மாலைப் பதிப்பாக வெளிவருகிற ''மாலை மலர்'' (18.3.2002) பத்திரிகையில் இச்செய்தி முதல் பக்கத்தில் தொடங்கி 2ஆம் பக்கம் 5வது பத்தியில் பின்வருமாறு வெளியிடப்பட்டுள்ளது.

இதுபோன்ற முக்கியமான விவகாரங்களைக்கூட கவனிக்காமல், ஏனோதானோவென்று அதிகார அந்தஸ்து கண்களை மறைக்கிற காரணத்தால் எதிர்க் கட்சிகள் மீது, அதுவும் குறிப்பாக தி.மு.க. மீது, பழிபோட முதலமைச்சராக இருக்கிற ஜெயலலிதா கொஞ்சமும் அஞ்சுவதில்லை!

அதனால்தானே சட்டப்பேரவையிலேயே அவர், எம்.கே. பாலன் காணாமற்போனது பற்றிக் கழகச் சார்பில் கேட்டபோது கூட, ஒரு முதலமைச்சருக்குரிய பொறுப்புடன் விளக்கமோ, பதிலோ அளிக்காமல், சைதாப்பேட்டைத் தொகுதியில் பாலன் தி.மு.க. சார்பில் நிற்பதற்கு சீட் கேட்பார் என்பதற்காக அவரை தி.மு.க. வினரே மறைத்து வைத்து விட்டதாகக் கூடக் கேள்வி யென்று கூறினார்!

இன்று பாலனைப் பற்றி போலீசார் தருகிற தகவல்களுக்கும், முதலமைச்சர், பேரவையில் ஹேஷ்யமாக வெளியிட்ட செய்திக்கும் ஏதாவது தொடர்பு இருக்கிறதா?

அதைப்போலத்தான் இவருடைய பொறுப்பில் இருக்கிற காவல்துறை உயர் அதிகாரி ஒருவர் சொன்னதாக, அதாவது தி.மு.க.வினரின் தொலை பேசிகள் ஒட்டுக் கேட்கப்படுவதாக 'மாலைமலர்' செய்தி வெளியிடுகிறது. அதை அந்த இலாகா அதிகாரிகள் மறுத்திருக்க வேண்டும். மறுக்கவில்லை. அதற்கு மாறாக ஜெயலலிதா,

அது உண்மையல்ல! அவர்களுடைய அரசியல் இலாபத்திற் காக இந்த மாதிரியான குற்றச்சாட்டுகளைக் கூறிவருகிறார்கள்.

என்று விளக்கமளிக்கிறார்.

அவரிடம் வேறு என்ன எதிர்பார்க்க முடியும்! தங்கள் வீட்டுத் தலைவனை இழந்து தவிக்கும் குடும்பத்தார் ஒருபுறம் குமுறிக் கொண்டிருக்க - கழகக் காளையைக் காணோமே என்று கழகப் பாசறை வீரர்கள் கலங்கிக் கொண்டிருக்க - அந்த நேரம் பார்த்து சைதாப்பேட்டை தேர்தலுக்காக அவர் தி.மு.க. வினரால் ஒளித்து வைக்கப்பட்டிருக்கிறார் என்று சொன்னதுதான் அரசியல் இலாபத்துக்காக சொல்லப்பட்டதே தவிர, அம்மையாரின் இலாகா அதிகாரிகள் தொலைபேசி ஒட்டுக் கேட்டது பற்றி வெளியிட்ட கருத்துகளை, ஏதோ தி.மு.க.வினர் சொன்னது போலக் கூறுவதுதான் அரசியல் இலாபத்துக்கே தவிர,

இப்படிப்பட்ட அற்பத்தனமான வழிகளில் அரசியல் இலாபம் தேட, தி.மு.க. என்றைக்குமே எண்ணிய தில்லை! அந்த அநாகரிக வேலையில் ஈடுபட்டது மில்லை.

இதோ! 24-3-2002 நாளிட்ட 'கல்கி இதழ்', தனது தலையங்கத்தில் இதுபற்றி மிகச் சரியாக கணித்துச் சொல்லியிருக்கிறது.

அது வருமாறு :- சட்டசபையை கட்சி அரசியலுக்கான களமாக மாற்றி, சேப்பாக்கத்தில் கருணாநிதியின் அலுவலகம், தாக்கப்பட்ட தற்கும் சரி, பாலன் காணாமல் போனதற்கும் சரி, தி.மு.க. வே காரணம் என்று தீர்ப்பே அளித்திருக்கிறார் ஜெயலலிதா. இந்த அணுகுமுறை ஆரோக்யமானதல்ல! இவ்வாறு கல்கி மட்டுமல்ல! கண்யமான நடுநிலையாளர்கள் அனைவருமே இப்படித்தான் கணிக்கிறார்கள்!

அன்புள்ள,

மு.க.

22-3-2002

2708. மாற்றம் எதுவுமில்லை என்பதற்காக மகிழ்கிறோம்!

உடன்பிறப்பே,

குஜராத்தில் கோத்ரா ரயில் நிலையத்தில் 60 உயிர்ப்பலியுடன் தொடங்கி, குஜராத் முழுவதும் சுமார் 600க்கு மேற்பட்ட பிணங்கள் குவியுமளவுக்கு ரத்தக்களரி ஏற்பட்டு, அடுத்த நிமிடம் என்ன செய்தி வருமோ அயோத்தியாவிலிருந்து, எனத் திகில் கொண்டிருந்த நேரத்தில், இந்தியப் பிரதமர் வாஜ்பய் அவர்கள் எடுத்த உறுதியான நிலை, அபாயகரமான எதிர்பார்ப்புகள் அனைத்துக்கும் முற்றுப் புள்ளி வைத்து விட்டது என்றே நாடு நிம்மதிப் பெருமூச்சு விட்டது. நாட்டின் பொறுப்பு மிகுந்த பதவியில் அமர்ந்திருக்கும் பிரதமர் வாஜ்பய் அவர்கள், தேசிய ஜனநாயகக் கூட்டணி தொடங்கப்பட்ட நாளில் பிரகடனப்படுத்தப்பட்ட அந்த அணியின் செயல் திட்டத்தின் முக்கியமானதும், உயிரானதுமான பகுதிகளை மறந்து விடாமல் அல்லது மறுத்துவிடாமல் மிகுந்த வைராக்கியத்துடன் இருந்து, அந்த உறுதி மொழிகளைக் காப்பாற்றியிருக்கிறார் என்பதை, அரசியலுக்காக வேண்டுமானால் தவறாக விமர்சிக்கலாம்.

அவர் மேற்கொண்ட உறுதியும், அந்த அடிப்படையில் எடுக்கப்பட்ட வெளிப்படையான நடவடிக்கைகளும் நாட்டு மக்களுக்கு நம்பிக்கை ஒளி காட்டிய வேளையில்தான், அதனைச் சீர்குலைப்பது போலச் சில நிகழ்ச்சிகளும்! சில செய்திகளும்!

ஒரிசா சட்டப் பேரவைக்குள் விசுவ இந்து பரிட்சத் தொண்டர்கள் நுழைந்ததும், அங்கே பெருங் கலவரம் விளைத்ததும், அயோத்திப் பிரச்சினையில் ஏற்பட இருந்த அமைதி எனும் நல்லதோர் பாலில் நஞ்சு கலந்த செயலாயிற்று!

பெங்களூரில் நடைபெற்ற ஆர்.எஸ்.எஸ். மாநாட்டுத் தீர்மானம், தேவையற்ற குழப்பத்தை உருவாக்கி நடுநிலையாளர்களின் கண்டனத்திற்குரியதாயிற்று!

இன்னொரு செய்தியும், இடியென எல்லோரது நெஞ்சிலும் இறங்கியது. கோத்ரா ரயிலடியில் கொளுத்திக் கொல்லப்பட்ட கரசேவகர்களின் அஸ்தி ஊர்வலம் ஒரு பெரும் யாத்திரையாக எடுக்கப் பெற்று அயோத்தி சென்றடையும் என்பதாக வந்தது!

அடல் பிகாரி வாஜ்பய் அவர்களின் உறுதியான அணுகுமுறையினாலும், நடவடிக்கையினாலும் அணைக்கப்பட்ட நெருப்பு, வேறெங்கோ ஒரு பகுதியில் தலைநீட்டி மூண்டெழுந்து நாட்டையே பொசுக்கிடுமளவுக்கு விளைவுகள் தோன்றிவிடுமோ என்ற ஐயப்பாடும் அச்ச உணர்வும், தேசிய ஜனநாயகக் கூட்டணியிலே இடம் பெற்றிருந்த தி.மு.கழகம் போன்ற கட்சிகளுக்கு ஏற்பட்டதிலும், அந்த உணர்வுகளை உடனடியாக வெளிப்படுத்தி எச்சரிக்கை செய்ததிலும், வியப்பொன்றுமில்லை!

அடிப்படைக் கொள்கைகளை விட்டுக் கொடுத்துவிட்டோ, அடகு வைத்து விட்டோ அல்லது அந்தக் கொள்கைகளுக்கு எதிராக அறைகூவல் எழும்போது அடங்கிக் கிடந்தோ, ஓர் அரசியல் கூட்டணியில் இருந்தே தீர வேண்டுமென்ற நிலையெடுத்திராத காரணத்தினால்தான் தி.மு.க. போன்ற கட்சிகள், தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்த போதிலும் கூட, தமக்கு ஏற்பட்ட மனமாச்சரியத்தை வெளிப்படுத்தின.

அந்த நல்லுணர்வை அலட்சியப்படுத்தாமல், தேசிய ஜனநாயகக் கூட்டணியின் கூட்டத்தை உடனடியாகக் கூட்டி, அணியில் இடம் பெற்றுள்ள கட்சிகளின் தலைவர்கள் மனம் திறந்து பேசிட வாய்ப்பு உருவாக்கி,

இறுதியாக அந்தக் கூட்டத்தில் உறுதியான முடிவொன்றை எடுத்து அறிவித்துள்ள கூட்டணியின் தலைவர் திரு. வாஜ்பய் அவர்கள், நமது பாராட்டுக்குரியவராகிறார்.

தேசிய ஜனநாயகக் கூட்டணி ஏற்கெனவே அறிவித்துள்ள செயல் திட்டத்தில் மத்திய அரசு தொடர்ந்து உறுதியுடன் இருக்கும்.

இதுதான் நேற்றைய (22-3-2002) கூட்டத்தில் எடுத்தறிவிக்கப்பட்ட முடிவு!

அந்தச் செயல் திட்டம் 1999-ல் பிரகடனப்படுத்தப்பட்ட போது அறிவிக்கப்பட்டவை யாவை?

''தேசிய ஜனநாயகக் கூட்டணி என்பது புதிதானது. அதுவே நமது வருங்காலம். அது அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய முன்னேற்றம், நீதி ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட இயக்கமாகும்''.

நாங்கள் சிறுபான்மைச் சமுதாயத்தினரை இருகரம் கூப்பி அழைத்து, திரும்பத் திரும்பக் கூறுகிறோம். அரசியல் சட்டத்தில் சிறுபான்மையினருக்கு உண்டான அனைத்து உரிமைகளையும் நாங்கள் பாதுகாப்போம் என்று பிரகடனம் செய்கிறோம்.

தேசிய ஜனநாயகக் கூட்டணி என்பது வேறு யாருடைய அரசியல் கரமும் அல்ல. அது இந்திய மக்களின் ஒன்றாக இணைந்த கரமாகும். எனவே யாரும் ஒதுக்கி வைக்கப்படமாட்டார்கள்.

அனைவருக்கும் நீதியும், நேர்மையும் வழங்கப்படும். எவர் ஒருவருக்கும், எந்த அளவு பாரபட்சமும் காட்டப்பட மாட்டாது.

சிறுபான்மைச் சமுதாயத்தைச் சேர்ந்த எங்களது அன்பான சகோதரர்களுக்கும், சகோதரிகளுக்கும் எங்களுடைய நேசக் கரத்தை முழு மனத்துடன் நீட்டி, பின்வரும் பாசமிகு வார்த்தைகளை சொல்ல விரும்புகிறோம்.

நாம் கைகோத்துக் கொண்டு புதிய உத்வேகம் நிறைந்த இந்தியாவை உருவாக்க இணைந்து பீடு நடை போட்டிடுவோம்.

நம்முடைய மனத்தில் இருக்கின்ற மனமாச்சரியங்களைத் தூக்கி எறிந்து விடுவோம். பிளவு மனப்பான்மைக்கு முற்றுப் புள்ளி வைத்திடுவோம். பிரச்சினைக்குரிய விஷயங்களை ஒதுக்கி வைப்போம். பரஸ்பர நட்பு, நம்பிக்கை என்ற இழைகளால் நம்மை நாமே பிணைத்துக் கொள்வோம். இதுதான் தோழமை மிகுந்த எங்கள் அழைப்புக்குப் பின்னால் உள்ள கருத்துக்களாகும். இதுவே நாம் சிறுபான்மைச் சமுதாயத்திற்கு அளிக்கும் உறுதியான உத்தரவாதம் ஆகும்.

இந்தச் செயல் திட்டத்தை நமது (N.D.A) தேசிய ஜனநாயகக் கூட்டணி தொடர்ந்து உறுதியாகச் செயல்படுத்த, மிக முக்கியமானதும், எதிர்பார்ப்பு மிகுந்ததுமான ஒரு காலகட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கதாகும். இந்த முடிவு வெற்றி பெற ஒத்துழைப்போர் நமது வாழ்த்துக்கும், பாராட்டுக்கும் உரியவர்களாவார்கள்.

நீதியும், நியாயமும் அனைத்துப் பிரிவு மக்களுக்கும் வழங்கப்படவும், யாருக்கும் சாதகமாகவோ, பாதகமாகவோ செயல்-படாத நிலை எடுக்கவும், சிறுபான்மை மக்களுக்கு அரசியல் சட்டம் அளித்துள்ள உரிமைகள் பாதுகாக்கப்படவும், சூளுரை மேற்கொண்டுள்ள அணியே தேசிய ஜனநாயகக் கூட்டணி என்பதைச் சுட்டிக் காட்டியது தி.மு.க.!

இதில் மாற்றம் எதுவும் இல்லை என்பதற்காக மனமகிழ்கிறோம்!

அன்புள்ள,

மு.க.

24-3-2002

2709. கழகப் பொதுக்குழு கண்டுள்ள முடிவு!

உடன்பிறப்பே,

விபூதிப் பிரச்சினையை தமிழக பா.ஜ.க.வின் முக்கியப் பிரமுகர்கள் திரித்துக் கூறி, என்னையும், தி.மு. கழகத்தையும் விமர்சித்தது -

முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா, சென்னை கபாலீஸ்வரர் ஆலயத்தில் நடத்திய அன்னதான நிகழ்ச்சியில், தமிழ் மாநில பா.ஜ.க. தலைமை நிர்வாகக் குழுவே சென்று கலந்துகொண்டது -

ஆகிய இந்தக் காரணங்களுக்காக தி.மு. கழகம் தமிழக பாரதிய ஜனதாவுடன் அணி சேர்ந்திருப்பதிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டுள்ளது என யார் விமர்சித்தாலும் அது தவறு!

இந்தக் காரணங்கள் உறவு முறிவு என்ற சங்கிலியின் மெலிந்துபோன கரணைகள் எனப்படு மென்றாலும், அடிப்படைக் கொள்கைகளையே அசைத்துப் பார்க்கும் அளவுக்கு, தமிழ் மாநில பா.ஜ.க. முன்னோடித் தலைவர்கள் விடுத்த அறிக்கைகள், நம்மால் பொறுத்துக்கொள்ள முடியாதவைகளாகி விட்டன என்பதை யாரும் மூடி மறைக்க இயலாது!

குஜராத் மாநில கோத்ரா ரயிலடியில் கரசேவகர்கள் 60 பேர் உயிருடன் கொளுத்தப்பட்டபோது, அதனைக் கண்டித்து உடனடியாக நான் அறிக்கை விட்டிருந்தும் கூட, அச்சம்பவம் குறித்து செல்வி ஜெயலலிதா விடுத்த கண்டன அறிக்கையில், என்னமோ அவர் தான் சிறுபான்மையினர் செய்த வன்முறையைக் கண்டித்தது போலவும், மற்ற கட்சித் தலைவர்கள் சிறுபான்மையோர்க்கு சிறு தீங்கு என்றாலும் துடித்துப் போய் அறிக்கை விடுகிறவர்கள், இப்போது பெரும்பான்மை மக்களான (கரசேவகர்கள்) கோத்ராவில் கொல்லப்பட்டதற்கு வாய் திறவாமல் இருப்பது ஏன் என்று கேட்டிருந்ததை - தமிழ்நாட்டு பா.ஜ.க. வினர் பெரிதும் பாராட்டி ஜெயலலிதா அவர்களைப் புகழ்ந்து தள்ளி அறிக்கைகள் விடுத்தார்கள். குஜராத்தில் சிறுபான்மை மக்கள், பெரும்பான்மை மக்களைவிட எண்ணிக்கையில்

சுமார் பத்து மடங்குக்கு அதிகமாக 600 பேருக்கு மேல் கொல்லப்பட்டிருந்தும்கூட, அந்த ரத்தக்களரியை இந்தியப் பிரதமர் வாஜ்பய் அவர்கள் கண்டித்திருந்தும்கூட, இங்குள்ள பாரதிய ஜனதாவின் முக்கிய பிரமுகர்கள், செல்வி ஜெயலலிதாவின் அறிக்கையை சிலாகித்துப் பேசியதும், அறிக்கை விடுத்ததும், சிறுபான்மை யோர்க்கும் அவர்கள் பட்ட அல்லலுக்கும் அனுசரணையாக அமையவில்லை என்பதே உள்ளங்கை நெல்லிக்கனி போன்ற தெளிவான உண்மையாகும்.

அடுத்ததாக, பெங்களூரில் நடைபெற்ற ஆர்.எஸ்.எஸ். மாநாட்டுத் தீர்மானத்தை தி.மு.க. ஏற்றுக் கொள்ளவில்லை. வன்மையாகக் கண்டித்தது. ஆனால் தமிழ் மாநில பா.ஜ.க. அந்தத் தீர்மானத்தை வரவேற்று அறிக்கை விடுத்தது! இது, தி.மு.க. சிறுபான்மை மக்கள் பிரச்சினையில் எடுத்துள்ள நிலைக்கு நேர்மாறான நிலையாகும்.

தேசிய ஜனநாயகக் கூட்டணியின் செயல் திட்டத்தையும், அத்திட்டம் உருவாக தி.மு.க.வுக்கும் பங்களிப்பு உண்டு என்பதையும், அதன் அடிப்படையில் தேசிய ஜனநாயகக் கூட்டணி அளித்துள்ள உறுதிமொழி தொடர்ந்து காப்பாற்றப்பட்டு சிறுபான்மையோர்க்கு அரசியல் சட்டத்தில் அளிக்கப்பட்டுள்ள உரிமைகளும் பாதுகாக்கப்படும் என்பதையும், மீண்டும் ஒருமுறை உறுதிப்படுத்தி அறிவிக்க பிரதமர் வாஜ்பய் அவர்கள் முன்வந்துள்ள நிலையில், அந்த அறிவிப்பு நிலைநாட்டப்பட்டு நாட்டு மக்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் நடைமுறைப்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படும் வேளையில்,

சிறுபான்மை மக்களுக்கு ஏற்படும் தீங்குகளைக் களைய குரல் கொடுப்பதும், பரிவு காட்டுவதும், ஏதோ, பெரும்பான்மை மக்களுக்கு எதிரானது என செல்வி ஜெயலலிதாவின் திசை திருப்பும் அறிக்கைக்கு பாராட்டு கூறவும், பெங்களூர் ஆர்.எஸ். எஸ். மாநாட்டுத் தீர்மானத்திற்கு வரவேற்பு கூறவும்,

தமிழ் மாநில பா.ஜ.க. முற்பட்டிருப்பது, எந்த ஒரு சூழ்நிலையிலும் சிறுபான்மை மக்களின் பாதுகாப்புக்காகப் போராடும் தி.மு.க. வினால் ஒப்புக்கொள்ள முடியாததாகும்.

இதன் எதிரொலியே.....புகைந்துகொண்டிருந்த எரிமலை வெடித்தது போல.....கழகப் பொதுக்குழு எடுத்த முடிவாகும்!

அன்புள்ள, மு.க.

26-3-2002

2710. அரசு தடுக்குமா?
அவலம் தொடராமல்!

உடன்பிறப்பே,

பிப்ரவரி 5ஆம் நாளன்றும், பிறகு மார்ச் 9ஆம் நாளன்றும் தமிழகத்திலே நடைபெற்று வரும் சட்டம் ஒழுங்கு பிரச்சினை குறித்தும், சாலைகளிலே நடைபெறும் விபத்துகள் குறித்தும் இரண்டு கடிதங்கள் எழுதியிருந்தேன். அந்தக் கடிதத்திலேயே இதனை இந்த ஆட்சியை நேரடியாகக் குற்றம் சாட்டுவதற்காக எழுதவில்லை என்றும், ஆனால், எப்படியோ இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெற்று பலர் இறப்புலகிற்கு செல்ல நேரிடுகின்றது என்றும் எழுதியிருந்தேன். அந்தக் கடிதத்திலே ஒன்பது மாத ஆட்சியிலே 136 சாலை விபத்துகள் ஏற்பட்டு 354 பேர் பலியாகியிருந்தனர். 66 கொலைகள், 97 கொள்ளைகள், 4 கற்பழிப்புக் கொடுமைகள், 4 மோசடிச் சம்பவங்கள், 3 கடத்தல்கள், 4 சாராய சாவு நிகழ்ச்சிகளில் 113 பேர் பலி என்று பட்டியலிட்டுக் காட்டியிருந்தேன். ஆனால் சில மாத இடைவெளிக்குப் பிறகும், இதுபோன்ற சம்பவங்கள் தொடர்வது குறைந்தபாடில்லை. குறிப்பாக கடந்த சட்டப் பேரவை நிகழ்ச்சிக்கும், தற்போது தொடங்கவுள்ள பேரவை நிகழ்ச்சிக்கும் இடையே நடைபெற்றுள்ள நிகழ்ச்சிகளின் பட்டியலைப் பார்த்தாலே எந்த அளவிற்கு நாளுக்கு நாள் இவை அதிகரித்து வருகின்றன என்பதைப் புரிந்து கொள்ள முடியும். அந்தப் பட்டியல் இதோ :-

13-3-2002	அம்பத்தூரில் மோட்டார் சைக்கிளில் சென்ற இரண்டு கல்லூரி மாணவர்கள் லாரி மோதி இறந்தனர்.
	குமரி மாவட்டத்தில் வெடி விபத்தில் உடல் சிதறி மாணவன் சாவு.

அச்சரப்பாக்கம் அருகே பேருந்தும் காரும் மோதிக் கொண்டதில் ஒருவர் சாவு, ஐந்து பேர் காயம்.

14-3-2002 திருப்பூர் அருகே பஞ்சாயத்துத் தலைவர் வெட்டிக் கொலை.

சென்னை சென்ட்ரல் ரெயில் நிலையத்தில் டிரங்க் பெட்டியில் ஆண் பிணம்.

தூத்துக்குடியில் நாச்சியார், அவரது மகன் வாசகம் கொலை.

பழைய வண்ணாரப்பேட்டையில் பேருந்து விபத்தில் சிக்கி பாதிரியார் பலியானார்.

திருவொற்றியூரில் வாலிபரைக் கொலை செய்து குப்பையில் வீச்சு.

பரங்கிமலை அருகே வாலிபரைக் கொன்று சாக்கு மூட்டையில் பிணம்.

15-3-2002 கொட்டிவாக்கத்தில் பூட்டிய வீட்டுக்குள் சிறுவன் படுகொலை, தாய்க்குக் கத்திக்குத்து.

வண்ணாரப்பேட்டையில் மோட்டார் சைக்கிளில் சென்ற வாலிபர் விபத்தில் சாவு.

16-3-2002 வில்லிவாக்கத்துக்கும், கொரட்டூருக்கும் இடையே மின்சார ரெயில் பெண் போலீசுக்கு கத்திக்குத்து, நகை கொள்ளை.

நாகர்கோவிலில் பேருந்தும், காரும் மோதிக்கொண்டதில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆறுபேர் பலியானார்கள்.

17-3-2002 மத்திய அரசு அதிகாரியின் மகன் விஷ ஊசி போட்டுக் கொலை.

சின்னமனூர் அருகே வேன் - பேருந்து மோதிக் கொண்டதில் ஐந்து பேர் நசுங்கிச் செத்தனர்.

18-3-2002 திருப்பரங்குன்றம் முருகன் கோவிலில் ஓய்வுபெற்ற பெண் அதிகாரியிடம் நகை கொள்ளை.

திருவொற்றியூரில் கோவில் உண்டியலை உடைத்துப் பணம் கொள்ளை.

அரும்பாக்கத்தில் தோழியின் திருமணத்திற்குச் சென்ற இரண்டு பெண்கள் மீது லாரி மோதி இறந்தனர்.

ராயப்பேட்டையில் தொழில் அதிபர் வீட்டில் கொள்ளை.

19-3-2002 வியாசர்பாடியில் லாரி மோதி சாலையோரத்தில் நின்ற வாலிபர் சாவு.

ஆவடியில் புது வீட்டில் பெண் பிணம் - கற்பழித்துக் கொலையா?

வில்லிவாக்கத்தில் கீரை வியாபாரியை வழிமறித்து கொலை செய்து, பணம் கொள்ளை.

20-3-2002 சென்னை வந்த ரெயிலில் பயணியிடம் 5 லட்சம் ரூபாய் திருட்டு.

கடலூர் மாவட்டத்தில் பேருந்துக்குள் புகுந்து கைதி வெட்டிக் கொலை. இரண்டு போலீசாருக்கு அரிவாள் வெட்டு.

பல்லாவரம் அருகே கணவன் கண் எதிரே மனைவி மீது பேருந்து மோதி சாவு.

சென்னை கொண்டித்தோப்பில் காவல்துறையினருக்கான குடியிருப்பில் ஆறு காவலர்களின் வீடுகளிலே பூட்டை உடைத்து கொள்ளை.

வளசரவாக்கத்தில் ஓடும் பேருந்தில் போலீஸ் அதிகாரி போல நடித்து வாலிபரிடம் நகை பறிப்பு.

கொட்டிவாக்கத்தில் சிறுவன் கொலை.

திருநின்றவூரில் மோட்டார் சைக்கிளில் சென்ற அரசு ஊழியர் பலி.

மேல்மருவத்தூர் கோவில் அருகே குளியல் அறையில் ஆண் பிணம்.

21-3-2002 நீதிமன்றத்திற்கு வீரமணி உட்பட கைதிகளைக் கொண்டு வந்த வேன் கவிழ்ந்து 17 பேர் காயம்.

முதலமைச்சரின் சிறப்புப் பிரிவில் தனி அதிகாரியாக வேலை பார்ப்பவர் வீட்டிலேயே கொள்ளை.

22-3-2002 கோவில்பட்டியில் தீவிரவாதிகள் நடத்திய வெடிகுண்டு தொழிற்சாலையில் விபத்து ஏற்பட்டு காவலாளி சாவு.

கிண்டி பூங்காவில் சந்தன மரம் திருட்டு.

23-3-2002 ஆலந்தூரில் வேலை வாங்கித் தருவதாக 2 லட்சம் ரூபாய் மோசடி.

ஒட்டன்சத்திரம் அருகே சின்னக் கண்ணன் என்ற ஆசிரியர் உயிருடன் எரித்துக் கொலை செய்யப்பட்டார்.

தாம்பரம் அருகே எலுமிச்சம்பழம் கொடுத்து மந்திரிப்பதாகக் கூறி பெண்ணிடம் நகை பறிப்பு.

கள்ளக்குறிச்சியில் ஆஜராபி என்ற பெண்மணி கழுத்து நெரிக்கப்பட்டுக் கொலை.

கோவையில் போலீஸ்காரரை கத்தியால் குத்தினார் கஞ்சா வியாபாரி.

மதுக்கரையில் பெண் கற்பழித்துக் கொலை.

24-3-2002 தண்டையார்பேட்டையில் கத்திமுனையில் பெண்ணிடம் நகை கொள்ளை.

கத்தியைக் காட்டி மிரட்டி மதுபானப்கடையில் 40 ஆயிரம் கொள்ளை.

திருக்கோவிலூர் தணிக்கலாம்பட்டு கிராமத்தைச் சேர்ந்த மாணவி சங்கீதாவை ஓடும் ரயிலில் கற்பழித்துக் கொலை செய்தனர்.

தண்டையார்பேட்டையில் பெண்ணிடம் 10 பவுன் நகை பறிப்பு.

தலைமைச் செயலகத்திற்கு எதிரே ஆண் பிணம்.

25-3-2002 திண்டிவனம் அருகே நின்று கொண்டிருந்த லாரி மீது மற்றொரு லாரி மோதி 8 பேர் இறந்தனர். 28 பேர் படுகாயம் அடைந்தனர்.

விக்கிரவாண்டி அருகில் லாரி கார் மீது மோதியதில் இரண்டு பேர் அதே இடத்தில் உடல் நசுங்கி இறந்தனர். 2 பேர் காயமடைந்தனர்.

தர்மபுரி மாவட்டம் சூளகிரி அருகே மொபட் வண்டியில் பேருந்து மோதியதில் 4 பேர் இறந்தனர்.

கடலூர் மாவட்டம் வேப்பூர் அருகே மாமியாரும், மருமகளும் மொபட் வண்டியில் சென்றபோது பேருந்து மோதி இருவரும் பரிதாபமாக இறந்தனர்.

வட்டார போக்குவரத்து மோட்டார் வாகன இன்ஸ்பெக்டர், மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் சாமி கும்பிட சென்ற போது லாரியில் மோதி அவரும், மனைவியும், மகனும் மூன்று பேர் அந்த இடத்திலேயே பிணமானார்கள்.

ஊட்டி அருகே லாரியும், ஜீப்பும் மோதிக்கொண்டதில் இரண்டு பேர் பலியானார்கள். திருப்பூர் கணபதி பாளையத்தைச் சேர்ந்த மூன்றுபேர் ஒரே மொபட்டில் சென்றபோது தனியார் பேருந்து மோதி மூன்று பேரும் இறந்தார்கள். தமிழ் நாட்டில் இந்த ஒரு நாளில் மட்டும் 8 சாலை விபத்துகள் பெரிய அளவில் ஏற்பட்டு அதிலே 23 பேர் இறந்தார்கள்.

விருதுநகர் ஆலம்பட்டியைச் சேர்ந்த அந்தோணி என்பவரின் 16 வயதான மகள் தீபாராணி ஈவ்-டீசிங் கொடுமைக்கு ஆளாகி, தீக்குளித்து இறந்தார். மகள் இறந்தவேதனையில் தந்தையும் தற்கொலை செய்து கொள்ள முயற்சி. மாம்பலம் ரயில்நிலையத்தில் பெண்ணிடம் சங்கிலி பறிப்பு.

சென்னை சவுகார்பேட்டையில் நகைக் கடை வைத்திருப்பவரிடம் 13 லட்சம் மதிப்புள்ள தங்கக்கட்டிகள் கத்தியைக் காட்டி கொள்ளை.

துரைப்பாக்கம் அருகே ஏரியில் அழுகிய நிலையில் ஆண் பிணம்.

மீஞ்சூர் அருகே சாரதா என்பவர் எரித்துக் கொலை. கணவனும் பலியானார்.

ஆத்தூரில் காவல் நிலையம் சூறையாடப்பட்டது. இன்ஸ்பெக்டர் தாக்கப்பட்டார்.

மதுரை அருகே உயிரோடு எரித்துப் பெண் கொலை.

கொரட்டூரில் மாமூல் வசூலிப்பதில் தகராறு ஏற்பட்டு வாலிபர் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.

26-3-2002 குடிபோதையில் தகராறு - செங்குன்றம் அருகே வாலிபர் கொலை.

புரசைவாக்கத்தில் வேன் மோதி சிறுவன் பலி. பொதுமக்கள் மறியல்.

சென்னையில் தண்டையார்பேட்டையில் காவலர் குடியிருப்பில் காவலர்களின் ஆறு வீடுகளிலே கொள்ளையர்கள் புகுந்து நகை, பணத்தைக் கொள்ளை அடித்துச் சென்றனர். காவலர் குடியிருப்பில் நடைபெற்ற மூன்றாவது கொள்ளைச் சம்பவம் இது.

உடன்பிறப்பே, சட்டத்தைப் பாதுகாக்கப் பாடுபடும் காவல் துறையினரின் இல்லங்களிலேகூட, தங்கள் பொருளுக்குப் பாதுகாப்பில்லை என்று அந்த காவல் துறை நண்பர்களின் இல்லத்தினரே வீதிக்கு வந்து போராடுகின்ற நிலை உருவாகியுள்ளது. படிக்கச் செல்லும் மாணவிகள் பத்திரமாக வீடு திரும்புவார்கள் என்பதற்கோ அல்லது வீட்டிலே விடியற்காலையிலே எழுந்து படித்துக் கொண்டிருக்கும் மாணவியின் கற்புக்கோ உத்தரவாதம் இல்லை என்ற நிலை. கழக ஆட்சியின் போது, ஈவ்-டீசிங் காரணமாக எத்திராஜ் கல்லூரி மாணவி சரிகா ஷா உயிரிழந்த போது அந்தப் பெண்ணின் இல்லத்திற்கே நான் சென்று ஆறுதல் கூறி வந்தேன். ஆனாலும் அப்போது கழக ஆட்சியின் மீது பழி சுமத்தி எப்படியெல்லாம் அ.தி.மு.க.வினரால் அறிக்கை விடப்பட்டது என்பதையும் நாடறியும். ஆனால் விருதுநகரில்

ஒரு மாணவியும் குமரி மாவட்டத்தில் இரண்டு மாணவிகளும் பலியாகி உள்ளனர். இதனையெல்லாம் காணும்போது, பழி வாங்கும் செயலிலே முழு மூச்சுடன் இறங்கியுள்ள காவல் துறை இப்படிப்பட்ட பணிக் காகவும் தங்கள் நேரத்தினை சிறிது ஒதுக்குவார்களா? அல்லது ஆட்சியரின் போக்குக்குத் தகுந்தவாறு நடந்து கொள்வார்களா?

அன்புள்ள,

மு.க.

27-3-2002

2711. பட்ஜெட் பாதிப்புக் கண்டனக் கூட்டங்கள்!

உடன்பிறப்பே,

ஆளுநர் உரை படிப்பது போல, அமைச்சர் பொன்னையன் பட்ஜெட் உரையைப் படித்து முடித்து விட்டார். காரணம், அது ஆளுநர் உரை போல எழுதப்பட்டிருந்ததுதான்!

முக்கியமான அம்சம், மூன்று மாதத்திற்கு முன்பு அறிமுகப்படுத்தப்பட்ட மலிவு விலை மதுவை ஏப்ரல் 14 முதல் நிறுத்தப்போகிற அறிவிப்புதான்.

தாய்க்குலத்தின் கோரிக்கையை ஏற்று அம்மாவாகிய நான், மலிவு விலை மதுவை ரத்து செய்து ஆணை பிறப்பித்து விட்டேன் என்று கூறிவிட்டு, மலிவு விலை மதுவினால் கடந்த இரண்டு மாதத்தில் 50 கோடி ரூபாய் நஷ்டம் என்ற கணக்கையும் சொல்லி யிருக்கிறார் செல்வி ஜெயலலிதா!

எனவே மலிவு விலை மது விற்பனை நிறுத்தப் படுவதற்கு தாய்மார்களின் கோரிக்கை காரணமா? அல்லது இரண்டே மாதத்தில் ஐம்பது கோடி ரூபாய் இழப்பு என்பது காரணமா? எப்படியோ, கள்ளச்சாராயத்தை ஒழிக்கவே மலிவு விலை மது என்று கூறப்பட்ட காரணத்தைத் தூக்கி, ரேழியிலே போட்டுவிட்டார்கள்!

வணிகர்களை மதித்து, அவர்களின் அமைப்புகளை அழைத்துப்பேசி, விவசாயப் பிரதிநிதிகளைக் கூட்டி வைத்து கலந்துரையாடி, அரசு அலுவலர் ஆசிரியப் பிரதிநிதிகள் அனைவரையும் கலந்து விவாதித்து, தொழிற்சங்கங்களின் குறைகளை நேரில் கேட்டுப் பரிசீலித்து, ஒல்லும்வகையெல்லாம் அவர்களுக்கு உகந்ததும் - உற்சாகம் தரக்கூடியதுமான உரிமை களையும், சலுகைகளையும் வரவு செலவுத் திட்ட அறிக்கை வாயிலாக வழங்கி அவர்தம் குறைதீர்த்த தி.மு.க. ஆட்சிக்கும், இன்றுள்ள அ.தி.மு.க. ஆட்சிக்கு மிடையே உள்ள மலைக்கும்

மடுவுக்குமுள்ள வித்தியாசத்தை கண்ணுக்கு மெய்யாக மக்கள் கண்டுணர்ந்துள்ளனர்.

இந்த நிதி நிலை குறித்த விளக்கத்தைச் சட்டப் பேரவை தி.மு.க. கட்சி சார்பாக, எல்லா ஏடுகளுக்கும் விரிவான அறிக்கையாகத் தரப்பட்டுள்ளது.

சிறப்பாக நிதி நிலை அறிக்கையென்றால், வேளாண்மைத் துறை, கல்வித் துறை, மக்கள் நல்வாழ்வுத் துறை, தொழில் துறை, பாசனத் துறை எனப் பல்வேறு முக்கிய துறைகளுக்கு, ஒவ்வொரு துறைக்குமான திட்டப்பணிகள், அத்துறைக்கென குறிப்பிடப்படும் நிதி ஒதுக்கீடு இவைகள் எல்லாம் தனித் தனி தலைப்புகளில் நிதி நிலை அறிக்கையிலேயே இடம் பெறுவது வாடிக்கை.

1957 ஆம் ஆண்டு பெருந்தலைவர் காமராசர் அமைச்சரவையில், திரு. சி.எஸ். அவர்கள் நிதி அமைச்சராக இருந்த காலந்தொட்டு என்னைப் பொறுத்தவரையில், நான் பேரவையில் படித்துள்ள 14 நிதி நிலை அறிக்கைகளிலும் நான் முதலில் குறிப்பிட்டுள்ள இந்த முக்கிய துறை போன்றவைகள் வரிசைப்படுத்தப்பட்டு, அவற்றுக்குச் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடு எவ்வளவு என்றும் அறிவிக்கப்பட்டே இருக்கின்றன.

அதுதான் போகட்டுமென்றால், தமிழ்ப் பண்பாட்டுத் துறையென்ற ஒன்றைத் தலையே முழுகிவிட்டார்கள் போலும்!

ஆம்! அந்தப் பண்பாட்டுச் சின்னம் கண்ணகி சிலையையே காணாமற் போகச் செய்து விட்டவர்கள் ஆட்சியில், தமிழ்ப் பண்பாடாவது! மண்ணாங்கட்டியாவது!

நிதி நெருக்கடி, நிதி நெருக்கடி என்ற பல்லவிதான் அறிக்கையின் ஒவ்வொரு பக்கத்திலும், ஒவ்வொரு பாராவிலும் பாடப்பட்டிருக்கிறது.

இதையும் கேட்டுவிட்டு, மயிலாப்பூர் கோயில் அன்னதானத்துக்கென அச்சியற்றப்பட்ட அழைப்பிதழையும் பார்த்தால், நிதி நெருக்கடி எவ்வளவு விலை மதிப்பற்றதாக, வழவழப்பாக, பளபளப்பாக இருக்கிறது என்பதை எண்ணிக் கண்ணீர் விடத் தோன்றும்!

இது ஏழை மக்களுக்காகத் தீட்டப்பட்ட நிதி நிலை அறிக்கையாம்!

ஆமாம்! அதற்குச் சில எடுத்துக்காட்டுகள் இதோ!

2000-2001ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில், இலவச வேட்டி, சேலை வழங்கிட 115 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. கடந்த 2001-2002ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில், இலவச வேட்டி, சேலை வழங்குவதற்காக 129 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, திருத்த மதிப்பீட்டிலும் அதே தொகை குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், யாருக்கும் இலவச வேட்டி, சேலை கடந்த ஆண்டு வழங்கப்பட்ட நிகழ்ச்சி எதுவுமே இல்லை.

இந்த ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியின் நிதி நிலை அறிக்கையில், இலவச வேட்டி, சேலைக்காக ஒரு ரூபாய் கூட ஒதுக்கப்படாமல் அந்த தலைப்பில் ஒரு சுழி மட்டுமே போடப்பட்டுள்ளது! கதர், கைத்தறிக்காக தி.மு.க. ஆட்சியில் செலவிடப்பட்ட தொகை 2000-2001ஆம் ஆண்டு 215 கோடி ரூபாய். கடந்த ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் இது 266 கோடி ரூபாய் அளவுக்கு உயர்த்தப்பட்டு, இந்த ஆண்டு 128 கோடி ரூபாய் என்ற அளவுக்குக் குறைக்கப்பட்டுள்ளது. அதாவது நெசவாளர் நலனுக்காக (?) இந்த ஆட்சியில் ஒதுக்கீட்டுத் தொகை 138 கோடி ரூபாய் குறைக்கப்பட்டதுதான் அந்த நெசவாளர் கண்டுள்ள பலன்!

மாணவர்கள் இலவச பஸ் பாஸுக்காக இதுவரை 165 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதற்கு மாறாக, இந்த நிதி நிலை அறிக்கையில் 125 கோடி ரூபாய்தான் ஒதுக்கப் பட்டுள்ளது. பேருந்துத் தடங்கள் தனியார் மயமாக ஆக, படிப்படியாக மாணவர்களுக்கான இந்த சலுகையும் சரிந்து மறைந்து விடும்!

மாணவர் மதிய உணவுத் திட்டத்திலும் 41 கோடி ரூபாய் குறைக்கப்பட்டுள்ளது. இது முட்டை வழங்காமல் நிறுத்தி விட்டதால் ஏற்பட்ட மிச்சம் போலும்! மீனவர் வீட்டு வசதிக்கு சென்ற ஆண்டு ஒதுக்கீடு 14 கோடி ரூபாய் - அதில் 5 கோடி ரூபாய் செலவழிக்க வில்லை. இந்த ஆண்டு ஒதுக்கீடே 7 கோடி ரூபாய் தான்!

மீனவர்க்கு டீசல் மானியமாக இதுவரையில் ஒதுக்கப்பட்டு வழங்கியது ஆண்டு தோறும் 3 கோடி ரூபாய்! இந்த ஆண்டு வெறும் சுழிதான்!

பிற்படுத்தப்பட்டோர் வீட்டு வசதிக்காக சென்ற ஆண்டு வரை ஆறு கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இந்த ஆண்டு அந்த ஒதுக்கீடு, வெறும் சுழியேதான்!

ஏழை மகளிர் திருமண உதவி நிதி கடந்த ஆண்டு வரையில் ஆண்டுக்கு 50 கோடி ரூபாய் அளவில் இருந்து, இந்த ஆண்டு ஒதுக்கீடு ஒன்றுமேயில்லை என்று ஆகிவிட்டது!

இப்படியாக, சாதாரண, சாமான்ய மக்களின் சலுகைகளை யெல்லாம் குறைத்தும், சீர்குலைத்துமுள்ள இந்த ஆட்சியாளர்கள்,

தி.மு.க. ஆட்சியில், வணிகப் பெருமக்கள் வாயார மனமார வாழ்த்துமளவுக்கும் - பொதுமக்கள் போற்றுமளவுக்கும், ஒருமுனை வரிக் கொள்கையை பிரகடனப்படுத்தி அந்தத் துறையில் உருவாக்கிய புரட்சியை, மீண்டும் பலமுனை வரியென்று இப்போது புரட்டிப் போட்டுவிட்டார்கள்!

ஆம்! புரட்சி, புரட்டு என்று ஆகிவிட்டது! தி.மு.க. ஆட்சியில் சாதாரண மக்கள், சாமானிய மக்கள், ஏழை எளியோர் பயன்படுத்தும் பொருள்களுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டது!

ரத்து செய்யப்பட்ட அந்த வரிகள் எல்லாம் வரிப் புலிகளாக உருவெடுத்து இப்போது சீறிப் பாய்கின்றன!

அரிசிக்கும் வரியாம்! இரண்டு விழுக்காடாம்! அரிசி வியாபாரிகள் மூட்டை கட்டிக்கொண்டு வந்து காலடியில் செலுத்த வேண்டிய காணிக்கையைச் செலுத்தினால், அந்த வரி குறைக்கப்படுமாம்! அல்லது தள்ளுபடி செய்யப்படுமாம்! பேருந்துகள் தனியார் மயம் என்பதும், கொள்கையல்ல! ஒரு வகையான கொள்ளைதான் என்று பரவலாகப் பேசப்படுகிறது!

இந்த அறிக்கையில் உச்சகட்ட அறிவிப்பே, மதுக் கடைகளில் நாற்காலி போட்டு உட்கார்ந்து மதுவருந்திக் களியாட்டம் போட பார்வசதிக்கு அனுமதி என்பதுதான்!

மாநகர்
நகரம்
பேரூர்

ஆகிய இடங்களில் பார் வைத்துக் கொள்ளலாமாம் - சிற்றூர், பட்டி தொட்டிகளை ஏன் விட்டுவிட்டார்களோ? தெரியவில்லை!

அங்கும் அனுமதித்தால்,

பார் முழுதும் ஏர் முனையிலே! உழவன் பாட்டிலில் கொண்டாட்டம் போடுது!

என்று உடுமலையார் பாட்டை மாற்றிப் பாடி, கிராமத்து மக்களும் கிறுகிறுத்து ஆடிடுவார்கள் அல்லவா!

சில மாதங்களுக்கு முன் அறிவித்த மினி பட்ஜெட் படி, சுமார் 4000 கோடி ரூபாய் வரிகள், கட்டணங்கள் மூலம் வருவாய்!

இப்போது 690 கோடி ரூபாய்க்கு வரி விதிப்பு!

இவ்வளவு வருவாய் திரட்டியும், ஏற்கெனவே இருந்த ஏழையர்க்கான திட்டங்கள் பல ரத்து செய்யப்பட்டுள்ளன - பலவற்றுக்கு திட்டத் தொகை குறைக்கப்பட்டுள்ளன.

உடன்பிறப்பே, நான் விவரித்துள்ள இந்தக் குறிப்புகளையும், நீ திரட்டும் ஆதாரங்களையும், கேட்டறியும் புள்ளி விபரங்களையும் மக்களிடம் எடுத்துரைக்க, வரும் மார்ச் திங்கள் 31ஆம் ஞாயிறு தொடங்கி பட்டிதொட்டி முதல் பட்டினக்கரை வரையில் மாநில முழுதும் அங்கிங்கெனாதபடி அனைத்துப் பகுதிகளிலும் கண்டனக் கூட்டங்களை நடத்திட முனைந்திடுக!

அது தெருமுனைக் கூட்டமாக இருக்கலாம்! பொதுக்கூட்டமாகவும் இருக்கலாம்! இதுகுறித்துப் பொதுச் செயலாளர் அறிக்கையும் வருகிறது!

அன்புள்ள,

மு.க.

29-3-2002

2712. மதுராந்தகத்தின் பவள விழா!

உடன்பிறப்பே,

இன்று ஏப்ரல் 1ஆம் நாள் மதுராந்தகம் ஆறுமுகம் அவர்களின் பவள விழா நிகழ்ச்சி; செங்கற்பட்டில்.

காலையிலேயே சென்னையிலேயிருந்து நானும், தம்பிகள் வீரபாண்டி ஆறுமுகம், துரைமுருகன், பொன்முடி, க. சுந்தரம், மேயர் ஸ்டாலின் ஆகியோர் செங்கை சென்றிருந்தோம். அங்கே மாவட்டக் கழகச் செயலாளர்கள் தம்பிகள் கும்மிடிப்பூண்டி வேணு, அன்பரசு, ராஜா, சிவாஜி ஆகியோர் எங்களை வரவேற்றனர்.

பொங்கியெழுந்த பூரிப்பில் பவள விழா நாயகர் மதுராந்தகம் ஆறுமுகமும், அவர் துணைவியார் கோதையும் அருவியென ஆனந்தக்கண்ணீர் வடித்தனர்.

பல்வேறு பகுதிகளிலுமிருந்து ஆயிரக்கணக்கில் கழக உடன்பிறப்புகள் வந்து குழுமியிருந்தனர்.

உள்ளே நுழையும்போதும் சரி; வெளியே வரும் போதும் சரி; ஒரே நெரிசல்! கூட்டத்திலும் ஆரவாரத்திலும் அகப்பட்டு விழி பிதுங்கிக் கிளம்பியபோது; சுற்றிக்கொண்ட நிருபர்கள் கேட்டனர்; என்ன? ஒரு தொண்டரின் பவள விழாவை சிறப்பிக்க வந்தீர்களா? என்று!

தொண்டரா? தொண்டர் மட்டுமில்லை அய்யா! கழகத் தளபதிகளில் ஒருவர்! அவருக்குப் பவள விழா என்றால் கலந்து கொள்ளாமல் இருக்க முடியுமா? என்றேன்.

விழாவில் கலந்து கொண்டு சென்னை திரும்பும் வரையில் என் சிந்தனை; ஊற்றாகவே பெருகிக் கொண்டிருந்தது.

இடையில் இவர் கழகத்திலிருந்து விலகி விட்டார். விலகியது மட்டுமல்ல; கடுமையான சொற்களால் என்னை வசை பாடியுமிருக்கிறார். மீண்டும் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு விட்டார்.

இவற்றையெல்லாம் அசை போட்டு; நம்மை இகழ்ந்து பேசியவர்தானே; எடுத்தெறிந்து அறிக்கை விட்டவர் தானே! எனினும் இப்போது நம்முடன் இருப்பவரல்லவா; என்பது மட்டுமல்ல - ஒருவேளை அவர் நம்மோடில்லாமல் வேறிடத்தில் இருந்து நம்மைத் தூற்றிக் கொண்டே இருந்தாலும் கூட;

அவரைப் போன்றவர்களாலும் இந்த இயக்கம் வளர்க்கப்பட்டிருக்கிறதல்லவா! தி.மு.க. எனும் இந்தக் கோட்டைக்கு; இதனை வானளாவ எழுப்பிட; அவர்களும் கற்களைச் செதுக்கிப் பதித்துள்ளார்கள் அல்லவா; எப்பொழுதுமே நம்மிடமிருந்து ஏதோ ஒரு காரணத்திற்காகப் பிரிந்து சென்றோர்; நம்மீது உண்மையிலேயே காழ்ப்பில்லாவிடினும் - மாறாக அன்பு மண்டியிருந்தபோதிலும் - சென்றுள்ள இடத்தைத் திருப்திப்படுத்துவதற்காகக் கணை விடுத்து நம்மைக் கண்டித்திடுவதும்; கர்ண கடூரச் சொற்களால் நம்மைப் புண்படுத்துவதும் - வழக்கமாக நடைபெற்று வருகிற ஒன்றுதான்!

அதற்காக அவர்களின் உழைப்பாலும் இந்த இயக்கம் பெற்ற பயனை மறந்து விட முடியாத காரணத்தால்; அவர்களுக்கென ஓரிடத்தை என் நெஞ்சில் என்றைக்குமே ஒதுக்கியே வைத்திருக்கிறேன்.

சென்ற திக்கிலேயே சென்று விடாமல் திசை மாறி விட்டதை உணர்ந்து திரும்பி வந்து இந்த இயக்கத்தை இன்னும் இரும்புக் கோட்டையாக - எஃகு அரணாக ஆக்கிட - உழைப்பதற்கு உறுதியெடுத்துக் கொண்ட மதுராந்தகம் அவர்களின் பவள விழா என்கிற போது; அருகிருந்து அவரை வாழ்த்தி மகிழ்வது என் கடமை அல்லவா!

என் உடல் நிலை சரியில்லைதான்; இருப்பினும் ஊர் வெகு தொலைவில் இல்லை என்பதால் - உடனே முடிவெடுத்து உற்ற தம்பியருடன் சென்று வந்தேன்.

மதுராந்தகத்தில் அவர் இயக்கத்தின் செயல் வீரராக சுற்றிச் சுழன்று, அந்தக் காலத்தில் கொடும் பகை எதிர்த்துக் கடும் போர் புரிந்து கள வெற்றிகள் கண்டதும்; அண்ணாவின் இதய அன்பினை மொண்டதும்; என்னையும் நடிகர் திலகத்தையும் அழைத்து நாடகம் நடத்தச் செய்து வசூலில் எஞ்சிய தொகையில் கழகப் பணிமனை திறந்ததும்;

மாவட்டக் கழகச் செயலாளராக அந்த வட்டாரத்தைக் கட்டியாண்டு; வஞ்சகர், வன்முறையாளர் என வரிசை வரிசையாக வந்த பகைகள்; அவர் அரிமா நோக்கால் பஞ்சாய்ப் பறந்ததும் - இரவுப் பகலென விழித்திருந்து, சுக துக்கங்களை மறந்து - இரு வண்ணக் கொடி காத்திடவும் -இளைஞர் படையைப் பெருக்கிடவும் - சட்டமன்றத்தில் தொகுதிப் பணி ஆற்றிடவும் - கழக நிதி சேர்த்திடவும் - அன்றவர் சிந்திய வியர்வைத் துளிகளே; இன்றைய அவரது பவள விழாவுக்குத் தெளிக்கப்படும் பன்னீர்த் துளிகளாயின என்பேன்!

இதே போன்ற நினைவுகளை அசை போட்டுக் கொண்டே செங்கையிலிருந்து சென்னை வரை வந்தேன் - சென்று திரும்பியோர்; திரும்பாமலே என்னையும் கழகத்தையும் இன்னமும் திட்டிக் கொண்டிருப்போர்; என்றைக்குமே என் கோபத்திற்கு ஆளாக மாட்டார்கள்!

ஏனெனில் அவர்களாலும் இந்தக் கழகம் அவரவர் உழைப்புக்கேற்ற அளவு வளர்ந்திருக்கிறதல்லவா?

அவர்களில் பெரிதும் தனித்து நிற்பவர் - என் மனத்தில் என்றும் இனித்து நிற்கும் ஆறுமுகம் ஆவார்!

வாழ்க; அவர் மேலும் பல்லாண்டு!

அன்புள்ள,

மு.க.

2-4-2002

2713. மினி பட்ஜெட் தந்தவர்களின் மினி எமர்ஜென்சி!

உடன்பிறப்பே,

முதலமைச்சர் ஜெயலலிதா தலைமையில் உள்ள முக்கிய மந்திரிகளான பொன்னையனும், தம்பிதுரையும் அறிக்கைகள் விடுவதும் - குறிப்பாக பேட்டிகள் அளிப்பதும்; அதற்கு நாம் தக்க பதில் அளித்தால் பிறகு வாயை மூடிக் கொள்வதும் வாடிக்கை. இது, அவர்கள் முதலமைச்சர் ஜெயலலிதாவிடம் கற்ற வித்தையாகும்.

பத்மநாபா கொலைக்குப் பிறகும்; விடுதலைப் புலிகளை ஆதரித்து இப்போது அவர்கள் திருந்திவிட்டார்கள்; அதனால் தமிழ் ஈழம் கிடைக்க தமிழ் நாட்டு மக்கள் பிரபாகரனை ஆதரிக்கவேண்டும்; பிரபாகரனுக்கு ஒரு தீங்கு என்றால் தமிழ்நாடு கொந்தளிக்கும். எனவே பங்களா தேஷ் உருவாக்க இந்தியா எடுத்த நடவடிக்கை போல எடுத்தாலும் தவறில்லை; கருணாநிதி ஆட்சியில் விடுதலைப் புலிகளுக்கு எம்.ஜி.ஆர். ஆட்சி போல எந்த உதவியும் கிடைக்கவில்லை என்றெல்லாம் ஆங்கில ஏட்டுக்கு பேட்டி கொடுத்து விட்டு; அதை நினைவுபடுத்தினால் ஜெயலலிதா வாயை மூடிக் கொண்டு விடுகிறார் அல்லவா?

அதே போல; எம்.ஜி.ஆர். தன் புகழைக் கண்டு தன்மீது பொறாமைப்படுகிறார் என்றும், அவரால் முதலமைச்சராக செயல்பட முடியவில்லை என்றும், பிரதமர் ராஜீவ் காந்திக்கு தன் கைப்படவே கடிதம் எழுதி விட்டு, அதை ஆதாரபூர்வமாக எடுத்துக் காட்டும்போது மௌனமாகி விடுகிறார் அல்லவா?

அதுபோலத்தான்; தி.மு.க. ஆட்சியில் ஜெயலலிதா வீட்டு சோதனையின் போது செருப்புகளே கணக்கில் பதிவு செய்யப்படவில்லை; கருணாநிதி பொய் சொல்லுகிறார் என்று மந்திரி பொன்னையன் பேட்டி கொடுத்து என்னைப்

பொய்யன் என்றபோது; அது பற்றிய உண்மை விளக்கத்தை நிருபர்கள் கூட்டத்தில் ஆதாரபூர்வமாக நான் காட்டியதுடன் அந்தச் செருப்புகளின் மதிப்பீடு 2 இலட்சத்து 901 ரூபாய் என்று நீதிமன்றத்தில் பதிவாகியிருப்பதையும் பற்றி நான் பதில் அளித்தவுடன் பொன்னையனிடமிருந்து பேச்சு மூச்சே இல்லை.

இந்தியன் எக்ஸ்பிரசிலும், தினமணியிலும் ஜெயலலிதா பதவியேற்பு விழாவுக்காக பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபம் தயாராவதாக புகைப்படங்களும் செய்தியும் வெளியிடப்பட்டது.

அந்தச் செய்தியும் சரி; அந்த மண்டபத்தில் பதவி ஏற்பதும் சரி; ஒன்றும் தவறல்ல (செலவு அதிகமாகும் என்பதைத் தவிர).

ஆனால் மறுநாளே மந்திரி தம்பிதுரை அதை மறுத்து பல்கலைக் கழக மண்டபத்தில் மராமத்து வேலைதான் நடைபெறுகிறது என்று விளக்கமளித்தார்.

உண்மை என்னவென்றால் எக்ஸ்பிரசும் தினமணியும் கூறியது போல அந்த மண்டபத்தில்தான் ஜெயலலிதாவுடன் அதே தம்பிதுரை பதவியேற்பு விழாவில் கலந்து கொண்டார்.

சட்டப் பேரவையிலேயே முதலமைச்சர் ஜெயலலிதா இந்தத் திங்கள் 15ஆம் நாள் அளித்த பதிலின்போது போக்குவரத்துக் கழகங்களின் இழப்பு 368.15 கோடி ரூபாய் என்று கூறினார். ஆனால் இவர்களே சில மாதங்களுக்கு முன்பு அரசின் சார்பில் வைத்த வெள்ளை அறிக்கையிலே 1995-96 வரை போக்குவரத்துக் கழகங்களில் ஏற்பட்ட இழப்பு 533 கோடி ரூபாய் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்தத் தவறை பொன்முடி சுட்டிக்காட்டிய பிறகு அது பற்றி முதலமைச்சர் ஜெயலலிதா வாயே திறக்கவில்லை.

என்னைப் பொறுத்தவரையில் ஒரு பிரச்சினை குறித்து பேசும்போதோ எழுதும்போதோ ஒருவேளை நான் எடுத்துக் காட்டிய தகவல் தவறாகப் போனாலும் போகுமே தவிர; திட்டமிட்டு தவறாக ஒரு தகவலைக் கூறும் வழக்கம் என்றைக்குமே இருந்ததில்லை. தகவல் தவறாகிவிட்டால் நான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்தான் என்று வறட்டுவாதம் செய்பவனுமல்ல!

சட்டப்பேரவையில் பேராசிரியரும் துரைமுருகனும் புகழேந்தியும் கூறியதுபோல தமிழ்நாட்டில் அரிசிக்கு வரி போடக் கூடாது என்ற கருத்தின் அடிப்படையில் சேப்பாக்கம் கூட்டத்தில் நான் பேசியது குறித்து முதலமைச்சர் ஜெயலலிதாவும் நிதி மந்திரி பொன்னையனும் ஏதோ மலையைக் குடைந்து எலியைப் பிடித்து விட்ட பழமொழிக்கிணங்க மெகா மறுப்பு ஒன்றைத் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி சில தவறான தகவல்களை தெரிவித்திருக்கிறார். இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் அரிசிக்கும் கோதுமைக்கும் வரி விதிக்கப்பட்டிருக்கிறது என்ற தவறான தகவலை அவர் சொல்லியிருக்கிறார். தமிழ்நாட்டில் மட்டுமல்ல. ஆந்திரா, கேரளா, மேற்கு வங்காளம், பஞ்சாப், அரியானா போன்ற மாநிலங்களிலும் கூட அரிசிக்கும் கோதுமைக்கும் வரி விதிக்கப்பட்டிருக்கிறது - என்று முதல்வர் ஜெயலலிதா கூறியிருக்கிறார்.

என்னுடைய முக்கியமான குற்றச்சாட்டு தமிழ் நாட்டில் அரிசிக்கும் கோதுமைக்கும் வரி விதித்திருக்கிறார்கள் என்பதுதான். அ.தி.மு.க. அரசு அரிசிக்கும் கோதுமைக்கும் வரி போடாமல் இருக்கும்போதே நான் அ.தி.மு.க. அரசு வரி போட்டுவிட்டதாக கூறிவிட்டேனா? அல்லது அவற்றுக்கு வரி போடவில்லை என்கிறாரா ஜெயலலிதா? வேறு சில மாநிலங்களிலும் அரிசிக்கும் கோதுமைக்கும் வரி விதிக்கப்பட்டிருக்கின்றது என்று ஜெயலலிதா அவையிலே இப்போது தெரிவிப்பதற்கு முன்பே நிதி நிலை அறிக்கையிலேயே பாரா 118இல் பல மாநிலங்களில் அரிசி, கோதுமை, வெல்லம், மிளகு, பருப்பு வகைகள் மீது வரி விதிக்கப்படுகிறது என்று தெளிவாக குறிப்பிட்டு விட்டுத்தான் வரி விதிக்கப்பட்டதைப் பற்றி குறிப்பிட்டார்கள். அது எனக்குத் தெரியாதது அல்ல. அந்தப் புத்தகத்தை நான் கையிலே வைத்துக் கொண்டுதான் கூட்டத்தில் பேசினேன். ஒட்டுமொத்தமான கருத்தின் அடிப்படையிலே குறிப்பிடும்போதுதான் இப்படியெல்லாம் வரிகளை உயர்த்தி மக்களைக் கசக்கிப் பிழிவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடுதான் முதல் மாநிலம் என்று முதலமைச்சர் ஜெயலலிதா சொல்லிக் கொள்வதற்காக அரிசி, கோதுமை உட்பட வரி விதிப்பு செய்யப்பட்டுள்ளது என்று நான் குறிப்பிட்டேன்.

காரணம்; இந்தப் பொருள்களுக்கெல்லாம் தி.மு.க. ஆட்சியில் வரி விதிப்பே இல்லாமலும் வரி விலக்கே செய்யப்பட்டுமிருந்தன என்பதை அனைவரும் அறிவர்.

ஒரு ஆங்கில பத்திரிகையிலே என் பேச்சு வந்ததை மட்டும் படித்து விட்டு, நான் ஏதோ தவறாகக் கூறி விட்டதாக ஜெயலலிதா கூறுகிறார். ஒரு வாதத்திற்காக கேட்கிறேன் அந்தத் தகவல் தவறு என்பதற்காக இவர்கள் அரிசிக்கு வரி விதித்திருப்பது நியாயமாகி விடுமா?

30-3-2002தேதிய தினமணி இதழில் தமிழக வரலாற்றிலேயே அரிசிக்கு வரி விதிக்கப்பட்டது இப்போதுதான் முதல் முறை. அண்டை மாநிலமான கர்நாடகம், ஆந்திரம் போன்றவற்றில் அரிசிக்கு வரி கிடையாது என்று கட்டம் கட்டி முதல் பக்கத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததை ஜெயலலிதா படிக்கவில்லை போலும்!

தமிழ்நாட்டில் ஜெயலலிதா ஆட்சியில் அரிசிக்கு மட்டுமா வரி விதிக்கப்பட்டுள்ளது? சேப்பாக்கம் கூட்டத்தில் பேசும்போது என் கையிலே அதுபற்றிய முழுப் பட்டியலே இருந்தது. இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே எதெதற்கு வரி விதித்திருக்கிறார்கள் என்ற விபரங்களை முழுமையாக அன்றையதினம் நேரம் இல்லாததால் நான் அறிவிக்க இயலவில்லை. அந்தப் பட்டியலை இங்கே தந்திருக்கிறேன். செல்வி ஜெயலலிதா இவற்றையும் படித்து விட்டு, நான் அதே கூட்டத்திலே இந்த ஆட்சியிலே கடந்த ஆண்டு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு பல துறைகளுக்கும், பல திட்டங்களுக்கும் குறைக்கப்பட்டதைப் பற்றியெல்லாம் அடுக்கடுக்காக எடுத்தும் காட்டியிருக்கிறேன். அவற்றுக்கெல்லாம் முதலமைச்சர் சரியான விளக்கத்தைத் தரட்டும். இந்த ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் 690 கோடி ரூபாய்க்கான புதிய வரிகள்.

* அரிசி மற்றும் கோதுமையின் முதற்கட்ட விற்பனை மீது விழுக்காடு வரி.
* வெல்லம், மிளகு, பருப்பு வகைகள் மீது 4 விழுக்காடு வரி.
* கொப்பரைத் தேங்காய் மீது வெளி மாநில விற்பனையின் போது விதிக்கப்பட்டு வரும் 1 விழுக்காடு வரி 2 விழுக்காடு வரியாக உயர்வு.

* சித்தா மற்றும் யுனானி மருந்துகள் மீது 4 விழுக்காடு வரி.

* சாம்பிராணி மீது 4 விழுக்காடு வரி.

* மீள்சக்தி சேமிப்புக் கருவிகள் மீது 4 விழுக்காடு வரி.

* துணிக் கழிவுகள் மீது 4 விழுக்காடு வரி.

* 4 விழுக்காடு வரி விதிக்கப்பட்டு வரும் உடற்கட்டமைப்புக்கான சாதனங்கள் உள்ளடக்கிய உடற்பயிற்சி கருவிகள், எண்ணெய் ஒட்டாத பாத்திரங்கள் மற்றும் தொலைக்காட்சி வானலை வாங்கிகள் (ஆண்டெனா) ஆகியவற்றுக்கு இனி 12 விழுக்காடு வரி.

* தேங்காய் துருவல்கள் மீது 4 விழுக்காடு வரி.

* வீட்டு உபயோகப் பாத்திரங்கள் தவிர்த்த உலோகப் பாத்திரங்கள், அழுத்த மற்றும் சூடு எதிர்ப்பு சமையல் பாத்திரங்கள், மின் விசிறிகள்,மின்னணுவால் இயங்கும் பொருட்கள், மண்வாரி இயந்திரங்கள் ஆகியவற்றுக்கு 8 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாக வரி உயர்வு.

* கணினி மற்றும் கணினி புற உறுப்புகள், மென்பொருள் மற்றும் அறிவிக்கை செய்யப்பட்ட மின்னணுப் பொருட்கள் மீது 4 விழுக்காடு வரி விதிக்கப்படும்போது, அனைத்து மின் மற்றும் மின்னணு பாகங்கள், துணைப் பொருட்கள், மின்சக்தி மற்றும் மின்கடத்து மின்னியல் உறைகலன்கள் ஆகியவற்றுக்கு 10 விழுக்காடு வரி. இதர மின் மற்றும் மின்னணுப் பொருட்களின் மீது 12 விழுக்காடு வரி.

* பதிவு பெற்ற வணிகச் சின்னமுடைய கரியமிலவாயு கலந்த அனைத்து மென் பானங்கள் மீது 12 விழுக்காடு வரி என்பது இனி 16 விழுக்காடு வரியாக விதிக்கப்படும்.

* 12 மற்றும் 16 விழுக்காடு வரி விதிப்புக்குரிய பகுதிகளில் உள்ள பொருட்கள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து விற்கப்படும்போது அவற்றின்மீது இனி 20 விழுக்காடு வரி.

* அரிசி, கோதுமை, பருப்பு வகைகள், இந்தியாவில் தயாரிக்கப்படும் அயல் நாட்டு மதுவகைகள், பெட்ரோலியப் பொருட்கள் மற்றும் அறிவிக்கப்பட்ட பொருட்கள் நீங்கலாக அனைத்துப் பொருட்களின் மறு விற்பனை மீது ஒரு விழுக்காடு வரி.

* மோட்டார் ஸ்பிரிட், லூப்ரிகேட்டிங் ஆயில், கிரீஸ், பிட்டுமென், அலுமினியம், கல்நார் சிமெண்ட் தகடுகள், உயரழுத்த பாலிதீன் குருணைகள், பி.வி.சி. ரெசின் மற்றும் பி.வி.சி. குழாய்கள், உயரழுத்த பாலி எத்திலீன் மற்றும் பாலி புரோபாலினால் நெய்யப்பட்ட துணிகள், சலவைக் கற்கள், கருங்கல், செராமிக் ஓடுகள், பொட்டாசியம் குளோரேட், லேப் சோடா ஆஷ், காஸ்டிக் சோடா, குளோரின், சானிடரிவேர், பூச்சிடப்பட்ட காகிதம், டிஷ்யூ காகிதம், காகித அட்டைகள், செய்தித்தாள் காகிதம், கோதுமைப் பொருட்கள், இரும்பு மற்றும் எஃகு க்ம்ப்ரஸ்ஸர் மற்றும் குளிர்பதன இயந்திரங்கள், பீடி நீங்கலான புகையிலை மற்றும் புகையிலைப் பொருட்கள் ஆகியவற்றுக்கு நுழைவு வரி விதிக்கப்படும்.

* சிமெண்ட் விற்பனை விலை மூட்டை 135க்கு மேலே இருப்பின் அதன் விற்பனை மீது 24 விழுக்காடு வரி.

* இவ்வகையிலான சிமெண்டின் 2வது மற்றும் அதன்பின் நடைபெறும் விற்பனை மீது 5 விழுக்காடு வரி.

* ஒவ்வொரு மாதமும் கூடுதலாக இருப்பில் சேரும் 3000 ரூபாய்க்கு மேற்பட்ட விலையில் கொள்முதல் செய்யப்பட்டுள்ள பட்டுப்புடவைகளின் இருப்பு மதிப்பின்மீது 1 விழுக்காடு ஆடம்பர வரி.

* அரிசி, கோதுமை, மண்ணெண்ணெய், சமையல் வாயு மற்றும் அறிவிக்கப்பட்ட பொருட்கள் தவிர்த்து ஏனைய பொருட்களின் மீது தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் செலுத்தப்படும் விற்பனை வரி மீது 5 விழுக்காடு உள்கட்டமைப்பு உப வரி.

இந்த வரிகள் எல்லாம்; இந்த பட்ஜெட்டில்! கடந்த ஆண்டு இவர்கள் படித்த பட்ஜெட்டில் தி.மு.க. ஆட்சியில்

ரத்து செய்யப்பட்ட நல்லெண்ணெய், கடலையெண்ணெய், தேங்காயெண்ணெய் போன்ற எண்ணெய்களுக்கும், திருப்பூர் பின்னலாடை நூலுக்கும் மீண்டும் வரிகள் போட்ட ஆட்சியாயிற்றே ஜெயலலிதா ஆட்சி! அதாவது 135 கோடி ரூபாய்க்கு! இப்படி வரிகள் போட்டது மட்டுமல்ல; அதைப்பற்றி எதிர்க்கட்சியினர் பேசினால் அவர்கள் பேச்சில் வரிக்கு வரி குறுக்கிட்டு சவால் விட்டு சண்டைக்கு வரிந்து கட்டுகிறார்! இந்த வரிகள் எல்லாம் விதிக்கப்பட வில்லை என்று ஜெயலலிதா கூறுகிறாரா? எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேரவையிலே ஒரு கருத்தை முழுமையாகப் பேசுவதற்கே விடாமல் ஜெயலலிதா அடிக்கடி குறுக்கிடுவது எந்த ஆட்சியிலும், எந்த முதலமைச்சரும் கடைப்பிடிக்காத ஒரு முறையாகி விட்டது! பேரவைத் தலைவரும் அதைப்பற்றி சொல்ல இயலாமல் இருக்கிறார் போலும் என்று கருதுகிறேன். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களை முழுமையாகச் சொல்ல அனுமதித்தால்தானே விவாதம் முழுமை பெறும்? அதை விடுத்து ஒவ்வொரு வார்த்தைக்கும் முதலமைச்சர் குறுக்கிட்டு பத்து நிமிடம் விளக்கம் சொல்வது என்றால் எதிர்க் கட்சிகள் எப்படி இயங்கிட முடியும்? முக்கியமான ஒரு பிரச்சினை வருமேயானால் அப்போது முதலமைச்சரோ அல்லது சம்மந்தப்பட்ட துறையின் அமைச்சரோ எழுந்து விளக்கம் தரும் வழக்கம் உண்டு. அது நன்மையும் தரும்.

ஆனால் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பேசும் போது ஒவ்வொரு வார்த்தையிலும் குறுக்கிட்டு, எழுந்து மற்ற 26 அமைச்சர்களுக்கும் ஒன்றுமே தெரியாது, தனக்குத்தான் எல்லாம் தெரியும் என்பதைப் போல நிமிடத்துக்கு நிமிடம் பதிலளிக்க முற்படுவது நல்ல ஜனநாயகம் ஆகாது. மற்ற துறைகளின் அமைச் சர்களை மட்டம் தட்டுகிற காரியமும் ஆகும்.

பார் திறக்கின்ற காரணத்தால் அங்கேயே குடிகாரர்கள் குடித்து விட்டு தகராறு செய்யக்கூடும் என்ற எண்ணத்தோடு சட்டம் ஒழுங்கு பிரச்சினை வரக் கூடும் என்று எதிர்க்கட்சி உறுப்பினர் புகழேந்தி எச்சரித்தால், உடனே முதல்வர் எழுந்து சட்டம் ஒழுங்கைக் குலைக்க நீங்களே முயற்சிக்கிறீர்களா? அதைச் சந்திக்க இந்த அரசு தயார் என்றெல்லாம் சவால் விடுவது நகைச்சுவைக் காட்சியாக மட்டுமல்ல; வல்லடி வழக்காகவும் அல்லவோ இருக்கிறது!

தொழிலாளர்களின் வேண்டுகோள், அரசு அலுவலர்களின் கோரிக்கை, விவசாயிகளின் முறையீடு, ஆசிரியர்களின் விண்ணப்பம், வியாபாரிகளின் வலியுறுத்தல் இதைப்பற்றியெல்லாம் கவலைப்படாத அரசு, மது அருந்துவோரின் வேண்டுகோளையேற்று பார் வைப்பதாக அறிவித்திருக்கிறதே என்று கழகச் சட்டமன்ற உறுப்பினர் புகழேந்தி சொல்லிக் கொண்டிருக்கும்போதே, முதலமைச்சர் ஜெயலலிதா குறுக்கிட்டு; நாங்கள் ஒன்றும் மது வியாபாரிகளின் கோரிக்கையையேற்று பார் திறக்கவில்லை என்று சொல்லி புகழேந்தியை கடுமையாகச் சாடியிருக்கிறார். ஆனால் உண்மையிலேயே புகழேந்தி மது வியாபாரிகளின் கோரிக்கை என்று சொல்லவில்லை. மது அருந்துவோரின் கோரிக்கையையேற்று திறக்கிறீர்கள் என்றுதான் சொல்லியிருக்கிறார். ஆத்திரக்காரர்களுக்கு ஏதோ மட்டு என்பதைப் போல முதலமைச்சர் ஆத்திரப்பட்டு புகழேந்தியிடம் பூச்சுற்றுகிறீர்களா? சட்டத்தை நீங்களே சீர்குலைக்கப் பார்க்கிறீர்களா? என்றெல்லாம் கேட்கிறார் என்றால் இந்த நிலை வாதங்களிலே ஒளியேற்றுவதற்கு பயன்படுமா அல்லது வெம்மையேற்றுவதற்குப் பயன்படுமா என்பதை உண்மையான ஜனநாயகவாதிகள்தான் சிந்தித்துக் கூறிடவேண்டும். இதுபற்றியெல்லாம் பத்திரிகைகளில் நியாயமான விமர்சனங்கள் வருமென்று எதிர்பார்க்க முடியாது. காரணம் மினி பட்ஜெட் வெளியிடுவதைப் போல ஒரு மினி எமர்ஜென்சி அறிவிக்கப்படாமல் தமிழகத்தில் நடைமுறையில் உள்ளது என்பதுதான் உண்மை!

அன்புள்ள,

மு.க.

3-4-2002

2714. ஆணையர் எழுதிய கடிதமும் அது அமலாகும் விதமும்!

உடன்பிறப்பே,

ஒழுக்கம், தூய்மை, அமைதி, ஒற்றுமை போன்ற உத்தமச் செயல்களை நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற நல்ல நோக்கத்துடன் அரசுகள், சட்டங்களை இயற்றி அவற்றைப் பொதுமக்களுக்கும் போலீசாருக்கும் அழுத்தம்திருத்தமாகவும் அச்சுறுத்தும் வகையிலும் அறிவிப்பதை வாடிக்கையாகக் கொண்டிருந்தாலும் அவற்றைக் கடைப்பிடிக்க வேண்டிய பொது மக்களும், கண்காணிக்க வேண்டிய அதிகாரிகளும் கடமை உணர்ச்சியுடன் நிறைவேற்றுகிறார்களா என்று பார்க்கும்போதுதான் அறிவிப்புக்கும் நடைமுறைக்கும் இடையே மிக ஆழமான பள்ளம் இருப்பதை உணர முடிகிறது.

பொது இடங்களில் புகை பிடித்தாலோ, எச்சில் உமிழ்ந்தாலோ, பொடி போட்டுக் கொண்டாலோ அவர்கள் மீது முதற்கட்டமாக நூறு ரூபாய் வரையிலும் இரண்டாம் முறை அல்லது அதற்கு மேற்பட்ட முறை எனில் ரூபாய் 500 வரையிலும் அபராதம் விதிக்கப்படும் என்றும், புகைப்பிடித்தல் தொடர்பாக பொது இட விளம்பரமெனிலோ, சிகரெட் பீடி கடைகள் எனிலோ அவற்றுக்கு ரூ. 500 முதல் 1000 ரூபாய் வரை அபராதம், மூன்று மாத சிறைத் தண்டனை என்றும் எச்சரிக்கப்பட்டிருக்கிறது.

இந்த எச்சரிக்கை, தண்டனை தரப்படும் என்ற அச்சுறுத்தல், அபராதம் விதிக்கப்படுமென்ற அறிவிப்பு இவையனைத்தும் காலப்போக்கில்; தண்ணீரில் ஒரு மண்ணாங்கட்டி கரைந்திடுவது போலக்கூட அல்லாமல், ஒரு உப்பு மூட்டை கரைவது போலத்தான் ஆகியிருக்கின்றன.

சிலர் தண்டிக்கப்படுவர் - சிலர் அபராதம் கட்டுவர் - பலர் மாமூல் வாழ்க்கை நடத்துவர். பின்னர் இதுபோன்ற அறிவிப்புகளுக்கு நினைவுச் சின்னங்கள் எழுப்பப்பட்டு விடும்.

இதில் சட்டம் ஒழுங்குக்குக் கட்டுப்படுதல் என்பதை விட ஒவ்வொரு குடிமகனுக்கும் 'சமூகப் பிரக்ஞை' இருந்தால்தான், ஒழுக்கம் - தூய்மை - அமைதி - ஒற்றுமை போன்றவற்றுக்கான மரியாதையும் பாதுகாப்பும் கிடைக்கும்.

இதற்கு அண்மைக்கால நிகழ்வு ஒன்றை நினைவூட்ட விரும்புகிறேன்.

சென்னையில் மாநகராட்சி மன்றத்தில் தி.மு.க. பெரும்பான்மை பெற்று மு.க. ஸ்டாலின், மேயர் பொறுப்புக்கு வந்து, கடந்த ஐந்தாண்டுக் காலத்தில் பொதுமக்கள் போற்றுதலுக்கு உரிய திட்டங்கள் எத்தனையோ அத்தனையும் சென்னை மாநகரில் நிறைவேற்றப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்றுதான் மாநகரப் போக்குவரத்தைச் சீர்செய்து வகைப்படுத்துவதற்காகக் கட்டப்பட்ட புதிய பாலங்கள்!

ஒரு ஐந்தாறு ஆண்டுக் காலம் இடைவெளியில் சென்னைக்கு வராமலிருந்தவர்கள், வெளிநாட்டுக்காரர்கள், வெளி மாநிலத்தவர் அனைவருமே வியந்து பாராட்டுமளவுக்கு அந்தப் பாலங்கள் அமைந்துள்ளதை புகழாதார் யாருமில்லை.

கடந்த 2001ஆம் ஆண்டு மே திங்கள் 14ஆம் நாள் புதிய ஆட்சியாக அ.தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்கும் வரையில்; அதுவரை ஐந்தாண்டுக் காலமிருந்த தி.மு.க. ஆட்சியில்; மாநகராட்சி மன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட திட்டங்களை பாதுகாப்பதிலும்; நிறைவேற்றிடத் தொடங்கப்பட்ட காரியங்களுக்கு ஊக்கமளிப்பதிலும்; அரசுக்குரிய கடமை, தட்டிக் கழிக்கப்படவில்லை. ஆனால் அ.தி.மு.க. ஆட்சி வந்தவுடன்; மாற்றுக் கட்சியின் மேயர் சென்னை மாநகர் மன்றத்தில் இருப்பதை சகிக்காத மனப்புழுக்கமுடன் இந்த ஆட்சியினர் செயல்பட்டுவருவதை எவரும் எளிதில் புரிந்து கொள்ள முடியும்.

ஒரு சிறிய விஷயம்தான்; அதில் தி.மு.க. ஆட்சி காட்டிய அக்கறையை இன்றைய அ.தி.மு.க. ஆட்சி காட்டாதது மட்டுமல்ல; எதிர்மாறாகவே செயல்பட்டு வருகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாகவே இதைக் குறிப்பிடுகிறேன்.

கடந்த 29-1-2002 அன்று சென்னை மாநகரக் காவல் துறை ஆணையாளர் திரு. கே. விஜயகுமார், ஐ.பி.எஸ்., அவர்கள் தி.மு.க.

தலைமை நிலையச் செயலாளர் திரு. ஆர்.டி. சீத்தாபதிக்கு ஒரு கடிதம் எழுதுகிறார். அதன் முக்கிய பகுதிகள் வருமாறு:

★ நுகர்வோர் நடவடிக்கை குழு சார்பில் தாக்கல் செய்யப்பட்ட ஒரு வழக்கில் உயர்நீதி மன்றம் தீர்ப்பளிக்கும்போது, சட்டத்தை அமல்படுத்தும் அதிகாரிகள் சுவர்களில் போஸ்டர், துண்டு விளம்பரங்கள், எழுத்துக்கள், நாசப்படுத்தும் காரியங்கள் ஆகியவற்றை அரசியல் கட்சிகளோ, மற்ற நிறுவனங்களோ செய்தால் அவர்கள் மீது முறையாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறியது. எனவே அரசியல் கட்சிகள் அப்படிப்பட்ட காரியங்களில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ளக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்தச் சட்டத்தை மீறுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

★ Section 71 Sub-section XVI of City Police Actன்படி இடத்தின் சொந்தக்காரர் அல்லது குடியிருப்போர் அனுமதியின்றி தானே நேரடியாகவோ அல்லது பிறரை விட்டோ சுவரொட்டிகளையோ, போஸ்டர்களையோ, துண்டு விளம்பரங்களையோ கட்டிடங்கள், நினைவகங்கள், சிலைகள், சுவர்கள், மரங்கள் ஆகியவற்றின் மீது ஒட்டினாலோ எழுதினாலோ அவர்கள் 250 ரூபாய் அபராதம் அல்லது மூன்று மாதம் சிறைத் தண்டனைக்கு உரியவராவார்கள்.

★ The Tamil Nadu Open Places (Prevention of Disfigurement) Act. 1959 - Section 3-ன்படி எதிர்ப்பிற்குரிய விளம்பரங்களை பொது மக்களுக்கு தெரியக் கூடிய பொது இடங்களில் செய்தால் 5000 ரூபாய் அபராதமோ, சிறைத் தண்டனையோ வழங்கலாம்.

★ விதி 3-ஏ படி போக்குவரத்துக் குழுவின் அனுமதியின்றி பொது மக்கள் பார்வைக்குரிய இடங்களிலே அதாவது ஒட்டுநர் அல்லது ஒரு பார்வையாளரின் கவனத்தைத் திருப்புகின்ற வகையிலே விளம்பரங்கள் செய்யப்பட்டால் ஓராண்டு சிறைத் தண்டனை அல்லது

5000 ரூபாய் வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கலாம்.

★ எனவே உங்கள் கட்சியிலே உள்ள நிர்வாகிகளுக்கும், உறுப்பினர்களுக்கும் இப்படிப்பட்ட செயல்களிலே ஈடுபட வேண்டாமென்றும் அப்படி ஈடுபட்டால் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்க விரும்புகிறோம்.

உடன்பிறப்பே,

சென்னை மாநகர காவல் துறை ஆணையாளர் எழுதிய இந்தக் கடிதத்திற்கு 1-2-2002 அன்று தேதியிட்டு தி.மு. கழகத்தின் சார்பில் தலைமைக் கழகச் செயலாளர் திரு. எஸ். விடுதலைவிரும்பி, எம்.பி. சென்னை மாநகர காவல் துறை ஆணையருக்குப் பதில் கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தில் -

"போஸ்டர்கள், சுவரொட்டிகள் விளம்பரம் குறித்து தாங்கள் 29-1-2002 தேதியெனக் கையெழுத்திட்டு எழுதிய கடிதம் கிடைக்கப் பெற்றோம்.

தங்கள் கடிதத்திலே குறிப்பிட்ட சட்டத்தின் விதிகளை நிறைவேற்றுவதில் எங்களுடைய முழு ஒத்துழைப்பையும் தருவோம் என்று உறுதியளிக்கின்ற இதே நேரத்தில் பின்வரும் செய்திகளை உங்கள் கவனத்திற்கும் நடவடிக்கைக்கும் கொண்டு வர விரும்புகிறோம்.

இந்த மாநிலத்தில் சென்னை மாநகராட்சி சார்பில் கமார் 10 மேம்பாலங்கள் தி.மு.கழக நிர்வாகத்தின்கீழ் கட்டப்பட்டுள்ளன. சிங்காரச் சென்னையாக இந்த நகரை மாற்றுகின்ற திட்டத்தின்கீழ் - இந்த மேம்பாலங்களின் கீழ் எழுப்பப்பட்டுள்ள தூண்கள் அழகான வண்ணங்கள் பூசப்பட்டு சென்னை மாநகராட்சியால் அவை சுத்தமாக இருக்கத்தக்க வகையில் பராமரிக்கப்பட்டு வந்தன.

ஆனால் தமிழ்நாட்டில் புதிய அரசு பொறுப்பேற்ற பிறகு இந்தத் தூண்கள் பராமரிப்பு என்பது கைவிடப் பட்டது. அந்தத் தூண்களின் மீது போஸ்டர்களும் சுவரொட்டிகளும் ஏராளமாக ஒட்டப்பட்டு அவற்றின் அழகையே கெடுத்துக் கொண்டுள்ளன. அந்த விதிமுறை மீறல்கள் குறித்து தற்போதுள்ள நிர்வாகம் முறையாக நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டது. இப்போது

அந்தத் தூண்களைப் பார்க்கும்போது அழகற்ற முறையிலே தோன்றுகின்றன.

எனவே இந்த உயர்ந்த அழகான மேம்பாலங்களின் எழிலைத் தொடர்ந்து பாதுகாக்கத் தக்க வகையிலே தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று உங்களை நாங்கள் கேட்டுக் கொள்கிறோம்."

இவ்வாறு எழுதப்பட்ட பதில் கடிதத்திற்குப் பிறகு மாநகரக் காவல் துறையினால் தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதை நானறிவேன், தி.மு.க. வுக்கு எழுதிய மடலில் மாநகர காவல்துறை ஆணையர் எத்தகைய விதிமுறைகளைச் சுட்டிக்காட்டியிருந்தாரோ; அதன்படி சுவர்களில், வழிகளில், பாலங்களில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகள் கிழிக்கப்பட்டிருந்தன. கிழிக்க இயலாமல் பாலங்களின் அழகிய வண்ண வண்ணத் தூண்களில் ஒட்டப்பட்டிருந்த விளம்பரங்களை தண்ணீர் ஊற்றி சுரண்டியிருந்ததையும் காண முடிந்தது.

யார் ஆட்சியில் இருந்தால் என்ன; நகரங்களும் ஊர்களும் அழகாகவும் தூய்மையாகவும் இருக்க வேண்டுமென்பதே என் கருத்து!

ஆனால் எல்லாமே "பத்து நாள் பரபரப்புதான் என்பதைப் போல; மீண்டும் எல்லா சுவர்களிலும் விளம்பரங்கள்! எல்லாப் பாலங்களின் தூண்களிலும் பற்பல விதமான விளம்பரங்கள் - அரசியல் கட்சிகளின் அறிவிப்புகள் - அக்கட்சிகளின் தலைவர்களின் படங்கள் - என்று புற்றீசல் போலப் புறப்பட்டுவிட்ட காட்சியையும் காண முடிகிறது.

எப்படி கடந்த கால தி.மு.க. ஆட்சி நடைபெற்ற போது; மாநகராட்சி பாலங்களை தூய்மையாக வைத்திருக்க முடிந்தது?

இப்போது பாலங்கள் மட்டுமல்ல, பல்வேறு பகுதிகள், வீட்டின் சுவர்கள், மதில்கள், அங்கிங்கெனாதபடி எங்கெங்கும் அழகு சிதைக்கப்படும் அளவுக்கு அலங்கோல விளம்பரங்கள் எப்படி அனுமதிக்கப்படுகின்றன?

சென்னை மாநகராட்சியையும் உள்ளடக்கியது தானே இவர்கள் ஆளுகின்ற தமிழ்நாடு?

அந்தத் தமிழ்நாட்டுக்குள்ளிருக்கிற மாநகராட்சி மீது அத்தனை "மாச்சர்யம்" ஓர் அரசுக்கு இருக்கலாமா?

மாநகர் காவல்துறை ஆணையாளரின் கடிதத்திற்கு தி.மு.க. தலைமைநிலையம் எவ்வளவு பொறுப்புடன் பதில் எழுதியது?

அந்தப் பொறுப்புணர்வும், கடமையும் இந்த அரசுக்கு இல்லையே ஏன்?

பொறாமையும் பொச்சாப்பும்தான் காரணம் என்றால், அத்தகைய அரசைப் பரிபாலிப்பவர்களால் புகையிலைக்கும் சிகரெட்டுக்கும் பொடி போடுவதற்கும் அறிவிக்கப்பட்டுள்ள எச்சரிக்கையின் கதி என்னாவது?

அன்புள்ள,

மு.க.

06-04-2002

2715. பார்; பார்;

அன்றும் பார்! இன்றும் பார்!

உடன்பிறப்பே,

இந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே மலிவு விலை மதுவை தமிழகத்திலே கொண்டு வந்த காரணத்தினால் இரண்டு மாதங்களில் 50 கோடி ரூபாய் இழப்பு என்று தெரிவித்திருக்கிறார்கள். 1991ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்றதும் கழக ஆட்சியிலே கொண்டு வரப்பட்ட மலிவு விலை மது திட்டத்தை ரத்து செய்வதாகக் கூறி அது தான் தன்னுடைய முதல் கையெழுத்து என்று பிரகடனப்படுத்தி முதலமைச்சர் ஜெயலலிதா கையெழுத்திட்டு, மலிவு விலை மதுவை ரத்து செய்து மகாபெரிய விளம்பரம் செய்து கொண்டார்கள்!

அதற்குப் பிறகு 1993ஆம் ஆண்டு ஆளுநர் உரையிலே குறிப்பிடும்போது மலிவு விலை மதுவை அ.தி.மு.க. ஆட்சியிலே ரத்து செய்த காரணத்தினால் அரசுக்கு ஓராண்டு இழப்பு 390 கோடி ரூபாய் என்றும் அறிவித்தார்கள். மலிவு விலை மது ரத்து செய்யப்பட்டதால் ஆண்டு ஒன்றுக்கு 390 கோடி ரூபாய் இழப்பு என்று 93ஆம்ஆண்டிலேயே தெரிவித்தவர்கள், தற்போது மலிவு விலை மதுவை அறிமுகம் செய்ததால் 2 மாதங்களில் 50 கோடி ரூபாய் இழப்பு என்கிறார்கள். இது என்ன கணக்கோ? 93ஆம் ஆண்டிலே மலிவு விலை மது இல்லாத காரணத்தினால் அரசுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டது என்கிறபோது தற்போது மட்டும் மலிவு விலை மதுவை அறிமுகம் செய்த காரணத்தினால் வருவாய் 50 கோடி இரண்டு மாதத்திலேயே இழப்பு என்கிறார்களே, இதிலே எது சரி?

1992ஆம் ஆண்டு 1-6-1992 முதல் பார் வைத்துக் கொள்ள அ.தி.மு.க. ஆட்சியிலே அனுமதி வழங்கினார்கள். 1993ஆம் ஆண்டு அதே அ.தி.மு.க. ஆட்சியிலே ஜூன் திங்கள் முதல்

தமிழ்நாட்டில் பார் ஒழிக்கப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால் இப்போது அதே அ.தி.மு.க. ஆட்சி பார்களை வைத்துக் கொள்ள அனுமதி கொடுத்துள்ளது. கேட்டால் முதலமைச்சர் ஜெயலலிதா; மது அருந்துவோரும், பொதுமக்களும் வைத்த வேண்டுகோளை ஏற்று பார்களை வைத்துக் கொள்ள அனுமதிப்பதாகக் கூறியுள்ளார். அப்படியென்றால் 93ஆம் ஆண்டு பார்களை ஜெயலலிதா மூடினாரே, ஒருவேளை அப்போது மது அருந்துவோரும், பொதுமக்களும் பார்களை மூட வேண்டாமென்று கோரிக்கை வைக்கவில்லையோ? மது அருந்துவோரின் கோரிக்கையை ஏற்று பார்களை வைத்துக் கொள்ள அனுமதித்துள்ள ஜெயலலிதா, தொழிலாளர்களின், விவசாயிகளின், வியாபாரிகளின், அரசு அலுவலர்களின், மாணவர்களின் கோரிக்கைகளை மட்டும் புறக்கணிக்க காரணம் என்ன? ஒருவேளை அவர்கள் எல்லாம் மது அருந்துவோர் கோரிக்கை வைத்ததைப் போல இன்னமும் கோரிக்கை வைக்கவில்லையோ?

பார்களைத் திறக்க பொதுமக்கள் கோரிக்கை வைத்ததாக செல்வி ஜெயலலிதா அறிவித்தார். எந்தப் பொதுமக்கள் அப்படியொரு கோரிக்கையை முதல்வரிடம் தந்தார்கள்? பார்களைத் திறப்பதிலே அவர்களுக்கென்ன அவ்வளவு அக்கறை? 1991இல் ஆட்சிக்கு வந்ததும் மலிவு விலை மது மிகப் பாபகரமான காரியம் என்று அறிவித்து அதை ஒழித்தார்கள்.

அதே மலிவு விலை மதுவை அதே அ.தி.மு.க. ஆட்சியினர் 2001ஆம் ஆண்டு இறுதியிலே மீண்டும் கொண்டு வந்தார்கள்.

1992ஆம் ஆண்டு பார்களையெல்லாம் இதே செல்வி ஜெயலலிதா ஆட்சியிலே திறப்பதற்கு முடிவு செய்தார்.

1993ஆம் ஆண்டு ஜூன் திங்களில் பார்களை யெல்லாம் அ.தி.மு.க. ஆட்சியிலே ஜெயலலிதா மூடினார்.

2002ஆம் ஆண்டு மார்ச் திங்களில் அதே அ.தி.மு.க. ஆட்சியில் ஜெயலலிதா மீண்டும் 'பார்களை கொண்டு வந்துள்ளார். இது என்ன துக்ளக் தர்பாரோ?'

1993ஆம் ஆண்டு பார்களை மூடியபோது முதல்வர் ஜெயலலிதா கூறிய காரணம் என்ன தெரியுமா? பொது மக்களின் எதிர்ப்பு இருப்பது அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. பல இடங்களில் இவற்றால் குறிப்பாக பெண்களுக்கு ஏற்படும்

இடைஞ்சல்கள் குறித்து பல புகார்களும் அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது. இத்தகைய மது அருந்தும் இடங்களில் கள்ளத்தனமாக தயாரிக்கப்பட்ட மதுவகைகள் பரிமாறப்படுவதும் தெரிய வந்தது. எனவே பொதுமக்களின் பொதுவான கருத்திற்கு மதிப்பளிக்கும் வகையில் அரசு பார் உரிமங்களை 1.6.93 முதல் வழங்குவதில்லை என்று முடிவுசெய்துள்ளது. இத்தகைய நடவடிக்கையால் அரசின் அனுமதி பெற்ற இடங்களில் கள்ளத்தனமாக தயாரிக்கப்பட்ட மதுவிற்பனை செய்யும் நிலை அறவே ஒழிக்கப் பட்டுவிடும் எனவே அப்போது பார்களை மூடுவதற்கு பொது மக்கள் கோரிக்கை வைத்ததாகக் கூறினார். இப்போது பார்களைத் திறப்பதற்கும் அதே பொது மக்கள் கோரிக்கை வைத்ததாகக் கூறுகிறார். பாவம் பரிதாபத்திற்குரிய பொது மக்கள்!

இவ்வாறு 93ஆம் ஆண்டு பேரவையிலே கூறி தமிழ் நாட்டில் பார்களை மூடிய ஜெயலலிதா தற்போது பலர் பாதிக்கப்பட்டாலும் பரவாயில்லை, வருவாய்தான் முக்கியம் என்ற நோக்கத்தோடு பார்களைத் திறக்க முடிவெடுத்துள்ளாரா? மேலும் ஜெயலலிதா அவரது பழைய பேச்சின் தொடர்ச்சியில்

பார்களை மூடுகின்ற இந்த முடிவில் இனி எவ்வித மாற்றமும் இல்லை. இப்படியாக எடுத்த கொள்கையில் பிடிப்பும் அதை நிறைவேற்ற எடுக்கப்பட்ட முயற்சிகளும் நாட்டு மக்களின் நலனைத் தலையாயதாகக் கொண்டே தொடருகின்றன, இனியும் தொடரும் என்றார். அவர் இப்படி திட்டவட்டமாகச் சொன்னதற்கு மாறாக கொள்கையிலே பிடிப்பில்லாமல் பார்களைத் திறக்க இப்போது முன் வந்துள்ளாரா?

அன்புள்ள,

மு.க.

7-4-2002

2716. பாபு ஜெகஜீவன் பாராட்டு; பாப்பாக்கள் அறிவரோ?

உடன்பிறப்பே,

பொதுவாழ்வில் அடியெடுத்து வைத்த 1938ஆம் ஆண்டு முதலே; அதாவது 64 ஆண்டுகளுக்கு முன்பே, மாணவப் பருவத்தில் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து புலி, வில், கயல் பொறித்த தமிழ்க் கொடியேந்தி திருவாரூர் வீதிகளில் ஊர்வலம் சென்ற அந்த நாட்களில் நகருக்கு அருகில் உள்ள ஆதிதிராவிட (தலித்) மக்களின் நலன்களுக்காக உழைப்பதிலும்; அந்தக் காலனிகளில் திருமணங்களை நடத்தி வைப்பதிலும்; அவர்களின் குடில்களில் அமர்ந்து திருமண விருந்து அருந்துவதிலும் திராவிட இயக்கக் கொடிகளை அந்தத் தெருக்கள்தோறும் ஏற்றுவதிலும் அவர்களில் ஒருவனாகவே இருந்தவன் நான் என்ற பெருமிதத்துடன் இந்த மடல் தீட்டுகிறேன்.

தலித் இனத்தில் என் பிள்ளைக்கு பெண் எடுத்தும், பேத்தியைப் பெண் கொடுத்தும் சாதி மத பேதங்களுக்கும், சாத்திரக் குப்பைகளுக்கும் விடை கொடுத்தவன் நான்.

நாடகத்தில் காவியத்தில் வரும் காதலைப் பாராட்டிப் புகழ்ந்து விட்டு; தமது வீடகத்தே காதல் என்றால் அதைத் தடுப்போரை, மூடர் என்றாரே பாரதியார் - அந்த பட்டியலில் இடம் பெறாது, செம்புலப் பெயல் நீர் போலக் கலந்த அன்புடை நெஞ்சங்களின் மணத்தையும் நிறைவேற்றி வைத்து; சங்கப் பாட்டில் சொல்வதை வீட்டில் செய்து காட்டியவன் நான் - சங்கப் பாடலின் இனிமையை மட்டும் சொல்லி மகிழாது, அதனைச் செயல்வடிவம் கொடுத்துச் சிறப்பித்தவன் என்ற பெருமையும் எனக்கு உண்டு!

நான் எழுதிய புதினங்கள் பலவற்றிலும் தலித் இனம் சார்ந்த நல்லதோர் கதாபாத்திரம்; ஒரே இரத்தத்தில் நந்தகுமாராகவும், தென்பாண்டி சிங்கத்தில் மேகநாதனாகவும்,

பாயும் புலி பண்டாரகவன்னியனில் சுந்தரலிங்கமாகவும் சித்தரிக்கப்பட்டிருப்பதை எவரும் மறந்திடார்.

புராண காலத்தில் புலியும் மானும் ஒரே துறையில் நீர் அருந்தும் என்று ஒரு ஆட்சியின் சிறப்பை வர்ணிப்பார்கள்; இப்போது புலியும் மானும் வேண்டாம்; மானும் மானுமாவது ஒரே துறையில் நீர் அருந்தும் நிலை இருக்கிறதா?

எனக் கேட்டு சாதிப் பேய் மாய்த்திட உரையாடல் எழுதியதுதான் இந்தப் பேனா!

உடன்பிறப்பே,

இந்த விவரங்கள் எல்லாம் திடீரென இப்போது எதற்காக எனக் கேட்கத் தோன்றும் உனக்கு!

சில பேர் கிளம்பியிருக்கிறார்கள்; தங்களை என்னவோ அண்ணல் அம்பேத்கரின் தம்பியென்றும் தங்கச்சியென்றும் நினைத்துக் கொண்டு; கருணாநிதி ஆட்சியில் தன்னை தலித்துகளின் சம்பந்தி என்று கூறிக்கொண்டு தலித்துகளை ஏமாற்றினார் என்று ஒப்பாரி வைத்து, வாங்கிய கூலிக்கு மாரடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தியாவிலேயே முதன்முதல் 1974 ஆம் ஆண்டுக்கு முன்பே வடசென்னையில் கழக ஆட்சியில் தான் அம்பேத்கர் பெயரால் கல்லூரி அமைக்கப்பட்டது.

தொடர்ந்து பல சட்டக்கல்லூரிகள் அவர் பெயரால் கழக ஆட்சியில் அமைக்கப்பட்டன.

மராட்டியத்தில் அம்பேத்கர் பல்கலைக் கழகம் தொடங்குவதில் ஏற்பட்ட தாமதத்தை தவிர்த்து; அந்தப் பணியை உடனே நிறைவேற்றுமாறு தி.மு.கழகத்தின் சார்பில் தமிழகத்திலிருந்து லட்சக்கணக்கான தந்திகள் கொடுக்கச் செய்து; அங்கிருந்து ஆளுநர் அலெக்சாண்டர் அவர்களே; அதற்காவன செய்திடுவதாக எனக்குக் கடிதமே எழுதி; அது வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது.

அம்பேத்கர் பெயரால் சட்டப் பல்கலைக்கழகம் தமிழகத்தில் தொடங்கப் பெற்றது தி.மு.க. ஆட்சியில் தான்!

அம்பேத்கர் மணிமண்டபம் அழகுற அமைக்கப்பட்டு, அது திறக்கப்பட்டது தி.மு.க. ஆட்சியில்தான்!

இவற்றையல்லாமல் இன்னும் எத்தனையோ சாதனைகள், உரிமைகள், சலுகைகள் ஆதிதிராவிட (தலித்) மக்களுக்காக!

இட ஒதுக்கீட்டில் தலித் மற்றும் பழங்குடி இன மக்களுக்காக 16 சதவீதம் என்றிருந்ததை தி.மு.க. ஆட்சியில்தான் 18 சதவீதம் என 1971-ல் உயர்த்தி; அதன் பிறகும் தி.மு.க. ஆட்சியில் 1990-ல் 19 சதவீதம் என உயர்த்தி; அதில் ஒரு சதவீதம் பழங்குடி இன மக்களுக்கு என்றும் தலித் மக்களுக்கு முழுமையாக 18 சதவீதம் என்றும் பிரித்து வழங்கியது என்பது வரலாறாகும்.

இன்னுமோர் சான்று கூறவேண்டுமேயானால் 1996க்குப் பிறகு 5 ஆண்டுகளில் அவர்களுக்கு 2 இலட்சத்து 89 ஆயிரத்து 512 வீட்டு மனைகள் இலவசமாக வழங்கப்பட்டதும் தி.மு.க. ஆட்சியில்தான்!

விவேகமெனும் வெள்ளி முளைத்து
சாதிமத பித்து எனும்
சனி தொலைந்தால்தான்;
சமத்துவமெனும் ஞாயிறு தோன்றும்

என்பதற்காக; கடந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் நூறுக்கு மேற்பட்ட பெரியார் நினைவு சமத்துவபுரங்கள் அமைக்கப்பட்டு; ஒவ்வொரு சமத்துவபுரத்திலும் 40 சதவீத வீடுகள் தலித் மக்களுக்கும்; 25 சதவீதம் பிற்படுத்தப்பட்டோருக்கும்; 25 சதவீதம் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கும்; 10 சதவீதம் இதர வகுப்பாருக்கும் வழங்கப்பட்டு நல்லோர் அனைவராலும் பாராட்டப்பட்டுள்ளது.

இந்தியாவிலே எல்லா மாநிலங்களுக்கும் வழிகாட்டும் வண்ணம் 1974 பிப்ரவரி 15ஆம் நாள் தி.மு.க. ஆட்சியில் தலித் மக்களுக்கான இலவச காங்கிரீட் வீடுகள் கட்டித் தரும் திட்டம் தொடங்கப்பட்டது.

அந்தத் திட்டத்தைக் காண்பதற்கு வெளி மாநிலத்து அமைச்சர்கள் வந்தனர் - புகழ்ந்து போற்றினர்!

சான்றாக; சென்னை பூவிருந்தவல்லிக்கருகில் காட்டுப் பாக்கத்தில் 1975ஆம் ஆண்டு ஜனவரியில் இந்த வீடுகளைத் திறந்து வைத்திட வருகைதந்த

மத்திய உணவுத் துறை அமைச்சர் பாபு ஜெகஜீவன் ராம் அவர்கள் உரையாற்றும்போது,

மக்கள் நல அரசை, ஆட்சியை நாம் நடத்துகிறோம் என்றுதான் இந்தியாவில் கூறி வருகிறோம். மக்கள் நல அரசு என்ற வார்த்தைக்கு உண்மையான விசுவாசத்துடன் தமிழக அரசு பணியாற்றி வருவதைக் கண்டு நான் மகிழ்ச்சி அடைகிறேன். வாடகை எதுவும் இல்லாமல் இலவசமாக இந்த வீடுகளை அரிசனச் சகோதரர்களுக்கு வழங்குவது என்று தமிழக முதலமைச்சர் கலைஞர் முடிவு செய்திருப்பது அவருடைய சீரிய மனப்பான்மைக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும். தமிழ்நாடு காட்டியுள்ள இந்தச் சிறந்த முன் உதாரணத்தை மற்ற மாநிலங்களும் பின்பற்ற முயலும் என்று நம்புவோமாக!

இத்திட்டத்தின் பெருமையை உணர்ந்த மத்திய அரசு, இதனை இந்தியா முழுதும் விரிவாகப் பரப்பிட முனைந்து இந்திரா காந்தி பெயரால் நடைமுறைப்படுத்தத் தொடங்கியது. 1975இல் அதாவது திட்டம் தொடங்கப்பட்ட பிறகு ஓராண்டு காலத்தில் 30,022 வீடுகள் தி.மு.கழக ஆட்சியில் கட்டி முடிக்கப்பட்டன.

அதன்பிறகு ஆட்சி கலைக்கப்பட்டு - 13 ஆண்டுகள் இடைக்காலத்தில் இருந்த அ.தி.மு.க. ஆட்சியில் தலித் மக்களுக்காக கட்டப்பட்ட இலவசக் காங்கிரீட் வீடுகள் 36 ஆயிரத்து 261 ஆகும்!

பின்னர் 1989-90-ல் தி.மு.க. ஆட்சியில் கட்டப்பட்ட தலித் இலவச காங்கிரீட் வீடுகள் 42 ஆயிரமாகும்.

1990-91இல் தி.மு.க. ஆட்சியில் கட்டப்பட்ட வீடுகள் 47 ஆயிரம்! ஆக மொத்தம் 89 ஆயிரம் வீடுகள் இரண்டே ஆண்டுகளில்!

இதற்குப் பிறகு 1991 முதல் 1996 வரை 5 ஆண்டு ஜெயலலிதா ஆட்சியில்; 1 இலட்சத்து 20 ஆயிரத்து 700 வீடுகள் மட்டுமே!

1996க்குப் பிறகு தி.மு.க. ஆட்சியில் ஐந்து ஆண்டுகளில் 2 இலட்சத்து 96 ஆயிரத்து 131 வீடுகள் தலித் மக்களுக்காகக் கட்டித் தரப்பட்டுள்ளன.

இந்த வீடுகளை மத்திய அரசின் திட்டமாக அறிவித்திருந்தாலும்கூட - இதற்கு வழிகாட்டிய தி.மு.க. ஆட்சியில்; கூரை போடுவதற்காக மாநில அரசால் வழங்கப்பட்ட 7 ஆயிரம் ரூபாய் என்பது 1998-99 முதல் 12 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்பட்டது.

தலித் மக்களுக்காக தி.மு.க. செய்துள்ள நன்மை பயக்கும் சாதனைகளில் சில துளிகளை மட்டுமே சுட்டிக் காட்டினேன். இன்னும் அடித்தட்டு மக்களாக இருக்கிற, உழைக்கும் வர்க்கத்தினரான, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, சாமான்ய, சாதாரண, நடுத்தர மக்களுக்கு சமுதாய ரீதியாக

அரசியல் ரீதியாக
பொருளாதார ரீதியாக

நிறைவேற்ற வேண்டிய பணிகள் எவ்வளவோ இருக்கின்றன!

அவற்றை நிறைவேற்றிட;

அந்த மக்களின் பெயரைக் கூறிக் கொண்டு பெட்டிகள் பெறுவோரால் முடியாது. அவர்களுக்கு அந்த நினைவு, கனவிலே கூட நிழலாக வரவும் செய்யாது!

ஆனால் அவர்கள், தாங்களே தான் அந்த மக்களுக்கு ரட்சகர்கள் போல மார்தட்டிக் கொள்வது தான் நல்ல நகைச்சுவைக் காட்சியாக இருக்கிறது!

இந்த நகைச்சுவையாளர்கள் நம் வம்புக்கு வரும் போது தான் இவர்களின் இயல்பு குறித்துச் சுட்டிக் காட்ட வேண்டிய அவசியம் நமக்கும் ஏற்பட்டு விடுகிறது!

அனபுள்ள,

மு.க.

8-4-2002

2717. வாய் தவறியது அல்ல; வாய்மை தவறிய செயல் !

உடன்பிறப்பே,

காவேரி நதி தீரத்திலேயுள்ள இலட்சோப இலட்சம் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு ஒரு மாபெரும் துரோகத்தை; அந்நாள் இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி அவர்களுடன் சேர்ந்துகொண்டு நான் செய்து விட்டதாகவும்; தமிழ் மண்ணுக்குச் சொந்தக்காரனாகிய நான்; இந்த மண்ணின் மைந்தர்களையே கர்நாடகத்திற்குக் காட்டிக் கொடுத்து விட்டதாகவும்; அதற்கு இந்திரா காந்தியும் உடந்தையாக இருந்ததாகவும்; இன்னும் தெளிவாகக் கூறவேண்டுமேயானால்; தமிழ்நாட்டை வஞ்சித்து விட்டு, கர்நாடகத்திற்குச் சாதகமாக பிரதமர் இந்திரா காந்தி ஒரு தலைப்பட்சமான முடிவு எடுத்ததாகவும், அதற்கு நானும் ஒத்துப் போனதாகவும், பயங்கரக் குற்றச்சாட்டு ஒன்றை 9.4.2002 அன்று சட்டப் பேரவையிலே, வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்பார்களே அது போல ஜெயலலிதா தூக்கிப் போட்டார்.

சாதாரண ஜெயலலிதா அல்ல; தமிழ்நாட்டின் முதல் அமைச்சர் ஜெயலலிதா!

பொறுப்புடன் வார்த்தைகளை அளந்து பேசவேண்டிய பொறுப்பான ஒரு பதவியில் வீற்றிருப்பவர் - பொறுப்பு மறந்து பேசக் கூடாத மாமன்றத்தில் - மரபுகளைத் தனது கால் தூசுக்கும் கீழானவைகளாகக் கருதி - இந்திரா காந்தியுடன் நானும் சேர்ந்து கொண்டு எந்தத் தமிழ் மக்கள் என்னை அரவணைத்து உற்சாகப்படுத்தினாலும்; உற்சாகப்படுத்தத் தவறினாலும்; அந்த இருவேறு செயல்களையும் வேறுபடுத்திப் பார்க்காமல் அந்தத் தமிழ் மக்களிடமிருந்து விலகி நிற்காமல், அவர்களின் விசுவாசமுள்ள ஊழியனாக உழைத்து வருகிறேனோ, அந்த அருமைத் தமிழ் மக்களுக்கு துரோகம் செய்தேன் என்று துளி விஷத்தைக் கலந்து விட்டு, இப்போது அந்த விஷம், வாயிலிருந்து

தவறி விழுந்து விட்டது என்கிறார் முதல்வர் ஜெயலலிதா என்றால்; "ஆமாம் பாவம்; அம்மையார் வாய் தவறித்தான் சொல்லிவிட்டார்!" என்று ஒப்புக்குத் தாளம் போடுகிறவர்கள் யாராயிருப்பினும்; அவர்கள் தங்களின் மனச்சாட்சியை விற்று விட்டவர்களே ஆவார்கள்!

வாய் தவறி; ஒரு சொல் வரலாம். ஏன்; இரண்டு வார்த்தைகளே கூட வரலாம். பாண்டியன் நெடுஞ்செழியன்; "கோவலன் கள்வனாயின் அவனைக் 'கொண்டு வருக' எனக் கூறுவதற்குப் பதில் "கொன்று வருக" என ஒரு வார்த்தை தவறிச் சொன்னதால்தான் கோவலன், விசாரணையின்றி கொல்லப்பட்டான் எனக் கூறுவதுமுண்டு"

ஒரு வார்த்தை தவறினாலே விபரீதம் விளையுமெனில் பல நீண்ட வாக்கியங்களைக் கொண்ட ஒரு குற்றச்சாட்டை என் மீதும் இந்திரா காந்தி மீதும் சுமத்தி; வழக்குகளை பேரப் பொருளாக வைத்து கர்நாடகத்திற்குச் சாதகமாக, தமிழகத்திற்குப் பாதகமாக துரோகம் விளைவித்து விட்டதாக; அதாவது காவேரி வழக்கு வாபஸ் என்பது என்மீது தொடரப்பட்ட வழக்கிற்கு சுமார் பத்தாண்டு காலம் முந்தியது என்பதை மறைத்து விட்டு "காவிரி வழக்கை வாபஸ் வாங்கு; நான் சர்க்காரியா வழக்கை வாபஸ் வாங்குகிறேன்" என இந்திராகாந்தி அம்மையார் சொன்னது போல ஒரு கற்பனைக் கதையைத் திட்டமிட்டுக் கூறிவிட்டு; திரு.எஸ். ஆர். பாலசுப்ரமணியம் கால வித்தியாசத்தை சுட்டிக்காட்டியவுடன் திருத்திக் கொண்டதாக ஜெயலலிதா, தி.மு.க. எதிர்க்கட்சித் துணைத் தலைவர் துரைமுருகன் எழுப்பிய பிரச்சினைக்கு 10-4-2002 அன்று ஒரு மழுப்பலான பதிலை அளித்துள்ளார்.

திரு.எஸ்.ஆர். பாலசுப்பிரமணியம், குறுக்கிட்டு திருத்தியவுடன்; ஜெயலலிதா வழக்கின் பெயரைத்தான் மாற்றிக் கொண்டாரே தவிர; சர்க்காரியா என்பதற்குப் பதிலாக - சி.பி.ஐ. வழக்கு எனக் குறிப்பிட்டுக் காட்டியதால் இந்திரா காந்தி மீதும் என் மீதும் அவர் சுமத்திய குற்றச்சாட்டை திருத்திக் கொள்ளவுமில்லை; திரும்பப் பெறவுமில்லை என்பதுதான் உண்மை .

எஸ்.ஆர்.பி. அவர்கள் "அது சர்க்காரியா வழக்கு அல்ல; அது 1976க்கு மேல்" என்பதைக் குறிப்பிட்டவுடன், ஜெயலலிதா தனது மொத்தக் கட்டுக் கதையையும் நிறுத்திக் கொள்ளாமல்; 1980ல்

கைவிடப்பட்ட சி.பி.ஐ. வழக்கைப் பற்றிக் கூறி; தனது திட்டமிட்ட, உண்மைக்கு மாறான குற்றச்சாட்டுக்கு வலுத் தேடத்தான் முனைந்தாரே தவிர; 1980ல் வந்த வழக்கிற்கு 1971-72ல் வாபஸ் பெறப்பட்ட காவேரி வழக்குடன் எப்படி முடிச்சு போட முடியும் என்பதை எண்ணிப்பார்க்கவில்லை! எரிச்சல் குணம்; எண்ணிப் பார்த்திட இடம் தரவில்லை!

வாய் தவறி வார்த்தைகள் ஒன்றிரண்டு வரலாம் - வாக்கியங்களே வர முடியுமா? அப்படி வந்ததாகச் சொல்ல முடியுமா? சொன்னால் அதனை வழிமுறையாகத் தமிழ் அறிந்தவர்கள் நம்பத்தான் முடியுமா?

1971-72 காவேரி வழக்கிற்கும் - 1976க்கு மேல் மற்றும் 1980க்கு மேல் உள்ள வழக்குகளுக்கும் முடிச்சுப் போட்டு பேரம் நடந்தது; பெரும் துரோகம் நடந்தது என்று இட்டுக்கட்டி ஓர் இழிவை என் மீதும் இந்திரா காந்தி அவர்கள் மீதும் சுமத்தி; நாங்கள் தமிழ்நாட்டு விவசாயிகளுக்கு துரோகம் இழைத்து விட்டோம் என்று "முழு நீள வசனம்" பேசிவிட்டு; ஏதோ ஒரு வார்த்தை, வாய் தவறி வந்து விட்டது போல 'பம்மாத்து' செய்வது யாரை ஏமாற்றிட?

எனவே செல்வி ஜெயலலிதா அவர்கள்; தனது பொறுப்பை மறந்து எங்கள் மீது உரைத்த பொல்லாங்கு, வாய் தவறியது அல்ல; வாய்மை தவறிய செயலாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நினைவூட்டுகிறேன். "சர்க்காரியா கமிஷன்" வழக்கு என்பதை "சி.பி.ஐ. வழக்கு" என்று முதல்வர் ஜெயலலிதா திருத்திக் கொண்டிருக்கிறாரே தவிர, காவேரி பிரச்சினை சம்பந்தமான தமிழக அரசின் வழக்கை பிரதமர் இந்திரா காந்தியுடன் பேரம் நடத்தி என்னுடைய சொந்த இலாபத்திற்காக திரும்பப் பெற்றேன் என்று முதல்வர் ஜெயலலிதாவும் அமைச்சர் பொன்னையனும் சாட்டிய குற்றச்சாட்டினை இருவருமே பேரவையிலே திரும்பப் பெறவில்லை என்பதுதான் எங்களுடைய குற்றச்சாட்டு. முதலமைச்சர் ஜெயலலிதா இப்போதும் கூறுவது எல்லாம் சர்க்காரியா கமிஷன் என்பதை சி.பி.ஐ. வழக்கு என்று திருத்திக் கொண்டு விட்டேன் என்பதுதான். சர்க்காரியா கமிஷனாவது 1977 ஆம் ஆண்டிலே விசாரிக்கப்பட்டது. சி.பி.ஐ. வழக்கு கைவிடல்

என்பது 1980ஆம் ஆண்டில் நடைபெற்றது. காவேரி வழக்கு வாபஸ் 1972இல் நடைபெற்றது. எனவே ஜெயலலிதாவும் பொன்னையனும் சி.பி.ஐ. வழக்கு வாபஸ் என்று கூறியதும் தவறான குற்றச்சாட்டுதான். அதைத்தான் நாங்கள் சுட்டிக்காட்டுகிறோம். ஆனால் இதைப் புரிந்து கொள்ளாமல், அல்லது புரிந்து கொண்டே புரியாதது போல எதையோ மழுப்பி இந்தப் பிரச்சினையிலிருந்து தப்பித்துக் கொண்டு சென்று விடப் பார்க்கிறார்களே தவிர உண்மையை தெளிவாக ஒப்புக் கொள்ளவில்லை.

பேரவைத் தலைவர் அவர்கள்; தி.மு.க. சார்பில் தரப்பட்டுள்ள உரிமைப் பிரச்சினையில் அவை நடவடிக்கை குறிப்புகளைக் கொண்டு சரிபார்த்து தீர்ப்பு கூறுவதாகக் கூறியுள்ளார். முதல்வர் ஜெயலலிதாவும் பொன்னையனும் பேசியது அனைத்து ஏடுகளிலும் தெளிவாகவே வந்துள்ளது. அவையில் இருந்த உறுப்பினர்கள், பத்திரிகையாளர்கள் கேட்டிருக்கின்றனர். எனவே பேரவைத் தலைவர் அவை நடவடிக்கை குறிப்பிலே உள்ள உண்மையான கருத்துருவுடன் உரிமைப் பிரச்சினையில் எழுப்பப் பட்டுள்ள விபரங்களை ஒப்பிட்டுப் பார்த்து தீர்ப்பு வழங்குவார் என்ற நம்பிக்கையுடன் எதிர்பார்ப்போமாக!

அன்புள்ள,

மு.க.

12-04-2002

2718. நிதி அமைச்சருக்குத் தேவை நிதானப் பார்வை!

உடன்பிறப்பே,

தனது செயல்படாத தன்மைக்கும், ஆர்வக் குறைவுக்கும், அக்கறையற்ற போக்கிற்கும் எடுத்துக்காட்டாக; தமிழக நிதி அமைச்சர் பொன்னையன், மத்தியிலே இருக்கிற தி.மு.க. அமைச்சர்கள் மீதும்; இங்குள்ள எதிர்க்கட்சியான தி.மு.க. மீதும் பழி போடுவதையே தனக்குப் பழகிப்போன பல்லவியாகப் பாடிக் கொண்டிருக்கிறார்.

கடந்த ஆண்டுகளில் முக்கிய துறைகளுக்கும், முக்கிய திட்டங்களுக்கும் தமிழக அரசு நிதி நிலை அறிக்கையிலோ, அறிக்கை விளக்க ஏடுகளிலோ செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்த நிதி ஒதுக்கீடுகள் இந்த ஆண்டு மிக மோசமான அளவுக்குக் குறைக்கப்பட்டிருப்பதையும் - சில திட்டங்கள் அடியோடு நிறுத்தப்பட்டிருப்பதையும் சேப்பாக்கம் விளக்கக் கூட்டத்தில் நான் விவரித்துப் பட்டியல் இட்டிருக்கிறேன். எதிர்க்கட்சித் தலைவர் பேராசிரியர் அவர்கள் பேரவையிலேயே அந்தப் புள்ளி விபரத்தை அடுக்கிக் காட்டியிருக்கிறார். சட்டமன்ற உறுப்பினர் மு.க. ஸ்டாலின் அவையில் ஆற்றிய உரையில் இந்தக் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

இவற்றுக்கெல்லாம் பொத்தாம் பொதுவாகப் பொன்னையன், ஏதோ பதில் அளிப்பதாகக் கருதிக் கொண்டு நீங்களும்தான் பல துறைகளைப் பற்றி நிதி நிலை அறிக்கையில் நிதி ஒதுக்கீடு பற்றி குறிப்பிட வில்லை என்கிறார். அவர் குறிப்பிட்டுக் காட்டும் துறைகள் குறித்து தி.மு.க. ஆட்சியில் 2001-2002ஆம் ஆண்டு இடைக்கால நிதிநிலை அறிக்கையில் கூட நிதி ஒதுக்கீடு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

உதாரணமாகக் கூற வேண்டுமேயானால் பிற்படுத்தப் பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் துறைக்கான நிதி

42240
க 894.8116
திருவை .33

ஒதுக்கீடு எவ்வளவு என்று நான் படித்த நிதி நிலை அறிக்கையிலே குறிப்பிடவில்லை என்கிறார் பொன்னையன். நான் கடந்த ஆண்டு 29-1-2001 அன்று படித்த இடைக்கால நிதி நிலை அறிக்கையிலேகூட பத்தி 69 - பிற்படுத்தப்பட்டவகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் மற்றும் சீர்மரபினர் ஆகியோரின் நலனுக்காக 1995-96ஆம் ஆண்டில் மொத்தம் 47 கோடி ரூபாயாக இருந்த நிதி ஒதுக்கீடு நடப்பு நிதியாண்டில் ரூபாய் 175 கோடியாக உயர்ந்துள்ளது என்று குறிப்பிட்டிருக்கிறேன்.

அதுபோலவே மாணவர்கள் நலன் என்ற தலைப்பில் நிதி ஒதுக்கீடு எவ்வளவு என்று நான் நிதிநிலை அறிக்கையிலே கூறவில்லை என்கிறார். மாணவர்கள் நலன் என்ற தலைப்புக்கு கல்வித் துறையின் கீழே நிதி ஒதுக்கப்படும். கடந்த ஆண்டு படித்த இடைக்கால நிதி நிலை அறிக்கையிலே கல்வித் துறைக்கான ஒதுக்கீடு என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பக்கம் 13, பத்தி 47 - நடப்பு நிதியாண்டில் கல்விக்கான மொத்த ஒதுக்கீடு ரூபாய் 4949 கோடியிலிருந்து வரும் நிதி யாண்டில் ரூபாய் 5472 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இதற்கு முந்தைய ஆண்டுகளில் நான் படித்த நிதி நிலை அறிக்கைகளிலும் பெரிய துறைகளுக்கு எவ்வளவு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்றன என்ற விவரங்கள் இடம் பெற்றுள்ளன.

இப்போது பிரச்சினை அது மட்டுமல்ல; சென்ற நிதி ஆண்டுகளை விட; இந்த நிதியாண்டில் துறைகளுக்கும், திட்டங்களுக்கும் நிதி ஒதுக்கீடு குறைவாக செய்யப்பட்டுள்ளதா இல்லையா என்பதுதான்!

இலவச வேட்டி சேலை திட்டம் என்ன ஆயிற்று? ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டம் என்ன ஆயிற்று? அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் ஏன் ஒழிக்கப்பட்டது? சமத்துவபுரம், நமக்கு நாமே திட்டங்கள் காணப்படவில்லையே; ஏன்? பிற்படுத்தப்பட்டோர் வீட்டு வசதி திட்டத்திற்கு ஏன் நிதி ஒதுக்கப்படவில்லை? மாணவர்களின் இலவச பஸ் பாஸுக்கான நிதி குறைக்கப்பட்டுள்ளதா இல்லையா? குழந்தைகள் சத்துணவுத் திட்டத்திற்கும், மீனவர்கள் வீட்டு வசதி திட்டத்திற்கும், இலவச வீட்டுமனைத் திட்டத்திற்கும், பெண் குழந்தைகள் நலத் திட்டத்திற்கும் கடந்த ஆண்டை விட நிதி குறைக்கப்பட்டுள்ளதா இல்லையா? உணவு மானியமாக

தரப்பட வேண்டிய தொகையில் 300 கோடி ரூபாய் இந்த ஆண்டு வெட்டப்பட்டிருக்கிறதா இல்லையா? இவற்றுக்கெல்லாம் ஒரே பதிலாக; நிதிப் பிரச்சினையில், என்னவோ இவர்தான் மத்திய அரசு மீது போர் தொடுத்திருப்பதாகவும்; அதில் தி.மு.க.வுக்கு அக்கறை கிடையாது என்பது போலவும் பொன்னையன் காட்டிக் கொள்ள முனைகிறார்.

இதோ; 29-1-2001 அன்று நான் அவையிலே படித்த 2001-2002ஆம் ஆண்டு இடைக்கால நிதி நிலை அறிக்கை பக்கம் 3இல் 6வது பத்தியை அவர் படித்துப் பார்க்கட்டும்.

பதினோராவது நிதி ஆணையத்தின் பரிந்துரைகளால் தமிழகத்திற்கு பெருத்த நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது. மத்திய அரசின் மொத்த வரி வசூலில் மாநிலங்களுக்கு அளிக்க வேண்டிய பங்கை 40 சதவீதமாக நிர்ணயிக்கும்படி தமிழக அரசு கோரியிருந்தது. இதற்கு மாறாக பதினோராவது நிதி ஆணையம் நிகர வரி வசூலில் 29.5 சதவீதம் மட்டுமே பகிர்ந்தளிக்க வேண்டுமென்று பரிந்துரை செய்துள்ளது. அத்துடன் அந்த நிதியையும் பகிர்ந்தளிப்பதற்கு பதினோராவது நிதி ஆணையம் நிர்ணயித்த வழிமுறைகளில்; பின்தங்கிவிட்ட மாநிலங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதால் தமிழகத்தைப் போன்று சிறப்பாகச் செயல்படும் மாநிலங்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளன. இதன் விளைவாக 2000ஆம் ஆண்டிலிருந்து தொடங்கும் ஐந்தாண்டுக் காலத்தில் தமிழ்நாட்டிற்கு ஏற்படவுள்ள இழப்பு ரூபாய் 4711 கோடி ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. நிதி ஆணையத்தின் பரிந்துரைகளால் பாதிக்கப்பட்ட மாநிலங்கள் 21-8-2000ஆம் நாளன்று இந்த ஏற்றுக் கொள்ள இயலாத, சமநிலையற்ற நிலையைச் சீரமைக்குமாறு பிரதமரிடம் கோரிக்கை ஒன்றினைக் கொடுத்துள்ளன. சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களுக்கு வழங்குவதற்கான ஊக்க நிதி ஒன்றையாவது ஏற்படுத்துமாறும் வலியுறுத்தியுள்ளோம். பதினோராவது நிதி ஆணையம், அதன் துணை அறிக்கையில் அனைத்து மாநிலங்களுக்கும் மொத்த ஊக்க நிதியாக அடுத்த ஐந்தாண்டுகளுக்கு ரூபாய் 5304 கோடிதான் என பரிந்துரைத்துள்ளதும் அதிலும் மொத்தமாக ஐந்தாண்டுகளுக்கு தமிழகத்தின் பங்கு ரூபாய் 402 கோடி மட்டுமே என்று கூறியிருப்பதும் முனைப்பாக செயல்படும் மாநிலங்களுக்கு கடும் தண்டனையாக அமைந்துள்ளது. பதினோராவது நிதி ஆணையம் நமக்கு நியாயம்

வழங்கியிருந்தால் இந்த அளவு பற்றாக்குறை ஏற்பட்டிருக்காது. எனவே நிதி ஆதாரத்தைப் பெருக்க எடுக்கும் முயற்சிகளில் ஒன்றாக மாநில அரசுக்கான ஊக்க உதவியை அதிகரித்துத் தரும்படி மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்துவோம்.

அதே இடைக்கால நிதி நிலை அறிக்கையில்தான் பக்கம் 12-பத்தி 45இல்;

நாங்குநேரியில் சர்வதேச தரம் வாய்ந்த உயர் தொழில் நுட்பப் பூங்கா ஒன்றை அமெரிக்க தொழில்முனைவோருடன் இணைந்து டிட்கோ நிறுவனம் உருவாக்க உள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டு விழா இன்னும் சில நாட்களில் நடைபெற இருக்கிறது. இப்பகுதியில் ஏற்றுமதியை ஊக்குவிக்க மத்திய அரசின் வர்த்தக அமைச்சகம் இதை சிறப்புப் பொருளாதாரப் பகுதியாக (Special Economic Zone) அறிவித்துள்ளது

என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் குறித்து பேரவையில் 2-2-2001 அன்று என்னுடைய பதிலுரையில் விளக்கியது வருமாறு:- நாங்குனேரி வளாகத்திற்காக 2200 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு விட்டது. மத்திய அரசிடமிருந்து வெளிநாட்டு முதலீட்டிற்கான ஒப்புதல் பெறப்பட்டாகி விட்டது. மத்திய அரசு இந்த வளாகத்தை ஏற்றுமதி வளாகம் என்றும் அதற்குப் பிறகு சிறப்பு பொருளாதாரப் பகுதி என்றும் அறிவித்து அனுமதியும் வழங்கியுள்ளது. குடிநீர் வடிகால் வாரியம் இந்த வளாகத்திற்கு தண்ணீர் வழங்குவது சம்மந்தமான திட்டத்தை முடிவு செய்துள்ளது.

இணைத்துறையிலே இந்த வளாகத்தை நடத்த அட்மாக் லிமிடெட் என்ற கம்பெனி உருவாக்கப்பட்டுள்ளது. அமெரிக்க நாட்டு முதலீட்டாளர்கள் இதுவரை இந்த வளாகம் தொடர்பான பல்வேறு ஆய்வுகளுக்காக ஐந்து கோடி ரூபாய் செலவிட்டுள்ளதோடு நிறுவனத்தின் கணக்கில் ஏழு கோடி ரூபாயை டெபாசிட்டும் செய்துள்ளார்கள். இந்த அடிக்கல் நாட்டு நிகழ்ச்சிக்கான தேதியையும் அமெரிக்க நாட்டு முதலீட்டாளர்கள்தான் என்னிடத்திலே கேட்டுப் பெற்றார்கள். அவர்களும் இந்த நிகழ்ச்சிக்கு வருகிறார்கள்.

இத்திட்டத்திற்கான மாஸ்டர் பிளானை சிங்கப்பூரைச் சேர்ந்த ஜெ.டி.சி. நிறுவனம் தயாரித்து அளித்துள்ளது. அமெரிக்க

முதலீட்டாளர்கள் உலகின் தலைசிறந்த நிறுவனங்களை இந்த வளாகத்திற்கு கொண்டு வருவதற்கான பேச்சு வார்த்தைகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். டிட்கோ நிறுவன அலுவலர்களும் இதற்காக அமெரிக்கா சென்று அமெரிக்க முதலீட்டாளர்களைச் சந்தித்து வளாகம் அமைப்பதை உறுதி செய்துள்ளார்கள் என்கிற மகிழ்ச்சியான செய்தியை நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தத் திட்டம் பற்றி பொன்னையன் படித்த நிதி நிலை அறிக்கையிலே ஒரு வரி கூட இல்லையே, ஏன்?

பேரவையில் துரைமுருகன் சுட்டிக்காட்டியதுபோல் மத்தியில் உள்ள தி.மு.க. அமைச்சர்கள் மீது குறைகளை வீசுகிற பொன்னையன்; தமிழக அரசின் சார்பாக நாங்குனேரி திட்டம் பற்றி மத்திய வர்த்தக தொழிற்துறை அமைச்சர் முரசொலி மாறனுடன் ஒரு முறையாவது பேசியது உண்டா? தொடர்பு கொண்டது உண்டா?

ஆனால் இப்போதுகூட ஏற்றுமதி இறக்குமதி கொள்கை வெளியிட்ட நிகழ்ச்சியில் டெல்லியில் முரசொலி மாறன்; நாங்குனேரி திட்டம் பற்றியும் அதனால் தமிழகத் தென் மாவட்டங்களில் ஏற்படப்போகும் வளர்ச்சி பற்றியும் குறிப்பிட்டிருக்கிறார்.

இவையெல்லாம்; பொன்னையன் அவர்கள் திருத்திக் கொள்வதற்காக அல்ல; பொன்னையன் போன்றோர் திசை திருப்புவதைப் பொதுமக்கள் புரிந்து கொள்வதற்காக!

நிதியமைச்சர் பொன்னையன்; எடுத்தேன், கவிழ்த்தேன் என்றும்; கடந்த காலத்தில் தமது கட்சியின் செயல்பாடுகளை மறந்துவிட்டும் பேசாமலிருக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்துடன்தான் இக்கடிதம் எழுதியுள்ளேன். அவருக்கு நேர்கொண்ட பார்வை மட்டுமல்ல; நிதானமான பார்வையும் தேவை!

அன்புள்ள,

மு.க.

10-4-2002

2719. காவிரிப் பிரச்சினை: துரோகம் செய்தது யார்?

உடன்பிறப்பே,

காவேரி பிரச்சினையில் தி.மு.க. துரோகம் செய்து விட்டதாக முதலமைச்சர் ஜெயலலிதா தேய்ந்து போன கிராமபோன் பிளேட் போல -காவேரி என்ற வார்த்தை எப்போது எதற்காக ஒலிக்கப்பட்டாலும், உடனே தி.மு.க. துரோகம் என்ற ஒரு வார்த்தையைக் கூறாமல் இருந்ததே இல்லை. அதையொட்டி அவரது அமைச்சரவை சகாக்களும் அதையே பின்பற்றி தி.மு.க. காவேரி பிரச்சினையிலே துரோகம் செய்து விட்டதாக சம்மந்தம் இல்லாத இடங்களில் எல்லாம் உளறுவது வழக்கமாகி விட்டது. சட்டப் பேரவையில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருப்பது நிதி நிலை அறிக்கை மீதான விவாதம். இதற்கு ஒரு நிதி அமைச்சர் பதில் அளிக்கிறார் என்றால் அப்போது என்ன சொல்ல வேண்டும்? எதிர்க்கட்சிகள் நிதி நிலை அறிக்கை மீது தெரிவித்த குற்றச்சாட்டுகளுக்கு பதில் கூற வேண்டும். தி.மு.கழகத்தின் சார்பில் தெரிவிக்கப்பட்ட எந்தவொரு குற்றச்சாட்டிற்காவது நிதி அமைச்சர் தனது பதில் உரையிலே விளக்கம் அளித்திருக்கிறாரா? அதையெல்லாம் விட்டு விட்டு தற்போது நடைபெறும் நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்திற்கும் காவேரி பிரச்சினைக்கும் என்ன சம்மந்தம்? எதற்காக அதைப்பற்றி பேச வேண்டும்? நீர்ப்பாசனத் துறை மானியமா நேற்று விவாதிக்கப்பட்டது?

நேற்றையதினம் நிதி நிலை அறிக்கை விவாதத்திற்கு அவையிலே பதிலளித்து பொன்னையன் பேசும்போது, காவேரி பிரச்சினையில் தி.மு.க.வும் கருணாநிதியும் தமிழகத்துக்கு துரோகம் செய்து விட்டார்கள். காவிரி நடுவர் மன்றம் அமைக்க வேண்டும் என்று 1971 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியிலே கருணாநிதி சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். அப்போது அவர் மீது கோதுமை பேர வழக்கை சி.பி.ஐ. விசாரித்துக் கொண்டிருந்தது. வானத்தில் இருந்து வயல்களில் பூச்சி மருந்து தெளிக்கும் வழக்கை சுப்ரீம்

கோர்ட்டு விசாரித்துக் கொண்டிருந்தது. இந்த இரண்டு வழக்கிலும் தகுந்த ஆதாரம் இருந்ததால் இதிலிருந்து தப்புவதற்கு வகை தேடினார். அப்போது பாரதப் பிரதமராக இந்திரா காந்தி இருந்தார். அவர் கருணாநிதியிடம் காவிரி நடுவர் மன்ற வழக்கை சுப்ரீம் கோர்ட்டில் இருந்து வாபஸ் பெறும்படி கூறினார். தன் மீதுள்ள சி.பி.ஐ. வழக்குகளில் இருந்து தப்பிப்பதற்காக கருணாநிதி தமிழகத்துக்கு துரோகம் இழைத்தார் என்று கூறியிருக்கிறார்.

என் மீதுள்ள வழக்குகளை வாபஸ் வாங்குவதற்காக காவிரிப் பிரச்சினை குறித்து விசாரணையில் இருந்த வழக்குகளை வாபஸ் பெற்றேன் என்று கூசாமல் நாக்கிலே நரம்பில்லாமல் பொய் கூறுகிறார் பொன்னையன். பேரவையில் பேசுவதை வைத்து வழக்கு போட முடியாது என்ற ஒரே தைரியத்தில் பேசியிருக்கிறார். காவிரி வழக்கு வாபஸ் பெறப்பட்ட உண்மை வரலாற்றை முதலில் சொல்லி விடுகிறேன். 1971இல் ஹேமாவதி அணை கட்டுவதைத் தடுத்து நிறுத்த உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. அந்த வழக்கு தொடரப்பட்ட போது, அதை முரசொலி மாறன், கோ.சி. மணி, மூப்பனார் மற்றும் தஞ்சை மாவட்டத்தில் உள்ள பல்வேறு விவசாய சங்கங்கள் எல்லாம் அந்த வழக்கை முன்னின்று நடத்தினார்கள். பேச்சுவார்த்தை மூலம் பலன் காணலாம் என்று அன்றைய பிரதமர் இந்திரா காந்தி அவர்கள் என்னை அழைத்துச் சொன்னார்கள். சரி என்று நான் ஒப்புக் கொண்டேன். அப்போது அம்மையார் நான் பேசுவதென்றால் இடையில் நீங்கள் ஒரு வழக்கு போட்டிருக்கிறீர்களே, அந்த வழக்கு இருக்கும்போது பேச முன் வருவார்களா? எனவே என்னை நம்பி அந்த வழக்கைத் திரும்பப் பெறுங்கள் என்று சொன்னார்கள். அனைத்துக் கட்சித் தலைவர்களை அழைத்து தலைமைச் செயலகத்தில் சென்னை கோட்டையிலே பேசி அந்த வழக்கைத் தமிழக அரசு திரும்பப் பெறுவதென்று தீர்மானித்து, திரும்பப் பெறுகிற நேரத்தில் கூட மீண்டும் வழக்குப் போட வழி வைத்துக் கொண்டு அந்த வழக்கைத் தமிழக அரசு திரும்பப் பெற்றது. தஞ்சை விவசாயிகள் சார்பாக போடப்பட்ட முரசொலி மாறன் முன்னின்று போட்ட அந்த வழக்கும் இந்திரா காந்தி அவர்களுடைய வார்த்தையை நம்பி திரும்பப் பெறப்பட்டது. நாங்கள் இந்திரா காந்தியின் வார்த்தையை நம்பினோம். இந்திரா காந்தி கர்நாடக அரசு இணங்கி வரும் என்று அவர்களுடைய வார்த்தையை நம்பினார்கள். இரண்டு பேருக்கும் ஏமாற்றம் ஏற்பட்டது.

இதுதான் உண்மை. ஆனால் பொன்னையன் என்னை மட்டுமல்ல; இந்திரா காந்தி அம்மையார் அவர்களே பேரம் நடத்தி தமிழ்நாட்டு மக்களுக்கே காவிரிப் பிரச்சினையிலே துரோகம் செய்து விட்டதைப் போல குற்றஞ்சாட்டியிருக்கிறார். உடனடியாக த.மா.கா. சார்பில் சோ. பாலகிருஷ்ணன் அவர்களும், எஸ்.ஆர். பாலசுப்ரமணியம் அவர்களும் இந்திரா காந்தியை குற்றஞ்சாட்டும் வகையில் பேசுவதை ஏற்றுக் கொள்ள முடியாது என்று எதிர்ப்பு தெரிவித்த போது, முதலமைச்சர் ஜெயலலிதா குறுக்கிட்டு, என்னதான் எஸ்.ஆர். பாலசுப்ரமணியமும், சோ. பாலகிருஷ்ணனும் தங்களுடைய மறுப்புகளை தெரிவித்தாலுங்கூட, வரலாற்றை யாரும் மறைத்து விட முடியாது. நடந்த வரலாற்றைத்தான் நிதி அமைச்சர் சொல்லிக் கொண்டிருக்கிறார். அன்னை இந்திரா காந்தி மீது எனக்கு மதிப்பும் மரியாதையும் உண்டு. அதற்காக நடந்த வரலாற்று உண்மைகளை மாற்றி விட முடியாது. முன்னாள் முதல்வர் கருணாநிதி மீது மத்திய அரசின் சி.பி.ஐ. இரண்டு வழக்குகளைத் தொடர்ந்தது. ஒன்று கோதுமை பேர வழக்கு. இரண்டு பூச்சி மருந்து வழக்கு. பூச்சி மருந்து ஊழல் வழக்கை சர்க்காரியா கமிஷன் விசாரித்தது. இந்த வழக்குகளில் இருந்து தப்பிப்பதற்காக அன்னை இந்திரா காந்தி கேட்டுக் கொண்டவுடன் காவிரிப் பிரச்சினையில் நடுவர் மன்றம் வேண்டும் என்று உச்ச நீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கை கருணாநிதி வாபஸ் பெற்றார். இது தமிழக மக்களுக்கு இழைக்கப்பட்ட மிகப் பெரிய துரோகம். தமிழக மக்களை அவர் காட்டிக் கொடுத்து விட்டார். தன் மீது போடப்பட்ட வழக்குகளுக்காக உச்சநீதி மன்றம் வரை சென்றார். ஆனால் பலன் கிடைக்கவில்லை. ஆகவே உச்ச நீதிமன்றத்தில் இருந்த காவிரி நடுவர் மன்ற வழக்கை வாபஸ் பெற்று பெரும் துரோகம் இழைத்து விட்டார் என்றெல்லாம் கூறியிருக்கிறார்.

7-7-1972 அன்றுதான் காவிரிப் பிரச்சினை குறித்த வழக்கு தமிழக அரசின் சார்பாக வாபஸ் பெறப்பட்டது என்பதை பொன்னையனும் ஜெயலலிதாவும் ஒப்புக் கொண்டுள்ளார்கள். அதற்குக் காரணம் என்மீதுள்ள வழக்குகளை வாபஸ் பெற நான் பேரம் பேசியதுதான் என்று குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள்.

ஆனால் தி.மு. கழகத்திலிருந்து எம்.ஜி.ஆர். பிரிந்து சென்றதே 1972ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில்தான்! அதற்குப் பிறகுதான் 4-11-1972 அன்றுதான் எம்.ஜி.ஆர். என்மீதும், என்

அமைச்சரவை நண்பர்கள் மீதும் குற்றஞ்சாட்டி குடியரசுத் தலை வருக்கு மனுவையே அனுப்புகிறார். இந்த மனுவின் மீதுதான் 1976ஆம் ஆண்டு ஜனவரி திங்களில் கழக அரசு கலைக்கப்பட்ட பிறகு 3-2-1976 அன்றுதான் சர்க்காரியா கமிஷன் விசாரணையே அமைக்கப்பட்டது. அந்தக் கமிஷன் தனது முதல் அறிக்கையைத் தந்ததே 19-1-1977இல்தான். 1972ஆம் ஆண்டு நான் காவிரிப் பிரச்சினை குறித்த வழக்கை வாபஸ் பெற்றதற்கும் 1977ஆம் ஆண்டு சர்க்காரியா கமிஷனில் குற்றம் சாட்டப்பட்ட வழக்குகள் வாபஸ் பெற்றதற்கும் ஏதாவது சம்மந்தம் இருக்க முடியுமா? எத்தகைய பொய்யை முதல்வரும் நிதி யமைச்சரும் பேரவையிலே அவிழ்த்து விட்டிருக்கிறார்கள் என்பது இதிலிருந்து தெளிவாகத் தெரிகிறதா அல்லவா?

1976ஆம் ஆண்டு நியமிக்கப்பட்ட சர்க்காரியா கமிஷன் வழக்கை வாபஸ் வாங்கிக் கொள்ளச் சொல்லி எப்படி நான் 1971ஆம் ஆண்டு இந்திரா காந்தியோடு பேரம் பேசியிருக்க முடியும்?

அவையில் ஜெயலலிதா பேச்சில் குறுக்கிட்டு, எஸ்.ஆர். பாலசுப்ரமணியம் இதுபற்றிய தகவலைத் தெரிவித்தபோது ஜெயலலிதா, தன் தவறைத் திருத்திக் கொள்வதாகவும், சர்க்காரியா வழக்கு அல்ல என்றும், சி.பி.ஐ. வழக்கு என்றும் அதிலிருந்து தப்பிக்கத்தான் நடுவர் மன்ற வழக்கை வாபஸ் பெற்று தமிழக மக்களுக்கு கருணாநிதி துரோகம் இழைத்தார் என்றும் கூறியிருக்கிறார். எந்தத் தேதியில் காவிரி வழக்கு வாபஸ் பெறப்பட்டது? - எந்தத் தேதியில் சி.பி.ஐ. வழக்கு வாபஸ் பெறப்பட்டது என்பதை ஜெயலலிதா தெரிவிக்கத் தயாரா? அந்த இரண்டு தேதிகளும் ஒத்து வராவிட்டால் ஜெயலலிதா அந்தத் தவறுக்கு என்ன பரிகாரம் செய்து கொள்கிறார்? சி.பி.ஐ. வழக்கு திரும்பப் பெறப்பட்டது 1980ஆம் ஆண்டிற்குப் பிறகு! இந்திரா காந்தி கேட்டுக் கொண்டதின் பேரில் காவேரி வழக்கைத் திரும்பப் பெற்றது 1972ஆம் ஆண்டு. 1980ஆம் ஆண்டு வழக்கு வாபசுக்கு நான் எப்படி இந்திரா காந்தியிடம் 1971லேயே பேசியிருக்க முடியும்? இப்படியொரு சி.பி.ஐ. வழக்கு வரப்போகிறதென்று 9 ஆண்டுகளுக்கு முன்பே தெரியுமா? இந்த முரண்பாடு கூட தெரியாமல் முட்டாள்தனமாக வாதிடுகிறவர்கள் முதலமைச்சராக இருக்க தகுதியுண்டா?

இந்திரா காந்தி அம்மையாரிடம் நான் சரணாகதி அடைந்ததாகவும், காலில் விழுந்ததாகவும் ஜெயலலிதா கூறியிருக்கிறார். பேரவைத் தலைவராக இருந்தவரையே காலிலே விழச்சொல்லி அதைப் பார்த்து மகிழ்ந்தவர்தான் ஜெயலலிதா. காலில் விழும் கலாச்சாரம் எல்லாம் அவருக்குத்தான் உரியது. தேர்தலுக்கு முன்பு பதவிக்கு வருவதற்காக சரணாகதி அடைவதும், பிறகு வெற்றி பெற்றதும் அவர்களை எந்த அளவிற்கு அவமதிக்க முடியுமோ அந்த அளவிற்கு அவமதிப்பதும் ஜெயலலிதாவிற்குத்தான் வாடிக்கை. பா.ஜ.க.வுடன் கைகோத்து நின்று வெற்றி பெற்றதும், பிறகு அவர்களுடைய ஆட்சியைக் கலைத்ததும் இந்த ஜெயலலிதாதான். தற்போது த.மா.கா.வுடன் உறவு கொண்டு வெற்றி பெற்று பதவிக்கு வந்து விட்ட பிறகு அந்தக் கட்சியின் தலைவரின் மகனுக்குக்கூட ஒரு மாநிலங்களவை உறுப்பினர் பதவியைக் கொடுக்க மனம் வராமல் அவர்களைக் கழற்றி விட்டதும் இதே ஜெயலலிதாதான்! இன்று பேரவையில் மூப்பனாரைப் புகழும் ஜெயலலிதா, அன்று தேர்தலின்போது ராஜீவ் காந்தி கொலைக்கு மூப்பனாரும் காரணம் என்று சேலத்தில் நரசிம்மராவ் இருந்த மேடையிலேயே சொன்னவர்தான். எனவே நான் யாரிடமும் எப்போதும் சரணாகதி அடைந்ததில்லை. 1976ஆம் ஆண்டு இந்திரா காந்தி அம்மையார் நேரில் ஒரு அமைச்சரை அனுப்பி வைத்து, நெருக்கடி நிலை தீர்மானத்தைத் திரும்பப் பெற்றால் ஓராண்டுக் காலம் பதவியிலே நீடிக்கலாம் என்று கூறிய போது, நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தைத் திரும்பப் பெறமாட்டேன் என்று இந்திரா காந்திக்கு தகவல் அனுப்பியவன்தான் இந்தக் கருணாநிதி. 1980ஆம் ஆண்டு கடற்கரையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் இந்திரா காந்தி அம்மையாரே, காங்கிரஸ் கட்சியோடு உறவு வைத்திருந்த நிலையிலும், அது இல்லாத நிலையிலும் இரண்டிலும் உறுதியோடு செயல்பட்டவர்தான் கருணாநிதி என்று பேசியது இன்னமும் பழைய ஏடுகளில் பசுமையாக உள்ளது.

நடுவர் மன்றத்தை நாங்கள்தான் பெற்றுத் தந்தோம் என்று தி.மு.க.வினர் கூறிக் கொள்கிறார்கள். அது தவறு. எம்.ஜி.ஆர். தான் 1986ஆம் ஆண்டு நடுவர் மன்றம் வேண்டுமென்று மத்திய அரசுக்கு கடிதம் எழுதினார் என்றும் ஜெயலலிதா கூறியிருக்கிறார். ஆனால் அதற்கு முன்பே 17-2-1970 அன்று நடுவர் மன்றம் அமைத்திட வேண்டுமென்று தமிழக அரசின் சார்பில் மத்திய

அரசுக்கு தி.மு.கழக ஆட்சியிலே கடிதம் எழுதப்பட்டிருப்பதை அம்மையார் பொதுப்பணித் துறை செயலாளரிடமிருந்து கேட்டுப் பெற்று இப்போதாவது படித்துப் பார்ப்பது நல்லது. அது மாத்திரமல்ல; தி.மு.கழக ஆட்சியிலே 8-7-1971 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்திலே நடுவர் மன்றம் அமைத்திட வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்தி ஒரு தீர்மானமே நிறைவேற்றப்பட்டது.

அதற்குப் பிறகு எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்திலும் நடுவர் மன்றம் அமைக்க வேண்டுமென்று மத்திய அரசுக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது. அதை நான் இல்லை என்று மறுக்கவில்லை. காவேரிப் பிரச்சினையில் தி.மு.க. ஆட்சியின் அணுகுமுறைதான் அ.தி.மு.க. ஆட்சியின் அணுகுமுறை என்று எம்.ஜி.ஆர். அவர்களே திட்டவட்டமாகக் கூறியிருக்கிறார். இதெல்லாம் வந்தேறிய வசந்தசேனைகளுக்கு தெரிந்திருக்க நியாயமில்லை! எனவே நடுவர் மன்றம் வேண்டுமென்று முதலில் கடிதம் எழுதியதும், அவையிலே தீர்மானம் நிறைவேற்றியதும் தி.மு.கழக ஆட்சியிலேதான்!

பிறகு 1989ஆம் ஆண்டும் மீண்டும் தி.மு.கழக ஆட்சி அமைந்தபோது வி.பி. சிங் மத்தியிலே பிரதமராக இருந்த போது சட்டமன்றத்திலே ஒரு தீர்மானம், இனியும் எங்களால் பொறுத்துக் கொண்டிருக்க முடியாது, எனவே ஒரு நடுவர் மன்றத்தை நியமித்து அதன் தீர்ப்பை வழங்கச் செய்யுங்கள் என்று பிரதமர் வி.பி. சிங்கைக் கேட்டுக் கொண்டு நிறைவேற்றினோம். அந்தத் தீர்மானம் செயல்படுவதற்கு முன்பு தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயச் சங்கத்தின் சார்பில் திரு. ரெங்கநாதன் அவர்கள் ஒரு வழக்கை பதிவு செய்தார். அந்த வழக்கில் உச்ச நீதி மன்றத்தில் எம்.ஜி.ஆர். அரசும் தன்னை இணைத்துக் கொண்டிருந்தது. பின்னர் அந்த வழக்கு நடைபெற்ற நேரத்தில் தி.மு.க. ஆட்சி தமிழகத்திலே நடைபெற்ற காரணத்தால் பிரதமர் வி.பி.சிங் அவர்களோடு தொடர்பு கொண்டு நடுவர் மன்றம் அமைக்க நீங்கள் ஒத்துழைப்பு தாருங்கள் என்று கேட்டுக்கொண்டேன். உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருந்த காரணத்தினால் நீதிமன்றத்தில் மத்திய அரசு தனது கருத்தைத் தெரிவித்திட வேண்டிய நிலையில் இருந்தது. அந்த நேரத்தில் வி.பி.சிங் அவர்கள் தமிழக முதலமைச்சராக இருந்த என்னை தொலைபேசியில் தொடர்புகொண்டு உச்ச நீதி மன்றத்திலே

மத்திய அரசு தமிழக அரசின் கருத்தாக என்ன சொல்லலாம் என்று கேட்டபோது, இனிமேல் நாங்கள் பேச்சு வார்த்தைக்கு தயாராக இல்லை என்பதைத் தெளிவாக்கி விடுங்கள், அப்போது தான் எங்களுக்கு நடுவர் மன்றம் கிடைக்குமென்று கூறினேன். அப்போது பேரவையும் நடைபெற்றுக் கொண்டிருந்தது. உடனடியாக 24.4.1990 அன்று இனி பேச்சுவார்த்தை பயன்படாது, நடுவர் மன்றம் தேவை, மத்திய அரசை வலியுறுத்துகிறோம் என்று தீர்மானத்தை பேரவையிலே நிறைவேற்றி அதையும் பிரதமருக்கு அனுப்பி வைத்தோம். அதை வைத்துக் கொண்டு பிரதமர் வி.பி.சிங் மத்திய அரசின் வழக்கறிஞர் மூலமாக உச்ச நீதி மன்றத்திற்குத் தெரிவித்தார். அப்படி தெரிவித்தபிறகு தான் உச்ச நீதி மன்றம் இனி பேச்சுவார்த்தை இல்லையென்றால் நடுவர் மன்றம் அமைக்க உத்தரவிடுகிறோம் என்று 4-5-1990 அன்று மத்திய அரசுக்கு உத்தரவிட்டது. அப்போது நடைபெற்றதும் தி.மு.கழக ஆட்சிதான். அதன்பின்னர் 2-6-1990 அன்று மத்திய அரசு நடுவர் மன்றத்தை அறிவித்தது. அப்போது இருந்ததும் தி.மு.கழக அரசு தான். இந்த விளக்கங்களிலிருந்து நடுவர் மன்றம் வரக் காரணமாக இருந்தது தி.மு.கழக ஆட்சி என்பது பாமரருக்கும் புரியும். இதற்குப் பிறகும் 28-7-1990 அன்று தி.மு.கழக ஆட்சி இருந்த போது நடுவர் மன்றத்திடம் ஒரு இடைக்காலத் தீர்ப்பு வழங்க வேண்டுமென்றும், முழுமையாக விசாரித்து முடிவு தெரிவிக்க ஏழெட்டு ஆண்டுகளாகும் என்றும் கேட்டோம். நடுவர் மன்றம் 5-1-1991 அன்று இடைக்காலத் தீர்ப்பு வழங்க தங்களுக்கு அதிகாரம் இல்லை என்று கூறியது. உடனடியாக தி.மு.கழக ஆட்சியில் 10-1-1991 அன்றே உச்ச நீதி மன்றத்திலே இடைக்கால அறிக்கை தர நடுவர் மன்றத்திற்கு அதிகாரம் உண்டா என்பதற்காக ஒரு வழக்கு போட்டோம். ஆனால் 31-1-1991 அன்று தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டது. பிறகு ஆளுநர் ஆட்சியில் 26-4-1991 அன்று உச்ச நீதி மன்றம் இடைக்கால தீர்ப்பு வழங்க நடுவர் மன்றத்திற்கு அதிகாரம் உண்டு என்று தீர்ப்பு வழங்கியது. அதற்கொப்பத்தான் 25-6-1991 அன்று இடைக்கால ஆணை நடுவர் மன்றத்தில் தரப்பட்டது. ஜெயலலிதா தலைமையிலான ஆட்சி தமிழகத்திலே அமைந்து ஒரு மாத காலத்திலே இந்த ஆணை வரப்பட்டது. அதைத்தான் தான் பொறுப்பிற்கு வந்த சில நாட்களுக்கெல்லாம் வழங்கப்பட்ட ஆணையை தனது ஆட்சியிலே இடைக்கால ஆணை பிறப்பிக்கப்பட்டது என்று ஜெயலலிதா

நேற்று பேரவையிலே கூறி அது வருவதற்கே அவர்தான் காரணம் என்பதைப் போல பாவலா காட்டி அதற்கு அவரது கட்சி உறுப்பினர் களும் கைதட்டியிருக்கிறார்கள். தி.மு.கழகம் துரோகம் செய்து விட்டதாக இப்போது அவையில் பழி சுமத்துகிறார்களே, அவர்கள் காவேரி பிரச்சினையிலே செய்தது என்ன?

22-3-1991 அன்று மக்கள் குரல் இதழில் நடுவர் மன்றத் தீர்ப்பு வந்தால்கூட கர்நாடகாவில் அவர்களாகவே அணையைத் திறந்தால்தான் காவிரி நீர் தமிழ்நாட்டிற்கு வரும். கர்நாடகம் சம்மதித்து ஒரு நியாயமான அனுகூலமான முடிவை மேற்கொண்டால் தான் நடுவர் மன்றத் தீர்ப்பு பயனுள்ளதாக அமையும் என்று ஜெயலலிதா கூறிய செய்தி வெளிவந்துள்ளது. அதே செய்தி அவர்களுடைய நமது எம்.ஜி.ஆர். இதழிலும் 21-3-1991 அன்று வெளிவந்துள்ளது. இதை மறுக்க ஜெயலலிதாவால் முடியுமா? இது ஜெயலலிதா தமிழ்நாட்டுக்குச் செய்த துரோகமல்லவா?

அடுத்து; தமிழகத்திலே உள்ள அனைத்துக் கட்சிகள் சார்பில் பிரதமரைச் சந்தித்து காவேரி பிரச்சினைக்காக மனு கொடுக்கச் சென்ற போது, அந்தத் தூதுக் குழுவோடு வர மறுத்து, அ.தி.மு.க. தனியாகச் சென்று பிரதமரைச் சந்தித்து ஒரு மனு கொடுத்தது. அந்த மனுவிலே காவேரி ஒப்பந்தம் 1974 ஆம் ஆண்டோடு முடிந்து விட்டது என்று குறிப்பிட்டிருந்தார்கள். காவேரி ஒப்பந்தம் 74 ஆம் ஆண்டோடு முடிந்து விட்டது என்பதுதான் கர்நாடகாவின் வாதம். அந்த வாதத்தை அப்படியே ஒப்புக் கொள்ளும் வகையிலே பிரதமரிடம் கொடுத்த மனுவிலே எழுதிக் கொடுத்தவர்கள்தான் அ.தி.மு.க. வினர். காவேரி பிரச்சினையிலே துரோகம் செய்தது யார் என்பது இப்போதாவது விளங்குகிறதா?

9-6-92 அன்று மத்திய நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு. சுக்லா அவர்கள் முதலமைச்சராக இருந்த ஜெயலலிதாவிற்கு எழுதிய கடிதத்தில் காவிரி நடுவர் மன்றத்தின் இடைக்கால ஆணையை மனதிலே கொண்டு அதனை நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்பினை மத்திய நீர்க் குழுமத்திடம் சம்பந்தப்பட்ட மாநிலங்களின் ஒத்துழைப்போடு விடலாம் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. புதுவை மாநில முதல்வர் திரு. வைத்தியலிங்கம் இந்தத் திட்டத்தினை பொதுவாக ஒப்புக் கொண்டுள்ளார். மத்திய நீர்க் குழுமத்தின் தலைமைப்

பொறியாளர் தலைமையிலே அமையும் இணை ரெகுலேஷன் குழுக்களில், சம்பந்தப்பட்ட மாநில அரசுகளின் பிரதிநிதிகளும் இருப்பார்கள். இந்த ஏற்பாட்டிற்கு உங்களின் ஒப்புதலை உடனடியாகத் தெரிவித்தால் மிகவும் உதவியாக இருக்கும். அதற்குப் பிறகுதான் இந்த ரெகுலேஷன் குழுக்களை அறிவித்து ஆணைகளைப் பிறப்பிக்க இயலும் என்று தெரிவித்திருந்தார். 9-6-1992 அன்று மத்திய அமைச்சர் எழுதிய கடிதத்திற்கு ஒன்பது மாதங்கள் கழித்து 30-3-1993 அன்றுதான் முதல்வராயிருந்த ஜெயலலிதா ஒப்புதல் அளித்து பதில் எழுதுகிறார். அது மாத்திரமல்ல; முதலமைச்சர் கையெழுத்து போட்ட பிறகுகூட 14 நாட்கள் கழித்துத்தான் அது தபாலில் சேர்க்கப்பட்டுள்ளது. இவர்கள்தான் காவிரிப் பிரச்சினையிலே கருணாநிதி துரோகம் இழைத்து விட்டதாகக் கூறுகிறார்கள்.

பேரவையிலே ஜெயலலிதாவும் பொன்னையனும் பேசும்போது, இந்திரா காந்தி கர்நாடகாவிற்கு ஆதரவாக என் மீதுள்ள வழக்குகளை வாபஸ் பெறுவதற்காக காவிரிப் பிரச்சினைக்காக போடப்பட்டிருந்த வழக்கை வாபஸ் வாங்கச் செய்தார் என்று கூறினார்கள். அப்போது எஸ்.ஆர். பாலசுப்ரமணியம் குறுக்கிட்டு அப்போது கர்நாடக மாநிலத்தில் தேவராஜ் அர்ஸ் முதல்வராக இருந்தார் என்றும், இந்திரா காந்தி அவரிடம் எடுத்துக் கூறி 265 டி.எம்.சி. தண்ணீர் கொடுக்க முன் வந்ததாகவும், அதை ஏற்க மறுத்து தமிழகத்திற்கு கருணாநிதிதான் துரோகம் செய்து விட்டதாகவும் கூறியிருக்கிறார். பாவம்; அவருக்கு எப்போதுமே என் மீதும், தி.மு.க. மீதும் ஒரு அலர்ஜி! அதனால் அப்படி சொல்லியிருக்கிறார்.

ஜெயலலிதா கூறும்போது, இந்திரா காந்தி கர்நாடகாவிற்கு ஆதரவாகச் செயல்பட்டார் என்று கூறுகிறார். பாலசுப்ரமணியமோ இந்திரா காந்தி தமிழகத்திற்கு ஆதரவாக 265 டி.எம்.சி. தண்ணீரைக் கொடுக்கும்படி கர்நாடக முதல்வரிடம் கூறியதாகச் சொல்கிறார். இந்திரா காந்தி எப்போது கர்நாடக முதல்வரிடம் 265 டி.எம்.சி. தண்ணீரை தமிழகத்திற்கு தருமாறு கூறினார் என்பதற்கு ஏதாவது ஆதாரம் உள்ளதா? இதுவரை யாரும் கூறாத ஒரு கதையை அவர் அவிழ்த்துவிட்டிருக்கிறார். நடுவர் மன்றம் இடைக்கால ஆணையாகப் பிறப்பித்த 205 டி.எம்.சி. தண்ணீரையே ஏற்றுக் கொண்ட நான் எதற்காக 265 டி.எம்.சி. தண்ணீரை மறுத்தேன்

என்று அவர் கூற வேண்டும். கர்நாடக முதல்வராக திரு. தேவராஜ் அர்ஸ் அவர்கள் இருந்தபோது ஒப்பந்தம் பேச்சுவார்த்தையின் போது முற்றுப்பெறாமல் போனதற்கு முக்கியமான காரணம் எவ்வளவு நீர் என்பதிலே அல்ல. அவர்கள் தரக்கூடிய தண்ணீரின் அளவை மேட்டூரிலே கணக்கெடுப்பதா? அல்லது அவர்கள் சொல்லும் எல்லையிலே, கணக்கெடுப்பதா? என்பதைப் பொறுத்துத்தான். நாம் மேட்டூரில்தான் கணக்கெடுக்க வேண்டுமென்று கூறினோம். அதற்கு அவர்கள் ஒப்புக் கொள்ளாத காரணத்தினால்தான் அப்போது ஒப்பந்தம் முற்றுப்பெறவில்லை.

இந்த விபரங்கள் குறித்து காவிரிப் பிரச்சினையில் அன்று முதல் இன்று வரை நீண்ட காலமாக வாதிட்டு வந்த, வருகின்ற தமிழக அரசின் அதிகாரிகள், பொறியாளர்களிடம் கலந்து பேசினால் இன்னமும் சந்தேகம் ஏதேனுமிருந்தால் தெளிவு பெற முடியும். பொய்யும் புளுகும் அற்பாயுள் கொண்டவை; என்பதையும் உணர முடியும்!

அன்புள்ள,

மு.க.

11-4-2002

2720. பாமரர் நிறைந்த பட்டிக்காடு; பஞ்சாயத்து சபையில் அவர்களே பலர்!

உடன்பிறப்பே,

பாமரர் நிறைந்த பட்டிக்காடு –
பஞ்சாயத்து சபையில் அவர்களே பலர்!
இருக்கும் ஒன்றிரண்டு நல்லோர் பதறி;
எதிர்த்துக் கூற எழுந்து நின்றால்,
இழுத்துத் தள்ளுவர் எரியும் நெருப்பில்!
கொழுத்துத் திரிவோர் கூட்டம் அல்லவா?
பாமரர் நிறைந்த பட்டிக்காடு –
பஞ்சாயத்து சபையில் அவர்களே பலர்!

★

ஆய கலைகள் அனைத்தும் அரசியலில்
அறிந்தோராயினும் அவர் தம்
வாயை அடைத்து வலையில் மாட்டுவர்!
‘‘மாயை ஒன்று மண்டபத்து நடுவில் – உருகப்
பேசும்; உண்மையை ஒளிக்கும்!
கருவிலிருந்தே அது கற்ற வித்தை!
பாமரர் நிறைந்த பட்டிக்காடு –
பஞ்சாயத்து சபையில் அவர்களே பலர்!

ஊர் வாழ உருப்படியாய்த் திட்டமில்லை
சீர் மேவி தான் மட்டும் வாழ்வதற்கு,
ஊழல் விளைப்பதுதான் மாயைக்கு வேலை!
உதவாது இது என்றாலோ உரித்திடுவார் தோலை!
ஒவ்வொரு நாளும் புதுப்புது சட்டம் – இன்னும்,
உறக்கம் கலையா காரணத்தால் அடிக்கின்றார்
கொட்டம்!’’

★

பாமரர் நிறைந்த பட்டிக்காடு –
பஞ்சாயத்து சபையில் அவர்களே பலர்!
பத்தினிக் கண்ணகி அன்று கனன்று
மதுரையை எரித்தாளாம்; அவள்
சிலையை நானும் உடைக்கிறேன் என்று
மாயை சிரித்துச் சிலிர்த்தபோதும்;
முதுகுக்கு எலும்பை முட்டுக் கொடுத்து
முட்டாள் கூட்டம் கூனிக் கிடக்குதாம்!
பாமரர் நிறைந்த பட்டிக்காடு
பஞ்சாயத்து சபையில் அவர்களே பலர்!

★

‘‘இந்தக் கிராமத்தையே இலையில் இட்டு
வெந்ததும் வேகாததுமாய்த் தின்று தீர்ப்பேன்
எந்தன் முடிவு இதுதான் என்று
அந்த மாயை சொன்ன போதிலும்
ஆதரவு அளித்துக் காலில் வீழ்ந்திட
ஆமாம் சாமிகள் அப்போதும் தயார்!’’
பாமரர் நிறைந்த பட்டிக்காடு –
பஞ்சாயத்து சபையில் அவர்களே பலர்!

★

முரணாகப் பேசுவதே வேதம் என நவின்று
முருங்கைமரம் வீடு கட்டப் பயன்படுமென்பார்!
அரணாக மெழுகுவத்திச் சுவர் ஒன்று வைத்தால்
அக்கினியும் அஞ்சியோடி ஒளிந்துவிடும் என்பார்!
ஆயிரம் பாபங்கள் நான் செய்வேன் என்பார் –
ஆண்டவன் என் பக்கம்!... அதுவுமில்லை; அந்த
ஆண்டவனும் நானேதான் என்பார்!
பாமரர் நிறைந்த பட்டிக்காடு –
பஞ்சாயத்து சபையில் அவர்களே பலர்!

★

எல்லோரும் கைதூக்கும் பதுமைகளாய் இருந்து –
இடது கை, வலதுகை இருகையும் தூக்கும்போது
பொல்லாத மாயைக்குப் பொங்காதோ பூரிப்பு?
நில்லாத நெடுஞ்சுவராய்ச் சரிவதற்குள்;

கல்லாரும் கற்க வேண்டும்; அறவழியில்,
கயமையினை விரைவினிலே மாய்ப்பதற்கு!
பாமரர் நிறைந்த பட்டிக்காடு –
பஞ்சாயத்து சபையில் அவர்களே பலர்!

★

பொய் புளுகு பொல்லாங்கு பொச்சாப்புக்களை
மெய் போலத் தோற்றம் காட்டி மேடையேறி
முழக்கிவிட்டு;
'கையில் ஆதாரமில்லாமல் கதை விடாதே என்று
கணக்காகப் புள்ளிவிபரம் வருடம் மாதம் தேதியுடன்
கச்சிதமாய் எடுத்துக்காட்டி மடக்கிவிட்டால்;
வாய் தவறி வந்துவிட்டதென்று வாய்ஜாலம்
செய்திடுவார்!'
பாமரர் நிறைந்த பட்டிக்காடு –
பஞ்சாயத்து சபையில் அவர்களே பலர்!

★

உண்மையை இன்மை என்று காட்டி
வெண்ணையைச் சுண்ணாம்பென்றுரைத்தால்;
கண்ணையே மூடிக் கொண்டு ஆமாம், அதிலேதும்
ஒழுங்குமீறல் இல்லை என மாயைக்குச் சார்பாக
தீர்ப்பளிப்பார்
தன்னையே விற்றுவிட்டத் தன்மானமற்ற கூட்டம்
தங்கத்தைப் பழிக்கின்ற தருதலைகள் ஆட்டம்
பாமரர் நிறைந்த பட்டிக்காடு –
பஞ்சாயத்து சபையில் அவர்களே பலர்!

அனபுளள,

மு.க.

13-4-2002

2721. மாபெரும் துரோகமா? மனச்சாட்சி பதில் கூறுமா?

உடன்பிறப்பே,

ஆட்சிகள் வரலாம், போகலாம்; ஆனால் மரபுகள், விதிகள், சட்டங்கள் என்றைக்கும் நிலைத்திருக்கக் கூடியவை. அதைப் போலவே அமைச்சர்கள் வருவார்கள், போவார்கள்; ஆனால் அதிகாரிகள் என்றும் இருக்கக் கூடியவர்கள். ஆட்சியிலே உள்ளவர்கள் மரபுகளுக்கு, விதிகளுக்கு மாறாக நடக்க முற்பட்டால்கூட அதிகாரிகள் அதைச் சுட்டிக் காட்டிடத் தவறக் கூடாது.

எதற்காக இந்தப் பீடிகை என்று ஆச்சரியப்பட வேண்டாம். சட்டப் பேரவையில் முதல் அமைச்சரோ, அமைச்சர்களோ தங்கள் துறைகளின் சார்பில் மக்கள் நலனுக்காக ஏதாவது அறிவிப்பினை பேரவை நடந்து கொண்டிருக்கின்ற போது வெளியிட விரும்பினால் விதி 110இன் கீழ் பேரவையிலே படிக்கலாம். அதுவும் பேரவைத் தலைவருக்கு கடிதம் எழுதி, படிக்கப்படக் கூடிய அறிக்கையின் நகல் ஒன்றையும் இணைத்துக் கொடுத்து, பேரவைத் தலைவர் அதற்கு அனுமதியளித்த பிறகு அதனை அவையிலே படிக்க வேண்டும். அந்த அறிக்கையின் மீது எந்த உறுப்பினரும் விவாதிக்கவோ கேள்வி கேட்கவோ கூடாது. எனவே அந்த அறிக்கையில் யாரையும் குற்றஞ்சாட்டும் வகையில் எந்த வாக்கியங்களும் இடம் பெறக் கூடாது. அப்படி இடம் பெறாமல் பார்த்துக் கொள்ளவேண்டிய பொறுப்பு பேரவையின் தலைவருக்குத்தான் உண்டு.

ஆனால் நேற்றையதினம் பேரவையில் திரைப்படத் துறை குறித்த ஒரு அறிக்கையினை முதலமைச்சர் படித்திருக்கிறார். அந்த அறிக்கையிலே கடந்த கால ஆட்சியிலே திரைப்படத் துறைக்கே தி.மு.க. ஆட்சி ஏதோ மாபெரும் துரோகம் செய்து விட்டதைப் போலவும், அதை ஜெயலலிதாதான் தற்போது தீர்த்து வைப்பதாகவும் தெரிவித்திருக்கிறார். விதி 110இன்

கீழ் அந்த அறிக்கை படிக்கப்பட்ட காரணத்தினால் கழக அரசு பற்றி எழுப்பப்பட்ட குற்றச் சாட்டிற்கு பதிலளிக்க வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. அதைச் சுட்டிக் காட்ட வேண்டிய பேரவைத் தலைவர் சுட்டிக்காட்ட வில்லை. தடுத்திடவுமில்லை. அவைக்குறிப்பிலிருந்து நீக்கிடவுமில்லை. பேரவைத் தலைவருக்கு இவற்றை யெல்லாம் சுட்டிக்காட்ட வேண்டிய பேரவையின் செயலாளரும் சுட்டிக்காட்டவில்லை. அவர் எப்படி சுட்டிக்காட்டுவார்? அவர் முறையாக, பேரவையின் விதிமுறைப்படி சீனியாரிட்டி தகுதி அடிப்படையிலே நியமிக்கப்பட்டவராக இருந்தால் அவர் சொல்லிக் கொடுத்திருப்பார்.

விதிமுறைகளை முறையாக சுட்டிக்காட்டாதவரைத்தான் செயலாளராக நியமிக்க வேண்டும் என்பதற்காகவே ஓய்வு பெற்று வீட்டிலே படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தவரை அழைத்து வந்து சீனியாரிட்டி அடிப்படையிலே செயலாளராக இருந்த ஒருவரை ஒதுக்கி வைத்து விட்டு முறைகேடாக நியமிக்கப்பட்டுள்ளவர் ஆலோசனை வழங்கும்போது மரபாவது? விதிமுறையாவது? முதலமைச்சர் படித்த அறிக்கையிலே தி.மு.கழக அரசு மீது சாட்டப் பட்டுள்ள குற்றச்சாட்டு முறையானது தானா? திரைப்படத் துறையிலே நிரம்ப அனுபவப்பட்ட எத்தனையோ மூத்தவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் தங்களுடைய மனச்சாட்சிபடி சொல்லட்டும். உண்மையில் தி.மு.கழக ஆட்சி திரைப்படத் துறைக்கு துரோகம் செய்த ஆட்சியா? கடந்த ஐந்தாண்டு காலத்தில் எத்தனை முறை அவர்கள் என்னைச் சந்தித்திருப்பார்கள்? அவர்களது கோரிக்கைகளை எத்தனை முறை தெரிவித்திருப்பார்கள்? அவற்றையெல்லாம் மதிய உணவுகூட அருந்தாமல் மணிக்கணக்கில் உட்கார்ந்து பேசி முடிவு காண நான் முயற்சித்தது உண்டா? இல்லையா? நிறைவேற்றியது உண்டா? இல்லையா?

திரைப்படத் துறைக்காக தி.மு.கழக ஆட்சி ஐந்தாண்டு காலத்தில் என்ன செய்தது என்பதற்கான சில குறிப்புகளை இங்கே தந்திருக்கிறேன். அந்தத் துறையினர் அதை மறந்து விட்டார்களோ என்னவோ, இதைப் படிக்கும் பொதுமக்களாவது உண்மையைப் புரிந்து கொள்ளட்டுமே என்பதற்காக!

குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தமிழ்ப் படங்களை ஊக்குவிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு தி.மு. கழக

ஆட்சியிலேதான் தகுதி வாய்ந்த தமிழ்த் திரைப்படங்களுக்கு அவை வெளியிடப்பட்டது முதல் நான்கு வாரங்கள் வரை கேளிக்கை வரியிலிருந்து விலக்கு அளிக்கும் திட்டம் முதன் முதலாக 12-12-1996 முதல் அறிமுகப்படுத்தப்பட்டது. அந்தத் திட்டத்தின்கீழ் மை இந்தியா, சாதி சனம், புதல்வன், குடும்பச் சங்கிலி, எல்லாம் பணத்துக்காக, நீதியின் வாசலிலே ஆகிய திரைப்படங்களுக்கான கேளிக்கை வரியிலிருந்து நான்கு வாரக் காலத்திற்கும், ஹவுஸ்புல், உயிரின் உயிரே, காந்தி மற்றும் பாரதி ஆகிய திரைப்படங்களுக்கு காலவரையறையின்றியும் முழு வரிவிலக்கு அளிக்கப்பட்டது.

குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான தமிழ்த் திரைப்படங்களுக்கு 17-7-1996 முதல் தி.மு. கழக ஆட்சியிலே தான் தலா ஐந்து இலட்சம் ரூபாயாக உயர்த்தி மானியத் தொகை வழங்கப்பட்டது. 1994ஆம் ஆண்டே திரையிடப்பட்ட படங்களுக்கு ஜெயலலிதா ஆட்சி நடைபெற்ற போது மானியத் தொகை வழங்கப்படவில்லை. 1996இல் தி.மு.கழக அரசு அமைந்த பிறகு திரைப்படத் துறையைச் சேர்ந்தவர்கள் முறையிட்டதின் பேரில், 94ஆம் ஆண்டு திரையிடப்பட்ட படங்களிலே தேர்வு செய்யப்பட்ட 35 படங்களுக்கும், 1995ஆம் ஆண்டிற்கான 40 படங்களுக்கும், 1996ஆம் ஆண்டிற்கான 28 படங்களுக்கும், 1997ஆம் ஆண்டிற்கான 11 படங்களுக்கும், 1998ஆம் ஆண்டிற்கான 18 படங்களுக்குமாக மொத்தம் 4 கோடியே 55 இலட்சம் ரூபாய் மானியத் தொகையாக திரைப்படத் துறைக்கு மாபெரும் துரோகம்(?) செய்ததாகக் கூறப்படும் தி.மு.க. ஆட்சியிலே தான் வழங்கப்பட்டது.

தொல்பொருள் ஆய்வுத் துறையின் கட்டுப்பாட்டில் வரும் புராதனச் சின்னங்கள் மற்றும் கலைச் சின்னங்கள் உள்ள இடங்களில் படப்பிடிப்புகளை நடத்திட, படத் தயாரிப்பாளர்கள் செலுத்தி வந்த படப்பிடிப்புக் கட்டணம், ஒரு இடத்திற்கு ஒரு நாளைக்கு 5 ஆயிரம் ரூபாய் என்று இருப்பது மிகவும் அதிகம் என்று திரைப்படத் துறையினர் முறையிட்டதை ஏற்றுக் கொண்டு திரைப்படத்துறைக்கு மாபெரும் துரோகம்(?) செய்து விட்ட தி.மு.க. ஆட்சியிலேதான் அதை 5 ஆயிரம் ரூபாய் என்பதற்குப் பதிலாக ஆயிரம் ரூபாய் என்றும், ஏனைய இடங்களுக்கு 2,500 ரூபாய் என்பதை 500 ரூபாய் என்றும் 1996இல் குறைக்கப்பட்டது.

தமிழ்த் திரைப்படங்களில் நடிக்கும் சண்டைப் பயிற்சியாளர்கள் சண்டைக் காட்சியின்போது உயிரிழக்க நேர்ந்தால் அவர்களுடைய குடும்பத்திற்கு ஒரு இலட்ச ரூபாயும், செயல்பட முடியாத அளவுக்கு காயமடைந்து ஊனமடைய நேர்ந்தால் அவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாயும் நிவாரண உதவியாக வழங்கும் திட்டமும் தி.மு. கழக ஆட்சியிலேதான் 1996ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1989ஆம் ஆண்டுக்கு முன்பு ராஜா சாண்டோ விருது மட்டுமே திரைப்படத் துறையிலே வழங்கப்பட்டு வந்தது. 15-6-89 அன்று கழக அரசில்தான் கலைவாணர் பெயரிலும், எம்.ஜி.ஆர். பெயரிலும் விருதுகள் வழங்க ஆணையிடப்பட்டது. பிறகு 22-11-1990இல் தி.மு.கழக ஆட்சியிலேதான் அறிஞர் அண்ணா, பாவேந்தர் பாரதிதாசன் ஆகியோர் பெயரில் வித்தகர் விருதுகள் வழங்கிட ஆணையிடப்பட்டது. 20-3-1997இல் தி.மு.கழக ஆட்சியிலேதான் கவியரசு கண்ணதாசன் பெயராலும், 10-1-2000இல் நடிகர் திலகம் சிவாஜி பெயராலும், 30-8-2000இல் தியாகராஜ பாகவதர் பெயராலும் வித்தகர் விருதுகள் வழங்கிட ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. 1994 முதல் அ.தி.மு.க. ஆட்சியிலே வழங்கப்படாமல் கிடப்பில் போடப்பட்ட வித்தகர் விருதுகளும் 1996க்குப் பின்தான் தி.மு.கழக ஆட்சியிலே தான் வழங்கப்பட்டன. ஆம்; இதுவும் ஜெயலலிதா கூற்றுப்படி ஒரு மாபெரும் துரோகம்தானே!

தமிழ்நாடு அரசின் திரைப்பட விருதுகள் வழங்கும் திட்டத்தின்கீழ் சிறந்த படங்களுக்கு முதல் பரிசு, இரண்டாம் பரிசு, மூன்றாம் பரிசு, சிறப்புப் பரிசு என வழங்கப்பட்டு வரும் பரிசுத் தொகையான ரூ.1,25,000/-, ரூ. 75,000/-, ரூ. 50,000/- ஆகியவற்றை 1999ஆம் ஆண்டு முதல் முறையே ரூ. 2,00,000, ரூ. 1,00,000, ரூ. 75,000, மற்றும் ரூ. 75,000 ஆக உயர்த்தி வழங்க அரசு ஆணையிட்டது தி.மு.கழக ஆட்சியிலே தான். புதிய படங்களுக்குக் கேளிக்கை வரியை 54 விழுக்காட்டில் இருந்து 40 விழுக்காடாக 1989ஆம் ஆண்டில் கழக அரசுதான் குறைத்தது. மீண்டும் தி.மு.கழக ஆட்சியிலே தான் 1.8.1996 முதல் 40 விழுக்காட்டில் இருந்து 30 விழுக்காடாகவும், 2000ஆம் ஆண்டில் 25 விழுக்காடாகவும், மேலும் குறைக்கப்பட்டது. அப்போதெல்லாம் என்னைச் சந்தித்து நன்றி தெரிவித்த திரைப்படத் துறையைச்

சேர்ந்தவர்கள் மனச்சாட்சி என ஒன்றிருந்தால், கழக ஆட்சியிலே திரைப்படத் துறைக்கு மாபெரும் துரோகம் இழைக்கப்பட்டதாக தற்போது முதலமைச்சர் ஜெயலலிதா சட்டப்பேரவையில் குற்றம் சாட்டியதை ஒப்புக் கொள்வார்களா என்று தெரியவில்லை!

பத்தாண்டுகளுக்கு முன் வந்த திரைப்படங்களுக்கு கேளிக்கை வரி 40 விழுக்காட்டிலிருந்து 20 விழுக்காடாகக் குறைக்கப்பட்டதும் தி.மு.கழக ஆட்சியிலேதான். மொழிமாற்றுப் படங்களுக்கும், பிற தமிழ்ப் படங்களுக்குக் குறைக்கப்பட்டது போல் கேளிக்கை வரி 1-8-98 முதல் கழக ஆட்சியிலேதான் குறைக்கப்பட்டது. இதே போல இணக்க வரி முறையும் அதற்கு ஏற்றாற்போல் குறைக்கப்பட்டது. இவ்வரிக் குறைப்புகள் மூலம் திரைப்படத் துறைக்கு 1-8-1998 முதல் ஆண்டுக்கு 40 கோடி ரூபாய் அளவுக்கும், 12-6-2000 முதல் ஆண்டுக்கு 60 கோடி ரூபாய் அளவுக்கும் வரிச் சலுகைகள் தமிழ்த் திரைப்பட வரலாற்றிலேயே இல்லாத வகையில் தி.மு.கழக ஆட்சியிலேதான், ஆம் திரைப்படத் துறைக்கு மாபெரும் துரோகம் செய்த ஆட்சிக் காலத்திலேதான், (?) வழங்கப்பட்டன.

விற்பனை வரிச் சட்டத்தின்படி திரைப்படங்களுக்கான உரிமை மாற்றம் மீது 1-4-1986 முதல் 11.11.1999 வரை செலுத்த வேண்டிய வரியினைத் தள்ளுபடி செய்ததுடன், உரிமை மாற்றத்திற்கான விற்பனை வரியை 12-11-1999 முதல் 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடு எனவும் தி.மு.கழக ஆட்சியிலேதான் குறைக்கப்பட்டது. 1-4-2000 முதல் திரைப்படங்கள் குத்தகை மீதான 4 விழுக்காடு விற்பனை வரி அறவே நீக்கப்பட்டது.

தமிழ்நாடு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி தொழில் நுட்பப் பயிற்சி நிறுவனத்திற்கு 1996-97 ஆம் ஆண்டுவரை பட்டயம் பெற படங்கள் தயாரிப்பதற்காக பத்து இலட்சம் ரூபாய் மட்டுமே வழங்கப்பட்டதற்கு மாறாக 1997-98 ஆம் ஆண்டில் பதினைந்து இலட்சம் ரூபாயாகவும், 1998-99 ஆம் ஆண்டில் 17 இலட்சம் ரூபாயாகவும் உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டதும் கழக ஆட்சியிலேதான். இந்த நிறுவனத்திற்கு 1991-96 ஆட்சிக் காலத்தில், ஜெயலலிதா முதல்வராக இருந்த போது கருவிகள் வாங்குவதற்காக 26.74 இலட்சம் மட்டுமே வழங்கப்பட்டது. ஆனால் 1996-2000 ஆம் ஆண்டுவரை தி.மு.கழக ஆட்சிக்

காலத்திலே 126.13 இலட்சம் ரூபாய் நவீனக் கருவிகள் வாங்குவதற்காக அரசின் சார்பில் வழங்கப்பட்டது.

இத்தனை நன்மைகளை திரைப்படத்துறைக்கு செய்து சாதனை புரிந்துள்ள தி.மு.க. ஆட்சியில் ஒரே ஒரு குறை; திரையரங்குகளில் நியாயமான நுழைவுக் கட்டணத்தை அதிகாரிகளின் ஒப்புதல் பெற்று இஷ்டத்துக்கு ஏற்றி பொதுமக்களை தண்டிப்பதற்கும், அதனால் லஞ்ச ஊழலுக்கு வழிவகுப்பதற்கும் கழக ஆட்சி ஒத்துக் கொள்ளவில்லை. திரையுலகினர் விருப்பத்திற்கும் கோரிக்கைக்கும் மாறாக; திரைப்பட நகருக்கு எம்.ஜி.ஆர். பெயரை வைக்காமல் ஜெயலலிதா நகர் எனத் தன் பெயரை வைத்துக் கொண்டவர் இன்று நம்மைப் பார்த்து திரையுலகிற்கு துரோகம் செய்ததாகக் கூறுகிறார். ஏன் தெரியுமா? திரையுலகினர் வேண்டுகோளை ஏற்று ஜெ பெயரை மாற்றி எம்.ஜி.ஆர். திரைப்பட நகர் என அந்நகருக்கு தி.மு.க. ஆட்சியில் பெயர் வைத்து விட்டதால் வந்துள்ள கோபம்! அதன் எதிரொலிதான் தி.மு.க. ஆட்சியில் திரைப்படத் துறைக்கு மாபெரும் துரோகம் என்று ஜெயலலிதா; தனது மனம் போன போக்கில் விதிகளை மீறி அவையில் குறிப்பிட்டதாகும்.

அன்புள்ள,

மு.க.

14-4-2002

2722. உழவர் துயர் துடைக்க ஓரணியில் திரள்வீர்!

உடன்பிறப்பே,

உன்னையும் உழவர் குலப் பெருமக்களையும் அழைக்கிறது தஞ்சை! மன்னிக்கவும்; உன்னையும் உழவர் குலத்தினரையும் தனித்தனியே பிரித்துக் குறிப்பிடுகிறேன் என்பதற்காக; சங்கீதத் தொழில் புரிந்த நேரம் போக மீதி நேரமெல்லாம்; அதை விட அதிக நேரம் கூட என் தந்தை முத்துவேலர் கலப்பையும் கையுமாகக் கழனியிலேயே கிடப்பார். நடவு செய்வோர் நடுவினிலேயும் அறுவடை நடத்துவோர் மத்தியிலும் என் தாயார் அஞ்சுகத்தம்மையார் எத்துணை உறசாகத்துடன உழவுத் தொழிலில் ஈடுபட்டார் என்பதையும்; பள்ளிக்குச் சென்ற வேளை தவிர எஞ்சிய வேளைகளில் எனக்கும், எனை வளர்த்த என் அன்புச் சகோதரிகளுக்கும் வயல் வெளியிலும் வரப்பு ஓரங்களிலும்தான் வேலை!

நான் மட்டுமல்ல; உன் போன்ற உடன்பிறப்புக்களில்; நூற்றுக்கு அறுபது பேர் - அதிலும் தஞ்சை, திருச்சி போன்ற நஞ்சை குலுங்கும் பகுதிகளில் நூற்றுக்கு நூறு பேரும் உழவர் குடும்பத்தினரேதான்! உழைக்கும் வர்க்கத்தினரேதான்!

“பார் முழுதும் ஏர் முனையிலே
உழவன் பாட்டிலே கொண்டாட்டம் போடுது”

என உடுமலை நாராயணக் கவிராயர் பாட்டெழுதினார் - அந்தக் கவிராயர் பெயர் நிலைக்க அவர் பிறந்த ஊரில் மணி மண்டபம் கட்டித் திறந்தேன்.

காடு விளைஞ்சென்ன மச்சான்;
நமக்குக் கையும் காலும்தானே மிச்சம்

எனக் கேள்வியெழுப்பி உழவர்க்காக வாதாடிய தம்பி பட்டுக்கோட்டைக்கும் மணிமண்டபம் அமைத்து மகிழ்ந்தேன்.

உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃதாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து

என்று, உலகில் வாழ்கின்ற அனைவர்க்கும் உழுவோரே அச்சாணி என்று பசுமரத்தாணி போலப் பாடிப் பதிய வைத்த அறிவுப் பகலவன் அய்யன் வள்ளுவர்க்கு குமரியில் சிலை முதல் சென்னையில் கோட்டம் வரை கண்டு களித்துள்ளேன்.

ஏன்? எதற்காக? எத்தனையோ வழிமுறை குறித்து இவர்கள் எல்லாம் ஞான ஒளி வழங்கியிருக்கிறார்கள் எனினும்; உழவே தலை எனும் ஒப்பற்ற உண்மையை புலப்படுத்தியிருக்கிறார்கள் என்பதும் ஒரு தலையாய காரணமாகும்.

அந்த உழவர்களுக்காகக் கழக ஆட்சியில் ஒவ்வொரு நிமிடமும் சிந்தித்து சிந்தித்து; காவேரிப் பிரச்சினையெனும் உரிமைப் பிரச்சினைக்காக சுமார் 35 ஆண்டுகளாக வாதாடிப் போராடி, இன்னமும் அந்தப் போராட்டத்தை நிறுத்தாமல்; முழு வெற்றி கிடைத்திடவும் காவேரி ஆணையத்தின் குறிக்கோள் நிறைவேறவும் செயல்பட்டுக் கொண்டிருப்பதை உழவா பெருமக்கள் உணராமல் இல்லை - அதிலும் தஞ்சையில் நடைபெற இருக்கிற உழவர்கள் மாநாட்டில் கலந்து உரையாற்ற இருக்கிற என் அருமை நண்பர் விவசாயிகளின் காவலர் மன்னார்குடி ரங்கநாதன் அவர்களைப் போன்றோர் தெளிவாகவே அறிவர்.

தஞ்சாவூர், திருச்சி, கடலூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை போன்ற காவேரி நதிதீரத்துப் பகுதிகளிலே உள்ள விவசாயிகள் உழுது பாடுபட்டு உற்பத்தி செய்த நெல்லை கழக அரசு ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது வியாபார நோக்கிலே பார்க்காமல், அவர்களுடைய நெல்லுக்கு உரிய விலை கிடைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு ஊக்கத் தொகை கொடுத்து எவ்வளவு நெல் ஆனாலும் அவ்வளவையும் கொள்முதல் செய்து வந்ததை தமிழகமே நன்கறியும். கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த காலத்தில் விவசாயிகளுக்கு அவர்களின் நெல் கொள்முதல் செய்யப்பட்டதிலே எந்தப் பிரச்சினையும் ஏற்பட்டதே கிடையாது. 1995-96 ஆம் ஆண்டு ஜெயலலிதா ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோது நெல் கொள்முதல் குவிண்டால் ஒன்றுக்கு மோட்டா ரகம் 360 ரூபாய் என்றும் சன்ன ரகம் 375 ரூபாய் என்றும்தான் விலை இருந்தது. ஆனால் தி.மு.கழக ஆட்சியின்

இறுதி ஆண்டிலே 1-9-2000ஆம் ஆண்டு நெல் கொள்முதல் குவிண்டால் ஒன்றுக்கு மோட்டா ரகம் 510 ரூபாய் என்றும் சன்ன ரகம் 540 ரூபாய் என்றும் விலை நிர்ணயிக்கப்பட்டு அதாவது கடந்த கால ஜெயலலிதா ஆட்சியைவிட குவிண்டால் ஒன்றுக்கு மோட்டா ரகத்திற்கு 150 ரூபாயும் சன்ன ரகத்திற்கு 165 ரூபாயும் விலை அதிகமாகத் தரப்பட்டு கொள்முதல் செய்யப்பட்டது.

அதுதவிர, காவேரிப் பாசனப் பகுதிகளில் கொள்முதல் செய்யும்போது சாதாரண மற்றும் முதல் தர நெல்லுக்கு மத்திய அரசு நிர்ணயம் செய்த விலையை விட குவிண்டால் ஒன்றுக்கு 40 ரூபாய் என்றும் 35 ரூபாய் என்றும் இடை நிகழ் செலவாக கழக அரசினால் விவசாயிகள் அறுவடை செய்த அவ்வளவு நெல்லுக்கும் வழங்கப்பட்டது. இரண்டாம் தர நெல்லுக்கு தர வெட்டுத் தொகை ரூ. 15இல் இருந்து 5 ரூபாயாகவும், மூன்றாம் தர நெல்லுக்கு 20 ரூபாயிலிருந்து 10 ரூபாயாகவும் கழக ஆட்சியிலே குறைக்கப்பட்டு அனைத்து நெல்லும் கொள்முதல் செய்யப்பட்டது.

1995-96இல் ஜெயலலிதா ஆட்சியில் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லின் அளவு 2.45 இலட்சம் டன்; ஆனால் 1999-2000ஆம் ஆண்டில் தி.மு.கழக ஆட்சியில் கொள்முதல் செய்யப்பட்ட நெல்லின் அளவு 12.13 இலட்சம் டன். இது 2000-2001இல் 15 இலட்சம் டன்னுக்கு மேல் உயர்ந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்போது காவேரி நதி தீரத்து நெற்களஞ்சியத்தின் நிலை என்ன? இந்த ஆண்டு ஆட்சிக்கு வந்துள்ள அ.தி.மு.க. அரசு பதவிக்கு வந்ததும் வராததுமாக தி.மு.கழக ஆட்சியிலே ஏராளமாக நெல்லை கொள்முதல் செய்து இருப்பு வைத்துவிட்டுப் போய்விட்டதாகவும் அதனால் அரசில் நிதிப் பற்றாக்குறை ஏற்பட்டு விட்டதாகவும் குறை கூறினார்களே தவிர, விவசாயிகளின் நலன்களைக் கருதி செய்யப்பட்ட செயல் அது என்று நினைத்துப் பார்க்கவில்லை. அந்த எண்ணத்தின்படி இந்த ஆண்டு விவசாயிகள் உற்பத்தி செய்த நெல்லை முறையாகக் கொள்முதல் செய்ய முன்வராமல், தொடக்கம் முதலே கொள்முதலில் கவனம் செலுத்தாமல் விவசாயிகளை பரிதவிக்கவிட்டு விட்டார்கள். கழக விவசாய அணியின் சார்பில் காவேரி நதி தீரத்து விவசாயிகளின் நலன் கருதி அவர்களின்

கோரிக்கைகளை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டு வர வேண்டுமென்பதற்காக கடந்த ஜனவரி திங்கள் 27ஆம் தேதி தஞ்சை, திருவாரூர், நாகை மாவட்டங்களில் கண்டனப் பொதுக் கூட்டங்களையும், மார்ச் திங்கள் 18ஆம் தேதி முதல் 22ஆம் தேதி வரை அந்த மாவட்டங்களில் கண்டன ஆர்ப்பாட்டங்களையும் நடத்தியதோடு, மார்ச் 23ஆம் தேதியன்று காவேரி நதி தீரத்து மாவட்டங்களில் முழு அடைப்பு போராட்டத்தையும் நடத்தியுள்ளது. இவற்றின் தொடர்ச்சியாகத்தான் வரும் 20ஆம் தேதியன்று தஞ்சை திலகர் திடலில் உழவர் வாழ்வுரிமை மாநாடு தம்பி கோ.சி. மணி தலைமையில் நடைபெறுகிறது. மாநாட்டை முன்னின்று நடத்துகின்ற முயற்சிகளுக்கு முன்னோடியாக தம்பி கே.பி. இராமலிங்கம், தி.மு.க. விவசாய அணியின் திறன்மிகு செயலாளர் உம்மையெல்லாம் அழைக்கின்றார். அந்த மாநாட்டில் கழக முன்னணியினரும், மத்திய அமைச்சர்களும், தமிழக முன்னாள் அமைச்சர்களும், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களும், விவசாய சங்கத் தலைவர்களும், தோழமைக் கட்சியினரும், கழகக் கலைஞர்களும் பங்கேற்கவுள்ளார்கள். தமிழக அரசின் நிதி நிலை அறிக்கையைத் தயாரிக்கும் நேரத்தில் விவசாயிகளின் பிரதிநிதிகளை யெல்லாம் சென்னைக்கு அழைத்து வைத்துப் பேசிய கழக அரசுக்கும், தற்போது விவசாயிகளைப் பற்றியே கவலைப்படாமல் அவர்களை இன்னலுக்கு ஆளாக்கி யுள்ள ஜெயலலிதா அரசுக்கும் உள்ள வேறுபாடுகளை எண்ணிப் பாருங்கள்!

நான் தவழ்ந்து விளையாடிய; காவேரித் தண்ணீரை அள்ளிக் குடித்த; தஞ்சைத் தரணியில் நடைபெறும் இந்த மாநாட்டுக்கு அணி அணியாக வருகை தருக என நானும் வேண்டுகிறேன்.

மாநாடு சிறந்திட என் இதயமார்ந்த வாழ்த்துகள்!

அன்புள்ள,

மு.க.

16-4-2002

2723. திசை திருப்பும் தீர்மானம்; திரை விலக்கும் உண்மைகள்!

உடன்பிறப்பே,

தமிழகத்தில் அ.தி.மு.க. அரசு; தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனைக் கைது செய்து இந்தியாவுக்குக் கொண்டுவர; மத்திய அரசு இராணுவத்தை அனுப்ப வேண்டும் என்ற கருத்தமைந்த தீர்மானத்தை சட்டப்பேரவையில் கொண்டு வந்துள்ள இந்த வேளையில் ஒரு சில கடந்த கால சம்பவங்களை நினைவிற்கொள்வது நலம் என்பதற்காக இதோ சில விபரங்கள்.

ராஜீவ்காந்தி கொலை செய்யப்படுவதற்கு சில மாதங்களுக்கு முன்பு 19.6.1990 அன்று சென்னையில் இ.பி.ஆர்.எல்.எப். என்ற தமிழ் ஈழ விடுதலைப் போராளிகள் இயக்கத் தலைவர் பத்மனாபாவையும் அவருடன் 13 போராளிகளையும் விடுதலைப்புலிகள் படுகொலை செய்தனர்.

அந்த பயங்கரக் கொலை நிகழ்ச்சி நடந்து மூன்றரை மாதங்களில், அதாவது 4.10.1990 அன்று இந்தியன் எக்ஸ்பிரஸ் ஏட்டுக்கு சிறப்புப் பேட்டி அளித்த ஜெயலலிதா பின் வருமாறு சில கேள்விகளுக்குப் பதில் அளித்துள்ளார்.

“சிங்கள ராணுவமும், காவல் துறையும் இலங்கையில் தமிழ் இனத்தை அழிப்பதில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். விடுதலைப் புலிகள் இயக்கம் துணிவான போராட்டத்தில் ஈடுபட்டு சிங்கள ராணுவத்தை எதிர்த்து தீரத்துடன் போர் நடத்தி வருகிறது. கடந்த இரு மாதங்களில் தமிழ்நாட்டில் புகார் கூறும் அளவுக்கு எந்த விதமான நடவடிக்கைகளிலும் விடுதலைப் புலிகள் ஈடுபடவில்லை. இப்போது விடுதலைப் புலிகள் இயக்கம் ஒரு நாட்டின் அரசாங்கத்தை எதிர்த்துப் போர் நடத்தி வருகின்றது. இது ஒரு அதிதீரமான செயல்.

விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டால் இலங்கையில் உள்ள தமிழினம் முழுவதும் அழிந்து விடும் என்பதை நாம் மனதில் நிறுத்த வேண்டும். விடுதலைப் புலிகளின் வெற்றி இலங்கைத் தமிழர்களின் வெற்றியாகும். அவர்களுக்கு உதவும் வகையில் எதுவும் செய்வதற்கு பதிலாக தமிழக முதலமைச்சர் கருணாநிதி தன்னை பாதுகாத்துக் கொள்வதிலேயே கவனம் செலுத்தி வருகிறார். அவருடைய அனைத்து சக்தி மற்றும் கவனம் முழுவதும் முதலமைச்சரின் நாற்காலியைப் பாதுகாத்துக் கொள்வதற்கே அர்ப்பணிக்கப்பட்டு வருகிறது. கருணாநிதியின் மனோபாவம் இவ்வாறிருந்தால் இதற்கு மாறாக வேறுவிதமாக செயல்படுவதை வி.பி. சிங்கிடம் நாம் எதிர்பார்க்க முடியாது.

இலங்கைத் தமிழர்களின் கதி பற்றி வி.பி.சிங் எந்தவிதக் கவலையும்படுவதாக தெரியவில்லை. மாறியுள்ள சூழ்நிலையில் ஒரே மருந்து தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளை ஒட்டுமொத்தமாக ஆதரிப்பது தான். தனது அதிகாரத்திற்கு உட்பட்ட இயன்ற அனைத்து உதவிகளையும் முதலமைச்சர் கருணாநிதி வழங்க வேண்டும். மத்திய அரசு இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் அதில் குறிப்பிடப்பட்ட விதிகளின்படி சமாதானத் தீர்வு ஒன்றைக் காண வேண்டும், அல்லது விடுதலைப் புலிகளை இந்திய அரசு நூற்றுக்கு நூறு ஆதரிக்க வேண்டும்.

கேள்வி:- விடுதலைப் புலிகள் இயக்கம் அமைதி ஒப்பந்தத்தை நிராகரித்து விட்டது. ஆனால் நீங்கள் இன்னமும் விடுதலைப் புலிகளை ஆதரிக்க வேண்டும் என்று கூறுகிறீர்களே?

ஜெயலலிதா:- நம்முடைய முக்கிய நோக்கம் என்ன? தமிழ் இனம் அழிக்கப்பட்டு விடக் கூடாது. இலங்கையில் வாழும் தமிழர்கள் இனப் படுகொலையிலிருந்தும், பூண்டோடு ஒழிக்கப்படுவதிலிருந்தும், பாதுகாக்கப்பட வேண்டும். கடந்த காலத்தில் விடுதலைப் புலிகள் தவறுகளை செய்துள்ளனர். ஆனால் நாம் விடுதலைப் புலிகளை ஆதரிக்காவிடில் அது இலங்கையில் தமிழ் இனத்திற்கு அழிவை ஏற்படுத்தும். அதை நாம் அந்த நோக்கோடு பார்க்க வேண்டும்.

கேள்வி :- எம்.ஜி.ஆர். செய்த அளவுக்கு இல்லாவிட்டாலும், கருணாநிதி விடுதலைப் புலிகளுக்கு உதவி செய்யவில்லையா?

ஜெயலலிதா :- அதற்கான எந்த தடயத்தையும் நான் காணவில்லை.

அடுத்து 8.10.1990 அன்றைய தேதியிட்ட 'இந்து இதழில்'; சென்னையில் ராஜீவ்காந்தி கலந்து கொண்ட கூட்டத்தில் ஜெயலலிதாவின் பேச்சு பின்வருமாறு வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கையில் தமிழர்களைக் காப்பாற்ற எதுவும் செய்யாததற்காக ஜெயலலிதா மத்திய அரசையும் மாநில அரசையும் குற்றஞ்சாட்டினார். இலங்கை அரசுக்கு எதிரான தற்போதைய போராட்டத்தில் விடுதலைப் புலிகள் தோல்வி அடைந்தால் அத்தீவில் உள்ள தமிழினம் முழுவதுமே அழிந்து விடும் என்று ஜெயலலிதா எச்சரித்தார்.

1991ஆம் ஆண்டு; இதுவும் பத்மநாபா கொலைக்குப் பிறகும்; ராஜீவ் கொலை செய்யப்படுவதற்கு 20 நாட்களுக்கு முன்பும் - அதாவது 29.4.1991 அன்று 'இந்து' ஏட்டுக்கு அளித்துள்ள பேட்டியில் ஜெயலலிதா கூறியது வருமாறு:-

> "பங்களா தேஷ் பிரச்சினையில் இந்திரா காந்தி செய்ததைப்போல இலங்கை மீது ராணுவ நடவடிக்கைப் பற்றி இந்தியா சிந்தித்தால் அதில் தவறு எதுவுமில்லை யென்று நான் கருதுகிறேன்"

இப்படியெல்லாம் விடுதலைப்புலியாகவே உருவெடுத்து பேட்டிகள் கொடுத்தும்,பேசியும் வந்த ஜெயலலிதா; இந்திய நாட்டின் இளம் தலைவர் ராஜீவ் காந்தியின் கொலையைத் தனது அரசியல் ஆதாயத்துக்குப் பயன்படுத்திக் கொண்டு - அரசியலில் தாதாக்களாக அலையும் சிலரைக் கொண்டு - கொலைப் பழியை எப்படியாவது தி.மு.க. மீது போட்டு விட வேண்டுமென்று துடியாய்த் துடித்தார். 1991 தேர்தலில் வெற்றியும் பெற்றார். வெற்றிக்குப் பிறகு அந்த வெற்றி, தனது செல்வாக்கினால் கிடைத்ததே தவிர; ராஜீவ் சிந்திய ரத்தத்தினால் அல்ல என்று ஆணவ மொழி கூறினார்.

அதன் உச்சகட்டமாக; 1996 பொதுத் தேர்தலின் போது சேலம் தேர்தல் பிரச்சாரக் கூட்டத்தில் நரசிம்மராவ் அவர்களையும்

மேடையில் வைத்துக்கொண்டு; ஜெயலலிதா என்ன பேசினார் தெரியுமா?

ராஜீவ் கொலைக்கு மூப்பனாரும் உடந்தை என்று பேசினார். இது அப்போதே ஏடுகளில் வந்த செய்தியாகும்!

தி.மு.க. மீது ஜெயலலிதாவும் அவரது அடிமை தாதாக்களும் கூறிய பழிச் சொல்லுக்கு 13.11.97 அன்று, முன்னாள் பிரதமர் சந்திரசேகர் அளித்த பதில் 'இந்து இதழிலேயே' வெளிவந்துள்ளது.

> நான் தி.மு.க. அரசை டிஸ்மிஸ் செய்தேன். கருணாநிதியுடன் எனக்கு கருத்து வேறுபாடுகள் உண்டு என்பது வெளிப்படை. ஆனால் நான் ஒருபோதும் தி.மு.க.வையோ, கருணாநிதியையோ கொலை வழக்கில் தொடர்புபடுத்திய தில்லை. அதற்கான எந்த ஆதாரமும் என்னிடமில்லை.

இவ்வாறு சந்திரசேகர் கூறியது மட்டுமல்ல; அவர் பிரதமராக இருந்தபோது அவரிடம் முதன்மைச் செயலாளராக இருந்த பி.ஜி.தேஷ்முக், ஜெயின் கமிஷனில் அளித்த வாக்குமூலத்தில்;

> விடுதலைப்புலிகள் குறித்த தகவல் ஏதேனும் தி.மு.க. அரசிற்கு தரப்பட்டதாக என்னிடம் எவரும் கூறியதில்லை. விடுதலைப் புலிகளுக்கு அரசுத் தகவலை தி.மு.க. அனுப்பியது என்று என்னால் சொல்ல முடியாது. இதுபற்றிய புகார் சொல்ல யாரும் என்னை அணுகியது கிடையாது

என்று கூறியுள்ளார்.

இவை ஒருபுறமிருக்க; பிரபல ஆங்கில ஏடு ப்ரண்ட் லைன் ராஜீவ் காந்தி கொலை குறித்து சில சந்தேகங்களை எழுப்பி வினாக்கணைகள் தொடுத்தது - அந்த ஆங்கில வாசகங்களையும்

அதன் தமிழாக்கத்தையும்
படித்துப் பார்ப்பது; கடந்த காலத்தில்
என்ன நடந்திருக்கும்? எப்படி நடந்திருக்கும்
என்பதைக் கண்ணாடிபோலக் காட்டும்!

அது இதோ;

"At the place where Rajv Gandh died, o Congressme was njured. Te persons who died there were polce offcers who provided

m security. At this pont of tme, there was a alliace betwee Rajv Gandhs party, the Congress (I), and the AIADMK Tamil Nadu. Wy did o candidate belongng to that alliace go to the publc meetng addressed by Rajv Gandh? After is death, why was o effort made to see the ody at the airport? Not only that; We Rajv Gandh traveled from the airport to Cena, though Jayalalita was ot the tow, did any AIADMK candidate who contested wit Congress (I) support, or any AIADMK worker, receve m?...”

-Frontlne

இதன் தமிழாக்கம் வருமாறு :-

“ராஜீவ் காந்தி இறந்த இடத்தில் எந்தக் காங்கிரஸ்காரரும் காயமடையவில்லை. அங்கே இறந்தவர்கள் எல்லாம் அவருக்குப் பாதுகாப்பு கொடுத்த காவல்துறை அதிகாரிகள்தான். இந்தச் சம்பவம் நடைபெற்ற போது ராஜீவ் காந்தியின் கட்சியான இந்திரா காங்கிரசுக்கும் தமிழகத்திலே உள்ள அ.இ.அ.தி.மு.க. விற்கும் இடையே கூட்டணியிருந்தது. அப்படியிருந்தும் ராஜீவ் காந்தி கலந்து கொண்ட பொதுக்கூட்டத்திற்கு அந்தக் கூட்டணியைச் சேர்ந்த அ.தி.மு.க.வினர் ஏன் போகவில்லை? அவரின் மரணத்திற்குப் பிறகு விமான நிலையத்திலே கூட அவரது உடலைப் பார்க்க அவர்களால் எந்த முயற்சியும் எடுக்கப்படாதது ஏன்? அது மாத்திரமல்ல; விமான நிலையத்திலிருந்து ராஜீவ் காந்தி பயணம் செய்த போது ஜெயலலிதா சென்னையிலே அப்போது இல்லா விட்டாலுங்கூட காங்கிரசின் ஆதரவோடு போட்டியிட்ட அ.இ.அ.தி.மு.க. வைச் சேர்ந்த வேட்பாளர்களோ, தொண்டர்களோ விமான நிலையத்தில் ராஜீவ் காந்தியை வரவேற்காதது ஏன்?”

இவற்றுக்கிடையே ராஜீவ் காந்தி அவர்கள் இலங்கைத் தமிழர் பிரச்சினையில்; தமிழக முதல் அமைச்சராக இருந்த நான் எப்படி அவருக்கு உதவிகரமாக இருந்தேன் என்பதை 5-11-89 அன்று நடந்த திருச்சி தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திலும், அதே நாள் கோவையில் நடந்த தேர்தல் பிரச்சாரக் கூட்டத்திலும் குறிப்பிட்டதை நினைவூட்ட விரும்புகிறேன்.

"இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் கடந்த பல மாதங்களாக ஒத்துழைப்பு வழங்கிவரும் தி.மு.க. அரசுக்கும், முதலமைச்சர் மு.கருணாநிதிக்கும் திருச்சி கூட்டத்தில் பிரதமர் ராஜீவ் நன்றி தெரிவித்தார்."

"கோவையில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் முழு ஒத்துழைப்பு தந்து வருவதற்காக தி.மு.க. அரசுக்கு ராஜீவ் காந்தி மீண்டும் பாராட்டு தெரிவித்தார். ஆனால் தேர்தலில் எதிர்க்கட்சிகளுடன் தி.மு.க. கைகோர்த் துக் கொண்டதற்கு அதிருப்தி தெரிவித்தார்".

(இந்தியன் எக்ஸ்பிரஸ் 6.11.89)

உடன்பிறப்பே,

இந்தக் கடந்த கால நிகழ்வுகளும் செய்திகளும் உன் நெஞ்சில் பதிந்திருந்தால் இருட்டு மதி கொண்டோர்; குருட்டுத்தனமாக தி.மு.க. மீது குற்றம் சாட்டும்போது அவர்களின் பொய்த் திரையைக் கிழிக்கும் ஆதாரபூர்வமான அறப்போர் ஆயுதங்களாக இவற்றையெல்லாம் பயன்படுத்தலாம் அல்லவா!

தமிழகத்தில் எத்தனையோ தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் தலைக்கு மேலிருக்க; அவற்றை விடுத்து இந்தத் திசை திருப்பும் தீர்மானம் அந்தப் பிரச்சினைகளை திரை போட்டு மறைக்கத்தான் என்பதால்; அந்தத் திரை விலக்கும் உண்மைகளை உன் போன்றோர்க்கு உணர்த்தியுள்ளேன்.

அன்புள்ள,

மு.க.

17-4-2002

2724. பெண்ணுரிமைப் போர் பெரும் வெற்றி பெற!

உடன்பிறப்பே,

பெண்ணுரிமை பற்றி இப்போது பேசினாலோ எழுதினாலோ; இதெல்லாம் பழைய காலத்துக் கதை; இப்போதுதான் புதுமைப் பெண்கள் பெருகி வருகிறார்களேயென்று பேசுவோர் உண்டு. 'குங்குமம்' இதழில் நான் வாரந்தோறும் சிறுகதை எழுதி வருகிறேன். இந்த வாரம் எழுதியுள்ள சிறுகதையைப் படித்து விட்டுக்கூட ஒரு நண்பர் என்னிடம் வரதட்சணைக் கொடுமையெல்லாம் பழைய காலம் - இப்போது அதில் புதுமையில்லை என்று விமர்சனம் செய்தார். ஆனால் நான் எழுதியுள்ளது வரதட்சணை பற்றிய கதையல்ல! அந்தக் கதையில் அது ஓர் இழை; அவ்வளவுதான்!

ஊமை என்று பெண்ணை உரைக்கு மட்டும்
உள்ளடங்கும்
ஆமை நிலைமைதான் ஆடவர்க்கும் உண்டு!

எனப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடியதுகூட; இன்றைய காலகட்டத்தில் சிலருக்குப் பழைமையாகத் தெரியலாம்.

குங்குமத்தில் நான் எழுதியுள்ள சிறுகதையானாலும்; புரட்சிக் கவிஞர் பெண்ணுரிமை குறித்துத் தீட்டிய கவிதை வரிகளானாலும்; இன்றைக்கும் சமுதாய விழிப்புணர்வுக்குத் தேவைப்படுபவை என்பதற்கு எத்தனையோ நிகழ்ச்சிகள் எடுத்துக்காட்டாக இன்னமும் நடைபெறுவதை நாம் காண முடிகிறது - கேட்க முடிகிறது - ஏடுகளில் படிக்க முடிகிறது!

அவற்றில் ஒரு நிகழ்ச்சியாகத்தான்; இதோ காஞ்சிபுரத்தில் நடந்த ஒரு திருமணத்தில் ஏற்பட்ட திடீர்த் திருப்பம் பற்றி செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது.

ஐம்பது பவுன் நகையை வரதட்சணையாகத் தந்தால்தான் தாலி கட்டுவேன் என்று மிரட்டிய மாப்பிள்ளை, மணமகளின் துணிச்சலான முடிவால் இப்போது சிறையில் கம்பி எண்ணிக் கொண்டிருக்கிறார்.

இது பற்றிய விவரம் வருமாறு:-

காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவர் ஜெயராமன். ஓய்வு பெற்ற சப்-கலெக்டரான இவரது மகள் சுதந்திரவல்லி. வழக்கறிஞர் பட்டம் பெற்றவர். இவருக்கும் சென்னை மாதவரத்தைச் சேர்ந்த மூர்த்தி என்பவருக்கும் திருமணம் நடத்த முடிவெடுக்கப்பட்டது. வரதட்சணையாக ஐம்பது பவுன் நகை தர வேண்டுமென மாப்பிள்ளை வீட்டார் நிபந்தனை விதிக்க மணமகள் வீட்டாரும் அதற்கு ஒப்புக் கொண்டனர்.

தாம்பரத்தில் உள்ள திருமண மண்டபத்தில் புதன்கிழமையன்று (17.4.2002) திருமணம் நடைபெறுவதாக இருந்தது. அதற்கு முன்பாக திருமண நிச்சயதார்த்தமும் நடந்து முடிந்துவிட்டது.

இந்நிலையில் திருமணத்துக்கு முதல் நாள் இரவு மணமகள் வீட்டார் திருமண மண்டபம் வந்தனர். அப்போது வரதட்சணையாக ஐம்பது பவுன் நகையைத் தந்தால் மட்டுமே மணமகன் மணமேடைக்கு வருவார்; மணமகள் கழுத்தில் தாலி ஏறும் என்று மாப்பிள்ளை வீட்டார் மிரட்டியிருக்கின்றனர். திருமணம் முதலில் நடக்கட்டும். அதற்குப் பின்னர் நகைகளைத் தந்து விடுகிறோம் என்று மணமகள் வீட்டார் எவ்வளவோ கெஞ்சிப் பார்த்திருக்கின்றனர். ஆனாலும் மாப்பிள்ளை வீட்டார் மனம் இரங்கவில்லை. நகைகளைப் போடாவிட்டால் மணமகள் கழுத்தில் தாலி ஏறாது என்று கண்டிப்பாகக் கூறிவிட்டனர்.

திருமணத்திற்கு வந்திருந்த உறவினர்களும் பெரியவர்களும் எவ்வளவோ சமாதானப்படுத்தியும்கூட மாப்பிள்ளை வீட்டாரும் மணமகனும் கொஞ்சமும் இறங்கி வரவில்லை. தாங்கள் பிடித்த பிடியிலேயே இருந்தனர்.

நடந்ததையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த மணமகள் சுதந்திரவல்லி அதிர்ச்சியடைந்தார். திருமணத்துக்கு முன்னரே நகை, பணம் என்று அலையும் இந்த மணமகனை நம்பி எப்படி வாழ்க்கை நடத்துவது? இப்போதே இப்படியிருந்தால் திருமணத்துக்குப் பின் தன் நிலை என்ன என்றெல்லாம் யோசிக்கத் தொடங்கினார். வரதட்சணை கேட்டு பாடாய்ப்படுத்தும் இந்த மாப்பிள்ளையைத் திருமணம் செய்து கொள்ளமாட்டேன் என்று தன் பெற்றோரிடம் உறுதியாகச் சொல்லி விட்டார். பெரியவர்கள் எவ்வளவோ சமாதானப்படுத்தியும் மணமகள் சுதந்திர வல்லி தன் உறுதியான நிலையிலிருந்து மாறவில்லை. மணமகள் சுதந்திரவல்லி எடுத்த புரட்சிகரமான முடிவால் திருமணம் நின்றது. மணமகள் வீட்டாரை மிரட்டிப் பார்த்த மாப்பிள்ளை வீட்டார், தாங்கள் எதிர்பாராத ஒன்று நடந்து விட்டதால் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

மணமகளின் தந்தை, -வரதட்சணை தந்தால்தான் தாலி கட்டுவேன் என்று மிரட்டிய மணமகன் மூர்த்தி மற்றும் அவரைச் சார்ந்தவர்கள் மீது காஞ்சிபுரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் செய்தார். போலீசார் வழக்குப் பதிவு செய்து மணமகன் மூர்த்தியையும் அவரது சகோதரரையும் கைது செய்தனர். மற்றும் மணமகன் குடும்பத்தின் மற்ற உறுப்பினர்களைத் தேடி வருகின்றனர். மணமகள் சுதந்திரவல்லி மேற்கொண்ட புரட்சிகரமான முடிவும்; அதன் காரணமாகத் திருமணம் தடைபட்டு மணமகன் சிறை சென்றதும் காஞ்சிபுரம் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

★

உடன்பிறப்பே,

மணவிழாவுக்கு முன்பு பேசித் தீர்க்கப்பட்ட சீர் வரிசை, ரொக்கப் பணம் போன்ற வரதட்சணை அயிட்டங்கள் வந்து சேராவிட்டாலோ; அல்லது வந்து சேரத் தாமதமானாலோ; வாழ்வதற்கு ஆசைப்பட்டு வந்த எத்தனை மருமகள்கள் மாமியாரின் ஆணைப்படி ஸ்டவ் அடுப்புக்கு இரையாகியிருக்கிறார்கள்.

ஏன்; நேரடியாகவே கணவன் எனும் பணப் பேய்களின் கொடிய கரங்களால் கழுத்து நெரிக்கப்பட்ட அபாக்கியவதிகள் எத்தனை பேர்!

அந்த அபலைகளின் பட்டியலில் சேர்க்கப்பட்டு வெந்து தொலையாமல்; விபத்துக்கு விருந்து வைத்து அழைத்திடாமல்; இந்தக் காஞ்சிபுரத்து மணமகளின் பெயரே சுதந்திரவல்லி என்பதால் - சுதந்திரமாகச் சிந்தித்து சூழ்ச்சி வலையில், சூதர் குகையில், சுமடர் பிடியில் சிக்காமல் தொடக்கத்திலேயே விழித்துக் கொண்டு, உயிர் தப்பியது மட்டுமல்ல; வாழ்வுக்கே எமனாக வரவிருந்தவனுக்கும் தகுந்த தண்டனை வாங்கித்தரத் தயாராகி விட்டார்.

இன்று புவியில் பெண்கள் சிறு நிலையில் இருக்கவில்லை. விழித்துக் கொண்டார் எனும் பாவேந்தர் சொல்லுக்கு உதாரணமாய்த் திகழும் பாவையாக மட்டுமல்ல; இந்தச் சமுதாயத்திற்கோர் பாடமாகவும் அமைந்துவிட்ட அந்தப் பெண்மணிக்கு நமது பாராட்டுகள்!

தனியார் நிதி நிறுவனங்கள் நடத்துவதே மக்களை ஏமாற்றிப் பணம் குவிப்பதற்கே எனத் திட்டமிட்டுச் செயல்படும் விதம் போலவே; திருமணங்களையும் கருதிச் செயல்படுகிற எத்தர்களைத் திருத்தவும், எச்சரிக்கவும் இந்தக் காஞ்சிபுரம் நிகழ்ச்சி பயன்படுமேயானால்; அது சமுதாய விழிப்புணர்வுக்கு - குறிப்பாகப் பெண்ணுரிமைப் போராட்டத்திற்குப் பெரும் வெற்றியாகவே அமையக் கூடும்.

அன்புள்ள,

மு.க.

19-4-2002

2725. உளவுத்துறையே உனக்கேன் இந்தக் கறை?

உடன்பிறப்பே,

அய்யன் திருவள்ளுவர் என்பவரைப் பற்றி அ.தி.மு.க. நண்பர்கள் கேள்விப்பட்டிருப்பார்கள் என்று நம்புகிறேன். அவர் வழங்கியுள்ள திருக்குறளுக்குப் பொதுமறை என்று பெயர். இதுவும் யாரேனும் சொல்ல அவர்களுக்குத் தெரிந்திருக்கக்கூடும். பொய்யா மொழியார் என்றும் அந்த அய்யனுக்கு ஒரு பெயர் உண்டு. எத்தனையோ சிறப்புப் பெயர்களில் இந்தப் பெயரும் ஒன்று.

சொன்ன சொல்லில் உறுதிபட நிற்பவர்கள் மட்டுமே; இந்தப் பொய்யாமொழியார் எனும் பெயருக்கு அய்யன் வள்ளுவர் எவ்வளவு பொருத்தமானவர் என்பதை உணர முடியும்.

அந்தத் தூயவர் - துணிவுடையவர் - அரசியல் ஞானி - சமுதாய நன்னெறிச் சிற்பி - தொட்டுக் காட்டாத செய்தி எதுவுமில்லை அவர் படைத்தளித்த திருக்குறளில்!

இல்லறம் நல்லறமாய்த் திகழ்ந்திட வழியுரைத்துள்ளார் - துறவறமும் தும்பை மலரெனத் தூய்மையாக இருக்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளார். ஓர் அரசு உயர்ந்ததாக ஒளிவிட மார்க்க மென்னவென்று, பட்டியலிட்டிருக்கிறார் - வாழ்க் கையின் இலக்கணத்தை வகுத்தளித்ததுடன்; வருணபேதத்தை விரட்டியடித்துமிருக்கிறார்.

அறம் - பொருள் - இன்பம் எனப் பகுக்கப்பெற்ற அவரது திருக்குறளை வைத்து, குறளோவியம் தீட்டுகிற நல்வாய்ப்பும், 1330 குறட்பாக்களுக்கும் உரை வடித்திடும் பெரும் பேறும் பெற்றவன் என்ற முறையில், இறுமாப்புக் கொண்டு; 'இனி போதும் குறளைப் படித்தது' என்று விட்டுவிடாமல் - எப்போதுமே என்

அருகில் உள்ள அந்த உலக நூலை மீண்டும் மீண்டும் மீண்டும் மீண்டும் படித்து எனக்குப் பழக்கம்! அறிவுப்பசி ஆற்றக் கூடியதும் கூட!

இன்று அய்யன் யாத்த அந்த பனுவலைப் படித்திடப் பக்கங்களைத் திருப்பியபோது - பொருட்பாலில் அரசியல் பகுதியில் அதிகாரம் 59இல் 'ஒற்றாடல்' எனும் தலைப்பு என் பார்வையில் பட்டது. ஆம்; ஒற்றாடல் எனும் தலைப்பு! அந்தத் தலைப்பைக் கண்டவுடன், அண்மைக் காலத்தில் அரசியல் அரங்கில் - பேரவைகளில் அடிக்கடி பேசப்படும் உளவுத்துறை பற்றிய நினைவு தலை தூக்கியது. ஒற்றர்கள்தானே உளவுத் துறையின் உயிர் நாடிகள்.

'ஒற்றாடல்' என்றால் 'உளவறிதல்' எனப் பொருள்படும் என்பதைப் புலவர்கள் எவரேனும் அரசிலிருப்பின் அவர்களை அ.தி.மு.க.வினர்; குறிப்பாகவும் சிறப்பாகவும் அவர்களின் தலைவியார் கேட்டறிந்து தெளிதல், நலம் பயக்கும் என்பேன்.

ஒற்றாடல் அதிகாரத்தின் முதல் செய்யுளே;

"ஒற்றும் உரைசான்ற நூலும் இவைஇரண்டும்
தெற்றென்க மன்னவன் கண்."

அதாவது ஒற்றர்களும், நீதியுரைக்கும் அறநூலும் ஓர் அரசின் கண்களாகக் கருதப்படும் என்பது பொருளாகும்.

நல்லரசுக்கு அது வல்லரசாய் இருப்பதற்கு திறமை வாய்ந்த ஒற்றர்களும் தேவை - நீதியுரைக்கும் அறநூலும் தேவை என்கிறார் அய்யன்!

சில அரசுகளில் முதலாவதாகச் சொன்னதுகூட இருக்கிறது; இரண்டாவதாகச் சொன்ன நீதியுரைக் கின்ற அறநூலுக்குத்தான் அறவே பஞ்சம் வந்து விட்டது. அனுபவத்தில் தமிழகத்தில் காண்கிறோமே; அதைத்தான் சொல்கிறேன்.

இந்த ஒற்றாடல் அதிகாரத்தில் இன்னொரு அற்புதமான வழிமுறையையும் கூறுகிறார் வற்றாத ஞானவள்ளல் வள்ளுவப் பெருந்தகையார்.

"ஒற்றொற்றித் தந்த பொருளையும் மற்றுமோர்
ஒற்றினால் ஒற்றிக் கொளல்"

இதற்கென்ன பொருள்? பொருள் என்றால் சிலருக்கு வேறு நினைவு வரலாம்; அதனால் 'அர்த்தம்' என்றே குறிப்பிடுகிறேன். என்ன அர்த்தம் இந்தக் குறளுக்கு என்றால்;

''ஓர் உளவாளி, தனது திறமையினால் அறிந்து சொல்லும் செய்தியைக்கூட மற்றோர் உளவாளியின் வாயிலாகவும் அறிந்துவரச் செய்து, இருசெய்திகளையும் ஒப்பிட்டுப் பார்த்த பிறகே, அது உண்மையா அல்லவா என்று முடிவுக்கு வர வேண்டும்''.

இதுதான் இந்தக் குறளுக்கான விளக்கமாகும்.

''ஒற்றுஒற்று உணராமை ஆள்க உடன்மூவர்
சொல்தொக்க தேறப் படும்''

அதாவது; ''ஓர் உளவாளியை மற்றோர் உளவாளி அறிய முடியாதபடி மூன்று உளவாளிகளை இயங்க வைத்து, அம்மூவரும் சொல்வது ஒத்திருந்தால் அது உண்மையெனக் கொள்ளலாம் என மேலும் கூறுகிறார், அறிவுப் பகலவன் திருவள்ளுவர்''.

உளவுத்துறைப் பணி எனப்படும் ஒற்றாடலுக்கு இவ்வளவு விஷயங்களில் ஓர் அரசு விழிப்போடிருக்க வேண்டும் என்று திரும்பத் திரும்பச் சொல்கிறார் குறளார்.

உளவுத்துறையுடன் நீதியுரைக்கும் அறநூலும் இணைந்திருக்க வேண்டுமென்ற கருத்தில் மாறுபாடு கொண்டவர்கள் ஆட்சியில் இருப்பின்; வள்ளுவர் வழியில் ஒற்றாடலைப் பற்றி எப்படிச் சிந்தித்திட இயலும்!

ஒற்றாடல் எனும் உளவுத்துறைப் பணிகளுக்கு இத்தனை வழிமுறை கூறப்பட்டிருக்கும் போது; குறளாரின் இந்த நுணுக்கமான அறிவுரையை அலட்சியப்படுத்திவிட்டு; அம்மையார் முதலமைச்சர் ஜெயலலிதா அவர்கள் அறிவு கொழிக்கும் ஆன்றோரும் சான்றோரும் அமர்ந்திருக்கும் அவையில் (அ.தி.மு.க.வினரையும் சேர்த்துத்தான் குறிப்பிடுகிறேன்) உளவுத்துறைப் பணி பற்றியே ஓர் உளறல் கச்சேரி நடத்தி விட்டாரே என்பதுதான் என் கவலை! என் ஆதங்கம்!

''இ.காங்கிரஸ் தலைவியாரும், தி.மு.க. மத்திய அமைச்சர் ஒருவரும் டெல்லியில் ரகசியமாக சந்தித்துப் பேசியிருக்கிறார்கள்

என்பதை நான் கற்பனையாகச் சொல்லவில்லை. என்னிடம் உளவுத்துறை இருக்கிறது. அதன்மூலம் வந்த தகவலைத்தான் சொல்லுகிறேன் என்று எந்த சட்டமன்றத்தில் முதலமைச்சர் சொன்னாரோ; அதே சட்டமன்றத்தில் இரண்டு நாட்களுக்குப் பிறகு; அவர் சார்பாக அமைச்சர் பன்னீர்செல்வத்தினால் வெளியே நிருபர்களுக்குக் கூறப்பட்ட மறுப்புச் செய்திக்கான விளக்கத்தை எதிர்க்கட்சித் துணைத் தலைவர் துரைமுருகன் கேட்டவுடன்; தோசையைத் திருப்பிப்போடுவது போல அம்மையார் அவர்கள், அவையில் முதலில் பேசியதை அப்படியே திருப்பிப் போட்டுவிட்டார். தோசையைத் திருப்பிப் போட்டாலும் அதன் வடிவமும் தன்மையும் மாறாது; அதே தோசையாகத்தான் இருக்கும்.

ஆனால் இந்தத் தோசையோ வடிவமும் மாறி, தன்மையும் மாறி விட்டது.

‘‘நான் சொன்னது கற்பனையல்ல. என்னிடம் உளவுத்துறை இருக்கிறது. அதன் மூலம் வந்த தகவலைத்தான் சொல்லுகிறேன்.

இது ஏப்ரல் 11-ந் தேதி ஜெயலலிதா ஊற்றிய தோசை!

இப்போது ஏப்ரல் 19-ந் தேதி, திருப்பிப் போடப்பட்டுள்ள தோசை; எப்படியிருக்கிறது பார்ப்போம்!

> ‘‘எனக்குத் தகவல் வந்தது என்றால்; தமிழக உளவுத்துறை அந்த இரண்டு பேரையும் பின்தொடர்ந்து கண் காணித்தது என்று பொருள் அல்ல! டெல்லியில் உள்ள நண்பர்கள், உளவுத் துறைக்குத் தகவல் கொடுத்திருக்கக் கூடும். கிடைத்த தகவலை உளவுத் துறையினர் என்னிடம் கூறி உள்ளனர்’’.

உடன்பிறப்பே,

இப்போது புரிகிறதா; தோசை திருப்பிப் போடப் படவில்லை. திரித்துப் போடப்பட்டிருக்கிறது என்ற உண்மை!

அரசின் ஒற்றர் எனப்படும் உளவாளிகளின் பணியை எப்படியெல்லாம் திறமையாகக் கண்காணிக்க வேண்டும். ஒருவர் இருவர் கூட அல்ல; மூன்று ஒற்றர்களை ஒருவருக்குத் தெரியாமல் ஒருவரை வைத்து உண்மையை உணர வேண்டும் என்று உலகநெறி நூல் குறள் உரைக்கும் கருத்து எங்கே;

"டெல்லியில் உள்ள நண்பர்கள் உளவுத்துறைக்குத் தகவல் கொடுத்திருக்கக்கூடும். அந்தத் தகவலையே உளவுத்துறையினர் என்னிடம் கூறியுள்ளனர் என்ற முதலமைச்சர் ஜெயலலிதாவின் புதிய கண்டுபிடிப்பு எங்கே?"

உளவுத்துறையும் இணைந்த தமிழக அரசின் உள்துறைக்கும் பொறுப்பாளியாக இருக்கிற முதலமைச்சர்; அந்த உளவுத் துறையை இதைவிட வேறுவகையில் மலிவுத் துறையாக மாற்ற முடியாதல்லவா?

உளவுத்துறைக்காக ஒற்றாடல் எனும் அதிகாரத்தில் 10 செய்யுட்களைத் தீட்டிய செந்நாப் போதார், நமக்காக அவரை மன்னிப்பாராக!

அன்புள்ள,

மு.க.

21-4-2002

2726. அம்பேத்கர் பெயர் சொல்லி ஓர் அபாண்டமா?

உடன்பிறப்பே,

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தின் முதலாவது பட்டமளிப்பு விழாவில் நேற்று பேசிய முதலமைச்சர் ஜெயலலிதா சட்டப் படிப்புக்கு மட்டுமே ஆன ஒரு பல்கலைக் கழகம் 1995ஆம் ஆண்டு எனது ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டது. டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம் என்று பெயரிடப்பட்ட அந்தப் பல்கலைக் கழகம்தான் இந்தியாவில் சட்டப் படிப்புக்கு என்று தனியாக அமைக்கப்பட்ட ஒரே பல்கலைக் கழகம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன் என்று திருவாய் மலர்ந்தருளியுள்ளார்.

முழுப் பூசணிக்காயை சோற்றிலே மறைப்பது என்பார்கள். இது முழுப் பூசணிக்காயை சோற்றிலே மறைக்கும் காரியமல்ல; பூசணிக்காய் தோட்டத்தையே சோற்றிலே மறைக்க முயலுகிறார் முதல்வர் ஜெயலலிதா!

1996-97ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை சட்டப்பேரவையிலே 17-7-1996 அன்று தமிழக முதல்வரான நான் படிக்கும்போது அதிலே குறிப்பிட்ட ஒரு பகுதி வருமாறு :- இந்தச் சட்டமன்றத் தொடரில், சென்னையில் டாக்டர் அம்பேத்கர் பெயரில் சட்டப் பல்கலைக் கழகம் அமைப்பதற்காக, சட்ட முன் வடிவு அறிமுகம் செய்யப்பட்டு அப்பல்கலைக் கழகம் நடப்பாண்டிலேயே செயல்படத் தொடங்குவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

இந்த அறிவிப்பு அத்துடன் அப்படியே விடப்பட்டு விடவில்லை.

இதற்கான அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டு தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத் தொடக்க விழா

20-9-1997 அன்று மாலை சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்றது. பல்கலைக் கழகத்தினை இந்தியக் குடியரசுத் தலைவர் கே.ஆர். நாராயணன் தொடங்கி வைத்தார். தமிழக ஆளுநர் பாத்திமா பீவி தலைமை தாங்கினார். நான் பல்கலைக் கழகத்திற்கான அடிக்கல் நாட்டி உரையாற்றினேன். மத்திய சட்ட அமைச்சர் இராமகாந்த் டி. காலப், மத்திய தொழில் அமைச்சர் முரசொலி மாறன், சென்னை உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி மன்மோகன் சிங் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

அன்றையதினம் நான் ஆற்றிய உரையில் சில குறிப்பிட்ட பகுதிகள் வருமாறு :-

இன்று ஓர் இனிய நாள். இதயமெலாம் பூரிக்கின்ற நாள். நீண்ட நெடுநாளைய கனவு நிறைவேறுகின்ற நாள். இந்த நாளை மேலும் சிறப்பிக்கின்ற வகையில் நம்முடைய குடியரசுத் தலைவர் கே.ஆர்.நாராயணன் அவர்கள் வருகை தந்துள்ளார்கள். நான் அவரை தமிழ் மக்களின் சார்பாக வருக! வருக! என்று வாயார - மனமார வரவேற்கிறேன்.

இந்தியாவினுடைய குடியரசுத் தலைவராகப் பொறுப்பேற்ற பிறகு, முதல் தடவையாக தமிழகத்திற்கு வந்துள்ள அவர்கள் இந்தியாவிலேயே முதன்முதலாக அண்ணல் அம்பேத்கர் பெயரால் சட்டப் பல்கலைக் கழகத்தைத் தொடங்கி வைப்பது மேலும் ஒரு சிறப்பு என்பதை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தியாவிலே உள்ள மாபெரும் அரசியல் தலைவர் களில் பெரும் பொறுப்பிலே இருந்தவர்கள் என்றில்லாமல் மக்கள் பாராட்டுகின்ற அரசியல் தலைவர்களில் இரண்டு நாராயணன்கள் என்னைக் கவர்ந்தவர்கள். ஒருவர் ஜெயப்பிரகாஷ் நாராயணன்; (கைதட்டல்) மற்றொருவர் கே.ஆர். நாராயணன். (பலத்த கைதட்டல்) இந்த இரு நாராயணன்களுமே ஏழையெளிய மக்கள்பால் அன்புகொண்டவர்கள். அப்படிப்பட்ட பெருமைக்குரிய குடியரசுத் தலைவர் அவர்கள் இன்று வருகை தந்திருப்பது நமக்கெல்லாம் பெரும் மகிழ்வைத் தருகின்ற ஒன்றாகும்.

அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம் இன்றைக்கு இங்கே தொடங்கப்படுகிறதென்றால் - சென்னையிலே சட்டக் கல்லூரி

முதன் முதலாகத் தொடங்கப்பட்டது 1891ஆம் ஆண்டு. அதற்குப் பிறகு 83 ஆண்டுகளுக்குப் பிறகுதான் 1974இல் நான் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த அந்தக் காலகட்டத்தில் இரண்டாவது சட்டக் கல்லூரி தமிழ்நாட்டில் மதுரையில் தொடங்கப்பட்டது. பிறகு 1979இல் திருச்சி, கோவை ஆகிய நகரங்களில் சட்டக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன. 1996இல் கடந்த ஆண்டு - நெல்லையிலே மற்றொரு சட்டக் கல்லூரி தொடங்கப்பட்டது.

தனியார் கல்லூரி ஒன்றைத் தவிர, அரசின் சார்பிலே ஐந்து சட்டக் கல்லூரிகள் தமிழகத்திலே இருக்கின்றன. இந்தக் கல்லூரிகள் எல்லாம் ஆங்காங்குள்ள ஒவ்வொரு பல்கலைக் கழகத்தோடும் சார்ந்து இயங்க வேண்டிய நிலையிலே இருந்த காரணத்தினால் ஏற்கெனவே உள்ள இடர்பாடுகளை யெல்லாம் எண்ணி எல்லா சட்டக் கல்லூரிகளும் ஒரே பல்கலைக் கழகத்தின்கீழ் சார்ந்து இயங்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தியாவிலே முதல் முயற்சியாக, முதல் தடவையாக அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தை இன்றைக்கு நாம் தொடங்கியிருக்கிறோம்.

அம்பேத்கருடைய பெயரை இன்றைக்குத்தான் சட்டப் பல்கலைக் கழகத்திற்கு வைத்தோமென்று இல்லை. 1990ஆம் ஆண்டு அம்பேத்கர் நூற்றாண்டு விழா நடைபெற்ற அந்தக் காலகட்டத்திலேயே சென்னை சட்டக் கல்லூரிக்கு அம்பேத்கர் சட்டக் கல்லூரி என்ற பெயரைச் சூட்டினோம்.

1972ஆம் ஆண்டிலேயே அரசினர் கலைக் கல்லூரி ஒன்றினை பெரம்பூர் பகுதியிலே தொடங்கிய போது அதற்கும் அம்பேத்கர் அவர்களுடைய பெயர் சூட்டப்பட்டதை யாரும் மறந்திருக்க முடியாது. அது மாத்திர மல்ல; நம்முடைய மாநிலத்திலே மட்டுமல்லாமல் அம்பேத்கர் பிறந்த மராட்டிய மாநிலத்தில் மரத்வாடா பல்கலைக் கழகத்திற்கு அம்பேத்கர் பெயர் சூட்ட வேண்டுமென்று மராட்டிய சட்டமன்றத்திலே தீர்மானம் நிறைவேற்றி 15 ஆண்டுகளுக்குப் பிறகும் அந்தத் தீர்மானம் செயல்படாமல் இருந்ததைச் சுட்டிக்காட்டி மராத்திய மக்கள் தங்களுடைய குரலை எழுப்பிய போது அதற்கு ஆதரவுக் குரலாக இந்தியாவிலேயே ஒரேயொரு மாநிலம்தான் குரல் எழுப்பியது. அதுதான் தி.மு.க. ஆட்சி நடைபெற்ற தமிழ்நாடு. இந்த அளவிற்கு அம்பேத்கருடைய கருத்துக்களோடு எங்களுக்கு

உள்ள ஈடுபாட்டிற்குக் காரணமே எங்களை ஆளாக்கிய தந்தை பெரியார் அவர்களும், வழிநடத்தி, வழிகாட்டிய பேரறிஞர் அண்ணா அவர்களும் எந்தக் கொள்கைகளை எங்களுக்குக் கற்றுத் தந்தார்களோ அதே கொள்கைகளையுடையவர் அம்பேத்கர் என்ற காரணத்தினால் எங்களுக்கு அண்ணல் அம்பேத்கர் அவர்களிடத்திலே தணியாத ஆர்வமும், ஈடுபாடும் என்றென்றும் உண்டு. இவ்வாறு அந்த விழாவிலே நான் பேசியது மாத்திரமல்ல. அந்தப் பல்கலைக் கழகத்தைத் தொடங்கி வைத்த இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் கே.ஆர். நாராயணன் அவர்கள் பேசும்போது,

குடியரசுத் தலைவர் என்ற முறையில் என்னை முதன் முறையாக சென்னைக்கு இந்த சிறப்பு வாய்ந்த சமூக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியான டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத் தொடக்க விழாவிற்கு அழைத்ததற்காக தமிழக அரசுக்கு, குறிப்பாக தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

2000 ஆண்டுகளுக்கு முன்பாக மனித குலத்துக்கு வழிகாட்டி நெறிகளை வகுத்துத் தந்த மாபெரும் புலவர் திருவள்ளுவரை பெருமைப்படுத்தும் வகையில் நம்முடைய முதல்வர் அவர்கள் தானே வடிவமைத்து உருவாக்கப்பட்ட இந்த மங்களகரமான அற்புதமான பெரிய அளவிலான வளாகத்தில் இந்தத் தொடக்க விழா நடைபெறுவதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இங்குதான் அதாவது தமிழ்நாட்டில்தான் சமூகப் புரட்சிக்கான முதல் குரல் கொடுக்கப்பட்டது. மாபெரும் தலைவர் பெரியார், மாபெரும் தலைவர்கள் அண்ணாதுரை, காமராஜர், இப்போது கலைஞர் திரு. கருணாநிதி! அவர் சமூகப் புரட்சியின் பாரம்பரியத்தை நடைமுறை அரசியலிலும் அமைப்பு மற்றும் நிர்வாகத் துறைகளிலும் கூட கடைப்பிடித்து வருகிறார். அவரை நான் பாராட்ட விரும்புகிறேன். அவரும் அவருடைய சகாக்களும் தமிழ்நாடு அரசும் டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தைத் தொடங்குவது என்ற தொலைநோக்குப் பார்வையுடன் கூடிய முயற்சியை எடுத்ததற்காக நான் பாராட்டுகிறேன் என்று குறிப்பிட்டார்.

இவ்வளவு விளக்கங்களுக்குப் பிறகும், ஆதாரங்களுக்குப் பிறகும் முதல்வர் ஜெயலலிதா; அவரேதான் 1995ஆம் ஆண்டு அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகத்தைத் தொடங்கியதாக கூறியது உண்மை என்று கூறப்போகிறாரா? அல்லது அப்படி பேசவே இல்லை என்று இப்போது சொல்லப் போகிறாரா? அல்லது நானும் மனுஷி தானே, வாய் தவறி கூறி விட்டேன் என்றுரைக்கப் போகிறாரா?

அன்புள்ள,

மு.க.

22-4-2002

2727. கட்டுரையாளரைக் கைகுலுக்கிப் பாராட்டுவேன்!

உடன்பிறப்பே,

ஒரு சில பத்திரிகையாளர்கள் பெரும்பாலும் அரசியல் தலையெழுத்தை மாற்றும் கர்த்தாக்களாக தங்களை எண்ணிக் கொண்டு தங்கள் மனம்போனபடி ஆட்சியிலே இருப்போரை திருப்தி செய்ய வேண்டுமென்பதற்காக சிலவற்றை எழுதுகிறார்கள். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல வேண்டு மென்றால் நிதிநிலை அறிக்கை அண்மையிலே அவையிலே படிக்கப்பட்டதற்குப் பின்னர், ஒரு செய்தியாளர் முதல்வர் ஜெயலலிதாவை அணுகி அம்மா, சூப்பர் பட்ஜெட் என்று புகழ்ந்ததாகவும், அதே செய்தியாளர் தி.மு.கழக ஆட்சி நடைபெற்றபோது நான் நிதி நிலை அறிக்கையைப் படித்து விட்டு வெளியே வந்தபோது என்னை அணுகி அய்யா சூப்பர் பட்ஜெட் என்று தெரிவித்ததாகவும் கிண்டல் செய்து ஒரு பத்திரிகையில் எழுதப்பட்டிருந்தது. இப்படிப்பட்ட ஒரு சில செய்தியாளர்களைப் பற்றிய ஜாதகக் குறிப்புகளை நான் நன்றாகவே அறிவேன்.

முரசொலி இதழில் வெளியான ஒரு கார்ட்டூன் படத்திற்காக பிரபல ஆங்கில இதழ் ஒன்றில் (நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்) இன்று ஒரு கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது. அதில் முதல்வர் ஜெயலலிதா வாக்குப் பெட்டியோடு பணப்பெட்டி மீது உட்கார்ந்திருப்பதைப் போலவும், சுற்றியும் ஆயுதங்கள் இருப்பதையும், போலீசார் கண்டும் காணாதது போல் நிற்பதையும் முரசொலி கார்ட்டூனாக வெளியிட்டது பற்றி ஒரு செய்தியாளர் குறிப்பிட்டு எழுதியுள்ளார். தேர்தல் ஆரம்பிப்பதற்கு முன்பாகவே தி.மு.கழகம் தோல்வியைத் தெரிந்து கொண்டு அந்தக் கார்ட்டூனை முரசொலி வெளியிட்டிருக்கின்றது என்றும் ஆளுங்கட்சிக்கு

பணமும், பலமும் இருப்பதோடு, மக்களின் மனதிலே எந்தவித தவறான எண்ணமும் ஆளுங் கட்சியைப் பற்றி இல்லையென்றும் கூறி; அதனால் தேர்தல் அவர்களுக்குச் சாதகமாகத்தான் இருக்கும் என்று தீர்க்கமாக ஆரூடம் கணிக்கப்பட்டுள்ளது. ஆனால் ஜெயலலிதா அவைகளை மட்டுமே நம்பிக் கொண்டிராமல் சாமர்த்தியமாக காய்களை நகர்த்துவதாகவும், அவற்றிலே ஒன்றுதான் குஜராத்தில் மோடி பதவி விலக வேண்டுமென்று கூறியதென்றும், அப்படி கூறியதின் காரணமாக இஸ்லாமியர்களின் ஆதரவினை அவர் பெற்றிடுவார் என்றும், விடுதலைப் புலிகளைப் பற்றிய தீர்மானத்தை பேரவையிலே கொண்டு வந்ததின் மூலம் தி.மு.கழகம் காங்கிரசை நெருங்க முடியாத நிலையை ஏற்படுத்தி விட்டதாகவும், எனவே இந்த இடைத் தேர்தல்களில் அ.இ.அ.தி.மு.க. தான் வெற்றி பெறும் என்பதைப் போலவும் இப்போதே அந்தச் செய்தியாளர் தனது ஆசைகளுக்கு ராஜதந்திரம் என்ற கிரீடம் சூட்டி அந்தக் கட்டுரையை எழுதியிருக்கிறார்.

தேர்தல் பணிகளே இன்னும் தொடங்காத நிலையில், அறிவிப்பு கூட இன்னும் வராத நிலையில் அந்தச் செய்தியாளர் இத்தனை அக்கறையோடு அந்தக் கட்டுரையை எழுதியிருக்கிறார் என்றால், அவர் உண்மையிலேயே ஒரு நடுநிலை இதழில்தான் பணியாற்றுகிறாரா என்ற சந்தேகம் வருமா வராதா?

அவர் எப்படியோ எழுதிவிட்டுப் போகட்டும். அவர் தனது செய்தித் தொடரிலே முரசொலி வெளியிட்ட கார்ட்டூன் பற்றி குறிப்பிட்டுள்ளதால் அதைப்பற்றிய விளக்கம் அளிக்க வேண்டியது நமது கடமை ஆகிறது! கடந்த கால தேர்தல்களில் அ.இ.அ.தி.மு.க. எப்படி தேர்தல்களை அணுகியிருக்கின்றது என்ற உண்மையைப் புரிந்து கொண்டவர்கள் முரசொலி வெளியிட்ட கார்ட்டூனை தவறு என்று கூற முடியுமா?

சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலிலே வாக்கு எண்ணிக்கை நடைபெற்ற இடத்திலேயே தி.மு.கழக ஏஜெண்டுகளை எல்லாம் போலீஸ் உதவியுடன் அடித்து விரட்டி விட்டு தோற்றவர்களையெல்லாம் வெற்றி பெற்றதாக அறிவிக்கவில்லையா? லட்சக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற சென்னை மாநகர மேயர் வெறும்

ஆயிரக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில்தான் வெற்றி பெற்றார் என்று அறிவிக்கவில்லையா? அதுவும் அதிகாரிகளின் கடைசி நேரத்து சூழ்ச்சியை முறியடித்த காரணத்தால்!

செல்வி ஜெயலலிதா, தற்போது ஆட்சிக்கு வந்த போது மாத்திரமல்ல; 1993ஆம் ஆண்டிலேயே ஆட்சியில் இருந்த போது கூட பழனி நாடாளுமன்றத் தொகுதிக்கும், ராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்கும் இடைத்தேர்தல் 93ஆம் ஆண்டு மே மாதம் 19ஆம் தேதியன்று நடைபெறும் என்று தேர்தல் ஆணையத்தினால் அறிவிக்கப்பட்டது. தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் பாட்டாளி மக்கள் கட்சி முதலிலே அந்த இடைத் தேர்தல்களில் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு அளிப்போம் என்று அறிவித்தது. (பிறகு அதை மாற்றிக் கொண்டது) ஆனால் அந்த முதல் அறிவிப்பைப் படித்து விட்டு முதல்வர் ஜெயலலிதா; பா.ம.க. நடத்திய ஊர்வலத்திலே பிரபாகரன் படத்தை கையிலே எடுத்துச் சென்றதாகவும், அந்த பா.ம.க.வுடன் காங்கிரஸ் கூட்டுச் சேர்ந்தால் ராஜீவ் காந்தியின் ஆத்மா மன்னிக்காது என்றும் பேரவையிலேயே கருத்துத் தெரிவித்தார். ஆனால் அந்த பா.ம.க.வுடன் ஜெயலலிதா பின்னர் (1998ல்) தானே கூட்டுச் சேர்ந்து போட்டியிட்டார் என்பதும் மறுக்க முடியாத உண்மை. ஜெயலலிதா பேரவையிலே தெரிவித்த கருத்துக்கு மறுப்பாக தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவராக இருந்த வாழப்பாடி ராமமூர்த்தி விடுத்த அறிக்கையில், விடுதலைப் புலிகளுடனும், அதன் தலைவர்களுடனும் ஜெயலலிதா நெருக்கமான உறவு கொண்டிருந்தார் என்றும், அதனால் புலிகள் தமிழ் நாட்டில் தங்கு தடையின்றி நடமாடி ஆதிக்கம் பெற்றனர் என்றும், அது ராஜிவ் காந்தி படுகொலை செய்யப்படுவதற்கு காரணமாக அமைந்தது என்றும் தெரிவித்திருந்தார்.

மே திங்களில் ராணிப்பேட்டை இடைத் தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் கமிஷன் அறிவித்ததை 26-4-93 அன்று அவர்களே ரத்து செய்தனர். அதற்குக் காரணமாக, தமிழக அரசு பல்வேறு நலத் திட்டங்களை அறிவித்ததின் மூலம் தேர்தல் நெறிமுறைகளை மீறி விட்டதாகவும், அதுகுறித்து தேர்தல் ஆணையம் தமிழக அரசிடம் விளக்கம் கேட்டதற்கு பதில் ஏதும் தரவில்லை என்பதால் அது உண்மையென ஒப்புக் கொண்டதாகிறது என்றும், தேர்தல்

நெறிமுறைகளை மீறி தமிழக அரசு செயல்பட்டுள்ளதை தேர்தல் ஆணையம் பார்த்துக் கொண்டு சும்மாயிருக்க முடியாது என்றும், அந்தச் சூழ்நிலையில் தேர்தல் சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடக்குமென கருத முடியாது என்றும் தேர்தல் ஆணையம் விளக்கமாக தனது அறிக்கையிலேயே தெரிவித்திருந்தது. எனவே 1993ஆம் ஆண்டிலேயே தேர்தல் ஆணையமே அ.தி.மு.க. அரசின் செயல்பாட்டிற்கு இவ்வாறு சான்றிதழ் அளித்துள்ளது என்பதுதான் உண்மையே தவிர, ஆங்கிலப் பத்திரிகை கட்டுரையாளர் வக்காலத்து வாங்கி எழுதியிருக்கும் செய்திகள் எல்லாம் உண்மையல்ல!

அதுமாத்திரமல்ல; 8-5-93 அன்று பழனி மக்களவை இடைத் தேர்தலையும் தேர்தல் ஆணையம் ஒத்தி வைத்து; ஆகஸ்ட் திங்கள் 19ஆம் தேதியன்று அந்த இடைத்தேர்தல் நடத்தப்படும் என்று மீண்டும் ஒருமுறை அறிவிக்கப்பட்டு, அப்போதும் இடைத் தேர்தல் நடத்தப்படாமல் டிசம்பர் 18ஆம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. அவ்வாறு ஒத்தி வைக்கப்பட்டதற்கு சென்னை உயர்நீதி மன்றத்தில் இடைக்காலத் தடை விதிக்கப்பட்டதால், செப்டம்பர் 20ஆம் தேதியன்று அந்தத் தேர்தல்கள் நடைபெற்றன.

அப்போது ராணிப்பேட்டை தொகுதி இடைத் தேர்தல் பிரச்சாரத்திற்காக சென்ற என்னுடைய வேன் பயங்கரமாகத் தாக்கப்பட்டது. எனக்கு அடுத்து வந்த வேன் முழுமையாக எரிக்கப்பட்டது. ஆளுங்கட்சிக்கு ஆதரவாக காவல்துறையினரும் அந்தத் தாக்குதலை ஊக்கப்படுத்தினர். எனக்குப் பாதுகாவலாக வந்த பத்து போலீசார் இந்தத் தாக்குதலின்போது தாங்கள் வந்த வாகனங்களிலிருந்து கீழேயே இறங்கவில்லை. வாக்குப் பதிவு ராணிப்பேட்டையிலே நடைபெற்ற போது போலிவாக்குகளைப் பதிவு செய்ய வந்த அதிமுகவினரை கையும் களவுமாக கழக வேட்பாளர் ஆற்காடு வீராசாமி பிடித்த காரணத்தால் அவர் கடுமையாகத் தாக்கப்பட்டார். பழனி தொகுதியிலே தேர்தல் அதிகாரி வாக்குகளை எண்ணிடவே முதலில் அனுமதிக்க வில்லை. ராணிப்பேட்டை தொகுதியிலோ 65 சதவிகிதம் வாக்குகள்தான் பதிவானதாக முதல் நாள் அறிவிக்கப்பட்டது. ஆனால் வாக்கு எண்ணிக்கையின் போது 76 சதவிகித வாக்குகள் பதிவாகியிருந்தன. இந்தப் பதினோறு சதவிகித வாக்குகள் எப்படி

வந்தன என்று அப்போதே ஆங்கில ஏடுகள் எல்லாம் சந்தேகக் கணைகளை எழுப்பியிருந்தன. இவ்வளவு அக்கிரமங்களுக்கும் பிறகு; பழனி நாடாளுமன்றத் தொகுதியிலே தி.மு.கழக வேட்பாளர் 2,34,027 வாக்குகளையும், அ.தி.மு.க. வேட்பாளர் 2,78,855 வாக்குகளையும் பெற்றார் என்பதும்; ராணிப்பேட்டை சட்டமன்றத் தொகுதியிலே தி.மு.கழக வேட்பாளர் 48,923 வாக்குகளையும், அ.தி.மு.க.வேட்பாளர் 61,584 வாக்குகளையும் பெற்றார்கள் என்பது குறிப்பிடத் தக்கது. எனவே ஜெயலலிதா முதல்வராக, ஆளுங்கட்சியாக இருக்கும்போது தேர்தல்களிலே விதிகளை மீறுவதும், வன்முறையிலே ஈடுபடுவதும் நீண்டநாட்களாக நடைபெற்று வருகிற ஒன்று என்பது நாடறிந்த செய்தியாகும். 'எக்ஸ்பிரஸ்' நண்பர்கள் வேண்டுமானால் அறியாமலிருக்கலாம்.

அதுமாத்திரமல்ல; அண்மையிலே நடைபெற்ற ஆண்டிப்பட்டி தேர்தலிலே என்ன நடைபெற்றது? தேர்தல் வாக்குப்பதிவிற்கு முதல்நாள் அன்று கிராம நிர்வாக அதிகாரிகள் சான்றிதழ் கொடுத்தால் போதும், வாக்குப் பதிவு செய்யலாம் என்ற ஒரு விதியை எந்தக் கட்சிகளும் கோரிக்கை வைக்காமல் இவர்களாகவே அறிவித்துக் கொண்டு போலி வாக்குகளை பதிவு செய்தது கட்டுரை எழுதிய செய்தியாளருக்குத் தெரியாதா?

அஞ்சலகங்களிலே பத்து ரூபாய் செலுத்தி கணக்குத் தொடங்கிய பாஸ்புக் கையிலே வைத்திருந்தால் அவர்கள் வாக்குப் பதிவு செய்யலாம் என்ற விதியைப் பயன்படுத்தி, அந்த நேரத்தில் போலி வாக்குகள் பதிவானது உண்மையா? இல்லையா?

ஏன், சென்னை மாநகராட்சியிலே சில நாட்களுக்கு முன்பு, இரண்டு வட்டங்களிலே நடைபெற்ற இடைத் தேர்தலிலே அனைத்து எதிர்க்கட்சியினரையும் அடித்து விரட்டி விட்டு, தாங்களாகவே வாக்குகளைப் பதிவு செய்து கொள்ளவில்லையா? வாக்கு எண்ணிக்கையை அனைத்து எதிர்க்கட்சியினரும் புறக்கணித்த நிலையிலேயும், தாங்களே வெற்றி பெற்றதாக அவர்களே அறிவித்துக் கொள்ளவில்லையா? இதை யெல்லாம் அந்த செய்தியாளர் வசதியாக மறந்து விட்டு அல்லது மறைத்து விட்டு ஜெயலலிதாவிற்கு புகழ் மாலை சூட்டியிருப்பதோடு முரசொலியிலே வெளிவந்த கார்ட்டூனையும் குறை கூறி

தி.மு.கழகம் இப்போதே தோல்வியை தெரிந்து கொண்டு அந்த கார்ட்டூனை வெளியிட்டுள்ளது என்று எழுதுகிறார் என்றால்; மிகச் சிறந்த பணியை ஆற்றுகின்ற மற்ற செய்தியாளர்களும், பத்திரிகாதர்மம் போற்றுகின்ற ஏனைய பத்திரிகையாளர்களும் கழகத்தையோ, என்னையோ கடுமையாக விமர்சித்தாலும் அதனை வரவேற்றுப் பழக்கப்பட்ட நான், எக்ஸ்பிரஸ் ஏட்டில் கட்டுரை தீட்டியவர்; ஜெயலலிதா, தேர்தல் நேரத்தில் புரியும் இந்தத் திருவிளையாடல்களையும் சேர்த்து எழுதி; அதனால் அவர் கட்சி ஜெயிப்பது உறுதி என்று எழுதினால் கட்டுரையாளரைக் கைகுலுக்கிப் பாராட்டுவேன்.

அன்புள்ள,

மு.க.

23-4-2002

2728. முடிச்சு போட்டால் நான் பொறுப்பல்ல!

உடன்பிறப்பே,

இன்று உனக்கு நான் நீண்ட கடிதம் எழுதப் போவதில்லை. அரசியல் நெடியைக் குறைத்து, அதே சமயம் நகைச்சுவைப் பொடி வைத்து; சில நிகழ்வுகளின் தொகுப்பாக ஒரு மடல் தீட்டுகிறேன்.

தமிழ் மட்டுமே பயிற்றுவிக்கும் ஆரம்பப் பள்ளியில் படித்த ஒரு சிறுமி, இடையிடையே தன் வீட்டில் தந்தை, தமையன்கள் மூலம் ஓரளவு ஆங்கிலப் பயிற்சியும் பெற்றிருப்பவள். ஒருநாள் அவள் தன் தோழிகளுடன் வீட்டருகேயுள்ள மைதானத்தில் ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருக்கும்போது தவறிப் போய் ஓரத்தில் கிடந்த மலத்தை மிதித்து விட்டாள். உடனே அவளுக்குப் புரிந்து விட்டது; தனது காலில் மிதிபட்டது மலம்தான் என்று! அக்கணமே அதைக் கழுவிக் கொள்ள அருகிருந்த குழாயடிக்குச் சென்று, குழாயைத் திறந்து விட்டு காலைச் சுத்தமாகக் கழுவிக் கொண்டு வீடு திரும்பினாள்.

அதே நாளில் இன்னொரு சிறுமி, இவள் ஆங்கில ஸ்கூலில் படித்துக் கொண்டிருப்பவள். இவளும் அதே போன்று ஒரு மைதானத்தில் ஓடிப் பிடித்து விளையாடும்போது மலத்தை மிதித்து விட்டாள். உடனே காலைக் குனிந்து பார்த்தாள். காலில் ஒரே அசிங்கம். அது மலம்தானா என்று அறிந்துகொள்ள கைவிரல்களால் தொட்டுப் பார்த்தாள். ஆம் அரைகுறையாகச் சந்தேகம் தீர்ந்தது. இருந்தாலும் முகர்ந்து பார்த்து முழுமையாகச் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ள முடிவு செய்து, காலைத் தொட்டுப் பார்த்த விரல்களைக் கொண்டு மூக்கிலும் வைத்துப் பார்த்தாள்.

ஆக, கால் - கை - மூக்கு என மூன்று இடங்களிலும் அசிங்கம் பட்டுவிட்டது.

இதைப் பார்த்த ஒருவர், சிரித்துக் கொண்டே புத்திமானுக்கு ஒரு இடத்திலே அசிங்கம்; முட்டாளுக்கு மூணு இடத்திலே அசிங்கம்; என்று சொல்லிவிட்டுப் போனார்.

ஆங்கில ஸ்கூலில் படித்தாலும், தமிழ்ப் பள்ளியிலே படித்தாலும் மொழியறிவை விட; அனுபவ அறிவும் மதி நுட்பமும்தான் சிறந்தவை என்பதை, இந்தத் துணுக்கு எடுத்துக்காட்டுகிறது.

★

அடுத்து ஒரு துணுக்கு - சிற்றூரும் அல்லாமல் நகரமும் அல்லாமல் அது ஒரு பேரூர்! அந்த ஊரில் சகலகலாவல்லி என்று ஒரு பேரூராட்சித் தலைவர். பெற்றோர் வைத்த பெயரை மாற்றி விட்டு; அவர் தனக்குத்தானே வைத்துக் கொண்ட பெயர்தான் சகலகலாவல்லி என்பதாகும். அவருக்கு சந்தானவல்லி யென்று ஓர் அந்தரங்கத் தோழி யுண்டு. அந்தப் பெண் சந்தர்ப்பம் பார்த்து, சகலகலாவல்லிக்கு ஐஸ் வைத்து தனது தேவைகளைப் பூர்த்தி செய்வதில் கெட்டிக்காரி. ஒருநாள் அவர்களின் எதிர் வீட்டில் உள்ள கண்ணகிக்கு ஓர் அழகான ஆண் குழந்தை பிறந்திருப் பதாக அந்த வீட்டில் கல்கண்டு வழங்கினார்கள். அதைக் கேட்டு சகலகலாவல்லிக்கு ஒரே எரிச்சல். சந்தானவல்லியைக் கூப்பிட்டு, தனக்குக் குழந்தை பிறக்காத குறையைச் சொல்லி அழுது; தன்னைப் பற்றி பேரூராட்சி கூட்டத்தில் பெருமையாகவும் எதிர் வீட்டுக் கண்ணகியைப் பற்றி இழிவாகவும் பேசச் சொன்னார். ஆமாஞ்சாமியான சந்தானவல்லியும் அதையேற்றுக் கொண்டு; மறுநாள் ஊரார் மத்தியில் என்னமோ அந்தக் கண்ணகிக்குத்தான் குழந்தை பிறந்ததாக பீற்றிக் கொள்கிறாளே; நமது சகலகலாவல்லி என்ன - சாமான்யப்பட்டவரா? என்று பேசத் தொடங்கினார்.

உடனே சகலகலாவல்லி குறுக்கிட்டு; சந்தானவல்லி! போதும் நிறுத்து - நான் மீதியைச் சொல்லுகிறேன். ஊர் மக்களே! அந்தக் கண்ணகி குழந்தை பெற்று விட்டதால் நான் மலடி என்று அர்த்தமல்ல! எனக்கும் இரண்டு வருஷத்துக்கு முந்தி கருத்தரித்தது. தரித்த கரு வயிற்றில் தங்காமல் போய்விட்டது.

உடனே அந்த ஊர்ப் பெண்களில் ஒரு பெண் குறுக்கிட்டு; ஓகோ; அப்படி தங்காமல் போன அந்தக் கருதான், கண்ணகி

வயிற்றிலே குழந்தையா வளர்ந்து பிறந்துட்டுதா? எனக் கேட்டு நையாண்டி செய்தார்.

அதைக்கேட்டு சகலகலாவல்லியும், சந்தான வல்லியும் கோபத்துடன்; அந்தக் கரு, வேறு! இந்தக் கரு, வேறு! என்று குதிக்கவே - ஊர்ப் பெண்கள் எல்லோரும் ஒரே குரலில் கேள்வி மேல் கேள்வி கேட்டார்கள்.

கருவுற்றதாகச் சொல்கிறாய்; நம்பு கிறோம்!
அந்தக் கருவை காப்பாற்றி வளர்க்காமல்;
வயிற்றில் தங்காமல் செய்து விட்டாயே ஏன்?
நீயும் கருவுற்றாய், ஆனால் குழந்தை பிறக்கவில்லை என்பது உனக்கு ஒரு பெருமையா?

இப்படி வினாக்களை எழுப்பி கேலியாகச் சிரித்துக் கொண்டே அந்த ஊர்ப் பெண்கள் கும்பலாக கண்ணகி வீடு நோக்கி நடந்தார்கள்; அவள் பெற்ற குழந்தையை வாழ்த்துவதற்காக!

சகலகலாவல்லியும், சந்தானவல்லியும் ஒருவர் முகத்தை ஒருவர் ஏக்கத்துடன் பார்த்து ஊர் மக்களை ஏமாற்ற முடியவில்லையே என்று கண்களால் பேசிக் கொண்டார்கள்!

★

பாராளுமன்ற சட்டமன்ற மசோதாக்கள் பற்றி ஒரு குறிப்பு :- யார் வேண்டுமானாலும் ஓர் ஆட்சியின் தலைவராக அதாவது பிரதமராகவோ, அல்லது முதல்வராகவோ இருக்கும்போது ஒரு சட்டம் கொண்டு வருவது பற்றி யோசிக்கலாம். யோசிப்பது ஒன்றினாலேயே அது சட்டமாகி விடாது. அதே போல மசோதாவைக் கூட அவையில் அறிமுகம் செய்யலாம். அறிமுகம் செய்து விட்டதாலேயே அது சட்டமாகி விடாது. அவையில் அந்த மசோதா குறித்து விவாதம் நடைபெற்று; வாக்கெடுப்பு நடைபெற்றோ அல்லது ஏகமனதாகவோ அது சட்டமாக வேண்டும். பிறகு அந்தச் சட்டத்தை கிடப்பிலே போடாமல் நடைமுறைப்படுத்த வேண்டும்.

பெண்களுக்கு நாடாளுமன்ற - சட்டமன்றங்களில் 33 சதவீதம் இட ஒதுக்கீடு ஒதுக்கும் மசோதாவை பிரதமர் வாஜ்பய் அரசு கொண்டு வந்தும் அது சட்டமாகாமல் சுமார் மூன்று நான்கு ஆண்டுக் காலமாக எவ்வளவோ தடை! அது சட்டமாகவுமில்லை; நடைமுறைக்கும் வரவில்லை!

இந்தப் பெண்கள் இட ஒதுக்கீடு சட்டம் திரு. வாஜ்பய் காலத்திலேயே நிறைவேற்றப்பட்டு நடைமுறைக்கு வர வேண்டுமென விரும்புகிறேன். ஒரு வேளை இன்னும் பல ஆண்டுகள் தள்ளிப் போய்; வேறு ஒரு ஆட்சியில் இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுமேயானால்; அப்போது வாஜ்பய் அவர்கள் ஒரு காலத்தில் இதற்கான மசோதாவை நான்தான் கொண்டு வந்தேன். இதை நிறைவேற்ற சில கட்சிகளின் ஒத்துழைப்பு கிடைக்கவில்லை; அதனால் சட்டமாக வில்லை. இப்போது நிறைவேற்றப் பட்டுள்ளது, இந்தப் பெருமை முழுதும் எனக்குத்தான்! என்று சிறுபிள்ளைத்தனமாகக் கூற மாட்டார் அல்லவா! எத்தனை கட்சிகளுடன் அவருக்குக் கொள்கை வேறுபாடு இருப்பினும்; என்ன இருந்தாலும் பெரிய மனிதர், பெரிய மனிதர்தானே!

உடன்பிறப்பே,

"சகலகலாவல்லி-சந்தானவல்லி'' கதையையும்; பெண்கள் இட ஒதுக்கீடு சட்டத்தைப் பற்றிய விபரத்தையும்; தி.மு.க. ஆட்சியில் சட்டம் கொண்டு வந்து, இந்திய குடியரசுத் தலைவர் அவர்களால்; 1997-ல் அம்பேத்கர் சட்டப் பல்கலைக் கழகம் தொடங்கி வைக்கப்பட்டதையும்; முட்டாளுக்கு மூன்று இடத்தில் என்ற துணுக்கையும் நீங்கள் முடிச்சுப் போட்டு விமர்சித்தால் அதற்கு நான் பொறுப்பல்ல!

அன்புள்ள,

மு.க.

24-4-2002

2729. எதிர்க்கட்சி வரிசையினர் எண்ணிப் பார்த்திட!

உடன்பிறப்பே,

சட்டப் பேரவையில் ஆபாசமாக பேசியதாகக் கூறி கழகச் சட்டப் பேரவை உறுப்பினர்களான முன்னாள் அமைச்சர் பொன்முடியும், முன்னாள் சட்டப்பேரவைத் துணைத் தலைவர் பரிதி இளம்வழுதியும் பேரவையிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார்கள். அது தவறு என்று அவையிலே உள்ள அனைத்து எதிர்க் கட்சிகளின் சார்பில் வாதாடிய போதிலும், எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த சில தலைவர்கள் தி.மு.கழக உறுப்பினர்கள் செய்ததை சரியென்று ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் கருத்துத் தெரிவித்திருக்கிறார்கள். கழக உறுப்பினர்கள் அவைக் குறிப்பில் இடம் பெறத் தகாத வார்த்தைகளை உச்சரித்திருப்பார்களேயானால் நானும் அதை ஏற்றுக் கொள்ள கூடியவன் அல்லன். கழக உறுப்பினர்களுக்காக வாதாடிய அந்த எதிர்க்கட்சிகளுக்கு தி.மு.கழகத்தின் சார்பில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே சமயம், அவர்களைப் பற்றி கடந்த காலத்தில் இதே முதலமைச்சர் ஜெயலலிதா எப்படியெல்லாம் பேசினார் என்பதை என்னால் நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.

9-2-93 அன்று காங்கிரஸ் கட்சியின் சட்டப் பேரவை உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்ததைப் பற்றி முதல்வர் ஜெயலலிதா கூறும்போது, காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளி நடப்புச் செய்கிறார்களா? அல்லது சிற்றுண்டி அருந்துவதற்காக வெளியே செல்கிறார்களா? என்று கிண்டல் செய்தார்.

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த ஒரு சில சட்டப் பேரவை உறுப்பினர்கள் இப்போது போலவே அப்போதும் ஜெயலலிதாவிற்கு ஆதரவாகப் பேசிய போது பிரதான எதிர்க்கட்சியான காங்கிரஸ் இரண்டாக உடைந்து விட்டதா

அல்லது இன்னமும் ஒரே கட்சியாக இருக்கிறதா என்று கேள்வி கேட்டு கிண்டல் செய்தவரும் ஜெயலலிதாதான்! அது குறித்து அப்போது பேரவைத் தலைவராக இருந்தவர், முதலமைச்சர் எழுப்பியிருக்கின்ற பிரச்சினை சிந்தனைக்குரிய பிரச்சினை என்றார். 16-3-93 அன்று சட்டப் பேரவையில் ஜெயலலிதா பேசும்போது அயோத்தியில் மசூதி இடிக்கப்பட்ட வேளையில் ராணுவம் என்ன செய்து கொண்டிருந்தது? என்று மத்திய அரசைக் கடுமையாகத் தாக்கி உரையாற்றினார். அயோத்தி கரசேவைக்கு ஆள் அனுப்பியதாகப் புகழப்பட்டவர்; இப்படிப் பேசியது அவரது கடந்த கால வரலாற்றைப் பார்க்கும்போது ஒன்றும் புதிதல்ல! ஆனாலும் அவரது பேச்சுக்கு பதில் அளிக்க காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்கள் எழுந்த போது அவர்களுக்கு வாய்ப்பு தரப்படவில்லை. தொடர்ந்து 19-3-93 அன்று பிரதமர் நரசிம்மராவ்தான் பாபர் மசூதியை இடிக்க அனுமதித்தார் என்றே ஜெயலலிதா குற்றஞ் சாட்டினார். தமிழகச் சட்டப்பேரவையில் வரலாறு காணாத அளவிற்கு விடிய விடிய எதிர்க்கட்சிகளின் தர்ணா, உண்ணாவிரதம் நடைபெற்ற நிகழ்ச்சிகளும் நடந்ததுண்டு! 20-4-1993 அன்று காவல்துறை மானியக் கோரிக்கை குறித்த விவாதத்தில் எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. உறுப்பினர் திருநாவுக்கரசு புகளூர் சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள் மீது நடந்த துப்பாக்கிச் சூடு குறித்துப் பேசியதையொட்டி தகராறு எழுந்தது. ஆளுங்கட்சி தரப்பிலிருந்து திருநாவுக் கரசை நோக்கி வெளியே போடா என்ற குரல் வந்தது. ஒருவருக்கொருவர் வேகமாக வாதிட்டுக் கொண்டிருந்த நேரத்தில் பேரவைத் தலைவர் அவை நடவடிக்கைகள் முடிந்துவிட்டதாக அறிவித்து வெளியேறினார். அவரைத் தொடர்ந்து ஆளுங்கட்சி உறுப்பினர்கள் அனைவரும் வெளியே சென்ற பிறகும் எதிர்க்கட்சி உறுப்பினர்களான காங்கிரசார் யாரும் வெளியே போகாமல் அவைக்குள்ளேயே இருந்தனர். இந்த நிலையில் குளிர்சாதனமும் மின் விளக்குகளும் அணைக்கப்பட்டன. கதவுகள் மூடப்பட்டன. அதற்குப் பிறகும் பெண்கள் உட்பட காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளியே போகவில்லை. சி.பி.ஐ., சி.பி.எம். உறுப்பினர்களும் பேரவைக்குள்ளேயே இருந்தனர். அதற்கு முன்பே பேரவையிலிருந்து வெளியேற்றப்பட்ட திருநாவுக்கரசும் திரும்ப உள்ளே வந்து விட்டார். ஒரே ஒரு கழக உறுப்பினர் பரிதி இளம்வழுதியும் அங்கிருந்தார். பத்திரிகையாளர்களை

வெளியேறும்படி பேரவைத் தலைவர் அலுவலகத்திலிருந்து கூறியதற்கு அவர்களும் வெளியேற மறுத்து விட்டனர். விடிய விடிய இந்தப் போராட்டம் நடைபெற்று மறுநாள் காலையில் அவை மீண்டும் கூடியதும் அரசுக்கும் பேரவைத் தலைவருக்கும் எதிராக எதிர்க்கட்சியினர் முழக்கமிட்டனர். கேள்வி நேரத்தை ஒத்தி வைக்க வேண்டுமென்றனர். ஆனால் பேரவைத் தலைவர் கேள்வி நேரத்தை ஒத்திவைக்க மறுத்ததோடு, எதிர்க்கட்சி உறுப்பினர்களான காங்கிரஸ் உறுப்பினர்களை வெளியேற வேண்டுமென்று உத்தரவிட்டார். அவர்கள் வெளியேற மறுக்கவே அவைக் காவலர்களைக் கொண்டு காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களை அவையிலிருந்தும் அவை தாழ்வாரத்திலிருந்தும் வெளியேற்றினார். அப்போது காவலர்களுக்கும் உறுப்பினர்களுக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டது. வெளியேற்றப்பட்ட எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களான காங்கிரஸ் உறுப்பினர்கள் கோட்டை வாயிற்புறம் முன்பு சிறிது நேரம் ஆர்ப்பாட்டம் செய்து விட்டு பிறகு போர் நினைவுச் சின்னம் அருகில் சென்று சாலையில் அமர்ந்து மறியல் செய்தனர். மாநகர காவல்துறை ஆணையர் அவர்களிடம் சென்று கலைந்து செல்லுமாறு கூறினார். இதையடுத்து அங்கிருந்து எதிர்க்கட்சியான காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகளின் சட்டப் பேரவை உறுப்பினர்கள் ஊர்வலமாகப் புறப்பட்டு அண்ணா சாலையில் உள்ள அண்ணாசிலை அருகே வந்து அங்கே சாலையில் அமர்ந்து மறியல் செய்தனர். மறியலில் ஈடுபட்ட அவர்கள் பிற்பகல் 12.30 மணி அளவில் கைது செய்யப்பட்டு தேனாம்பேட்டை காவல் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டார்கள். காங்கிரஸ் தலைவர் திரு. மூப்பனார் அவர்களும், கழகத்தின் சார்பில் ஆர்க்காடு வீராசாமியும், மு.க. ஸ்டாலினும் காவல் நிலையத்திற்குச் சென்று அவர்களைப் பார்த்தார்கள். இதைத் தொடர்ந்து 22-4-93 அன்று பேரவையில் முதல்வர் ஜெயலலிதா கூறும்போது ஏற்கெனவே எழுதி வைத்த நாடகத்தை இந்திரா காங்கிரஸ் திறம்பட அரங்கேற்றி விட்டது. ராஜீவ் காந்தி தமிழ் மண்ணில் உயிர் நீத்ததால், காங்கிரசுக்கு மக்களிடம் ஏற்பட்டிருந்த சிறிதளவு அனுதாபம்கூட, அக்கட்சியினரின் நடவடிக்கை, போக்கு காரணமாக மக்கள் மனதில் இருந்து இந்நேரம் விலகியிருக்கும். பொது மக்கள் சேவையை மறந்துவிட்ட காங்கிரஸ் இனி எக்காலத்திலும் தேர்தலில் மக்களைச் சந்திக்க முடியாது என்றார். 22ஆம்

தேதியன்று எதிர்க்கட்சியினர் அனைவரும் பேரவையைப் புறக்கணித்தனர்.

இப்படியெல்லாம் எதிர்க்கட்சிகளிடம் நடந்து கொண்டவர்கள்தான் அ.தி.மு.க. வினர். இது மாத்திரமா? ஆளுநர் சென்னா ரெட்டி தன்னிடம் தவறாக நடந்து கொண்டார் என்று ஜெயலலிதா பேரவையிலேயே குற்றஞ்சாட்டினாரே; அதைவிட கெட்ட வார்த்தை வேறு ஏதாவது இருக்க முடியுமா? 3-5-1995 அன்று பேரவையில் முதல்வர் ஜெயலலிதா, பிரதமர் நரசிம்மராவ் அவர்கள் செயல்படாத பிரதமர் என்று கூறியதால் ஏற்பட்ட பிரச்சினையில் காங்கிரஸ் உறுப்பினர் ஞானசேகரனுக்கும் அ.தி.மு.க. உறுப்பினர் ரமேஷ் என்பவருக்கும் இடையே கைகலப்பே ஏற்படவில்லையா? ஞானசேகரனின் சட்டை கிழிக்கப்படவில்லையா? ஒலிபெருக்கிகள் உடைக்கப்படவில்லையா? பேரவைத் தலைவர் கூறும் போது ஞானசேகரன், பன்னீர்செல்வம், ரெங்கநாதன் ஆகிய காங்கிரஸ் உறுப்பினர்கள் மைக்குகளை உடைத்தது கண்டிக்கத்தக்கது, பன்னீர் செல்வத்தை அவையிலிருந்து வெளியேற்ற உத்தரவிடுகிறேன் என்று கூறினார். காவலர்கள் அவரை குண்டுக் கட்டாகத் தூக்கி வந்து வெளியே போட்டனர். அப்போது முதல்வராக இருந்த ஜெயலலிதா; ஞானசேகரன் ஓடிச் சென்று அ.தி.மு.க. உறுப்பினர் ரமேஷை அடித்ததை கண்ணால் பார்த்தேன் என்று கூறினார். 30-3-1995 அன்று பேரவையில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த எஸ்.ஆர். பாலசுப்ரமணியம் அவர்களே தாக்கப்பட்டார். அப்போது கழக உறுப்பினர் பரிதி இளம்வழுதி பேரவையிலே எழுந்து எதிர்க்கட்சித் தலைவர் தாழ்வாரத்திலே தாக்கப்படுகிறார், அவருக்கே இந்தக் கதி என்றால் எங்களுக்கெல்லாம் என்ன கதி என்று கேட்டதோடு அதனைக் கண்டித்து அவையிலிருந்தும் வெளி நடப்பு செய்தார்.

எதிர்க்கட்சித் தலைவராக இருந்த திரு. எஸ்.ஆர். பாலசுப்ரமணியம் அவர்களைப் பற்றி பேரவையில் இதே முதலமைச்சர் ஜெயலலிதா கூறும்போது, எஸ்.ஆர்.பி. அவர்களுக்கு எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் டிக்னிபைட் முறையில் நடந்து கொள்ளத் தெரிய வில்லை, பரிதி இளம்வழுதியோடு எஸ்.ஆர்.பி. அவர்களை ஒப்பிட்டால் பரிதி எவ்வளவோ மேல் என்று பேரவையிலே கருத்து தெரிவித்து அவையின் நடவடிக்கை குறிப்பிலே அது இடம் பெற்றுள்ளது!

காங்கிரஸ் உறுப்பினர்கள் அனைவரும் ஆளுங் கட்சிக்கு எதிராக 95ஆம் ஆண்டு தாங்கள் உறுப்பினர்களாக இருந்த அத்தனை குழுக்களிலிருந்தும் வெளியேறினார்களே?

எம்.ஜி.ஆர். அ.தி.மு.க. தலைவராக இருந்த திருநாவுக்கரசு அவர்களைப் பற்றி முதலமைச்சர் ஜெயலலிதா 3-7-1991 அன்று பேரவையிலே என்ன விமர்சனம் செய்தார் தெரியுமா? கடந்த காலத்தில் ஏற்பட்ட அரசியல் சூறாவளிகளில் இக்கட்டான சூழ்நிலைகளில் நடுநிலை தவறி, தடுமாறி, நிதானம் இழந்து, புயல் காற்றால் அடிக்கப்பட்டு, நிலை தடுமாறி விழுந்தவர் எப்படியெல்லாமோ சமாளித்து உருக்குலைந்து கூனிக் குறுகி நொண்டிக் கொண்டு வந்திருக்கிறார் என்றார். ஏன், ஆந்திர மாநில முதலமைச்சர் திரு. சந்திர பாபு நாயுடு அவர்களையே பேரவையில் அவரும் ஒரு ப்ராடு (Fraud) தான் (மோசடிப் பேர்வழி) என்று கடந்த ஆண்டு ஜெயலலிதா விமர்சிக்கவில்லையா?

அண்மையில் இதே அவையில் காவிரிப் பிரச்சினை பற்றி பேசும்போது என்னை துரோகி என்றும், இந்திரா காந்தியுடன் பேரம் பேசிக் கொண்டு இருவரும் சேர்ந்து தமிழ்நாட்டுக்குத் துரோகம் செய்து விட்டார்கள் என்றும், நான் இந்திரா காந்தியிடம் சரணாகதி அடைந்து விட்டேன் என்றும், இந்திரா காந்தி எனக்கு பாவ மன்னிப்பு அளித்தார் என்றும் அவர் காலில் நான் விழுந்தேன் என்றும் இதே முதலமைச்சர் ஜெயலலிதாவும், நிதி அமைச்சர் பொன்னையனும் பேசும்போது பேரவையின் பண்பாடுகளைக் கட்டிக் காக்கும் பொறுப்புடைய பேரவைத் தலைவர் வாய் மூடி மௌனியாக இருந்தது ஏன்? மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். மறைந்ததும் முதல்வர் பொறுப்பிலே அமர்ந்த ஜானகி அம்மையாருக்கு எதிராக பேரவையிலே எத்தகைய கலவரம் நடைபெற்றது? ஒலி பெருக்கிகளை கையிலே ஏந்தியவாறு அவர்கள் அடித்துக் கொண்டதும், காவல்துறையினரே சாதாரண உடையில் அவைக்குள் நுழைந்து உறுப்பினர்களைத் தாக்கியதும் மறக்கக் கூடிய நிகழ்ச்சிகளா?

1989ஆம் ஆண்டு மார்ச் 25ஆம் தேதியன்று நான் பேரவையிலே நிதி நிலை அறிக்கையைத் தாக்கல் செய்ய முற்பட்ட போது ஜெயலலிதாவும் அவரது கட்சியினரும் கலவரத்தில் ஈடுபட்டு, என் கையிலிருந்த நிதி நிலை அறிக்கையைப் பறிக்க முயற்சித்து என் முகத்திலும் குத்திய நிகழ்ச்சிகள் எல்லாம் அ.தி.மு.க. வின் சாதனை(?)தானே!

இவ்வளவு நிகழ்ச்சிகளையும் அனுபவபூர்வமாக உணர்ந்த காங்கிரஸ் கட்சியினரும், வேறு சில கட்சிகளின் உறுப்பினர்களும் அவற்றை அப்படியே மறந்து விட்டதைப் போலவே பேசுவதுதான் வியப்பாக இருக்கிறது!

ஜனநாயக நெறிமுறைக்கு மாறாக முதல்வர் ஜெயலலிதாவை விடவா மற்றொரு உறுப்பினரால் பேசிட இயலும்? இதற்கெல்லாம் நடுநிலையாக இருந்து தீர்ப்பு வழங்கிட வேண்டிய பேரவைத் தலைவரே அவையிலேயே அம்மையார் அவர்கள் தன்னை வாழ வைப்பார் என்று கூறிடும்போது அவரிடமிருந்தா நடுநிலையை எதிர்பார்க்க முடியும்? அவை நடுவே அம்மையாரின் காலிலே விழுந்த பேரவைத் தலைவரையே காலைவாரி விட்டுவிட்டார்கள் என்கிற போது இவரையா அவர் வாழ வைக்கப் போகிறார்?

அன்புள்ள,

மு.க.

25-4-2002

2730. விரல் நுனியில்
புள்ளி விபர வேடிக்கை பாரீர்!

உடன்பிறப்பே,

விரல் நுனியில் புள்ளி விபரங்களை வைத்துக் கொண்டு அவையில் விளாசித் தள்ளுகிறார் என்று ஆளுங்கட்சிக்காரர்களாலும், அவர்களது ஆதரவு ஏடுகளாலும் போற்றிப் புகழப்படும் அம்மையார் ஜெயலலிதாவின் புள்ளி விபரங்கள் சில நேரங்களில் மோசடியாகவும் - சில நேரங்களில் முரண்பாடாகவும் அமைவதை சுட்டிக்காட்டி தி.மு.க. சார்பில் உரிமைப் பிரச்சினை எழுப்பினால், ஏதோ பூசிமெழுகி மெஜாரிட்டியைக் காட்டி மிரட்டி உரிமையுமில்லை, பிரச்சினையுமில்லையென்று உண்மைகளை உதறித் தள்ளுகிறார்களே; இதோ புறப்படுகிறது பார்; புற்றீசல் போல புள்ளிவிபரத் தவறுகள் - அதுவும் போலீஸ் மானியத்தில்!

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் போல என்பது பழமொழி என்றாலும் இங்கே; இப்போது சில சோறுகளை மட்டும் பதம் பார்க்கலாம்.

தி.மு.க. ஆட்சியில் நடந்ததை விட அ.தி.மு.க. ஆட்சியில் நடைபெற்ற குற்றங்கள் குறைவு என்ற தலைப்போடு ஜெயலலிதா காவல் துறை மானியத்தின் மீது ஆற்றிய உரையின் பெரும்பகுதி அ.தி.மு.க.வின் அதிகாரபூர்வமான இதழில் வெளியானதில்; தி.மு.க. அரசு ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு 1996 மே முதல் 1997 மே வரையான காலத்தில் நிகழ்ந்த பல்வேறு குற்ற நிகழ்வுகளுக்கும், மே 2001 முதல் மார்ச் 2002 வரையான அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த குற்ற நிகழ்வுகளுக்கும் உள்ள ஓர் ஒப்பீட்டை எடுத்துக் கூற விரும்புகிறேன் என்றும், பெரும் திருட்டுகளைப் பொறுத்தவரையில், கடந்த தி.மு.க.

அரசின் முதல் ஆண்டில் தமிழ்நாடு முழுவதும் 23,680 குற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்ற விவரம் தன்னிடம் உள்ளது என்றும், ஆனால் அவர் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு 2001-2002ஆம் ஆண்டில் நடைபெற்ற பெரும் திருட்டுக்களின் எண்ணிக்கை 14,695 மட்டும்தான் என்றும், கடந்த தி.மு.க. ஆட்சியின் முதலாண்டில் நிகழ்ந்த; பெண்களுக்கு எதிரான குற்றங்கள் 4,038 என்றும், ஆனால் தனது தலைமையில் அமைந்த அ.தி.மு.க. ஆட்சியில் கடந்த ஓராண்டில் 1,437 குற்றங்கள் மட்டும்தான் என்றும் ஜெயலலிதா குறிப்பிட்டுள்ளார். தி.மு.க. ஆட்சியையும் அ.தி.மு.க. ஆட்சியையும் ஒப்பிட்டு இந்த இரண்டு புள்ளிவிவரங்கள்தான் அந்த ஏட்டில் வெளியிடப்பட்டுள்ளன. அந்த அம்மையார் குறிப்பிட்டுள்ள மற்ற புள்ளி விவரங்கள் எல்லாம் சென்னை மாநகருக்கும் வேறு பல மாநிலங்களிலே உள்ள மாநகரங்களுக்குமான ஒப்பீடுகள் ஆகும்.

தி.மு.க. ஆட்சிக்கும் அ.தி.மு.க. ஆட்சிக்கும் இடையே அம்மையார் ஒப்பிட்டுக் காட்டியிருக்கும் புள்ளி விவரங்கள் சரிதானா?

காவல்துறை மானியக் கோரிக்கைக்கான கொள்கைக் குறிப்பு ஒவ்வோராண்டும் உறுப்பினர்களுக்கு வழங்கும்போது தொடர்ந்து மூன்றாண்டுகளில் நடைபெற்ற பல்வேறு குற்றங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்ற குறிப்புகளை அதிலே பட்டியலிட்டுக் காட்டுவது உண்டு. மானியக் கோரிக்கை காட்டும் புள்ளிவிபரக் குறிப்பின்படி 1996ஆம் ஆண்டு தி.மு.கழக ஆட்சியில் பதிவு செய்யப்பட்ட பெரிய திருட்டுகளின் எண்ணிக்கை 17,171. ஆனால் முதல்வர் ஜெயலலிதா 1996ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் 23,680 பெரிய திருட்டுகள் நடந்ததாக பேரவையிலே தெரிவித்திருக்கிறார். அவர் தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பையேற்ற பிறகு 2001-2002ஆம் ஆண்டில் நடைபெற்ற பெரும் திருட்டுகளின் எண்ணிக்கை 14,695 மட்டுமே என்று அவரது பதில் உரையில் குறிப்பிட்டிருக்கிறார். 2001ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து இந்தப் புள்ளி விவரம் கணக்கெடுக்கப் பட்டிருக்குமானால் இன்னும் ஓராண்டுக் காலம் முடியவில்லை என்பதால் இந்த எண்ணிக்கை ஓராண்டிற்கான

கணக்கு என்று எடுத்துக்கொள்ள முடியாது. அதுமாத்திரமல்ல; அரசின் சார்பில் இந்த ஆண்டு அவையிலே வைத்திருக்கின்ற காவல்துறை கொள்கை குறிப்பில் 2001ஆம் ஆண்டு நடைபெற்ற களவு (பெரும் திருட்டு) களின் எண்ணிக்கை 16,645 என்று பக்கம் 60இல் அச்சடிக்கப்பட்டுள்ளது. ஆனால் முதல்வர் தனது பதில் உரையில் 14,695 மட்டுமே என்று குறிப்பிட்டுள்ளார். இதில் எந்த புள்ளி விவரம் சரியானது?

அம்மையார் அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த 1995ஆம் ஆண்டு நடைபெற்ற பெரிய திருட்டுகளின் எண்ணிக்கை 17,343 என்றும், 1994இல் 18,192 என்றும், 1993ஆம் ஆண்டு 20,890 என்றும் அ.தி.மு.க. ஆட்சியிலே வெளியிடப்பட்ட மானியக் கோரிக்கை கொள்கைக் குறிப்புகளிலே உள்ளது. அந்த எண்ணிக்கையை விடக் குறைவாகத்தான் தி.மு.கழக ஆட்சியில் 1996இல் 17,171 பெரிய திருட்டுகள் நடைபெற்றிருக்கின்றன என்பதையும் அம்மையார் மறந்து விட வேண்டாம்.

தி.மு.கழக ஆட்சியைவிட அ.தி.மு.க. ஆட்சியிலே குற்றங்கள் குறைவு என்று தனது பதில் உரையிலே குறிப்பிட்டுள்ள அம்மையார்; அவர் பேரவையிலே உள்துறைக்கும் அமைச்சர் என்ற முறையில் வைத்துள்ள கொள்கைக் குறிப்பிலே உள்ள முரண்பாடுகளை முதலில் கவனிக்கட்டும். கொள்கைக் குறிப்பு பக்கம் 25இல் - 2001ஆம் ஆண்டு புகார் செய்யப்பட்ட கூட்டுக்கொள்ளைகள் 154 என்றும் அதில் கண்டுபிடிக்கப்பட்டவை 66 என்றும் அச்சாகியுள்ளது. அதே புத்தகத்தில் பக்கம் 60இல் 2001ஆம் ஆண்டு புகார் செய்யப்பட்ட கூட்டுக்கொள்ளைகள் 158 என்றும் அதில் கண்டுபிடிக்கப்பட்டவை 100 என்றும் அச்சாகியுள்ளது. அதே புத்தகத்தில் பக்கம் 25இல் புகார் செய்யப்பட்ட கொள்ளை (வழிப்பறி) என்ற தலைப்பில் 671 என்றும், அதில் கண்டுபிடிக்கப்பட்டவை 363 என்றும் வெளியிடப்பட்டுள்ளது. ஆனால் பக்கம் 60இல் புகார் செய்யப்பட்ட வழிப்பறி கொள்ளை 669 என்றும், அதில் கண்டுபிடிக்கப்பட்டவை 451 என்றும் வெளியிடப்பட்டுள்ளது.

அதே பக்கம் 25இல் ஆதாயக் கொலை புகார் செய்யப்பட்டவை 78 என்றும் அதில் கண்டுபிடிக்கப் பட்டவை 46 என்றும் பிரசுரிக்கப்பட்டுள்ளது. ஆனால் பக்கம் 60இல் புகார் செய்து பதிவு செய்யப்பட்டவை 80 என்றும் அதில் கண்டுபிடிக்கப்பட்டவை 56 என்றும் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இந்த அழகில்தான் அம்மையார் அவர்கள் உள்துறைக்கான கொள்கைக் குறிப்பினை அவையிலே வைத்துள்ளார்.

முதல்வர் ஜெயலலிதா பேரவையிலே தி.மு.க. ஆட்சியோடு ஒப்பிட்டுக் குறிப்பிட்ட மற்றொரு புள்ளி விவரம் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் பற்றியதாகும். தி.மு.க. ஆட்சியின் முதலாண்டில் நிகழ்ந்த பெண்களுக்கு எதிரான குற்றங்கள் 4,038 என்றும், அவரது தலைமையில் இந்த ஆட்சியில் கடந்த ஓராண்டில் 1,437 குற்றங்கள் மட்டுமே நிகழ்ந்துள்ள தாகவும் குறிப்பிட்டுள்ளார். இந்தப் புள்ளிவிவரமாவது உண்மையா?

ஜெயலலிதா அவர்களே அவையிலே வைத்துள்ள கொள்கைக் குறிப்பு பக்கம் 61இல் பெண்களுக் கெதிரான குற்றங்கள் என்ற தலைப்பில் பெண்களுக்கெதிரான குற்றங்களைத் தடுப்பது தமிழ்நாடு காவல் துறையின் குறிக்கோளாகும். 2001ஆம் ஆண்டில் பதியப்பட்ட 4,959 வழக்குகளில் 4,281 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்றும் வெளியாகியிருப்பதை குறைந்தபட்சம் உள்துறை அமைச்சரான இவரே படித்தாவது இருக்கிறாரா? அவர் படித்திருந்தால் தனது பதில் உரையில் அவர் ஆட்சியிலே 1,437 குற்றங்கள் மட்டுமே நிகழ்ந்ததாக கூறியிருப்பாரா?

முதல்வர் ஜெயலலிதா அவையிலே வைத்துள்ள கொள்கைக் குறிப்பில் காவல் துறை துப்பாக்கிச் சூடு பற்றிய ஒரு ஒப்பீடு வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி 2000ஆம் ஆண்டில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடுகள் 24, 2001ஆம் ஆண்டில் நடைபெற்ற துப்பாக்கிச் சூடுகள் 32; 2000ஆம் ஆண்டில் அதில் இறந்தவர்களின் எண்ணிக்கை 9 பேர், 2001இல் இறந்தவர்களின் எண்ணிக்கை 13; காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 2000இல் 66 பேர், 2001இல் 207 பேர். இந்தப் புள்ளி விவரங்களிலிருந்து

கழக ஆட்சியை விட தற்போது அ.தி.மு.க. ஆட்சியில் துப்பாக்கிச் சூடுகளின் எண்ணிக்கை அதிகமாகியிருப்பதை அறியலாம்.

உடன்பிறப்பே, இந்தப் புள்ளி விபரங்களையெல்லாம் அ.தி.மு.க. அரசின் மீது குற்றம் சுமத்தியே ஆக வேண்டும் என்பதற்காக எழுதவில்லை. முதல்வர் ஜெயலலிதா தன் பதிலுரையிலே தேவையில்லாமல் தி.மு.க. ஆட்சியைவிட தங்கள் ஆட்சியிலே குற்றங்களின் எண்ணிக்கை குறைந்து விட்டது என்று வம்புக்கு இழுத்ததால்தான் உண்மையான புள்ளி விபரத்தைத் தெரிவிக்க நேரிட்டது!

அன்புள்ள,

மு.க.

28-4-2002

2731. தமிழா! தடந்தோள் தட்டிக் கிளம்பிடடா!

உடன்பிறப்பே,

என்ன தேசமடா இது? இங்கு
எத்தருக்கே வாழ்வு தரும் மோசமடா!
நீரும் எண்ணெயும் போல் பற்று பாசமடா! அட;
நீலிக் கண்ணீர் வடித்தே கழுத்தறுக்கும் நேசமடா!
கூளமெல்லாம், கூர்வாளாய் நினைத்துக் கொண்டு;
மேளங்கொட்டி முரசுதட்டி மெலுக்காக ஆடுதடா!
ஆளவந்தார் அடிக்கின்றார் கொள்ளை யென்றால்;
தாளம் போடும் தாசர் கூட்டம் பெருத்ததடா!
கைநீட்டிக் காசுபணம் பதவிகளைப் பெறுவதற்குக்
கடைக் கோடிப் பல்வரிசை காட்டியே நிற்குதடா!
பைநிறைய லஞ்சத்தொகை பலலட்சம் கொட்டித்
தந்து
வை தலையைக் காலில் என்றால் தட்டாமல்
வைப்பாரடா!

என்ன தேசமடா இது? இங்கு
எத்தருக்கே வாழ்வு தரும் மோசமடா!
வானுக்கோர் எல்லையில்லையடா வையகத்தில்;
வறுமைக்கோர் எல்லையில்லையடா தமிழகத்தில்
வருஷத்தில் பத்து ஊழல் வந்து வந்து போகுதடா;
இப்ப தனியார் பஸ் ஊழல் வந்து தாராளமாய்க்
குதிக்குதடா!
கொள்கை உறுதியென்பார்; ஒழுக்கமென்பார்;
கொடி, சின்னம் தன் பிணத்துக்கு போர்த்து என்பார்
கொடுத்திட்ட பணத்துக்கு கூலிக்கு மாரடிப்பார்;
கொடுக்கறுக்கும் நாள் வரையில் குதிக்கின்ற
தேள்களடா!

என்ன தேசமடா இது? இங்கு
எத்தருக்கே வாழ்வு தரும் மோசமடா!

பெரியார் அண்ணா வழித் தோன்றல் நானே என்பார்
நரியார் தன்னைச் சிங்கமென நம்பச் சொன்னால்;
நாடாள்வதால் நாமம் வாழ்க என நவில்கின்றார்!
நலம்பெற்றோம் அவராலே நாமார்க்கும்
குடியாவோம் என்கின்றார்.
குன்றிமணி மானம் சிந்திடினும் உயிர் வாழார்
முன்பெல்லாம்
குன்றளவு மானம் போனால்தான் என்னவென இன்று
குன்றனையார் சிறிதும் குன்றாமல் குனிகின்றார்!
குன்றம் தாழ்ந்து கோடு உயர்ந்த கதை
தொடர்கதையா?
நன்றியெனும் மூன்றெழுத்தை மலமாக்கித் தின்னும்
பன்றிகளும் புரளுகின்ற சாக்கடையாய்ப்
போனதடா!
என்ன தேசமடா இது? இங்கு
எத்தருக்கே வாழ்வு தரும் மோசமடா!
முந்தித் தவமிருந்து முந்நூறு நாள் சுமந்த தாயின்
தொந்தி சரியக் குத்தீட்டி வீசும் பிள்ளையடா!
அந்திப் பொழுதை விரட்டி அழகாய்ப் பூத்த நிலா

தி.மு.க.; அது,

மந்தி கைக்கு எட்டாததால் சந்தி சிரிக்க
அலறுதடா!
இந்தி ஆதிக்கம் எதிர்ப்பதற்கும் இனம் மொழியைக்
காப்பதற்கும்
இருக்கின்ற அரண் இதனை அழிப்பதற்குத்
திட்டமடா!
பந்திக்கு நான் என்றும் படையென்றால் நீ என்றும்
சிந்தித்துச் செப்பியோடும் சில்லறைகள்
ஓசையடா!

குந்திக்குக் குழந்தை எனக்கேட்டு – வயிற்றில்
குத்திக் கொண்ட காந்தாரிகள் ஆசையடா!
என்ன தேசமடா இது? இங்கு
எத்தருக்கே வாழ்வு தரும் மோசமடா!
தலைமொட்டை அடிக்கின்றார், தத்தோமெனக்
குதிக்கின்றார்

தழையுடுத்தி உருளுகின்றார் தையலர்கள் தீயும்
மிதிக்கின்றார்!
இனமான ஏந்தலாம் இராவணனைப் போற்றி
இராமசாமிப் பெரியாரும் அண்ணாவும் புகழ்ந்தது
மறந்து
வருமானம் பார்க்கும் பதவியினால் பகுத்தறிவைத்
துறந்து
வம்புக்கு வருகின்றார் வாயடியில் சிறந்து!
தன்மான இயக்கமென்றும் இனமான முழக்கமென்றும்
தமிழகத்தில் விளைத்து வைத்த அறிவுக்கதிர்
அனைத்துமே
தாசர் புத்தி தலைக்கேறி தடுமாறிச் சாய்ந்ததடா!
இனித்
தமிழ் மண்ணில் புது எழுச்சி எப்போதடா?
தயங்காமல் புறப்படடா; தமிழா! உன்
தடந்தோள் தட்டிக் கிளம்பிடடா!

அன்புள்ள,

மு.க.

29-4-2002

2733. ஆட்டுக்குட்டித் திருட்டும் ரூ.5 லட்சம் களவும் ஒன்றாகுமா?

உடன்பிறப்பே,

காவல் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்கு முதலமைச்சர் ஜெயலலிதா அவையிலே அளித்த பதிலுரையிலே உள்ள தவறுகள், அவர் அவையில் வைத்த கொள்கைக் குறிப்பிலே உள்ள முரண்பாடுகள் குறித்து 28-4-2002 தேதி நான் சுட்டிக்காட்டியவைகளுக்கு உள்துறைச் செயலாளரை விட்டு முதல்வர் பதில் அளிக்கச் செய்துள்ளார். கொள்கைக் குறிப்பிலே உள்ள முரண்பாடுகளை நான் கூறும்போது, பக்கம் 25இல் 2001ஆம் ஆண்டு புகார் செய்யப்பட்ட கூட்டுக் கொள்ளைகள் 154 என்றும், அதில் கண்டுபிடிக்கப்பட்டவை 66 என்றும் அச்சாகியுள்ளது; அதே புத்தகத்தில் பக்கம் 60இல் 2001ஆம் ஆண்டு புகார் செய்யப்பட்ட கூட்டுக் கொள்ளைகள் 158 என்றும் அதில் கண்டுபிடிக்கப்பட்டவை 100 என்றும் அச்சாகியுள்ளது என்று தெரிவித்திருந்தேன்.

அதற்கு பதிலளிக்கும் உள்துறைச் செயலாளர், முதலில் குறிப்பிடப்பட்டிருப்பது 31-12-2001 வரையிலான காலத்திற்கானது என்றும், 60ஆம் பக்கத்தில் குறிப்பிட்டிருப்பது 15-2-2002 வரையிலான புள்ளிவிவரங்கள் என்றும் பதிலளித்திருக்கிறார்.

அவையிலே முதல்வர் ஜெயலலிதா வைத்த கொள்கைக் குறிப்பிலே பக்கம் 60இல் குறிப்பிட்டுள்ள வாசகங்கள் என்ன தெரியுமா? 2001ஆம் ஆண்டு நடைபெற்ற சொத்துத் தொடர்பான குற்றங்கள் குறித்த நிலவரம் என்றுதான் இருக்கிறதே தவிர; 15-2-2002 வரையிலான புள்ளிவிபரமென்று இல்லை.

கொள்கைக் குறிப்பிலே 2001ஆம் ஆண்டிற்கான புள்ளிவிவரம் என்று கூறப்பட்டிருப்பதை தற்போது 60ஆம் பக்கத்தில் 15-2-2002 வரையிலான புள்ளி விவரம் என்று உள்துறைச் செயலாளர் அப்படியே மாற்றிச் சொல்கிறார். அதாவது; கொள்கைக் குறிப்பிலேயே தவறாக அச்சிட்டுவிட்டு

அல்லது 2002ஆம் ஆண்டில் நடந்ததையும் 2001ஆம் ஆண்டிலேயே நடந்ததாகத் தெரிவித்து அவையிலே அத்தனை உறுப்பினர்களையும் ஏமாற்றியிருக்கிறார்கள் என்பது ஆதாரத் தோடு நிரூபணம் ஆகிறதா; இல்லையா? உள்துறைச் செயலாளரே அவரது இன்றைய அறிக்கையில் 60ஆம் பக்கத்தில் உள்ளவை 15-2-2002 வரையிலான புள்ளி விவரம் என்று கூறுகிறார். ஆனால் கொள்கைக் குறிப்பில் 2001ஆம் ஆண்டு நடைபெற்ற குற்றங்கள் என்று அச்சடிக்கப்பட்டு சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் வழங்கப்பட்டிருப்பது எப்படிப்பட்ட புள்ளி விவர மோசடி என்பது தெளிவாகிறதல்லவா?

அடுத்து உள்துறைச் செயலாளர் என்ன சொல்லியிருக்கிறார்? நான் என் அறிக்கையில் புகார் செய்யப்பட்ட வழிப்பறிக் கொள்ளைகள் கொள்கைக் குறிப்பு பக்கம் 25இல் 671 என்றும், 60வது பக்கத்தில் 669 என்றும் அச்சடிக்கப்பட்டுள்ளது என்று கூறியதற்கு, பக்கம் 25இல் இருப்பது 31-12-2001 வரையிலான புள்ளி விவரங்கள் என்றும், பக்கம் 60இல் இருப்பது 15-2-2002 வரையிலான புள்ளி விவரங்கள் என்றும் கூறியிருக்கிறார். அப்படியென்றால் கொள்கைக் குறிப்பில் பக்கம் 60இல் உள்ள புள்ளி விவரங்கள் 15-2-2002 வரையிலானவை என்று ஏன் முன்பே அச்சடித்துக் கொடுக்கவில்லை? 2001ஆம் ஆண்டிற் கான புள்ளி விவரம் என்றுதானே அச்சடித்திருக்கிறீர்கள். அது தவறுதானே? ஒப்புக் கொள்கிறீர்களா? அது மாத்திரமல்ல; 31-12-2001 வரையிலான வழிப்பறிக் கொள்ளை 671 என்றிருப்பது, 15-2-2002 வரையிலான வழிப்பறிக் கொள்ளை 669 என்றிருப்பது எப்படிச் சரியாகும்? அந்த ஒன்றரை மாதத்தில் நடைபெற்ற வழிப்பறிக் கொள்ளைகளும் சேர்ந்து எண்ணிக்கை அதிகமாகுமே தவிர 671 என்பது 669 என்று எப்படி குறையும்? ஒரு மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரி இப்படி உண்மையை மறைத்து அறிக்கை தரலாமா? எண்ணிக்கை அதிகமாகாதது மட்டுமல்ல; 31-12-2001 அன்று 671 வழிப்பறிக் கொள்ளை நடைபெற்றதாக கொள்கைக் குறிப்பிலேயே அச்சடித்துக் கொடுத்து விட்டு 60வது பக்கத்தில் 669 என்று போடப்பட்டிருக்கிறதே என்று கேட்டால், ஒரு மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரியான நரேஷ் குப்தா, அதிலே இரண்டு நிகழ்வுகள் வேறுவிதமான குற்றங்கள் என்பதால் அதை எடுத்துவிட்டோம் என்று கூறுகிறார் என்றால், பின்னர் ஏன் அந்த இரண்டு நிகழ்வுகளையும் வழிப்பறிக் கொள்ளை என்ற தலைப்பிலே 25வது பக்கத்திலே அச்சடித்து உறுப்பினர்களுக்கு

வழங்கினீர்கள்? அப்படி அச்சிட்டது தவறு என்பதையாவது ஒப்புக் கொள்கிறீர்களா?

அடுத்து, முதல்வர் ஜெயலலிதா பேரவையிலே தனது பதிலுரையில் 1996ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில் 23,680 பெரிய திருட்டுகள் நடந்ததாக தெரிவித்தார். நான் அந்தப் புள்ளி விவரம் தவறு என்றும், 1996ஆம் ஆண்டு அவையிலே வைக்கப்பட்ட கொள்கைக் குறிப்பின்படி 17,171 பெரிய திருட்டுகள்தான் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் குறிப்பிட்டிருந்தேன்.

இதற்கு உள்துறைச் செயலாளர் அளித்த பதில் என்ன தெரியுமா? கருணாநிதி அவர்கள் குறிப்பிட்டுள்ளதுபோல 17,171 என்றே வைத்துக் கொண்டால்கூட என்று தெரிவித்திருப்பதிலிருந்தே அம்மையார் அவர்கள் பேரவையிலே 23,680 என்று சொன்னது முழுப் பொய் என்பதை உள்துறைச் செயலாளர் நிரூபித்து விட்டார் என்றுதானே அர்த்தம்?

முதல்வர் ஜெயலலிதா பேரவையிலே அளித்த பதில் உரையில், 2001-2002ஆம் ஆண்டில் அவரது ஆட்சியில் நடைபெற்ற பெரும் திருட்டுகளின் எண்ணிக்கை 14,695 மட்டுமே என்று குறிப்பிட்டிருந்தார். ஆனால் கொள்கைக் குறிப்பில் 16,645 என்று அச்சடிக்கப் பட்டுள்ளதே என்று கேட்டதற்கு, தற்போது உள்துறைச் செயலாளர் அது பெரிய திருட்டுகள், சிறிய திருட்டுகள், கால்நடை திருட்டுகள் ஆகிய எல்லாவற்றையும் சேர்த்துக் கொடுத்த புள்ளி விவரம் என்று கூறித் தப்பிக்க முயன்றிருக்கிறார். அப்படியானால் ஐந்து லட்ச ரூபாய் திருட்டும் ஆட்டுக்குட்டி திருட்டும் ஒன்றுதான் என்கிறாரா; நரேஷ் குப்தா? நல்ல தமாஷ்தான்! கால் நடை திருட்டுகளும், சிறிய திருட்டுகளும் எப்படி பெரிய திருட்டுகள் என்ற தலைப்பின் கீழ் வரும் என்பதை இதனைப் படிப்பவர்கள் புரிந்து கொள்ளட்டும்.

திருவாளர் நரேஷ், தனது அறிக்கையிலே பெரிய திருட்டுக்கள் என்ற இனத்தின் கீழ் நடைபெற்ற குற்ற நிகழ்வுகள் கருணாநிதி கூற்றுப்படியே வைத்துக் கொண்டாலுங்கூட, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற 17,171 என்பதுகூட தவறான புள்ளி விவரங்கள் ஆகும் என்றும், உண்மை என்னவென்றால் அந்தக் காலகட்டத்தில் 18,904 பெரிய திருட்டுக்கள் நடந்துள்ளதுதான் உண்மை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

இதுவாவது உண்மையா? கடந்த ஆண்டுகளின் காவல் துறை மானியக் கோரிக்கை கொள்கைக் குறிப்புகள் பேரவையில்

நூலகத்திலே உள்ளன. உள்துறைச் செயலாளர் அவற்றைப் படித்துத் தெளிவு பெறலாம். 1996ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட பெரிய திருட்டுகள் 17,171 என்றும், அதில் கண்டு பிடிக்கப்பட்டவை 13,746 என்றும் அச்சடிக்கப்பட்டு அப்போதே வழங்கப்பட்டுள்ளன! அதுமாத்திரமல்ல; நான் அறிக்கையிலே குறிப்பிட்டது போல அரசு சார்பிலே வைக்கப்பட்ட மானிய கொள்கைக் குறிப்புகளிலேதான் பெரிய திருட்டுகள் என்ற தலைப்பில் அம்மையார் ஆண்ட 1995ஆம் ஆண்டில் 17,343 என்றும், 1994இல் 18,192 என்றும், 1993ஆம் ஆண்டு 20,890 என்றும் நடைபெற்றதாக தெளிவாக அச்சடிக்கப்பட்டிருப்பதை இனியாவது படித்து விட்டு நரேஷ் குப்தா தெளிவடைவாராக! அம்மையார் அடுத்து ஒப்பிட்டது பெண்களுக்கு எதிரான குற்றங்கள் பற்றியதாகும். அதைப்பற்றி முதல்வர் தனது பதிலுரையிலே தி.மு.க. ஆட்சியின் முதலாண்டில் நிகழ்ந்த பெண்களுக்கு எதிரான குற்றங்கள் 4,038 என்றும், அவரது தலைமையிலே அ.தி.மு.க. ஆட்சியில் கடந்த ஓராண்டில் 1,437 குற்றங்கள் மட்டுமே நிகழ்ந்ததாகவும் குறிப்பிட்டார்.

இதற்கு நான் அளித்த பதிலிலே, ஜெயலலிதா அவையிலே வைத்த கொள்கைக் குறிப்பு புத்தகத்தில் பக்கம் 61இல் 2001ஆம் ஆண்டில் பதியப்பட்ட பெண்களுக்கெதிரான குற்ற வழக்குகள் 4,959இல் 4,281 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று வெளியாகியிருப்பதைச் சுட்டிக்காட்டி அவர்களது கொள்கைக் குறிப்பிலேயே 4,959 வழக்குகள் பதியப்பட்டதாக கூறியிருக்கும்போது, அவையிலே 1437 குற்றங்கள் மட்டுமே நிகழ்ந்ததாக முதல்வர் கூறிய பதில் தவறில்லையா என்று எடுத்துக் காட்டியிருந்தேன்.

இதற்கு உள்துறைச் செயலாளர் ஒரு வார்த்தை கூட விளக்கம் என்ற பெயரால் தரவே இல்லை. அவரால் எப்படித் தர முடியும்? பதில் தர ஏதாவது சரக்கு கையிலே இருந்திருந்தால் முதல் அமைச்சரே சண்டமாருதம் செய்து கொண்டு அவையிலே வந்து முழங்கியிருப்பாரே?

அன்புள்ள,

மு.க.

30-4-2002

2734. அந்த நாள் ஞாபகம் வந்ததே! நண்பனே, நண்பனே!

உடன்பிறப்பே,

இந்த வாரம் வெளிவந்துள்ள இதழ் ஒன்றில் (ஆனந்தவிகடன்) சட்டமன்றம் பற்றி சில உறுப்பினர்கள், கட்சித் தலைவர்களின் கருத்துகள் வெளியிடப்பட்டுள்ளன. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஜி. பழனிசாமி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் நன்மாறன், விடுதலை சிறுத்தை இயக்கத் தின் திருமாவளவன் ஆகியோர், சட்டசபையில் திராவிடக் கட்சிகள் சண்டை போட்டுக் கொள்வதற்கே, நேரம் சரியாக இருக்கிறது. மற்ற கட்சிகள் பேசுவதற்கே அனுமதி வாங்குவதற்குள் போதும் போதும் என்றாகிவிடுகிறது என்றும், இரு கட்சியினரும் ஒருவரையொருவர் பழி தீர்த்துக் கொள்கிறார்கள் என்றும், அய்யாவைத் திருப்திப் படுத்தவும், அம்மாவைத் திருப்திப்படுத்தவும் மாறி மாறிப் பேசுகிறார்கள் என்றும் கருத்துப்பட விமர்சனம் செய்திருக்கிறார்கள்.

என்ன செய்வது! இப்போது சில கட்சிகளுக்கு ஆளுங்கட்சியின் போக்கும், பேச்சுக்களும் பிடிக்கவில்லையென்றாலும், இதுதான் சமயமென்று தி.மு.க.வையும் அதோடு சேர்த்து மக்களிடையே வெறுப்புக்குள்ளாக்கி விடலாமென்ற ஒரு திட்டம் அவர்கள் மனத்திலே உருவாகியிருக்கிறது.

சட்டமன்றத்தில் ஆளுங்கட்சியின் நடவடிக்கை குறித்து தம்பி பொன்முடி, அதே (ஆனந்த விகடன்) வார இதழில் கூறியுள்ள செய்திகளே, மற்றவர்களின் மாறுபாடான விமர்சனங்களுக்குச் செம்மையான விடையும் விளக்கமுமாக அமைந்துள்ளது.

இன்றைய சட்டமன்றத்தில், அ.தி.மு.க. ஆளுங்கட்சியாக இருக்கும் நிலையில் தி.மு.க.வையும் சேர்த்து குற்றம் சாட்ட முனைகிறார்களே, இந்தக் கட்சிகளின் தலைவர்களும், பத்திரிகையாளர்களும் இதே போல அ.தி.மு.க. ஆட்சி, இதே ஜெயலலிதா தலைமையில் 1991 முதல் நடைபெற்ற போது

1994ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17ந்தேதி முதல் தொடர்ந்து ஒரு மாதம் நடைபெற்ற சட்டமன்ற நிகழ்ச்சிகளை மட்டும் 'பிளாஷ்பாக்' காட்சிகளாகக் காணட்டும்!

1991ஆம் ஆண்டு தேர்தல் நேரத்தில் அ.தி.மு.க. வுக்கு தோழமையாக இருந்து பிறகு அவர்கள் இடையே பிளவு ஏற்பட்டு இ.காங்கிரஸ் கட்சி எஸ்.ஆர். பாலசுப்ரமணியம் தலைமையிலே பிரதான எதிர்க்கட்சியாகச் செயல்பட்டது.

17-3-94 அன்று ஆளுநர் உரை மீதான விவாதம் தொடங்கியது. முதல்நாள் விவாதத்தின் போதே, பேரவையில் அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் விசுவநாதன் மீது ஆளுங்கட்சி தூண்டுதலால் தாக்குதல் நடைபெற்றது. சட்டப் பேரவை காங்கிரஸ் உறுப்பினர்கள் இருவர் அவையிலிருந்தே வெளியேற்றப்பட்டார்கள். எதிர்க்கட்சித் தலைவரான எஸ்.ஆர். பாலசுப்ரமணியத்திற்கே பேசுவதற்கு வாய்ப்புத் தரப்பட வில்லை. எனவே காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் அனைவரும் வெளி நடப்பு செய்தனர். விவாதத்தைத் தொடங்கி வைத்து உரையாற்றிய சோ. பாலகிருஷ்ணன் ஆளுநர் உரைக்கே பெரும் போராட்டம் நடத்த வேண்டியிருந்தது என்று ஆரம்பித்தவுடனேயே ஆளுங்கட்சி யினர் அவரைத் தொடர்ந்து பேச விடவில்லை. அப்போது காங்கிரஸ் உறுப்பினர் அழகிரி இப்படித் தடுக்கலாமா? என்று கேட்டதற்கு, பேரவைத் தலைவர், அழகிரி என்று பெயர் வைத்துக் கொண்டதாலேயே பட்டுக்கோட்டை அழகிரி போல வீரமாக இருந்து விட முடியாது, நாங்கள்தான் அழகிரி வழியில் வந்தவர்கள், அழகிரி கையை வீசி பேசக் கூடாது, அவர் இருக்கையிலே அமரவில்லை என்றால் காவலர்களை விட்டு வெளியேற்றுவேன் என்றார். அப்போது காங்கிரஸ் உறுப்பினர்கள் இதென்ன சட்டமன்றமா என்று கூறிவிட்டு வெளி நடப்பு செய்தனர். காங்கிரசாரின் நிலை ஆமையின் நிலையைப் போன்றிருப்பதாக அமைச்சர் எஸ்.டி. சோமசுந்தரம் விமர்சித்தார்.

19-3-94 அன்று பேரவையில் முதல்வர் ஜெயலலிதா, ராஜீவ் காந்தியின் மரணத்தினால் ஏற்பட்ட அனுதாப அலை காரணமாக அ.தி.மு.க. ஆட்சிக்கு வரவில்லை என்று குறிப்பிட்டதோடு, தொடர்ந்து 21.3.94 அன்று காங்கிரசாரைப் பற்றியும் எஸ்.ஆர். பாலசுப்ரமணியத்தைப் பற்றியும் விமர்சனம் செய்தநேரத்தில், எங்கள் தயவால் எம்.பி., எம்.எல்.ஏ.க்களாக ஆகி எங்களையே

கொச்சைப்படுத்துகிறீர்கள். பர்கூர் தொகுதியில் காங்கிரஸ் தொண்டர்கள் உண்மையிலேயே எனக்கு ஓட்டுப் போடவில்லை. எனக்காகச் செயல்படவில்லை. பர்கூரில் நடந்த காங்கிரஸ் செயல்வீரர்கள் கூட்டத்தில் எனக்கு எதிராகச் செயல்பட வேண்டும் எனப் பேசப்பட்டது. ஆனால் அதே நேரத்தில், வாழப்பாடி ராமமூர்த்திக்கு அப்பாவி அ.தி.மு.க. தொண்டர்கள் உண்மையோடு பணியாற்றி நாடாளுமன்றத்துக்கு ஓட்டுப் போட்டனர். எனக்குக் கிடைத்தது அ.தி.மு.க. ஓட்டுகள் மட்டும்தான். காங்கிரஸ் கட்சியினர் செய்த சூழ்ச்சி, வஞ்சனை, துரோகச் செயல்களை நாங்களும் செய்திருந்தால் வாழப்பாடி ராமமூர்த்தி டெபாசிட் இழந்திருப்பார் என்றார்.

ஆளுங்கட்சியான அ.தி.மு.க.வோடு இந்த அளவிற்கு காங்கிரஸ் எதிர்த்துக் கொண்டிருந்த நேரத்தில் தற்போது போலவே அப்போதும் காங்கிரஸ் கட்சியிலே உள்ள சில சட்டமன்ற உறுப்பினர்கள் ஆளுங்கட்சிக்கு ஆதரவாக செயல்படத் தொடங்கினர். 25-3-94 அன்று காங்கிரஸ் கட்சி உறுப்பினரான, வேலூர் ஞானசேகரன், முதல்வரைச் சந்திக்க நேரமே கிடைப்பதில்லை என்று குறை கூறிப் பேசிக் கொண்டிருந்த போது, அதே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த செல்வராஜ் முதல்வரைச் சந்திப்பதில் எந்தவிதப் பிரச்சினையும் இல்லை என்று புகழ் மாலை தொடுத்தார்.

29-3-1994 அன்று முதல்வர் ஜெயலலிதா, விடுதலைப் புலிகள் அமைப்புடன் மத்திய அரசின் உளவு நிறுவனமான ரா வெளிநாட்டில் பேச்சு வார்த்தை நடத்துவதாகவும், மத்திய அரசு சூது, சூழ்ச்சியில் ஈடுபடுகிறது என்ற உண்மை வெளியாகி விட்டதாகவும் பேரவையிலே தெரிவித்தார். எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.ஆர்.பாலசுப்ரமணியம் பத்திரிகைச் செய்தி ஆதாரமாகாது என்றார். தொடர்ந்து பேச அவருக்கு வாய்ப்பு அளிக்கப்படாமல் முதல்வரே தொடர்ந்து பதில் கூறிக் கொண்டிருந்ததால் காங்கிரஸ் உறுப்பினர்கள் வெளி நடப்பு செய்தார்கள். அதைப்பற்றி ஜெயலலிதா தன் பதிலைத் தாங்கிக் கொள்ள முடியாமல் காங்கிரசார் ஓட்டம் பிடிக்கிறார்கள் என்று கேலி பேசினார். வெளியேறிய எஸ்.ஆர். பாலசுப்ரமணியம் செய்தியாளர்களிடம் கூறும்போது, எதிர் வரிசையிலே உள்ளவர்களுக்கு பேச வாய்ப்பளிக்கப்படவில்லை என்றும், ஏதாவது ஒன்று கூறினால்

உடனே நான்கு அமைச்சர்கள் குறுக்கிடுவதாகவும் கண்டனம் செய்தார்.

அடுத்த நாள் எஸ்.ஆர்.பி. தன்னைப் பேச அனுமதிக்க வேண்டி நின்று கொண்டிருந்தபோதே அவைக் காவலர்களை அனுப்பி அவரை வெளியேற்றச் செய்தார்கள். பிறகு அனைத்து காங்கிரஸ் உறுப்பினர்களையும் வெளியேற்றினர். அப்போது நிதியமைச்சர் நாவலர், எஸ்.ஆர்.பி.யும் அவரைச் சார்ந்த காங்கிரஸ் உறுப்பினர்களும் ஒட்டுமொத்தமாக மன்னிப்புக் கேட்டால் ஒழிய, அவர்களை இனிமேல் பேரவை நடவடிக்கைகளில் பேசுவதற்கு அனுமதி அளிக்கக் கூடாது என்று தெரிவித்த யோசனையையும் பேரவைத் தலைவர் ஏற்று அவ்வாறே அறிவித்தார். வெளியேறிய எஸ்.ஆர்.பி. மன்னிப்பு கேட்கும் பிரச்சினைக்கே இடமில்லை என்றார்.

11-4-94 அன்று நொச்சியத்தில் நடைபெற்ற ஒரு கொள்ளை குறித்துப் பரிதியும், காங்கிரஸ் உறுப்பினர் பீட்டர் அல்போன்சும் வெளியேற்றப் பட்டார்கள். அன்றுதான் முதல் அமைச்சர் ஜெயலலிதா தமிழகத்திலே நடைபெறும் கொள்ளைகளுக்கெல்லாம் மத்திய அரசுதான் காரணம் என்று குற்றஞ்சாட்டினார். அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் இந்திரா காங்கிரஸ் சட்டப்பேரவை உறுப்பினர்கள் சட்ட மன்றத்தைப் புறக்கணித்தனர். செய்தியாளர்களிடம் இதைத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் எஸ்.ஆர்.பாலசுப்ரமணியம், பிரதமர் மீதும், காங்கிரஸ் தலைவர்கள் மீதும் அபாண்டமான குற்றச்சாட்டுகளை முதலமைச்சர் கூறியிருக்கிறார். அவருக்கு இதுபோன்று குற்றம் சாட்டுவது வாடிக்கையானது. முன்பு ஒரு கட்டத்தில் ஜெயலலிதா கட்சியிலிருந்து ஓரங்கட்டப்பட்ட போது, எம்.ஜி.ஆர். மறைந்து பல மணி நேரம் ஆகிவிட்டது, ஆனால் அதை மறைத்து விட்டார்கள் என்றும், தனக்கு கட்சித் தலைவராக வரும் வாய்ப்பை தடுக்கிறார்கள் என்றும் ராஜீவ் காந்திக்கு மனு கொடுத்தவர்தான் ஜெயலலிதா. எம்.ஜி.ஆர். இறந்த போது மோரில் விஷம் கொடுத்து கொன்று விட்டார்கள் என்றும் ஜெயலலிதா குற்றம் சாட்டினார். மேலும், கலைஞர் தன்னைக் கொல்லச் சதி செய்கிறார் என்றும் குற்றம் சாட்டியவர்தான் ஜெயலலிதா என்றெல்லாம் கூறிய திரு.எஸ். ஆர்.பி., இதற்கு எதிர்ப்பினைத் தெரிவிக்கும் வகையில் சட்டப்

பேரவை நடவடிக்கைகளை காங்கிரஸ் புறக்கணிக்கும் என்றும் தெரிவித்தார். உடன்பிறப்பே, இப்பொழுது செல்வி ஜெயலலிதா ஆட்சியில் சட்டமன்ற நிகழ்ச்சிகளைப் பார்க்கும்போது, 1991 முதல் 1996 முடிய நடைபெற்ற ஜெயலலிதா ஆட்சியில் சட்டமன்ற நிகழ்ச்சிகள், ஒரேயொரு தி.மு.க. உறுப்பினர் மட்டுமே இருந்த நேரத்தில் பிரதான எதிர்க்கட்சியாகக் காங்கிரஸ் இருந்த நிலையில், அப்போது எப்படியிருந்தது என்பதையும், அது இரு திராவிடக் கட்சிகளின் சண்டையாக இல்லாமல் எதிர்க்கட்சியான காங்கிரசுக்கும் ஆளுங்கட்சியான அ.தி.மு.க.வுக்குமான சண்டையாகவே இருந்ததென்றால், அன்று இருந்த சச்சரவுக்கும் இன்றுள்ள சச்சரவுக்கும் எதிர்க்கட்சிகள் எதுவும் காரணமில்லை. ஆளுங் கட்சியான அ.தி.மு.க. தான் காரணம் என்பதை, இன்றைய கட்சிகளின் முன்னணியினரும் ஏட்டாளர்களும், எழுத்தாளர்களும், விமர்சகர்களும் ஒப்புக் கொண்டு அ.தி.மு.க.வுக்குத்தானே அறிவுரை கூற வேண்டும்!

அதற்காகவாவது, அந்த நாள் ஞாபகம் வந்ததே! நண்பனே, நண்பனே! என்ற பாட்டை அவர்கள் தமது வாய்க்குள் முணுமுணுக்க வேண்டாமா?

அன்புள்ள,

மு.க.

1-5-2002

2735. துரோகத்தைப் பற்றி இவர்களா பேசுவது?

உடன்பிறப்பே,

ஜனநாயகத்தில் பெரும்பான்மையை மதிக்க வேண்டுமென்றாலும், அந்தப் பெரும்பான்மையின் வலிமையைக் கொண்டு நன்மையை, தீமையென்றும் - தீமையை நன்மை என்றும் - பொய்யை, மெய் என்றும் - மெய்யைப் பொய் என்றும் நிலைநாட்டுவது ஆரோக்கியமான ஜனநாயகமாகாது.

“எண்ணிக்கைக் கணக்குத்தான் முடிவான தீர்வு என்றால், ஒரு எருமையைக் கூட மன்றத்தில் நிறுத்தி, பசு மாடு என்று முடிவு அறிவித்து விடுவது சுலபம்’’

என்றுஅண்ணா அவர்கள் ஜனநாயகம் பற்றிய தனது கருத்தை அறிவித்துள்ளதை மறந்து விடுவதற்கில்லை.

மேலும் அண்ணா அவர்கள், எண்ணிக்கையைக் காட்டிலும் எண்ணம் சிறந்ததா என்பதையும் கவனிக்க வேண்டும் என்பார்.

அதாவது, தலைகளை எண்ணிப் பார்ப்பதைவிட, அந்தத் தலைகளுக்குள் என்ன இருக்கிறது என்பதையும் எண்ணிப் பார்த்திடல் நலம்!

இவைகளைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் மூர்க்கப்பெரும்பான்மை இருக்கிறது என்ற மிதப்பில் தமிழ்நாட்டில் ஓர் ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தமது சர்வாதிகாரக் கழுகு உருவத்தை வெண்புறாவின் சிறகுகளால் மூடிக் கொண்டு கூச்சல் எழுப்பி, ஆகா! இதுதான் கோகில கானம் எனப் பஜனை பாடிகளை விட்டுப் பாராட்டச் சொல்லி அதிலே மெய்மறந்து ஆட்சி நடத்துகிற கூட்டம்தான், அண்ணாவின் பெயரைக் கட்சிக்கு வைத்துக்கொண்டு அவரது

கொள்கைகளை இழித்தும், பழித்தும், மறுத்தும் பேசியவாறு திரிகிற அ.தி.மு.க. எனும் கூட்டம்.

அந்தக் கூட்டத்தின் ஆட்சியில் இந்த ஆண்டு இந்த மாநிலத்துக்கு அளிக்கப்பட்ட நிதி நிலை அறிக்கை, ஏழை எளிய நடுத்தர மக்களைக் கசக்கிப் பிழியும் வரிகளை விதித்துள்ளது - பஸ் கட்டணத்தை மிக மிக அதிகமாக உயர்த்தியுள்ளது - மின் கட்டணமும் அப்படியே உயர்த்தப்பட்டுள்ளது - தொழிலாளர்கள், அரசு ஊழியர்கள், ஆசிரியர்களைத் தொல்லைக்குள்ளாக்கியுள்ளது - மருத்துவமனைகளுக்குப் பார்வையாளர் நுழைவுக் கட்டணம் - மாணவர்க்கான கல்விக் கட்டண உயர்வு - மற்றும் தி.மு.க. ஆட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டத்தையும், உழவர் சந்தை, பெரியார் நினைவு சமத்துவபுரம் ஆகியத் திட்டங்களையும் ஒழித்தது போன்ற மக்கள் விரோத செயல்கள், சட்டம், ஒழுங்கு, அமைதி அறவே கெட்டுப் போய்விட்டது என்ற கொடுமையான நிலைக்கு அடையாளமாக நாளும் ஒரு கொலை - பொழுதும் ஒரு கொள்ளை - வேளைக்கு ஒரு விபத்து என்ற தொடர் நிகழ்ச்சிகள்!

இவைகளைக் குறித்தெல்லாம் அக்கறை காட்டாமல் மக்களை திசை திருப்புவதற்காக, திட்டமிட்டே ஆதார மில்லாத பொய்க் குற்றச்சாட்டுகளைச் சட்டப் பேரவையிலே எடுத்துக் கூறுவதும், அதற்கு மறுப்புத் தெரிவிக்க எதிர்க்கட்சியான தி.மு.க. வுக்கு இடம் தராமல் காவலர்களை விட்டு வெளியேற்றுவதும், அ.தி.மு.க. ஆட்சியாளரின் ஜனநாயகம் என்றாகி விட்டது.

மத்திய அமைச்சர் முரசொலி மாறனுக்குப் பினாமி இருப்பதாக ஜெயலலிதாவும், பொன்னையனும் சட்டமன்றக் குற்றச்சாட்டு என்ற பாதுகாப்புடன் வடிகட்டிய பொய்யைச் சொல்லி, அதை மறுத்து மத்திய அமைச்சர் முரசொலி மாறன் அறிக்கை வெளியிட்டதும், இருவருமே வாய் திறக்காமல் ஆமைகளைப் போல் அடங்கி ஒடுங்கி விட்டார்கள்.

பிரதமராக இருந்த இந்திரா காந்தியும், முதல் அமைச்சராக இருந்த நானும் பேரம் பேசிக்கொண்டு, தமிழ் நாட்டுக்குத் துரோகம் செய்தது போலவும், என் வழக்குக்காகக் காவேரி வழக்கை நான் வாபஸ் வாங்கிக் கொண்டதாகவும் பொன்னையனும், ஜெயலலிதாவும் போட்டி போட்டுக்கொண்டு சட்டமன்றத்தில்

புளுகினார்கள். அந்தப் பொய்யை மறுத்து தி.மு.க. சார்பில் அவர்கள் இருவர் மீதும் உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தபோது நாங்களும் மனுஷர்தானே! வாய் தவறிச் சொல்லிவிட்டோம் என்று ஜெயலலிதா சமாளித்து, அதற்கு சபாநாயகரும் ஏற்பளித்து வழக்கு வாபஸ் பற்றிய ஆளுங்கட்சியின் குற்றச்சாட்டு வாய்மையற்றது, வஞ்சகமான பொய் என நிரூபிக்கப்பட்டது.

போலீஸ் மானியத்தில் வரலாற்றிலேயே முதன் முதலாக மானியத்தை விட்டு விட்டு காஸ்மாபாலிடன் கிளப்பைப் பற்றியும், கோல்ஃப் மைதானத்தைப் பற்றியும் மானியத்துக்கு சம்பந்தமில்லாமல் பேசி முரசொலி மாறன் மீது மீண்டும் ஒரு பினாமி குற்றச்சாட்டு சொல்லி, அதை முரசொலி மாறன் ஆப்பு அறைந்தது போல, ஆணி அடித்தது போல முதல் அமைச்சர் வாயைத் திறக்க முடியாத அளவிற்கு மறுத்த பிறகு அதை அப்படியே விட்டு விட்டார்கள்.

காவல் துறை மானியத்திலே இந்த அம்மையார் சுட்டிக் காட்டிய புள்ளி விவரங்கள் எல்லாம் போலியானவை, தவறானவை, முரண்பாடானவை என்ற என்னுடைய விளக்கத்திற்குப் பதிலளிக்க வக்கற்று, வகையற்று உள்துறைச் செயலாளரை விட்டு புள்ளி விவர ஓட்டைகளை அடைக்கச் சொல்லி, பாவம், அவர் ஓட்டைகளை அடைப்பதற்குப் பதிலாக புள்ளி விவரங்களின் முரண்பாடான கிழிசல்களை அதிகமாக்கி ஓர் அறிக்கை வெளியிட, அதையும் நான் மறுத்து வெளியிட்ட அறிக்கையைக் கூடுமான வரையில் சில பத்திரிகைகளில் வெளிவராமல் செய்து என் பதில் விளக்கத்திற்கு பதில் விளக்கம் அளிக்க முடியாமல் முதலமைச்சரும், உள்துறைச் செயலாளரும் முடங்கிப் போன கதை ஊரும், உலகமும் அறியும்.

அதுபோலவே அமைச்சர் பொன்னையன், சிமெண்ட் விவகாரத்தில் மத்திய வர்த்தகத் தொழில் அமைச்சர் முரசொலி மாறன் மீது ஊழல் குற்றச் சாட்டினை அவையிலே சுமத்தினார். அவற்றை நிரூபித்தால் தான் பதவி விலகத் தயார், அமைச்சர் தயாரா என்று முரசொலி மாறன் சவால் விட்ட பிறகு பத்து நாட்களாக பொன்னையன் வாயே திறக்கவில்லை.

இந்தப் பொய்களின் தொடர்வரிசையாகத்தான் மீண்டும் வேதாளம் முருங்கை மரம் ஏறிய கதையாக, 30-4-2002 அன்று பேரவையில் பொதுப்பணித் துறை அமைச்சர் பன்னீர்செல்வம்

என்பவரும், முதலமைச்சர் ஜெயலலிதாவும், பொன்னையனும் சேர்ந்துகொண்டு கோரஸ் பாடி, காவேரிப் பிரச்சினையில் கருணாநிதி துரோகம் செய்துவிட்டார் என்று காட்டுக் கூச்சல் போட்டிருக்கிறார்கள். அதை வன்மையாக மறுத்து ஆதாரங்களோடு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் தம்பி துரைமுருகன், அவர்களின் வாயை அடைக்கின்ற விதத்தில் பேசியிருக்கிறார். மேலும் அவரைப் பேச விடாமல் ஆளுங்கட்சியினரும், அவைத் தலைவரும் தடுத்துவிட்ட காரணத்தால் அமைதியான முறையில் தி.மு.கழக உறுப்பினர்கள் அவையிலே நின்று கொண்டே இருந்ததைக் கண்டித்து அவர்களைக் காவலர்களை விட்டு வெளியேற்றியிருக்கிறார்கள். அப்படி முதலமைச்சரும் அமைச்சர்கள் பன்னீரும், பொன்னையனும் அவிழ்த்து விட்ட உண்மைகள்(?) தான் என்ன?

1. 1968ஆம் ஆண்டிலேயே நான் காவேரி ஒப்பந்தம் 1974ஆம் ஆண்டோடு முடிந்துவிட்டது என்று சொன்னதாக ஒரு பொய்க் குற்றச்சாட்டு! அப்படி எந்த நேரத்திலும் நான் சொன்னது கிடையாது. இதுதான் நான் அதற்கு அளிக்கின்ற பதில். 1969ஆம் ஆண்டில் செப்டம்பர் 13ஆம் தேதியன்று காவேரிப் பிரச்சினை குறித்து குறுகிய கால விவாதம் ஒன்றை எதிர்க்கட்சியினர் நடத்த வேண்டுமென்று கேட்டு அதிலே எல்லாக் கட்சி உறுப்பினர்களும் பேசியிருக்கிறார்கள்.

அப்போது அவையில் பேசிய சிலர் 1974ஆம் ஆண்டோடு இந்த ஒப்பந்தம் காலாவதியாகிவிடும் என்று சொன்னபோது நான் இடை மறித்து 1924ஆம் ஆண்டு ஒப்பந்தம் நிரந்தரமானது என்றும், 1974ஆம் ஆண்டோடு அது முடிவடையாத ஒப்பந்தம் என்றும், 1974ஆம் ஆண்டு உபரியாக வருகின்ற தண்ணீரை எப்படிப் பகிர்ந்து கொள்வது என்பதைப் பற்றி பேசி முடிவு செய்யவேண்டும் என்றுதான் இருக்கிறது என்றும் நான் சுட்டிக்காட்டியிருக்கிறேன். நான் சொன்னதை அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர் திரு.கருத்திருமன் அவர்கள் பாராட்டிப் பேசியுமிருக்கிறார். இது 13-9-1969 தேதிய அவைக் குறிப்பு பக்கம் 355இல் இடம் பெற்றுள்ளது.

2. அடுத்து என்மீது நேற்று சாட்டப்பட்ட குற்றச்சாட்டு, ஹேமாவதி அணைகட்ட 1968ஆம் ஆண்டு நான் அனுமதி

கொடுத்துவிட்டேன் என்பதாகும். ஹேமாவதி அணைக்கட்டு, கபினி அணைக்கட்டு ஆகியவைகள் எல்லாம் கர்நாடக அரசினால் திட்டமிடப்பட்டு தொடங்கப்பட்டு விட்ட நிலையில்தான் பேரறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் தி.மு.கழக ஆட்சி அமைந்தது. இவர்கள் குறிப்பிடுகின்ற 1968ஆம் ஆண்டு என்பது அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்த கால கட்டம் என்பது கூட இந்த அசடுகளுக்கு நினைவில்லை போலும்!

அப்போதுதான் 1968ஆம் ஆண்டு ஆகஸ்ட் 20-ந்தேதி புது டெல்லியில் திரு.கே.எல்.ராவ் முன்னிலையில் நடந்த பேச்சுவார்த்தையில் ஹேமாவதி அணை கட்டப்பட்டாலும் 1924 ஒப்பந்தப்படி காவேரி தண்ணீர் விஷயத்தில் மைசூர் அரசு நடந்து கொள்ளும் என்று மைசூர் முதலமைச்சர் வீரேந்திர பட்டீல் உறுதியளித்தார். அந்தப் பேச்சுவார்த்தை பற்றி என்னிடம் செய்தியாளர்கள் கேட்டபோது, நான் அந்த மாநாட்டின் முடிவுகளை தமிழக முதலமைச்சர் அண்ணாவிடம் தெரிவிக்கப் போவதாகவும், அதன் பின்னரே, தமிழகம் எடுக்கப் போகும் நடவடிக்கைப் பற்றி மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்படும் என்று நான் கூறியது ஏடுகளில் அப்போதே வெளிவந்துள்ளது.

1968ஆம் ஆண்டிற்கு முன்பே, தமிழ்நாட்டில் காங்கிரஸ் ஆட்சி இருந்த காலத்திலேயே கபினி அணை 1924ஆம் ஆண்டு ஒப்பந்தத்திற்கு முரணாக விரிவுபடுத்தப்பட்டது. ஹேமாவதி அணைக்கு 1968ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டியவர் கர்நாடக முதல்வர் திரு. வீரேந்திர பட்டீல். கர்நாடக சட்டசபையில் 1924ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை நாங்கள் மதிக்க மாட்டோம் என்று வெளிப்படையாகவே அவர் அறிவித்தார். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் இருந்தே தெரிவிக்கப்பட்ட எதிர்ப்பை அண்ணா முதல்வராக இருந்தபோதே தி.மு.கழக ஆட்சியும் தொடர்ந்து தெரிவித்தது என்பதற்கு 8-7-1971 அன்று நான் பேரவையிலே கொண்டு வந்து நிறைவேற்றிய தீர்மானமே சான்றாகும்.

‘‘தமிழ்நாடு, மைசூர் அரசுகளுக்கிடையே 1892, 1924ஆம் ஆண்டுகளில் கையெழுத்தான ஒப்பந்தங்களின் விதிகள் அனைத்தையும் மீறி மைசூரில் ஹேமாவதி, கபினி, ஹேரங்கி, சொர்ணவதி அணைத் திட்டங்களையும் ,வேறு சில முக்கிய அணைத்திட்டங்களையும் அவைகளுக்கான திட்ட விவரங்களைப்

பற்றி தமிழ்நாடு அரசுக்கு மைசூர் அரசு முறைப்படி தெரிவித்துத் தமிழ்நாடு அரசின் முன் ஒப்புதல் பெறாமலும், இந்திய அரசின் அனுமதியை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளாமலும், இதனால் இந்திய ஒருமைப்பாட்டுக்கு ஊறு நேரிடுவது பற்றிப் பொருட்படுத்தாமலும் தன் போக்கில் நிறைவேற்றி வருவது குறித்து இப்போரவை தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்கிறது".

என்ற இந்தத் தீர்மானத்தையொட்டி ஹேமாவதி திட்டத்தை நிறுத்த வேண்டும் என்றும், அதுபற்றிய விவரங்களை 1924 ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி தமிழக அரசுக்கு அளிக்க வேண்டும் என்றும் தி.மு.க. ஆட்சி வலியுறுத்தித் தெரிவித்து மத்திய அரசுக்கும் சுட்டிக்காட்டியது. ஆனால் மத்திய அரசு சொல்லியும் கேளாமல், கர்நாடக அரசு ஹேமாவதி திட்டத்தைத் தொடர்ந்தது என்பதுதான் உண்மை.

3. அடுத்து காவேரி வழக்கை வாபஸ் வாங்கினேன் என்ற குற்றச்சாட்டு. வழக்கு பிரதமர் இந்திரா காந்தியின் வாக்குறுதிப்படி திரும்பப் பெறப்பட்டது. அதுவும் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுத்த முடிவின்படி, மீண்டும் தமிழக அரசு விரும்பினால் அந்த வழக்கைத் தொடரலாம் என்ற நிபந்தனையோடுதான் திரும்பப் பெறப்பட்டது. ஆனால் பேச்சுவார்த்தையில் பலன் காண முடியாமல் போனதால்தான் நடுவர் மன்றம் வேண்டுமென்ற முடிவுக்கு தமிழக அரசு வந்தது. பிரதமர் வி.பி. சிங் அவர்கள் காலத்தில் நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது. இடைக்கால ஆணையும் நடுவர் மன்றத்தினால் பிறப்பிக்கப்பட்டது. இவ்வளவுக்கும் பிறகு கர்நாடகம் பேச்சுவார்த்தையில் ஒரு நல்ல முடிவை எடுப்பதற்கு முன்வரவில்லை.

4. 1997-98 ஆம் ஆண்டு குஜ்ரால் திட்டத்தைப் பற்றியும் ஜெயலலிதா குறிப்பிட்டு அதை தி.மு.க. அரசு அப்படியே ஏற்கவில்லை, அது மாபெரும் துரோகம் என்று சட்டமன்றத்திலே அறிவுக்கு ஒவ்வாத ஒரு வாதத்தைச் செய்திருக்கிறார். குஜ்ரால் திட்டத்தைப் பற்றி தமிழக அரசு அனைத்துக் கட்சித் தலைவர் களையும் கலந்து கொண்டு எடுத்த முடிவின்படிதான் காவேரி ஆணையம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அந்த ஆணையத்தை திரு.

சி. சுப்ரமணியம், திரு. ஜி.கே. மூப்பனார், திரு. சங்கரய்யா, திரு. திண்டிவனம் ராமமூர்த்தி, திரு. குமரி அனந்தன், திரு. ஆர்.எம். வீரப்பன், திரு. ஜி.ஏ. வடிவேலு, திரு. எஸ். திருநாவுக்கரசு, திரு. இல.கணேசன், திரு.திருவாரூர் தங்கராசு ஆகிய தலைவர்களும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, தமிழ்நாடு விவசாயிகள் சங்கம், மற்றும் பத்திரிகைகள் இந்து, இந்தியன் எக்ஸ்பிரஸ், தினமணி, கல்கி, குமுதம், தினகரன், துக்ளக், சாவி, ஆனந்தவிகடன், குங்குமம், விடுதலை, தீக்கதிர் ஆகியவைகளும் வரவேற்றிருக்கின்றன. ஆனால் ஜெயலலிதா மட்டும்தான் அதை துரோகம் என்கிறார்.

ஜெயலலிதா சொல்கிற திட்டத்தை 1998இல் ஏற்றுக் கொண்டால், கர்நாடக அணைகளை அந்த ஆணையம் ஆக்கிரமித்துக் கைப்பற்ற வேண்டும். அம்மையாருக்கு இன்னொரு மாநிலத்தில் சென்று ஆக்கிரமிப்பதும், படையெடுத்து கைப்பற்றுவதும் சுலபமான வேலை! சினிமா கிளைமாக்ஸ் போல! ஆனால் அதன் விளைவுகள் என்ன என்பதையும் கர்நாடகா மட்டுமல்ல, கேரளாவும் அதை ஏற்கவில்லை என்பதையும் - அதனால் பெரும் அமளிகள் ஏற்படுமென்பதையும் நான் குறிப்பிட்டுள்ள தலைவர்கள் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். கச்சத் தீவை மீட்கப் படையெடுப்போம், கைப்பற்றுவோம் என்று 1991ஆம் ஆண்டு கோட்டைக் கொடி மர கொத்தளத்தின் உச்சியிலே நின்று கொக்கரித்தவர் அல்லவா? பிரபாகரனைக் கைது செய்திட இலங்கைக்கு இந்தியாவின் இராணுவத்தை அனுப்ப வேண்டும் என்று அண்மையிலே தீர்மானம் கொண்டு வந்தவர் அல்லவா?

அவருக்கு இப்படியெல்லாம் கர்ஜிப்பதும், கொக்கரிப்பதும் சர்வ சாதாரணமாகத் தெரியலாம். ஆனால் அதன் விளைவுகளைப் பற்றி என்னைப் போன்றவர்கள் எண்ணிப் பார்ப்பது அம்மையாருக்கு துரோகமாகத் தெரியலாம்! காரணம், அவருக்கு தெரிந்த அளவுக்கு எனக்கு துரோகத்தைப் பற்றித் தெரியாது!

அன்புள்ள,

மு.க.

2-5-2002

2736. முகமூடி கிழித்தெறிவோம் வாரீர்!

உடன்பிறப்பே,

சடை வளர்ப்பார் - பக்திக்
கடை விரிப்பார்; வலிய
படைகொண்டு பாரரசும் அரசினையும்
பணிய வைப்பார்! மின்னல்
இடைகொண்ட மாதர்களும்; தங்கு
தடையின்றி அவர் மாயை வீழ்ந்திடுவார்!
முடிகட்டிக் குடில்கட்டி
முனிவர் என வாழ்ந்தார் அந்நாள்
அவர்கள்கூட முற்றும் துறக்காத நிலையில் பற்றுண்டு
மங்கையர் மேல் என்று பெற்றிட்டார் பிள்ளைகளை!
போதி மரத்துப் புத்தர் என்றும் மகாவீரர் என்றும்
ஆதிசங்கரர் என்றும் இராமானுஜர் என்றும்;
ஓதினார்கள் உயர்கொள்கை எனினும்; அவர்தம்
வழிவந்தோர் எனச் சொல்லிக் கொண்டு
வன்முறையில் வழுக்கி விழுந்தோரும்
வருணாசிரமச் சகதியில் விஷவிதையை நட்டோரும்
பெருகிவிட்ட காரணத்தால்
கருகிவிட்ட தளிர் மரம்போல்
ஒழிந்துவிட்டதந்தோ அறவொழுக்கம் துறவொழுக்கம்
வழிந்து விட்டது தரையில் பால்போல சமுதாய
முன்னேற்றம்!

கடவுளைக் காட்டுகிறேன் வா என்று
கட்டிலுக்கு அழைப்பவனெல்லாம்
கடைந்தெடுத்த துறவியாம் சாதுவாம் சாமியாம்
காமன்கணை தொடுக்கும் கயவனெல்லாம்

காட்டுகிறேன் சொர்க்கமென்று பெண்களையே
மீட்டுகின்றான் வீணையாக!
ஆன்மீகத்தில் அஃதோர் அத்தியாயம் போலுமென
ஆட்சேபணை ஏதுமின்றி ஆரணங்குக் கூட்டம் - அவன்
ஆசையைப் பூசையென நம்பி;
ஏமாறுவது அத்தியாயமா? அநியாயமா?
எத்தனை சித்துவிளையாடிகள், சாமியாடிகள்
எத்துணை அற்புதம் புரிந்து காட்டிவிட்டார்
அத்தனையும் ஓர் நொடியில் ஒரு மாஜிக் நிபுணன்
அரங்கொன்றில் காட்டுவதை அறிந்திருந்தும்
அடி முட்டாள்களாய் மக்கள் ஆவதென்ன கொடுமை!
ஆண்டவனுக்கும் மனிதனுக்குமிடையில்
அவன் என்ன தரகன்?
தெய்வத் திருவருள் பெற்றவனுக்கேன்
தட்சணை, காணிக்கை, தினந்தோறும் பூஜை?
அனைத்தும் துறந்தவனின் அங்கமெலாம்
நனைத்துக் குளிப்பாட்ட பன்னீர் ஏன்? பாவை ஏன்?
நிர்வாணநிலை பெற்றோன் என்பதற்கறிகுறிதான்
நிர்வாணமாய்ப் பெண்களைப் படமெடுத்து
ரசிப்பதுவோ?

தண்டு கமண்டலத்தில் முறையே
தகதகக்கும் வாளும் மதுவும்
உண்டு கொழுத்து உப்பிக் கிடக்கின்ற உருவும்
பெண்டுகள் பலர் உடலமுக்க உல்லாசம் புரிகின்ற
குருவும்
கண்டு கண்டு இன்னும் அறிவுத் தெளிவில்லா
மண்டுகளாய் மக்கள் கூட்டம் - இருப்பதேனோ?
கள்ள நோட்டு அடிப்பதற்கோர் ஆசிரமம் - தங்கத்தைப்
பள்ளம் தோண்டி புதைத்து வைப்பதற்கோர் ஆசிரமம் -
இந்தக்
குள்ளமனத் திருடர்களை நம்பிக் கும்பிட்டுத்
தொழுகின்ற வெள்ளைமனப் பெண்டிரையோ

திருத்துவது மகா சிரமம்!
ஊரை ஏமாற்றிக் கொள்ளையடிப்பதிலே ஆண் என்ன;
பெண் என்ன?
கூரை வீட்டில் கொள்ளி வைப்பவரைத்
தேரில் வைத்து திருவிழா நடத்துகின்ற கூட்டத்தார்
சாரைப் பாம்புக்குச் சால்வை போர்த்திச்
சாக அடிக்கின்றார் பகுத்தறிவுச் சிந்தனையை!
பதவி உயர்வுக்கென்றும், பணமலை குவிப்புக்கென்றும்
பற்பல அதிகார வர்க்கத்தார் சாமியாரின் பொற்பாதம்
கழுவுகின்றார்!
பிள்ளையில்லாக் குறை நீங்க அரசமரம் சுற்றிவிட்டு
கிள்ளைமொழிப் பேதைகளும் இந்த ஆண்டிமடம்
செல்கின்றார்;
கையருள் பாலித்து அவள் மெய்யது போர்த்திக்
கணவனாய் மாறிக்கொண்டு தருகின்றான் தையலர்
கேட்டவரம்!
கொலை, கொள்ளை, கடத்தல், கற்பழிப்புச் சேட்டை
என
அலை அலையாய்ச் செய்திகள் அன்றாடம் வந்தாலும்
ஆசிரமத்துச் சடாமுடியில் ஒரு மயிர்கூட உதிராத படிக்கு
அரவணைத்துப் பாதுகாக்க ஆட்கள் தான்
இருக்கின்றனரே!
அமைச்சர்களே சாமிகளின் அடிமைகளாய் மாறி –
ஊரின்
புகைச்சலுக்கு அஞ்சாமல் வீற்றிருப்பின்
நெருப்பின்றிப் புகையாது என்பதை நிரூபிக்கத்
தீ பரவும்! திக்கெட்டும் பரவும்!
தெய்வீகத் திரைமறைவில் வாழ்கின்ற சில
திருடர் செயல் தீய்ந்து போகும் –
புரட்சிக் கவிஞருக்கு விழா எடுத்து
புதிய புதிய நூல்கள் ஆய்வு செய்து
எழுச்சிமிகு நிகழ்ச்சிதனை நடத்தினால் மட்டும் –
போதாதய்யா

“ உழைக்காத வஞ்சகர் தம்மை - மிக
உயர்வான சாதுக்கள் என்பது நன்றோ?” என
உணர்ச்சியோடு கேட்டாரே; அக்கவிஞர்! அந்தக்
கிளர்ச்சிகொள் நெஞ்சுடனே
கிளம்பிற்றுக் காண் தமிழச் சிங்கக் கூட்டமென
முரசறைந்து புறப்படுவோம்; மோசடித் துறவிகள்
சிலரின்
முகமூடி கிழித்தெறிவோம்! வாரீர்!

அன்புள்ள,

மு.க.

3-5-2002

2637. விடுதலை நாள் வெள்ளிவிழாக் கவிதை!

உடன்பிறப்பே,

(அகில இந்திய வானொலி சென்னை நிலையத்தின் சார்பில், இந்தியா விடுதலை பெற்ற 25-வது ஆண்டு வெள்ளி விழாவையொட்டி 15-8-1972 அன்று ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற கவியரங்கில் முதல்வர் கலைஞர் அவர்களின் கவிஞர்கள் அறிமுகக் கவிதை உரையில் சில பகுதிகள். இந்திய விடுதலை வெள்ளி விழாவில் கலைஞர் தலைமையில் கவியரங்கம் என்ற சிறப்பு மாத்திரமல்ல; எத்தனை மூத்த கவிஞர்கள் அவர் தலைமையில் கவிதை பாடியுள்ளனர். அக்கவிஞர்கள் மீது கலைஞர் அவர்கள் கொண்டிருந்த அன்பும் மரியாதையும் எத்தகையது என்பதையும் இதனைப் படித்து உணரலாம்.)

அவை கூடி வந்திருக்கும் அனைவர்க்கும்
அழகு தமிழ்ப் பாவலர்க்கும் நாவலர்க்கும் அமைச்சர்க்கும்
என்புருவம் எனினும் அன்புருவம் சிலம்புச் செல்வருக்கும்
என் தலைதாழ்ந்த வணக்கங்கள்!
அன்னைத் திரு நாட்டோரே
என்னை உங்கள் ஊழியனாய் ஏற்றுள்ளீர்.
சொன்ன சொல் தவறாமல் செயல்படுவேன்
எனக்கூறி இற்றை நாளில் வணங்குகின்றேன்.....!
அள்ளி முடித்த கூந்தலிலே பூவோடும் - கீழே
துள்ளி விழாக் கெண்டை மீன் விழியோடும்
புள்ளி மேவும் புதுக்கோலச் சித்திரத்தில் - விடுதலைக்கு
வெள்ளிவிழா என எழுதிக் காட்டுகின்ற
இந்தியத்துப் பெண்ணே - இளம் மாதே! எழுச்சிக்குத்
தாயே!

விந்தியத்துக்கப்பாலே வீரத் தமிழகத்தில்
பந்தயத்துக்குதிரைபோல் பாய்ந்தோடித் தியாகத் தீயில்
முந்திக் கொண்டு குதித்திட்ட மறவர்க்கு
வாழ்த்துக்கூறி நான் வணக்கம் செய்வேன்....!
இருபத்தைந்தாண்டுகளாய் எரிகின்ற விளக்கைக்
கண்டோம். அவ்விளக்கில்
இரத்தத்தை எண்ணெய் எனப் பெய்து ஏற்றி வைத்த
எம்மனோர் பாட்டன்மாரைத் தொழுது நின்றோம்!
குயில் கூட்டம் பாடுகின்ற கோலச் சோலையிலே
கோட்டான்கள் காட்டுக்கூச்சல் கேட்டிடவோ?
மானாடும் பொழில் - மயிலாடும் பூங்கா -
மந்திகளின் ஓய்யார மண்டபமாய் மாறுவதோ?
தென்றல் நுழைய வீடு கட்டி - அதில்
தீ புகவே விட்டிடவோ?
எங்கள் நாடு - எங்கள் மக்கள் - எங்கள் ஆட்சி திங்கள்
முகமெனச் சிறு குறையிருப்பினும்
எங்கள் நாடு - எங்கள் மக்கள் - எங்கள் ஆட்சி
சிங்கமறவர் - தங்க மங்கையர் - காப்பார் என்று
பொங்கு தமிழில் புவியினுக்குணர்த்துவோம்!
அத்தனை பேரையும் இயம்பிடல்இன்று
இயலாதென்றே எண்ணிச் சிலரைக்
கணக்காய் வகுத்துக் கவிதை புனைந்திட
வானொலி நண்பர் விடுத்த அழைப்பும்
தேனொலியாய் என்செவியில் விழுந்திடப்
பேரொலி முழங்கும் சூழல் விடுத்துப் - புலவர்கள்
சீரொலி கேட்க ஓடோடி வந்தேன்.
பாரதிபற்றிப் பாடுதற்கோர் பாரதி வந்துள்ளார்.
சுப்பிரமணிய பாரதியின் சுவையான தமிழ்ப்பாட்டைச்
சுத்தானந்த பாரதியின் புதுப்பாட்டில் கேட்டிடலாம்...
அதனாலே; இவர் முற்றும் துறந்தவர் என்றாலும் -
பற்றுத் துறக்காதவர் - தமிழ்ப்
பற்றுத் துறக்காதவர் - பலமொழி

கற்றும் மறக்காதவர் - தாய்மொழியை
மறக்காதவர் - இங்கே
சிறக்காது அவர் பாரதி பற்றிப்
பாடாவிட்டால் - எனவே அவர் பாடுகிறார் இப்போது!

(பாரதியார் பற்றிக் கவிஞர் யோகி சுத்தானந்த பாரதியார் பாடி முடிக்கிறார்.)

அடுத்து,

தூத்துக்குடியில் சுதேசிக் கப்பலைப்
பார்த்த வெள்ளையர் பதைத்திடும் வண்ணம்
ஓட்டிக் காட்டி ஓட்டாண்டி யாகிக்
கோவைச் சிறையினில் கொள்கை காத்திடச்
செக்கிழுத்த நம் செம்மல் வ.உ.சி.
சிறப்பினை விளக்கிட சென்னையில் ஒரு சிலை
முன்னரே வைத்துப் புகழ்பெற்றோம் எனினும்
அடுத்த திங்கள் ஐந்தாம் நாளினில்
இந்தியப் பிரதமர் இந்திரா அம்மையார்
சிந்தை உவந்து மேலுமோர் சிலையினைத்
தூத்துக்குடியில் திறந்திட இசைந்துளார்.
விஞ்சு புகழார்க்கு நம் அஞ்சல் துறையினர்
நினைவுத் தலையும் நிகழ்த்தலை நினைத்தனர்
சிறை சென்ற தியாகி சிதம்பரனார் போல்
சிறை சென்று தியாகம் செய்த நம் நண்பர்
செந்தமிழ்க் கவிபுனை சிந்தை படைத்திட்ட
சுந்தரம் வந்துள்ளார் கவிதை தந்திட...

(வ.உ.சி. பற்றிக் கவிஞர் எஸ்.டி. சுந்தரம் பாடி முடிக்கிறார்.)

அடுத்து,
வ.வே.சு. அய்யரெனும்
வாய்மைகொள் செயல்மறவர்
ஆவேச நீர்ச்சுழலில் சிக்கி
அன்றொரு நாள் மாய்ந்து விட்டார்

இன்றந்தச் சுதந்திர வீரரை நம்முன்
எழுந்து நடமாடச் செய்ய வந்துள்ள இக்
கொழுந்து யார்?
இக்கால ஔவை போலத் தக்கபடித் தமிழ்பாடும் மிக்க
திறனுடைய சௌந்தரா கைலாசம்
அம்மையார் கவிதையைத் தம்மகள் மூலமாய்
நம்மவர்க்கிங்கே நயமாய் அனுப்பினார்
பாடுக செல்வி நீ கேட்ட தாலாட்டை!

(வ.வே.சு. அய்யர் பற்றிக் கவிஞர் திருமதி சௌந்தரா கைலாசம் சார்பில் அவர் மகள் பாடி முடிக்கிறார்.)

அடுத்து,

சிம்மக் குரலோன் சிவா எனத் திகைத்து
நம்மை ஆண்டவர் நடுநடுங்கி அஞ்சுமாறு
நோயின் கொடுமையுடன் நாளெல்லாம்
கால்நடையாய்த்
தாயின் விலங்கொடிக்கத் தாயகத்தைச் சுற்றிவந்து
திருச்சி சிறைக்கோட்டம் சிறக்கக் கைதாகி
இருட்படலம் நீக்கும் எழுஞாயிறு போன்ற
சுப்பிரமணிய சிவா என்னும் ஒப்பற்ற தியாகியினைப்
பாடுதற்கு வல்லார் யார்?
உப்பில்லா உணவு உருப்படுமா? கொத்தமங்கலம்
சுப்பில்லாக் கவியரங்கம் சுவைதருமா? கொத்தமல்லிக்
கொப்பு; கறியினிலே மணக்கும்! என் நண்பர்
கொத்தமங்கலம் சுப்பு
கவிதையெலாம் மணக்கும் – கேட்ட தமிழர்
நெஞ்சமெலாம் இனிக்கும்
சிவசிவா என்று சும்மா இருக்காமல் இவ்வயதில் சிவா
பற்றிக் கவிபாட அவாவுற்று வந்தவரே
அவை ஏறாது போம் – நீர் இந்த
அவையேறாது போம் என்று சொல்லிவிட்டால் இங்கே
நல்ல
சுவை ஏறாது போகுமன்றோ?

சப்பென்று போகாமல் அவைக்குச் சுவைதருக
சுப்பு அவர்களே!

(சுப்பிரமணிய சிவா பற்றிக் கவிஞர் கொத்தமங்கலம் சுப்பு பாடி முடிக்கிறார்.)

அடுத்து,

பற்று வைத்தல் தவறன்று; பாவமன்று – ஆனால்
பற்று, கொஞ்சம் முற்றிப் போய் வெறியாக மாறுமாகில்
விபரீதம் பலவாய் விளைவதுண்டு நாட்டிலின்று
ஏகாதிபத்தியத்தை இந்திய நாட்டில்,
போகச் செய்யாவிட்டால் வேகாது இந்தவுடல்
அந்நியரை விரட்டி வேறோர் அந்நியரைத்
துணைகோடல் நன்றென்னும் துணிவுகொண்ட
ஓரினைஞர்
நேத்தாஜி போசுக்கும் முத்த வழிகாட்டியாய்
செருமானியர் படையுதவி பெறுவதற்கும் முயன்றவராம்
நாஞ்சில் தமிழ்மண்ணில் நல்ல பழங்குடியில் தோன்றிப்
புகழோடு மாய்ந்த சண்பகராமன் வெளிநாட்டில்
செத்தாலும் வெந்தபின் தன் சாம்பல் தமிழ்நாட்டில்
தெளிக்கப்பட வேண்டுமென்ற
மானம் படைத்தவொரு மறத்தமிழன் வீரத்தைக்
கானம்பாடி நமைக் களிப்பிக்க வருபவரோ
வானம்பாடியாம் –
பூவிரியுஞ்சோலைக்
காவிரிக் கரை தோன்றிப்
பாவிரிக்கும் –
பண்பாளர்
பண்டை நாள்
நண்பர்தான் – நற்கவிதை விருந்தொன்றை
உண்பதற்குத் தருவார் உவந்து!

(சண்பகராமன் பிள்ளை பற்றிக் கவிஞர் வானம்பாடி பாடி முடிக்கிறார்.)

அடுத்து,

வன்முறை, தீவிரவாதம் இவையெலாம்
நன்முறையாகா; நாட்டுக்குத் தீமைதான்!
அண்ணலும் அண்ணனும் அமைத்த நற்பாதை
அகிம்சைதான்; எனினும் அன்று நம் முன்னோர்
அன்னியர் ஆட்சியை அகற்றிநம் அடிமைத்
தளையினை அறுத்திடத் தகாவழி நாடுதல்
பிழையிலை என்றும் சிற்சிலர் பேசினர்
தவறுதான் இலையென அவருள் ஒருவனாய்
வாஞ்சிநாதன் வளர்ந்தான் புயலாய்!
ஆங்கில ஆட்சியின் பிரதிநிதியாக அன்று
ஆஷ்துரை என்பான் நெல்லையில் இருந்தான்
மணியாச்சி நிலையம் வண்டி வந்தடையவும்
கணித்து வைத்தவாறு வாஞ்சிநாதன் குழுவினர்
வளைத்தனர் வண்டியை; கைத்துப்பாக்கிக் குதிரையை
இழுத்தனன் வாஞ்சி; இறந்தான் வெள்ளையன்
தன்மான உணர்வால் தன்னையும் சுட்டுத்
தற்கொலையுண்டான் வாஞ்சி
தவித்தது அவன் குடும்பம்!
காஞ்சித் திணையெனில் காத்தலே யன்றோ? வாஞ்சியும்
சுதந்திரம் காத்த வரலாற்றினை இந்தத் தருணம் மறவாது
தரவருகின்றார்

அருணாசலம் – இனி அவர் கவி கேட்போம்.

(வாஞ்சிநாதன் பற்றிக் கவிஞர் கே.சி.எஸ். அருணாசலம் பாடி முடிக்கிறார்.)

தன்பெண்டு தன்தாய் தன் குடும்பம் பாராமல்
தாய்நாட்டின் மானம் தனைக்காத்தல் கடமையெனப்
போராட்டக் களத்தில் புனித நெஞ்சத்தால் கலந்து
தேரோட்டம் காணத் திரள்வது போல் அணி அணியாய்
வருகின்ற தொண்டர்க்கு வாகான தலைவனாய்த் –
தெம்பு

தருகின்ற வீரனாய் வள்ளலாய் உறுமுகின்ற
அதிகாரம் ஆதிக்கம் கண்டும் அஞ்சாது

பிடித்த கொடியினைப் பிடிவாதம் தளராது
அடித்தும் விடாமல் அங்கேயே உயிர் நீத்த
சாகாத குமரன்; அவன் கொடிகாத்த குமரன்
மிதந்திடும் தியாக வானில் மின்னிடும் துருவ விண்மீன்
சிதம்பர ரகுநாதன் இங்கே
இதம் பெறக் காட்டக் கேட்போம்.

(திருப்பூர் குமரன் பற்றிக் கவிஞர் தொ.மு. சிதம்பர ரகுநாதன் பாடி முடிக்கிறார்.)

அடுத்து,

எழுவரின் பெயரை இங்கே எழுதி நாம் காட்டி
விட்டோம்
கழிபெரும் சுதந்திரத்தைக் கண்டவர் இவர்கள் தாமா?
கோபுரக் கலசம் போலே குன்றின்மேல் விளக்குப்
போலே
மாபெரும் புகழ்பெற்றோர்கள் மற்றையோர்
எத்தனைபேர்?
மண்ணுக்குள் மறைந்திருக்கும் ஆணிவேர் போலே
கண்ணுக்குப் புலனாகாத தியாகிகள் எத்தனை பேர்?
நாயுடு நாயக்கர் முதலியார் என்று
செந்தமிழ் நாட்டின் முந்தைய தலைமுறைக்கு
விடுதலை வேட்கை வித்தூன்றியவர்கள் ஆன
வரதராசலு, பெரியார் ஈ.வெ.ரா., திரு.வி.க.,
ஜீவா எல்லாம்
பெயர் தெரியாதோர் பட்டியல்தானா?
அயர்விலாதின்னும் முயல்வோமானால்
ஏராளம் பேர் இருப்பரே தியாகிகள்?
தாராளமாக அவர் புகழ் பாடிட...
என் தனி நண்பர்
தமிழ் அன்பர்-
எங்கிருந்தாலும்
பொங்கும் செந்தமிழால்

ஆடிப்பெருக்கு போல் அழகு தமிழ்ப்பாக்கள்
பாடிப் பெருக்கும் பாவரசென்னும்
கண்ணதாசன் எண்ணம் உணர்ந்திடும்
வண்ணம் வந்துள்ளோம் அனைவரும்
சுதந்திரக் கிளியே! இதந்தருஞ்சொல்லில்
மிதந்திடுங் குயிலே! மெல்லிசை கேட்போம்
வருக வருக தருக நின் கவிதை!

(பெயர் தெரியாத் தியாகிகள் பற்றிக் கவிஞர் கண்ணதாசன் பாடி முடிக்கிறார்.)

சித்திரச் சோலைகளே உமைநன்கு
திருத்த இப்பாரினிலே - முன்னம்
எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தனரோ
உங்கள் வேரினிலே?
தாமரை பூத்த தடாகங்களே - உமைத்
தந்த அக்காலத்திலே - எங்கள்
தூய்மைச் சகோதரர் தூர்ந்து மறைந்ததைச்
சொல்லவோ ஞாலத்திலே
என்ற புரட்சிக் கவிஞரின் வரிகள்
நன்றென எண்ணி நாட்டு விடுதலை
வெள்ளி விழாவினை வெற்றியாய்க் கடந்து
உள்ளம் உவக்க ஒப்பிலாப் பொன்விழா
விரைவில் வருகென விழைகிறேன்
பெறுகளன் வாழ்த்தும் வணக்கமும் நன்றியும்!

அன்புள்ள,

மு.க.

5-5-2002

2738. வணிகர், நுகர்வோர் நலன் நாடிய கழக ஆட்சி!

உடன்பிறப்பே,

அ.தி.மு.க. ஆட்சியில் தங்கள் கோரிக்கைகள் அலட்சியப்படுத்தப்பட்டது கண்டு, மனம் நொந்து போராடிக் கொண்டிருக்கும் வணிகப் பெருமக்கள் கடந்த காலக் கழக ஆட்சியில் பெற்ற பயன்களை குறிப்பிடவே இந்தக் கடிதம்!

நாட்டு மக்களின் முக்கிய அங்கமாகத் திகழும் வணிகப் பெருமக்களின் வாழ்விலே ஒளியேற்ற வேண்டும் என்ற ஆர்வத்துடனும், அதே நேரத்தில் பொருட்களை வாங்கும் பொதுமக்களும் பயனடைய வேண்டுமென்ற எண்ணத்தோடும் கழக அரசினால் செயல்படுத்தப்பட்ட சாதனைகளில் சிலவற்றை மட்டும் நினைவூட்ட விரும்புகிறேன்.

பெரும்பான்மையான பொருள்கள் மீதிருந்த பலமுனை வரியை நீக்கி 1989-90ஆம் ஆண்டில் கழக அரசில் ஒரு முனைவரி கொண்டு வரப்பட்டது. பின்னர் வந்த அ.தி.மு.க. ஆட்சியில் பல பொருள்களுக்கு பலமுனை வரி விதிக்கப்பட்டது. 1996இல் மீண்டும் தி.மு.க. ஆட்சிக்கு வந்தவுடன் எல்லா பொருள்களின் மீதும் பலமுனை வரியை அகற்றி ஒருமுனை வரியாக ஆக்கப்பட்டது.

1975ஆம் ஆண்டு இறுதியில் கழக அரசினால் தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்ட தமிழ்நாடு வணிகர் நல வாரியம் 1976 சனவரியில் கழக அரசு கலைக்கப்பட்டமையால் தொடங்கப் படவில்லை. பின், 1989இல் கழக அரசு மீண்டும் அமைந்தபோது, 25.9.1989 அன்று வெளியிடப்பட்ட ஆணையின்படி தொடங்கப் பட்டு, 28.9.2000 வரை 35,352 வணிகர்கள் ஆயுள் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டனர்.

விற்பனை வரி மீது இருந்த 15 விழுக்காடு மேல்வரியும், 5 விழுக்காடு கூடுதல் மேல்வரியும் 17.7.1996 முதல் நீக்கப்பட்டது.

ரூ.25 கோடிக்குக் குறைவாக விற்பனைத் தொகை உள்ள வணிகர்களுக்குக் கூடுதல் விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது.

பருப்பு வகைகள், மஞ்சள், மிளகாய், வெல்லம், புளி, தனியா, பெருங்காயம், சீரகம், சீயக்காய், பனங்கற்கண்டு ஆகியவற்றிற்கு 4 விழுக்காடு மற்றும் 3 விழுக்காடு வரியிலிருந்து வரிவிலக்கு அளிக்கப்பட்டது.

கையினால் தயாரிக்கப்படும் தீப்பெட்டிகளுக்கு 3 விழுக்காடு வரியிலிருந்து வரிவிலக்கு அளிக்கப்பட்டது.

தேங்காய் மட்டை, நெல், உமி மற்றும் குருணை, அலுமினிய வீட்டு உபயோகப் பாத்திரங்கள், வெள்ளி மெட்டி, கொலுசு, அரைஞாண் கயிறு ஆகியவைகளுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டது.

கம்ப்யூட்டர்கள், அதன் உதிரி பாகங்கள், பொரி கடலை, பட்டாணி, பட்டாணிக் கடலை, புகைப்படத் தொழிலில் பயன்படுத்தப்படும் சுருள், தாள் மற்றும் இரசாயனங்கள் ஆகியவற்றுக்கு 11 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாக வரி குறைக்கப்பட்டது.

சமையல் எரிவாயு, எலெக்ட்ரானிக் கேஷ் ரிஜிஸ்டர், கணக்கிடும் மற்றும் பட்டியலிடும் பொறிகள், எலெக்ட்ரானிக் கருவிகள் மற்றும் எலெக்ட்ரானிக் பொருட்கள், எலெக்ட்ரானிக் கால்குலேட்டர்கள், வோல்டேஜ் ஸ்டெபிலைசர்கள், மரம், எலெக்ட்ரிக் பம்பு, செருப்பு, பாக்கு, சீவல் உள்ளிட்ட வாசனைப் பாக்கு, பிரஷர் குக்கர், உலர் பாட்டரிகள், உலர் செல்கள், இங்க், மின் விசிறி, மின்சார பல்புகள், டியூப் லைட்டுகள், பிட்டிங்ஸ், சோக் மற்றும் ஸ்டார்ட்டர்கள், நீர் வழங்குவதற்குப் பயன்படும் குழாய் போன்ற சாதனங்கள், காமிரா, என்லார்ஜர் மற்றும் லென்சுகள், பித்தளை, செம்புப் பாத்திரங்கள், ஆடியோ கேசட்டுகள், அலுமினியப் பொருட்கள் ஆகியவற்றுக்கு 11 சதவிகிதத்திலிருந்து 8 சதவிகிதமாக வரி குறைக்கப்பட்டது.

வணிகக் குறியிடப்படாத வெண்ணெய், நெய், பிஸ்கட், மிட்டாய் மற்றும் சாக்லெட்டுகள், எழுதுகிற காகிதம், அச்சடிக்கத் தேவைப்படும் காகிதம், கம்ப்யூட்டருக்கு உபயோகப்படும் காகிதம், பால் கொண்டு செல்ல பயன்படுத்தும் பிளாஸ்டிக் பைகள் மற்றும் ரெடிமேடு ஆடைகளுக்கு 8 சதவிகிதத்திலிருந்து 4 சதவிகிதமாக வரி குறைக்கப்பட்டது.

பருப்பு வகைகளிலிருந்து தயாரிக்கப்படும் மாவு வகைகளுக்கு 4 சதவிகிதத்திலிருந்து 2 சதவிகிதமாக வரி குறைக்கப்பட்டது.

யூரியா உரத்துக்கு விற்பனை வரி 4 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

சொட்டுநீர்ப் பாசன சாதனங்கள் போன்ற நீர்ப்பாசன சாதனங்களுக்கு வரி 11 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

மீன் மற்றும் கால்நடைத் தீவனத்திற்கு முழு வரிவிலக்கு அளிக்கப்பட்டது.

மூங்கிலால் செய்யப்பட்ட தட்டி, முறம், கூடைகள், தேங்காய் ஓடுகள், நிலக்கடலைத் தோல், சீயக்காய் பொடி, தொன்னை, சாம்பிராணி, சம்மட்டி, கடல் சிப்பி மற்றும் சிப்பிகளால் செய்யப்பட்ட பொருள்கள், தயிர், பஞ்சாமிர்தம், நாட்டு மருந்துகள் மற்றும் புற்றுநோய், தொழுநோய், காசநோய்களுக்கான உயிர் காக்கும் மருந்துகள், ஊனமுற்றோர் பயன்படுத்தும் சைக்கிள் வாகனங்கள், கல்வி அட்டவணைகள், வரைபடங்கள், சுற்றுலா கையேடு, வரைபடங்கள், சூரியஒளி மின்கலன்கள் (Solar Cell) செங்கல் மற்றும் ஓடு செய்யப் பயன்படும் களிமண், அவுரி இலை மற்றும் காய், நிலவாகை செடி இலை, மரவள்ளிக் கிழங்கின் கப்பி மற்றும் திப்பி, பழைய வெள்ளியினால் ஆன மெட்டி, கொலுசு, அரைஞாண் கயிறு, ரூ.50/-க்கும் குறைவான காலணிகள், தங்க நகைகள் ஏற்றுமதி செய்வோர்க்கு மத்திய அரசு நிறுவனமான எம்.எம்.டி.சி. விற்கும் தங்கம் ஆகிய இனங்களுக்கு முறையே 11 சதவீதம் என்று இருந்த வரிகள் ரத்து செய்யப்பட்டன.

பனியன் உள்ளிட்ட பின்னலாடைகளுக்கு வரி 4 விழுக்காட்டிலிருந்து முழு விலக்கு அளிக்கப்பட்டது.

பருத்திக்கு கொள்முதல் வரி 4 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாக குறைக்கப்பட்டது. சரிகை மீதான வரி 8 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. சமையல் எண்ணெய்களுக்கு 4 விழுக்காட்டிலிருந்து வரிவிலக்கு அளிக்கப்பட்டது.

வணிகச் சின்னம் இடப்பட்ட ஐஸ்கிரீம் மீதான 16 விழுக்காடு வரி 11 விழுக்காடாகக் குறைக்கப் பட்டது.

பேக்கரியால் தயாரிக்கப்படும் வணிகச் சின்னம் இல்லாத உணவுப் பொருட்களின் மீதான வரி 8 விழுக்காடிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

வணிகச் சின்னமுள்ள மற்றும் வணிகச் சின்னம் இல்லாத மசாலாப் பொடிகளுக்கான 16 விழுக்காடு வரி முறையே 4 மற்றும் 2 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

தேங்காய் மற்றும் கொப்பரைத் தேங்காய் மீதான வரி 1 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

விழியினிடையே பொருத்தப்படும் ஆடிக்கு (Intra Ocular Lens) வரி விலக்கு அளிக்கப்பட்டது.

காசினி கீரைப் பொடிக்கு 11 விழுக்காட்டிலிருந்து (Residuary) வரிவிலக்கு அளிக்கப்பட்டது.

எண்ணெய் எடுக்கப்பட்ட அரிசி தவிட்டிற்கு 11 விழுக்காட்டிலிருந்து (Residuary) வரிவிலக்கு அளிக்கப்பட்டது. தங்கம் மற்றும் வெள்ளிக் கட்டிகள் மீதான வரி 2 விழுக்காட்டிலிருந்து ஒரு விழுக்காடாக மாற்றப்பட்டது.

தங்கம் மற்றும் வெள்ளிக் கட்டிகள் மொத்த விற்பனைத் தொகை மீதான கூடுதல் விற்பனை வரி நீக்கப்பட்டது. உடனடி சாம்பிராணி வில்லைகள் மற்றும் குச்சிகள் மீதான வரி 11 விழுக்காட்டிலிருந்து ஒரு விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

உலர்ந்த ரொட்டித் துண்டுகள் (ரஸ்க்) மீதான வரி 16 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. கணினிகள் மற்றும் புற உறுப்புகள் மீதான வரி 4 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

கணினிகள் மற்றும் புற உறுப்புகள் மொத்த விற்பனைத் தொகை மீதான கூடுதல் விற்பனை வரி நீக்கப்பட்டது. தொலையச்சுக் காகிதம், தட்டச்சுக் காகிதம், தட்டச்சு படிப்பெருக்கும் காகிதம் மற்றும் உயர்தன்மை காகிதம் (Bond Paper) மீதான வரி 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

அனைத்து வகையான கொசு வலைகள் மீதான வரி 11 விழுக்காட்டிலிருந்து (Residuary) 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது. நிலக்கடலைப் பருப்பு, எள், அரிசிப் பொரி, வறுகடலை மற்றும் பட்டாணிப் பருப்பு ஆகியவற்றால் செய்யப்பட்ட இனிப்புகள் மீதான வரி 11 விழுக்காட்டிலிருந்து (Residuary) 4 விழுக்காடாக குறைக்கப்பட்டது.

சூரிய ஒளியில் இயங்கும் விளக்குகள், புடவை விளிம்புப் பட்டிகள், காலணிப்பட்டிகள், பருத்தி நூல் கயிறு, பிரம்பினால் செய்யப்பட்ட தட்டி, கூடை மற்றும் முறம், இறால் உண்ணும் உணவு, கூனி இறால் உண்ணும் உணவு, நீராவி, கரும்புச் சக்கை ஆகியவற்றிற்கு 11 விழுக்காட்டிலிருந்து (Residuary) வரிவிலக்கு அளிக்கப்பட்டது.

அனைத்து வகை மின்சக்திப் பொருட்கள் (Electrical Goods) மீதான விற்பனை வரி 16 விழுக்காட்டிலிருந்து 12 விழுக்காடாக குறைக்கப்பட்டது. மின்னணுப் பொருட்களின் பாகங்கள் மற்றும் துணைக் கருவிகளின் மீதான விற்பனை வரி 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

நித்தியக் கல்யாணி இலை மற்றும் வேர், அரைஞாண் கயிறு, பதப்படுத்தப்பட்ட பால், நாட்டுச் சர்க்கரை மற்றும் கற்கண்டு, வணிகச் சின்னமில்லாத மசாலாப்பொடி, காய்கறி வத்தல்கள், தமிழ் தினசரி காலண்டர்கள், காகித உறைகள் போன்றவற்றின் மீதான 11 விழுக்காடு, 8 விழுக்காடு, 4 விழுக்காடு மற்றும் 2 விழுக்காடு விற்பனை வரிகள் அறவே நீக்கப்பட்டன.

பழைய மற்றும் பயன்படுத்தப்பட்ட கண்ணாடி சீசாக்கள் மீதான கொள்முதல் வரி 16 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக்

குறைக்கப்பட்டது. வறுகடலையின் மீதான விற்பனை வரி 4 விழுக்காட்டிலிருந்து 2 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

கேளிக்கை வரிச் சட்டப் பிரிவு-4ன் கீழ் வரி செலுத்தும் திரையரங்குதார்கள் புதிய திரைப்படங்களின்மீது செலுத்தும் கேளிக்கை வரி 54 விழுக்காட்டிலிருந்து 40 விழுக்காடாகவும், பிறகு 30 விழுக்காடாகவும், இறுதியாக 25 விழுக்காடாகவும் குறைக்கப்பட்டது. திரைப்படங்கள் குத்தகை மீதான 4 விழுக்காடு விற்பனை வரி அறவே நீக்கப்பட்டது. ஆயுர்வேதா மற்றும் ஓமியோபதி மருந்துகளின் மீதான வரி 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டது.

அனைத்து வகைப் பருத்திக் கழிவுகள் மீதான விற்பனை வரி 8 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காடாக குறைக்கப்பட்டுள்ளது. கற்பூரத்துக்கு விதிக்கப்பட்டிருந்த 11 விழுக்காடு விற்பனை வரியை 4 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது.

சமச்சீர் வரிவிதிப்பு சம்மந்தமாக அனைத்து மாநில நிதியமைச்சர்கள் அடங்கிய கூட்டத்தில் தமிழக அரசு வலியுறுத்தியதின் காரணமாக அத்தியாவசியத் தேவைக்குப் பயன்படக்கூடிய பொருட்கள் மீதான வரியை 39 இனங்களில் வரி சீரமைப்புக்குழு குறைத்துள்ளது.

28.5.1993 முதற்கொண்டு 16.7.1996 வரை விற்பனைத் தொகை ரூ.5 இலட்சம் வரையில் இருந்த சுய வரி விதிப்பிற்கான உச்சவரம்பு, 1999-2000 ஆண்டு ரூ.1 கோடி எனவும் படிப்படியாக உயர்த்தப்பட்டுள்ளது.

விற்பனை வரி விதிக்கத்தக்க குறைந்தபட்ச விற்பனைத் தொகை அளவு ரூ.1 இலட்சம் என்பது ரூ.3 இலட்சமாக 1996-97இல் உயர்வு.

இதனால் 40 ஆயிரம் வணிகர்கள் பயனடைகிறார்கள். இடைமாநில சோதனைச் சாவடிகள் நீங்கலாக, உள்மாநிலத்தில் அமையப் பெற்ற சோதனைச் சாவடிகளில் 15 சோதனைச் சாவடிகள் 31.5.2000 அன்று வெளியிடப்பட்ட ஆணையின் மூலம் நீக்கப்பட்டன.

பதிவுத் துறையை கணினிமயமாக்கும் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டு, ஆவணங்கள் பாதுகாப்பு, சான்றிட்ட நகல்கள், வில்லங்கச் சான்று, வழிகாட்டி மதிப்பு தகவல் போன்றவை உடனடியாக வழங்கப்பட ஆவன செய்யப்பட்டது.

இன்னும் உண்டு நிறைய! இடம் இல்லை எழுத!

உடன்பிறப்பே,

புதிய வரிக் கொள்கை மாற்றத்தினாலும் - வரி விதிப்பு குறித்து வணிகப் பெருமக்களின் பிரதிநிதிகளுடன் கலந்து பேசுகிற நிலையை கழக அரசு கடைப்பிடித்ததாலும் - விற்பனை வரி சம்பந்தமான ஆலோசனைக் குழுக்களின் பரிந்துரைகளைப் பெருமளவு ஏற்றுக் கொண்டதாலும் - தி.மு.க. அரசு நாலரை ஆண்டுகளில் மாத்திரமே 2,700 கோடி ரூபாய் அளவுக்கு வரிச் சலுகைகளையும் வரிவிலக்குகளையும் வழங்கியது என்பதை நன்றியுணர்வு கொண்ட நல்லவர்கள் மறக்கமாட்டார்கள் அல்லவா!

அன்புள்ள,

மு.க.

8-5-2002

2739. சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றக் கோரி இந்தியப் பிரதமருக்கு தலைவர் கலைஞர் கடிதம்

உடன்பிறப்பே,

சேது சமுத்திரத் திட்டம் உருவான வரலாறு, அதனால் நாட்டிற்கு விளையும் நற்பயன்களை விளக்கியும், திட்டத்தை விரைந்து நிறைவேற்றக் கோரியும் பிரதமர் அவர்களுக்கு தலைவர் கலைஞர் அவர்கள் 8-5-2002 அன்று நெடிய மடல் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில் தலைவர் கலைஞர் அவர்கள்; ''கழகத்தின் அரை நூற்றாண்டு காலக் கோரிக்கையாம் சேது சமுத்திரத் திட்டத்தை - நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும், வேலை வாய்ப்புக்கும் வழிவகுக்கும் இத்திட்டத்தை; நாட்டு வளர்ச்சியை கருத்திற்கொண்டு தாங்கள் (பிரதமர்) தலையிட்டு தாமதமில்லாமல் நிறைவேற்றிடவும்'' என வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அன்புள்ள பிரதமர் அவர்களுக்கு,

வணக்கம். தமிழகத்தின் நீண்டநாள் கோரிக்கையானச் சேது சமுத்திரத் திட்டத்தை உடனே நிறைவேற்றக்கோரி இக்கடிதம் தங்களுக்கு எழுதுகின்றேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் இத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கிட்டத்தட்ட அரை நூற்றாண்டுக் காலமாக வலியுறுத்தி வருகிறது. நான் பல சமயங்களில் பொறுப்பில் இருந்த பல பிரதமர்களிடம் இதைக்குறித்து வலியுறுத்தி உள்ளேன்.

திராவிட முன்னேற்றக் கழகம் 23.7.67-ல் சேது சமுத்திரத்தின் ஒரு பிரிவாக உள்ள தூத்துக்குடி துறைமுகத் திட்டம், சேலம் இரும்பாலைத் திட்டம் ஆகிய திட்டங்களை நிறைவேற்றக்

கோரி முதல்வர் அறிஞர் அண்ணா அவர்கள் ''எழுச்சிநாளை'' அறிவித்தார். இத்திட்டம் உலகளவில் உள்ள சூயஸ் கால்வாய், பனாமா கால்வாய் போன்று சிறப்பைப் பெறும் என்பதை அறிந்து இத்திட்டத்தை ஆராயப் பல குழுக்கள் அமைக்கப்பட்டும் இத்திட்டம் நீண்டநாளாகக் கிடப்பில் போடப்பட்டது என்பது கவலைக்குரிய செய்தியாகும்.

மத்தியில் ஆளும் நமது தேசிய ஜனநாயக கூட்டணி அரசு இத்திட்டத்தை நிறைவேற்றிடவும், இத்திட்டத்தின் சாத்தியக்கூறினை ஆராய பண ஒதுக்கீடு செய்தது குறித்தும் நான் மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால் இந்த சேதுக் கால்வாய் திட்டம் விரைவாகச் செயல்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில் இக்கடிதம் மூலமாக தங்களை வலியுறுத்துகிறேன். சேதுக் கால்வாய் பற்றிய விவரங்களையும், அதனால் பொதுவாக இந்தியாவிற்கு குறிப்பாகத் தமிழகத்திற்கு ஏற்படும் பயன்களையும் தங்களுக்கு தெரிவிக்க விரும்புகின்றேன்.

சேதுக் கால்வாய்த் திட்டம் என்பது, பாக் ஜல சந்தியையும் மன்னார்வளைகுடாவையும் இணைக்கும் ஆடம்ஸ் பாலத்தின் குறுக்கே வெட்டப்படவேண்டிய கால்வாயின் பெயராகும். இத்திட்டத்தை ஆங்கில அரசாங்கத்தின் கப்பல் படையைச் சேர்ந்த கமாண்டர் டெயிலர் என்பவர் 1860-ஆம் ஆண்டு உருவாக்கினார். அன்றைக்கு அதனுடைய மதிப்பீடு ரூபாய் ஐம்பது இலட்சமாகும். பின்பு டவுண்ட்ஸ்டன் மற்றும் சர். ஜான்கூடே என்பவர்கள் இத்திட்டத்தினுடைய முக்கியத்துவத்தை அறிந்து, இத்திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமெனப் பல வழிகள் வகுத்தனர். ஆனால், ஒருசாரார் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததால் இத்திட்டம் கிடப்பில் போடப்பட்டது. மறுபடியும் 1921-ஆம் ஆண்டு சென்னை மாநில அரசு இத்திட்டத்தை வகுத்தும், ஆங்கில ஆட்சியாளர்களின் உதவியின்மையால் நிறைவேற்றப் படவில்லை.

1945-ஆம் ஆண்டு மறுபடியும் ஆங்கில அரசாங்கம் இத்திட்டத்தைப் பற்றி அறிய ஒரு குழுவை அமைத்தது. ஆனால், இந்தக் குழுவின் அறிக்கை வெளியிடப்பட வில்லை. இந்திய விடுதலைக்குப் பிறகு 1955-ஆம் ஆண்டு டாக்டர் சர்.ஏ.இராமசாமி முதலியார் தலைமையில், சேதுக்கால்வாய்த் திட்டத்தைப் பரிசீலிக்க ஒரு குழு இந்திய அரசாங்கத்தால் அமைக்கப்பட்டது. ''சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்றினால், இந்தியாவிற்கு

அன்னியச் செலாவணியும், கிழக்குக் கடற்கரையோரமாய்க் கப்பல் போக்குவரத்தும் எளிதாக இருக்கும்'' என இக்குழு தனது அறிக்கையில் கூறியதோடு, உடனே இத்திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமெனவும் தெளிவாக இந்திய அரசுக்குத் தெரிவித்தது. அதற்கு ரூ.9.98 கோடி திட்ட மதிப்பையும் அக்குழு வெளியிட்டது. சர்.ஏ.இராமசாமி முதலியார் குழுவின் அறிக்கையின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இந்திய அரசாங்கம் விட்டுவிட்டது. 1963-ஆம் ஆண்டு இந்திய அரசாங்கம் நான்காவது திட்டக் காலத்தில் இந்தச் சேதுக் கால்வாய்த் திட்டத்தை நிறைவேற்றியே ஆகவேண்டுமென முடிவு செய்தும், இத்திட்டம் செயல்வடிவம் பெறாமல் போய்விட்டது. அதன்பிறகு டாக்டர் நாகேந்திர சிங் குழுவும் (1963-ல்) சி.வி.வெங்கடேஸ்வரன் குழுவும் (1965-ல்) அமைக்கப்பட்டது. 1965-ஆம் ஆண்டு சி.வி.வெங்கடேஸ்வரன் தலைமையில் ஒரு குழு இத்திட்டத்தை அறிய நியமிக்கப்பட்டது. இந்தக் குழு இந்தத் திட்டத்தை நிறைவேற்ற சுமார் 37 கோடி ரூபாய் செலவாகும் என்றும், ஆனால், இத்திட்டத்தின் மூலம் ஆண்டுக்கு ஒன்றரைக் கோடி வருவாய் உள்ளதெனவும் கூறியது.

அதன்பின்பு இறுதியாக எச்.ஆர்.இலட்சுமி நாராயணன் தலைமையில் ஐவர் குழு ஒன்றும் மத்திய அரசால் 1981-82ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டது. இக்குழு தமிழகமெங்கும் சென்று இத்திட்டத்திற்கான பல்வேறு தரப்பாளர்களின் கருத்துகளையும் கேட்டறிந்தது.

இத்திட்டத்தின் பயனைப் பற்றி 1981-82ஆம் ஆண்டு மத்திய அரசின் குழு கீழ்க்குறிப்பிட்டவாறு ஆராய்ந்து மதிப்பிட்டது.

1. இந்தியாவின் கிழக்குக் கடற்கரையோரத்தில் தொடர்ச்சியான கடல்வழிப் போக்குவரத்திற்கு தற்போது வழியில்லை. இத்திட்டத்தைச் செயல் படுத்தினால் இந்து மகா சமுத்திரமும், வங்கக் கடலும் இணைய வாய்ப்புள்ளது. பாறைகளால் அமைந்த ஆடம்ஸ் பாலத்தை வெட்டி இணைத்தால் கடல் வழிப் போக்குவரத்திற்கு மிகவும் வசதியாக இருக்கும்.

2. சேதுக் கால்வாய்த் திட்டமும், தூத்துக்குடித் துறைமுகத் திட்டமும் ஒருங்கிணைந்தவை களாகும். சேது சமுத்திரத் திட்டத்தைச்

செயல்படுத்தினால் தூத்துக்குடித் துறைமுக வளர்ச்சியும் முழு அளவு அதிகரிக்கும். தூத்துக்குடியிலிருந்து கீழ்க்கண்ட துறைமுகங்களுக்குப் பயணம் செய்யும் நேரமும் குறையும். அ. தூத்துக்குடியிலிருந்து சென்னை - 434 மைல் (மிச்சப்படும் தூரம்) ஆ. தூத்துக்குடியிலிருந்து விசாகப்பட்டினம் - 376 மைல் (மிச்சப்படும் தூரம்) இ. தூத்துக்குடியிலிருந்து கல்கத்தா - 340 மைல் (மிச்சப்படும் தூரம்)

3. இக்கால்வாயினால் பயணம் செய்யும் தூரம் குறைவதால் கப்பலின் எரிபொருள் மிச்சப்படும். இதனால் இந்தியாவின் அன்னியச் செலாவணி செலவில் சுமார் 130 கோடி ரூபாய் ஒவ்வொரு ஆண்டும் மிச்சப்படும்.

4. இந்தியாவிற்கு அன்னியச் செலாவணி கணிசமான அளவு உயரும். இந்தக் கால்வாயின் மூலம் தமிழகத்தின் குளச்சல், முட்டம், தூத்துக்குடி, இராமேசுவரம், நாகப்பட்டினம், காரைக்கால், கடலூர், பாண்டிச்சேரி, சென்னை மற்றும் விசாகப் பட்டினம், கல்கத்தா வரையுள்ள கிழக்குக் கடற்கரைத் துறைமுகங்கள் வளர்ச்சி அடையும்.

5. இக்கால்வாய் வெட்டப்பட்டால் தூத்துக்குடித் துறைமுகத்தின் வளர்ச்சி ஏற்பட்டு அதன்மூலம் பொருளாதார ரீதியாக நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர், காரைக்குடி, திருப்பத்தூர், மதுரை, நாகர்கோவில் ஆகிய பிற்படுத்தப்பட்ட பகுதிகள் முழுதும் தொழில் ரீதியாக வளர்ச்சி பெறும்.

6. இந்தக் கால்வாய் வெட்டப்பட்டால், இந்தியாவின் தென் பகுதியில் அன்னியச் சக்திகள் ஊடுருவாமல் அது ஓர் அரணாக விளங்கும்.

7. இக்கால்வாயின் மூலம் மீன்பிடித் தொழில் தென்னிந்தியாவில் வளர்ச்சி பெறும். மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு இது ஒரு பாதுகாப்பு வளையமாகத் திகழும்.

8. நிலம் வழியாகச் செல்லும் நிலக்கரி, சிமெண்ட், உப்பு, உரங்கள், கடல் உணவு வகைகள், பருப்பு வகைகள், வற்றல், பருத்தி போன்ற பொருட்களைக் கிழக்குக் கடற்கரை மார்க்கமாக இந்தியாவின் பிற பகுதிகளுக்குக் கொண்டு செல்ல இக்கால்வாய் மிகவும் உதவியாக இருக்கும்.

9. தற்பொழுது கப்பல்கள் யாவும் இலங்கையைச் சுற்றிச் செல்கின்றன. இதனால் புயல் அபாயங் களில் சிக்கிக் கொள்ள நேர்கிறது. சேதுக் கால்வாய் மூலமாகக் கப்பல்கள் சென்றால், புயல் அபாயம் ஏதும் ஏற்பட வாய்ப்பில்லை.

10. இக்கால்வாய் ஒரு சுற்றுலா மையமாக அமைந்து உலகின் பல பகுதிகளிலிருந்து பயணிகளை ஈர்க்க வாய்ப்புள்ளது.

11. ஏற்றுமதி, இறக்குமதித் தொழில்கள் இக்கால் வாயினால் பெருகி, இந்தியாவின் வளர்ச்சியை அதிகரிக்கும்.

12. இக்கால்வாய் திட்டத்தை நிறைவேற்றினால் ஏற்படும் செலவை சுமார் பத்து அல்லது பனிரெண்டு ஆண்டுகளில் ஈடு செய்து விடலாம்.

13. இத்திட்டம் பொருளாதார ரீதியாகவும், தொழில் நுட்ப ரீதியாகவும் சாதகமானதாகும். இந்தியா வின் நலன் கருதி உடனடியாக இத்திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று இந்திய அரசாங்கத்தின் கப்பல் மற்றும் கடல்வழிப் போக்குவரத்து அமைச்சகத்தின் 1981-82ஆம் ஆண்டின் மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கை தெளிவாகக் கூறுகிறது.

இத்திட்டத்தைத் துவக்கும் நடவடிக்கையாக ஆய்வு மேற்கொள்வதற்கு என்று குறிப்பிட்ட தொகையை ஏற்கெனவே மத்திய அரசு ஒதுக்கியுள்ளது என்பதைக் கருத்தில் கொண்டு இனியும் தாமதம் செய்யாமல் இத்திட்டத்தைத் தொடங்கி தொடர்ந்து அமல்படுத்த வேண்டும் என்று உங்களிடம் கேட்டுக் கொள்கிறேன்.

மத்தியக் கப்பல் துறை அமைச்சகம், நாக்பூரிலுள்ள தேசியச் சுற்றுச் சூழல் மற்றும் பொறியியல் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு சேதுக் கால்வாய்த் திட்டம் செயல்படுத்துவது குறித்து ஆராய்ந்து அறிக்கை வழங்கிடும்படி அறிவுறுத்தியுள்ளது.

எனவே அந்நிறுவனம், உடனே தனது ஆய்வைத் தொடங்கி விரைவுபடுத்திட தாங்கள் நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறேன். பொருளாதார ரீதியாக எவ்வாறெல்லாம் இத்திட்ட தாமதத்தினால் இழப்பு ஏற்படுகிறது என்பதை என் கடிதம் மூலம் தாங்கள் அறிவீர்கள். எனவே, பொருளாதார வளர்ச்சியுடன் வேலை வாய்ப்புகள் வழங்கிடும் இத்திட்டத்தை நாட்டு வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு தாங்கள் தலையிட்டுத் தாமதமில்லாமல் நிறைவேற்றும்படி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அக்கடிதத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

அன்புள்ள,

மு.க.

9-5-2002

2740. மனமாற்றம் போக்கிட மறு சிந்தனை தேவை!

உடன்பிறப்பே,

கிடக்கிறதெல்லாம் கிடக்கட்டும்! கிழவியைத் தூக்கி மணையில் வை! என்று கிராமப்புறங்களில் ஒரு பழமொழி உண்டு.

அதுபோலத்தானிருக்கிறது,பலத்த கையொலிக் கிடையில், பலே! பலே! எனச் சில பத்திரிகைகளின் கொட்டை எழுத்துச் செய்திகளுடன் அவை நடுவே முதலமைச்சர் ஜெயலலிதாவின் அறிவிப்பு ஒன்று வெளியாகியிருப்பது!

பண்டிகை முன் பணம் கேட்டால், பதிலாக வருவது, நிதி நெருக்கடி!

போனஸ் கேட்டால், இல்லை - கிடையாது - கொடுக்க முடியாது - நிதி நெருக்கடி!

பறித்துக் கொண்ட சலுகைகளைத் திரும்பத் தருக எனக் கேட்டால், அதற்கும் பதில் நிதி நெருக்கடி!

பஸ் கட்டணத்தை மிக அதிகமாக ஏற்றி விட்டீர்களே! குறையுங்கள் எனக் கோரிக்கை வைத்தால், குறைக்க இயலாது - காரணம் நிதி நெருக்கடி!

மின் கட்டண உயர்வு மின்னலாகத் தாக்குகிறதே என்றால், என் செய்வது - நிதி நெருக்கடி!

அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் - பெரியார் நினைவு சமத்துவபுரத் திட்டம், ஏன் நிறுத்தி விட்டீர்கள் என்றால் நிதி நெருக்கடி!

சத்துணவில் குழந்தைகளுக்கு தி.மு.க. ஆட்சியில் வாரந்தோறும் வழங்கப்பட்ட முட்டை என்ன ஆயிற்று? நிதி நெருக்கடியால் நிறுத்திவிட்டோம்!

ஏழைப்பெண்கள் திருமணத்திற்குக் கழக ஆட்சியில் பத்தாயிரம் ரூபாய் வழங்கப்பட்டதே, அதையும் தொடராமல் விட்டது ஏன்? பதில், நிதி நெருக்கடி!

ஒரு முனை வரியாக தி.மு.க. ஆட்சியில் வகைப் படுத்தப்பட்ட கொள்கையை இப்போது பல முனை வரியாக்கி வரி மேல் வரி போட்டு வாட்டலாமா? கேட்டால் அதற்கும் சமாதானம், நிதி நெருக்கடி!

விளைவித்த நெல்லை கொள்முதல் ஒழுங்காக செய்யாத காரணத்தால் விவசாயி வெந்து சாகிறானே, கொள்முதல் செய்து அவன் குடும்பத்தைக் காத்திட முன் வராதது ஏன்? இதற்கும் அதே பதில்தான், நிதி நெருக்கடி!

சாதாரண மக்களும் பயன்படுத்தும் அத்தியாவசியப் பொருட்களான நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய், கடலை எண்ணெய், பாமாயில் போன்றவைகளுக்கு தி.மு.க. ஆட்சியில் ரத்து செய்யப்பட்ட வரியை மீண்டும் விதித்தது நியாயமா? நியாயந்தான், நிதி நெருக்கடியில் இதுவும் நியாயந்தான்!

கைத்தறியாளர் மகிழ்ச்சிக்கும், ஏழைகளின் புன்னகைக்கும் காரணமாக இருந்த இலவச வேட்டி சேலைகள் பொங்கல் விழாவில் தி.மு.க. ஆட்சியில் வழங்கப்பட்டதை பொசுக்கென நிறுத்திவிட்டது அநியாயமல்லவா? அதற்கும் காரணம், நிதி நெருக்கடி தான்!

13,000 மக்கள் நலப் பணியாளர்கள் வாழ்வில் மண்ணைப் போட்டுவிட்டீர்களே என்றால் நிதி நெருக்கடி!

இப்படி எல்லாவற்றுக்கும் ஒரே பல்லவியாக நிதி நெருக்கடியென்று உச்சரித்துக் கொண்டிருந்தவர்கள், திடீரென்று 2000 ஏக்கர் நிலத்தில் சட்டப் பேரவைக்கான மன்றம், அரசு அலுவலர்க்கான அடுக்கு மாடி மாளிகை, அமைச்சர்களுக்கான அறைகள் அமைந்த அத்தாணி மண்டபம், பேரவை உறுப்பினர்களுக்கான நவீன விடுதியென சுமார் இரண்டாயிரம் அல்லது மூவாயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் தலைமைச் செயலகத்தை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலிருந்து மாற்றி மாமல்லபுரம் அருகே அமைப்பதற்கு இந்த அரசு முடிவெடுத்திருக்கிறதாம்! முதலமைச்சரே அறிவித்திருக்கிறார் - ஒரு புறத்திலே அலுவலர்கள் அதிகமாகி விட்டனர், அவர்களைக்

கணிசமாகக் குறைக்க ஏற்பாடு! இன்னொரு புறத்திலே அலுவலர்க்கு இடம் போத வில்லை, அதனால் இடம் மாற்றம் செய்யப் போவதாக அறிவிப்பு!

இப்படி அறிவிப்பு, அருமை நண்பர் எம்.ஜி.ஆர். காலத்திலும் வெளி வந்தது உண்டு! ஏன்? தி.மு.க. ஆட்சியிலும் ஆலோசிக்கப்பட்டு, அப்போதே அந்தக் கருத்து கைவிடப்பட்டு, இருக்கிற இடத்தையே விரிவு படுத்திடும் திட்டம் மேற்கொள்ளப்பட்டது.

அதன் காரணமாகத்தான் இப்போதுள்ள தலைமைச் செயலகத்தின் மிக அருகிலேயே பத்து மாடிக் கட்டிட மாக நாமக்கல் கவிஞர் மாளிகை தி.மு.க. ஆட்சியில் உருவாக்கப்பட்டது.

சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்குவதற்கு ஏற்கெனவே இருந்த கட்டிடங்கள் வசதி போதாமல் இருந்ததால், பெரியவர் பக்தவத்சலம் காலத்தில் அரசினர் தோட்டத்தில் ஒரு கட்டிடம் கட்டப்பட்டு, 1967இல் அண்ணா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இப்பொழுது அனைவரும் பாராட்டுகிற அளவுக்கு மிகப் பிரம்மாண்டமாக இன்னொரு கட்டிடம் தி.மு.கழக ஆட்சியில் அமைக்கப்பட்டது. ஓமந்தூரார் அரசினர் தோட்டத்திலேயே உயர்ந்து எழுந்து உன்னதமாகக் காட்சி அளிக்கிறது.

செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் கம்பீரத்தையும், அதற்குரிய வரலாற்றுப் பழமையையும் புறக்கணித்து விடலாம் என்பது அவ்வளவு எளிதான ஒன்றல்ல! இப்படித்தான் முன்பிருந்த ஜெயலலிதா ஆட்சியில் கடற்கரையோரத்தில் செம்மாந்து விளங்கிடும் டி.ஜி.பி. அலுவலகத்தை இடித்து விட முடிவெடுத்து, எல்லா ஏற்பாடுகளும் செய்து விட்டார்கள்.

நல்லவேளை 1996-ல் கழக ஆட்சி வந்தவுடன் அந்தச் சரித்திரப் புகழ்வாய்ந்த பெரிய கட்டிடம் இடிக்கப்படுவதை நிறுத்தி, அதே கட்டிடத்தை அதே இடத்தில் மிகப் பொலிவுடன் நிலை பெறச் செய்யப்பட்டது.

1969ஆம் ஆண்டு நான் முதல்வர் பொறுப்பை ஏற்றதும், கோட்டைச் சுவர்கள் முழுவதும் கள்ளிச் செடிகளும், புதர்களும், மண்டிக் கிடந்ததை அகற்றுவதற்கு முடிவெடுத்து, மத்திய இராணுவ இலாகாவுக்கு அறிவித்து அவர்கள் அனுமதியுடன் புதுப்பிக்கப்பட்டதுதான் இன்றைய செயின்ட் ஜார்ஜ் கோட்டையின்

பொலிவான தோற்றமாகும். இந்தக் கோட்டையில் இராணுவத் துறைக்கு உள்ள உரிமை காரணமாக, எந்தப் பாதிப்பும் ஏற்பட்டு விட வில்லை! மேலும் பாதுகாப்புத்தான்!

புதிய சென்னை ஒன்றை உருவாக்கும் இந்த ஆட்சியாளர் எண்ணத்துக்கு நான் குறுக்கே நிற்கவில்லை. ஆனால்,

இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு கோட்டை முகப்பும், கொடி உயர்ந்து நிற்கும் கொத்தளமும், இவற்றையெல்லாம் விட அந்தக் கொடிக் கம்பத்தில்தான் இரவோடு இரவாக ஆர்யா என்ற பாஷ்யம் எனும் இளைஞர் யூனியன் ஜாக் கொடியை அகற்றி விட்டு, இந்தியச் சுதந்திரக் கொடியை ஏற்றினார் என்ற வரலாற்றின் அடிச்சுவடு அழியாத தொன்மைச் சிறப்பும் கொண்ட இந்தத் தலைமைச் செயலகத்தை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டும் என்ற எண்ணம் மனத்தில் ஊடுருவியிருந்தால், அதனைப் போக்கிக் கொள்ள மறு சிந்தனை தேவை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

10-5-2002

2741. சவுக்கடி சர்க்காரும் சரித்திர உண்மையும்!

உடன்பிறப்பே,

சவுக்கடி சந்திரகாந்தா என்று ஒரு தமிழ்த் திரைப்படம் சுமார் அறுபதாண்டுகளுக்கு முன்பு வெளியாகி வசூலில் சக்கை போடு போட்டது. ஊர் முழுவதும் அந்தப் படத்தின் வெற்றி பற்றியே பேச்சு! அதிலே பண்டார சன்னதிகளைச் சவுக்கால் அடிக்கும் காட்சி பற்றியே விமர்சனங்கள்! அந்தப் படத்திற்குப் பிறகு எம்.ஜி.ஆர். நடித்த எங்கள் வீட்டுப் பிள்ளை என்ற படத்தில் கதாநாயகன் வேடத்தில் எம்.ஜி.ஆர். அவர்கள், வில்லன் நம்பியாரை சவுக்கால் அடிக்கும் காட்சிக்காகவே அந்தப் படம் பெருவெற்றியைப் பெற்றது.

இந்த இரண்டு சவுக்கடிகளுக்குப் பிறகு சட்டப் பேரவையில் ஜெயலலிதா சுழற்றியுள்ள சவுக்கடி உலகப் பிரசித்தி பெற்ற சவுக்கடியாக மாறியிருக்கிறது. இது சாதாரணமான சவுக்கடியல்ல. ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அதிகாரிகள் உட்பட எல்லா அதிகாரிகள் மீதும் விழுந்த சவுக்கடி. புராணீக மொழியிலே உவமை சொல்ல வேண்டுமேயானால் மதுரையில் திருவிளையாடல் புராணத்தில் பிட்டுக்கு மண் சுமந்த சிவபெருமான் முதுகில் விழுந்த பிரம்படி, உலகத்தில் உள்ள எல்லா மக்களின் முதுகிலும் விழுந்த பிரம்படியாக ஆனதைப் போல இந்தச் சவுக்கடியும் அனைத்து அதிகாரிகள் மீதும் விழுந்துள்ளது.

சர்க்கஸ் ரிங் மாஸ்டர் போல சாட்டையால் அடித்து அடித்து அவர்களுக்கு பணி ஆர்வத்தை ஊக்குவித்து வருகிறேன் - அதிகாரிகளுக்கு பணி ஆர்வம் செத்து விட்டது - வேலை செய்யும் பழக்கமே இல்லாமல் இருக்கின்றனர் - என்று தினமலர் ஏட்டிலும், சர்க்கஸ் ரிங் மாஸ்டர் போல சாட்டையால் அடித்து அதிகாரிகளை வேலை வாங்குகிறேன் என்று தினமணி ஏட்டிலும்,

அதிகாரிகளை ரிங் மாஸ்டர் போல வேலை வாங்கி வருகிறேன் என்று தினத்தந்தி ஏட்டிலும், I have to act like a ring master,

says Jayalalitha என்று இந்தியன் எக்ஸ்பிரஸ் இதழிலும், Bureaucrats lackadaiscal : C.M. என்று இந்து இதழிலும் இன்று ஜெயலலிதா அதிகாரிகளுக்குக் கொடுத்த சவுக்கடி சான்றிதழ் வெளியாகியுள்ளது.

இத்தனைப் பத்திரிகைகளையும் எதற்காகக் குறிப்பிட்டேன் என்றால் நாளையே அம்மையார் பெயரில் நான் அப்படிச் சொல்லவில்லை, இப்படிச் சொல்லவில்லை, காலக்கட்டத்தில் உள்ள என் சிந்தனையைத்தான் தெரிவித்தேன், அதனை எல்லா ஏடுகளும் பெரிதாக வெளியிட்டு விட்டன என்று மாற்றிக் கொண்டு சொல்லக் கூடும். தற்போது கோட்டை அதிகாரிகள் வட்டாரத்திலே முதலில் அம்மையார் பெயரில் அறிவிப்பு அறிக்கையும் மறுநாள் அதனை மறுத்து வெளியிடுவதற்கான அறிக்கையும் சேர்த்தே தயாரித்து வைத்துக் கொள்ளலாம் என்று கிண்டலாகப் பேசிக் கொள்ளப்படுகிறதாம்!

Men may come; Men may go; I will go on to for ever - என்ற ஆங்கிலக் கவிஞன் டென்னிசனின் வார்த்தைகளின் அடிப்படையில் அரசியல்வாதிகள் ஆட்சிப் பொறுப்புக்கு வருவார்கள், போவார்கள். ஆனால், அரசு அதிகாரிகள் என்போர் நிரந்தரமானவர்கள் என்று அண்ணா அவர்கள் ஒருமுறை கூறியிருக்கிறார்கள். ஆனால் அந்த அரசு அதிகாரிகளைத்தான் சட்டப் பேரவையிலே முதல்வர் ஜெயலலிதா சவுக்கால் அடித்து விளாசியிருக்கிறார்.

சட்டப்பேரவை தொடங்கிய நாள்தொட்டு, அமைச்சர்கள் மற்றும் முதல்வர் வெளியிட்ட பதில்களிலே, கொள்கைக் குறிப்புகளிலே உள்ள ஏராளமான புள்ளிவிவர மோசடிகளை, முரண்பாடுகளை, தவறுகளையெல்லாம் நான் எடுத்து விளக்கியிருக்கிறேன். எதிர்க்கட்சி உறுப்பினர்களும் அவையிலே எடுத்துக் கூறியிருக்கிறார்கள். குறிப்பாக அம்மையாரின் துறையான உள்துறைக் கொள்கைக் குறிப்பிலே உள்ள முரண்பாடுகளைப் பற்றி நான் எடுத்து எழுதியபோது முதலமைச்சர் அதனை ஒப்புக் கொள்ளாமல், உள்துறைச் செயலாளரை விட்டு அதற்கு பதில் என்ற பெயரால் ஒரு அறிக்கையினை விடச் சொன்னார். அந்த அறிக்கையும் அபத்தம் என்று நான் நிரூபித்துக் காட்டிய போது வாய் மூடிக் கொண்ட ஜெயலலிதா, திடீரென்று சட்டப்பேரவையில்

நேற்று அவை முடியவிருக்கின்ற நேரத்தில் ஆர்ப்பரித்து முழங்கியிருக்கிறார்! அல்ல! அல்ல! அப்ரூவர் வாக்குமூலம் தந்திருக்கிறார். நான் முதல் அறிக்கை வெளியிட்டவுடனேயே தவறை ஒப்புக் கொண்டிருக்கலாம் அல்லவா? பிறகு ஏன் அவைகள் உண்மை என்று அதிகாரியை விட்டு முதல்வர் பதில் அறிக்கை விடச் சொன்னார்?

எதிர்க்கட்சித் துணைத் தலைவர் துரைமுருகன் அவர்கள், பேரவையில் உறுப்பினர்களும், அமைச்சர்களும் பார்த்துப் படிக்கக் கூடாது, பேசவேண்டும் என்று அவையின் மரபைச் சுட்டிக்காட்டினால், உடனே ஒரு அமைச்சர் குறுக்கிட்டு பேரவைத் தலைவரும், முதல்வரும்தான் தங்களுக்கு அறிவுரை கூற வேண்டுமென்று கூறியிருக்கிறார். அவை மரபு மீறப்படுமேயானால், அதனைச் சுட்டிக்காட்ட ஒவ்வொரு உறுப்பினருக்கும் உரிமை உண்டு என்பது கூட அந்த அமைச்சருக்குத் தெரியவில்லை. அதைத் தொடர்ந்து முதல்வர் ஜெயலலிதா, துரைமுருகன் பொதுக் கூட்டத்தில் பேசுவதைப் போல பேசுகிறார் என்று கிண்டல் வேறு செய்திருக்கிறார். அம்மையார் பொதுக் கூட்டத்தில் ஏதோ தன்னிச்சையாக பேசுவதாக நினைத்துக் கொண்டு! பொதுக் கூட்டத்திலேயே அதுவும் தேர்தல் பொதுக் கூட்டங்களிலே கூட எழுதி வைத்துக் கொண்டு இந்நாள் வரை படிக்கும் ஜெயலலிதா மற்றொருவரைப் பார்த்து கிண்டல் செய்வது வேடிக்கைதான்!

அம்மையார் எது பேசினாலும் அதிலே தி.மு.க.வையும், தி.மு.க. அரசையும் இழுத்துத்தானே முடிக்க வேண்டும் என்பதற்காக அவரது பதிலில் ஏதோ 1996ஆம் ஆண்டு முதல் 2001ஆம் ஆண்டு வரை இருந்த தி.மு.க. ஆட்சியிலே அதிகாரிகள் எல்லாம் மனச் சோர்வு அடைந்து விட்டதாகவும், அதனால்தான் புள்ளி விவரங்கள் தவறாகத் தயாரிக்கப்பட்டு அளிக்கப் படுவதாகவும் பழி சுமத்தியிருக்கிறார்.

தி.மு.கழக ஆட்சியிலே அதிகாரிகள் சோர்வுற்று, பணி ஆர்வம் இல்லாமல் இருந்திருப்பார்களேயானால், அவர்கள் அப்போது அமைச்சர்களுக்கும் எனக்கும் தயாரித்துக் கொடுத்த புள்ளி விவரங்களை அல்லவா தவறாகத் தயாரித்துக் கொடுத்திருப்பார்கள்! அப்போது ஜெயலலிதா எத்தனை முறை அரசின் புள்ளி விவரங்களிலே முரண்பாடு இருந்ததாக எடுத்துக்

காட்டினார்? அல்லது அவருடைய கட்சியின் சார்பிலே எடுத்துக் காட்டப்பட்டது? எனவே அதிகாரிகள் தி.மு.க. ஆட்சியிலே மனச் சோர்வடைந்து விட்டதாகக் கூறுவது தவறு! வேண்டுமானால் ஊழல் புரிந்த அல்லது ஊழலுக்கு துணை போன ஒரு சில அதிகாரி கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டதால், அந்த சில அதிகாரிகள் மனச்சோர்வு அடைந்திருப்பார்கள்.

அது தவிர மற்றபடி, எல்லா அதிகாரிகளுமே தி.மு.க. ஆட்சியிலே உற்சாகத்தோடுதான் பணியாற்றினார்கள் என்பதுதான் உண்மை. அது மாத்திரமல்ல, எல்லாவற்றிற்கும் அதிகாரிகள் மீதே பழி சுமத்திவிட்டு முதல்வரும், அமைச்சர்களும் தப்பித்துக் கொள்ள முடியாது. அதிகாரிகள் எழுதிக் கொடுக்கும் புள்ளி விவரங்களிலே சந்தேகம் இருக்குமேயானால் அதனை ஒருமுறைக்கு நான்கு முறை கேட்டுத் தெளிவு பெற்ற பிறகுதான், தாங்கள் அவையிலே சொல்லக்கூடிய வார்த்தைகளுக்குப் பொறுப்பேற்றுத்தான் அவர்கள் தங்கள் பதிலைக் கூற வேண்டும். அப்படித்தான் முதலமைச்சராக இருந்த நானும் சரி, எங்கள் அமைச்சர்களும் சரி, அவைக்குத் தகவல்களைத் தந்திருக்கிறோம். அதிகாரம் செலுத்தவும், ஆட்டிப் படைக்கவும்தான் நான், மற்றவைகளுக்கு அதிகாரிகள்தான் பொறுப்பு என்று கடமையை ஒதுக்கித் தள்ளிவிடக் கூடாது.

மேலும் ஜெயலலிதா, தான் உச்ச நீதி மன்ற உத்தரவு காரணமாக பதவியிலே இல்லாத ஐந்து மாத கால ஆட்சியிலே மீண்டும் அதிகாரிகளிடம் ஆர்வம் சரிந்து விட்டதாகவும், அவர்கள் நீட்டிக்கப்பட்ட விடுமுறை காலம் என்பதைப் போல அலுவலகங்களுக்கு காலை 11.30 மணிக்குத்தான் வந்தார்கள் என்றும் கூறியிருக்கிறார். அந்த ஐந்து மாத காலமும் முதல்வர் பொறுப்பிலே இருந்த பன்னீர்செல்வத்திற்கு இதைவிட வேறு அவமானகரமானச் சான்றிதழ் தேவையில்லை என்றே கருதுகிறேன்.

எப்படியோ முதல்வர் ஜெயலலிதா, அதிகாரிகள் மீது பழியைப் போட்டுவிட்டு, கொள்கைக் குறிப்பிலும், அமைச்சர்கள் அளித்த பதில்களிலும் மோசடியான புள்ளி விவரங்களும், தவறான பதில்களும் அளிக்கப்பட்டன என்பதை ஒப்புக் கொண்டு ஒப்புதல் வாக்குமூலம் அளித்தமைக்காக நன்றி! உண்மையை மக்கள் புரிந்து கொள்ள இதுவே போதும்!

தி.மு.க. ஆட்சியிலே அதிகாரிகள் மனச்சோர்வு அடையும்படியாக நடத்தப்பட்டார்கள் என்று ஜெயலலிதா கூறியுள்ளார். தி.மு.க. ஆட்சியில் எந்த அதிகாரியையும் சவுக்கால் அடித்ததுமில்லை, பாவம்! பெண் அதிகாரிகளின் முகத்தில் திராவகம் வீசியதுமில்லை - இது சத்திய உண்மை மட்டுமல்ல, சரித்திரபூர்வமான உண்மையும்கூட!

அன்புள்ள,

மு.க.

11.5.2002

2742. புதிய மக்களவைத் தலைவர் மனோகர் ஜோஷிக்கு தலைவர் கலைஞர் வாழ்த்து

மக்களவைத் தலைவராக பதவி ஏற்றுள்ள மனோகர் ஜோஷி அவர்களுக்கு தலைவர் கலைஞர் அவர்கள் வாழ்த்து தெரிவித்து செய்தி அனுப்பியுள்ளார்.

அன்பார்ந்த மக்களவைத் தலைவர் அவர்களுக்கு,

வணக்கம். தாங்கள் மக்களவைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டதற்காக நான் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

நியாயமாகவும், நேர்மையாகவும் அவையின் நடவடிக்கைகளை பல்வேறு தலைவர்கள் இதற்கு முன் நடத்தியுள்ளனர்.

மக்களவைத் தலைவர் பதவிக்கே உரிய பெருமிதத்தையும், கௌரவத்தையும் காக்க இதுவரை இருந்து வந்த அத்தகு உயரிய தலைவர்களின் வழிகளைப் பின்பற்றி தாங்களும் தொடர்ந்து செயல்படுவீர்கள் என்று நம்புகிறேன். இத்துடன், எனது இதயமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு தமது வாழ்த்துச் செய்தியில் தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

அன்புள்ள,

மு.க.

12-5-2002

2743. ஜனநாயக வேடத்தில், சர்வாதிகார வேங்கை!

உடன்பிறப்பே,

ஒரு சர்வாதிகார நாட்டில்கூட இப்படிப்பட்ட முறையில் எடுத்தேன், கவிழ்த்தேன் என்ற நிலையில் ஆளுங்கட்சியினர் ஆட்சி மன்றங்களை, இப்போது நடைபெறுகிற தமிழ் நாட்டு தர்பார் மண்டபங்களைப் போல நடத்துகிறார்களா? அல்லது நடத்தியிருக்கிறார்களா? என்று ஐயுறுகிற வகையில் ஜெயலலிதா துரைத்தனத்தின் சட்டப்பேரவைக் கூட்டத் தொடர் நடந்து முடிந்திருக்கிறது. எதிர்க்கட்சியினர், அதிலும் குறிப்பாகச் சட்டமன்றக் கழக உறுப்பினர்கள், ஆளுங் கட்சியின் உண்மைக்கு மாறான தகவல்களுக்கு விளக்கமளிக்க இடமின்றி, கழக ஆட்சியின் மீது அல்லது கழகத்தினர் மீது வீசப்பட்ட பொய்யான குற்றச்சாட்டுகளை மறுத்துரைக்க வாய்ப்பின்றி ஜனநாயகம் கேலிக்கூத்தாக்கப்பட்டிருக்கிறது.

ஜனநாயகத்தில் நீதி, நிர்வாகம், சட்டமன்றம் என்ற மூன்று தூண்கள் என்றும் நாலாவது தூணாக கருத்து வெளியிடும் சாதனம் என்றும் மேதைகள் எடுத்தியம்பக் கேட்டிருக்கிறோம்.

நீதிமன்றம் குறித்தும் முதலமைச்சர் ஜெயலலிதாவே தனது கோபத்தைப் பேரவையிலே வெளிப்படுத்தி விட்டு, மறுநாள் விளக்கமளித்து மழுப்பியது மறந்து போன விவகாரமல்ல!

நிர்வாகத்தை ஜெயலலிதா எவ்வாறு மதிக்கிறார் என்பதற்கு அவரது ரிங் மாஸ்டர் பெருமையும், அதிகாரிகளுக்குச் சவுக்கடி கொடுப்பதாக முழங்கிய முழக்கமுமே தக்க சான்றாகும்.

சட்டமன்றத்தை அவர் மதிக்கிற அழகு, கடந்த காலத்தில் சபாநாயகரைக் காலில் விழச் செய்த செயல் மூலமும், துணை சபாநாயகர் ஆசனத்தில் தனது உடன் பிறவாச் சகோதரியை உட்கார வைத்த நிகழ்ச்சியின் வாயிலாகவும், இப்போதும்

எதிர்க்கட்சிகளை நடத்துகிற விதத்தின் வழியிலும், நாட்டுக்கு நன்றாகவே விளக்கப்பட்டிருக்கிறது.

ஆலோசனைகளோ, அறிவுரைகளோ, அல்லது குறைகளைச் சுட்டிக் காட்டுதலோ, பத்திரிகைகள் மற்றும் செய்தி நிறுவனங்கள் மூலம் குறிப்பிட்டுக் காட்டுவதும் குற்றமெனக் கொண்டு அவற்றின் மீது சீறிப் பாய்ந்து அந்த நாலாவது தூணையும் இந்த ஆட்சியினர் அசைத்துப் பார்க்கத் தவறவில்லை.

பல மசோதாக்கள் அறிமுகப்படுத்தப்பட்டு அவற்றைப் பெரும்பான்மையினர் இருக்கும் ஒரே காரணத்தால், குற்றமுடைய, குறைபாடுடைய மசோதாக்களும் சட்ட வடிவம் பெற்றுவிட்டன; இந்தச் சர்வாதிகார ராஜ்யத்தில்!

ஒரே ஒரு சட்டமன்ற உறுப்பினருக்காக - அதாவது மு.க.ஸ்டாலினுக்காகவே, முன்னறிவிப்புடன், அல்ல! அல்ல! முன் எச்சரிக்கையுடன் அல்ல! அல்ல - முதல்வரின் மிரட்டலுடன் ஒரு சட்டம்! மேயராகவும், எம்.எல்.ஏ.வாகவும் இருந்தால் இரண்டில் ஒன்றைத் துறந்திட வேண்டும் - இல்லையேல் மேயர் பதவி பறிக்கப்படும் என்பதே அந்தச் சட்டம்!

மிசா கைதியாக ஓராண்டு காலம் சிறையில் இருந்து சிறைக் காவலர் கொடுத்த அடிகளால் ஸ்டாலின் உடலில் பெற்ற விழுப்புண்களைக் கண்டபோது நான் அடைந்த மகிழ்ச்சியைவிட, இப்போது அதிக மகிழ்ச்சி அடைகிறேன். அவர் பதவி பறிப்பதற்காக ஒரு சட்டம், எல்லா எதிர்க்கட்சிகளும் எதிர்த்துக் குரல் எழுப்பிய பிறகும் கொண்டுவரப்படுகிறதென்றால், ஈ.ன்ற பொழுதினும் பெரிதுவக்கத்தானே வேண்டும். ஆனால் ஒரே ஒரு வருத்தம் எனக்கு! அதாவது ஒரு ஸ்டாலினை மனத்தில் வைத்துக் கொண்டு மேயர்களின் அதிகாரங்களை எல்லாம் பிடுங்கி கமிஷனரிடம் கொடுத்துவிட்டு, சிறப்பு அதிகாரிகள் (Special Officer) ஆட்சி போல எல்லா மாநகராட்சிகளையும் நடத்துகிற நிலையை உருவாக்குகிறார்களே என்பதால்!

அண்மையில்தான் பிரதமர் அவர்களும், திருமதி சோனியா காந்தி அவர்களும் கலந்து கொண்ட ஒரு நிகழ்ச்சியில் உள்ளாட்சிமன்ற அதிகாரங்களை மேலும் வழங்க வேண்டுமென்று பேசியிருக்கிறார்கள். பஞ்சாயத்து ராஜ் சட்டம் கொண்டு வரப்பட்டபோது மறைந்த ராஜீவ்காந்தியின் கனவும் அதுதான்!

அந்தக் கனவை இதற்கு முன் இருந்த தமிழ்நாட்டு ஆட்சியாளர்கள் அனைவரும் படிப்படியாக நிறைவேற்றியுள்ள நிலையில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த உரிமைகளை அதிகாரிகளின் கையில் எடுத்துக் கொடுத்து விட்டு அவர்கள் நடத்தட்டும் நிர்வாகத்தை எனக் கூறுவது எந்த வகை ஜனநாயகமோ?

சர்வாதிகாரத்தின் மொத்த வடிவமாக இன்னொரு சட்டம்! தொழிலாளர்கள், அரசு அலுவலர்கள் குரல் வளையை நெரிக்கும் சட்டம் - வேலை நிறுத்தம் செய்தால் மூன்றாண்டு சிறைத்தண்டனை - இதனை அனைத்துக் கட்சிகளும் ஒரே குரலில் எதிர்த்தால், பொய் சொல்வதற்கென்றே பிறப்பை எடுத்துள்ள அமைச்சர் பொன்னையன் என்பவர், இது 1997லேயே தி.மு.க. ஆட்சியில் அதிகாரிகளால் தயாரிக்கப்பட்டு இச்சட்டம் இப்போது தேவையில்லையென்று கருணாநிதியால் கையெழுத்துப் போடப்பட்டு கிடப்பிலே போடப்பட்ட சட்டம்தான். அதையெடுத்துத்தான் இப்போது கொண்டு வருகிறோம் என்று என்மீது பழி போட்டிருக்கிறார்.

அதிகாரிகள், அத்தியாவசியப் பணிகளில் வேலை நிறுத்தத் தடைச் சட்டம் ஒன்றை என் பார்வைக்கு அனுப்பியிருக்கலாம் - அது என்னால் ஏற்றுக் கொள்ளப்படாமல் தேவையில்லை என்று ஒதுக்கப்பட்டிருக்கலாம்; 1997, 1998, 1999, 2000, 2001 இத்தனை ஆண்டுகளிலும் குப்பையில் கிடந்த அந்த அதிகாரிகளின் ஆலோசனை வரைவுக்கு உயிர் கொடுக்க நான் முனைந்தது உண்டா? இல்லையே! இப்போது இவர்கள் அல்லவா அந்தக் குப்பையைப் பொறுக்கி, மசோதாவுக்கு உயிர் கொடுத்து சட்டமாக்கி, அரசு அலுவலரை, தொழிலாளர்களை மிரட்டப் பார்க்கிறார்கள். எச்சில் என எறிந்ததை எடுத்து வைத்துக் கொண்டு ஆகா, என்ன இனிப்பு! என்று இளிப்பது பைத்தியக்காரத்தனமல்லவா?

இன்னொரு சட்டம், சினிமாக்காரர்கள் சிலர் விஷயம் புரியாமலே பொற்கால தேவதையே! என்று போற்றிப் பாடி இசைக்கிறார்கள்.

சினிமாவைப் பற்றி சட்டத்தில் உள்ள முக்கிய பிரிவு என்ன தெரியுமா?

கேபிள் டி.வி.காரர்கள் சான்றிதழ் பெறாத படங்களைக் காட்டக் கூடாது என்பதாகும்.

இது எப்போதுமுள்ள சட்டம்தான்! சென்சார் சர்டிபிகேட் இல்லாமல் எந்தப் படம் வெளியிடப்பட்டாலும் அது சட்டத்தை மீறியதாகும் என்று ஏற்கெனவே கண்டிப்பாக வரையறுக்கப்பட்டுள்ளது. அதை இவர்கள் திரும்பச் சொல்லியிருக்கிறார்கள், அவ்வளவுதான்!

இதில் எதிர்ப்பதற்குரிய பிரிவு என்னவென்றால், ஜனநாயகத்தில் கருத்து சொல்லும் அடிப்படை உரிமையைப் பறிக்கிற காரியம்தான்! உதாரணமாக -

அரசோ அல்லது உரிமம் வழங்குகின்ற அதிகாரியோ, காட்டப்படுகின்ற படக் காட்சி எதுவும் அமைதிக் குலைவை பெரும்பாலும் விளைவிக்கும் என்று கருதினால், அத்தகைய படக்காட்சி காட்டப்படுவதை நிறுத்தி வைக்கலாம். அப்படி நிறுத்தி வைக்கப்பட்டபோது மாநிலத்தில் எந்த இடத்திலும் அத்தகைய படக் காட்சியை காட்டுதலோ அல்லது காட்ட அனுமதித்தலோ கூடாது.

சட்ட முன் வடிவின் முக்கியமான ஒரு பிரிவு இது. இதன்மூலம் அரசுக்குப் பிடிக்காத ஒருவர் ஒரு திரைப்படத்தை எடுத்து வெளியிடும்போது, அதிலே ஒரு காட்சி அமைதிக்குலைவை பெரும்பாலும் விளைவிக்கக் கூடும் என்று வேண்டுமென்றே சொல்லி, அதனை அரசு உடனடியாக எங்கேயும் காட்டக் கூடாதென்று நிறுத்தி விட முடியும். இது திரைப்படத் தயாரிப்பாளர்களையும் சேர்த்து மிரட்டுகின்ற பிரிவு அல்லவா? அரசு நினைத்தால் கோடிக்கணக்கான ரூபாய் செலவழித்து எடுக்கப்பட்ட திரைப்படத்தினைக் காட்ட முடியாமல் தடுத்து விடலாம் அல்லவா? மேலும் இந்தச் சட்டத்தில் -

உரிமம் வழங்குகின்ற அதிகாரியினால் பிறப்பிக்கப்படும் இந்த ஆணை இரண்டு வார கால அளவிற்கு நடைமுறையில் இருக்கும். ஆனால் அப்படி நிறுத்தி வைக்கப்படும் ஆணை தொடர்ந்து நடை முறையிலே இருந்து வர வேண்டுமென்று அரசு கருதினால் அரசு விரும்புகின்ற காலம் வரையில் அதனை நீட்டிக்க அரசுக்கு உரிமை உண்டு. உரிமம் வழங்குகின்ற அதிகாரி (சென்னையில் போலீஸ் ஆணையர், மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித்

தலைவர்) உரிமதாரர் விதிகளின்படி நடக்கத் தவறியுள்ளார் அல்லது தண்டனை பெற்றுள்ளார் என்று கருதினால் நோட்டீஸ் கொடுத்து விட்டு அந்த உரிமத்தை ரத்து செய்யலாம் அல்லது நிறுத்தி வைக்கலாம். அரசாங்கத்திற்கு அல்லது ஆளுங்கட்சிக்குப் பிடிக்காதவர்கள் யாராவது இருந்தால் அவர்களை மிரட்ட அல்லது ஒடுக்க இந்தச் சட்டப் பிரிவு பயன்படுமல்லவா?

அரசு தானாகவோ அல்லது விண்ணப்பம் ஒன்று வந்ததின் பேரிலோ மேல்முறையீட்டு அதிகார அமைப்பிடம் உள்ள பதிவேட்டினை வரவழைத்துப் பரிசீலனை செய்யலாம். அப்போது முடிவினை மாற்ற வேண்டுமென்று அரசுக்கு தோன்றுமாயின் அதற்கிணங்க ஆணைகளைப் பிறப்பிக்கலாம்.

மேல் முறையீட்டு அதிகார அமைப்பு என்பது நில நிர்வாக ஆணையர் என்ற ஐ.ஏ.எஸ். மூத்த அதிகாரி ஆகும். அவரிடம் உள்ள கோப்பினை அரசாங்கமே வரவழைத்து ஆணையை மாற்றலாம் என்ற அதிகாரம் இந்தப் பிரிவின் மூலம் வழங்கப்பட்டிருப்பது ஆளுங் கட்சி தவறு செய்வதற்கு வழி வகுக்குமல்லவா?

கேபிள் டி.வி. ஆப்பரேட்டர் கொடுத்துள்ள இணைப்பு காரணமாக யாருக்காவது மின் அதிர்ச்சி (ஷாக்) அல்லது காயம் ஏற்பட்டால், கேபிள் டி.வி. ஆப்பரேட்டருக்கு 6 மாதங்களுக்குக் குறையாத, 2 ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையும், 25 ஆயிரம் ரூபாய் வரையிலான அபராதமும் விதிக்கப்படலாம்.

இப்படியொரு சட்டப்பிரிவினை இயற்றினால் அந்தச் சட்டம் மின்துறைக்குப் பொறுப்பேற்றுள்ள அமைச்சருக்கும், அதிகாரிகளுக்கும் பொருந்துமல்லவா?

காவல் துறை ஆய்வாளர் (இன்ஸ்பெக்டர்) அந்தஸ்துக்குக் குறையாத அதிகாரிகள் சந்தேகத்தின்பேரில் பகலிலோ அல்லது இரவிலோ தேவையென கருதுகின்ற உதவியாளர்களோடு ஒரு இடத்தின் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே நுழையவும், அந்த இடத்தையும், அங்குள்ள நபர்களையும் சோதனையிட வும், சந்தேகத்திற்குரிய நபர்களைக் கைது செய்து நீதிபதி முன் ஆஜர்படுத்தவும், அங்கேயுள்ள பொருள்களைக் கைப்பற்றவும் இந்தச் சட்டத்தின்படி உரிமை தரப்பட்டுள்ளது. இந்தப் பிரிவின் கீழ் எந்தவொரு காவல்துறை இன்ஸ்பெக்டரும் ஆளுங் கட்சிக்குப் பிடிக்காத கேபிள் ஆப்பரேட்டர்களின் அலுவலகங்களிலே

நுழைந்து எதையும் செய்வதற்கு உரிமை கொடுக்கப்பட்டுள்ளது என்பது மட்டுமல்ல! லஞ்ச லாவண்யம் பெருகுவதற்கும் வழிவகுக்குமல்லவா?

இந்தச் சட்டத்தில் என்ன அடங்கியிருந்த போதிலும், சட்டத்தின் வகைமுறை களிலிருந்து எந்த வகையினருக்கும் விலக்கு அளிப்பதானது பொது நலனுக்குத் தேவையானது என்று அரசு கருதினால் விலக்களிக்கலாம்.

இந்தச் சட்டப் பிரிவு அரசுக்கு வேண்டியவர்களுக்காகவே ஏற்படுத்தப்பட்டுள்ள பிரிவு அல்லது தாங்கள் கருதினால் தங்களுக்குக் கட்டுப்பட்டால் அவர்களை விடுவிப்பதற்காக செய்யப்பட்டுள்ள பிரிவு என்று எடுத்துக் கொள்ளலாம் அல்லவா?

இவ்வாறு சட்டங்களால் மட்டும் மக்களையும், தனது எதிரிகள் என்று எண்ணிக் கொண்டிருப்பவர்களையும் மிரட்டிக் கொண்டிருக்கவே இவர்களுக்கு நேரம் போதவில்லை. இவர்கள் எங்கே மக்களுக்கான நல்வாழ்வுத் திட்டங்களைப் பற்றிக் கவலைப்படப் போகிறார்கள்!

எப்படியோ ஜனநாயகம் என்ற பசுத்தோலைப் போர்த்திக் கொண்டு, சர்வாதிகார வேங்கை உலவும் காடாக தமிழ்நாடு மாறிக் கொண்டிருக்கிறது என்பது மட்டும் நூற்றுக்கு நூறு உண்மை!

அன்புள்ள,

மு.க.

12-5-2002

2744. பொய்க்கோட்டை, பொல பொலவென உதிரும்!

உடன்பிறப்பே,

நடந்து முடிந்த சட்டமன்றக் கூட்டத் தொடருக்கு மொத்தச் செலவு ஒரு கோடியே 75 இலட்ச ரூபாய் என்றும், அதாவது ஒரு நிமிடத்துக்கு 238 ரூபாய் செலவு என்றும், ஒரு மணி நேரத்துக்கு 14,266 ரூபாய் என்றும், ஒரு நாளைக்கு 3 இலட்சத்து 42 ஆயிரத்து 386 ரூபாய் செலவு என்றும் கணக்கிட்டு, வகை பிரித்துச் சட்டமன்ற உறுப்பினர் சம்பளம்; தொலைக்காட்சி உட்பட மொத்தங்கட்டிக் காட்டிவிட்டு, உபயோகமானதும், மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள் பற்றியதுமான விவாதங்கள் நடைபெறாமல் அ.தி.மு.க.வும், தி.மு.க.வும் சண்டை போட்டுக் கொண்டதுதான் மிச்சம் என்பது போல சில பத்திரிகைகள் விமர்சனம் செய்திருப்பதைப் படித்திருப்பாய்.

அ.தி.மு.க. வின் தவறுகளை சுட்டிக் காட்டினால் மட்டும் அந்தப் பத்திரிகையாளர்களின் ஆத்மா(!) சாந்தி யடையாது என்பதாலோ, அல்லது அவ்விடமிருந்து கிளம்பும் மிரட்டல் பாணங்களுக்கு அஞ்சியோ, தங்களின் மனச்சாட்சிக்கு விரோதமாகவே தி.மு.க. மீதும் இல்லாத பழியை சுமத்தி எழுதுகிறார்கள்.

இரண்டு இயக்கங்களையும் குறை கூறினால்தான், ஏதோ தங்களை நடுநிலையாளர் என்ற உச்சாணிக் கொம்பிலே வைத்து மக்கள் பார்ப்பார்கள் என்ற ஓர் எண்ணம்!

சட்டமன்றச் செலவை இப்படி வகை பிரித்துக் காட்டி விமர்சிப்பவர்கள், ஒரு நாளைக்கு சுமார் 2 தடவையாவது ஒத்திவைக்கப்படுகிற நாடாளுமன்றம் மற்றும் மாநிலங்களவை ஆகிய இரு அவைகளுக்கும் ஆகக் கூடிய செலவினத்தை, மாதம், நாள், மணி, நிமிடம் என்று காட்டி விமர்சிக்காததற்கு என்ன காரணமோ தெரியவில்லை. ஒரு வேளை அந்தக்

கணக்கு விபரங்கள் இவர்கள் கைக்குக் கிடைக்கவில்லையோ என்னவோ!

தி.மு.க.வையும் இணைத்து இணைத்துக் குற்றம் சாட்டி எழுதுகிறார்களே, பேசுகிறார்களே, அவர்களைக் கேட்கிறேன். காவேரிப் பிரச்சினை பற்றி தி.மு.க. சார்பில் எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் கூறாத நிலையில், காவேரிப் பிரச்சினையில் இந்திரா காந்தியுடன் கருணாநிதி பேரம் பேசிக் கொண்டு தமிழ்நாட்டுக்குத் துரோகம் செய்து விட்டார் என்று அ.தி.மு.க. முதலமைச்சரும், நிதியமைச்சரும் ஒரு பொய்யான - அவதூறான குற்றச்சாட்டைக் கூறிய போது தி.மு.க. வினர் கையது கொண்டு வாயது பொத்திக் கொண்டிருக்க வேண்டுமென இந்த நடுநிலையாளர்கள் கருதுகிறார்களா? அதை மறுத்து ஆதாரபூர்வமாக துரைமுருகன் பதில் கூறினால் அது ஒரு குற்றமா? அப்படி மறுத்து விளக்கம் அளிக்காமல் இருந்திருந்தால் ஏதோ, நானும் மனுஷி தான், வாய் தவறிச் சொல்லிவிட்டேன்! என்று முதல்வர் ஜெயலலிதா தனது பிழையை உணர்ந்திருப்பாரா?

விவாதிக்கப்பட்ட காவல்துறை என்ற மானியத்துக்கே சற்றும் தொடர்பில்லாமல், திடீரென வழியை மாற்றிக் கொண்டு, இருப்புப் பாதையில் தண்டவாளத்திலிருந்து தடம் புரண்ட ரயிலைப் போல, காஸ்மாபாலிட்டன் கிளப்பைப் பற்றியும் - கோல்ப் விளையாட்டு மைதானத்தைப் பற்றியும் முதல்வர் ஜெயலலிதா பேச ஆரம்பித்தாரே! திரு. சீனிவாசன் எனும் தொழில் அதிபர் எனக்கும் மத்திய அமைச்சர் முரசொலி மாறனுக்கும் பினாமி என்று கூறினாரே! அது விவாதப் பொருளுக்கே சம்பந்தமில்லாத வீண் வம்புதானே! அது போலவே அம்பேத்கர் பல்கலைக்கழக விவகாரத்திலும் ஜெயலலிதாதான் அதனைக் கொண்டு வந்ததைப் போல தவறாகப் பேசிட, அது தவறு என்று மறுத்தபோது, எனக்கு ஆங்கிலம் புரியவில்லை என்று அம்மையார் அவையிலே விமர்சித்தால் அதற்குக் கூட மறுப்பு தெரிவிக்காமல் அவையிலே இருந்தால்தான் தி.மு.கழகம் பேரவையிலே முறையாக நடந்து கொண்டது என்று எண்ணிக் கொள்வார்களா?

போக்குவரத்துத் துறையிலே எவ்வளவு இழப்பு என்பது பற்றிப் பேரவையிலே சுட்டிக்காட்டியபோது, நீங்கள் கூறுகின்ற புள்ளி விவரம் தவறு, ஏனென்றால் அரசின் சார்பில் தரப்பட்ட

வெள்ளை அறிக்கையிலே உள்ள புள்ளி விவரத்திற்கும், இப்போது தாங்கள் கூறுகின்ற புள்ளி விவரத்திற்கும் முரண்பாடு உள்ளது என்று குறிப்பிட்டு பொன்முடி சுட்டிக் காட்டினால், அப்படியா பேசுகிறாய், நாளைக்கு உன் முகமூடியை கழற்றுகிறேன் பார்! என்று கூறி அன்றிரவே அவர் வீட்டில் சோதனையிடுவதுதான் சரியென்று கருதுகிறார்களா? தவறான புள்ளி விவரத்தைத் தெரிவித்தாலும், அதனை மறுக்காமல் அப்படியே ஏற்றுக் கொண்டு நீங்கள் சொல்வதே சரி என்று அவையிலே தி.மு.க. தலையாட்ட வேண்டுமா? எனவே ஆரம்பிப்பவர்கள் அவர்கள்! அதை மறுத்துக்கூறினாலோ, ஆதாரம் என்னவென்று தி.மு.க. சார்பில் கேட்டாலோ - உடனே நடுநிலை நாயகர்கள் தி.மு.க., அ.தி.மு.க. இரண்டும் ஒரே மாதிரிதான் சட்டமன்றத்தில் நடந்து கொண்டதாக இட்டுக்கட்டி அவதூறு கூறுவது எந்த வகையில் நியாயம்? சிமெண்டு விலை பற்றியும், கோல்ப் மைதானம் பற்றியும் எள் முனையளவு ஆதாரமும் இல்லாமல், கோபாலபுரத்து பினாமி - மத்திய அமைச்சர் மாறனின் பினாமி என்று குற்றம்சாட்டி, அதற்கு அவைக்கு வந்து பதில் சொல்ல வாய்ப்பு இல்லாத நிலையில் முரசொலி மாறன் அவர்கள் வெளியிலிருந்து திட்டவட்டமான தெளிவான மறுப்பு அறிக்கையல்லவா வெளியிட வேண்டியிருந்தது.

பொன்னையன் அளித்த பட்ஜெட்டில் உள்ள பிழைகள் - புள்ளி விபரத் தவறுகள்- மற்றும் திட்டச் செலவுகளிலே வெட்டு - இப்படிப் பலவற்றைச் சுட்டிக்காட்டி விட்டு, மு.க. ஸ்டாலின் - தனது உரையின் இறுதிப் பகுதியாக மாநகராட்சி மன்றத்தில் அ.தி.மு.க. வினர் நடந்து கொள்ளும் முறையையும், ஆணையர்கள் அடிக்கடி மாற்றப்படுவதையும் சுட்டிக் காட்டியபோது, மேயர் பதவியா? எம்.எல்.ஏ. பதவியா? என்பதை நிர்ணயித்துக் கொள்க! அதற்கு ஒரு சட்டம் இந்தத் தொடரிலேயே கொண்டு வரப் போகிறேன் என்று சவால் விட்டு சண்டப் பிரசண்டம் செய்து எதிர்க்கட்சியான தி.மு.க.வை மிரட்டியது யார் என்பது நடுநிலையாளருக்கு (?) தெரியாத செய்தியா என்ன? எழுதியதை எல்லாம் எழுதிவிட்டு, சட்டப் பேரவையில் பெரும்பாலும் அற்ப விஷயங்களுக்கான விவாதத்தில்தான் அ.தி.மு.க.வும், தி.மு.க.வும் ஈடுபட்டன என்று முத்தாய்ப்பு வைப்பதின் மூலம், தி.மு.க. மீது அந்த நடுநிலையாளர் (?) தமக்குள்ள இயல்பான எரிச்சலையன்றோ தன்னையும்

அறியாமல் வெளிப்படுத்திக் கொள்கிறார்! எனவே, நடந்து முடிந்த இந்தச் சட்டமன்றத் தொடரில் கல்லகன், தாட்சர் எனச் சுட்டிக்காட்டி வம்பிழுத்த வக்கணைக்காரர் யார்? தகர டப்பா கிழிஞ்ச சட்டை என்று வர்ணித்து, வெள்ளிக் கரண்டியை வாயில் கௌவிக் கொண்டே பிறந்த அந்த மாளிகை மாணிக்கம் யார்? அக்கப்போர் - அற்பத்தனச்சொன்மாரி - இவை யனைத்தும் ஆளுங்கட்சியினர் பக்கமிருந்து வெளிப்படும்போது, தி.மு.க. உறுப்பினர்கள் காதைப் பொத்திக் கொண்டு மௌனமாக ஒவ்வொருவராக வெளியில் சென்ற பிறகும், விடாமல் வல்லடி வம்புகளில் ஈடுபட்டது ஆளுங்கட்சியினர்தான் என்பதைக் கண்ணுடைய, காதுடைய நிருபர்கள் நேரடியாகவே அறிந்துள்ளனரே!

முதலமைச்சர் ஜெயலலிதா, பேரவையில் சுழற்றிய அந்த அநாயாசமான சவுக்கடி சப்தம் கூடவா, இந்த நடுநிலையாளர்களின் காதுகளில் விழவில்லை?

அதுவும் சாதாரண ஆட்கள் மீது சுழற்றிய சவுக்கா? ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். உள்ளிட்ட அனைத்து அதிகாரிகள் மீதும் சுழற்றிய - சவுக்கடி அல்லவா?

அவையில் வாதங்கள் எதிர்வாதங்கள், வரவேற்கத் தக்கவை! ஆனால் வேண்டுமென்றே அவையில் தி.மு. கழகத்தின் மீது அபாண்டமான ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களைக் கூறிட ஆரம்பித்தவர்கள் யார் என்பதைப் புரிந்து கொண்டும், அப்படிப் புரிந்து கொண்டதை மறைத்து விட்டு, இருவரும் ஒன்றுதான் என்பது போலத் திட்டமிட்டுப் பொய்க்கோட்டை கட்டுகிற காரியத்திலிருந்து தங்களை மீட்டுக் கொண்டால் மட்டுமே ஜனநாயகத்துக்கு மரியாதையும் மதிப்பும் கொடுக்கும் வரிசையில் இடம் பெறுவார்கள். உண்மையிலேயே நடுநிலையாளர்கள் ஆவார்கள்!

அன்புள்ள,

மு.க.

13-5-2002

2745. அன்னையைப் பற்றி அண்ணா, எம்.ஜி.ஆர்., சிவாஜி!

உடன்பிறப்பே,

கடந்த 12-5-2002 அன்று அன்னையர் தினம் என்பதற்காக என் அன்புத் தாயார் அஞ்சுகம் முத்துவேலர் அவர்களைப் பற்றி ஓர் எழுத்தோவியம் தீட்டித் தருமாறு நாளிதழ் ஒன்றின் சார்பில் என்னிடம் கேட்கப்பட்டது.

என் அன்னையார் சென்னை ஸ்டான்லி மருத்துவ மனையில் 27-1-1963 அன்று இயற்கை எய்தியபோது அவரது உடல் என் வீட்டுக்கு வந்து சேருவதற்கு முன்பே அன்றைய முதலமைச்சர் பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் எனக்கு ஆறுதல் கூறுவதற்காக என் இல்லம் வந்து காத்திருந்தார் என்பது மறக்க முடியாத நிகழ்ச்சியாகும்.

அன்னையின் நினைவு போற்றுவதற்காக என் நண்பர்கள் 12-2-1963-ல் மலர் ஒன்று வெளியிட்டார்கள். அம்மலரில் வந்த கட்டுரைகளில் மூன்றையும், என் நெஞ்சத்து உணர்வுகளையும் இணைத்தது தான் இந்த எழுத்தோவியம் எனக் குறிப்பிட்டு அந்த நாளிதழுக்குத் தந்தேன். அது அந்த ஏட்டின் சென்னைப் பதிப்பைத் தவிர, மற்ற மாவட்டப் பதிப்புகளில் வெளியிடப் பட்டுள்ளது.

அதனையே இன்றைய கடிதமாக ஆக்கியுள்ளேன். ஆம், 72 வயதில் மறைந்த அன்னைக்காக, அவரது 78 வயது மகன் இன்றைக்கும் கண்களைக் குளமாக்கிக் கொண்டு தனது உடன்பிறப்புகளுடன் கவலையைப் பகிர்ந்து கொள்ளும் கடிதம் இது!

அம்மா! நான் மறக்காத - என்னால் மறக்க முடியாத உருவம்! நான் அவரை மறந்த நேரமே கிடையாது. அவரையும், என்னையும் எப்போதும் பிரிக்க முடியாது. என்னுடைய ஒவ்வொரு நினைவிலும் அவர் இருக்கிறார். அவர் மறைந்த போது என் இனிய நண்பர்கள்

பலர் ஆறுதல் கூறினார்கள். உற்றார் உறவினர் கண்ணீர் வடித்தனர். அரசியல் தலைவர்கள் அனுதாபம் தெரிவித்தனர். கலை உலகினர் வருத்தம் தெரிவித்தார்கள். கண்ணீர்க் கடிதங்கள் பல குவிந்தன. ஆனால் என் தாயார் என்னைப் பிரிந்து விட்டதாக நான் கருதவில்லை. ஏனென்றால், அவர் என்னைப் பிரிய மாட்டார். எப்படி பேரறிஞர் அண்ணா அவர்கள் என்னுடன் கலந்திருக்கின்றாரோ அதைப்போலவே என் தாயாரும் என்னுடன் கலந்திருக்கின்றார்.

நிலைக்கண்ணாடி முன் நான் நின்று சிரித்தால் என் தாயாரின் பொக்கை வாய்ச் சிரிப்பு தான் அதில் தெரியும். அவர் என்னை விட்டுப் பிரிந்ததாக நான் கருதாததற்குக் காரணம், என்னை விட்டுப் பிரிய அவருக்கு மனம் வராது என்பதால்தான். நான் இலை முன் அமர்ந்து உணவருந்தும்போது, அவர் தன் இடுப்பிலே இருந்து அம்புலி பார்க்கும் குழந்தையாகத்தான் என்னை எண்ணிக் கொண்டிருந்தார். நான் உறங்கும்போது அவரது இதயம் எனக்கு தாலாட்டிக் கொண்டேயிருக்கும்.

நான் உழைக்கும்போதோ அவரது மூச்சு எனக்குத் தென்றல். அவரிடம் நான் கற்றுக் கொண்டதுதான் கனிவு, கருணை, எளிமை, இனிமை, பண்பு, பழக்கம், பகைவரிடமும் பரிவு காட்டும் தன்மை அத்தனையும். என் அன்னை என்னை விட்டு தன் கடைசி மூச்சை விடுத்த போது நான் கதறினேன். ஆனால் அது கடைசி மூச்சல்ல! காலியாகி விட்ட என் சுவாசப்பைக்கு அவர் அளித்த உயிர் மூச்சு. அந்த மூச்சை எனக்கு அவர் வழங்கி, என்னை வாழ வைக்க அவரும் என்னோடு கலந்து விட்டார் என்பது தான் உண்மை.

அவர் மறைந்த நேரத்தில் அவரைப் பற்றி பேரறிஞர் அண்ணா அவர்களும், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்களும், நடிகர் திலகம் சிவாஜி அவர்களும் வெளியிட்ட கருத்துகளை இதிலே இணைப்பதே மிகுந்த பொருத்தமாக இருக்குமென கருதுகிறேன்.

என் அன்னை குறித்து அந்த மலரில் பேரறிஞர் அண்ணா எழுதியது :-

“குறுநகை காட்டும் கண்கள்! பொக்கை வாயிலே ஓர் புன்னகை! மூதாட்டி அஞ்சுகம் அவர்கள், சருகு, தளிர் ஆவது போலாகி விடுவார்கள் - தமது மக்களின் மகிழ்ச்சி கண்டு அல்ல - மாடு மனை கண்டு அல்ல - உற்றார் உறவினர் கண்டு அல்ல

- இயக்கச் செய்திகளை, வெற்றிகளைக் கேட்டதும்! மகன், வீட்டைக் கவனிப்பதில்லை, வேலையைக் கவனிப்பதில்லை, புத்திமதி சொல்லய்யா என்று முறையிட்ட தாய்மார்களைக் கண்டிருக்கிறேன். நான் பெற்ற மகனே என்னை அடித்த வெட்கம் கலந்த வேதனையை எப்படி வெளியே சொல்வேன் என்று கண்ணீரால் கூறிய, குமுறிடும் தாய்மார்களைக் கண்டிருக்கிறேன்.

வீடு வாங்கச் சொல், தோட்டம் வாங்கச் சொல் என்று சிபாரிசு செய்யச் சொல்லும் முறையில் மகன் பற்றிப் பேசிய தாய்மார்களைக் கண்டிருக்கிறேன்.

ஆனால் கண்டவுடன் மேயர் நம்ம கட்சி தானே வரும்? அதை விடக் கூடாது! புதுசா சட்டம் வருதாமே, என்ன செய்யப் போறீங்க? விலைவாசி குறைக்க எப்ப நடக்கப் போவுது கிளர்ச்சி? பேப்பர்லே இன்னக்கி நம்ம கட்சி விஷயம் என்னென்ன வந்திருக்குது? என்ற இது போன்ற கேள்விகளைக் கேட்டு ஆர்வத்தைப் பொழிந்த ஒரு அன்னையை நான் கண்டதில்லை. தம்பி கருணாநிதி இப்படிப்பட்ட தாய்ச் செல்வம் பெற்றிருந்த காரணத்தால்தான் - நிதி என்ற பெயரிட்டார்கள் போலும்.

வயது 72. தோற்றம் அப்பழுக்கற்ற கிராமிய முறை. அணிகலன் கிடையாது. அந்த வீட்டிலே மூதாட்டி அஞ்சுகம் அம்மையார், கழக மாநாட்டுக்காக வெளியூரிலிருந்து வரும் தாய்மார்களில் ஒருவர் போல, இயக்கப் பேச்சு ஒன்றிலேயே தமக்குச் சுவை தேடிக் கொண்டு உலவி வந்தார்கள். நடமாடிக் கொண்டிருந்த அம்மை, இப்போது படமாகிப் போய் விட்டார்கள். அவர்களை அறிந்த அனைவர் உள்ளத்திலும் அவர்களைப் பற்றிய நினைவு என்றும் இருக்கும் - நீங்காது நிலைத்து நிற்கும்.

கருணாநிதி திருச்சி சிறையிலிருந்து விடுதலையானபோது நான் சென்றிருந்தேன், வரவேற்று மகிழ்ச்சி பெற. அவர்கள் வரவில்லை. சில நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் வீட்டிலே கண்டு கேட்டேன். வேடிக்கை பேசும் நினைப்புடன் - மகன் ஜெயிலிலே இருந்து வருவதைப் பார்க்க வரவில்லையே, ஏன் என்று? நான் வேறல்ல, அந்தக் குடும்பத்தில் ஒருவன் என்று என்னை உணர்ந்து கொள்ளச் செய்யும் விதமாக அமைந்தது அவர்கள் பதில்! நீங்க போனிங்க இல்லே, அது போதாதா? என்று கேட்டார்களே! எத்தகைய பண்பு! எத்துணை பரிவு! கதறிக் கதறி அழுகிறார்கள்,

குமுறிக் குமுறி வதைபடுகிறார்கள் கருணாநிதி, மாறன், அமிர்தம், செல்வம் இவர்களெல்லாம் என்றால், அதிலே வியப்பில்லை. அன்னையை இழந்து மட்டுமல்ல, நடமாடும் அன்பை இழந்து தவிக்கிறார்கள். இயக்கத்தின் சகலத்தையும் தெரிந்து கொள்வதிலே அவர்கள் காட்டியது போன்ற அக்கறையை அந்த வயதும், நிலையும் உள்ளவர்களில், நான் வேறு யாரிடமும் கண்டதில்லை. இப்படிப்பட்ட மகனுக்கு வேறு விதத்திலே மனப்பான்மை கொண்ட தாய் அமைந்திருந்தால்....! பொது வாழ்வு, புகைச்சல் நிரம்பியதாகி விடும். கருணாநிதிக்கு வீட்டிலே கிடைத்த தாயின் புன்னகையும், அன்பும் பொது வாழ்க்கையில் புன்னகையுடன் ஈடுபடப் பெரிய வாய்ப்பினை அளித்தது என்பதை உணருகிறேன்.

இன்னும் இருந்திருக்கலாம் - எண்ணிடத் தோன்றும் - தவறு இல்லை - ஆனால், இவ்வளவாவது இருந்தார்களே - இருந்த வரையில் அவர்கள் நமக்கு அளித்தது எத்துணை சிறப்பானது என்பதனை எண்ணிக் குடும்பத்தினர் அனைவரும் ஆறுதல் அடைய வேண்டும். எனக்கு அந்தக் குடும்பத்திடம் ஏற்பட்டுள்ள பிணைப்பு இயற்கையானது என்று எண்ணுகிறேன். எனவே, கருணாநிதியும், மற்றவர்களும் தாயை இழந்த தவிப்பை, என் துணையும் பற்றும் உண்டு என்ற நினைப்பினால், அம்மையாரின் புகழினை ஒளி விடச் செய்யும் மணிகளாக விளங்கி வர வேண்டுமென்ற என் அன்புரையைத் தெரிவித்துக் கொள்கிறேன். குயில் பறந்து விட்டது, நாதம் நிலைத்திருக்கிறது. மலர் உதிர்ந்து விட்டது, மணம் நிரம்பி இருக்கிறது. அஞ்சுகம் மறைந்து விட்டார்கள் - அவர்கள் பற்றிய நினைவு நிலைத்திருக்கிறது.

மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். அவர்கள் எழுதியதில் ஒரு பகுதி - சகோதரர் மு.க. அவர்களின் அருமை அன்னையார் அவர்களோடு, பழகவும், அவர்களுடைய ஈடுகாட்ட இயலாத அன்புள்ளத்தை உணரவும் வாய்ப்பைப் பெற்றவன் நான். பார்த்தவுடனே, தம்பி வா! என்று அழைப்பதிலேதான் எவ்வளவு பாசம். சாப்பிடத்தான் வேண்டும் என்று வற்புறுத்துவதிலே தான் எவ்வளவு அழுத்தமான தாய்மை உணர்ச்சி. உட்கார்ந்து பேச ஆரம்பித்தால், வீட்டு விஷயங்களிலேயிருந்து தொழில், அரசியல் வரையிலே அளவளாவும்....அன்னையைத் தவிர வேறு யாருக்குமே இராத - அன்புள்ளம், இவைகளை யெல்லாம், என்னாலேயே மறக்க முடியவில்லையே! சகோதரர் மு.க. எப்படித் தான் மறப்பாரோ?

இன்பத்தைப் பிரிந்தால் மறுபடி இன்பத்தை அடையலாம். நட்பைப் பிரிந்தால் பிறகு நட்புக் கிடைக்கலாம். வாழ்க்கைத் துணையைப் பிரிந்தால் கூட வேறொரு வாழ்க்கைத் துணையைப் பெறலாம். மக்கட் செல்வத்தை இழந்தாலும், மறுபடி பெற்று விடலாம். ஆனால் அன்னையை - அன்புத் தாயை - உலகத்தை வளர்க்கும் தாய்மையைப் பிரிந்து விட்டால், மறுபடி நமக்கு யார் அன்னை? நினைத்தாலே நெஞ்சம் நடுங்குகிறது. அதிலும் வாழ்க்கையின் பெரும் பகுதியில் ஒரே மரமாக நிழல் தந்து, உயிர் வளர்த்த இப்படிப்பட்ட அன்னையைப் பிரிவதென்பது.... நினைப்பதற்கே முடியவில்லை. வாழ்க தாய்மை உணர்ச்சி! வளர்க அஞ்சுகம் அம்மையாரின் அன்புள்ளம்!

நடிகர் திலகம் சிவாஜி அவர்கள் எழுதியதில் ஒரு பகுதி :-

“சிறு வயது முதல் எங்களுக்குள் நெருக்கமான பழக்கம் உண்டு. இதற்கு எத்தனையோ காரணம். கலையோ, அன்போ, கொள்கையோ, குணமோ எதுவோ எங்களை உயிராக இணைத்து வைத்திருந்தது. நாளடைவில் அது வளர்ந்து வலுப்பெற்று கலை உலகில் ஒன்றாகச் சேர்ந்திருக்க வழி செய்தது. இத்தனையும் எனக்கும் அவருக்கும் உள்ள உறவு. அவர்! அது யார்? வாய் நிறைய, மூனா கானா என நான் இனிமையோடு அழைக்கும் திரு. மு. கருணாநிதி தான். சமீபத்தில் நான் தஞ்சை நகருக்குச் சென்றிருந்தபோது, பலரும் மு.க. வை எங்கள் வீட்டுப் பிள்ளை என்று எழுத்தாலும் வாயாலும் பாராட்டுவதை அறிந்தேன். அப்போது எனக்கொரு பழைய சம்பவம் ஞாபகத்திற்கு வந்தது. சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன் என்னை ஒரு தாய், எங்கள் வீட்டுச் செல்லப் பிள்ளை என்றார்கள். எனது அந்தத் தாய் இப்போது இல்லை. பத்து நாளைக்கு முன் இறந்து போனார்கள். அவர்கள் பெயர் அஞ்சுகத்தம்மாள். மு.க. வுக்கும் அன்னை. எனக்கும் அன்னை. அவர்கள் இறந்தார்கள் என்று கேட்டதும் விரைந்தோடினேன். சிறிது காலமாக கண்ணெதிரில் மறைந்து, மனக்கண்ணில் மட்டும் நிலைத்திருந்த அந்த உருவம், என்னைக் காணவோ, பேசவோ விரும்பாததுபோல் படுத்திருந்தது. அழுதேன். தேம்பித் தேம்பி அழுதேன். பின்னர் அவரும், நானும் கட்டிக் கொண்டு அழுதோம்”.

அன்புக் கண்ணீரல்லவா - அவர்களுக்கும் அது சாந்தியை அளிக்கும். எங்களுக்கும், அது, அவர்களது நிரந்தர ஆசியை

அருளும். நான் விரும்பும் பேறு அது தான். நான் அந்த அம்மைக்குச் செல்லப்பிள்ளை யென்றும், நானும் மு.க.வும் சேர்ந்தே வாழ்ந்தோமென்றும் ஆரம்பத்திலேயே நான் கூறினேன். அந்தக் காலங்களில் இந்த இரண்டு பிள்ளைகளுக்கும் அந்த அம்மையார் அநேக நாட்கள் ஒன்றாகவே உணவு படைத்ததுண்டு. அப்போதெல்லாம் அவர்கள் பரிமாறுவதில் கொஞ்சம் பாரபட்சமாக நடந்து கொண்டதை நான் அடிக்கடி கவனிப்பதும் உண்டு. நல்ல பண்டங்களை ஒருவருக்கு அதிகமாகவும், மற்றவருக்குக் குறைவாகவும் போடுவார்கள்.

இப்படிச் செய்யலாமா-இது நீதியா? என்று நான் கேட்பேன். நீ செல்லப் பிள்ளை-உனக்கு அதிகந்தான் என்பார்கள் அந்தத் தாய். அந்தச் செல்லத்தை மறந்துவிட்டுப் போய் விட்டார்கள். நான் என்றும் அந்த அன்புச் செல்லத்தை மறக்க முடியாது. அவர்களுக்கு எனது கண்ணீரே காணிக்கையாக, நான் அவர்களை என்றும் எண்ணிக் கொண்டேயிருப்பேன். முடிக்கிறேன் - முடிவாக ஒன்று கூறி முடிக்கிறேன் - பெற்றவளோடு, மற்றவர்களையும் தாயாக ஏற்றுக்கொள்ள இலக்கணம் பல உண்டு. எனக்கு அஞ்சுகம் அம்மையாரும் ஒரு தாய்! என் நெஞ்சுள்ளவரை அவர்கள் நினைவிருக்கும். அவர்கள் நினைவுள்ளவரை எனது கண்ணீரின் காணிக்கையும் அவர்களுக்கு இருந்து வரும் - இது உண்மை! இவ்வாறு எனது அன்னையைப் பற்றி எழுதிய இந்த மூன்று பெரு மக்களும் இப்போதில்லை. என் அன்னை, அண்ணா சம்மந்தப்பட்ட மற்றொரு நினைவு! 1962ஆம் ஆண்டு விலைவாசி எதிர்ப்புப் போரில் கழகம் ஈ.டுபட்டது. 20 ஆயிரத்திற்கு மேற்பட்ட கழகத்தினர் சிறைப்பட்டனர்.

அண்ணா அவர்கள் விடுதலை செய்யப்பட்ட இரண்டு நாட்களுக்குப் பிறகு அக்டோபர் 26ஆம் தேதி திருச்சி சிறையிலிருந்து நான் விடுதலையானேன். சிறை வாசலில் அண்ணா என்னை வரவேற்றார். நான் விடுதலையான அக்டோபர் 26இல்தான் நாட்டில் சீனப் போரை முன்னிட்டு நெருக்கடி நிலைமை குடியரசுத் தலைவர் இராதா கிருஷ்ணன் அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்டது. சிறையிலிருந்து வெளியே வந்த என்னைப் பார்த்து, நெருக்கடி நிலையைப் பிரகடனப்படுத்தித் தான் உன்னை வெளியே விடுகிறார்கள் பார்த்தாயா? என்று அவருக்கே உரிய புன்சிரிப்போடு அண்ணா கேலியாகக் குறிப்பிட்டார்.

அண்ணா அவர்களுக்கும் எனக்கும் அக்டோபர் 28-ந்தேதியன்று சென்னையில் வரவேற்பு ஊர்வலமும், கடற்கரையிலே மாபெரும் வரவேற்பு பொதுக்கூட்டமும் ஏற்பாடு செய்திருந்தார்கள். 26ஆம் தேதி திருச்சியில் விடுதலையான நான் நேரே சென்னை வந்து என் வருகையை எதிர்பார்த்து மனத்திற்குள்ளேயே குமைந்து கிடந்த என் அன்னையைப் பார்க்க முடியாமல், அன்று மாலை தஞ்சையிலும், மறுநாள் திருவாரூரிலும் நடை பெற்ற வரவேற்பு நிகழ்ச்சிகளில் பங்கு பெற நேரிட்டது. 28ஆம் நாள் காலை திருவாரூரிலிருந்து புறப்பட்டு நேரே சென்னைக்குத்தான் நான் வந்திருக்க வேண்டும். ஆனால் அண்ணா காஞ்சியில் தங்கி யிருந்தார். மதிய உணவுக்குக் காஞ்சிக்கு வந்துவிடு, மாலையில் இருவரும் புறப்பட்டு சென்னை சேர்ந்து ஊர்வலத்தில் கலந்து கொள்ளலாம் என்று ஆணை பிறப்பித்தார் அண்ணா. அவ்வாறே சென்று, சென்னை ஊர்வலமும், பொதுக் கூட்டமும் முடிந்து, நள்ளிரவில் வீட்டுக்குச் சென்றேன். என்னை ஈ.ன்றெடுத்த அன்புத் தெய்வம் வெளிப்புறத்து கூடத்தில் கண்ணுறங்காமல் வெற்றிலை பாக்கு உரலுடன் அமர்ந்து காத்திருந்தது. என்னுடன் வந்த அண்ணா அவர்களைப் பார்த்து அண்ணா தம்பி! உங்கள் அம்மா உங்களை ஒரு நாள் பிரசவ வேதனையோடு பெற்றிருப்பார்கள். அதனால் நீங்கள் வேலூரிலிருந்து விடுதலையானவுடன் நேரே காஞ்சிபுரம் சென்று உங்கள் அம்மாவைப் பார்த்தீர்கள். ஆனால் என் பிள்ளையை நான் பல நாள் இடுப்பு வலி - பிரசவ வேதனைகளுக்குப் பிறகு பெற்றெடுத்தேன். அதனால் தான் திருச்சியில் விடுதலையான பிள்ளை மூன்று நாள் கழித்து அவசரமாக தன்அம்மாவைப் பார்க்க வந்திருக்கிறதோ? என்று வேதனை கலந்த தனது ஆற்றாமையை வேடிக்கை போலக் குறிப்பிட்டார்கள். இப்படிப்பல நிகழ்ச்சிகள்! என் அன்னையார், என் ஆயுள்வரை நினைத்துப் பார்க்க விட்டுச் சென்றிருக்கிறார்கள்!

அன்புள்ள,

மு.க.

14-5-2002

2746. தமிழ்ச் சாதி என அணி வகுப்பது எப்போது?

உடன்பிறப்பே,

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமையான்

என்ற குறளுக்கு அறிஞர் பெருந்தகை முனைவர் மு.வரதராசனார் உள்ளிட்ட பெருமக்கள் பலரும்,

எல்லா உயிர்க்கும் பிறப்பு, ஒரு தன்மையானதே. ஆயினும் செய்கின்ற தொழில்களின் உயர்வு தாழ்வு வேறுபாடுகளால் சிறப்பியல்பு ஒத்திருப்பதில்லை

என்றே பொருள் கூறியுள்ளனர் என்பதை நீ அறிவாய்!

நான் 1330 குறட்பாக்களுக்கும் உரையெழுதிய போது, இன்னும் சற்றுப் பொருத்தமாக இருக்கும் என்ற நம்பிக்கையுடன், பின்வருமாறு இந்தக் குறளுக்கு உரை எழுதினேன்.

பிறப்பினால் அனைவரும் சமம். செய்யும் தொழிலில் காட்டுகிற திறமையில் மட்டுமே வேறுபாடு காண முடியும்.

இது என்னுரை! அதாவது நாற்காலி மேசை செய்கிற தொழில் புரிபவர்- நடனப் பயிற்சி அளிக்கிற தொழில் புரிபவர் - தையல் தொழில் புரிபவர் - தங்கம் வைரத்தில் அணிமணி செய்யும் தொழில் புரிபவர் - என்று அவர்கள் செய்கிற தொழில்களை வைத்து உயர்வு தாழ்வு கருதாமல், அந்தந்தத் தொழிலைச் செய்பவர்களிலேயே அதனை யார் சிறப்பாகத் திறமையுடன் செய்கின்றனர் எனக் கருதிப் பார்த்தே வேறுபாடு காண முடியும் என்பது தான் என்னுரைக்கான விளக்கமாகும்.

வீடு கட்டும் தொழில் புரிவோர் - வீதி கூட்டும் தொழில் புரிவோர் எனப் பகுத்துப் பார்த்து அவற்றில் உயர்வு தாழ்வு என்பதைத் தொழில்களை அடிப்படையாக வைத்து வகுத்திடாமல்,

வீடு கட்டும் தொழிலில் யார் திறமையாளரோ; அதே போல வீதி கூட்டும் தொழிலில் யார் திறமையாளரோ, என்ற வேறுபாட்டை அந்தந்தத் தொழில் புரிவோரிடம் காண வேண்டுமேயல்லாமல், தொழில்களின் வேறுபாட்டை வைத்துக் கணக்கிடக் கூடாது என்பதைத்தான்,

செய்யும் தொழிலில் காட்டுகிற திறமையில் மட்டுமே வேறுபாடு காண முடியும். பிறப்பினால் அனைவரும் சமமே,

எனும் உரை வாயிலாகச் சுட்டிக்காட்டியுள்ளேன். மேலும் விளக்கம் தேவையெனில், ஒரே தொழில் - அதே தொழிலில் ஈடுபட்டோரின் திறமையில் மட்டுமே வேறுபாடு எனலாமே தவிர - தொழிலுக்கு தொழில் உள்ள வேறுபாட்டை வைத்து பிறப்பிலே உயர்வு தாழ்வு நிர்ணயிக்கக் கூடாது.

எனவே தொழில்கள் காரணமாக உயர்வு தாழ்வு எனும் வேறுபாடு ஏற்கத் தக்கதல்ல - அத்தொழிலில் காட்டுகிற திறமையின் அடிப்படையில் மட்டுமே வேறுபாட்டைக் காண முடியும் என்பது உறுதியாகிறது.

பிறப்பினால் எல்லோரும் சமம் தான். ஆனால் அதற்கு மாறாக, தலையில் பிறந்தவர்கள், தோளில் பிறந்தவர்கள், தொடையில் பிறந்தவர்கள், காலில் பிறந்தவர்கள் எனக் கணித்துப் பிரித்து வைத்துள்ள சாதிய வர்ணாஸ்ரமம் என்பது உண்மையான திராவிட இயக்கத்தால் தீண்டத்தகாத ஒரு கொள்கையாகும்.

தொழில் வாரியாக மக்களைப் பிரித்து வைத்து, பின்னர் ஒவ்வொரு தொழிலுக்கும் உரியவர்கள் ஒவ்வொரு சாதியினர் என்று வரையறுக்கப்பட்ட வர்ணாஸ்ரம தர்மத்தை மறுத்துரைக்கும் வலிமையும் வாய்மையும் கொண்டதே

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்
என்ற குறள்நெறியாகும்.

தொழில் வாரியாகப் பிரிந்திருக்கிறார்களா? அவர்களைத் தொழில்கள் வேறுபடுத்த மாட்டா! ஒவ்வொரு தொழிலிலும் காட்டுகிற திறமையில் மட்டுமே வேறுபாடு இருக்கும்!

வள்ளுவரின் இந்தக் கருத்துக்கு வலுவூட்டுகிற வண்ணம் மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர், கூறியதைக் கேட்போம்.

“ஒருவர் தெருக் கூட்டுபவர் என்றால், அவர் மைக்கேல் ஆஞ்சலோ எனும் ஓவியர் வண்ணம் தீட்டியது போலவோ, அல்லது பித்தோவன் என்ற இசை ஞானி இசையமைத்தது போலவோ, அல்லது ஷேக்ஸ்பியர் என்ற பிரபல எழுத்து மேதை கவிதை எழுதியது போலவோ தெருக்களைப் பெருக்க வேண்டும். இவ்வுலகில் உள்ளவர்கள் அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து, இங்கே தனது தொழிலைத் திறமையாகச் செய்த ஒரு தலை சிறந்த தெருக்கூட்டும் தொழிலாளி வாழ்ந்தார் என்று சொல்லும் அளவுக்கு அவர், தனது தொழிலைச் சிறப்பாகவும், திறமையாகவும் செய்ய வேண்டும்’’.

ஜூனியர் மார்ட்டின் லூதர் கிங்கின் இந்தக் கருத்தை, குறளுக்கு நான் எழுதிய உரையில் காணும்போது எனக்கு ஏற்படும் மகிழ்ச்சியை விட, ஈ.ராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இதே கருத்தை ஒரு தமிழ் ஞானி அய்யன் திருவள்ளுவர் எத்துணைப் பொருட் பொலிவுடன் வெளியிட்டுள்ளார் என்பதை எண்ணிப் பார்த்து ஒவ்வொரு தமிழனும் பெருமிதம் கொள்ளலாம் அல்லவா?

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் - செய்தொழிலில் ஏற்படும் திறமை வேறுபாட்டில் மட்டுமே உயர்வும் தாழ்வும்! தொழில் வேறுபாட்டால் அல்ல! திறமை வேறுபாட்டால் மட்டுமே - எனும் வலிமை பெற்ற கருத்தை வள்ளுவர் நிலைநாட்டியிருந்த போதிலும்;

“சாதியாவது ஏதடா” என்ற சித்தர்கள் தொடங்கி,

“சாதியிலே மதங்களிலே சாத்திரச் சந்தடிகளிலே

அபிமானித்து அலைகின்ற உலகீர்”

எனச் சன்மார்க்கச் செம்மல் இராமலிங்க அடிகளிலே யிருந்து, சாதிகள் இல்லையடி பாப்பா என முழங்கிய பாரதியார், மாந்தரில் சாதி வகுப்பது சரியா? எனக் கேள்வி எழுப்பிய பாரதிதாசன் வரையில் - ஏன்? இந்தக் கருத்துக்களுக்கு செயல்வடிவம் தருவதற்குத் தமிழகத்தில் கிளர்ந்தெழுந்த பெரியார், அண்ணா வரையில் பாடுபட்டுப் பணியாற்றியும், சாதியெனும் சங்கிலி தமிழர்களின் தாளைப் பிணைத்தே இருக்கிறது. முழுமையாக அறுபடவில்லை. அந்தத் தளையறுத்துத் தமிழ்ச்சாதி நாம் என ஒன்றே குலமாக அணி வகுப்பது எப்போது?

"விழாக்களில் கூட்டங்களில் ஆயிரம் பேர் பதினாயிரம் பேர் லட்சம் பேர் என்று கூடும்போது தமிழர்களாகக் கூடுகிறோம். ஆனால் நிகழ்ச்சி முடிவுற்றுக் கலைந்து செல்லும்போது தமிழர்களாக அல்ல, பல்வேறு சாதியினராகவன்றோ செல்கிறோம்''

என்று நானும் எத்தனையோ தடவை எழுதியிருக்கிறேன்; பேசியிருக்கிறேன்! இப்போதும் கேட்கிறேன்! எப்போது தமிழர்களாகக் கூடி, தமிழர்களாகவே வீடு திரும்பப் போகிறோம் என்று!

அன்புள்ள,

மு.க.

15-5-2002

2747. நான் ஆற்ற வேண்டிய பணியையும் ஏற்று நடத்திடுக!

உடன்பிறப்பே,

அச்சிறுபாக்கம், வாணியம்பாடி, சைதாப்பேட்டை மூன்று தொகுதிகளிலும், இடைத் தேர்தல் களத்தில் நீ நிற்கும்போது இந்தக் கடிதம் உனக்கு எழுதுவதில் எனக்கு எவ்வளவு உற்சாகம் இருக்கிறதோ, அதே அளவு மனச்சங்கடமும் இருக்கிறது என்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. இந்த இயக்கம் தொடக்க காலத்தில் நீதிக்கட்சியாக விளங்கி அக்கட்சியின் சார்பில் வேட்பாளர்கள் நிறுத்தப்பட்ட போது, நகராட்சி மன்றத்தேர்தல்களிலும் சரி, அவற்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கான தேர்தல்களிலும் சரி, ஈ.டுபட்ட காலத்தில் - அதாவது சுமார் 65 ஆண்டுகளுக்கு முன்பே, அந்தத் தேர்தல் களங்களில் நீதிக் கட்சியின் தேர்தல் சின்னமான சிகப்புப் பெட்டியில் வாக்களிக்குமாறு மக்களை வேண்டி, வீதி வீதியாக - வீடு வீடாகச் சென்று உழைத்தவன் நான்!

அப்போது காங்கிரஸ் கட்சிக்கு மஞ்சள் பெட்டி - நமக்கு சிகப்புப் பெட்டி! ஒவ்வொரு கட்சிக்கும் பச்சை, வெள்ளை, நீலம் எனப் பல வண்ணங்களில் பெட்டியிருக்கும். வாக்காளர்கள், வாக்குச்சாவடி அதிகாரிகளிடம் வாக்குச்சீட்டைப் பெற்று தங்களுக்கு விருப்பமான கட்சி வேட்பாளர்களின் வண்ணப் பெட்டியில் வாக்களிப்பார்கள்.

அந்தக் காலகட்டத்தில் திருவாரூரில் நகராட்சித் தேர்தல் பிரச்சாரத்தில் நடந்த ஒரு சுவையான சம்பவத்தை நினைவு கூர்கிறேன். நகரத்தில் உள்ள பெரும் பணக்காரர்களில் ஒருவரான தெட்சணாமூர்த்தி பிள்ளை என்பவர் காங்கிரஸ் வேட்பாளராக மஞ்சள் பெட்டி சின்னத்தில் போட்டியிட்டார். அவரை எதிர்த்து

நமது இயக்கத்தைச் சேர்ந்த சிங்கராயர் நின்றார். அந்த வட்டத்தில் பெரும் செல்வாக்குப் பெற்ற அந்தக் காங்கிரஸ் கனவான், எனக்கு உறவினரும்கூட! நானோ சிங்கராயருக்காகத் தேர்தல் பணியாற்றும் தொண்டர்களிலே ஒருவனாக இருந்தேன்! உறவினர்கள் என் வீட்டுக்கே படையெடுத்து வலியுறுத்தியும் கூட, நான் ஏற்றுக் கொண்ட கொள்கைப்படி தான் நடப்பேன் என்று உறுதியாகக் கூறி விட்டு அந்தப் பகுதியில் சிங்கராயர் வெற்றிக்காகத் தொடர்ந்து பணியாற்றிக் கொண்டிருந்தேன். தேர்தல் பிரச்சாரத்தில் ஒருநாள் தந்தை பெரியார் அவர்களால் தண்டவாளம் என்று செல்லமாக அழைக்கப்பட்டவரும், தம்பி திருவிடத்தின் தந்தையுமான ரெங்கராஜ் அவர்கள் தலைமையில் வி.எஸ்.பி. யாகூப் அவர்கள் முன்னிலையில் நமது வேட்பாளர்கள் கலந்து கொண்ட பேரணி நடைபெற்றது. அந்தப் பேரணியில் முன் பகுதியில் செல்லும் திறந்த காரில் ஏறிக் கொண்டு முழக்கமிடும் தொண்டனாக நான் போய்க் கொண்டிருக்கிறேன். அந்தப் பேரணி ஊர்வலம் ஓர் அகன்ற சாலையில் செல்லும்போது எங்கள் எதிரே காங்கிரஸ் தேர்தல் பிரச்சார ஊர்வலம் வந்துவிட்டது. அவர்களுக்கு வழி விட்டு, நாங்கள் சாலையின் ஒருபுறமாக நின்று கொண்டோம். காங்கிரஸ் ஊர்வலத்தினர், தங்களின் மஞ்சள் பெட்டியை நினைவூட்டுவதற்காக எங்கள் ஊர்வல அணி வகுப்பைக் கண்டதும்,

பெண்கள் முகத்தில் இடுவது மஞ்சள்!
மஞ்சள் பெட்டிக்கு ஓட்டுப் போடுங்கள்!

எனப் பெருமுழக்கம் செய்தனர். உடனே அண்ணன் தண்டவாளம், என்னைப் பார்த்து நீ இதற்குப் பதிலாக ஒரு முழக்கம் செய்! என்றார்.

அந்தக் காங்கிரஸ் ஊர்வலம் அதை விட்டு அகலும் வரையில் காத்திருந்து முழக்கத்தை ஆரம்பித்தேன்.

“மஞ்சள் முகத்தில் இடுவது சிகப்பு! சிகப்புப்
பெட்டிக்கு ஓட்டுப் போடுங்கள்!”

இப்படி நான் முழங்கியதும், எங்கள் ஊர்வலத்தில் ஏற்பட்ட உற்சாகத்துக்கு அளவே இல்லை. எல்லோரும் போட்டி போட்டுக்கொண்டு காரில் ஏறி என்னைத் தோளில் தூக்கிக்

கொண்டு கூத்தாடினார்களே! அந்த நிகழ்ச்சியை இப்போது நினைத்தாலும், அடடா! அந்தத் தொண்டனாகவே இருந்து தொடர்பணியாற்ற முடியவில்லையே! என்ற ஏக்கம் பிறக்கத்தான் செய்கிறது. இயக்கப் பொதுக் கூட்டங்களுக்குச் சுவரொட்டிகளை ஒட்டிட நானும், என் நண்பன் தென்னன் போன்றவர்களும், அருமைச் சகோதரர் அரங்கண்ணல் போன்றவர்களும் கையில் சுவரொட்டி, ஏணி, வாளியில் பசையுடன் இரவு பகலென்று பாராமல் எத்தனை தடவை அலைந்திருக்கிறோம். இதற்கெல்லாம் கூலிக்கு ஆள் வைக்கத் தேவையில்லை. நமக்கு நாமே! என்ற உணர்வுடன் நற்பணிகளைத் தொண்டனாகவே இருந்து தொடங்கிய காரணத்தால் தான் - ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது கூட, நமக்கு நாமே திட்டத்தில் எனக்கு நாட்டம் ஏற்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.

இவற்றையெல்லாம் நினைத்துப் பார்க்கும்போது என் நெஞ்சில் நிறைந்த உன் போன்ற தொண்டுள்ளம் கொண்ட உடன்பிறப்புகளுடன் தோளொடு தோள் இணைந்து இது போன்ற தேர்தல்களில் ஓய்வு மறந்து உழைத்திட உடல்நிலை இடம் தரவில்லையே என்ற கவலைதான், நான் முதலில் குறிப்பிட்டவாறு என்மனச் சங்கடத்திற்குக் காரணம் என்பேன்.

இளமைக் காலம் முதல் இதுநாள் வரையில் நமதியக்கக் கொள்கைப் பிரச்சாரத்திற்காகவும், தேர்தல் களம் காணும்போதெல்லாம் தேர்தல் பிரச்சாரத்திற்காகவும் ,கடந்த 65 ஆண்டுக் காலத்தில் நான் செல்லாத சிற்றூர், பேரூர், நகரங்கள், பெருநகரங்கள் இல்லை என்கிற அளவுக்கு எண்ணிக் கணக்கிட இயலாதவாறு அத்தனை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டும், வாக்காளர்களைப் பல முறை நேரில் சந்தித்தும் நான் ஆற்றியுள்ள பணியை எனக்கும் சேர்த்து உன் போன்ற உடன்பிறப்புகள் ஆற்றிடுவீர்கள் என்ற நம்பிக்கை இருந்த போதிலும், அண்ணன் என்ற முறையில் தம்பிகளையும், தங்கைகளையும் வேண்டிக் கேட்கும் உரிமை எனக்கு இருக்கிறதல்லவா?

அந்த உரிமையைப் பயன்படுத்தித்தான் கூறுகிறேன். உதவாதினி ஒரு தாமதம் உடனே புறப்படுக உடன்பிறப்பே, உழைத்திட! வெற்றி கிடைத்திட!

ஓராண்டு கால ஆட்சியின் கோர வடிவத்தை தமிழ் நாட்டின் பல்வேறு பிரிவு மக்களும் பெருமளவு உணர்ந்து குமுறிக் கொண்டிருக்கிறார்கள். ஆளுங் கட்சிக்குப் பாடம் புகட்ட அரிய வாய்ப்பாக இந்த இடைத் தேர்தலை அவர்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதை நீயும், நமது கூட்டணிக் கட்சிகளின் செயல்வீரர்களும் அவர்களுக்கு விளக்கமாக எடுத்துக் கூற வேண்டும். ஆளுங்கட்சியினர் தமது ஆதரவு ஏடுகளில் அறிக்கை மூலமும், மேடைகளிலும், நம்மை வசை பாடுவதும், அநாகரிக வார்த்தைகளால் ஆபாசப் பொழிவு நடத்துவதும் என் கவனத்துக்கு வராமல் இல்லை! திக்கற்றவர்களாக மக்களை ஆக்கிவிட்டு, திட்டங்களைக் குலைத்து, புதிய அதிரடிச் சட்டங்களைத் திணித்து ஆட்டம் போடுகிற ஆளுங்கட்சியினால் ஏழை, எளியோர், நடுத்தர மக்கள், பாட்டாளி மக்கள் ஆகியோர் படும் அல்லல்களை எடுத்துரைத்தால் அதுவே நமது தேர்தல் பிரச்சாரத்துக்கு வாக்காளர்களிடம் வரவேற்பைப் பெறக்கூடியது.

ஆளுங்கட்சியின் மக்கள் விரோதச் செயல்களை மக்களுக்கு விளக்கினால் போதுமானது! எடுத்தேன், கவிழ்த்தேன் என்பதும், ஏசுவதும், ஏக வசனத்தில் தாக்குவதும், இல்லாததை இட்டுக்கட்டிப் பேசுவதும், அவர்களின் இலக்கணமாகவே இருக்கட்டும்!

போட்டியிடும் மற்ற கட்சியினர், நம்மீது எவ்வித வசைமாரியைப் பொழிந்தாலும் அதற்கெல்லாம் பதில் சொல்வது வீண் வேலை எனக் கருதி, அறிஞர் அண்ணா சொல்வாரே அடிக்கடி ஒரு பாரதக் கதை - ஒரு மரத்தில், அதன் கிளையில் அமர்ந்திருக்கிற பறவையின் கழுத்தும் கையில் உள்ள வில்லில் பூட்டிய அம்பின் நுனியும்தான் தெரிகிறது என்று அர்ச்சுனன் துரோணரிடம் கூறியதாக, அது போல ஆளுங் கட்சியின் அராஜகங்கள் - அநியாயங்கள் - அடக்கு முறைகள் இவற்றை வீழ்த்துவதற்கே நமது கவனம் முழுமையாக இருக்க வேண்டும்! அதாவது, மக்கள் விரோத நடவடிக்கைகளை ஆதாரபூர்வமாக மக்கள் மன்றத்தில் விரித்துரைத்து, குறிக்கோளில் வெற்றி பெறுவதே பாராட்டுக்குரியது என்றுதானே நமது அருமைத் தலைவர் அண்ணா நமக்குக் கூறியுள்ளார்.

எனவே மக்களைச் சந்திக்கக் கிளம்பிடுக - தொடர்ந்து சந்தித்திடுக - தொண்டுள்ளத்துடன் பாடுபடுக - ஒற்றுமையுடன் பணியாற்றிடுக - என் பணியையும் சேர்த்து நீ ஆற்றிடுவாய் என்ற இதய பூர்வமான நம்பிக்கையுடன்,

அச்சரப்பாக்கத்தில் பா.ம.க. வேட்பாளர் த. பார்வேந்தன் அவர்களையும்,

வாணியம்பாடியில் இசைமுரசு அனிபா
அவர்களையும்,

சைதாப்பேட்டையில் மா.சுப்பிரமணியன்
அவர்களையும்

வெற்றி வீரர்களாக என் கரம் குலுக்கிட வைத்திடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு.க.

16-5-2002

2748. "காலுசக் படுகொலை!" தலைவர் கலைஞர் கண்டனம்

உடன்பிறப்பே,

சூறைக்காற்று, பூந்தோட்டத்தில் புகுந்தால் மலர் குலுங்கும் செடிகளும், கொடிகளும், மரங்களும் வீழ்ந்து படுவது போல - ஜம்மு பகுதியில் காலுசக் என்னுமிடத்தில் பயங்கரவாதிகள் நடத்திய திடீர்த் தாக்குதலில் மாண்டு மடிந்த 31 பேரில் சின்னஞ்சிறு குழந்தைகளும் உண்டு. இளைஞர்கள், முதியோர், பெண்கள் என்றும் அந்தச் சோகம் விரிவடைகிறது. மேலும், சிகிச்சை பெற்று வரும் 47 பேரில் நாலைந்து பேரின் நிலை மிகவும் கவலைக்கிடம் என்றும் செய்தி வந்துள்ளது. மத்திய பாதுகாப்பு அமைச்சர் ஜார்ஜ் அவர்களும், உள்துறை இணை அமைச்சரும் உடனடியாக அந்தப் பகுதிக்குச் சென்று உயிரிழந்தோர் குடும்பங்களுக்கு ஆறுதல் கூறியும், காயம் பட்டோருக்குத் தைரியம் உரைத்தும் திரும்பியுள்ளனர். இந்திரா காங்கிரஸ் தலைவர் திருமதி சோனியா காந்தி அவர்களும் அந்தப் பகுதிக்கு விரைந்தது மட்டுமல்லாமல், இத்தகைய பயங்கரவாதச் செயல்களை எதிர்த்து வீழ்த்திட மத்திய தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசுக்கு ஒத்துழைப்பு தருவோம் என்று கூறியிருப்பதும் வரவேற்கத்தக்க ஒன்றாகும்.

இந்தக் கொடுமையான நிகழ்ச்சிக்கும், கொத்தாக சுமார் 40 உயிர்கள் போக்கப்பட்டுள்ளதற்கும், ஜம்மு பகுதியில் பாதுகாப்புக் குறைபாடு தான் காரணம் என்று பாகிஸ்தான் கூறியுள்ளதைக் காஷ்மீர் முதல்வர் பரூக் அப்துல்லா அவர்கள் மறுத்திருப்பதோடு, இந்தக் கொடூரமான படுகொலைக்குப் பாகிஸ்தானே காரணம் என்றும் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

அப்படி அவர் சுட்டிக்காட்டும் அதே நேரத்தில் அந்தப் பகுதிக்கும், மொத்தமாகக் காஷ்மீருக்கும், மேலும் அதிகமான பாதுகாப்புக்கேற்ற படை பலம் தேவை யென்றும் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். அவரது கோரிக்கையைத் தாமதமின்றி மத்திய அரசு நிறைவேற்றி வைக்குமென்று எதிர்பார்க்கலாம்.

பாகிஸ்தானிலிருந்து இந்தியப் பகுதிக்கு அடிக்கடி ஊடுருவல் செய்பவர்கள், அப்பாவி மக்களையும், பெண்களையும், பச்சைக் குழந்தைகளையும் படுகொலைக்கு ஆளாக்குவது மனிதத் தன்மைக்கு மாறான மிருகத் தன்மையாகும் என்றும் பரூக் அப்துல்லா அவர்கள் கடுமையாகவும், உருக்கமாகவும் தெரிவித்திருப்பதையும் - பிரதமர் வாஜ்பய் அவர்கள் தீவிர வாதிகளின் இக்கொடுஞ்செயலுக்குத் தக்க பதிலடி கொடுப்போம் என்று அறைகூவல் விடுத்திருப்பதையும் - அமெரிக்கா, ஏதோ ஒப்புக்காக ஓர் அனுதாபச் செய்தியின் மூலம் மென்மைப்படுத்திவிட முடியும் எனக் கருதுவதும் - அந்தக் கருத்துக்கேற்பவே நடந்து கொள்ள முனைவதும் ஏற்கத்தக்க நிலையாகாது!

நமது வெளியுறவுத் துறை அமைச்சர் ஜஸ்வந்த் சிங் அவர்களுடன், அமெரிக்க வெளியுறவுத் துணை அமைச்சர் ரோக்கா பேசிய போது 'காலுசக்', நிகழ்ச்சியை வன்மையாகக் கண்டித்திருப்பதும், நமது பிரதமருக்கு அமெரிக்க அதிபர் புஷ் தொலைபேசி வாயிலாகத் தனது அதிர்ச்சியை வெளியிட்டிருப்பதும் பிரச்சினைக்கு முழுமையான தீர்வு ஆக முடியாது.

இனி மேலும் இந்திய எல்லைக்குள் புகுந்து தீவிரவாத வன்முறைச் சேட்டைகளில் பாகிஸ்தான் பயங்கரவாதிகள் ஈடுபடாமல் இருக்க, அமெரிக்கா, பாகிஸ்தான் அரசுக்கு வாய்மையுடன் எச்சரிக்கை வழங்க வேண்டும். அழுத்தில்லாமல், ஆழ்ந்த வருத்தம் - அதிர்ச்சி - இந்த வார்த்தைகளால் நம்மை அமைதிப்படுத்தலாம் என எண்ணினால், இந்திய நாடு, இமயம் முதல் குமரி வரையில் உள்ள மக்களை ஒரே அணியில் திரட்டுவதின் மூலம், தனது வலிமையை நிலைநாட்டிக் காட்டி வன்முறைப் பயங்கரவாதத்தைத் தூண்டி விட்டு வேடிக்கை பார்க்கும் நாடு எதுவாயினும், அதற்குப் பாடம் புகட்டத் தாமதிக்கக் கூடாது!

அன்புள்ள,

மு.க.

17-5-2002

2749. கூழாங்கல்லும் வைரமும் ஒன்றெனக் கூறுவதோ?

உடன்பிறப்பே,

மூன்று தேர்தல் களங்களில் மும்முனைப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கிறோம். தி.மு. கழகத்தின் மும்முனைப் போராட்டத்தை ஏடுகளில் படித்தவர்கள் இன்றுள்ள இரண்டாம் தலைமுறையினரும், மூன்றாம் தலைமுறையினருமாவார்கள். நம்மில் பலரோ, அந்தப் போராட்டக் களத்திலே நின்று விழுப்புண் பெற்றவர்கள். அந்தப் போராட்டம் நடந்த நேரத்தில் பிறக்காதவர்களும், பிறந்து தவழ்ந்துகொண்டிருந்தவர்களும் இன்று மேடையேறிக்கொண்டு, ஏதோ தாங்கள்தான் திராவிட இயக்கத்தின் பிதாமகன்கள் என எண்ணிக்கொண்டு, திராவிட இயக்கம், மக்களிடையே பரப்பி வரும் சுயமரியாதை உணர்வை, பகுத்தறிவுக் கொள்கையை, மத நல்லிணக்க இலட்சியத்தை, சாதிய வர்ணாஸ்ரமம் வீழ்த்திடும் விவேகத்தை, தமிழின எழுச்சியை, தமிழ்ப் பண்பாடு காத்திடும் கடமையை, இலக்கியம் போற்றிடும் பணியை, திடீரெனவோ, அல்லது கொஞ்சம் கொஞ்சமாகவோ, நாம் கை விட்டு விட்டது போலவும் - எனவே அ.தி.மு.க.வினருடன் சேர்த்துக் கருதப்பட வேண்டியவர்களே தி.மு.க. வினரும் என்ற ஒரு விஷமப் பிரச்சாரத்தை - அல்ல! அல்ல! விஷம் நிறைந்த பிரச்சாரத்தைக் கட்டுப்பாடாகச் செய்து வருகின்றனர்.

அண்மையிலேகூட சட்டப் பேரவையில் அ.தி.மு.க. அமைச்சர் ஒருவர், பெண் அமைச்சர் என்கிறார்கள், அந்த அமைச்சர், பேரவையிலே விளக்கிப் பேச வேண்டிய மானியம் சமூக நலத்துறை மானியமாக இருக்க, அதை அறவே மறந்து விட்டு- தென்னவன் காதை என்ற கவிதை எழுதியவர் கருணாநிதி எனத் தெரிவித்ததோடு நில்லாமல் - இராமாயணத்தைப் பற்றி பெரியாரின் கருத்து என்ன? அண்ணாவின் அணுகு முறை என்ன?

என்பதைக் கூடப் புரிந்து கொள்ளாமல் - ஒருவேளை புரிந்து கொண்டிருந்தாலும் அவர்களின் கருத்துக்கு எதிர்க்கருத்தை வெளியிட்டு, இராமாயணம் மூலத்தை எழுதிய வால்மீகிக்கும், அதனைத் தழுவியும், தேவைப்படும் மாற்றம் செய்தும் எழுதப்பட்ட கம்பராமாயணத்துக்கும் உள்ள வேறுபாடுகளைக்கூட விபரமாக அறிந்து கொள்ளாமல் - பண்டித நேரு அவர்கள் எழுதிய உலக வரலாறு நூலிலேயும், பி.டி. சீனுவாச அய்யங்கார் அவர்கள் எழுதிய இந்திய வரலாற்றிலும், இராமாயணம் என்பது ஆரிய திராவிடப் போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டது என்று அவர்களே விளக்கியிருப்பதைக் கூடக் கண்டுகொள்ளாமல் - ஆகா! கருணாநிதி இராமனை, சீதையை, தூஷித்து விட்டார் என்று உரத்த குரல் எழுப்பியதையும் - அதனை அவையிலேயிருந்த அ.தி.மு.க. வின் முதலமைச்சர் ரசித்ததையும், கண்டு, கேட்டு, படித்தறிந்தவர்கள் அந்த அ.தி.மு.க.வையும் - நமது தி.மு. கழகத்தையும் ஒரே நிலையில் வைத்து, எழுதுவதும், பேசுவதும், விமர்சிப்பதும் தந்தை பெரியார் மொழியிலே சொல்ல வேண்டுமானால் 'போக்கிரித் தனம்', அல்லாது வேறென்னவாம்!

என் கவிதைத் தொகுப்பை கையில் வைத்துக் கொண்டோ, அல்லது மனப்பாடம் செய்து கொண்டோ, அந்தப் பெண் அமைச்சர் எனப்படுபவர், அந்தக் கவிதைகளில் நான் பெண்களை இழிவுபடுத்தியிருப்பதாக அவைக்களத்தில் பேசினார். திராவிட இயக்கக் கொள்கைகளில் சிகரம் போன்ற சிறந்த ஒன்று, பெண்ணுரிமை - பெண்கள் முன்னேற்றம் என்பதாகும்.

அதனால்தான் பெண்களுக்குச் சொத்துரிமையில் சம பங்கு வேண்டும் என்று 1929ஆம் ஆண்டு செங்கற்பட்டு சுயமரியாதை மாநாட்டில் பெரியார் கொண்டுவந்த தீர்மானத்தை 60ஆண்டு கழித்து 1989ஆம் ஆண்டு நான் ஆட்சிப் பொறுப்பில் இருந்த போது சட்டமாக நிறைவேற்றினேன்.

மகளிரைப் பற்றி நான் இழிவாக எழுதியிருப்பதாக விமர்சிக்கப்பட்ட அந்தக் கவிதைத் தொகுப்பு நூலிலே தான், அதே தென்னவன் காதை வரலாற்றுக் குறுங் காவியத்தில்,

மலைத் தமிழன் இராவணன் துணைவி
வண்டமரும் பூங்குழலாள்

மண்டோதரி; மாதர்குல மாணிக்கம்
எதிர்வீணை மீட்டும் பேச்சுக்காரி

என்று புகழ்ந்திடும் வரிகளும் ஒளிவிடுகின்றன. அம்மட்டோ! அந்தக் கவிதைத் தொகுப்பு நூலிலேதான்; இந்திரஜித்துக்குத் துணைவியான சுலோச்சனை பற்றிக் கூறும்போது,

சந்தன மரங் கடைந்து சிலை செய்து
வெந்தழல் நிறமெடுத்து இதழ் பொருத்தி,
இந்திர வில்லனைய புருவத்தின்கீழ்
எழில் நீலமணியிரண்டை இமைக்குள் பதித்துச்
செந்தமிழ் மணக்கின்ற திருவாயை அசையச் செய்து
சந்ததம் புகழ்பாடும் பான்மையிலே
உயிரூட்டிக் கொண்டு வந்த அற்புதமாம்;

எனப் புகழப்படுகிறாள். இத்துடன் நிற்கவில்லை! இன்னும் உண்டு பெண் இன உரிமைபற்றி!

புண்ணுக்கு மருந்திட்டு
ஆற்ற வழி தேடிடுவாய்!
கண்ணுக்குள் பாவை போல்
உருண்டிடும் உள்ளம் – கைம்
பெண்ணுக்கு இருப்பதையும்
உணர்ந்திடுவாய்!
என் மனைவி இறந்திட்டாள்
வேறுமணம் வேண்டும் என்பாய்!
பின் நீ சாவுமுனை அடைந்திட்டால்
உன் மனையாள் காவு கொடுக்க
வேண்டுமோ காதல்தனை!

என்ற கவிதையும் இருக்கிறது.

பெண்ணின் பெருமை, அழகு, ஆற்றல், உரிமை இத்தனையும் உள்ள அந்தக் கவிதைத் தொகுப்பில் அனைத்தையும் மறைத்து விட்டு, கருணாநிதி பெண்களின் விரோதி என்று ஒரு மகத்தான பேரவையில் பித்தலாட்டம் செய்வது எவ்வளவு எளிதான காரியமாகி விட்டது - இந்த மாறுபாடுகளையெல்லாம் உணராமல்,

பச்சைக்கொடியும், பச்சைப்பாம்பும் ஒன்றுதான் என்பது போலவும், சந்தனமும், சேறும் ஒன்றுதான் என்பது போலவும் கொள்கைத் தீவிரத்தை வாயளவில் பேசுகிறவர்கள் சிலரும், ஒரே கல்லில் இரு மாங்காய் அடிக்க முனையும் சூழ்ச்சியாளர்கள் சிலரும், என்னதான் முயன்றாலும் பெரியார் அவர்களால் அகழ்ந்தெடுக்கப்பட்டு, அண்ணா அவர்களால் பட்டை தீட்டப்பட்டுள்ள இந்த வைரக்கல்லை கூழாங்கல்லுடன் இணைத்துப் பேசுகிறவர்கள் வெற்றி பெற முடியாது!

அத்தகையோர் - ஆம்! அந்த இரு சாராரும் நமக்கு எதிர்ப்படுகிற இந்த மும்முனைப் போராட்டக் களத்தில் நம்மை யார் என்று உணர்த்துவோம்!

பெரியார் வழி நின்று தன்மான உணர்வையும்,
அண்ணா வழிநின்று தமிழ் இன உணர்வையும்,
அம்பேத்கர் வழிநின்று சமத்துவ உணர்வையும்,
காயிதேமில்லத் வழிநின்று மத நல்லிணக்க,
மனித நேய உணர்வையும் கட்டிவளர்ப்போம்!

அதற்கெனப் பணியாற்றும் பாசறை, தி.மு.கழகம். அந்தக் கழகத்து அணியின் வேட்பாளர்கள் அச்சிறுப்பாக்கத்திலும், வாணியம்பாடியிலும், சைதையிலும் வெற்றிபெற, நெற்றி வியர்வை சிந்துவதைப் பொருட்படுத்தாமல் உழைத்திடும் உடன்பிறப்புகள் அனைவருக்கும் என் வாழ்த்து! என் பாராட்டு! விரைவில் வந்து உங்களை நேரில் சந்திக்கிறேன்!

அன்புள்ள,

மு.க.

19-5-2002

2750. கேள்வி கேட்கக் கூடும்; கேலி பேசவும் கூடும்!

உடன்பிறப்பே,

12ஆம் வகுப்புத் தேர்வு முடிவுகள் வெளியிடப் பட்டுள்ளது. வழக்கம் போல் மாணவர்களைவிட மாணவிகள் அதிக அளவிற்குத் தேர்வு பெற்றுள்ளார்கள். 1200 மதிப்பெண்களில் 1177 மதிப்பெண்களை மொத்தம் ஆறு மாணவர்கள் பெற்று முதல் மதிப்பெண் பெற்றவர்கள் என்ற பெருமையினை எய்தியுள்ளார் கள். இதிலே மூன்றுபேர் மாணவர்கள், மூன்று பேர் மாணவிகள். இரண்டாவதாக 1176 மதிப்பெண்களை இரண்டு மாணவர்களும், 1174 மதிப்பெண்களை மூன்று மாணவர்களும் பெற்று மொத்தம் 11 பேர் முதல் மூன்று இடங்களை அலங்கரிக்கிறார்கள். பத்தாம் வகுப்புத் தேர்விலும், 12ஆம் வகுப்புத் தேர்விலும் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களது உயர் கல்விச் செலவு முழுவதையும் அரசே ஏற்றுக் கொள்வதென்று நான்காவது முறையாக முதலமைச்சராக நான் பொறுப்பேற்ற 1996ஆம் ஆண்டு முடிவெடுக்கப்பட்டு அவ்வாறே 1996 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

முதல் மூன்று இடங்களைப் பெற்று அரசின் உதவியைப் பெறவிருக்கும் மாணவச் செல்வங்களுக்கும், மற்றும் தேர்வில் வெற்றி பெற்று கல்லூரிக்குச் செல்லவிருக்கும் அனைத்து மாணவர் களுக்கும் என் வாழ்த்துகளைக் குவிக்கிறேன். தேர்வு பெறாத மாணவச் செல்வங்களும் அடுத்த முறை நன்கு படித்து தேர்வில் வெற்றி பெறவும் என் வாழ்த்துகள்! அரசின் செலவிலே படிக்கவுள்ள மாணவர்களும், அவர்களின் பெற்றோர்களும், ஏன் பொதுவாக தமிழ்நாட்டு மக்களும் அவர்களுக்கு இந்த நல்ல வாய்ப்பினை வழங்கிய கழக அரசினைப் பற்றி எண்ணிப் பாராட்டாமலா இருந்து விடுவார்கள்? நிச்சயம் நினைத்துப் பார்ப்பார்கள் என்றே நான்

நம்புகிறேன். அவர்கள் நினைத்துப் பார்க்க வேண்டு மென்பதற்காக அந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டதில்லை. மாநில அளவில் உதவி பெறவுள்ள அந்த 11 மாணவர்களின் பட்டியலைப் படித்த போது எனக்கு மகிழ்ச்சியும் ஏற்பட்டது, வருத்தமும் ஏற்பட்டது.

மகிழ்ச்சிக்குக் காரணம் அந்த 11 பேரில் எட்டு பேர் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள். ஒருவர் மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர். இதிலேதான் எனக்கு மகிழ்ச்சி. தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் ஒருவர் கூட இடம் பெறவில்லையே என்பதிலே தான் வருத்தம்.

தேர்வு முடிவுகளை வெளியிட்ட தமிழ் நாளேடு ஒன்று (தினமலர்) தன்னிச்சையாக ஒரு செய்தியினை வெளியிட்டுள்ளது. அந்தச் செய்தியின் சுருக்கம் வருமாறு :-

மேல்நிலை வகுப்பில் தமிழை முதற்பாடமாக எடுத்து அனைத்துப் பாடங்களிலும் அதிக மதிப்பெண்கள் பெற்று மாநிலத்தில் முதல் மூன்று இடங்களைப் பிடிப்பவர்களுக்கு அரசு சார்பில் நிதி உதவி வழங்கப்படுகிறது. மேலும் அவர்களின் உயர் கல்விக்கான அனைத்துச் செலவுகளையும் அரசே ஏற்கிறது. (இச்செய்தியை வெளியிடும் ஏடு தி.மு.கழக ஆட்சிக் காலத்தில் அறிவிக்கப்பட்ட திட்டம் என்பதை வெளியிட ஏனோ மறந்து விட்டது.) வழக்கமாக ப்ளஸ் 2 தேர்வு முடிவு வெளியான தினத்தன்றே மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த மாணவர்கள் கோட்டைக்கு அழைத்து வரப்பட்டு முதல்வரைச் சந்தித்து அதற்கான ஆணையை நேரில் பெறுகின்ற வாய்ப்பினைப் பெறுவார்கள். இதே போல் இந்த ஆண்டு முதல் மூன்று இடங்களைப் பிடித்த 11 மாணவர்களும் நேற்றே முதல்வரைச் சந்தித்திருக்க வேண்டும் என்றும்,

முதல்வர் ஜெயலலிதா இன்று 18-ம் தேதி முதல் இடைத் தேர்தல் பிரச்சாரத்திற்குச் செல்கிறார். மூன்று தொகுதிகளிலும் அவர் பிரச்சாரம் செய்ய வேண்டியுள்ளதால் இம்மாதம் இறுதிவரை அவர் பிசியாக இருப்பார். எனவே ஜூன் பத்து தேதிக்குப் பிறகு தான் 11 மாணவர்களும் முதல்வரைச் சந்திக்க முடியுமென்று கூறப்படுகிறது என்றும் செய்தி வெளியிட்டுள்ளது. முதலமைச்சர்

அந்த மாணவர்களைச் சந்திக்கிறாரோ இல்லையோ, அவர்களுக்கு அரசின் சார்பில் அந்தச் சலுகை வழங்கப்படுவதை நிறுத்த முடியாது. மாணவர்களின் நலன்கருதி கழக ஆட்சியிலே நிறைவேற்றப்பட்ட எத்தனையோ திட்டங்களில் இதுவும் ஒன்றுதான்.

பட்டதாரிகள் இல்லாத குடும்பங்களில் இருந்து ஒவ்வொரு வகைத் தொழில் கல்விப் பிரிவுகளிலும் சேரும் முதல் பத்து நிலை மாணவர்களின் கல்விச் செலவையும்,

1996-97ஆம் ஆண்டு முதல் அரசே ஏற்றுக் கொள்கின்றது. இந்தச் சலுகையையும் மாணவர்களுக்கு வழங்கியது தி.மு. கழக ஆட்சிதான். 1999-2000ஆம் ஆண்டு முதல் 666 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 11, 12ஆம் வகுப்புகளில் 112 கோடி ரூபாய் செலவிலும், 2000-2001ஆம் ஆண்டு முதல் எஞ்சிய 516 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 75.66 கோடி ரூபாய் செலவிலும், 16 சென்னை மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் 192 இலட்சம் ரூபாய் செலவிலும், 12 அரசு மருத்துவக் கல்லூரிகளில் 279 இலட்சம் ரூபாய் செலவிலும், 5 அரசு சட்டக் கல்லூரிகளில் 155 இலட்சம் ரூபாய் செலவிலும், 60 அரசு கலை அறிவியல் கல்லூரிகளில் 28.22 கோடி ரூபாய் செலவிலும் கணினிப் பாடம் கற்றுக் கொடுக்கும் திட்டம் தி.மு.கழக ஆட்சியின் மகத்தான சாதனையாகும்.

பத்தாம் வகுப்பு, பன்னிரண்டாம் வகுப்பு படித்து முடித்துச் செல்லும் போதே மாணவர்களுக்குச் சாதிச் சான்றிதழ், வாழ்விடச் சான்றிதழ், குடும்ப வருமானச் சான்றிதழ் ஆகியவற்றை வழங்கும் திட்டம் தி.மு.கழக ஆட்சியில் 1999-2000ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்டு அதன் மூலம் சுமார் 15 இலட்சம் மாணவ மாணவிகள் பயன் பெற்றனர் என்பதும் நமது கழக அரசின் சாதனைதான்.

இந்தச் சாதனைப் பட்டியலில் ஒன்றுதான் கிராமப்புற பள்ளி மாணவர்களுக்கு அனைத்து தொழிற் கல்விப் பிரிவுகளிலும் 15 விழுக்காடு இட ஒதுக்கீடு அளிக்கும் திட்டம், தி.மு.கழக ஆட்சியிலே 1997-98ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்டு, அதன் மூலம் கிராமப்புறங்களில் இருந்து 1997-98ஆம் ஆண்டு 864

மாணவர்களும், 1998-99ஆம் ஆண்டு 1190 மாணவர்களும், 1999-2000ஆம் ஆண்டு 1544 மாணவர்களும் பயன் பெற்றனர் என்பதாகும். ஆனால் கடந்த ஆண்டு ஜெயலலிதா தலைமையிலே ஆட்சி ஏற்பட்டதும் இதில் குளறுபடி ஏற்படுத்தி இந்தத் திட்டத்திற்கு குந்தகம் விளைந்திடும் வகையிலே சிலர் நீதிமன்றம் சென்ற போது, அரசு தரப்பிலே இந்தத் திட்டத்திற்காக முறையாக அக்கறை செலுத்தாத காரணத்தாலோ அல்லது கழக அரசு கொண்டு வந்த திட்டம் என்பதாலோ நீதிமன்றத்திலே சரியாக வாதிடாத நிலையில் அந்தத் திட்டம் இன்று நடைமுறையிலே இல்லாமல்போய் கிராமப்புறங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மாணவர்கள் இந்தப் பயனை அடைய முடியாத அவலம் ஏற்பட்டுள்ளது.

ப்ளஸ் 2 முடிவுகள் வெளிவந்துள்ள இந்த நேரத்தில் தொழிற்கல்வி பயில மாணவர்கள் துடித்துக் கொண்டிருக்கின்ற நேரத்தில் இத்திட்டத்திற்கு ஜெயலலிதா ஆட்சியில் ஏற்பட்டுள்ள பரிதாப நிலைமையை எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.

பொதுவாக ஒரு நாட்டின் முன்னேற்றம் எனச் சொல்ல வேண்டுமேயானால் கல்விக்காக அது செலவழிக்கின்ற தொகையையும் கணக்கிட்டுத்தான் சொல்ல முடியும். 1995-96ஆம் ஆண்டு ஜெயலலிதா ஆட்சியிலே இருந்த போது நிதி நிலை அறிக்கையிலே அந்த ஆண்டு கல்வித் துறைக்கான நிதி ஒதுக்கீடு 2,233 கோடி ரூபாய்.

2000-2001ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையிலே தி.மு.கழகம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த போது கல்வித் துறைக்கான நிதி ஒதுக்கீடு 4,949 கோடி ரூபாய்.

தி.மு.க. ஆட்சியில் ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக 543 கோடி ரூபாய் அளவிற்கு கல்வித் துறைக்காக நிதி ஒதுக்கீடு அதிகப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு ஜெயலலிதா ஆட்சியிலே எத்தனை கோடி ரூபாய் அதிகமாக ஒதுக்கப்பட்டுள்ளது தெரியுமா? வெறும் பத்து கோடி ரூபாய்தான்! இந்தக் கேள்வியைக் கேட்டால் அ.தி.மு.க. ஆட்சியில்

ஆதிதிராவிடர் நலத்துறை போன்ற முக்கியமான துறைகளுக்கே நாங்கள் கடந்த ஆண்டை விட, பல கோடி ரூபாய்களைக் குறைத்து நிதி ஒதுக்கீடு செய்திருக்கிறோமே என்று நம்மையே அவர்கள் கேள்வி கேட்கக் கூடும்! கேலி பேசவும் கூடும்!

அன்புள்ள,

மு.க.

20-5-2002

2751. செயலில் செம்மை வேண்டி இந்தச் சிறுகதை!

உடன்பிறப்பே,

இந்தக் கடிதம் உன் கைக்குக் கிடைக்கும்போது ஒரு வேளை நீ, கடமை மறவாமல் இடைத் தேர்தல் களத்தில் முகாமிட்டுப் பணியாற்றிக் கொண்டிருந்தால், களத்தில் உன் களைப்பு போக்கிடவும், மேலும் ஊக்கம் ஊட்டிடவும் பயன்படுமே என்பதற்காகக் குங்குமம் இதழில் இந்த வாரம் நான் எழுதியுள்ள சிறுகதையை நினைவூட்ட விரும்புகிறேன்.

‘‘மங்கலான பிறை நிலா, மண் குடிசையின் அகல் விளக்கு போல ஒளி விட்டுக் கொண்டிருக்கும் இரவு நேரம்! மலைப்பாறைகள் சுவர் எழுப்பியது போல அமைந்த ஒரு சாலை வழியில் பத்து பதினைந்து குதிரைகள், குளம்பொலிகள் காதைப் பிளக்கச் சென்று கொண்டிருக்கின்றன. அந்தக் குதிரைகளின் மீது கம்பீரமாக அமர்ந்துள்ள வீரர்கள், அவர்களுக்கு வழி காட்டிக் கொண்டு முன்னால் சென்று கொண்டிருக்கிற தங்கள் குழுவின் தலைவனைப் பின்பற்றிச் செல்கிறார்கள் என்பதை எவரும் எளிதில் புரிந்து கொள்ளலாம். பனிக்கட்டிகளைத் தொப்பிகளாக அணிந்து கொண்டு சிறு சிறு குன்றுகள் அந்த மலைப் பாறைப் பாதைக்கு எழிலூட்டிக் கொண்டிருக்கின்றன. "உம், வேகமாக! இன்னும் சற்று வேகமாக! குதிரைகளைத் தட்டி விடுங்கள். நாம் அரைமணி நேரத்தில் நமக்குக் குறித்துக் கொடுக்கப்பட்டுள்ள இடத்தை அடைந்தாக வேண்டும்.’’

இது குழுத் தலைவனின் கட்டளையாக முழங்கியது.

பாறைகள் அதிர்வது போலக் குதிரைகளின் காலடிக் குளம்போசை அந்தப் பகுதியையே பதற்றமுறச் செய்தது. ஓடிக் கொண்டிருந்த குதிரைகள் அந்தப் பாதை மீது பறப்பது போல நாலுகால் பாய்ச்சலில், தங்கள் வேகத்தை அதிகப்படுத்திக் கொண்டன. எந்தவொரு பயணத்திலும், இடையூறுகள் குறுக்கீடுகள் எதிர்ப்படுவது இயற்கைதானே!

அந்த இயற்கையின் செயலுக்கு விதி விலக்கு என்றில்லாமல் அந்த மலைச்சாலையில் ஒரு பெரிய மரம் திடீரென விழுந்த காட்சியைக் கண்டு குதிரையிலிருந்த அனைவரும் கடிவாளங்களை இழுத்துப் பிடித்து, பட, பட பட், பட் என்று குளம்படிச் சப்தங்கள் தேய்ந்து ஒலித்திட, இறுதியாக எல்லாக் குதிரைகளுமே சாலையின் குறுக்கே, சாலை முழுவதையும் அடைத்துக் கொண்டு கிடக்கும் அந்த மரத்தருகே வந்து நின்றன.

ஆகாயமளாவிட நின்றபோது அவ்வளவாகத் தெரியாத அந்த மரத்தின் உயரமும், பருமனும் அது கீழே விழுந்து விட்ட போதுதான் தெரிந்தது. மனித சமுதாயத்திலும் அப்படிச் சிலர் உண்டல்லவா? அந்தப் பருமனான மரத்தைத் தாண்டியும் குதிரைகள் போக முடியாது. சாலையின் ஓரமாகவும் பாதை அமைத்துக் கொள்ள முடியாத அளவுக்கு அந்த மரம் நீண்டு கிடந்ததால் அந்த யோசனையையும் அவர்களால் செயல்படுத்த முடியவில்லை.

எல்லா வீரர்களும் குதிரைகளில் இருந்து இறங்கினார்கள். குழுத் தலைவன் அவர்களைப் பார்த்து ஆணை பிறப்பித்தான்.

அவன் ஆணைப்படி, அந்த பிரமாண்டமான மரத்தை வீரர்கள் அந்தச் சாலையிலிருந்து உருட்டித் தள்ள வேண்டும். தலைவனின் உத்தரவை நிறைவேற்ற அந்த வீரர்கள் முனைந்தார்கள். தங்கள் மீது சவாரி செய்து தங்களை வியர்வைக் குளத்தில் மூழ்கச் செய்த வீரர்கள் அந்த மரத்தைத் தள்ளுவதற்காக, ஒவ்வொருவரும் உரக்கக் குரலெழுப்பி வியர்வை சிந்துவதைக் குதிரைகள் ரசித்தனவோ, என்னவோ அவர்களையே பார்த்துக் கொண்டு தமது அடர்ந்த வால்களால் தமது உடல்களைத் துடைத்தவாறு ஆசுவாசப்படுத்திக் கொண்டு அந்தச் சாலையில் வரிசையாக நின்றன. அத்தனை பேர் பலம் முழுதும் செலவிட்டுத் தள்ளியும் அந்த மரம் அசைந்து கொடுக்கவில்லை. என்ன செய்யமுடியும்?

நமது ஊர் நந்தனார் கதையாக இருந்தால் எல்லோரும் சேர்ந்து நின்று கோரசாக வழி மறித்திருக்குதே நந்தியென்று பாடியிருக்கலாம். மரமும் அவர்களுக்கு வழி விட்டு ஒதுங்கியிருக்கலாம். குதிரை மேலிருந்த தலைவனுக்குக் கோபம் கொப்பளித்தது - என்னய்யா! உடம்பில் வலுவில்லையா? நீங்கள் சாப்பிடும் உணவில் சத்து இல்லையா? அல்லது மனத்தில்

உறுதியில்லையா? இவ்வளவு நேரமாய்த் தள்ளுகிறீர்கள், மரம், ஒரு அங்குலம் கூட நகரவில்லையே என்று உறுமிடத் தொடங்கினார். மரத்தைத் தள்ளிக் கொண்டிருந்த வீரர்களில் ஒருவன், குழுத் தலைவன் குதிரை மீதமர்ந்தவாறு கோபிப்பது கண்டு, அய்யா! மன்னிக்கவும், ஆள் பலம் போதவில்லை என்றான்.

சட்! இதைச் சொல்ல வெட்கமாக இல்லை? என்றவாறு குழுத் தலைவன் தன் கையிலிருந்த சவுக்கை ஒரு சுழற்று சுழற்றினான். நல்ல வேளை! யார் மீதும் அடி விழவில்லை! அந்த மலைப்பாதையில் உள்ள பாறைகளில் எதிரொலித்ததுடன் அந்தச் சவுக்கு சுழற்சி நின்றுவிட்டது.

அப்போது அவர்களின் அருகே ஒரு குதிரை வேகமாக வந்து நின்றது. அதில் ஆஜானுபாகுவான ஒரு மனிதர் அமர்ந்திருந்தார். அவர் சாலையில் மரம் விழுந்து கிடப்பதையும், அதைத் தள்ளி அப்புறப்படுத்த முடியாமல் வீரர்கள் தவித்துக் கொண்டிருப்பதையும் பார்த்து விட்டு, அந்தக் குழுத் தலைவனை நோக்கி ஏனய்யா, நீரும் குதிரையிலிருந்து இறங்கி, இவர்களோடு சேர்ந்து மரத்தைத் தள்ளக் கூடாதா? என்று கேட்டார்.

அதற்குக் குழுத் தலைவன் சொன்ன பதில் என்ன தெரியுமா?

நான் இவர்களுக்குத் தலைவன். என்னால் கட்டளையிட மட்டுமே முடியும், உத்திரவை நிறைவேற்றுவது இவர்கள் கடமை!

அதைக் கேட்டு, எதிரே குதிரையில் வந்த மனிதர், ஒரு சிரிப்பு சிரித்து விட்டு, பரவாயில்லை, நீங்கள் எனக்கும் சேர்த்துக் கட்டளையிடுங்கள்! நானும் இவர்களோடு சேர்ந்து மரத்தை அகற்றுவதற்கு முயற்சி செய்கிறேன் என்று கூறிவிட்டு, குதிரையிலிருந்து குதித்தோடி அந்த வீரர்களுடன் சேர்ந்து கொண்டு மரத்தைத் தள்ளத் தொடங்கினார்.

சிறிது நேரத்தில் மரம் அங்கிருந்து சாலையோரம் தள்ளப்பட்டது. வந்தவர், தனது குதிரையிலேறியவாறு, என்றைக்குத் தலைவனும் சுய கௌரவம் என்ற மிதப்பில் எதிலும் அலட்சியம் காட்டாமல் தொண்டனைப் போன்ற உணர்வுடன் உழைக்கிறானோ, அன்றைக்குத்தான் சமுதாயமும், நாடும் முன்னேறும் என்று கூறிக் கொண்டே குதிரையைத் தட்டி விட்டு அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டார்.

யார் அவர்?

யார் அவர்?

குழுத் தலைவனுக்கும் அந்த வீரர்களுக்கும் இந்த வினா, அவர்களின் நெஞ்சில் விசுவரூபம் எடுத்தது!

அதற்கு அவர்களுக்கு

பொழுது விடிந்ததும்,

அவர்கள் ஊர் திரும்பியதும்

கிடைத்த பதில்!

அவர்தான் ஜார்ஜ் வாஷிங்டன்!

என்பதாகும்.

உடன்பிறப்பே, களம் நிற்கும் கழகத்தின் முன்னணித் தளபதிகள், குதிரைவீரர்களின் குழுத் தலைவனைப் போலில்லாமல் - ஜார்ஜ் வாஷிங்டனுக்கு நிகரான செயலாக்க உணர்வு கொண்டவர்கள் என்பதை நான் அறிவேன். அவர்களுக்கு என் அன்பான பாராட்டுகள்! இந்தப் பாராட்டினைச் சிலர் மட்டுமன்றி நம்மில் பலரும் பெற்றிடவேண்டுமென்று என் மனம் விரும்புவது இயல்புதானே! அதற்கு இச்சிறுகதை பயன்படு மல்லவா?

அன்புள்ள,

மு.க.

21-5-2002

2752. விவசாயிகள் ஏந்திய விளக்கு!
பாரதி மோகன் மறைவுக்கு
தலைவர் கலைஞர் இரங்கல்

உடன்பிறப்பே,

பாரதிமோகன் என்னிடம் பாசமும் நேசமும் கொண்ட கம்யூனிஸ்ட் இயக்க நண்பர்களிலே ஒருவர். அவரிடம் அளவளாவிடவும், விவாதித்திடவும் எனக்கு வாய்ப்புகள் ஏற்பட்டதுண்டு. வைரம் பாய்ந்த அவரது உள்ளத்தின், உரம் வாய்ந்த கொள்கையை எவரும் உறைத்துப் பார்த்து அறிந்து கொள்ளத் தேவையில்லை. இயக்கத்தைத் தொழிலாளர்களிடமும், விவசாயிகளிடமும் கட்டிக் காத்திட அவர் ஓய்வின்றி உழைத்தவர் என்ற முறையில் அவரிடம் எனக்குத் தனி மதிப்பு உண்டு.

தஞ்சைத் தரணியில் ஒளிவிட்டுக் கொண்டிருந்த விவசாயிகளுக்கான அந்த விளக்கு அணைந்து விட்டது. அவரது கட்சித் தோழர்களுக்கும், குடும்பத்தினருக்கும் என் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு.கருணாநிதி

21-5-2002

2753. மீலாடி நபி வாழ்த்து

உடன்பிறப்பே,

அகிலத்துக்கே ஓர் அழகிய முன்மாதிரியாகத் திகழும் அண்ணல் நபி அவர்கள் இந்த மண்ணில் உதித்த நாள்தான் ''மீலாடி நபி'' என்ற பெயரில் உலகமெங்கும் இன்று கொண்டாடப்படுகிறது.

பெண்ணடிமைத்தனம் உள்ளிட்ட பல்வேறு மூடப்பழக்க வழக்கங்கள் அரேபிய மண்ணை ஆட்டிப் படைத்த அந்த நாளில் தனியொருவராக நின்று பழமைவாதிகளுடன் சமர் புரிந்து - தான் நினைத்ததைச் சாதித்த வல்லமை கொண்டவராகத் திகழ்ந்தவர் நபிகள் நாயகம்.

உழைப்பாளியின் வியர்வைத் துளி உலரும் முன்னே அவனது கூலியைக் கொடுத்துவிடு என்று மொழிந்து உழைப்பின் பெருமையைப் போற்றியவர்-

தாயின் காலடிகளில்தான் சொர்க்கம் இருக்கிறது என மொழிந்து தாய்மையின் மேன்மையை உணர்த்தியவர் -

1400 ஆண்டுகளுக்கு முன்பே சகோதரத்துவம் -சமத்துவம் பேணிக் காப்பாற்றப்பட வேண்டும் - பெண்ணடிமைத்தனம் ஒழிய வேண்டும் என்று குரல் கொடுத்த புரட்சியாளர் நபிகள் நாயகம் அவர்கள். அந்த மகத்தான மனிதரின் பிறந்தநாளை 'மீலாடி நபி'' எனக் கொண்டாடி மகிழும் இஸ்லாமியப் பெருமக்கள் அனைவருக்கும் என் இதயங்கனிந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புள்ள,

மு.கருணாநிதி

25-5-2002

2754. கட்டுப்பாடு குலையாமல் கழகப் பயணம் செல்க!

உடன்பிறப்பே,

ஓநாய்கள் ஊளையிட்டுக் கொண்டேயிருக்கும் அதற்காக நீ உன் நடையை நிறுத்தாதே! நடுங்கி, ஓடுங்கி, ஓரம் ஒதுங்கத் தேவையில்லை நாம் போவது கொள்ளையடிக்க அல்லவே; கொள்ளைகளை தடுத்து நிறுத்தத்தானே! கொள்கை பரப்ப – குறிக்கோளை எட்டிப்பிடிக்க – வெற்றிக் குன்றின் மீது ஏறிக் கொடி நாட்ட! தூவப்படும் எதிரிகளின் கலக விதைகள் முள்ளாக வினைந்து தூயவனே! உன் கால்களில் குத்தும். உன்னைத் தொடர்ந்து வருவோர் பாதங்களைக் காயப்படுத்தாதிருக்க அதைத் தூக்கி, முனை முறித்துத் தொலைவில் போட்டு விடுக! பாதையில் குறுக்கிடும் காட்டாறு கண்டு பதறத் தேவையில்லை – உன் பாட்டன், பூட்டன், தாய், தந்தையர் கடந்தது எப்படி எனக் கணக்கிட்டுப் பாலம் அமைத்தோ, தோள்பலம் காட்டி நீந்தியோ பாதியில் பயணம் தடைபடாமல் ஏறுக கரையில்! ஊளையிடும் நரிகளின் கூட்டம் ஒன்று வலப்புறம் போகும் மற்றொன்று இடப்புறம் போகும் – அவை வலம் போனால் என்ன? இடம் போனால் என்ன? மேலே விழுந்து பிடுங்காத அளவுக்குப் பார்த்துக் கொள்க! புதர்களில் விலங்குகள் மலைப்பாம்புகள் புரளும் – அந்த இடர் களைய மட்டுமே கையில் ஆயுதம் தேவை! பதர் என மண்டும் மனிதப் பகையினை மாய்க்கப் பண்பெனும் வாளும் அன்பெனும் கவசமும் ஏந்திச் செல்க! உறைபனி மூடிய முகடுகள்

மீது ஊக்கமுடன் நீ ஏறிடும் போது; உட்பூசலற்ற
காலணி இருந்தால் தோது. ஒருக்காலும் அது வழுக்கவே
வழுக்காது! ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாய்க் குவிந்த
அழுக்குச் சிந்தனை, ஆதிக்கச் சுமைகள் அகற்றிடவே
உன் பயணம்; அதனை மறந்து அகதியாய்த் தமிழனை
விட்டு விடாதே! பாயிரம்பாடி உனக்குப் பாராட்டு
படித்து, பதவியைக் காட்டிப் பல்லக்கும் சுமந்திட,
பகைவர்கள் நண்பராய்க் காட்சி தருவர் - அந்தப்
படுகுழியில் விழாமல் உன்னையும் காத்து இனத்தையும்
காத்திடு! இனத்தைக் காக்கிறேன் பேர்வழி யென்று;
பணத்தைப் பறிப்பர் பாதிக்கப்பட்டோரிடம் இருந்தே!
அவர் குணத்தைக் காட்டி ஊளையிடுவர்; ஓநாயின்
குரல் அதுவெனக் கணத்தில் கண்டு களத்தில் மேவிடு
நீயும்! அய்யா பெரியார் வாழ்க என முரசறைந்து பாடு!
அறிஞர் அண்ணா வாழ்க எனச் சங்கொலித்து ஆடு!
களைப்பின்றித் தொடரலாம் கடும் பயணம் அனைத்தும்;
உழைப்பின்றி இருப்போரைச் சிற்றெறும்பும் பழிக்கும்!
கடமையினை உணர்ந்து, கண்ணியத்தில் மலர்ந்து
வெல்க; கட்டுப்பாடுக் குலையாமல் கழகப் பயணம்
செல்க! கணநேரமும் ஓய்வில்லை என்று சபதம் செய்க!
உடன்பிறப்பே; வளம் பரப்பத் தமிழகத்தில் மழையாய்ப்
பெய்க! எலிகளுக்கும் கரையானுக்கும் இடையிடையே
உன் வழியில் தீனி போட்டாலும் போடு; ஆனால், சில
ஏடுகளுக்கு மட்டும் தீனி போடாமல் எச்சரிக்கையாய்
இருந்திடு! நூறாயிரம் காலத்துப் பயிரப்பா கழகம்
- இதனை வேரோடு வீழ்த்திட எத்தர்கள் சிலபேர்
தேனோடு விஷம் கலந்து தருகின்றார் கவனி! நம்
ஊனோடும் உயிரோடும் இணைந்த கொள்கைக்கு
நடத்திடுவோம் வெற்றி பவனி!

அன்புள்ள,

மு.கருணாநிதி

26-5-2002

2755. வேல் போல் பறந்து வெற்றி பறித்திடு!

உடன்பிறப்பே,

பசி நோக்கார் கண் துஞ்சார் கருமமே கண்ணாயினார்
பழைய பாடல் இது -- பதிந்திருக்கும் உன் மனத்தில்!
புதிய திருப்பம் காண்பதற்கும் புனித வேடம்
கலைப்பதற்கும் பொல்லாச் செயல்கள் வீழ்வதற்கும்
- அறப் போர்க் கோலம் பூண்டுள்ளோம்! அதில் ஒரு
கட்டமே இந்தத் தேர்தல்! அள்ளிப் பொழிகிறார்
பணத் தோட்டா துள்ளியாடுது தோரணமாய்
கண்ணைப் பறிக்குது வண்ண விளக்கு! கருப்புப்
பணத்தால் கடலையே முடுவர்! கண்மணி நீயோ
கவலைப்படாமல் கழகக் கொடியைக் கையினில்
ஏந்து! உதயசூரியனை உடையினில் பொறித்திடு!
ஏன் காத்து இருக்கின்றாய்? எவர் வருவார் என
எதிர்பார்த்து இருக்கின்றாய்? வந்தாலும் ஒரு சொட்டுத்
தேன்தானேதருவார் - அது வரவில்லையென நினைத்து
வளைத்திடுக உடலை வில்லாய்! வகை வகையாய்
குடம் குடமாய்த் தேனும் பாலும் தொகை தொகையாய்க்
கொள்ளை கொண்டோர் கூடாரத்தில்! கண்ணாலே
கெஞ்சுகின்றாய் அன்பே! -- இங்கேது அந்தக் குடம்?
அண்ணாவின் தம்பியென்ற மகுடம்தான் உண்டு!
புண்ணான தமிழகத்தின் துயரம் போக்கி மண்ணாளும்
மமதையாளர் கொடுமை நீக்கி புதியநிலை உருவாக்கப்
புயலே! எழுக! புலிப் போத்தாய்ச் செயல்பட உடனே
எழுக! இடையில் இருக்கும் மணித்துளி குறைவு -
படைக்கலம் போலே பாய்ந்திடு கண்ணே! கடையில்
விற்கும் பண்டமோ வெற்றி? தளரா நடையுடன்

விரைந்திடு தொகுதியைச் சுற்றி! அயர்வை உதிர்த்திடு!
ஆற்றலைக் காட்டிடு! வியர்வை துடைத்திட நேரமும்
இன்றி ஆல்போல் தழைத்த கழகத்தின் உயிரே! நீ
வேல்போல் பறந்து வெற்றி பறித்திடு!

அன்புள்ள,
மு.க.
31-5-2002

2756. இடைத்தேர்தல்: வாக்குப்பதிவு நாளில் உடன்பிறப்புகளுக்கு கலைஞர் வேண்டுகோள்

உடன்பிறப்பே,

இடைத்தேர்தல் நடைபெறும் மூன்று தொகுதிகளில் வாக்குப்பதிவு நாளில் கழக உடன்பிறப்புகளின் பணிகள் குறித்து தலைவர் கலைஞர் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்து தலைவர் கலைஞர் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

வீண் பழி போடுவதற்கும், பொய் மூட்டைகளை அவிழ்த்துக் கொட்டுவதற்கும் ஜெயலலிதா என்றைக்குமே சளைக்காதவர்.

1991 முதல் 1996 வரை அவர் ஆட்சியில் இருந்த போது, தமிழ்நாட்டில் நடைபெறும் வழிப்பறி கொள்ளை, திருட்டு போன்ற வன்முறைகள் டெல்லி மேலிடத்திலிருந்து தூண்டி விடப்படுவதாக சட்ட சபையிலேயே 11.4.1994 அன்று கூறியவர்தான் அவர். ராஜீவ் காந்தி கொலை பற்றி மூப்பனார் மீதே பழி போட்டவர்.

எனவே, தேர்தலுக்காக அந்த அம்மையார் விடும் அவதூறு அறிக்கைகளைப் பொருட்படுத்தாமல் அண்ணா வழியில் நமது உடன்பிறப்புகளும், கூட்டணிக் கட்சித் தோழர்களும் அமைதியாகத் தேர்தல் பணியாற்ற வேண்டுகிறேன். இவ்வாறு கழகத் தலைவர் கலைஞர் கூறியுள்ளார்.

அன்புள்ள,

மு.க.

31-5-2002

2757. அனைத்து வாக்குச்சாவடிகளிலும் அராஜகம் - அலங்கோலம்

“சைதைத் தொகுதி முழுமைக்கும் மறுவாக்குப்பதிவு தேவை!”.

தேர்தல் ஆணையாளருக்கு கடிதம்

‘‘சைதாப்பேட்டை தொகுதியில் அனைத்து வாக்குச் சாவடிகளிலும் அராஜகங்கள், அலங் கோலங்கள் நடந்திருப்பதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன. எனவே ஆளுங்கட்சியின் அக்கிரமத்தைக் கண்டித்து, எங்களைப் போன்ற எதிர்க்கட்சிகள் அறப்போராட்டத்தில் ஈ.டுபடுவதற்குமுன், சைதைத் தொகுதி முழுவதற்கும் மறுவாக்குப் பதிவு நடத்திட தேர்தல் கமிஷன் ஆணை பிறப்பித்திட வேண்டுமென்று ஜனநாயகத்தின் பெயரால் மீண்டும் ஒரு முறை கேட்டுக் கொள்கிறேன் என தலைவர் கலைஞர் அவர்கள், நேற்று தேர்தல் ஆணையாளருக்கு எழுதியுள்ள கடிதத்தில் கூறியுள்ளார்’’.

எங்களுக்கு, கிடைத்த ஆதாரப்பூர்வமான தகவல்கள்படி சைதாப்பேட்டை இடைத்தேர்தலில் தொகுதியின் அனைத்து வாக்குச்சாவடிகளிலும் ஏராளமான போலி வாக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பது ஊர்ஜிதமாகிறது.

1. தாசில்தார் பெயரில் பூர்த்தி செய்யப்படாத சாதிச் சான்றிதழ்கள் ஆயிரக்கணக்கில் பயன்படுத்தப்பட்டு, அவைகளை அடையாளச் சீட்டுகளாகக் காட்டி, போலி வாக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. காதர் இஸ்மாயில் என்பவர் பெயரில் வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழில், அவர் இந்து வெள்ளாளர் வகுப்பைச் சேர்ந்தவர் என்று பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.
2. இது தவிர, தாசில்தார் இல்லாதவர்களே அதுபோன்ற சான்றிதழ்களில் கையெழுத்திட்டு,

அந்த அலுவலக முத்திரையைக் குத்திக் கொண்ட சான்றிதழ்களும் நூற்றுக் கணக்கில் காட்டப்பட்டு வாக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

3. போலி ரேஷன் கார்டுகள் ஆயிரக்கணக்கில் தயாரிக்கப்பட்டு, அவைகளை அடையாள அட்டை களுக்குப் பதிலாக உபயோகித்து போலி வாக்குகள் போட அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

4. இவைகளையெல்லாம் வாக்குப்பதிவு இடங்களில் உள்ள அரசு அதிகாரிகள், கண்டும் காணாமல், அதைப்பற்றி எந்தவிதமான கேள்வியும் கேட்காமல் வாக்களித்திட ஒத்துழைத்துள்ளார்கள்.

5. தி.மு.கழகத்தின் வேட்பாளரும், தலைமை ஏஜெண்டும் தாக்கப்பட்டதோடு, சைதாப்பேட்டை தொகுதி முழுவதும் ஒரு பீதி ஏற்படுத்தப்பட்டு பொதுமக்கள் யாரும் 11 மணிக்குப் பிறகு வாக்களிக்கவே விட வில்லை.

6. எங்கெங்கே தி.மு.கழகத்தின் ஏஜெண்டுகள் இந்தப் போலி வாக்குகளைப் பற்றி கேள்வி கேட்டார்களோ, அவர்கள் எல்லாம் காவல் துறையினரின் துணையோடு அடித்து விரட்டப்பட்டு விட்டார்கள்.

7. மத்திய போலீசார் ஏராளமாக அங்கே நிறுத்தப்பட்டிருந்தும், அவர்களும் செய்வதறி யாமல் வெறும் பார்வையாளர்களாக மட்டுமே இருந்தார்கள்.

8. காலை 11 மணி வரை அமைதியாக நடைபெற்று வந்த தேர்தல், அதற்குப் பிறகு தான் காவல்துறையினரின் ஒத்துழைப்போடு வன்முறைக் களமாக மாறியது.

9. தி.மு.கழகத்தின் முறையான ஏஜெண்டுகள் பல பூத்களில் போலீசாரால் உள்ளே விடப்படவே இல்லை.

10. தேர்தல் விதிமுறைகளுக்கு மாறாக, அமைச்சர்கள் வாக்குப் பதிவு நடைபெறும் நாளன்றே தொகுதி முழுவதும் தேர்தல் பணிகளை ஆற்றினார்கள்.

இத்தகைய இழிதகை நிலைமை தமிழ்நாட்டில் இதுவரை ஏற்பட்டதே இல்லை. ஒரு பூத்தில் மட்டுமல்ல, சைதாப்பேட்டைத் தொகுதியிலே உள்ள அனைத்து பூத்களிலும் இத்தகைய அலங்கோலங்கள் நடந்திருக்கின்றது. எனவே ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காகவே உருவாக்கப்பட்ட தேர்தல் ஆணையம், தன்னுடைய நற்பெயரைக் காப்பாற்றிக் கொள்ளவும், சைதாப்பேட்டை தொகுதியில் ஏற்பட்ட ஜனநாயகப் படுகொலைக்கு மாற்றம் காணவும் உடனே பாரபட்சமின்றி, சைதாப்பேட்டையில் ஒரு சில பூத்களுக்கு மட்டுமல்லாமல் அனைத்து பூத்களுக்குமே வாக்குப் பதிவுக்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று தி.மு.கழகத்தின் சார்பில் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் உள்ள எங்களைப் போன்ற இதர எதிர்க் கட்சிகளும் இந்த அக்கிரமத்தைக் கண்டித்து அறப்போராட்டம் நடத்துவதாக அறிவித்திருக்கிறார்கள். அப்படிப் போராட்டம் நடத்துவதற்கு முன்பு தாங்களாகவே முன் வந்து, சைதாப்பேட்டை தொகுதி முழுவதற்கும் மறு வாக்குப்பதிவு நடத்திட ஆணை பிறப்பித்திட வேண்டு மென்று ஜனநாயகத்தின் பெயரால் மீண்டும் ஒருமுறை கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு தலைவர் கலைஞர் அவர்கள் தமது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அன்புள்ள,

மு.க.

2-6-2002

2758. அரசியலில் இருந்து யாரை விலகச் சொல்கிறீர்?

உடன்பிறப்பே,

பாவம்! பன்னீர்செல்வத்தை, தூக்குவது போல் தூக்கிப் பலர் முன்னிலையில் பரிகாசத்துக்கு ஆளாக்குகிற ஒரு புதுவிதமான பழிவாங்கும் நடவடிக்கையை, ஜெயலலிதா, கடந்த ஆண்டிலிருந்தே கடைப்பிடித்து வருகிறார்.

உச்சநீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில், ஜெயலலிதா முதலமைச்சராக நீடிக்க முடியாது என்ற நிலை ஏற்பட்டபோது, 'மனோகரா' படத்தில் வசந்தனுக்கு முடிசூட்டுவது போல பன்னீர் செல்வத்துக்குத்தான் பட்டாபிஷேக விழா நடத்தப்பட்டது.

முடிசூட்டப்பட்டதாகத்தான் அறிவிக்கப்பட்டதே தவிர, ஒரு முறிந்து போன செங்கோலாவது பன்னீரின் கையிலே கொடுக்கப்பட்டதா என்றால், அய்யோ, பரிதாபம் அதைப் பற்றிப் பேசவே கூடாது.

கோட்டையிலும், வீட்டிலும் பன்னீர்செல்வமே ஒரு நாற்காலியில் உட்கார்ந்து கொள்வார் - ''ஏய், யாரடா அங்கே?'' அடே சேவகா! என்பார்! சேவகன் இருந்தால்தானே வருவதற்கு! சேவகனுக்கு பதிலாக இவரே எழுந்து நின்று நாற்காலியை நோக்கிக் குனிந்து கொண்டு; ''அய்யா, கூப்பிட்டீங்களா?'' என்று கேட்பார்.

சேவகனுக்கு உத்திரவிட வேண்டுமே! அதற்காக அவரே துள்ளிக் குதித்து நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு சட்டை வேட்டிகளை சரி செய்து கொண்டு, ''ஆமாம், கூப்பிட்டேன்''. உடனே டி.ஜி.பி.யை வந்து என்னைப் பார்க்கச் சொல்லி போன் போடு! என உத்திரவிட்டு விட்டு, மின்னல் வேகத்தில் அவரே எழுந்து உடல் வளைத்து, ''அய்யா! டி.ஜி.பி. இல்லேன்னா....?'' என இழுத்தாற் போலக் கேட்டு, அக்கணமே தனது அரியாசனத்தில்

அவசரமாக விழுந்து, ''அப்படியா?'' அவர் இல்லேன்னா யாராவது ஒரு கான்ஸ்டேபிளையாவது கூப்பிடு! என்று சப்தம் போட்டுக் கத்திவிட்டு, மீண்டும் அவரே எழுந்து குனிந்து, ''அய்யா கான்ஸ்டேபிளுக்கு வேற வேலைஇருக்காம். முடிஞ்சா உங்களை வந்து பார்க்கச் சொன்னார்!'' எனச் சொல்லி முடித்துவிட்ட அதே நொடியில், ''சரி சரி! கான்ஸ்டேபிள் கட்டளைப்படியே போய்ப் பார்க்கிறேன்'' என்று தனது கனத்த சரீரத்தை அசைத்தவாறு காரில் ஏறிக் கொண்டு, ''அம்மா தயவாலே, இந்தக் காராவது கிடைச்சுது'' என்று மனத்திற்குள் நினைத்தவாறு பன்னீரின் ராஜ்யம், ஒரு ஆறு மாத காலம் ஓடிற்று! பூஜ்யங்களும் ராஜ்யம் ஆள முடியும் என்பதை எடுத்துக்காட்டும் வகையில், அவர் பெயரும் பொருத்தமாக ''0'' பன்னீர் செல்வமாக அமைந்தது!

இதைத் தவிர, அவர் முதலமைச்சர் கிரீடம் சூட்டிக் கொண்டிருந்த ஐந்தாறு மாதங்களில் அவர் அடைந்த கீர்த்தி என்ன? மனோகராவில் 'வசந்தன் என்ற பித்துக்குளி கதாபாத்திரத்துக்கு இருந்த மதிப்பு கூட, இவருக்குக் கிடையாதே என்பதை எண்ணி என் போன்ற பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தோர் எவ்வளவு கவலைப்பட்டிருப்பார்கள் என்பது எனக்குத்தான் தெரியும்.

அந்த ஐந்தாறு மாத காலத்தில், பன்னீர்செல்வம் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி, வீர முழக்கமிட்டு, வெற்றிக் கொடி பிடித்தது ஒரே ஒரு நிகழ்ச்சியில் தான்! அதாவது ஆண்டிப்பட்டியில் இடைத்தேர்தல் - சைதை, வாணியம்பாடி தேர்தல்களை தள்ளி வைத்து விட்டு அங்கே மட்டும் தேர்தல் நடப்பதற்கு தேர்தல் ஆணையம் வழிவகுத்துக் கொடுத்தது. அப்போதுதானே அமைச்சர்கள் அனைவரும், அதிகார வர்க்கமும், தங்களின் சகலகலா அதிகார துஷ்பிரயோகங்களைச் செய்தும் - அடியாட்களைக் கொண்டும் - கிராம அதிகாரிகளின் போலிச் சான்றிதழை ஓட்டுக்களாக மாற்றியும் அம்மாவை ஜெயிக்க வைத்து முதலமைச்சராக ஆக்க முடியும்'.

அந்த சமயத்தில்தான், ஆம், அந்த ஒரே ஒரு சமயத்தில்தான் பெரியகுளம் பன்னீரின் அதிகாரம் ஒரே ஒரு தடவை தூள் பறந்தது! ஆண்டிப்பட்டி தேர்தல் பிரச்சாரத்துக்காக சென்ற எனக்கு, பக்கத்து மாவட்டமான திண்டுக்கல் குடகனாறு விடுதியில் தங்கிட நகராட்சித் தலைவர் பஷீர் மூலம் அனுமதி கேட்கப்பட்டு,

உடனே விடுதி அதிகாரியினால் அனுமதியும் தரப்பட்டு விட்டது. இதைக் கேள்விப்பட்ட பன்னீர், உடனடியாக அந்த அனுமதியை ரத்து செய்யச் சொல்லி உத்திரவிட்டு, விஷயம் கோர்ட் வரை போகிற அளவுக்குக் ''கோல்மால் செய்தாரே! அது ஒன்றுதான் அவர் ஐந்தாறு மாத காலம் முதலமைச்சராகக் கோலோச்சிய போது செய்த அதிகாரம்!'' அதுவும் சுயநிலையில் அல்ல! சுளீர் சவுக்கடி, தோட்டத்திலிருந்து கிடைத்த காரணத்தால்!

''இந்த மனிதர் மானாபிமானத்தைப் பற்றிக் கவலைப்படாதவர்'' - அதனால் அவருக்குப் பட்டுக் குஞ்சத்தைக் கட்டிவிட்டு, நிர்வாகத் திறமையற்ற ஜீவன் என்பதை சட்டப் பேரவையிலேயே பகிரங்கமாகத் தெரிவிக்கலாம் என்ற நச்சு எண்ணம் இருந்த காரணத்தினால்தான்,

ஐந்தாறு மாதம் நான் முதல்வர் பொறுப்பில் இல்லை. அதிகாரிகள் பொறுப்பின்றி நடந்து கொண்டனர். நிர்வாகம் சீர் குலைந்து போனது. அதிகாரிகளுக்கு இப்போது சவுக்கடி கொடுத்து வேலை வாங்குகிறேன்.

என்ற கருத்துப்பட ஜெயலலிதா கர்ச்சனை செய்தாரே! அப்போது இந்த பன்னீர்செல்வத்தின் முகம் ''வசந்தன் போல இளித்தபடியிருந்தாலும், அகம், சுளித்துப் போயல்லவா இருந்திருக்குமென்று நீயும், நானும் கற்பனை செய்வது கூட சரியல்ல! அவருக்கு அகம் வேறு, முகம் வேறு அல்ல! இரண்டுமே அசடு வழியக்கூடியவைகள்தான்!''

இல்லையேல், தனது இடைக்கால ஆட்சியில் நடந்த நிர்வாகத்துக்கு, ஜெயலலிதா தந்த சர்டிபிகேட்டை (மன்னிக்கவும்) சாட்டையடியை இந்த அளவு தாங்கிக் கொண்டிருப்பாரா?

சாட்டையா? சர்டிபிகேட்டா? என்ற வித்தியாசமெல்லாம் 'வசந்தன்களுக்கு எப்படிப் புரியும்!'

அப்படிப் புரியாத மனிதராக இருப்பதால்தான் பின்வரும் அறிக்கையொன்றுக்கு அவர் பிதாவாகக் காட்சியளிக்கிறார். என்ன அறிக்கை அது?

''தேர்தல் கமிஷன் மீது குறை கூறிவிட்டு, மத்திய அமைச்சரவையில் தி.மு.க. நீடிப்பது ஏன்?''

என்று கேட்டிருக்கிறார் பன்னீர்செல்வம்.

இதிலிருந்து என்ன தெரிகிறது? தேர்தல் கமிஷன் என்பது ஒரு சுயேச்சையான நிறுவனம் - அதை மத்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாக எந்த மண்டூகங்களும் கூற மாட்டார்கள்.

ஆனால் நமது ''வசந்தன் அவர்களுக்கு யாரோ சிலர், மத்திய அரசும், தேர்தல் கமிஷனும் ஒன்றுதான் என்று வேடிக்கையாகவோ, விஷமத்தனமாகவோ சொல்லியிருக்கிறார்கள். அதாவது மனோகராவில் விகடனும், வைத்தியரும் வசந்தனைக் கேலி செய்வது போல! அதை நம்பிக் கொண்டு, தேர்தல் கமிஷன் வாஜ்பய் தலைமையில் நடக்கிற ஸ்தாபனம் போல இந்த வசந்தனும் பிதற்றியிருக்கிறார்!''

இன்னொரு அறைகூவலும் விட்டிருக்கிறார், ஐந்து மாத முதலமைச்சரும் அற்புத நிர்வாகி(?) என்று 'அம்மாவால் புகழப்பட்டவருமான இந்த வசந்தன்!'

''கருணாநிதி, இந்த இடைத் தேர்தல் தோல்விக்காக அரசியலில் இருந்தே விலகிக் கொள்ள வேண்டும்''.

என்று பன்னீர் கூறியிருப்பதை, வெறும் வசந்தனின் உளறலாக எடுத்துக் கொள்ள முடியாது!

1996-ல் பர்கூரில் தோற்றுப் போய் மாநில முழுதும் தோல்வியைத் தழுவி, ஜெயலலிதா அனாதையாக நின்ற போது கூட, அவர் அரசியலில் இருந்து விலகி விடவில்லை. ஒரு வேளை அப்போது இந்த ''வசந்தன் அம்மாவிடம் அரசியலில் இருந்து விலகி விடுமாறு தனியாகச் சொன்னாரோ என்னவோ!''

நான் இந்த வசந்தனுக்கு சொல்கிற ஒரே பதில், ''தம்பி வசந்தா! வெற்றி தோல்விகளையோ, அடக்குமுறைகளையோ கொலைப் பழிகளையோ பொருட்படுத்தாமல் பொது வாழ்க்கையில் ஈடுபட்ட பசும் பொன் சிங்கம் பத்தரை மாற்றுத் தங்கம் தேவர் திருமகனுடன் இணைந்தும் - எதிர்த்தும் அரசியல் நடத்தியவர்கள் நாங்கள்!''

எங்களையா அரசியலை விட்டு விலகச் சொல்கிறீர்! அது யார் அப்பன் வீட்டுச் சொத்துமல்ல! உமது அம்மாவின் சுய சம்பாத்யமும் அல்ல!

உடன்பிறப்பே,

அரசியலை விட்டு நான் போக வேண்டுமாம்! அதாவது மக்களுக்காக என்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் பணியிலிருந்து நான் ஓடிவிட வேண்டுமாம்! சொல்வது யார்? என் பொது வாழ்வில் பாதியளவுகூட வயது ஆகாத சிலர் கூறுகிறார்கள். யாரைப் பார்த்து? பல் முளைத்த நாள் முதல் பெரியாரின் பகுத்தறிவுப் பாசறையில் பயின்று, அண்ணாவின் தமிழ் முழக்கம் கேட்டு, பட்டுக்கோட்டை அழகிரி அண்ணனிடம் பேச்சுப் பயிற்சி பெற்று, பாவேந்தரின் பாராட்டுக் கவிதையை பாலப் பருவத்திலேயே பெற்ற என்னை, மூதறிஞர் ராஜாஜியுடன், பெருந்தலைவர் காமராஜருடன், லோக்நாயக் ஜெயப்பிரகாஷ் நாராயணனுடன், பாபு ஜெகஜீவன் ராமுடன், காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப்புடன், பெரியவர் பக்தவத்சலத்துடன், அன்னை இந்திரா காந்தியுடன், அவர் செல்வன் ராஜீவ் காந்தியுடன், சமூக நீதிக் காவலர் வி.பி. சிங்குடன், அருமை நண்பர் எம்.ஜி.ஆருடன் அரசியல் நடத்திய என்னை, கல்லக்குடி, பாளையங்கோட்டை என களம் பல கண்ட என்னை அரசியலை விட்டுப்போ என்கின்றன சில அரைவேக்காடுகள் என்றால், அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லைதான்!

அமெரிக்கா சென்று சிகிச்சை பெற்று வந்த எம்.ஜி.ஆர். அவர்கள் தன் மீது பொறாமைப்படுகிறார் என்றும், ஆட்சி நடத்த அவருக்கு தகுதியில்லை என்றும், அவர் அரசியலில் இருந்து விலக வேண்டுமென்றும் பிரதமர் ராஜீவ் காந்திக்கு ''ஆங்கிலத்தில் கடிதம் எழுதிய ஜெயலலிதாவின் சீடர்தானே! அதனால் அவர் கூறுவதற்காக நான் ஆச்சரியப்படவுமில்லை!''

நீ இருக்கும் போது, உன் நெஞ்சில் நான் இருக்கும் போது, இந்த ஊளைச் சத்தங்கேட்டு நான் அஞ்சிடப் போவதுமில்லை!

அண்ணா சொன்னாரே! 1937-ல் சூலூர் மாநாட்டில், தனது உரையில், ''சூலூரில் தொடங்கிடும் என் கொள்கைப் பயணம், சுடலையூர் போகும் வரையில் நிற்காது என்று குறிப்பிட்டாரே! அந்த அண்ணாவின் தம்பிகள் நாம் என்பதை நாட்டுக்கு தொடர்ந்து உணர்த்துவோம்!''

அன்புள்ள,

மு.க.

7-6-2002

2759. ‘இருந்தும் கெடுத்தான்’ எனும் நிலையை இனியும் கழகம் அனுமதிக்காது!’

உடன்பிறப்பே,

உடன்பிறப்பின் உள்ளக் குமுறல் என்ற தலைப்பில் ஜூன் 9 என்று தேதியிட்ட ஜூனியர் விகடன் இதழில் ஒரு கட்டுரையும், ஓடி ஒளிந்த உடன்பிறப்புகள் - கோபத்தில் கலைஞர் என்ற தலைப்பில் ஜூன் 9 என்று தேதியிட்ட கல்கி இதழில் ஒரு கட்டுரையும் வெளிவந்துள்ளதை நீ படித்திருக்கக் கூடும். அவற்றைப் படிக்காவிடின், அந்த இரு கட்டுரைகளையும் படித்த பிறகு, இந்த என் கடிதத்தை நீயோ அல்லது நமது உடன் பிறப்புகளோ படிப்பது நலம்பயக்குமெனக் கருதுகிறேன்.

“அந்த இரு கட்டுரைகள் என்று கூறுவதை விட, கழகத்திலிருப்போர் (நான் உட்பட) நமக்கு நாமே எண்ணிப் பார்த்துக் கொள்ளவும், எதிர்காலத்தை எப்படி அமைத்துக் கொள்ளப் போகிறோம் என்ற கேள்விக்கு விடை காணவும் நமது மனச்சாட்சிக்கு கூறப்பட்ட அறிவுரைகள் என்றும், உணர்த்தப்படும் நிலை விளக்கம் என்றும் கூறுவதுதான் பொருத்தமாக இருக்கும்”.

எனவே அக்கறையுள்ளோர் அல்லது இனி மேலாவது அக்கறை கொள்ளலாம் என நினைப்போர், நான் குறிப்பிட்டுள்ள இதழ்களைத் தவறாமல் படித்து, எனக்கும் சூலூருக்குமுள்ள தொடர்பு அந்த நூலில் இடம் பெற்று 1946 முதல் நான் கலந்து கொண்ட நிகழ்ச்சிகள் குறிப்பிடப்பட்டுள்ளதோடு; 1995ஆம் ஆண்டு ஜூன் 30 அன்று சூலூர் பொதுக் கூட்டத்தில் நான் பேசியதும் வெளியிடப்பட்டுள்ளது. அந்தப் பேச்சின் ஒரு பகுதி 2.7.1995 முரசொலியில் வெளிவந்தது. இப்போது அந்த நூலிலும் இடம் பெற்றுள்ளது.

அது வருமாறு:-

“இங்கே நான் மேடையில் வந்து அமர்ந்ததும் சூலூர் பாவேந்தர் பேரவை தொகுத்த ‘சூலூர்’ நினைவுக் குறிப்புகள் என்னிடம் தரப்பட்டது.

அதில் சூலூரினுடைய தொன்மையான வரலாறும், சுயமரியாதை இயக்கத்தின் சரித்திரமும், சூலூருக்கும், எனக்கும் உள்ள அன்புப் பிணைப்பும் மிக அழகாக, தெளிவாக எழுதப் பட்டிருந்தது. அவற்றைப் பற்றி விரிவாகப் பேச எனக்கு ஆவலிருந்தும் நேரமில்லை. காரணம், நாளை காலையில் நான் சென்னையில் இருந்தாக வேண்டும். மறைந்த பாவலரேறு பெருஞ் சித்திரனாரின் படத்திறப்பு நிகழ்ச்சியில் நான் நாளை கலந்து கொள்ளவேண்டும்.

இந்த ஊருக்குச் சங்ககாலப் பெயர் சூரலூர் என்பதாக இருந்ததாம். கி.பி.9ஆம் நூற்றாண்டில் ஆதித்த சோழன் இந்த ஊருக்குச் சூட்டிய பெயர் அரிய பிராட்டி நல்லூர். கி.பி.14ஆம் நூற்றாண்டில் சுந்தர பாண்டியன் சூட்டிய பெயர் சுந்தரபாண்டிய நல்லூர். கி.பி.18ஆம் நூற்றாண்டில் சூரனூர் என்ற பெயர் அமைந்துள்ளது. பின்பு நிலை பெற்ற பெயராக சூலூர் ஆகியிருக்கிறது.

சூல் கொள்கிற இடம் - எதுவும் ஆரம்பமாகிற இடம் - சூலூர். சூல் என்றால் கரு. கர்ப்பம் கொள்வதைக் கூட சூல் கொண்டார் என்று கூறுவார்கள். எனவே, எந்தச் சிறப்பும் ஆரம்பமாகும் ஊர் இது.

கி.மு.3ஆம் நூற்றாண்டுக்குரிய 'எரான் வகை நாணயங்கள்' சூலூரில் மிகுதியாகக் கிடைத்திருக்கின்றன. கி.மு.2ஆம் நூற்றாண்டு முதல் முந்நூறு ஆண்டுக் காலம் உரோமானியர்களின் வணிக மையமாகத் திகழ்ந்த ஊர் சூலூர். இதற்குச் சான்றாக உரோமானிய நாணயங்களும், அணி கலன்களும் ஏராளமாக இங்கே கிடைத்திருக்கின்றன.

30.8.1892இல் உருவான சூலூர் ஊராட்சி மன்றம் 'தமிழ் நாட்டிலேயே முன்னோடி ஊராட்சி மன்றம், எனப் பாராட்டப்பட்ட மன்றமாகும். சூலூர் ஊராட்சி மன்றம், உயர்நிலைப் பள்ளி, காவல் நிலையம், பதிவாளர் அலுவலகம் அனைத்தும் 'நூறாண்டு கண்ட நிறுவனங்கள், என்ற பெருமை உடையவை'.

சூலூருக்கும் திராவிடர் இயக்கத்திற்கும் உள்ள தொடர்பைப் பார்க்க வேண்டுமானால், 1920 முதல் சூலூரில் தனிப் பெரும் ஒரே இயக்கமாக புகழோங்கி இருந்தது நீதிக் கட்சிதான். திராவிடர் கழகத்திற்குத் தாய்க் கழகம் நீதிக் கட்சி என்பதை நீங்கள் அறிவீர்கள்.

அந்த நீதிக் கட்சி 1920 முதல் சூலூரில் புகழோங்கி நின்ற கட்சியாகும். 1927இல் தந்தை பெரியார் சூலூருக்கு வருகை தந்தார். சுயமரியாதை மாநாடும், சமபந்தி விருந்தும் அப்போதுதான் இங்கே நடைபெற்றன.

அது முதல், இந்தச் சூலூர் சுயமரியாதை இயக்கத்தின் கோட்டையாகவே திகழ்ந்து வருகிறது.

18.3.1956 'திராவிட நாடு' இதழில் அறிஞர் அண்ணா அவர்கள் சூலூரைப் புகழ்ந்து 'கிளிக்குப் பச்சை பூசுவதா?' என்ற தலைப்பில் ஒரு தனிக்கடிதமே எழுதியிருக்கிறார்.

1938 இல் முதன் முதல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் - சூலூரைச்சேர்ந்த வீராங்கனையர் இருவர் பங்கு கொண்டார்கள். ஒருவருடைய பெயர் அங்கமுத்து அம்மையார். இன்னொருவருடைய பெயர் மீனாட்சி அம்மையார். கோவை மாவட்டத்தில் 1949இல் முப்பத்திரண்டு தி.மு.க. கிளைகள் இருந்தன. மாணவர் தி.மு.க. கிளைகள் ஏழு இருந்தன.

இருவகைக் கிளைகளும் தொடக்க நாளிலேயே உருவான ஊர் சூலூர் என்பது பெருமைக்குரியது. நாற்பத்தேழு ஆண்டுகளுக்கு முன்பு, நான் இங்கே ஒரு திருமணத்திற்குத் தலைமை வகிக்க வந்தேன். அப்போது எனக்கு இருபத்து நான்கு வயது. யார் திருமணத்திற்கு என்றால், இன்றைக்கு இந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகிக்கிறாரே தம்பி சூ.சு.பொன்முடி. இவருடைய தந்தையார் எஸ்.ஆர்.எஸ். திருமணத்திற்கு நான் தலைமை வகித்தேன்.

10.6.1948இல் நடைபெற்ற அந்தத் திருமணம் சூலூர் சண்முகதேவி திரையரங்கில் நடைபெற்றது. அது மாத்திரமல்ல, சூலூர் புகைவண்டி நிலையத்திலிருந்து நான் குதிரை வண்டியிலே அழைத்து வரப்பட்டேன்.

அன்றைக்கு என்னைக் குதிரை வண்டியிலே வைத்து அழைத்து வந்த கழகத் தோழர் இராணுவ வீரர் நாச்சி முத்து, நேற்று (29.6.1995) தான் இயற்கை எய்தினார் என்ற செய்தியை அறிந்தேன். அவரது குடும்பத்தாருக்கு என்னுடைய ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் நொய்யலாற்றில் பல் விளக்கி, பாலும் முட்டையும் போதும் என்று என் சிற்றுண்டியை முடித்துக் கொண்ட நினைவுகளை சூலூர் இன்றும் நினைத்தபடி உள்ளது.

சூலூரில் 1947இல் நடைபெற்ற திராவிடர் கழகக் கூட்டத்திற்குப் புகை வண்டி நிலையத்திலிருந்து நான் நடந்தே வந்தேன்.

சூலூருக்கு 1948இல் குதிரை வண்டியில் வந்த நான் 1947இல் நடந்தே வந்திருக்கிறேன்.

உடன்பிறப்பே,

சூலூர் மட்டுமல்ல! இப்படிப் பாலூர், வேலூர், கீழூர், மேலூர் என எத்தனையோ ஊர்கள், பட்டி தொட்டிகளில்கூட, நான் மட்டுமல்ல! என்னைப் போல எத்தனை எத்தனையோ இயக்க முன்னோடிகள், ஆங்காங்கு வேரோடி, விரிந்து, பரந்து வலிவு சேர்த்துத்தான் இந்த இயக்கம் இன்று விழாத் தருவாக எழுந்து நிற்கிறது.

சில இயக்கங்கள் விழா தருவாக விளங்கலாம். ஆனால் இந்த இயக்கம் விழாத்தரு! ஆம்! விழாத தருவாக விளங்குகிறது. விழக்கூடாத தரு என்பதால், இதனை விழாமல் காத்திடத்தான் இதழ்கள் இரண்டின் விமர்சனங்களும், விழைவுக் கட்டுரைகளாகவே எனக்குத் தோற்றமளிக்கின்றன.

தேர்தலை மட்டும் மையமாகக் கொண்டு நான் அந்த இதழ்களின் கருத்தினை ஆய்வு செய்திட வில்லை. ஓர் இயக்கத்தின் வலிவு தேர்தல்களால் மட்டுமே கணிக்கப்படுவதில்லை. அதுவும் காரணங்களில் ஒன்றாக இருந்தபோதிலும்!

அந்த இதழ்களின் கருத்துக்குப் பலம் சேர்ப்பது போல், எனக்கு ஏற்பட்டுள்ள கவலையையும் சொல்லாமல் இருக்க முடியாது! அதற்கு அண்மையில் (5.6.2002) அன்று தலைமைக் கழக வேண்டுகோளின்படி, மாநில முழுதும் அடக்குமுறை அராஜக தேர்தல் முறைகேடுகளைக் கண்டித்து, வட்டாட்சியர் அலுவலகங்களின் முன்பு நடைபெற்ற தி.மு.க. ஆர்ப்பாட்டங்களும், அவற்றில் பா.ம.க., மூவேந்தர் முன்னேற்றக் கழகம் முதலிய தோழமைக் கட்சிகள் கலந்துகொண்டதும், அந்த அறப்போர்க் கிளர்ச்சி மிக வெற்றிகரமாக நடைபெற்றதும் எனக்கு பெருமகிழ்ச்சி அளிக்கக் கூடியதுதான்!

ஆனால் ஒன்று! அந்த ஆர்ப்பாட்டங்களில், கழக முன்னோடிகள், சட்டமன்ற, நாடாளுமன்ற முன்னாள் - இந்நாள் உறுப்பினர்கள், முன்னாள் அமைச்சர்கள், இப்போதும் பதவிப் பொறுப்புகளில் இருப்போர் அல்லது முன்பு இருந்தோர்

அனைவருமே கலந்து கொண்டார்களா என்றால், அதற்கு முழுமையாக, மகிழத்தக்க அளவுக்கு மறுமொழி கிடைக்கவில்லை என்பதுதான் உண்மை!

இந்த அவலத்தை அந்த இரு இதழ்களும் குறிப்பிட்டுக் காட்டாவிட்டாலும், இந்தக் குறை, என் மனத்தைக் குடைந்து கொண்டுதானிருக்கிறது.

தெனாலிராமன் தன் குதிரையைப் பற்றிச் சொன்னதாக ஒரு விகடத் துணுக்கு:

எந்தன் குதிரையைப் போல்
இந்த உலகுதனில் எங்கும் காண முடியாது.
அது, அதிக ஓட்டம் ஓடாது;
ஓடினாலும் ஓட முடியாது –
‘‘காணம் என்றால் ஊம் –
கடிவாளம் என்றால் ஊஹூம்!’’
(காணம் = தீனி)

அப்படிக் குதிரைகள், பதவிக்கும் பவிசுக்கும் தான் கட்சி, கட்சியின் கட்டளைகளையேற்றுக் களம் காண இயலாது என்ற நிலையில் இருந்தால், அவை பரிகள் அல்ல! பரிகளாகக் காணப்படும் நரிகள் என்ற பட்டியலிலே இடம் பெறத்தக்கவைகளேயாகும். எனவே, நான் அறிந்து கொள்ள விரும்புவது, ஜூன் 5ஆம் நாள் தங்கள் பகுதியில் அறிவிக்கப்பட்டு நடைபெற்ற அராஜக ஆட்சி எதிர்ப்பு ஆர்ப்பாட்ட அறப்போரில், பொறுப்பில் உள்ள - அல்லது பொறுப்பில் இருந்த - பதவியில் உள்ள அல்லது பதவியில் இருந்த கழகத்தினர் எவரேனும் ஒருவரோ, சிலரோ கலந்து கொள்ளவில்லையென்றால், அதற்கான காரணத்தை உடனடியாக தலைமைக் கழகத்திற்கு விளக்கி எழுத வேண்டும்.

இயலாதவர்கள் ஒதுங்கிக் கொள்வது நல்லது - இருந்தும் கெடுத்தான் எனும் நிலையை இனியும் கழகம் அனுமதிக்காது என்பதை உறுதியாக அறிவிக்கவே இந்தக் கடிதம்!

அன்புள்ள,

மு.க.

10-6-2002

2760. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்

உடன்பிறப்பே,

அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்
அடிகளார் இளங்கோ சிலம்பில் செதுக்கிய வரி இது!
தவறிழைத்தோம் எனத் தமக்குத் தாமே உணர்ந்து,
தம்முயிர் இழக்கவும் தயார் ஆவதே அறம் என;
நீதியின் கோல் வளைந்து பின்னர் நிமிர்த்திட வேண்டி
நெடுஞ்செழியன் தன் ஆவியையன்றோ கூலியாய்க்
கொடுத்தான்
அறத்தின் செயல் என்பது ஆண்டவன் கட்டளையல்ல;
அநீதியை உணர்த்தி அவரவர் அகம் தரும் தண்டனை!
அதனைத் தான் அடிகளாரின் காவியம்
அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்றது!
மாசறு பொன்னாய் வலம்புரி முத்தாய்
காசறு விரையாய்க் கண்ணகியை
இல்லறத்துப் பொன்விளக்காய்ப் பெற்று
இன்பம் இனி இவ்வுலகில் மிச்சமில்லையென்று
"தூமப் பணிகளொன்றித் தோய்ந்தால் என ஒருவார்
காமர் மனைவியெனக் கைகலந்து – நாமம்
தொலையாத இன்பமெலாம் துன்னினார் மண்மேல்
நிலையாமை கண்டவர் போல் நின்று என
சிலம்பின் வெண்பா செப்புவது போல
சினம் கொண்ட பாம்புகளாய் பின்னிக்கிடந்தார்".
நல்லறத்துக் காதல் முகட்டின் உச்சம் வரை சென்று
நாளும் பொழுதும் நற்குடும்பம் காத்தார்.

மாதவியாம் மற்றொரு கற்பரசி மத்தியிலே புகுந்து
பாதகமாய்ப் போனதாலே கண்ணகி வாழ்வில்
தீர்த்தமாடினால் தீரும் துயரமென்று
தேவந்தியெனும் பார்ப்பனத் தோழி;
தேர்ந்துரைத்ததை ஏற்காமல்; அது
பெருமையல்ல எனப் பதில் அளித்த பெருமாட்டி; தமிழ்க்
குலத்தின் பண்பாட்டுச் சின்னமன்றோ!
தகை சான்ற பெண் இனத்தின் தன்மானக்
குன்றமன்றோ!

கணவனைக் கள்வனென்றும்; அவனுக்குக்
கடுங்கொலைத் தண்டனை யென்றும் –
ஆராயாமல் தீர்ப்பளித்த பாண்டியனின்
அத்தாணி மண்டபம் புகுந்த போதும்;
மணவாளன் கோவலனின் மனைவியென முதலில்
கூறாமல்
மாசாத்துவானின் மருமகள் எனத் தன்னை
அறிமுகம் செய்து கொண்டு
புண்பட்ட நெஞ்சத்தோடும்
பண்பட்ட தமிழ் மரபின் பெருமைதனை
பறைசாற்றிய பத்தினித் தெய்வமன்றோ!
சிலையெடுத்து வணங்க வேண்டும் அந்தச்
சீலமிகு கண்ணகிக் கென்று;
சேரமன்னன் இமயம் வரை சென்று
கனக விஜயன் தலையினிலே கல்வேற்றி வந்தான்!
வஞ்சி முதூரில் கண்ணகி சிலை நாட்டுதற்கு
வந்திருந்தார் இலங்கைக் கயவாகு மன்னர் என
வரலாற்றுப் பாடல் வரி சிலம்பினிலே ஒலிக்கும் – அந்த
வரலாற்றை நினைவூட்டி நம்மிடையே
வரலாறாய் வாழுகின்ற அறிஞர் அண்ணா
வையம் புகழ் உலகத் தமிழ் மாநாட்டில்
வைத்திட்டார் சிலையொன்று கடற்கரையில்;
வாழ்த்திட்டார் உலகத் தமிழர் எல்லாம் சேர்ந்து!

ஆண்டுகள் முப்பத்தி நான்கு ஆனபின்னும்
அந்தச் சிலையினால் அல்லல் ஒன்றும் வரவில்லை.
அல்லலாய் ஓர் ஆட்சி மட்டும் இப்போது வந்து,
ஆரூடம் பொய் என்று அடித்துரைத்த சிலம்புக்கு எதிராக;
வாஸ்து சாத்திரமென்று வஞ்சகப் பொய் கூறி, வாகன
மொன்று இடித்ததாக வதந்தி எழுப்பி, நெடுஞ்செழிய
மன்னன் முன் நிமிர்ந்து நின்று
நீதி கேட்ட அந்தக் குலமகளை - திருமகளை;
கொடியோன் வெலிங்டன் சிலையின் முன்னே
குப்புற வீழ்த்தியுள்ள கொடுமை என்னே?
நீதி கேட்டவளுக்காக நீதி கேட்டு நிற்கின்றோம்!
நேர்மை கெட்ட ஆட்சியிலே;
நிமித்திகர்கட்கே காலம் எனும்போது; கற்பின்
நித்திலமாம் கண்ணகிக்கு
அண்ணா சிலை வைத்த இடத்திலேதான்
அந்தச் சிலை வேண்டும்! அல்லால்;
அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் - என
அடிகள் சொன்னது இந்நாள் பொய்யர்க்கும்
பொருந்தும்!

அன்புள்ள,

மு.க.

14-6-2002

2761. ஆர்ப்பாட்டப் பேரணியில் போர்ப்பாட்டு முழங்க வருக!

உடன்பிறப்பே,

எதிர்க்கட்சியாக இருந்தபோதும், ஆளுங்கட்சியாக இருந்தபோதும், காவல்துறையிடம் தனி மதிப்பும், நட்புணர்வுடன் கூடிய மனித நேயமும் என்றைக்கும் கொண்டிருந்த நாம்; இப்போது நமக்கே மனச் சங்கடம் மிகுந்திடும் நிலையில் வேறு வழியே இல்லாமல் அத்துறையை வேதனையுடன் கண்டிக்க வேண்டிய அளவுக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

அதே போல, நமக்கீடாகத் தேர்தல் ஆணையத்திற்கு மரியாதை அளித்தவர்கள் மிகச் சிலரே என்ற நிலைமைக்கு மாறாக, நாமே அந்த ஆணையத்தை வெளிப்படையாக விமர்சித்துக் கண்டிக்கிற சூழ்நிலையும், நாம் விரும்பி ஏற்றுக் கொண்டதல்ல!

கடந்த ஆண்டு இதே ஜூன் திங்கள் இறுதியில் நள்ளிரவு என் வீட்டு மாடிக் கதவை உடைத்து, படுக்கையறைக்குள் புகுந்து, இன்றைக்கும் தோளைத் தூக்க முடியாமல் வலி தொல்லை கொடுக்கிற அளவுக்கு மூர்க்கத்தனமாக நடந்து கொண்டார்களே! அதை நினைத்துக்கூட எனக்கு சினம் பொங்கிடவில்லை - ஆனால் அன்றுதொட்டு இன்று வரையில், என் அன்பு உடன்பிறப்புகள் பலர் மீது இட்டுக்கட்டிய வழக்குகளைத் தொடர்ந்து, காயம்பட்டுப் புகார் கொடுக்கக் காவல் நிலையம் சென்றால்கூட, சென்றவர்கள் மீதே பயங்கர செக்ஷன்களைத் தொடுத்துச் சிறையில் தள்ள முனைவதும் - கொடுமையினுங் கொடுமையாகத் தொடர்வதும்தான் பொறுத்துக் கொள்ள முடியாததாக இருக்கின்றது.

அவ்வளவு பெரிய தலைவர் - பிரதமர்களை உருவாக்கிய தலைவர் - தமிழகத்தின் செல்வாக்கு மிக்க முதலமைச்சர் - காமராஜர் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோதுதான், 1962ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று, மீண்டும் மூன்றாவது

முறையாக அவரே முதல்வராகி, அடுத்து சில மாதங்களுக்கெல்லாம் திருவண்ணாமலை தொகுதி காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் மறைந்ததையொட்டி, அத்தொகுதிக்கு இடைத்தேர்தல் வந்தது. பத்ராசலம் பிள்ளை என்ற பணம் படைத்த செல்வாக்கான மனிதர் இடைத்தேர்தல் காங்கிரஸ் வேட்பாளராக நின்றார். தி.மு.க. சார்பில் நண்பர் ப.உ. சண்முகம் வேட்பாளராக நிறுத்தப்பட்டார். முதல்வர் காமராஜர் செஞ்சியில் முகாமிட்டுத் தேர்தல் பிரச்சாரத்தில் ஈ.டுபட்டார். தி.மு.க. தேர்தல் குழு, என் தலைமையில் பணி புரிந்தது. அந்த இடைத் தேர்தலில் ஆளுங்கட்சி தோற்றது. தி.மு.க. வென்றது. ஆளுங்கட்சியின் அதிகார துஷ்பிரயோகம் இல்லை என்று சொல்ல முடியாது - அதற்காக அன்றைய காங்கிரஸ் ஆட்சி போலீசாரை எடுபிடிகளாக வைத்துக்கொண்டு, அடியாட்கள், வஸ்தாதுகள், ரௌடிகள், குண்டர்கள் என வன்முறைப் பட்டாளத்தை வாக்குச் சாவடிகளுக்குள் நுழையச் செய்து, பூத் காப்ச்சரிங் என்ற பொல்லாச் செயலில் ஈ.டுபட்டு, ஜனநாயகத்தை, புரையோடி விட்ட புண்ணாக ஆக்கிடவில்லை!

ஆனால் இன்றைக்கு என்ன நடக்கிறது? என்ன நடந்தது?

நடுநிலையான புனித பீடம் என நாம் நம்பிக் கொண்டிருந்த தேர்தல் ஆணையமே, இங்குள்ள ஆட்சியாளர்களின் தில்லுமுல்லு வேலைகளுக்குத் துணை நின்று உதவியிருக்கிறது என்கிறபோது,

"மங்கை சூதகமானால் கங்கையில் முழ்கலாம்;
கங்கையே சூதகமானால் எங்கே முழ்குவது?"

எனப் பசும்பொன் தேவர், ஆயிரமாயிரம் கூட்டங்களில் ஆதங்கத்துடன் கேட்பாரே, அதுதானே நினைவுக்கு வருகிறது.

இதோ! 7.6.2002 தேதியிட்ட ஆங்கில நாளேடு ஸ்டேட்ஸ்மேன் இதழில், மூத்த பத்திரிகையாளர் சாம்ராஜப்பா அவர்கள், சென்னை சைதாப்பேட்டை இடைத்தேர்தல் பற்றி எழுதியுள்ள நீண்ட விமர்சனத்திலிருந்து சில பகுதிகள் வருமாறு:-

"ஒவ்வொருவர் கையிலும் புகைப்பட அடையாள அட்டை! ஒவ்வொரு வாக்குச் சாவடியிலும் ஒரு மின்னணு இயந்திரம் என்ற தேர்தல் கமிஷனின் புதிய நூற்றாண்டு கோஷத்திற்கு மாறாக, வாக்காளர்களுக்கு பல்வேறு அடையாள அட்டைகளை அனுமதிப்பது என்ற தவறு, ஆண்டிப்பட்டி இடைத்தேர்தலிலும்

தொடர்ந்தது. தமிழகத்தைச் சேர்ந்த தேர்தல் ஆணையர் டி.எஸ்.கிருஷ்ண மூர்த்தி, மிக அமைதியாக, ஏனைய ஆணையர்களைக் கலந்தாலோசிக்காமல் தன்னிச்சையாக, இன்னொரு சான்றிதழைப் புதிதாக இணைத்தார். அதுதான் தாசில்தாரால் வழங்கப்படும் சாதிச் சான்றிதழ். இது நிச்சயமாக அவருடைய (கிருஷ்ணமூர்த்தி) அதிகார வரம்பை மீறிய செயலாகும்''.

இவ்வாறு குறிப்பிட்டுள்ள ஸ்டேட்ஸ்மேன் கட்டுரை மேலும், பின்வருமாறு தனது கண்டனத்தை வெளியிடுகிறது.

"பல ஆண்டுகளாக, சிக்கல் மிகுந்த காலங்களிலும், மிகுந்த சிரமங்களுக்கிடையே இந்தியத் தேர்தல் ஆணையம் காப்பாற்றி வைத்திருந்த நம்பகத் தன்மையை, தேர்தல் ஆணையர் திரு. கிருஷ்ணமூர்த்தி மிக விரைவாகத் தகர்த்துவிட்டதன் காரணம் நமக்கு விளங்கவில்லை''.

மே 31-ந்தேதி நடைபெற்ற சைதாப் பேட்டை தொகுதி இடைத்தேர்தல் ஒரு எடுத்துக்காட்டாய்த் திகழ்கிறது. தாசில்தார் கையொப்பமிட்ட, நிரப்பப்படாத சாதிச் சான்றிதழ்கள் மிக அதிக அளவில் புழங்கின. ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சி உறுப்பினர்கள் இந்தச் சான்றிதழ்களை வாகனங்களில் கொணர்ந்து, பெயர்களை எழுதி தங்கள் கட்சிக்காரர்களிடம் வழங்கி பெருவாரியாக கள்ள வாக்குப் போடச் செய்தனர். காவல்துறையினர் கள்ள வாக்காளர்களை உடனடியாக வாக்குச் சாவடிக்குச் செல்ல அனுமதித்தனர்; வாக்குச் சாவடி அதிகாரிகள் மகிழ்ச்சியோடு அந்த போலிச் சாதிச் சான்றிதழை ஏற்றுக் கொண்டு, பொதுமக்களின் முன்னிலையிலேயே கள்ள வாக்குப் போட அனுமதித்தனர். பெரும்பாலான சமயங்களில் தேர்தல் ஆணையப் பார்வையாளர்கள், இந்த அடாத செயலைக் கண்டுகொள்ள வில்லை. அவர்களிடம் சுட்டிக்காட்டப் பட்டபோது அவர்கள் அமைதி காத்தார்கள்.

தேர்தல் ஆணையத்தின் அளவற்ற அதிகாரத்துக்கிடையேயும், தேர்தல் ஆணையப் பார்வையாளர்கள் தேர்தல் களத்தில் சுற்றி வந்த நிலையிலும், கள்ள வாக்குகளும், தேர்தல் ஊழல்களும் அதிகரித்தே இருக்கின்றன.

தேர்தல் தில்லுமுல்லுகள் மிகவும் வெளிப்படையாகவும், புதுமையாகவும் நடைபெறுகின்றன. தேர்தல் அலுவலர்களும்,

காவல் துறையினரும் தேர்தல் ஆணையத்தின் உத்தரவுகளை மதிக்காமல், தங்களுடைய அரசியல் முதலாளிகளின் உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிகிறார்கள். தேர்தல் பார்வையாளர்களும் இவர்களுடைய வழிக்கே வந்து தில்லுமுல்லுகளைத் தடுக்காமல், அவற்றை முறையானதாகக் காட்டும் முயற்சியில் ஈடுபடுகிறார்கள். இது போன்ற செயல்களை தடுக்காததன் மூலம், தேர்தல் ஆணையத்தின் நம்பகத் தன்மை அதலபாதாளத்தில் வீழ்ந்து விட்டது என்பதற்கு சென்னை மாநகரின் இதயப் பகுதியில் இருக்கும் சைதாப் பேட்டை இடைத்தேர்தல் தெளிவான எடுத்துக் காட்டாகும்.

தற்போதெல்லாம் தேர்தல் ஆணையம் நடைமுறையிலுள்ள சட்டங்களை முழுமையாகச் செயல்படுத்துவதை விட்டு விட்டு, மாநில அரசுகளுக்கு மிக நீண்ட கடிதங்கள் எழுதுவதோடு திருப்திப் பட்டுக் கொள்கிறது. ஆண்டிப்பட்டி இடைத்தேர்தலின்போது, ஒரு தேர்தல் ஆணையர் மீது கூறப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு வக்காலத்து வாங்குவதில் தான் தேர்தல் ஆணையம் முயற்சி எடுத்துக் கொண்டதே தவிர, ஆண்டிப் பட்டியில் நடைபெற்ற தில்லு முல்லுகளைச் சரி செய்வதற்கோ, அவற்றில் ஈடுபட்டோர்மீது நடவடிக்கை மேற்கொள்வதற்கோ தேர்தல் ஆணையம் எவ்வித முயற்சியும் எடுக்கவில்லை. அதன் விளைவுதான் சைதாப்பேட்டை இடைத்தேர்தல் அக்கிரமங்கள்.

தேர்தல் ஆணையம் உள்ளிருந்தே சிறுமைப்படுத்தப்பட்டு, அரசியல்வாதிகளின் பாட்டுக்கு நடனமாடும் இன்னொரு அரசு இலாகாவாக இயங்குகிறதா என்ற ஐயப்பாடு நமக்கு எழுகிறது.

தேர்தல் ஆணையத்தின் பாரபட்சமான நிலை குறித்தும், தேர்தலில் எப்படியும் வெற்றி அடைந்தாக வேண்டுமென்று வெறியாட்டம் நடத்தி, அதற்குக் காவல்துறையினரும் கைகட்டிச் சேவகம் புரிய வேண்டுமென்று கட்டளையிட்டு, எதிர்க்கட்சிகளின் தொண்டர்கள் முன்னணியினர் பலரை விரட்டி அடித்தும், விலங்கிட்டுச் சிறையில் அடைத்தும், அநியாய அக்கிரமங்கள் அடுக்கடுக்காய்ச் செய்தாலும், ஏன் என்று கேட்க எவருமில்லை என்ற ஆணவத்தால் ஜனநாயகத்தையே கொட்டிக் கவிழ்க்கும் கோலோச்சிகளுக்கு எதிரான, மக்கள் எழுச்சியை எடுத்துக்காட்ட மாநில முழுதும் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களைத் தொடர்ந்து,

வரும் 18-ந்தேதி வட சென்னையில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு பொருளாளர் ஆர்க்காடு வீராசாமி தலைமையில் நடைபெறுகிறது. இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, தொண்டர் அணி, தொழிலாளர் அணி, விவசாயிகள் அணி, வழக்கறிஞர் அணி, இலக்கிய அணி என இருக்கின்ற கழக அணியினர் அனைவரும் கலந்து கொள்ளும் ஆர்ப்பாட்டப் பேரணி, இங்குற்ற அராஜக ஆட்சியை - அவனிக்கு உணர்த்தட்டும்!

தேர்தல் ஆணையம் திசைமாறிப் போவதை திக்கெட்டும் தெரிவிக்கப் பயன்படட்டும்! வாரீர்! வாரீர்!

ஆர்ப்பாட்டப் பேரணியில், வெல்க ஜனநாயகம் என்பதே நமது போர்ப்பாட்டாய் இருக்கட்டும்!

அன்புள்ள,

மு.க.

15-6-2002

2762. தமிழ் வளர்ப்போம் என்று தமிழ் அழிப்பார்!

உடன்பிறப்பே,

இந்திய மொழிகளில் முதன்முறையாக புதிய தமிழ் மென்பொருள் பொன்விழியை நேற்று முதலமைச்சர் ஜெயலலிதா வெளியிட்டுள்ளார். அது தொடர்பாக அரசின் சார்பில், ஒரு செய்திக் குறிப்பும் ஏடுகளுக்குத் தரப்பட்டுள்ளது. அதில் தமிழ் இணையப் பல்கலைக் கழக இணையத் தளத்தில், இணையப் பாடத்திட்டத்தையும் மற்றும் மின்நூலகத்தையும் தொடங்கி வைத்து பொன்விழி தமிழ் ஓ.சி.ஆர். என்ற புதிய தமிழ் மென்பொருளை முதல் அமைச்சர் ஜெயலலிதா வெளியிட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனைப் படித்தபோது கழக ஆட்சிக் காலத்தில்தான் தமிழ் இணையப் பல்கலைக் கழகமே தொடங்கப்பட்டது நினைவிற்கு வந்தது. அரசு செய்திக் குறிப்பில் சான்றிதழ், மேற்சான்றிதழ் கல்வி மற்றும் இளநிலை (தமிழியல்), முதுநிலை (தமிழியல்), தமிழியல் ஆய்வு என்ற பல்வேறு நிலைகளில் பாடத் திட்டங்கள் வழங்க திட்டமிடப்பட்டு அதற்கான பாடத் திட்டத்தையும் முதல் அமைச்சர் தொடங்கி வைத்ததாக கூறப்பட்டுள்ளது.

1999-2000த்தில் தி.மு. கழக ஆட்சியில் உலகத் தமிழ் இணைய மாநாடு நடத்தி, கணினியின் மூலம் தமிழை வளர்க்க வேண்டும் என்பதற்காக கழக ஆட்சியிலே தொடங்கப்பட்ட சாதனைப் பணிகள் தான் இவையெனினும், அவற்றை அப்படியே விட்டு விடாமல், இந்த அரசு அவற்றைத் தொடர்ந்து செயல்படுத்துகிறது என்பதில் நமக்கு மகிழ்ச்சிதான்.

தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்ட அகரமுதலி - தொல் பழங்கால வரலாறு தொடங்கி தொடர்ச்சியான தமிழக வரலாறு - மற்றும் குறள் பீடம் போன்ற தமிழ் வளர்த்து, தமிழரை வளப்படுத்தி, தமிழகத்தை வலிமைப்படுத்தும் செயல்பாடுகள்

அதே வேகத்தில் இந்த ஆட்சியிலும் தொடருமேயானால், நமக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி ஏற்படும் என்பேன்.

இதற்கிடையே நீண்ட இடைவெளிக்குப் பிறகு, இன்றைய ஆளுங்கட்சியான அ.தி.மு.க. வட்டாரத்திலிருந்து கண்ணுக்கும் கருத்துக்கும் தெம்பூட்டும் தேன் துளிச் செய்தியொன்றை நாளேடுகளில் படிக்கும் வாய்ப்பினைப் பெற்றேன்.

இதோ அந்த இனிய செய்தி :-

"தமிழ் மறையாம் திருக்குறள் பற்றி பெரியார் பிரச்சாரம் செய்து, தமிழ் உணர்வையும் உணர்ச்சியையும் வளர்த்தார். அதன் வெளிப்பாடுதான் கலியமூர்த்தி என்ற பெயர் பூங்குன்றனாகவும், நாராயணசாமி நெடுஞ்செழியனாகவும், இராமய்யா அன்பழகனாகவும், சாரங்கபாணி வீரமணியாகவும் மாற்றம் கண்டதாகும். பெற்றோர் வைத்த பெயர்களை மாற்றி நல்ல தமிழ்ப் பெயர்களை வைத்துக் கொள்ளத்தக்க அளவுக்கு தமிழ் உணர்வை மேலோங்கச் செய்தவர் பெரியார்.

வடமொழிச் சொற்களால்தான் எல்லாவற்றையும் குறிப்பிட்டுச் சொல்லமுடியும் என்று ஒரு காலம் இருந்தது. ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது நமஸ்காரம் என்றுதான் சொல்லுவர்.

அது வணக்கம் என்று மாற்றம் பெற எவ்வளவு காலம் தேவைப்பட்டது. அதற்கு ஓர் இயக்கம் தேவைப்பட்டது. எவ்வளவு தொண்டர்களின் உயிர்த் தியாகம் தேவைப்பட்டது.

இப்படிப்பட்ட தமிழ் உணர்வை கொண்டு வந்து சேர்த்ததே திராவிட இயக்கம்தான்.

என் தம்பி குழந்தைக்கு ஐஸ்வர்யா என்று பெயர் வைத்திருந்தனர். பின்பு நான் அதை அன்பரசி என்று மாற்றினேன். தமிழ்ப்பெயர்களைப் புறக்கணித்து விட்டு பெயர்கள் வைப்பது ஒரு கலாச்சாரச் சீரழிவைக் காட்டுவதாகும்.

பாரதிதாசன், தன்னுடைய கண்ணகி புரட்சிக் காப்பியம் எனும் நூலில் கண்ணகி-கோவலன் திருமண விழாவுக்கு வந்தோர் பெயர்களை பட்டியலிட்டிருக்கிறார். அதில் ஒரு பெயர்கூட பிறமொழிச் சொல் இல்லை. எல்லாமே தமிழ்ச் சொற்கள்.

எனவே, குழந்தைகளுக்குத் தமிழிலேயே பெயர் வையுங்கள்.

உடன்பிறப்பே, இந்தத் தமிழ் முழக்கம் கேட்டது, எங்கே தெரியுமா? தஞ்சைத் தரணி மயிலாடு துறையில் இரண்டொரு நாட்களுக்கு முன்பு நடைபெற்ற திருவள்ளுவர் படிப்பக விழாவில்! முழங்கியவர் யார் தெரியுமா? தமிழகச் சட்டப் பேரவைத் தலைவர் மாண்புமிகு காளிமுத்து அவர்கள்!

என்னால் தம்பி என அழைக்கப்பட்ட அந்தச் சுகமான கடந்த காலத்தில் - அவர் இலக்கிய மேடை களில் கலந்துகொண்ட போது, அரசியல் மேடைகளில் சொல்மாரி பொழிந்தபோது, மாணவப் பருவத்தில் - அடுத்து மொழிப்போர் வீரனாக அரசியல் சட்டத்தின் இந்தி மொழி ஆதிக்கப் பிரிவுக்கு தீயிட்டபோது - இப்படிப் பல நேரங்களில் இந்தத் தமிழ் முழக்கத்தைக் கேட்டிருக்கிறேன்.

ஆனால் அவர் இப்போது முழங்கியிருப்பதைக் காணும்பொழுது, எனக்கு புரட்சிக் கவிஞரின் தமிழியக்கம் நூலின் நினைவே தலைதூக்கி என் உடலைப் புல்லரிக்க வைத்தது.

கூத்தர் பலர் தமக்குள்ள
தமிழ்ப் பேரை நீக்கி விட்டுக்
கொள்கை விட்டுச்
சாத்திக் கொள்கின்றார்கள்
வடமொழிப் பேர்! இந்திப் பேர்
அவற்றிலெல்லாம்
வாய்த்திருக்கும் தாழ்வறியார்
புதிதென்றால் நஞ்சினையும்
மகிழ்ந்துண்பாரோ?

என்று சினங்கொப்பளிக்கக் கேட்டுவிட்டு,

"கெடல் எங்கே தமிழின்நலம்?"
அங்கெல்லாம் தலையிட்டுக்
கிளர்ச்சி செய்க!

என்றும் சங்கநாதம் செய்கிறார் அந்தச் சிங்கக் கவிஞர்!

மாண்புமிகு காளிமுத்து அவர்களுக்கு, மயிலாடு துறை விழாவில் புரட்சிக் கவிஞரின் தமிழியக்கக் கவிகள் நினைவை வருடியிருக்கின்றன போலும்! தமிழுக்கொரு இழுக்கு எனும்போது

தானாடாவிடினும் தன் தசையாடும் எனும் நிலை பெற்ற தமிழனல்லவா! அதன் விளைவுதான் தமிழ் உணர்வூட்டிய திராவிட இயக்கப் பெருமை - பெரியார் எழுப்பிய தமிழ் உணர்ச்சி - பெயர்கள் வைப்பதில்கூட, பாவேந்தருக்கிருந்த தமிழ்ப் பற்று இத்தனையும் எடுத்துக்காட்டி உரையாற்றி யிருக்கிறார்.

அந்த உரை வெளி வந்த நாளேட்டைப் படித்து விட்டு, வேறு பக்கம் திரும்பினேன் - என்னருகே சில பழைய ஏடுகள்!

மிகப் பழைய ஏடுகள் அல்ல! - அண்மையில் நடைபெற்று முடிந்துள்ள மூன்று தொகுதி இடைத் தேர்தல்களில் நடைபெற்ற கட்சித் தலைவர்களின் பிரச்சார சுற்றுப்பயண நிகழ்ச்சிகளைத் தாங்கி வந்திருந்த நாளேடுகள்!

"ஒரு இதழை எடுத்துப் புரட்டினேன் - படித்தேன்!"

"ஜெயதேவி, ஜெயராணி, ஜெயதுர்க்கா, ஜெயச் சந்திரன், ஜெயவாஹினி, ஜெயசுதா, ஜெயசிம்மன், ஜெயலட்சுமி, ஜெயசரசுவதி, ஜெயவருஷணி, ஜெயராம்''

என்று குழந்தைகளுக்குப் பெயர் வைக்கப்பட்ட நீண்டதோர் பட்டியல் அந்த ஏட்டில் வெளியிடப் பட்டிருந்தது.

இந்தப் பட்டியலைப் படித்த பிறகுதான், காளிமுத்து அவர்கள், மயிலாடுதுறையில் இந்தத் தமிழ் முழக்கத்தைச் செய்தாரா? - அல்லது ஒருவேளை அவர் அதனைப் படிக்காமல் பேசியிருக்கக் கூடுமோ? தெரியவில்லை!

ஏனெனில், இந்தப் பெயர்கள் எல்லாம் ஆண்டிப்பட்டி, சைதை, வாணியம்பாடி, அச்சரபாக்கம் தேர்தல் பிரச்சாரத்தின்போது, அவரது தலைவியார் ஜெயலலிதா, தன்னிடம் பெயர் சூட்டுவதற்காக தரப் பட்ட குழந்தைகளுக்கு திரும்பத் திரும்ப சூட்டிய பெயர்கள்தான்!

"தமிழ் அழிப்பார் எனினும் அவர்
தமிழ் வளர்ப்போம் என்றுரைத்துத்
தமை வியப்பார்''
புரட்சிக்கவிஞர்

அன்புள்ள,

மு.க.

20-6-2002

2763. கண் இமைக்காத கழகமெனும் காளை!

உடன்பிறப்பே,

அடக்கப் பார்த்தார்
அடங்கவில்லை;
ஆர்த்தெழுந்தான்!
ஒடுக்கப் பார்த்தார்
ஒடுங்கவில்லை;
உயர்த்தி நின்றான் நெடுந்தோளை!
மடக்கப் பார்த்தார்
மடங்கவில்லை;
மலையின் சிகரமானான்!
சிதைக்கப் பார்த்தார்
சிதையவில்லை;
சிகரத்துக் கலசமானான்!
வளைக்கப் பார்த்தார்
வளையவில்லை;
வாளின் கூர்மையானான்!
எரிக்கப் பார்த்தார்
எரியவில்லை;
எதிர்ப்புக்குத் தடையானான்!
எதுவும் சரிப்படவில்லை
என்றதும்
திட்டமிட்டு அழிக்கலாமென்று
சட்டம் போட்டுச் சாய்க்கப் பார்த்தார்
சட்டம் எல்லோர்க்கும் பொது என்றான் – சாயவில்லை!
சிறைவாசம் தடியடி துப்பாக்கிப் பிரயோகம் என்றார்
முறை தவறும் ஆட்சியிலே நாங்கள்

பார்த்துப் பழகிய விளையாட்டு என்றான்! மரண
விளையாட்டுக்கு தயாரா என்றார்
மனித உரிமைக்கழகம் எதற்குத்தான்
இருக்கின்றதென்றான்!
மனித உயிர்க்கு மிக மலிவான விலை இங்கு;
மகாமகத் திருவிழா கதை தெரியாதா என்றார்.
மக்கள் இன்று விழித்துக் கொள்ளத் தொடங்கி விட்டார்
மமதை தவிர்த்தல் அறிவுடைமை என்றான்.
உயிருக்குத் துணிந்துவிட்டாய் என்றார்
உயிர் வெல்லமல்ல எமக்கு
தன்மானத் தமிழர்களாம் – யாம்
தாளமுத்து நடராசன் பரம்பரை என்றான்.
யார் இந்த வீரக் குரலுக்குச் சொந்தக்காரன்?
யார் அவன்?
அவன்தான் அய்யா பெரியாரின்
படைமுகத்துப் பெருவீரன் –
அமைதிவழி அண்ணாவின் அன்புத்தம்பி!
கடலே பொங்கி வரினும்
கண் இமைக்காத கழகமெனும் காளை!

அன்புள்ள,

மு.க.


21-6-2002

2764. மொழிப்போரில் ஒரு களம் (1)

மொழிப்போர், தமிழகத்தில் புரட்சியாகவே வெடித்தபோது, 1965ஆம் ஆண்டு பாளைச் சிறையில் பாதுகாப்புச் சட்டக் கைதியாக தனிக்கொட்டடியில் அடைக்கப்பட்ட காலத்தில் மொழிப்போரில் ஒரு களம் என்ற தலைப்பில், சிறைக்குள்ளிருந்தவாறே கலைஞர் எழுதியது இது. சிறை அதிகாரியின் அனுமதிக் கையொப்பத்துடன் கலைஞரிடம் ஒப்படைக்கப்பட்டது. இதுநாள் வரையில் பழைய புத்தகங்களுக்கிடையில் சிக்கியிருந்து இப்போது கிடைத்தது. கலைஞர் கைப்பட எழுதியதை அப்படியே வெளியிடுகிறோம். சில பகுதிகள் மட்டும்! மற்ற பகுதிகள் அச்சுக் கோக்கப்பட்டுத் தொடர்ந்து வெளியிடப்படும். ஆசிரியர் முரசொலி.

சிறை அதிகாரி

அனுமதிக் கையொப்பம் (தொடரும்)



அன்புள்ள நண்பர்,

"இங்கே எல்லாம் விருப்பமாக

இருக்கிறது. அதோ தெரிகிறதே. நீண்ட நேரம்

உட்கார்ந்தே இருக்கச் சொன்ன. நீண்ட நேரம்

மௌனமாயிருக்க இருந்தன். பேச்சின்றி....

விவாதமின்றி... அனைவரின்றி... தினுசான

அமைதி நிலவ வழக்கமான! இரவு உடனுக்கு

நிலவு. உன்னதமாகவும் நிலவு. விரு நண்பரை

நினைத்துக் கொள்கிறேன்"

இப் போல அனைத் தமிழ்

அன்னை ஆணைக்கிணங்க தினைத்துப் பணிபுரி

ஏழு கிலர்கள், அரசு அலுவலர்கள் பலரை எழுதிய

ஒரு பகுதிதான் மேலே காணப்படுவது.

அதேவரை நான் இன்னமும் அவர்களோ

பட்ட கிளை அனுபவம் எனக்கும் இப்போது

பாசமான கோட்டையில் ஏற்படுகிறது.

அதனால் தான் அவரது அந்த வாசகம் என்னை

ஒருமுகத்தானையில் வெல்ல அதிகாரத்தை

விரைவாக அனைத்து விட்டதாக உணர்கிறேன்.

நீண்ட ஒரு மதிய அவரின்

அன்புக்கட்டளை! அதற்கென்ன நான்கு பக்க

கடிதம்! இரண்டாக வேண்டுமானால்.

வேண்டும் வரை நீட்டலாம்! ஒரு முத்து

ஒன்றின் ஒளிமய மென்மை! நான்கு

நிலவுகளை ஒருசேர ஒன்றாக்கும்! நான் தினம்

எனக்கானவளே பிரத்யேகமான தாய்மைப்
பதித்தப்பட்ட என் கொட்டகுயில் நான்
மட்டும் தனியாக! இந்த மடல் உனக்கு
எழுதத் தொடங்கும்போது எட்டாவதாம்!
இன்னும் எத்தனை நாள் என்று தெரியாது.
இந்தியப் பாது காப்புச் சட்டப்படி நான்
புட்புனைக் கப் பட்டிருக்கிறேன். தினசரியும்
புதிது தின் என்றும் இரவுணவில் நிச்சயம்
புதிய தினுசாக. நான்கு கொட்டடிக்கு நான்
ஒரே கிணறு! நான்கான் மண்ணன்! நீ ட;
இரு நிறம்! அதுவும் மாசுக் கொண்டிப்
புகைக் கூட்டமாம்! நான்கு சுற்றுச் சுவர்
நடுவே நீ ட
நடுவே நான் என்ன வேண்டுமானாலும்
பேசலாம். யாரைத்தான் மணப்பது எனத்

அவர்களை மேல் எப்படியும் பார்க்க
லாம். அவர் இரக்கமாக பொருளாவது கி
டைப்பார்க்கு மேல் பார்ப்பு, முகம், தோள்
மீசைக்கு மேற்பட்டவை இன் மேற்கையால்
பார்த்து வரும் விதவிதமான முத்திரைகள் கூட்டம்
பெண்களில் தோட்டவிலாமல் தோட்டை
முத்தி- மாப்பிள்ளை- தினசரிக்கும் ஒருசுத்தம்-
இரவுகளையன்னியில் சொறுத்தமான
வெற்று நினைவுகளே படம் விரிந்தொட
நான்கிரவுள் கொண்ட வாசல்கள் தினையில்
நான் கின்றோம் உயர்ந்த தோட்டங்களுக்கும்
கன்னைக்கு கின்- இரும்புக்
கூர்மையில் கிளைத்திருக்கும் பாலுயர் கோட்டை
தினைவாசம் இருப்புகிறதுள்ளவா!

தினைவாசத்தைப் பார்த்து தோழி
சொல்லும் பொழுது நான்கள் எங்களை

எழுதி கீயும் நானும் பயந்திதை கதறினேம்.
யாம்காலில் பந்தாண்டு கோலத்தில் மேனாதம்
கிணைவழ்கை மேல் ஒளாண்ட விதவிதி தீர்ப்பால்
தியவர் நேரே பெண்ணுயர்களின் உள்ள எஞ்
கினை நிகழ்ந்தே போது நானென்னம் நெஞ்சு
நோம்!
கினையில் நினைபடுவது என்னுதான் தியடமா?
நினைத் தோல்வி கோட்பாடுகளே உள்ளே.
நானறிவேன். இன்றந்த நிலைகோள்ள தியாகம்
எனிந்தேத் தூண்டலுக்கு தியாகப்படுத்தினை
கூடிய உள்ளத் துணிவு எனாள்டவர்கள்
தான் கொண்ட இலட்சியத்தையும் வளியோடு
நின்று கொள்ளும் கூடியவர்கள் என்று தியும்
பனைத்தந்து உலகை நான் மனமார வெல்லுவேன்

தொண்டாற்றுபவன். வாழ்வில் சோர்ந்திட
நாடி வேண்டும் என்று வாதிடும் வினை
யிலே உள்ள வரும் நானல்ல! தினமும் சிரிப்
பின்று பிறந்த தென்று கூறுவது போல
வற்று போராட்டத்தை விடுபவனுமல்ல இதே
ரும் கூடாது என்பதை நினைவூட்டும் நினை
வுள்ளவன்.

திருக்குறளும் தினமும் வாழ்வையும் தேடி

தொண்டன்.

அன்புள்ள,

மு.க.

23-6-2002

2765. மொழிப்போரில் ஒரு களம் (2)

அரசியல் சட்ட எரிப்பு - அண்ணா கைதானார்!

கொள்கை வெற்றிக்காக, அடக்குமுறைகளை அமைதியுடன் தாங்குகின்ற அறப்போர்ப் பண்பினை, அண்ணல் காந்தியார் நாட்டுக்குப் போதித்தார். அந்தப் பண்பிலிருந்து அவர் எள்ளளவும் பின் வாங்கினாரில்லை. அவர் முறை பற்றியேதான் நமது கழகமும் அறப்போர்த் திட்டம் வகுத்தது. வகுத்த திட்டத்தை அமைதியோடு நடத்தியது.

ஏன் அந்த அறப்போர் தேவைப்பட்டது? நீயும், நானும் ,நாடும் அறியாததல்ல! ஆயினும், மீண்டும் சிலவற்றை நினைவூட்டிக்கொள்வதில் தவறொன்று மில்லை. 1937 ஆம் ஆண்டு முதலே தமிழகம், தன் மீது இந்தி மொழி, ஆதிக்கம் செலுத்த முயன்றதை வன்மையாகக் கண்டித்துக் குரல் எழுப்பியிருக்கிறது. அந்தக் காலந்தொட்டே இந்தி மொழி, மெல்ல மெல்லத் தமிழகத்தில் தலைநீட்டுவதும் பின்னர் ,மறைந்துகொள்வதுமான அரசியல் விளையாட்டை - ஆனால் ஆபத்தான விளையாட்டை நடத்திக்கொண்டு வந்திருக்கிறது. பெரியார் ஈ.வெ.ரா. அவர்கள், ஆரம்ப காலத்து இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்குத் தலைமை வகித்தார். பலர் சிறை புகுந்தனர். இருவர் சிறையில் உயிர் நீத்தனர். அந்தக் காளைகள் - (தாளமுத்து-நடராசன்) பெயர் கூறித் தமிழ் மொழிப்பற்றினைத் தமிழார்தம் உள்ளத்தில் ஏற்றுவதற்கு வாய்ப்பு கிட்டியது. நாவலர் சோமசுந்தர பாரதியார், இந்தி எதிர்ப்பு இயக்கத்திற்குச் சிங்கக் குரல் கொடுக்கும் தளபதியாக உலவினார். அவர் வீர முழக்கம் தமிழரிடையே பெரும் எழுச்சியைத் தோற்றுவித்தது. அறிஞர் அண்ணாவின் செந்தமிழ்க் குரல் - சொல்லாற்றல் - தமிழருக்குப் பயன்படத் தொடங்கிய காலமும் அதுதான்!

வரும், வரும் என்று எச்சரிக்கப்பட்ட விபத்து, இறுதியில் வந்தே விட்டது. எச்சரித்த நேரத்தில் எல்லாம் உறங்கிக்கொண்டிருந்தவர்கள் - நம்மை ஏளனம் செய்தவர்கள் - நமது கிளர்ச்சியை அலட்சியம் செய்தவர்கள் - ஆபத்து வந்த பிறகும் பரபரப்பு அடையவில்லை. அரசியல்வாதிகள் - கற்றறி வாளர்கள் - ஏடு நடத்துவோர் - அனைவருமே - நமக்கென்ன? என்று இருந்து விட்டனர். தும்பை விட்டு விட்டனர் என்று கூறினால் மிகையாகாது.

1950ஆம் ஆண்டு இந்தியாவின் ஆட்சி மொழி இந்திதான் என்று, இந்தி வெறியர்களின் பக்கம் நின்று இந்த ஜனநாயக அரசு முடிவு செய்தது. இந்தி பேசாத மாநில மக்கள் - அதிலும் குறிப்பாகத் தென்னக மக்கள், இரண்டாந்தரக் குடிமக்களாக வேண்டும் என்ற பயங்கர நிலைக்கான கொடியேற்று விழாவை வடபுலத்து இந்தி வெறியர்களும், அவர்களுக்காகவே நடைபெறும் அரசினரும் நடத்தினர். நேரு இந்தியத் தலைமையமைச்சராக இருந்த காரணத்தால் - எல்லார்க்கும் நல்ல பிள்ளை என்ற பெயர் வாங்க வேண்டுமென்ற அவரது ஆசைக்குத் தமிழ் மக்களின் பயங்கரமான இருள் சூழ்ந்த எதிர்காலத்தை அவரது வாக்குறுதி என்ற திரைபோட்டு மறைத்திட முயற்சித்தார்.

இந்தியாவின் தேசிய மொழிகள் அனைத்தையும் ஆட்சி மொழிகளாக ஆக்குக. அந்த நிலையைத் தேசிய மொழிகள் எய்திடும் வரையில், தொடர்பு மொழியாக ஆங்கிலத்தை நீடித்திட வழிசெய்க. அதனை விடுத்து இந்தியைத் திணிப்பதை நாங்கள் ஏற்க மாட்டோம். இதுவே இந்தி எதிர்ப்பாளர்களின் அடிப்படை முழக்கமாக அமைந்தது. ஏனைய அபிப்பிராயங்கள் அவ்வப்போது நிறைவேற்றப்பட்ட சட்டங்களின் மீது தரப்பட்ட திருத்தங்கள் நிலையிலே தான் வழங்கப்பட்டன. சுடாதே! சுடுவதாயிருந்தால் காலுக்குக் குறி பார்த்தாவது சுடு! என்பது போன்ற அளவிலேதான் அந்த அபிப்பிராயங்கள் ஆராயப்பட வேண்டியவை. ஏறத்தாழ 14 மாநில ஆட்சி மொழிகள்- அல்லது தேசிய மொழிகள் - இருக்கும்போது, ஒரே ஒரு மொழியினை மட்டும் ஆட்சி மொழியாகக் கிரீடம் சூட்டுவது மற்ற மொழிக்காரர்களின் குடியுரிமை அந்தஸ்தைப் பின்னுக்குத் தள்ளி, அவர்களது அரசியல் துறை - வாணிபத் துறை - கலைத் துறை -

இலக்கியத் துறை - தொழில் துறை முன்னேற்றங்களையெல்லாம் பெருமளவுக்குத் தடுத்து நிறுத்தி சீரழித்து விடுகிற செயலாகும். ஆகவே, இந்தியாவில் உள்ள ஒரு மொழிக்காரன், இன்னொரு மொழிக்காரனைப் பையப் பைய அடிமைப்படுத்துகிறான் என்ற கொடுமையைத் தவிர்க்க - இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களுக்கு மட்டுமின்றி, அனைத்துலகத் தொடர்புக்கும் ஏற்றதாக வழங்கி வருகிற - மொழி ஆதிக்கத்தின் மூலம் அடிமைப்படுத்தும் தன்மைக்கு அப்பாற்பட்டு நின்று நிலவுகிற - வளம் பெற்றுத் திகழ்கிற ஆங்கில மொழியைத் தொடர்பு மொழியாகக் கொள்வதுதான் சிறந்தது என்ற முடிவும் - அந்த முடிவையும்கூட, எல்லா தேசிய மொழிகளும் ஆட்சி மொழிகளாகக் கூடிய தகுதியைப் பெறும் வரையில் கடைப்பிடிக்கலா மென்றும் - நடுநிலை நோக்கோடு எடுத்து வைக்கப்பட்ட கருத்தினையும் ஏற்க மறுத்து, நேருவின் வாக்குறுதியை மட்டும் அருள்சீட்டு போலக் காட்டத் தலைப்பட்டனர். அந்த அருள் சீட்டும் சட்டத்தின் மூலம் அமலாக்கப்படுமா? என்ற கேள்விக்கு நேருவே சரியான பதில் அளிக்க முடியவில்லை. அவரைத் திமிர விடாமல் இந்தி வெறியர்களின் மிரட்டல் தடுத்து விட்டது. உலகின் பல்வேறு நாடுகளின் எழுச்சிகளையும் - வீழ்ச்சிகளையும் உணர்ச்சிமிக்க வடிவங்கொடுத்து வரலாற்று வரிகளாக ஆக்கித் தந்த மிகப் பெரியவரான பண்டித நேரு அவர்களையே இந்திக்காரர்களின் போக்கு திணற அடித்து விட்டது. இந்தி பேசாத மாநில மக்களின் கூக்குரல் வெறுங்காட்டுக் கூச்சலாகவே போய்விட்டது. இன்னும் சொல்லப் போனால், தமிழகம் போன்ற இந்தி பேசாத மாநிலங்கள் நேரு அவர்கள் இருக்கும்போது இந்திக்குத் தெரிவிக்க வேண்டிய எதிர்ப்பை தெரிவிக்க வேண்டிய அளவுக்குத் தெரிவிக்க வில்லை. மேதைகள் எல்லாம் வாய் மூடிக்கிடந்தனர். ஏடுகள், அந்தப் பிரச்சினையின் பக்கமே எழுதுகோலைக்கொண்டு போகவில்லை. ஏன்? நாமுங்கூட நேருவின் ஒரு கடிதத்தைப் படித்து விட்டுத் திருப்தியடைந்து குடியரசுத் தலைவருக்குக் காட்ட இருந்த கறுப்புக் கொடி நிகழ்ச்சியை ரத்து செய்துவிட்டோம். வாய்ப்பை நழுவ விட்டுவிட்டோம். மக்களின் உணர்ச்சிகளைப் புரிந்துகொள்ளக்கூடிய மனப் பக்குவம் பெற்ற பண்டித நேருவுக்கு, இந்திக்கான எதிர்ப்பு தமிழகத்தில் பரவியிருக்கிறது என்பதை அறப்போர் வாயிலாக உணர்த்துவதோடு - அந்த உணர்வுக்குத்

தமிழக அரசியல் வல்லுநர்களும், இதழாசிரியர்களும் பக்க பலமாக இருக்கிறார்கள் என்பதையும் காட்டக்கூடிய சந்தர்ப்பமும் உருவாக்கப்பட்டிருந்தால், இந்திக்காரர்களிடம் எடுத்துச் சொல்வதற்கு நேருவுக்கும் ஒரு நல் வாய்ப்பை அளித்திருப்போம். நம் கழகத்தில் முக்கியமானவராகத் திகழ்ந்த தோழர் சம்பத், எம்.பி., அவர்களுக்கு, நேரு கொடுத்த கடிதம் அந்த நிலையை மாற்றி அமைத்து விட்டது. தமிழக எழுச்சி முளையிலேயே கருகிவிட்டது என்ற ஏமாற்றந்தான் என்னைப் போன்றவர்களுக்கு!

பின்னர், பாராளுமன்றத்தில் ஆட்சி மொழிச் சட்டம் வந்தபோது மீண்டும் தமிழகத்தில் எதிர்ப்புப் புயல் உருவாயிற்று. ராஜாஜியும், நானும், தமிழ் தேசியக் கட்சித் தலைவராகிவிட்டிருந்த தோழர் சம்பத்தும் லட்சுமிபுரம் யுவர் சங்கத்துப் பொதுக்கூட்டத்தில் இந்தி, ஆட்சி மொழி ஆவதை எதிர்த்துப் பேசினோம். பின்னர் சம்பத், இந்தியை எதிர்த்து அவரால் இயன்ற ஒரு சிறு அளவுப் போராட்டம் நடத்தினார். அரசியல் சட்டத்தைக் கொளுத்த முயன்றார். சிறை பிடிக்கப்பட்டு மறுநாள் விடுதலையானார். பிறகு சில மாதங்களில் அவர் காங்கிரசுக்காரராகிவிட்டார். அந்தப் பிரச்சினை முடிவுற்றது, அவரைப் பொறுத்தவரையில்!

ஆனால் மொழிப் பிரச்சினை - தனிப்பட்ட சிலரைப் பொறுத்த பிரச்சினை அல்லவே! தமிழர்களின் எதிர்கால சந்ததியைப் பாதிக்கும் மிக முக்கியமான பிரச்சினை யல்லவா? நாவலர் நெடுஞ்செழியன், நான், என்.வி.நடராசன் ஆகிய மூவரும் அதுபற்றி அறிஞர் அண்ணா அவர்களிடம் கலந்துபேசி, சென்னைக் கடற்கரையில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தோம். அந்தக் கூட்டத்தில் நானும், நாவலரும், என்.வி.என். அவர்களும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் உடனடி அவசியங்குறித்துப் பேசினோம். இறுதியில் பேசிய அண்ணா அவர்கள், மிக விரக்தியுடன் பேசினார்கள். எத்தனை பிரச்சினை களுக்குத்தான் தி.மு.கழகம் போராட்டம் நடத்துவது - என்ற விரக்தி மிகுந்த கேள்விக்குறி அவரது பேச்சில் பளிச்சிட்டது. இந்தித் திணிப்புப் பிரச்சினையைத் தமிழர் அனைவரும் ஒரு அரசியல் கட்சியின் பிரச்சினையாகக் கருதாமல், தங்கள் பிரச்சினையாகக் கருதி, உணர்ச்சிகொண்டு எழவில்லையே என்ற ஆதங்கம்தான் அண்ணா அவர்களின் பேச்சின் அடிப்படையாக அமைந்தது.

''மாநிலங்கள் அவை''க் கூட்டத்திற்குச் சென்று திரும்பிய பிறகு, அண்ணா அவர்களிடம் இருந்த விரக்தி மனப்பான்மை விலகியது கண்டு மகிழ்ச்சி யடைந்தோம். கழகத்தின் பொதுக்குழு சென்னையில் கூடியது. என்னைத் தலைவராகக் கொண்ட இந்தி எதிர்ப்புப் போராட்டக் குழு அமைக்கப்பட்டது. இந்தியாவின் தேசிய மொழிகள் அனைத்தும் ஆட்சி மொழிகளாக ஆக்கப்பட வேண்டும். அவை ஆட்சி மொழிகளாகும் தகுதியைப் பெறும் வரையில், ஆங்கிலம் தொடர்பு மொழியாக நீடிக்க வேண்டும் என்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது. நேருவின் வாக்குறுதிக்கு மாறாக, ஆங்கிலம் அறவே ஒதுக்கப்படுகிற சூழ்நிலை வளர்ந்து வருவதையும் பொதுக்குழு வன்மையாகக் கண்டித்தது. அமைக்கப்பட்ட இந்தி எதிர்ப்புப் போராட்டக் குழு, சேலம், தஞ்சை, நெல்லை, சென்னை ஆகிய இடங்களில் மாநாடுகளைக் கூட்டியது. ஆங்காங்கு மாவட்டங்களின் பாசறைக் கூட்டங்கள் நடத்தப்பட்டுப் போராட்டத்தில் கலந்துகொள்வோர் பட்டியல் தயாரிக்கப்பட்டது. சென்னை மாநாட்டில் போராட்டக்குழு சமர்ப்பித்த அறிக்கையையொட்டி, அறிஞர் அண்ணா அவர்கள் போராட்டத் திட்டத்தை வெளியிட்டார்கள். திங்கள்தோறும் மாவட்ட ரீதியில் அமைதியான முறையில் குறிப்பிட்ட தோழர்கள், குறிப்பிட்ட இடத்தில், குறிப்பிட்ட நாளில், குறிப்பிட்ட காலத்தில் அரசியல் சட்டத்தின் 17வது மொழிப் பிரிவைக் கொளுத்துவதின் மூலமோ, அல்லது மத்திய அரசு அலுவலகங்களின் முன் மறியல் செய்வதின் மூலமோ அறப்போர்க் கிளர்ச்சியில் ஈடுபட வேண்டும். சிறிதளவு வன்முறைக்கும் இடமில்லாத வகையில் போராட்டம் நடத்த வேண்டும். சென்னை மாநாட்டில் கழகம் எடுத்த முடிவின்படி, அறிஞர் அண்ணா அவர்கள், 1963 நவம்பர் திங்கள் 17 ஆம் நாள் அரசியல் சட்டப் பிரிவைக் கொளுத்துவதற்கு முன்பே 16 ஆம் நாளே கைது செய்யப்பட்டார்கள். திங்கள்தோறும் போராட்டம். அமைதிக்குக் குந்தகம் எங்குமே விளையவில்லை. தூத்துக்குடியில் காங்கிரசார், அமைதியைக் குலைக்கச் செய்த முயற்சிகள் பலனற்றுப் போயின. அரசியல் சட்டத்தின் 17வது பிரிவை எரித்து நூற்றுக்கணக்கில் சிறைபட்டார்கள். மறியலில் ஆயிரக்கணக்கானோர் சிறைபட்டார்கள்.

இதில் மதுரை முத்து அணியினரும், தோழர் தென்னரசும் மிகக் கடுமையான தண்டனைக்கு உட்படுத்தப்பட்டனர். மதுரை

அறப்போர் நிகழ்ச்சி காண வந்திருந்த என் மீதும், என்.வி.நடராசன் மீதும் சதி வழக்கு தொடரப்பட்டு ஆறு மாத காலம் தண்டனை வழங்கப்பட்டது.

நாங்கள் கலந்து கொள்ளவேண்டிய மாவட்டங்களின் போராட்டங்கள் ஒத்தி வைக்கப்பட்டன. ஆனால் இந்தப் பதினான்கு மாத காலத்தில் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் விளைவாக நான்கு தடவைகள் சிறையில் தள்ளப்பட்டுவிட்டேன். ஒவ்வொரு தடவையும் பத்து நாள் - பதினைந்து நாள் சிறைவாசம்! இந்தத் தடவைதான் எத்தனை நாளோ? தெரியாது! நல்ல ஓய்வுகொடுத்து, நிறைய சிந்திக்கச் செய்திடுவார்கள் என்று நம்புகிறேன். இப்போது அடைபட்டிருப்பது பாதுகாப்புச் சட்டத்தின் படியன்றோ?

(தொடரும்)

24-6-2002

2766. மொழிப்போரில் ஒரு களம் (3)

குழந்தையின் தலைமீது நச்சுக்கனி!

பதுங்கிப் பதுங்கிப் பச்சைக் கொடியில் ஊர்ந்து வந்த பாம்பு, பாய்ந்து தாவிக் கண்களைக் குத்துவது போல ''ஜனவரி 26-1965 முதல் இந்தி ஆட்சி மொழியாக அரியாசனம் ஏறும் என்று அறிவிக்கப்பட்டது''.

இங்குதான் நான் செய்த தவறு ஆரம்ப மாகிறது(?) - அது உண்மையிலேயே தவறா? இந்தியை எதிர்ப்பது நம் லட்சியங்களில் ஒன்றாகி விட்டது. இந்தியை எதிர்ப்பது என்பது அந்த மொழியை அல்ல! அதன் ஆதிக்க வெறியை என்பதை நான் உனக்கு விளக்கவேண்டிய தேவையில்லை. அந்த ஆதிக்கத்தைத் தடுத்து நிறுத்த, அடக்குமுறைப் பேயாட்டங்களுக்கு நம்மையே நாம் அர்ப்பணித்துக் கொள்ளும் அறநெறிப் போராட்டத்தையும் இடைவிடாது பல திங்களாக நடத்தி வருகிறோம். அந்தச் சமயத்தில் ஜனவரி 26ஆம் நாள் இந்தி, பட்டம்கட்டிக் கொள்ளப் போகிறேன் என்று ஆர்ப்பாட்டமாக அறிவிக்கிறது. அதனைக் காணச் சகியாத தமிழ் மக்கள் கூட்டத்தில் ஒரு துளியாகிய நான், அய்யோ! ஜனவரி 26, குடியரசு நாளா? - அல்லது தமிழரின் குடி கெடுக்கும் நாளா? என்று இயல்பாக அனைவருக்கும் எழும் உணர்வோடு கேட்டேன். ஆம்! பொதுக் கூட்டங்களில் பேசினேன். குடியரசு நாளைக் கண்டிக்கிறானே என்று அங்கலாய்த்தவர்களுக்கு விளக்கமும் அளித்தேன்.

குழந்தையின் தலை மீது ஒரு பழத்தை வைத்து, அதைக் குறி பார்த்து அடிக்கவேண்டும் என்று அந்தக் குழந்தையின் தந்தையிடமே வில்லும் அம்பும் தரப்பட்டு, அந்தத் தந்தை குழந்தையின் உயிருக்கு ஆபத்தின்றி, தலையில் உள்ள பழத்தை மட்டும் கணையெய்து வீழ்த்தினான் என்ற ஆங்கிலக் கதையை நினைவூட்டி, அவ்வாறே தி.மு. கழகம் குடியரசு நாளைக் குழந்தை போலப் பாராட்டி, அதன் தலையிலுள்ள நச்சுக்கனியாம் இந்தியை

நோக்கிக் குறி பார்க்கிறது என்று எடுத்துச் சொன்னேன். அதே கூட்டத்தில் பேசிய செழியன் எம்.பி., அவர்கள் வங்கத்தில் சுதந்திர நாளைத் துக்க நாளாகக் கொண்டாடியது பற்றி விளக்கங்கள் அளித்து, குடியரசு நாளைத் துக்க நாளாகக் கொள்ள வேண்டிய அவசியங்குறித்துப் பேசினார்.

என்னுடைய பேச்சும், எழுத்தும் செங்கற்பட்டு மாவட்ட தி.மு. கழகக் கூட்டத்தில் விமர்சிக்கப்பட்டது. சம்பத்தின் அணியில் இருந்து, அவருடன் சென்றும், செல்லாமலும் திரும்பிய நண்பர்கள் சிலர், ஜனவரி 26 பற்றிய என் கருத்துரைகளுக்கு மறுப்பு அளித்து, என் மீது கழகத்தில் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூடப் பேசினார்கள். ஆனால் அவர்தம் பேச்சு, அந்தக் குழுவில் எடுபடவில்லை. ஆகவே அந்த அளவில் - அன்றைக்கு அடங்கியது போல் தோற்றமளித்து விட்டனர். ஆனால், உள்ளூற அந்தப் பிரச்சாரத்தை வழக்கம் போல் செய்து வந்தனர். ஒரு வேளை, அவர்கள் கருதியது நியாயமாகவும் இருக்கலாம். அதற்குத் தேவையான வலிவை அவர்கள் பெறத் தவறியும் இருக்கலாம்.

ஜனவரி 8ஆம் நாள் (1965) கூடிய கழகத்தின் செயற்குழுவில் ''ஜனவரி 26ஆம் நாள்'' துக்க நாள் என்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. இது இன்னார் கொண்டு வந்த தீர்மானம் அல்லது கருத்து என்ற நிலையில் யாரும் சொந்தம் கொண்டாட முடியாத அளவில், அனைவரும் செயற்குழுவில் ஜனவரி 26ஆம் நாளைத் துக்கநாளாகக் கொள்வது என்று கருத்தறிவித்தனர். குடியரசு விழாக் கொண்டாடுபவர்க்கு எந்தவிதக் குந்தகமும் விளையாதவாறு அமைதி காத்து ஒழுங்கை நிலைநாட்ட வேண்டும் என்ற வேண்டுகோளும் விடுக்கப்பட்டது. இருபதுக்கு மேற்பட்ட கழக முன்னணியினரின் கையொப்பங்களோடு அந்த மிக முக்கியமான பிரகடனம் வெளியிடப்பட்டது. ஜனவரி 26 - குடியரசு நாளைக் கழகம் மதிக்கத் தவறவில்லை என்பதும் நாள் தவறாமல் சுட்டிக்காட்டப்பட்டது.

நான் செயற்குழுவில் குற்றவாளியாக்கப்பட்டு விடுவேன் என்று எதிர்பார்த்தவர்களுக்கு ஏமாற்றந்தான்! செயற்குழுவின் முடிவுகளைச் செயல்படுத்த அமைதியான முறைகளைக் கழகத்தினர் மேற்கொண்டபோதுதான்,

"குடியரசு நாள்; துக்கநாளா?'' என்று பிரச்சினையைக் காங்கிரசார் திசை திருப்பினர். "அன்று கறுப்புக் கொடி கட்டுவதா?'' கட்டுகிறவன் கை வெட்டப்பட்டு விடும் என்ற வன்முறைப் பேச்சுக்கள், காங்கிரஸ் அமைச்சர்கள் - தலைவர்கள் முன்னிலையில் பேசப்பட்டன. என் செய்வது? அவர்கள் பேச்சைத்தான் அரசின் ஒற்றர்கள் குறிப்பெடுப்பதில்லையே! அதாவது அதிகாரபூர்வமாகக் குறிப்பு எடுப்பதில்லை. ரகசியமாகக் குறித்து ரகசியமாகப் படித்துக்கொள்வார்கள். சாட்சிக்கு வராது.

1947 ஆகஸ்ட் 15ஆம் நாளைத் துக்க நாள் என அறிவித்து, ஒப்பாரி வைக்கச் சொன்ன திரு. ஈ.வெ.ரா. பெரியார் அவர்கள்கூட, தி.மு. கழகத்தின் ஜனவரி 8ஆம் தேதித் தீர்மானத்தைக் காரசாரமாகக் கண்டித்தார். அது போகட்டும்! அமைச்சர் பெருமான் பக்தவத்சலம் அவர்களின் சட்டமன்றப் பேச்சைக் கேட்போம். பதினெட்டு ஆண்டு காலம் மந்திரி சபையில் வீற்றிருக்கும் பழுத்த பழம். இப்போதோ, மிகப் பொறுப்புவாய்ந்த முதலமைச்சர் பீடத்தில் உட்கார்ந்திருப்பவர். ஜனவரி 23ஆம் நாளன்று அவரது வீராவேசமான பேச்சினிடையே நான் அடிக்கடி குறுக்கிட வேண்டியதாயிற்று. அதன் காரணமாக, அவரது சுய உருவததைத தமிழகம் மிகத் தெளிவாகப் புரிந்துகொண்டது. ஜனவரி 26-ல் கறுப்புக் கொடி கட்டுகிறவர்களுக்கு அவர் கடும் எச்சரிக்கை விடுத்தார். அவர்களைப் பொது மக்கள் கவனித்துக் கொள்வார்கள் என்றார். என்ன நடக்கும் என்று அன்றைக்குத் தெரியும் என்றார். கண்டனக் கூட்டம் நடக்காது என்றார். கூட்டங்களைப் போலீசார் தடுப்பார்களா என்று கேட்டதற்கு, பொதுமக்கள் கவனித்துக் கொள்வார்கள் என்றார். துக்கநாள் கொண்டாடுகிறவர்களுக்குப் போலீஸ் பாதுகாப்பு இருக்காது என்றார். திருடர்களுக்குப் போலீஸ் பாதுகாப்பா? என ஆத்திரமாக மொழிந்தார். தனிப்பட்டவர் வீடுகளில் வேண்டுமானால், கறுப்புக் கொடி கட்டிக்கொள்ளட்டும் என்றார்.

சட்டசபையைத் தொடர்ந்து, அவரது மிரட்டல் பேச்சுக்கள் மேலும் பெருகத் தொடங்கிற்று. அவரைப் பின்பற்றி, காங்கிரசின் புதிய பிரச்சார பீரங்கிகள் கோரமான சொற்பொழிவுகளை மிகத் தீவிரமாக நடத்தினர்.

போலீஸ் அதிகாரிகள் கழகத்தினரை நேரடியாகவும், மறைமுகமாகவும் பயமுறுத்தத் தலைப்பட்டனர். திட்டமிட்டபடி

ஜனவரி 26-ம் நாள் நிகழ்ச்சிகள் நடந்து, அது, அமைதியான அளவில் முடிந்துவிட்டால், அதைப் பொறுமையுடன் தாங்கிக் கொள்ள முடியாதே என்று கவலைப்பட்டவர்கள், பொறாமைக்காரர்கள் போலீஸ் அதிகாரிகளைக் கொண்டு மிரட்டச் செய்தனர். ஐயாயிரத்துக்கு மேற்பட்ட குண்டர்கள் சென்னையில் காங்கிரசின் சார்பில் இறக்குமதி செய்யப்பட்டு, அவர்கள் கழகத்தினர் அனைவரையும் தாக்க இருக்கிறார்கள். அவர்களைப் போலீசார் தடுத்து நிறுத்தாதது மட்டுமல்ல, அவர்களுக்குப் பாதுகாப்பும் கொடுக்கத் தயாராக இருக்கிறது என்று போலீஸ் அதிகாரி ஒருவர் கூறினார்.

வன்முறைகள் விளைந்து விடக் கூடாது என்பதிலே எப்போதுமே கவலையோடு இருக்கும் அறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள், போலீஸ் அதிகாரிகளின் பேச்சையும் புறக்கணிப்பதற் கில்லை யென்று முடிவு செய்து, வன்முறை - கலாம் - முதலியவற்றைத் தடுக்க வேண்டி, ஜனவரி 26 பற்றிய மற்றொரு அறிக்கையினைத் தந்தார்கள். அதன்படி, கறுப்புக் கொடிகளைத் தனிப்பட்டவர் இல்லங்களில் மட்டுமே கட்டவேண்டும். அதைக் கூடப் போலீசார் அவிழ்த்தால் தடுத்திடத் தேவையில்லை என்று அந்த அறிக்கை கூறிற்று. சென்னை மாநகரில், முதலில் திட்டமிட்டபடி நூறு கூட்டங்கள் தேவையில்லை என்று மாற்றி ஒரே கூட்டமாக நடத்துவது என்றும் அறிவிக்கப்பட்டது.

இத்தனைக்கும் பிறகு, கழகத்தினரில் மிகச் சிலர், (அதாவது சென்னையிலே உள்ள அதிருப்தியாளர்கள்) ஜனவரி 26ஆம் நாள் நிகழ்ச்சி, யாரோ சிலரது கருத்துகளுக்கான வெற்றி என்று தவறான கணக்குப் போட்டுக்கொண்டு, போலீசார் பெயரை வைத்துக்கொண்டு; மேலும் கழகத் தலை வர்களிடம் - மேல்மட்ட ரீதியில் - காங்கிரஸ் ரௌடிகள் ஆயிரக்கணக்கில் குழுமியிருப்பதாகத் திடுக்கிடும் தகவல்களைத் தந்துகொண்டேயிருந்தனர். நாமோ, வன்முறைகள் தவிர்க்கப்பட வேண்டும் என்பதற்கான எல்லாவிதமான அமைதி வழி ஏற்பாடுகளையும் செய்துவிட்டோம் - இனி ஆனது ஆகட்டும், நம் உயிரைத்தானே எடுத்துக் கொள்வார்கள் - போனால் போகட்டும் - என்ற நிலையில், மேலால் நடக்க வேண்டியதைப் பார்க்க வேண்டியது என்பதே எங்களைப் போன்ற பலரின் வாதமாக இருந்தது. உறுதியான முடிவாகவும் இருந்தது.

காங்கிரஸ் கட்சியினர் தூண்டி விடுகிற சில குண்டர்களுக்காகப் பயந்துகொண்டு, தமிழ் மக்களின் உயிர்ப் பிரச்சினைக்காக மேற்கொண்டிருக்கிற போராட்டத்தைக் கைவிட்டுவிட முடியுமா? ஒரு கன்னத்தில் அடித்தால் இன்னொரு கன்னத்தையும் காட்டு என்ற சாத்வீக அடிப்படையில்தான் நமது அறப்போர் நடைபெற்று வந்திருக்கிறது.

அடக்குமுறையை ஏற்றுக் கொள்வதுதான் நமது கொள்கை. அதனை எதிர்த்து வன்முறைப் போராட்டம் நடத்துவது நம் கொள்கையல்ல! அந்த வகையில் நம்மை நாமே அடக்குமுறைக்கோ அல்லது மாற்றாரின் வன்முறைச் சேட்டைகளுக்கோ அர்ப்பணித்துக் கொள்வதில் தவறென்ன? எடுத்த முடிவின்படி, அவரவர்க்குரிய ஊர்களில் கண்டன கூட்டங்களில் கலந்துகொள்ளக் கழக முன்னணியினர் புறப்பட்டனர். அய்யோ! முரசொலியின் வேகமான எழுத்தினால்தான் போராட்டம் தீவிரமடைகிறது! இதோ பாருங்கள் இந்தக் கட்டுரையை! என்றெல்லாம் முரசொலியின் முழக்கத்தால் எரிச்சல் கொண்டவர்களின் சார்பாக இயங்கும் போலீஸ் அதிகாரிகள் புகார் கூறினர்; கழகத் தலைவர்களிடம்! வன்முறையைத் தூண்டுவது போலவோ அல்லது சட்டத்திற்கும் ஒழுங்கிற்கும் முரண்பாடான முறையிலோ முரசொலியில் எந்தக் கட்டுரையும் வெளிவரவில்லையே என்று அந்த அதிகாரிகளிடம் விளக்கியபோது, எழுச்சியுண்டாக்குவது போல் எழுதப்படுகிறதே என்று அந்த அதிகாரிகள் அங்கலாய்த்துக் கொண்டனர்.

மேலும் ஜனவரி 26 - துக்கநாள் கொண்டாட்டம் கருணாநிதியின் திருப்திக்காக நடத்தப்படுவதாகவே பேசப்படுகிறது என்றும் அவர்கள் கோள்மூட்டிப் பேசிப் பார்த்தனர். பிரச்சினையின் பெரிய முக்கியத்துவத்தைத் தங்களது திருப்புமுனைப் பேச்சுக்களால் குலைத்து விட வேண்டுமென்று எண்ணிய அதிகாரிகள், இறுதிவரையில் முரசொலியின் பெயரையே முணு முணுத்துக்கொண்டிருந்ததுதான் வியப்புக்குரியதாகும். அதைச் சில கழகத்தின் அதிருப்தியாளர்களும் பயன்படுத்திக்கொண்டு, அண்ணா அவர்களின் உள்ளத்தையும் சலனப்படுத்திடத் தொடங்கியதைக் கண்டபோது, முரசொலியை நிறுத்திக்கூட விடலாமா என்று எனக்குத் தோன்றிற்று. தேர்தல் - வெற்றி - பதவி - அதன்மூலம் இலட்சியங்களை நிறைவேற்றிக் கொள்ளமுடியும் என்று என்னைப் போன்ற எண்ணமுடையவர்கள் - என்னைவிட

அதிகமான தியாக எண்ணங் கொண்டவர்கள் - என்னை ஒரு மூலையில் தள்ளும் அளவுக்குத் தியாகச் சுடர்களாகத் தங்களை ஆக்கிக் கொண்டவர்கள் - இந்தக் கழகத்தில் ஏராளமானவர்கள் - ஏதோ ஒரு நல்ல சூரிய உதயத்தை எதிர்பார்த்துக்கொண்டு, அந்தத் தூய ஒளியைத் தரக்கூடிய தியாக முத்திரை பெற்ற தலைவர்கள் இவர்கள் என்று நம்பிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அந்த நம்பிக்கையோடுதான் ஊரார் எதிர்ப்பை, உற்றார் பகையை, ஆள்வோர் அடக்குமுறையை, சமாளித்துக்கொண்டு தங்கள் வாழ்வையே கழகத்துக்கு அர்ப்பணித்துக்கொண்டு நடமாடுகிறார்கள்.

அவர்கள் பலர் சிறையிலே இருந்த போது, தங்கள் குழந்தைகுட்டிகளைச் சாவு கொடுத்திருக்கிறார்கள். மனைவி மயானத்தில் - மணாளன் சிறையில் - என்ற நிலையில் தியாகம் புரிந்திருக்கிறார்கள். தங்கள் வீடு வாசல்,, சொந்த பந்தங் களை மறந்துக் கழகத்தின் அன்புக் கட்டளைகளைத் தியாகத் தழும்புகளேற்று நிறைவேற்றியிருக்கிறார்கள். அவர்கள், தங்களுக்கு வழிகாட்டக்கூடிய தலைமையினரைத் தாங்கள் தொழுதேத்தும் தெய்வங்களாகக்கூடக் கருதிக்கொண்டு இருக்கிறார்கள். நாட்டின் நல்வாழ்வுக்காகவும் - மொழிக்காகவும் - நல்லாட்சி மலர்வதற்காகவும் - எத்தகைய இழப்புகளுக்கும் தயாராயிருக்கிற இணையற்ற கர்ம வீரர்கள் - கடமையாளர்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். உண்மையிலேயே அந்த உத்தமத் தொண்டர்களின் ரத்தமே கழகம் - அவர்கள் உழைப்பே கட்சி - அவர்கள் வியர்வைத் துளிகளே அறிவகம் - அன்பகம்! அவர்கள் கழகத்தின் முதுகெலும்புகள், நாடி நரம்புகள். அவர்களது தூய நெஞ்சத்தையும் - அப்பழுக்கற்ற ஆர்வத்தையும் - அமைதி கெடாமல் தங்களை அடக்குமுறைக்குப் பலி கொடுத்துக் கொள்கிற தியாக சுபாவத்தையும் நம்பித்தான் ஜனவரி 26 நாடெங்கும் துக்க நாள் என அறிவித்தது கழகம்.

(தொடரும்)

25-6-2002

2767. மொழிப்போரில் ஒரு களம் (4)

தென்றல் சுகத்தை தீயில் கண்ட தீரர்கள்!

இதற்கிடையே தென்னாட்டு மாணவர்கள் கொதித் தெழுந்தனர். நேரடியாகத் தங்களை எதிர்காலத்தில் பாதிக்கக் கூடிய பிரச்சினைக்காக, ஜனவரி திங்கள் 25ஆம் நாளன்று தமிழகமெங்கும் மாணவர்கள் அமைதியான ஊர்வலங்கள் நடத்தி, கல்லூரிகளுக்குச் செல்லாமல் தங்கள் இந்தி எதிர்ப்பைத் தெரிவிப்பது என்று முடிவு செய்தனர். தமிழகம் மட்டும் முதலில் எழுந்தது. தென்னக முழுவதிலுமுள்ள மாணவர்களுக்கு அது ஒரு அறைகூவலாயிற்று. சென்னையில் ஊர்வலமாக அமைதிவழி வந்த மாணவர்கள் பத்தாயிரத்துக்கு மேற்பட்டவர்களை அலட்சியப்படுத்தி முதலமைச்சர், அவர்தம் பிரதிநிதிகளைப் பார்க்க மறுத்துவிட்டார். முதல் நாள் ஊரில் இல்லாமல் போய் விட்டார். பிறகு திரும்பி வந்தவர், நான் ஏன் அவர்களைப் பார்க்க வேண்டும் என்று ஆணவத்துடன் மறுத்துவிட்டார். சென்னை நிகழ்ச்சி நடந்து கொண்டிருக்கும்போதே - அதே 25ஆம் நாளன்று மதுரையில் அமைதியாக ஊர்வலம் சென்ற மாணவர்கள் மீது காங்கிரஸ் குண்டர்கள் பாய்ந்து அவர்களை அரிவாள் முதலிய பயங்கர ஆயுதங்களைக்கொண்டு வெட்டித் தள்ளினர். இளம் ரத்தம் மதுரைத் தெருக்களில் பெருக்கெடுத்தது. அதன்பிறகு, மாணவர் அணி வகுப்பு புயலாக மாறியது. மதுரையில் பெரும் பரபரப்பு! குடியரசு விழாவுக்கான பந்தல்கள் பல தீக்கிரை யாக்கப்பட்டன. வன்முறைச் செயல்களுக்கு வித்திடப்பட்டுவிட்டது. முதலமைச்சர் பக்தவத்சலத்தின் சட்டசபைப் பேச்சினால் ஏற்பட்ட விளைவு அது! போலீஸ் பாதுகாப்புத் தங்களுக்கு இருக்கும்போது யார் என்ன செய்து விட முடியும் என்ற துணிவில் குண்டர்கள் (மன்னிக்கவும்! பக்தவத்சலம் மொழியில் பொதுமக்கள்) மாணவர்களை வெட்டி வீழ்த்தினர். அதன் விளைவாகத் தீ பரவிற்று.

ஜனவரி 25! ஆம்! அந்த நாளே தீ பரவிய துக்க நாள்தானே!

உனக்குத் தெரியாதா நண்பா! கீழப்பழுவூர் சின்னச்சாமி அதே ஜனவரி 25ஆம் நாள் தானே (1964) திருச்சியில் தீக்குளித்துச் செத்தான். இந்தியை எதிர்த்துப் பெருந்தியாகம் செய்த சிங்கத் தமிழன் அல்லவா? அந்த நினைவு நாளைத்தான் ஜனவரி 25-ல் குளித்தலையில் கொண்டாடினார்கள். நான் கலந்துகொண்டு பேசினேன். அன்றிரவு கழகத் தலைவர்கள், முன்னணி வீரர்கள், அனைவரும் கைது செய்யப்பட்டார்கள். மறுநாள் ஜனவரி 26 - துக்கநாளை மேலும் துக்க நாளாக ஆக்கினான் சென்னைத் தோழன் சிவலிங்கம். அந்த வீர இளைஞன் இந்தித் திணிப்பின் கொடுமையைத் தாங்க முடியாமல் - வருங்காலத் தமிழகம் தாழ்ந்து தலைகுனிந்துபோய் விடுமே என்ற சோக மேலீட்டால், தன் இன்னுயிரை எரிதழலுக்கு அர்ப்பணித்து, இந்தி ஒழிக! தமிழ் வாழ்க!! என ஒலித்தவாறு சின்னச்சாமியைப் பின்பற்றினான். அன்றைய மாலை இதழ்களிலும், வானொலியிலும் அந்தச் செய்தி வெளியிடப்பட்டு நாடே வேதனையில் ஆழ்ந்தது. நானும், மற்ற கழக முன்னணியினரில் சிலரும் திருச்சி சிறையிலிருந்தவாறு கண்ணீர் பெருக்கினோம். அன்றையதினம் நாடெங்கிலும் கழகத் தோழர்களின் இல்லங்களிலும், இந்தியை எதிர்க்கும் தென்னவர் இல்லங்களிலும் கறுப்புக்கொடிகள் பறக்க விடப்பட்டன. கறுப்புச் சின்னமணிந்து கொண்டனர் தமிழகமெங்கணும்! சென்னையிலும் வேறு சில இடங்களிலும் தனிப்பட்டவர் இல்லங்களில் பறந்துகொண்டிருந்த கறுப்புக் கொடிகளை குண்டர்கள் புடைசூழ போலீசார் அவிழ்த்தனர். காங்கிரசார் ஏவல் கேட்டு அன்றைய தினம் போலீசார் நடந்துகொள்ள வேண்டியதாயிற்று. தனிப்பட்ட வீடுகளில் புகுந்தும், கழகப் பணிமனைகளில் நுழைந்தும், போலீசார் துணையுடன் விஷமிகள் கலாம் விளைத்தனர். காட்டுக் கூச்சல் போட்டனர். கழகக்கொடிகள் எரித்துச் சாம்பலாக்கப்பட்டன.

இத்துணை ஆர்ப்பாட்டத்திற்கும், அராஜகத்திற்கும் கழகத்தினர் அமைதி காத்தனரே ஒழிய, அவர்களை எதிர்த்திட முனையவில்லை. சென்னை அன்பகத்தின் மீது கற்கள் வீசப்பட்டன. அறிவகத்தில் ஆர்ப்பாட்டக்காரர்கள் தங்கள் கைவரிசையைப் போலீசார் துணையுடன் காட்டினர். முரசொலி அலுவலகத்தின் முன் காங்கிரசாரும் - அலுவலகத்தினரும் எதிர் எதிரே நின்றிருந்தனர். காங்கிரசாரின் வரம்பு கடந்த வசைமொழிகளையெல்லாம் கழகத் தினரும், அலுவலகத்தினரும் தாங்கிக்கொண்டு நின்றனர். போலீஸ் அதிகாரி புகுந்தார். காங்கிரசாருக்குப் பக்கத் துணை நின்று

கழகத்தினரையும், அலுவலகத்தினரையும் அடித்து நொறுக்கினர். கேவலமான வார்த்தைகளைப் பேசினர். பிறகு போலீசார் கறுப்புக் கொடியை அகற்றினர். அண்ணா அவர்கள் வீட்டில் மாடியில் ஏறி ஆளுங்கட்சியினரும், போலீசாரும் கறுப்புக் கொடியை இறக்கினர். இலட்சிய நடிகர் எஸ்.எஸ்.ஆர். வீட்டில் குண்டர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். போலீசார் கறுப்புக் கொடியை அகற்றியது மட்டுமின்றி, எஸ்.எஸ்.ஆர்., டி.வி.என் இருவரையும் கைது செய்தனர்.

நடிப்பிசைப் புலவர் கே.ஆர்.ராமசாமி அவர்களும் கைது செய்யப்பட்டார். 26-ந்தேதி, காங்கிரசார் குடியரசு தினத்தையே மறந்து விட்டு, எங்கெங்கே கறுப்புக் கொடி பறக்கிறது என்பதிலே நாட்டம் செலுத்தி, கழகக் கொடிகள் அறுக்கும் வேலையிலே ஈடுபட்டனர். சென்னையில் ஆளுங்கட்சிக்காரர்களின் வெறியாட்டத்தையும், போலீசாரின் பாரபட்சமான நடவடிக்கையையும் பார்த்துத் துடித்துப்போன விருகம்பாக்கம் அரங்கநாதன் எனும் வீரன் தன்னைத் தீக்கு அர்ப்பணித்துக்கொண்டான். 27-ந்தேதி காலை, கருகிக் கிடந்த அவன் உடலையும், அருகே இருந்த மடலையும் கண்ட சென்னை மக்கள் விழிகளில் செங்குருதி சிந்தினர். தீக்குளிப்புச் செய்திகள் அமெரிக்க ஏடுகளில் பிரசுரிக்கப்பட்டன.

ஐக்கிய நாடுகள் சபையில் பேசப்பட்டது. தீக்குளிப்பது கழகத்திற்கு ஏற்புடைய கொள்கையல்ல என்பதை மீண்டும் விளக்கி அமைப்புச் செயலாளர் என்.வி. நடராசன் அறிக்கை விடுத்தார். அந்த அறிக்கையை இந்தியப் பிரதமர் பாராட்டி வரவேற்றுப் பேசினார். இதற்கிடையே மாணவர் கிளர்ச்சி வலுக்கத் தொடங்கிவிட்டது. அந்தக் கிளர்ச்சிக்கும் நமக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை.

உத்தமர் காந்தியார் கூட மாணவர்கள் அரசியல் கிளர்ச்சிகளில் - குறிப்பாகச் சுதந்திரப் போரில் பங்கு கொள்ளலாம் என்று யங் இந்தியா ஏட்டில் எழுதியுள்ளார். ஆளுங்கட்சியினரால் மதுரையில் மாணவர்கள் வெட்டுப்பட்டதற்கு இரங்கல் தெரிவிக்கும் முறையில் சிதம்பரம் - அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்கள் ஊர்வலம் வந்தனர். துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்றது. இராசேந்திரன் என்ற பல்கலைக் கழக மாணவனின் உயிரைத் துப்பாக்கிக் குண்டு குடித்தது. இளந்தோழனின் பிணத்தைக் கண்ட மாணவர்கள் வாய்விட்டுக் கதறினர். அதனைத் தொடர்ந்து

வன்முறைச் செயல்கள் தொடங்கின. பிறகு, அடக்குமுறையும் வன்முறைச் செயலும், மாறி மாறித் தங்கள் பயங்கர சொரூபத்தைக் காட்டத் தொடங்கின.

கல்லூரிகள் மூடப்பட்டன. பள்ளிக் கூடங்கள் மூடப்பட்டன. ஆனால் முதலமைச்சரின் வாயும், காங்கிரஸ் பிரசாரகர்களின் வாயும் திறந்தபடியே இருந்தன. கல்லூரிகளை மூடினால் நல்லதுதான், ஐந்து கோடி மிச்சம்! பிரியாணியில் ஏமாந்து கிளர்ச்சி செய்யத் தொடங்கிவிட்டனர் மாணவர்! இப்படியெல்லாம் பேசினார்கள். ஒரு கிழமைக்குப் பிறகு மீண்டும் கல்லூரிகள் திறக்கப்பட்டன. ஆனால் மாணவர்கள் வரவில்லை.

மாணவர் போராட்டக்குழு, இந்தி எதிர்ப்பைத் தீவிரமாக்கிற்று. மாணவர்களைச் சந்திக்க - முதலில் மறுத்த முதலமைச்சர் - இப்போது அவர்களைச் சந்திக்க இணங்கினார். சந்திப்பதற்கு மாணவர்கள் மறுத்தனர். பிறகு ஒருவாறு சந்திப்பு நடந்தது. மாணவர்கள் திருப்தி அடையவில்லை. போராட்டத்தைத் தொடர்ந்தனர். இதற்கிடையே கழகத் தலைவர்கள் சிலர் விடுதலை செய்யப்பட்டனர்.

விடுதலையானதும் அறிஞர் அண்ணா அவர்கள், ஓர் அறிக்கை மூலம் நிலைமைகளை மிகத் தெளிவாக விளக்கினார். முதலமைச்சரின் தகாப் போக்கைக் கண்டித்தார். மாணவர் கிளர்ச்சிக்கும், கழகத்திற்கும் தொடர்பு இல்லை என்பதை சுட்டிக்காட்டினார். மாணவர்கள், அவர்களே தங்களுக்காக வாதாடிக் கொள்வார்கள் என்று குறிப்பிட்டார். அப்போது நினைத்திருந்தால் கூட, முதல் அமைச்சர் நிலைமையைச் சீராக்கியிருக்க முடியும். ஆனால் அவர், வரட்டு கௌரவத்திற்கு அடிமையாகிவிட்டார்.

மாணவர் கிளர்ச்சியில், சில சமூக விரோத சக்திகளும் நுழைந்துகொண்டு தங்கள் வெறியாட்டத்தை நடத்தத் தொடங்கின. துப்பாக்கிப் பிரயோகங்கள். சாவுகள் தொடர்ந்தன. மாணவர்கள் கிளர்ச்சியை நிறுத்த வேண்டுமென்று ராஜாஜி வேண்டுகோள் விடுத்தார். அறிஞர் அண்ணா அவர்களும் கிளர்ச்சியைக் கைவிடுமாறு ஒரு நீண்ட அறிக்கை விடுத்தார். காயிதே மில்லத் வேண்டுகோளும் வந்தது. கிளர்ச்சி நிற்கவில்லை. அடக்குமுறை - வன்முறை - சாவு - கொடுமை தாங்க முடியவில்லை. நான்கு போலீசாரும் கொல்லப்பட்டனர். ஆம்!

வன்முறைச் செயல் அளவு மீறிவிட்டது. போலீசாரின் துப்பாக்கி ரவைகள் ஏறத்தாழ அறுவது, எழுபது உயிர்களை - வாலிபர் - மாணவர் - குழந்தைகள் - என்ற நிலையில் பறித்துக் கொண்டன. மூவாயிரம் மாணவர்கள் நாடெங்கும் கைது செய்யப்பட்டனர். வீரப்பர் என்ற தமிழாசிரியரும், முத்து என்ற மற்றொருவரும் இந்தியை எதிர்த்துத் தீக்குளித்தனர். தமிழ்த்தாய் கதறி அழுதாள். இந்திப் பேய் வாங்கிய பலி, கொஞ்சமல்ல! குடித்த ரத்தம் சாதாரணமானதல்ல! முதலமைச்சர் பக்தவத்சலம், ராணுவத்தை வரவழைத்தார்.

டெல்லியில் இருந்து டி.டி.கே. வந்தார். சென்னை வானொலியில் பேசினார். அன்றையதினம் இந்தியப் பிரதமரும் வானொலியில் பேசினார். இந்தி பேசாத மாநிலத்தவர் திருப்தி அடையவில்லை. இதற்குள் வங்கம் எழுந்து விட்டது. ஆந்திரத்திலும், கேரளாவிலும், கர்நாடகத்திலும் மாணவர் கிளர்ச்சி. துப்பாக்கிப் பிரயோகங்கள். உயிர்ப்பலிகள்.

மத்திய அரசின் உணவு அமைச்சர் சி. சுப்பிரமணியம், இந்தியப் பிரதமரின் வானொலிப் பேச்சில் திருப்தி அடையாமல் பதவி விலகினார். அவரைத் தொடர்ந்து அழகேசனும் பதவி விலகினார். அரசியல் வட்டாரத்தில் மிகுந்த பரபரப்பை ஏற்படுத்திய நிகழ்ச்சியாகும் இது!

(தொடரும்)

26-6-2002

2768. மொழிப்போரில் ஒரு களம் (5)

மனச்சாட்சியுள்ளோர் உணர்ந்த மக்கள் எழுச்சி!

ஜனவரி 26க்கு இரண்டு நாட்களுக்கு முன்பு சென்னை வந்திருந்த சி.சுப்பிரமணியம், நேரு வாக்குறுதி பற்றி, பிரதமர் லால்பகதூர் தந்த விளக்கத்திற்கு விளக்கமளித்தார். நாலைந்து நாட்கள் நடந்த மாணவர் கிளர்ச்சியும், தமிழகத்து எழுச்சியும் அவரையும், அழகேசனையும் வீறு கொள்ளச் செய்தது. அல்லது விழிப்படையச் செய்தது.

அவர்கள் பதவி விலகலை வரவேற்று, அறிஞர் அண்ணா அவர்கள் உடனடியாக விடுத்த அறிக்கையில் மாணவர்கள் கிளர்ச்சியை நிறுத்துமாறு கேட்டுக் கொண்டார். கிளர்ச்சியின் வேகம் குறைந்தது. அங்கொன்றும் இங்கொன்றுமாக சில சம்பவங்கள் - அதற்குள் மாணவர் குழுச் செயலாளர் கிளர்ச்சியை நிறுத்தி வைத்திருப்பதாக அறிக்கை விடுத்தார். கிளர்ச்சியும், வன்முறையும், அடக்கு முறையும் உச்சகட்டத்திற்குப் போய் மத்திய அரசில் தமிழக அமைச்சர்கள் பதவி விலகிய பிறகே முதலமைச்சர் பக்தவத்சலம் வாய்திறந்து, நான் ஆங்கிலம் நீடிக்க வேண்டுமென்பதைச் சட்டமாக்குவதற்குப் போராடப் போகிறேன் என்று சூளுரை தந்தார்.

ஒருமுறை சட்ட சபையில் மே (May) என்பதும், ஷெல் (Shall) என்பதும் ஒன்றுதான் என்று வாதாடிய அந்தப் பெருமகனார், இப்போதுமே வேறு! ஷெல் தான் இருக்க வேண்டும் என்று நான் அப்போதே சொன்னேன். டெல்லியில் கேட்கவில்லை என்றெல்லாம் பேச ஆரம்பித்தார்.

காமராசர் அவர்களோ, இந்தியில் கடிதம் வந்தால் கிழித்துப் போடுவோம் என்று கூறினார். அதற்கு வடக்கே எதிர்ப்பு கிளம்பியது. மாணவர்கள் நடத்திய கிளர்ச்சி, யார் யாரை எப்படியெப்படி உணர வைத்திருக்கிறது என்பதற்காக இவைகளைத் தொட்டுக் காட்டினேன். கிளர்ச்சி நிறுத்தப்பட்டது - வன்முறைகள் அடங்கின

- அடக்கு முறைக்கு மட்டும் ஓய்வு அளிக்கப்படவில்லை. மீண்டும் பலரைக் கைது செய்யும் படலம் ஆரம்பமாயிற்று. எந்தெந்த நிகழ்ச்சிகளுக்கோ, யார் யார் பெயரோ இணைக்கப்பட்டு வழக்குகள் தொடரப்பட்டன. மாணவர் கிளர்ச்சிக்குத் தொடர்பே இல்லாத கழகத்தின்மீது வீண் பழி சுமத்தப்பட்டு, கழகத்தினர் பல்வேறு பகுதியிலும் கைது செய்யப்பட்டனர். வன்முறைச் செயல்களைக் கண்டிக்கும் அதே நேரத்தில், அடக்குமுறை வெறியாட்டங்களையும் கண்டிப்பது கடமை என்று கருதி, முரசொலியில் தலையங்கங்கள் தீட்டினேன்.

முரசொலியின் எழுத்துகளுக்கு பதில் கூறுவதற்குத் தெம்பற்றுப் போன பலவீனமான நிலையில், எந்த வழியில் என்னை அடக்கலாம் என்று சட்டப் புத்தகத்தில் நுழைந்தனர் அரசியலார். என் எழுத்துகள் எதுவும் சட்டவிரோதமானவை அல்ல என்று தெளிந்தனர். ஆனாலும், முரசொலி விடுக்கும் கணைகளுக்குப் பதில் கூற முடியாத ஆத்திரத்தில், இறுதியாக என்னை எப்படியும் வளைத்துப் போட்டுக் கோபத்தைத் தணித்துக் கொள்ள முதல் அமைச்சர் பக்தவத்சலனார் முன் வந்தார். திடீரென ஒரு நாள் இரவு, முரசொலி அலுவலகத்திலிருந்து வீடு திரும்பிய என்னைப் போலீசார் வீட்டிலேயே சந்தித்தனர்.

முரசொலி இதழில் மறுநாள் வெளியாகப் போகும் தலையங்கம் பார்க்கவேண்டுமென்றார்கள். அப்படி எழுதிக் கேளுங்கள்! தருகிறேன் என்றேன். போலீஸ் கமிஷனரின் அலுவலகத்திற்கு வாருங்கள் என்றார்கள். படுக்கையுடன் வருகிறேன் என்று கிளம்பினேன். ஏன்? எதற்காக? எந்தச் சட்டப் பிரிவில்? கைது செய்கிறோம் என்று கூறவில்லை. கேட்டுப் பார்த்தேன். பதில் தரவில்லை. இரவு முழுதும் கமிஷனர் அலுவலகத்தில் என்னைச் சுற்றி ஆயுதந் தாங்கிய வீரர்கள் தீவிரமாகக் காவல் புரிந்தனர். நான் நிம்மதியாகத் தூங்கினேன். என்னைச் சுற்றி காவல் பலப்படுத்தப்பட்டிருந்தது.

விடியற்காலை எழுப்பி, போலீஸ் லாரியில் ஏற்றினார்கள். தூங்கிக் கொண்டே போனேன். விழித்துப் பார்த்தேன். காலை எட்டரை மணி இருக்கும். திண்டிவனத்தில் இறக்கிக் காலை உணவு தந்தார்கள். மீண்டும் லாரி புறப்பட்டது. பகல் 12.30 மணிக்கு திருச்சியில் ஆயுதப் படையினர் முகாமில் உணவு தரப்பட்டது. இருநூறு மைல் லாரிப் பயணம்! ஏற்கெனவே உள்ள நெஞ்சு வலி

அதிகமாயிற்று! மீண்டும் லாரி கிளம்பிற்று. மாலை 4.30 மணிக்கு மதுரை வந்தோம். நெஞ்சு வலியால் துடித்துப் போய் சுருண்டு படுத்துவிட்டேன். மதுரை ஆயுதப்படையினர் முகாமில் டாக்டர்கள் வரவழைக்கப்பட்டு சிகிச்சைகள் செய்தனர்.

அதற்கு மேல் பிரயாணம் தொடர்வது நல்லதல்ல என்று டாக்டர்கள் கூறினார்கள் போலும்! அதனால் அன்றிரவு உணவு கூட கொடுக்காமல் மதுரை மத்திய சிறையில் தள்ளினார்கள். சிறைக் கொட்டடியில் நுழைந்த சிறிது நேரத்திற்கெல்லாம் மூட்டை மூட்டையாக மூட்டைப் பூச்சிகள் என்னைச் சுற்றி வளைத்துக் கொண்டன. நெஞ்சுவலி வேறு பொறுக்க முடியவில்லை. சரிதான்! மதுரைச் சிறையில்தான் நமக்கு முடிவு போலும் என்று திடப் படுத்திக் கொண்டு, அய்யோ! வரும்போது அண்ணாவைப் பார்க்காமல் வந்து விட்டோமே! என்ற வருத்தமுடன் உட்கார்ந்திருந்தேன்.

உட்காரவும் விட வில்லை மூட்டைப் பூச்சி. பிறகு, ஊசி போட டாக்டர்கள் வந்தார்கள். அவர்களுக்கு முன்பாக மூட்டைகள் ஊசி போட்டுக் கொண்டிருப்பதை அவர்களுக்குக் காட்டினேன். இப்படிப்பட்ட மூட்டைப்பூச்சிக் கும்பலை நான் கண்டதேயில்லை. உடனே ஜெயிலர் வந்தார். என் கொட்டடியை மாற்றினார். வேறு ஒரு இடத்தில் தனியாக வைக்கப்பட்டேன். தூக்க ஊசியின் மயக்கம் நன்கு உறங்கிவிட்டேன். விடியற்காலை யாரோ எழுப்பியது போல் கனவு! அவ்வளவுதான் தெரியும். கண்ணை விழித்துப் பார்க்கிறேன்; மீண்டும் போலீஸ் லாரியில் போய்க் கொண்டிருக்கிறேன். எங்கே கொண்டு போகிறீர்கள்? என்று கேட்டேன்.

அதிகாரிகள் மௌனம் சாதித்தார்கள். ஆளைச் சுட்டுக் கொல்லும்படி ஏதாவது உத்மரவு இருந்தால் இங்கேயே இறக்கி, செய்து முடித்துவிடுங்களேன் என்று ஆத்திரத்தோடு கேட்டேன். நான் அப்படிக் கேட்கும்போது, போலீஸ் லாரி கயத்தாறு கட்டபொம்மன் தூக்குமாட்டப்பட்ட இடத்துக்கருகே போய்க் கொண்டிருக்கிறது என்பதைப் பிறகுதான் தெரிந்து கொண்டேன். உடலெல்லாம் புல்லரித்தது. அதிகாரிகள், மௌனம் சாதித்த ரகசியம் எனக்கு விளங்கவில்லை. 18ஆம் நாள் காலை - (கைது செய்யப்பட்டது பிப். 16 இரவு) எட்டரை மணிக்கு லாரி, நெல்லை நகருக்குள் நுழைந்தது. நெல்லையின் எல்லையிலிருந்து ஒரே போலீஸ் மயம். அங்கொரு மூலையில் மாவட்டச் செயலாளர்

ரத்தினவேல் பாண்டியனும், நெல்லை மஜீதும் மற்றும் சிலரும் நின்று கொண்டு நான் பயணம் செய்யும் லாரியைப் பார்த்துக் கொண்டேயிருந்தனர். இறுதியாகப் பாளையங்கோட்டை இளங்குற்றவாளிகள் சிறையில் கொண்டு வந்து இறக்கினார்கள். எனக்கு நெஞ்சு வலியின் கொடுமையில் இந்த அரசினரின் போக்கை நினைத்துச் சிரிப்புகூட வந்தது. இளங்குற்றவாளிகள் சிறைக்கு அருகில், அதன் தொடர்பாக உள்ள ஒரு சிறைக் கூடத்திற்கு என்னை அழைத்துப் போனார்கள்.

பத்துப் பதினைந்து ஆண்டுக் காலமாக பூட்டப்பட்டுப் புழுதி மேடாகக் காட்சி அளித்துக் கொண்டிருந்த சிறைக் கூடம், எனக்காகத் திறக்கப்பட்டு சுத்தம் செய்யப்பட்டது. செடிகொடிகளும் விஷப் பூண்டுகளும் அகற்றப்பட்ட காரணத்தால், அவைகளில் பதுங்கி வாழ்ந்து கொண்டிருந்த பாம்பு முதல் பல்லி ஈ.றாக உள்ள எல்லா ஜீவராசிகளும் ஒதுங்குமிடமில்லாமல் திரிந்து கொண்டிருந்த காட்சியையும் நான் உள்ளே அடைக்கப்பட்ட சிறிது நேரத்திற்கெல்லாம் தெரிந்து கொள்ள முடிந்தது. எல்லாக் கொட்டடிகளும் பூட்டப்பட்டும், திறக்கப்பட்டும் பல ஆண்டுகள் ஆனதால் அதன் இரும்புக் கதவுகளை நகர்த்தவே முடியவில்லை. எப்படியோ எனக்காக ஒரு கொட்டடியைத் தயாரித்து வைத்திருந்தார்கள்.

சிறை புகுந்த சற்று நேரத்திற்கெல்லாம் சிறைக் கண்காணிப்பாளர், கவர்னர் பெருமானுக்காக கையெழுத்திடப்பட்ட உத்தரவு ஒன்றை என்னிடம் தந்து, பிரதி பெற்றுக் கொண்டதற்குக் கையெழுத்தும் வாங்கிக் கொண்டார். அப்போதுதான் நான் இந்திய பாதுகாப்பு சட்டப்படி கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிய வந்தது. அந்த உத்திரவில் என்னை பாளையங் கோட்டையில் உள்ள மத்திய சிறைச்சாலையில் வைக்க வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருந்தது. பாளையங் கோட்டையில் மத்திய சிறைச்சாலையே கிடையாது. அந்த விபரங்கூட தெரியாத ஒரு சர்க்காரும், அதற்கென ஒரு இலாகாவும், அதற்காகப் பொது மக்களின் வரிப்பணம் செலவிடப்படுவதும்.. .. .. என்னே அநியாயம் .. .. .. சிரிப்பதா? அழுவதா?. . .இப்படியெல்லாம் வெளியே இருந்தால் கேட்டுத் தொல்லை கொடுக்கிறேன் என்றுதான் சட்டங்களை யெல்லாம் நாடி அலுத்துக் கடைசியில் பாதுகாப்பு சட்டத்தின் பாதங்களில் விழுந்திருக்கிறார்கள்.

மாணவர் கிளர்ச்சி வலுத்து, வன்முறைகள், அடக்குமுறைகள் மெய் சிலிர்க்கும் வகையில் நடை பெற்ற போதெல்லாம் நானும், நாவலரும், செழியனும், சத்தியவாணி முத்துவும் தொடர்ந்து அண்ணா அவர்கள் இல்லத்திலே அமர்ந்துதான் கட்டுக்கடங்காமல் நடைபெறுகிற நிகழ்ச்சிகள் குறித்து கவலைகளைப் பரிமாறிக் கொண்டிருந்தோம்.

அண்ணா அவர்கள் மெத்த வேதனைக்காளாகியிருந்தார்கள். வெளியூர் சென்றிருந்த பேராசிரியர் அன்பழகன் அவர்களும் எங்களுடன் கலந்து தமிழகக் கொந்தளிப்பு பற்றிய கவலைகளைத் தெரிவித்துக் கொண்டிருந்தார்கள். உடல் நலமில்லாத நிலையில் என்.வி.என். அவர்களும் இரண்டொரு முறை வந்து போனார். மாணவர்களின் அமைதியான கிளர்ச்சியைப் பயன்படுத்திக் கொண்டு இடையில் நுழைந்து விட்ட வன்முறையாளர்களைப் பற்றியும், மொழிக் கிளர்ச்சி, திசைதிருப்பப்படுவது பற்றியும், காங்கிரஸ் அமைச்சர்கள் சிலர் தி.மு.க. மீது பழிபோடும் வாய்ப்பாக இதனைப் பயன்படுத்த எண்ணும் இழிதன்மை பற்றியும், அதே சமயத்தில் முக்கியமான காங்கிரஸ் தலைவர்களும், பாராளுமன்ற - சட்டமன்ற காங்கிரஸ் உறுப்பினர் சிலரும் தமிழகக் கொந்தளிப்புக்கும், தி.மு.க.வுக்கும் தொடர்பு இல்லை. இது மக்கள் எழுச்சி!

என்று அழுத்தம் திருத்தமாகக் கூறியது குறித்து நன்றி மனப்பான்மையுடன் அந்த மனச்சாட்சியுள்ள காங்கிரசாரைப் பாராட்டிக் கொண்டும், நிகழ்ச்சிகள் பற்றிய நீங்காக் கவலை யுடன் ஐந்தாறு நாட்கள் தூக்கமின்றியும், காலத்தில் உணவின்றியும் அண்ணா அவர்களைச் சூழ்ந்திருந்து பேசிக் கொண்டிருந்திருக்கிறோம். தமிழக நிகழ்ச்சிகள் குறித்து முரசொலியில் நான் எழுதிய தலையங்கங்களையும் நீ படித்திருக்கக் கூடும். அமைதிமலர்ந்திடுக! என்ற தலையங்கம் பற்றிப் பலரும் தங்கள் பாராட்டுகளைத் தெரிவித்தார்கள். மத்திய அமைச்சர்கள் பதவி விலகலுக்குப் பிறகு அமைதிக்கான சூழ்நிலைகள் தோன்றிடவே, சென்னையில் இருந்து அண்ணா அவர்கள் காஞ்சிக்குச் சென்றார்கள். காஞ்சி சென்ற பிறகும் அண்ணா அவர்களுடன் நானும், நாவலரும் தொலைபேசியின் மூலம் தொடர்புகொண்டு, அமைதிக்கான சூழ்நிலைகள் மேலும் வளருகின்றன என்பதை அடிக்கடி தெரிவித்துக் கொண்டிருந்தோம்.

16-2-65 அன்று மாலை மத்திய அமைச்சர்கள் சுப்பிரமணியமும், அழகேசனும் தங்கள் ராஜினாமாக்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டார்கள்.

பிரதமர் சாஸ்திரியோடு பேசிய பேச்சில் திருப்தி ஏற்பட்டு விட்டதாக அதற்கு அவர்கள் காரணம் கூறினர். இந்தச் செய்தியின் முழு விபரங்களை முரசொலிக்குச் செய்தி அனுப்பும் யு.என்.ஐ. மூலம் கேட்டு, 16-ந் தேதி இரவு காஞ்சிக்கு அண்ணா அவர்களிடம் தகவல்கள் கொடுத்தேன். 17-ந்தேதி என்னையும், நாவலரையும் காஞ்சிபுரம் வருமாறு அண்ணா அவர்கள் சொன் னார்கள். தர்மபுரி தேர்தல் பற்றிப் பேசவேண்டும் என்பதற்காகவே வரச்சொன்னார்கள். பல நாட்களுக்குப் பிறகு அண்ணா அவர்களின் பேச்சில் அன்றுதான் ஒரு மகிழ்ச்சியின் சாயல் தென்பட்டது. காரணம், அந்த அளவுக்குத் தமிழகத்து அண்மைக் கால நிகழ்ச்சிகள் அவரைக் கலக்கி விட்டிருந்தன. 17-ந்தேதி அண்ணாவை நான் எங்கே சந்திப்பது? நான்தான் போலீஸ் லாரியில் ஏற்றப்பட்டு எங்கேயோ எடுத்துச் செல்லப்படுகிறேனே?

(தொடரும்)

27-6-2002

2769. மொழிப்போரில் ஒரு களம் (6)

கூகைகள் அலறலுக்கிடையே குயிலின் ஓசை!

நான் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, மேலும் பல கழக முன்னணியினர் கைது செய்யப்பட்டனர். எனக்கு முன்பே பல தோழர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களை யெல்லாம் பழிசுமத்திக் கைது செய்து, வழக்கு போட எண்ணுகிற சர்க்காரின் போக்கைக் கண்டித்துத் தான் நான் பிப்ரவரி 16-ந்தேதி இரவு ஒரு கண்ணில் சுண்ணாம்பு! என்ற தலையங்கம் எழுதினேன். அதன் புரூப் பார்க்க வேண்டுமென்றுதான் போலீஸ் அதிகாரிகள் என்னைக் கேட்டனர். நான் மறுத்தேன். இதை முன்னரே சுட்டிக்காட்டியிருக்கிறேன். நான் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டிருக்கிறேன். அதனைத் தெளிவாக அறிவித்து விட்டது அரசு.

மற்ற கழக நண்பர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மீது என்ன சட்டப் பிரிவோ? இதுவரையில் தெளிவாக்கப்படவில்லை. அவர்களைப் பொறுப்பிலும் விடுதலை செய்ய மறுக்கப்பட்டு வருகிறது. ஆயிரக்கணக்கான கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டுப் பழிசுமத்தப்படுகிறார்கள் என்பதைக் கேட்டுப் பொது மக்கள் பதைத்துப் போகிறார்கள்.

முதன்முதலாகக் கழகத்தவனாகிய என் மீது பாதுகாப்புச் சட்டம் பாய்ந்திருக்கிறது. கழகத்தின் செயல்வீரர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் சிறைக் கோட்டங்களில் பல்வேறு விதமான சட்டப் பிரிவுகளின் பேரில் அடைக்கப்பட்டு அலைக்கழிக்கப்படுகிறார்கள். இந்தத் தனிமை சிறைவாசத்திற்கிடையே மிக்க வேதனையோடு ஒன்றை என்னால் கூறாமல் இருக்க முடியவில்லை.

சர்க்காரின் இந்தப் பழிசுமத்தும் படலத்தையும் - கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டு வரும் கொடுமையையும் - அர்த்தமற்ற முறையில் வஞ்சம் தீர்க்கும் மனப்பான்மையுடன்

பாதுகாப்புச் சட்டத்தைப் பயன்படுத்தியுள்ளதையும் கண்டித்து எதிர்க்கட்சித் தலைவர் நாவலர் பெயரால் ஒரு கண்டன அறிக்கை வெளிவரும் என்று அரசியல் வட்டாரத்தினர் அல்லது பொதுமக்கள் அல்லது சிறைக் கொட்டடியில் கிடக்கிற என்னைப் போன்றவர்கள் எதிர்பார்ப்பது இயற்கையன்றோ!

இந்த மடலில் - இந்தக் கட்டத்தை எழுதும்போது, நான் கைது செய்யப்பட்டு பத்தாவது நாள் முடிகிறது! இதுவரையில் அப்படிப்பட்ட ஒரு கண்டனம் வெளிவராதது வியப்புக்கும் வேதனைக்குமுரிய ஒன்றேயாகும். டில்லியிலே பிரதமர் லால்பகதூர் தலைமையில் முதலமைச்சர்கள் மாநாடு. மொழிப் பிரச்சினையில் ஏதோ பூசி மெழுகுகிற வேலையில் தீவிரங்காட்டுகிற நேரம். உள்துறை அமைச்சர் நந்தா, பாராளுமன்றத்தில் கழகத்தின்மீது கனல் கக்குகிறார். பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி காரியக் கமிட்டிக் கூட்டத்தில் கழகத்தின்மீது பாய்கிறார். திரு.சி.பி. ராமசாமி அய்யர், ஜனாதிபதியைச் சந்தித்தபோது, தி.மு.க.வுக்கும், தமிழகத்து தற்போதைய நிகழ்ச்சிகட்கும் சம்பந்தமில்லை. அது மக்கள் எழுச்சி என்று கூறுகிறார்.

நாடாளுமன்றத்தில் நண்பர் மனோகரன் மொழிப் பிரச்சினையின் மீது எழுப்பிய சங்கநாதம் சிறையில் இருக்கும் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளிக்கிறது. ஆனால் அந்தப் பேச்சின் இடையிலே கூட பாதுகாப்புச் சட்டத்தின் பாய்ச்சல் - கழகத்தினர் பலரை பழிசுமத்திக் கைது செய்யும் படலம் - பற்றி அவர் குறிப்பிடாதது வருந்தத்தக்கதேயாகும் என்பதை என்னால் சுட்டிக்காட்டாமல் இருக்க இயலவில்லை. ஏனெனில் பாதுகாப்புச் சட்ட மிரட்டல் என்பது, மொத்த கழகத்திற்கே விடப்படும் அறைகூவல் என்று என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. எனினும், அச்சட்டத்தை தீவிரமாக எதிர்க்க இயலாத ஒரு திகைப்புக்கு மூத்த கழகத்தினர் சிலர் ஆளாகியிருக்கின்றனர் என்பதை நான் மறைக்க விரும்பவில்லை. அஞ்சா நெஞ்சினர், எதையும் தாங்கும் இதயங்கொண்ட போர்க்குணம் படைத்தோர் என நான் எண்ணியிருந்த சில முக்கியஸ்தர்கள்கூட தங்கள் மௌனத்தின் மூலம் என் நம்பிக்கையைச் சிதைத்துவிட்டனர்.

கண்டன அறிக்கையினால் அனைவருக்கும் விடுதலை கிடைத்துவிடுமா? கேட்கக் கூடும். அந்தோ! எப்போது விடுதலை? எப்போது வெளியே விடுவார்கள்? குழந்தைகுட்டிகளைக்

கொஞ்சிப் பல நாள் ஆகிறதே! குடும்பத்தாரைக் காண வேண்டுமே! என்று அலறித் துடித்துக் கொண்டிருப்பவர்கள் அல்ல! நானோ! அல்லது மற்ற நண்பர்களோ! ஆனால், அப்படிப்பட்ட அறிக்கை, சிறையில் கிடப்பவர்களுக்கு ஒரு மகிழ்ச்சியையும், ஆறுதலையும் அளிக்கவல்லது என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள். பாதுகாப்புச் சட்டம் பாயவேண்டிய அளவுக்கு பகைவர்க்கு நாட்டைக் காட்டிக்கொடுக்க வேண்டு மென்ற ஈ.னப் புத்தி எம்மில் யாருக்கும் கிடையாது! அமைதிப்பாதை தாண்டி அராஜகத்தின் வாயிற் படியில் கால் வைக்க வேண்டுமென்கிற கயமைக் குணம் கடுகளவும் கொண்டவர்கள் அல்ல! சட்டம், ஒழுங்கு பற்றிக் கவலைப்படாமல் தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கும் துன்மார்க்கருமல்ல!

தூய லட்சியங்களுக்காக எதிர்த்து வரும் அடக்கு முறைக் கணைகளை நெஞ்சில் ஏந்திக் கொண்டு தியாகம் புரியும் திடசித்தம் கொண்டவர்கள். எம்மீது வீண்பழி! எமக்கோர் கழகம் உண்டு! அந்தக் கழகத்தின் ஒவ்வொரு அங்குல வளர்ச்சியிலும் எங்கள் குருதி தேவைப்பட்டிருக்கிறது. தந்திருக்கிறோம். எம்மை மட்டுமல்லாமல், எம்மைச் சாக்கிட்டுக் கழகத்தையே நிலை குலையச் செய்ய அரசினர், வெறிகொண்டு காரியமாற்றுகின்றனர். இப்போது, கழகம் இந்த ஆட்சியை எதிர்த்து பெருங்கிளர்ச்சி நடத்தத் தேவையில்லை - ஏனெனில் இப்போதுதான் மொழிப் போர் புயல் ஓய்ந்து - நாட்டில் அமைதி முகிழ்த்திருக்கிறது!

அதனைக் கெடுத்திட முனைவது பொறுப்புள்ள கழகத்திற்கு விவேகமாகாது! ஆனால் வடக்கேயுள்ளவர்கள் தமிழக உணர்ச்சியை அலட்சியப்படுத்திடும் நோக்கத்தோடு, மொழிப் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டிய அவசியத்தையும் மறந்து விட்டனர். மத்திய அமைச்சர்களும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியும் - முதலமைச்சர் அவர்களின் அடக்குமுறைத் திறமையை வியந்து பாராட்டியிருக்கிறார்கள். ஆலயங்களில் எல்லாம் அவருக்காகப் பிரார்த்தனை செய்து பூசை நைவேத்தியங்கள் நடக்கின்றன. பிரார்த்திக்கட்டும், நன்றாகப் பிரார்த்திக்கட்டும்! ஆண்டவனே! எங்கள் அமைச்சருக்குப் பொறுமையைக் கொடு! பொறுப்பாகப் பேசக் கற்றுக் கொடு!

என்று அர்ச்சித்துப் பிரார்த்தித்து ஆராதனைகள் அபிஷேகங்கள் செய்யட்டும். ஒரு வரலாற்றுச் சம்பவத்தை உனக்கு நினைவூட்டுகிறேன் நண்பா! இந்தியாவில் ஆங்கிலக்

கம்பெனியின் கவர்னர் ஜெனரலாக இருந்து, ஆங்கில ஏகாதிபத்யத்தை இந்தியாவில் நிலைநிறுத்தப் பாடுபட்டவர்களில் முக்கியமானவர்களில் ஒருவரான வாரன் ஹேஸ்டிங்ஸ் என்பார் மீது இங்கிலாந்திலுள்ள சிலர் பல்வேறு குற்றங்களைச் சுமத்தியபோது, காமன்ஸ் சபை, ஹேஸ்டிங்சைத் துரோகக் குற்றம் சாட்டி, லார்டு சபைக்கு அனுப்பியது. 1788 முதல் 1795 வரை 7 வருடங்கள் வழக்கு நடந்தது. ஹேஸ்டிங்சுக்கு விரோதமாக எட்மண்ட் பர்க் ஒன்பது நாட்கள் தனது வாதத்தை நிகழ்த்தினார். இடையே ஒருவர், ஹேஸ்டிங்சுக்கு ஆதரவாக ஒன்று சொன்னார். ஹேஸ்டிங்சைப் பாராட்டி இந்தியாவில் வாரணாசியில் அவருக்குக் கோயில் கட்டியிருக்கிறார்கள். இதைக் கேட்டதும் பர்க், சட்டென்று பதில் சொன்னார். இதில் ஒன்றும் ஆச்சரியமில்லை.

இந்தியாவில் நலம் செய்யும் கடவுளுக்கு மட்டும் கோயில் எழுப்புவதில்லை. அம்மை, காலரா போன்ற நோய்களைப் பரப்பும், துஷ்ட தேவதைகட்கும் ஆலயம் அமைக்கிறார்கள். பர்க், கூறிய அந்த வாசகத்தின்படி நமது முதல்வருக்காக கோயில்களில் பூஜையென்ன? கோயிலே கூட கட்டலாம். லார்டுகள் சபையின் பெரும்பான்மை ஹேஸ்டிங்சைக் குற்றமற்றவர் என்று தீர்ப்பளித்தது என்றாலும், அந்த விசாரணைக்குப் பிறகு, இந்தியாவில் ஆங்கிலக் கம்பெனியின் நிர்வாக ஒழுங்கீனங்கள் பெருமளவுக்கு திருத்தப்பட்டன என்று தான் வரலாற்று ஆசிரியர் முடிவுரை கூறுகிறார். அதேபோல், போலிப் பெரும்பான்மை, பக்தவத்சலம் அவர்களைப் பாராட்டி மகிழ்ந்தாலும் நமக்குக் கவலையில்லை.

நாம் அவர்மீது எடுத்து வைக்கிற உண்மையான குற்றச்சாட்டுகள், இன்று தோற்றாலும், எதிர்காலத்தில் ஒரு நல்லாட்சி மலர்வதற்கு வகை செய்யுமல்லவா? அதன் காரணமாகத்தான் நான் என் உள்ளத்தில் ஏற்பட்டுள்ள குமுறலை வெளிப்படுத்த வேண்டியதாயிற்று. அந்தக் குமுறலை குறைக்கும் வகையில், நாடாளுமன்ற மாநிலங்கள் அவையில் அண்ணா பேசும் போது, கழகப் பொருளாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவருமான கருணாநிதி இப்பொழுது இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இந்தியப் பாதுகாப்புச் சட்டம் என்பது நாட்டின் பாதுகாப்புக்காக அல்ல. காங்கிரஸ் கட்சியின் பாதுகாப்புக்காகவே பயன்படுத்தப்படுகிறது என்ற குற்றச்சாட்டுக்கு நீங்கள் என்ன பதில் சொல்லப் போகிறீர்கள்? என்று கேட்டபோது, மத்திய அமைச்சர்கள் எந்த நேர்மையான விடையையும் அளித்திடவில்லை.பாதுகாப்புச் சட்டம் பற்றி அண்ணா அவர்கள், டெல்லியிலே பேசியது என் மனதுக்குப் பெரிதும் ஆறுதலாக அமைந்தது. இதே கருத்தை மாநிலங்களவையில் திரு. பூபேஷ் குப்தாவும் வலியுறுத்திப் பேசினார். அதன்பிறகும் அந்தச் சட்டத்தின் கொடுமை நிற்கவில்லை.

சென்னையில் முரசொலியைக் கவனித்துக் கொண்டிருந்த முரசொலி மாறனும், 25-3-65 அன்று இந்தியப் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டார் என்ற செய்தி என்னை உலுக்கியது. மறுநாள் காலை கூகைகளின் அலறலுக்கிடையே ஒரு குயிலின் ஓசை என்று சொல்லிடத் தக்க வகையிலே, பாளைச் சிறைக் கோட்டத்திற்கே வந்து என்னைப் பார்க்கப் போகிறாராம் அண்ணா என்ற செய்தி எனக்குக் கிடைத்தது. அன்று காலை ஏறத்தாழ பத்து மணி இருக்கும். நான் அடைபட்டுக் கிடந்திட்ட அறையின் கதவு திறந்துகொண்டது.

விடுதலையை முன்னிட்டல்ல! அண்ணாவைச் சந்திக்க, வேறொரு பகுதிக்கு நான் அழைத்துச் செல்லப்படுவதற்காக! அங்கோ? எத்தகைய ஒப்புவமைகளை இணைத்துக்காட்ட முற்படினும், அத்தனைக்கும் பொருத்தமாக மட்டுமல்ல, அவற்றுக்கு அப்பாற்பட்டும் இமயமென நிமிர்ந்து நிற்கும் என் இதய தெய்வமாம் அண்ணா வந்திருந்தார் என்னைக் காண்பதற்காக. அவரைக் கண்டதுமே கசிந்தன கண்கள்! கனத்தது நெஞ்சம் - பாசத்தால், பல நாள் பிரிவிற்குப் பின்னர் தாய்ப் பசுவைப் பார்த்ததும் தாவிக் குதித்தாடும் இளங்கன்றாக என் இதயம் விம்மிற்று இன்பப் பூரிப்பால்.

அதேசமயம், இனம்விளங்கிடாத தவிப்புணர்ச்சி ஒன்றும் எங்கள் உதட்டுக் கதவுகளை இறுக்கி மூடி வேடிக்கை பார்த்தது. சில நொடிகளே அந்தச் சஞ்சலம் தழுவிய தவிப்பு. பின்னர் இருவருமே பிரிவாற்றாமையால் பீறிட்டெழும் கலக்கத்திற்கு விடை கொடுத்து விட்டு உரையாட முற்பட்டோம். இந்தியப் பாதுகாப்புச் சட்டம் 41(5) பிரிவின்படி மாறன் கைதானது பற்றியும், முரசொலி மீது

நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பது பற்றியும் தகவல் தெரிவித்தார் அண்ணா. அடக்கத்தின் பிறப்பிடமான அவர் வேதனைகளை அடக்கிக் கொண்டுதான் என்னோடு உரையாடினார்.

அவருடைய கவலை கப்பிய அந்தக் கனிவான முகம், இன்றும் என் முன்னே காட்சியளித்தவண்ணமே இருக்கிறது. இதில் வேடிக்கை என்னவென்றால், அந்தக் குறுகிய காலத்தில் அண்ணா என்னைப் பற்றி, என் உடல் நலம் பற்றி, எனக்கு வழங்கப்படும் வசதிகள் பற்றியே அக்கறையோடு விசாரித்தார். நானோ வெளி நடப்புகளைப் பற்றி, அப்போது நடைபெறவிருந்த தர்மபுரித் தேர்தலைப் பற்றி, அதற்காகக் கழகம் மேற்கொண்டுள்ள ஏற்பாடுகள் பற்றி ஆர்வத்தோடு வினாக்களை அடுக்கினேன். அந்தக் கவலையெல்லாம் உனக்கு எதற்கு? தோழர்கள் திறமையாக, சுறுசுறுப்பாக, மெத்த ஆர்வத்துடன் தேர்தல் காரியங்களைக் கவனித்துக் கொண்டு வருகிறார்கள். நீ உன் உடல் நலத்தைக் கவனித்துக் கொள். ஏதேனும் உடல் நலக் குறைவு இருப்பதாகத் தோன்றினாலும், உடனே மருத்துவர் தேவை என்பதைத் தெரியப்படுத்து.

அலட்சியமாக இருந்து விடாதே! என்றெல்லாம் ஆறுதல் மொழிகளைத் தாய்மை உணர்வோடு தந்திட்டார். அண்ணா புறப்பட்டார். நானும் அவரிடம் விடைபெற்றேன். அவர் என்னைப் பார்த்தபடியே வெளிப்புற வாயிற்படியை நோக்கி நடந்தார். நான் அவரைப் பார்த்தபடியே என் அறை நோக்கி அடிகளை எடுத்து வைத்தேன். அன்று மாலையே திருநெல்வேலியில் நிகழ்ந்த மாபெரும் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்ட அண்ணா, அந்தக் கூட்டத்தில் பேசும்போது, என் தம்பி கருணாநிதியைப் பார்த்து விட்டுத்தான் வருகிறேன்.

இங்கே பேசியவர்கள் கருணாநிதி தனிமைச் சிறையில் தவிக்கிறார் என்று சொன்னார்கள். தவறாகச் சொல்லிவிட்டார்கள். தம்பி கருணாநிதியைத் தனிமைச் சிறையில் தள்ளுமளவுக்குக் கொடியவரல்ல பக்தவத்சலம். பாம்பும், பூரானும் நெளிகிற பாழ் சிறையில்தான் கருணாநிதியைப் பூட்டி வைத்திருக்கிறார்கள். நெஞ்சத்தில் பூட்டி வைக்க முடியாத நிகழ்ச்சி ஒன்றை நினைவுபடுத்துகிறேன். நான் கருணாநிதியைப் பார்த்தபோது, அவர், அண்ணா நலமா என்று கேட்பார் என்று

கருதினேன். அண்ணி சுகமா? பரிமளமும், இளங்கோவனும், கௌதமனும், பாபுவும் சௌக்கியமா? என்று கேட்பார் என்று நினைத்தேன்.

கோபாலபுரம் போனீர்களா, குடும்பத்தாரைப் பார்த்தீர்களா? இல்லாளும், செல்வங்களும் நலமா என்று கேட்பார் என்று எண்ணினேன். ஆனால் கருணாநிதி இதையெல்லாம் கேட்கவில்லை. என் குடும்பத்தைப் பற்றியோ, தன் குடும்பத்தைப் பற்றியோ எதுவும் விசாரிக்கவில்லை. கருணாநிதி கேட்ட முதல் கேள்வி, என்ன அண்ணா, தர்மபுரி இடைத் தேர்தல் எப்படி இருக்கிறது, கழகம் வெற்றி பெற்று விடுமா? என்பதுதான் என்று கூறிவிட்டு, என் தம்பி, கருணாநிதி தனிமைச் சிறையில் அடைபட்டுக் கிடக்கும் இந்த இடம்தான் இனி எனக்கு யாத்திரை பூமி என்றும் உணர்ச்சி பொங்கிடக் குறிப்பிட்டார்.

(தொடரும்)

28-6-2002

2770. மொழிப்போரில் ஒரு களம் (7)

தன்னை வெல்வான்; தரணியை வெல்வான்!

உடன்பிறப்பே,

இந்தியப் பாதுகாப்புச் சட்டம் 30 (1) பிரிவின்படி, என்னைப் பாளையங்கோட்டை தனிமைச் சிறையில் அடைத்திட்ட அளவிலேயே, அன்றைய ஆட்சியாளர்களின் அடக்குமுறைப் பசி அடங்கிடவில்லை. அதே பாதுகாப்புச் சட்டம் 41 (5) பிரிவின்படி, முரசொலியில் வெளியான சில கட்டுரைகள், படங்கள் ஆகிய வற்றைக் காரணம் காட்டி என்மீது வேறொரு வழக்கினைத் தொடுத்து, அதுபற்றி விசாரிப்பதற்காக என்னை 5-4-1965 அன்று சென்னைக்கு அழைத்து வந்தனர்.

அங்கிருந்து புறப்படும்போது கூட, அங்கிருந்தவர்களிடம் போய் வருகிறேன், என் அறையைக் காலியாகவே வைத்திருங்கள் என்று கூறிவிட்டுத்தான் வந்தேன். 5-ந்தேதி காலையில் புகை வண்டியில் சென்னை எழும்பூர் வந்து இறங்கிய நான், போலீஸ் வேனில் ஏற்றப்பட்டு சென்னை மத்திய சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். மூன்று நாட்கள் கழித்து 8-4-65 அன்று எழும்பூர் பிரதம மாகாண மாஜிஸ்டிரேட் நீதி மன்றத்திற்கு அழைத்துச் சென்றார்கள்.

குற்றப்பத்திரிகை நகல் தரப்பட்டது. பின்னர் சென்னை மத்திய சிறைக்குத் திரும்பினேன். அங்கேயும் தனிமைச் சிறைவாசம் தான். திடீரென ஒரு நாள் நெஞ்சுவலி அதிகமாகி மயக்கமடைந்தேன். டாக்டர் ரத்தினவேலு சுப்பிரமணியம் எனக்குச் சிகிச்சையளித்து மருத்துவமனையிலே தங்கி தொடர்ந்து சிகிச்சை பெற வேண்டு மென்று கூறினார். அதற்கு அனுமதிக்காமல் சிறைச்சாலைக்கே திரும்ப அனுப்பப்பட்டேன்.

பின்னர் சில நாட்களில், அரசு என்ன கருதியதோ திடீரென்று என்னை விடுதலை செய்தது. இந்தச் சிறைவாசம் குறித்து அண்ணா அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்த

காஞ்சி இதழில் தன்னை வெல்வான் தரணியை வெல்வான்! என்ற தலைப்பில் தம்பிக்கு மடல் பகுதியில் அண்ணா அவர்கள் 4-4-1965 அன்று ஒரு நீண்ட கட்டுரை எழுதியிருந்தார். அந்தக் **கட்டுரை வருமாறு:-** தம்பி, இலைகள் உதிர்ந்த நிலையில் சில மரங்கள், இது முழுவதும் வெட்டவெளி அல்ல என்பதைக் காட்டுவதற்காக இருந்து கொண்டிருந்தன - மற்றபடி அந்த இடம் இயல்பாகவே வெப்பத்தை அதிகமாக்கிக் காட்டக்கூடிய இடம். முப்பது அறைகளுக்குமேல் இருக்கும் - அதிலே ஒரு அறையில் தம்பி கருணாநிதி - மற்ற அறைகள் எல்லாம் பூட்டிக் கிடந்தன. மொத்தத்தில் ஒருவிதமான வெறிச்சோடிய நிலை. ஆள் நடமாட்டம் இல்லை என்பது மட்டும் அல்ல! பேச்சுச் சத்தம்கூடக் காதிலே விழ முடியாத இடம்,அத்தனை தனிமை!

அவ்வளவு பாதுகாப்பு! பக்தவத்சலனாரின் அரசு என்ன இலேசுப்பட்டதா! அவர்தானென்ன சாமான்யமானவரா - இந்தியப் பேரரசின் உள்துறை அமைச்சர் நந்தாவினாலேயே பாராட்டப்பட்டவர் - கற்பாறைபோல் நின்றார் என்பதாக!

பாதுகாப்புச் சட்டப்படி சிறைபிடித்து வைத்திருப்பதால், மிக்க பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என்பது முதலமைச்சரின் திட்டம் போலும். அதனால் தான், பக்கத்திலேயே உள்ள இளம் குற்றவாளிகளுக்கான சிறைக் கட்டடத்தில் பல நூறு பேர் இருக்க, கருணாநிதிக்காகவே ஒரு பெரிய தனிச் சிறையை ஒதுக்கி, அதிலேயும், தனியாக வைத்திருக்கிறார்கள்.

சென்னையிலிருந்து நானூறு கல் தொலைவில், பாளையங்கோட்டையில் தனிமைச் சிறையில் போட்டடைத்துக் கொடுமை செய்வதனைத் தமிழகம் கேட்டுத் தத்தளிக்கிறது. விம்மிடுகின்றனர் தாய்மார்கள். இப்படி ஒரு ஆட்சியா என்று கேட்டுத் துடிக்கின்றனர் முதியோர்கள். நம்மை இத்தனை துச்சமாக எண்ணி விட்டனரே என்றெண்ணி வேதனைப்படுகின்றனர் இளைஞர்கள். அறம் அறிந்தவர்கள் பதறுகின்றனர்; சட்டம் தெரிந்தவர்கள் இதற்குப் போதுமான நியாயம் இல்லை என்று எடுத்துரைக்கின்றனர். கழகத் தோழர்கள் கலக்க மடைந்துள்ளனர். முதலமைச்சர் மட்டும் நிற்கிறார் கற்பாறைபோல!

காலை மணி பத்து இருக்கும், நான் அங்கு சென்றபோது, உடன் வந்திருந்த நெல்லை நகராட்சி மன்றத் தலைவர்

மஜீத், வழக்கறிஞர் இரத்தினவேலு பாண்டியன் மற்றும் பலரையும் தனியே இருக்கச் செய்து விட்டு, என்னை மட்டும் சிறை அதிகாரிகள் மூவர், கருணாநிதி இருந்த சிறைக்கூடம் அழைத்துச் சென்றனர். சந்தித்துப் பேசுவதற்காக ஒரு அறை தயாரிக்கப்பட்டிருந்தது. இரு அதிகாரிகள் உடன் இருந்தனர். கருணாநிதி அழைத்து வரப்பட்டபோது, முன்பு பல முறை ஒருவரை ஒருவர் சிறையினில் சந்தித்ததுண்டு என்ற போதிலும், இம்முறை தனியானதோர் தவிப்புணர்ச்சி எழுந்து வாட்டியது. அதனை அடக்கிக்கொள்வது கடினம் என்ற போதிலும், கலக்கம் காட்டுவது நமது உள்ளத்தின் உறுதிபற்றி மற்றவர்களுக்கு அய்யப்பாடு ஏற்படுத்திவிடுமே என்ற அச்சம் துணை செய்தது. தவிப்புணர்ச்சியைத் தள்ளி வைத்துவிட்டு, அரைமணி நேரத்திற்கு மேல் பேசிக் கொண்டிருந்தோம்.

முன்னாள் நள்ளிரவிலேயே நான் நெல்லை போய்ச் சேர்ந்துவிட்டேன். விடிந்ததும் என் காதில் விழுந்த முதல் செய்தி, மாறனைப் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்திருக்கிறார்கள் என்பது. நெல்லைக்குக் கிளம்புவதற்கு முன்பு காஞ்சிபுரத்திலிருந்து தொலைபேசி மூலம் மாறனிடம் பேசினேன் - கைது செய்யப்படக்கூடும் என்ற குறிகள் தென்பட்டிருந்தால்கூட என்னிடம் சொல்லி இருந்திருப்பார்.

ஆகவே, நெல்லையில் நான் கேள்விப்பட்ட செய்தி என்னைத் தூக்கி வாரிப்போட்டது. அடுக்கடுக்காக வந்து கொண்டிருக்கும் இந்தக் கொடுமைகள், இறுதியில் நமது கழகத்தைப் புடம்போட்டெடுத்த பொன்னாக ஆக்கிடும் என்ற பொது உண்மை தெரியும் - மிக நன்றாகத் தெரியும் என்ற போதிலும் - இப்போது நமது கழகத் தோழர்கள் அடக்குமுறைத் தீயிலே தள்ளப்பட்டுக் கொடுமைகளால் தாக்கப்பட்டு வருவதைக் காணும்போது என்னால், பீறிட்டுக் கொண்டு கிளம்பும் வேதனையை அடக்கிக் கொள்ள முடியவில்லை.

உள்ளம் மேலும் உறுதிப்பட வேண்டும் என்று தோன்றுகிறது. கொடுமைகள் இழைக்கப்படும்போது, அநீதி தலைவிரித்தாடும் போது, அக்கிரமம் தன் அகன்ற வாயினைத் திறந்து அகோரக் கூச்சலிடும்போது, எல்லாம் இறுதியில் நன்மைக்கே என்ற தத்துவத்தைத் துணைக்கழைத்துச் சமாதானம் தேடிக் கொள்ள முடியவில்லை. காரணம், நாம், ஒரு அரசியல் கட்சியின்

உறுப்பினர்கள் என்ற முறையிலே மட்டும் இருந்து வருபவர்கள் அல்லர். பாசத்தால் பிணைக்கப்பட்ட ஒரு குடும்பமாகி விட்டிருக்கிறோம். அதனால் நம்மில் சிலருக்கு இழைக்கப்படும் கொடுமை நம் எல்லோருடைய உள்ளத்தையும் வேதனையில் ஆழ்த்திவிடுகிறது. கவலை கப்பிய நிலையில் கருணாநிதியுடன் பல விஷயங்கள் குறித்துப் பேசிக் கொண்டிருந்தேன். கருணாநிதியோ, இடையிடையே, தருமபுரி தேர்தல் பற்றியே பேசிடக் கண்டேன். உடல் நலத்தைக் கவனித்துக் கொள், ஏதேனும் உடல் நலக்குறைவு இருப்பதாகத் தோன்றினாலும் உடனே மருத்துவர் தேவை என்பதைத் தெரியப்படுத்து என்று நான் கூறிக் கொண்டிருப்பேன். இடைமறித்து கருணாநிதி, தருமபுரி தேர்தலில் காங்கிரஸ் கட்சி பணத்தை அள்ளி வீசுவார்களே அண்ணா!

அங்கு நாம் வெற்றி பெற வெகு பாடுபட வேண்டுமே! என்னென்ன ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன? யாரார் தருமபுரி சென்று வந்தனர்? நீங்கள் எப்போது செல்லப் போகிறீர்கள்? என்ற இவை பற்றிக் கூறுவார், எனக்குக் கவலையைப் பிய்த்துக் கொண்டு புன்னகை கிளம்பும். சிறைச்சாலை, சிந்தித்துச் சிந்தித்துத் தமது சிந்தனைச் செல்வத்தைச் செம்மையாக்கிக் கொள்ள வைக்கும் பயிற்சிக்கூடம். இதனை அறிய முடிவதில்லை, அடக்குமுறைச் சுவையால் நினைவு இழந்துவிடும் அரசுகளால்.

நெல்லையில் சிறைப்பட்டிருக்கும் கருணாநிதியின் நினைவு முழுவதும் எதன்மீது என்பதனை அறிந்து கொள்வாரானால், முதலமைச்சர் தமது முறை தவறு என்பதனை உணர்ந்து கொள்வார். மக்களின் நலனுக்காகக் கழகம். கழகத்தின் சார்பிலே செயலாற்றினோம். அந்தச் செயலைத் தவறானது என்று திரித்துக்கூறி சர்க்கார் நம்மைக் கொடுமைப்படுத்துகிறது. நமக்கு இழைக்கப்படும் கொடுமையினைக் கண்டும் கேட்டும் இலட்சக்கணக்கானவர்கள் இதயம் துடிக்கிறது. அந்தத் துடிப்பிலிருந்து கிளம்பும் மிகப் பெரிய வலிவு எத்தனை பெரிய ஆணவ அரசினையும் வீழ்த்தவல்லது. அந்த வலுவினை நாடு பெற நாம் நமது வலிவிலே ஒரு பகுதியைச் சிறை வாழ்க்கை காரணமாக இழப்பது தேவை, முறை, அறம் என்ற எண்ணம், சிறையில் உள்ளவர்களுக்குச் செந்தேன். அந்தச் சுவையில் திளைத்திருக்கக் கண்டேன், உடல் இளைத்தாலும் உள்ளம் களைத்திடாது என்ற நிலையில் உள்ள கருணாநிதியிடம்! கருணாநிதியை ஏன் சிறைபிடித்தார்கள்? அவர் வெளியே இருந்தால் அமைதியைக்

கெடுத்து விடுவார். அதனால்! இப்படி அஞ்சி அஞ்சிச் சாவார் பற்றிப் பாரதியார் அழகாகப் பாடுகிறார். அஞ்சி அஞ்சிச் சாவார் - இவர் அஞ்சாத பொருளில்லை அவனியிலே!

கழகத்தின் வளர்ச்சி கண்டு காங்கிரஸ் அரசு கதிகலங்கிப் போயுள்ளதை எடுத்துக்காட்டி, கழகத் தோழர்களுக்கு மேலும் எழுச்சியைத் தரவல்ல நிகழ்ச்சி, கருணாநிதியைச் சிறைப்படுத்தி இருப்பது என்பது புரியும் போது மகிழ்ச்சி கொள்ளக்கூட முடிகிறது. கழக வளர்ச்சியை அரசினர் கண்டு கலங்கிடும் வண்ணம் பேச்சாலும், எழுத்தாலும் பணியாற்றியதற்காக கழகம் என்ன விதத்தில் தனது நன்றியைக் கருணாநிதிக்குத் தெரிவித்துக் கொள்வது?

சிறைக்கோட்டம் தள்ளப்படும் இலட்சியவாதிகளோ, உறுதி பன்மடங்கு கொண்டவர்களாவது மட்டுமல்ல! தன்னைப் பற்றிய எண்ணம், தனது நலனைப் பற்றிய நினைப்பு, தனது குடும்பம் பற்றிய எண்ணம், இவைகளைக் கூட மறந்து விடவும், தான் தனக்காக அல்ல, மற்றவர்களுக்காகவே என்ற நெறியினை உணர்ந்து மகிழ்ந்திடவும், தன்னைப் பற்றிய எண்ணம் எழுப்பி விடும் ஆசை, அச்சம், கவலை, கலக்கம், பிரிவாற்றாமை போன்ற உணர்ச்சிகளை வென்றிடவுமான ஒரு துறவு நிலையைப் பெற்றளிக்கிறது, இது பற்றியே ஆன்றோர், சிறைச்சாலையை அறச்சாலை என்றனர். பாளையங்கோட்டைச் சிறை வாயிலில், கண்டேன், இந்தப் பேருண்மையை உணர்த்தும் எழுத்தாரத்தை.

அங்குப் பொறிக்கப்பட்டிருப்பது என்ன? தன்னை வெல்வான் தரணியை வெல்வான்! நண்பா! இவ்வாறு காஞ்சி இதழில் அண்ணா எழுதிய கட்டுரையும், நெல்லையில் அவர் ஆற்றிய உரையும் 62 நாட்கள் தனிமைக் கொட்டடியில் தள்ளிப் பூட்டப்பட்டுக் கிடந்த எனக்கு, என் விழுப்புண்ணுக்கு மருந்தாக அமைந்தது. எனினும், தமிழ் இனத்தைக் கப்பியுள்ள நோய் முழுமையாகத் தீர்வதற்கு இன்னும் எத்தனையோ தியாகங்களுக்கும், தன்னலமற்ற பொதுவாழ்வுக்கும், எதையும் தாங்கும் மன உறுதிக்கும் நம்மைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டியுள்ளது என்பதை சுட்டிக்காட்டவே இந்த நீண்ட மடல் எழுதினேன்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

29-6-2002

2771. வளமும் வலிமையும் வழங்கும் வற்றாத ஜீவநதி!

உடன்பிறப்பே,

உள்ளாட்சி மன்றங்களில், குறிப்பாக மாநகராட்சி, நகராட்சிகளில், ஏன் - பேரூராட்சிகளில்கூட இன்றையதினம் மாநிலத்தை ஆளுகிற கட்சியாக உள்ள அ.தி.மு.க.வினர் அந்தந்த மன்றங்களில் எண்ணிக்கையில் பெரும்பான்மையினராக இருந்தாலும் அல்லது சிறுபான்மையினராக இருந்தாலும் கலவரங்களுக்குக் கட்டியம் கூறிக் கொண்டு அடிதடியிலும், அடாவடித்தனத்திலும், அராஜகச் சேட்டைகளிலும் இறங்கி அந்த மன்றங்களின் கூட்டங்களை நடத்தவொட்டாமல் செய்து, அவர்கள் யாரைக் கைது செய்ய வேண்டுமென்று கண் ஜாடையால் கட்டளையிடுகிறார்களோ; அவர்களைக் காவல்துறையினர் கைது செய்து வழக்கு தொடர்ந்துள்ள ஜனநாயக விரோதப் பேய்க் கூத்துகள் அண்மைக்காலமாகப் பெருகி வருகின்றன.

அம்பத்தூர் நகராட்சி எதிர்க்கட்சித் தலைவரும், நகர் மன்றத் துணைத் தலைவருமான ஆண்ட்ரூஸ் (தி.மு.க.) கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும் அங்கே தி.மு.க. நகர்மன்ற கொறடா பாலகுமாரன், தி.மு.க. கவுன்சிலர் சேகர் ஆகியோர் காவல் துறையினரால் தேடப்பட்டதின்பேரில், நீதி மன்றத்திலே சரண் அடைந்துள்ளனர். கோவை மாநகராட்சியில் உறுப்பினர்களிடையே மோதல் - 34 கவுன்சிலர்கள் வெளியேற்றம் - காவல் துறையினரால் இழுத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

சென்னை மேயரை பதவி நீக்கம் செய்யும் சட்டம் இயற்றியமைக்காக ஜெயலலிதாவைப் பாராட்டும் அ.தி.மு.க. தீர்மானத்துக்கு எதிர்ப்பு - ஆலந்தூர் நகரசபைக் கூட்டத்தில் ரகளை - மேஜை நாற்காலிகள் உடைப்பு - மன்ற மண்டபமே

போர்க்களமாகக் காட்சி யளித்தது - நகராட்சித் தலைவர் ஆலந்தூர் பாரதி, நூலிழையில் தப்பினார். காஞ்சிபுரம் நகராட்சியிலும் நகராட்சி தி.மு.க. தலைவர் சன் பிராண்ட் ஆறுமுகம் அவர்களை அ.தி.மு.க.வினர் தாக்கப் பாய்ச்சல் - நாற்காலியைத் தூக்கி வீசினர். மதுரை மாநகராட்சிக் கூட்டத்திலும் தகராறு - கோப்புகள் வீச்சு - அமளி - மேஜை மீது ஏறி நின்று உறுப்பினர்கள் கூச்சல். திண்டிவனம், தூத்துக்குடி, துறையூர் போன்ற நகராட்சிகளிலும் அ.தி.மு.க. உறுப்பினர்கள் கலவரம் செய்துள்ளனர். படமெடுக்க வந்த புகைப்படக்காரர்கள், செய்தியாளர்கள் விரட்டப்பட்டனர்.

சென்னை மாநகராட்சியிலும்கூட கழக உறுப்பினர்கள் கறுப்புச் சட்டை அணிந்து வந்தனர். மேயராக ஸ்டாலின் பொறுப்பு வகித்தபோதே, துணை மேயராக இருந்த ஒருவர் தனது வாகனத்தில் மேயர் கொடியைப் பயன்படுத்தி, அதை நியாயப்படுத்தி வாதிட்டிருக்கிறார். அவர் வழியைப் பின்பற்றி மாநகராட்சிக் கழக உறுப்பினர்கள் தமது வாகனங்களில் மாநகராட்சிக் கொடியைப் பயன்படுத்தியது மட்டும் குற்றம் என்று ஒருவர் வாதிட்டு, அதனால் கூச்சலும், குழப்பமும் ஏற்பட்டிருக்கிறது.

உள்ளாட்சி மன்றங்களின் விவகாரங்களுக்கு அப்பாலும், தி.மு.கழகத்தினர் மீதும், எதிர்க்கட்சிகள் மீதும் ஆளுங்கட்சியினரின் சுட்டு விரல் அசைவுக்குக் கட்டுப்படுவோம் என்பது போலப் பல வழக்குகள் காவல் துறையினரால் தொடரப்பட்டுள்ளன. சிலர் கைது செய்யப்பட்டு, பின்னர் பொறுப்பில் (ஜாமீன்) வெளியே வந்து வழக்கு நடத்திக் கொண்டிருக்கின்றனர். அவர்களிலும்கூட சைதாப்பேட்டைத் தொகுதியில் கழகவேட்பாளராகப் போட்டியிட்ட குற்றத்திற்காக சுப்பிரமணியம் அவர்கள் மீதும், அவருடன் மேலும் எட்டு பேர் மீதும் காவலர் தொடர்ந்துள்ள வழக்கில் இன்னமும் பொறுப்பில் கூட விடுதலையாக முடியாமல் காவல்துறையினர் கடுமையாக இருக்கின்றனர்.

இவற்றையெல்லாம் கண்டு கழக உடன்பிறப்புகள் கலங்கிடுவர் - கழக அமைப்புகளின் கட்டுக்கோப்பு குலைந்து விடும் என்று ஆட்சியாளர்கள் மனப்பால் குடிப்பார்களேயானால், அவர்கள் இந்தக் கழகம் எதிர்கொண்ட அடக்குமுறைகளையும் - அவற்றை வென்று காட்ட ஏற்றுக் கொண்ட தியாகங்களையும் - எடுத்தியம்பும் எழுச்சிமிகு வரலாறுகளைப் படிக்காத

வர்களேயாவர். அல்லது படித்தும் அந்த வரலாறுகள் வழங்கும் படிப்பினையை அலட்சியப்படுத்தி விட்டு அழிவுப் பாதையைத் தேர்ந்தெடுப்போரேயாவர்.

இவ்வளவு நடக்கிறது நாட்டில்! நினைத்ததை முடித்துவிட்டேன் பார் என்று கனைத்துக் காட்டி, காட்டு தர்பாரைத் தொடர்ந்து கொண்டிருப்பதற்கு அடையாளமாக எதிர்க்கட்சியினரையும், உரிமைக்குரல் எழுப்பும் சகல பிரிவினரையும் - அடக்கிட எடுத்துள்ள ஆயுதத்தை மேலும் வலிமையோடு தி.மு. கழகத்தின்மீது பாய விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

அதற்கெல்லாம் அஞ்சி நடுங்குவதில்லை! நாங்கள் அண்ணாவின் தம்பிகள் என்று ஆர்ப்பரித்து அணிவகுத்தபடிதான் இருக்கிறது கழகத்தின் சேனை! இதோ, அதன் அடையாளமாக! கடந்த இருபது நாட்களாக கழக உறுப்பினராகப் பதிவு செய்து கொண்டவர்களின் உறுப்பினர் சீட்டுகளை எல்லா மாவட்டங்களுக்கும் சென்று உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டுள்ள கிளைக் கழகங்களில் வழங்குமாறு தலைமைக் கழகப் பிரதிநிதிகள் 40க்கு மேற்பட்டோர் நமது பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்களால் அனுப்பி வைக்கப்பட்டார்கள்.

உறுப்பினர் சீட்டுகளை ஆங்காங்கு கிளைக்கழகச் செயலாளர்களிடம் வழங்கி விட்டு, எங்கேனும் பிரச்சினை இருந்திடுமாயின், தலைமைக் கழக ஆணையின்படி செயல் பட்டு தலைமைக் கழகப் பிரதிநிதிகள் திரும்பியுள்ளனர்.

பிரதிநிதிகள் அனைவரும் அருமையாகச் செயல் பட்டுள்ளனர். வழங்கப்பட்டுள்ள அந்த உறுப்பினர் சீட்டுகள் எங்கேனும் உரியவர்களுக்கு கிடைக்காமற் போயிருப்பின் அதனை ஆய்வு செய்து, ஆவன செய்திட, கழக மேலமைப்புகளான ஒன்றிய, நகர, பேரூர்க் கழகங்கள் உடனடியாக முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

ஏறத்தாழ 70 லட்சம் உறுப்பினர்கள் - அவர்களுக்கான உறுப்பினர் அட்டைகள், பெரும்பாலும் வழங்கப்பட்டிருக்கின்றன. வழங்கி விட்டு வந்துள்ள தலைமைக் கழகப் பிரதிநிதிகள் அனைவரையும் பாராட்டுகிறேன். வாழ்த்துகிறேன். அவர்கள் அனைவருமே ஆங்காங்கு கண்டு வந்த உற்சாகத்

தையும், எழுச்சியையும் தலைமைக் கழகத்திற்கு எழுதித் தந்துள்ளனர்.

எடுத்துக்காட்டுக்கு ஒன்றே ஒன்று :- திண்டுக்கல் மாவட்டத்தில் உறுப்பினர் உரிமைச் சீட்டு வழங்கச் சென்றிருந்த தலைமைக் கழகப் பிரதிநிதியும், நீண்ட கால கழக முன்னோடிகளில் ஒருவருமான தம்பி அறந்தாங்கி இராசன் எழுதியுள்ள குறிப்பினை மட்டும் படித்துப்பார்!

(1) கழகத்தின் அறிவிப்புகளை தாங்கிய பத்திரிகைச் செய்திகள் மற்றும் வாய்மொழித் தகவல்களை அறிந்து கிளைச் செயலர், பிரதிநிதி, அமைப்பாளர், உறுப்பினராக சேர்ந்தவர்கள் என நகர, ஒன்றியக் கூட்டங்களில், மண்டபங்கள் நிறைந்து வழியும் அளவில், நூற்றுக்கணக்கில், சில இடங்களில் ஆயிரம் பேர் எனும் அளவில் வருகை தந்து காலை 10 மணி தொடங்கி இரவு 12.30 மணி வரை காத்திருந்து உறுப்பினர் சீட்டுப் பெற்றுச் சென்றது தி.மு.க., எவராலும் அழிக்க முடியாத மலைக்கோட்டை என்பதை மாற்றாரும் அறியச் செய்தது.

(2) கண் அறுவை சிகிச்சை செய்த நிலையில், கால் ஒடிந்து கம்பூன்றிய நிலையில், ஊனமுற்ற நிலையில், உடல் நிலை பாதிக்கப்பட்டு தள்ளாடிய நிலையில் நேரில் வந்து உறுப்பினர் சீட்டுகளைப் பெற்றுச் சென்ற நெஞ்சுருகும் காட்சி.

(3) வாய் பேச முடியாத இளைஞர் ஒருவர், தான் அமைத்த கிளையில் உறுப்பினர் உரிமைச் சீட்டை, பேச முடியாத நிலையில் சைகை செய்து, கையொப்பம் சரிபார்த்து உரிமைச் சீட்டை வாங்கியபோது மகிழ்ச்சியுடன் ஆனந்தக் கண்ணீர் விட எங்கள் மனமும் கனத்துப் போனது.

(4) திண்டுக்கல் கிழக்கு மாவட்டத்தில், வத்தலக்குண்டு ஒன்றியத்தில் இரா. மீனாட்சி என்கிற ஒன்றிய மகளிர் அணி அமைப்பாளர் மகளிரை மட்டுமே உறுப்பினராக்கி 9 கிளைகளைப் பதிவு செய்து

உறுப்பினர் அட்டை பெற்றுச் சென்றார். அதே போல் லட்சுமி என்பவரும் பெற்றுச் சென்றார்.

(5) திண்டுக்கல் மேற்கு மாவட்டத்தில், வேடசந்தூர் ஒன்றியத்தில் ஒன்றிய பெருந்தலைவராகவும், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளராகவும் உள்ள கவிதா பார்த்திபன், மாவட்ட துணைச் செயலாளர் இந்திராரவிச்சந்திரன் இருவரும் பாராட்டத்தக்க வகையில் செயல்பட்டு வருகின்றனர்.

உடன்பிறப்பே,

ஒரு பானைச் சோறுக்கு ஒரு சோறு பதம் என்பது போலத்தான் திண்டுக்கல் பகுதியில் தீட்டிக் காட்டப்பட்ட சித்திரத்தைக் குறிப்பிட்டேன். எந்த நிலையிலும் - எந்தச் சூழலிலும் - எத்தகைய கெடுபிடியிலும் - அச்சுறுத்தல்கள், மிரட்டல்கள் அடுக்கடுக்காய் வந்திடினும், அவற்றையும் சேர்த்து அடித்துக் கொண்டு, அயராமல் பயணம் நடத்தும் - வற்றாத ஜீவநதி தான் தி.மு. கழகம்! நதியின் பிரவாகம், மேடு பள்ளங்களைச் சமப்படுத்தும் - மேழிச் செல்வத்தை மேன்மையுறச் செய்யும் - என்பது போல, இந்த ஜீவ நதியும், இனம், மொழி, நாடு இவற்றை வளப்படுத்த, வலுப்படுத்த தன் பயணத்தை ஓய்வின்றி, உளைச்சலின்றி, நடத்திக் கொண்டே இருக்கும்.

அன்புள்ள,

மு.க.

30-6-2002

2772. முன்றெழுத்திலே மூச்சிருக்கும்!

உடன்பிறப்பே,

எழுத்துக்கள் முன்று
எண்ணங்கள் மும்முன்றென
கவியரங்கம் அமைத்திட்டார் - அதில்
கழுத்துக்கு மேலே இருக்கும்
தலையைப் போல் - என்னைத்
தலைமை ஏற்கச் செய்திட்டார்.
தடந்தோள், கைகால், முண்டம்,
கண், காது, முக்கு, வாய், வயிறு,
இருதயம், சுவாசப்பை எதுவுமின்றித்
தலை மட்டும் தனியாக இயங்கிடுமோ?
இயங்காது என்பதாலே
இந்த அங்கங்கள் எதுவும்
இறுமாப்புக் கொள்வதில்லை.
இவையெல்லாம்
என் சாண் உடம்புக்குச் சிரசே பிரதானமென்று
பண்பாகப் பணியாற்றும் பாங்கு காண்போம்.
என் அங்கங்களே!
அன்புத் தங்கங்களே!
என் உயிரினும் மேலான
அன்பு உடன்பிறப்புகளே!
உண்மைதானே?
நான் உரைப்பது!
பிரதான உறுப்பு நான் தான் என்று
அவதாரம் எடுத்த ஆண்டவன் போல்
தலை, ஒரு நாளும் ஆணவம் கொண்டதில்லை இந்தத்

தலை ஆணவம் கொண்டதில்லை.
நிலை தவறி அசைந்தது மில்லை.
அதனாலே;
தலையைத் தாங்கி
கழுத்து முதல் கால் வரையில்
கடமையாற்றிக் கண்ணியமுடன்
கட்டுப்பாடு காத்திடும் காட்சியினைக்
கழகமாய்க் கண்டு, மகிழ்ந்து,
தலைதாழ்ந்து வணக்கம் செலுத்துகிறேன்.
தலையில் பாயும் ரத்தம் தான்
காலுக்கும் பாய்கிறது - ஆனாலும் பிரமனின்
தலையிற் பிறந்தோர் உயர்ந்த குலத்தோர் என்றும்,
தோளிற் பிறந்தோர் சத்திரிய வருண மென்றும்,
தொடையிற் பிறந்தோர் வைசிய வருண மென்றும்,
காலில் தோன்றிய நாம் கடைநிலை சாதி யென்றும்,
வகுத்தனர் வருணாசிரம தருமம் என்றால்;
பிரமனின் ரத்த ஓட்டத்தில் மட்டும்
ஏன் இத்தனை கோளாறு?
பிரமன் என்ன ஆணா? பெண்ணா?
பெண் என்றே வைத்துக் கொண்டாலும்
உடல் முழுவதும் கருப்பையைத் தைத்துக் கொண்டா
பிள்ளை பெற்றாள்?
புளுகித் தொலைப்பதற்கும் ஓர் அளவு வேண்டும்.
பொல்லாத புராணங்கள் அபத்தமென அறிய வேண்டும்.
இதை யெல்லாம் சொன்னால்
இறைவன் கோபிப்பான்
உனக்கு அற்ப ஆயுள்
எனச் சாபம் இடுவான்!
இதை விட வேகமாக
இந்த விஷயத்தைப் புட்டு வைத்த
அய்யா பெரியாருக்கு
அகவை தொண்ணூற்றி ஐந்து!

கண் மூடி வழக்கமெல்லாம்
மண் மூடிப்போக என
கல்லறைக்குப் போகும் வரை
கர்ச்சித்தவர்தான் பெரியார்.
கட்டித் தங்கமாய் பகுத்தறிவுக் கருத்தைத்
தந்தார் அவர்! அதைப்
பெட்டியில் வைத்துப் பூட்டாமல்
அணிமணி செய்து,
தமிழர்க்குச் சூட்டியவர் அண்ணா!
கசப்பு மருந்து
உயிர் காக்கும் மருந்து என
சுயமரியாதைச்
சூரணம் தயாரித்தவர் பெரியார் - அதைக்
கனியிடை கலந்து, தமிழ்த் தேனில் தோய்த்துப்
பிணி அகலத் தந்தவர் அண்ணா!
நுதல் அகன்ற அறிவரசன் அண்ணா; கழகத்தின்
முதல் மாநில மாநாட்டைச் சென்னையிலே
ஆண்டு ஐம்பத்தி ரெண்டில்
கூட்டிய வேளையிலே - மாநாட்டுக்கு
அவரைத் தலைவராக வழி மொழிந்து
நான் பேசிய போது தான்;
முன்றெழுத்துக்குள்ள மகிமையே
முகில் கிழித்து வெளிக் கிளம்பும்
முழு நிலவாக ஒளி விட்டதம்மா!
மூன்று கடல் சூழ்ந்த தமிழ் நிலத்தில்
மும்முரசு கொட்டி மூன்று கொடிகட்டி
முக்கனியாம் முத்தமிழை வளர்த்த
மூவேந்தர் பரம்பரையில் வந்தவர்கள் நாம் - நமது
மொழிக்குப் பெயர் தமிழ் - முன்றெழுத்து!
தமிழர்க்குரிய தனிப் பண்பு - முன்றெழுத்து!
பண்பில் எழுந்திடும் அன்பு முன்றெழுத்து!
அன்பில் விளையும் காதல் முன்றெழுத்து!

காதலர் விரும்பும் வீரம் முன்றெழுத்து!
வீரர்கள் விழுப்புண் ஏந்தும் களம் முன்றெழுத்து!
களத்தில் காணும் வெற்றி முன்றெழுத்து!
வெற்றிக்கு விதையான அறிவு முன்றெழுத்து! அந்த
அறிவுப் பெட்டகமாய் வந்துதித்த
"அண்ணா முன்றெழுத்து
அந்த அண்ணன் கண்ட
கழகமும் தி.மு.க. - முன்றெழுத்து!"
அன்று நான் இவ்வாறு
பேசியதைத் தொடர்ந்து தான்;
முன்றெழுத்திலே என் முச்சிருக்கும்
பாடலே வந்தது!

அன்புள்ள,

மு.க.

1-7-2002

2773. அந்தியை எதிர்த்து நாம் நடத்தும் அறப்போர்!

உடன்பிறப்பே,

கழகம் என்பது தமிழரின் காவல் அரணாகும்.
காலைக் கதிரை வாழ்த்துகின்ற சேவல் குரலாகும்.

படைபலவரினும் பயந்துநடுங்கா இமயமலை
யாகும்.
பாட்டாளித் தோழரின் பாதம் கழுவும் கடல்
அலையாகும்.

பசித்திடும் ஏழை மக்கள் ஏக்கம் களைந்து
புசித்து மகிழ்ந்திடப் பொங்கும் உலையாகும்.

உலகெங்கும் வாழ்கின்ற தமிழுணர்வின் கோட்டை.
உடன்பிறப்புகள் வீரநடைபோடும் பகுத்தறிவுப்
பாட்டை.
பெண்ணின் பெருமைக்கும் உரிமைக்கும்
கலங்கரை விளக்கம்.
மண்ணின் முன்னேற்றம் காண மாணவர்
இளைஞர் எழுப்பும் முழக்கம்.

இது, ஏதோ அலை, மலை, உலை, கோட்டை, பாட்டை, விளக்கம், முழக்கம் என்ற சொற்சித்திரம் சமைக்கும் கவிதை வரிகள் என்பதற்காக அல்ல, நமது உயிரான இயக்கமாம் திராவிட முன்னேற்றக் கழகம் எந்த எந்தத் திசைகளில் தனது கவனத்தைச் செலுத்திப் பாடுபடுகிறது, பணியாற்றுகிறது என்பதைச் சுருக்க மாக எடுத்துக் காட்டுவதற்காக எழுதப்பட்டுள்ளதாகும்.

நேற்றைய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளபடி, தலைமைக் கழகத்தினால் மாவட்டந்தோறும் அனுப்பி வைக்கப் பெற்ற பிரதிநிதிகள் ஏறத்தாழ எழுபது லட்சம் உறுப்பினர்களுக்கான

அதிகாரபூர்வமான அட்டைகளை தலைமையின் வழிகாட்டு தலுக்கேற்ப வழங்கி விட்டு வந்திருக்கிறார்கள்.

உறுப்பினர் சீட்டுக்களை பெற்றுக்கொள்ள வந்தோரின் உற்சாகப் பெருவெள்ளம் கண்டு, உவகை பூத்திடும் முகத்தினராய் தலைமைக்கழகப் பிரதிநிதிகள் எம்மிடம் விபரம் கூறியதைக் கேட்கக் கேட்க அது இனிய கீதமாகவே இருந்தது. ஒன்றிரண்டு இடங்களில் மட்டும் அபஸ்வரம் தலை நீட்டியதும் சுட்டிக் காட்டப்பட்டு, தலைமை ஒழுங்கு நடவடிக்கை அறிவித்திருப்பதுடன், ஆங்காங்கு முறைப்படி அளிக்கப்பட்டுள்ள உறுப்பினர் அட்டைகள், எல்லா உறுப்பினர்களுக்கும் சேர்ந்திட வேண்டுமென்பதற்காக வழிமுறைகள் வகுக்கப்பெற்று, அதற்கான அறிக்கையும் பொதுச் செயலாளர் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளது.

மிக விரைவில் அப்பணியினை முடித்து, கிளைக் கழகங்கள், நிர்வாகிகள் தேர்தலுக்கு அந்த அமைப்புகள் தயார் நிலை பெற வேண்டுமென வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இதற்கிடையே ஜூலை 1, 2, 3 ஆகிய நாட்களில் தமிழக முழுவதும் பரவலாக நமது கழகக் காவலர்கள் கலந்து கொள்ளும் பொதுக் கூட்டங்களை நடத்துகிற பொறுப்பை கழக அமைப்புகள் ஏற்றுக்கொண்டு சிறப்பாகச் செயல்படுகின்றன என்ற செய்தி, செவிக்கும், சிந்தைக்கும் செந்தேனாகிறது.

எடுத்தேன், கவிழ்த்தேன் என்ற போக்கில் எதேச்சாதிகார ஆட்சி நடைபெறுகிறது. ஏழைகள் துடிக்கின்றார். எத்தர்கள், ஆட்சிக்கோல் தம் பக்க மென்ற தைரியத்தில் எதையும் செய்திடும் துணிவு பெற்றுச் செயல்படுகின்றனர். மலையத்தனை பிரச்சினைகள் மக்களை வாட்டிப் பிழிகின்றன. அவற்றைக் காணாத கண்களும், கேட்காத காதுகளும் படைத்தோர் நாங்கள் என்று ஆட்சியாளர்கள் ஆணவ வடிவங்களாகத் தோற்றமளிக்கின்றனர். வேலியே பயிரை மேய்கிற நிலை, காவல்துறையில்! எங்கே போவது? எவரிடம் போவது? யாரிடம் நியாயம் கேட்பது? எந்த மாற்றுக் கட்சி ஆட்சியிலு மில்லாத மகா பாதகம், அரங்கேறியிருக்கிறது!

இவற்றையெல்லாம் விளக்கிட இந்த மூன்று நாட்கள் போதாதுதான்! மூலைக்கு மூலை - தெருவுக்குத் தெரு - ஊருக்கு ஊர் - ஒவ்வொரு நாளும் மக்களைக் கூட்டி, அவர்களின் விழிகளை மறைத்துள்ள மாயையை அகற்ற முற்பட வேண்டும். நமது முன்னணி தளகர்த்தர்கள்! முன்னணி பேச்சாளர்கள்!

நேற்று ஓர் அறிக்கை, நான் விடுத்துள்ளேன். நிறைவேற்றும் துடிப்பும் ஆர்வமும் உன் போன்ற உடன் பிறப்புகளுக்கு உண்டு என்ற நம்பிக்கையில்!

ஆம்! ஊருக்கு ஊர் கண்ணகியின் சிலை! பெண்ணின் பெருமையை - நீதியை நிலை நாட்டிய நேர்மையை - உலகிற்கே உணர்த்திய அந்தப் பெருமாட்டியின் சிலையை - நமது அண்ணன் விருப்பம் போல் அமைத்திட்ட சிலையை - தூக்கி எறிந்து விட்டார்கள்!

உடன்பிறப்பே! அது உன் தாயின் சிலையாக இருந்தால் பொறுமையாக இருப்பாயா? உன் சகோதரியின் சிலையாக இருந்தால், இப்படித் தூக்கி வீசியதைச் சகித்துக் கொள்வாயா?

தாயினும் மேலாக - தமக்கை, தங்கையினும் மேலாக தமிழ்க் குலத்தின் பண்பாட்டுச் சின்னமாக - பெண்மையின் வெற்றிக்குரிய வீரச் சின்னமாக - அமைந்திருந்ததும், அண்ணாவின் ஆட்சியில் அமைக்கப்பட்டதுமான அந்த மங்கையர் குல மாணிக்கத்தின் சிலை மாசுபடுத்தப்பட்டதை, நமது மனம் இத்தனை நாள் எப்படித்தான் தாங்கிக் கொண்டதோ? என்று பிற நாட்டுத் தமிழ் இனத்தார் கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள்.

அவர்களிடம் மானசீகமாக மன்னிப்புக் கேட்டுக் கொண்டுதான் ஊருக்கு ஊர் அந்த உத்தமியின் சிலையை நிறுவுங்கள் என வேண்டுகோள் விட்டிருக்கிறேன்.

இனி நமது கழக நிகழ்ச்சிகள், கூட்டங்கள் அனைத்திலும் கண்ணகி கட் அவுட் இடம் பெற்றாக வேண்டும்.

பெண்ணின் பெருமைக்கு எடுத்துக்காட்டான கண்ணகிக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதியை எதிர்த்து நாம் நடத்தும் அறப்போர் இதுவெனவும் - இதுவே நமது அமைதி வழி அணுகுமுறை எனவும் - அவனிக்கு எடுத்துக் காட்டுவோம்.

கழகம்,

"உலகெங்கும் வாழ்கின்ற தமிழுணர்வின்
கோட்டை
உடன்பிறப்புகள் வீரநடை போடும் பகுத்தறிவுப்
பாட்டை"

என்பதை அனைவர்க்கும், உணர்த்துவோம்!

அன்புள்ள,

மு.க.

2-7-2002

2774. போர் முனைக்குப் புறப்பட்டோம்! மும்முனைப் போராட்டம்; கல்லக்குடி களம்! (1) -நெஞ்சுக்கு நீதி முதல் பாகத்தில் எழுதியது!

உடன்பிறப்பே,

மொழிப்போரில் ஒரு களம் என்ற தலைப்பில் இந்தி ஆதிக்க எதிர்ப்புப் போராட்டம் 1965-ல் நடைபெற்றதையும், கலைஞர் அவர்கள் தேசப் பாதுகாப்புச் சட்டப்படி கைது செய்யப்பட்டு பாளையங்கோட்டை தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டதையும், அவை குறித்து அப்போது சிறையில் அவர் எழுதியதையும் ஏழு நாட்கள் தொடர்ந்து முரசொலியில் வெளியிட்டிருந்தோம். இளைய தலை முறையினர்க்குப் பயன்படும் வண்ணம் இத்தகைய இயக்க வரலாற்று நிகழ்வுகளை வெளியிட வேண்டுமெனப் பல உடன்பிறப்புகள் கடிதங்கள் எழுதி யுள்ளதையேற்று - தி.மு.கழகம் 1953 ஜூலையில் நடத்திய மும்முனைப் போராட்டம் குறித்தும், அவற்றில் தலைவர் கலைஞர் தலைமையேற்ற கல்லக்குடி போராட்டம் குறித்தும் அவரே எழுதியதை நெஞ்சுக்கு நீதியிலிருந்து வெளியிடுகிறோம்.

- (ஆசிரியர் - முரசொலி) -

ராஜாஜியினுடைய ஆட்சிக் காலத்தில் திராவிட முன்னேற்றக் கழகம் மிகப் பெரும் போராட்டங்களில் ஈடுபட நேர்ந்தது. முன்னேற்றக் கழகத்தை மூட்டைப் பூச்சியை நசுக்குவது போல் நசுக்கிவிடுவேன் என்று அன்றைய முதலமைச்சர் ராஜாஜி முழக்கமிட்டார். அவர் கொண்டு வந்த குலக் கல்வித் திட்டத்திற்கு தமிழ்நாட்டில் எதிர்ப்பு ஏற்பட்டது. ராஜாஜியின் கல்வித் திட்டத்தை எதிர்த்து ஒரு முனையிலும், பண்டித நேரு தமிழர் தலைவர்களை நான்சென்ஸ் என்று கூறிவிட்டார் என்பதைக் கண்டித்து இரண்டாவது முனையிலும், டால்மியாபுரம் புகைவண்டி

நிலையத்தின் பெயரை மாற்றிக் கல்லக்குடி எனத் தமிழ்ப் பெயரிட வேண்டும் என்று மூன்றாவது முனையிலும் திராவிட முன்னேற்றக் கழகம் போர்க்களங்களை அமைத்தது.

அந்த அறப்போரில் கல்லக்குடி களத்திற்கு நான் தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டேன். 1953, ஜூலை 14ஆம் நாள் குலக் கல்வித் திட்டத்தை எதிர்க்கும் போராட்டம். ஜூலை 15ஆம் நாள் கல்லக்குடிப் போராட்டம் என்று நாட்கள் குறிப்பிடப்பட்டன. கல்லக்குடிப் போராட்டம் என் பொது வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு சம்பவம் ஆகும்.

ஜூன் 15ஆம் நாள் காலையில் சென்னையிலிருந்து திருச்சி நோக்கிப் புறப்பட்ட ஆகாய விமானம் என்னையும், தோழர் முல்லை சத்தியையும் தூக்கிக் கொண்டு பறந்தது. தேவையான, வழக்கமான வேகத்தில் விமானம் பறந்து சென்றாலும்கூடக் காற்றையும், முகில்களையும் அளவுக்கு மீறிய வேகத்துடன் அது கிழித்துச் செல்வதாகவே நாங்கள் எண்ணினோம். உண்மையில் அந்தப் பறக்கும் இயந்திரத்தில் அவ்வளவு வேகமில்லை. எங்களின் மனோவேகம்தான் அப்படியிருந்தது. என்றுமில்லாத புத்துணர்ச்சி! தோளிலே தினவு! உள்ளமெல்லாம் உவகைக் கூத்து!

காரணம் என்ன?

கல்லக்குடியிலே களம். அதற்கு நான் படைத்தலைவன். அந்த இன்பச் சேதி கேட்டு என்னுடன் தொடர்ந்த முல்லை சத்தி. இருவர் இருதயமும் அந்நிலையை அடைய இதைவிட வேறு காரணம் என்ன தேவை?

வீதிக்கு வீதி பல வீட்டுப் புலித் தமிழர் வில்லேந்தி வாழ்ந்தனர் என்று நமது புறநானூறு பேசுகிறது. மலர் தூவிய மஞ்சத்திலே இருப்பார்களாம். போர் முரசின் ஒலி கிளம்புமாம். கடைசி முத்தமாயிருப்பினும் இருக்கும் எனக் களிப்புடன் கூறிக் கண்ணீர் நிறைந்த காதலியரின் கன்னங்களிலே அன்பைப் பதித்து விட்டு மறவர்கள் தோள் தட்டி ஓடுவார்களாம். எஞ்சியுள்ள தமிழரின் வீரக் கவிதைகள் அந்தத் தித்திப்பானச் செய்திகளை நமக்குச் சொல்லித்தான் வைத்திருக்கின்றன.

அவ்வழி வந்தோர், போர் தவிர, புனிதமான முறை எதையும் கண்டு வழிக்கு வர மறுக்கும் பொல்லாதவர்களை எதிர்த்து முரசு கொட்டுக எனத் தலைவரிடமிருந்து உத்தரவு கிடைத்து விட்டது

எனக் கேட்டு, அந்த உத்தரவை முத்தமிட்டுக் களம் நோக்கி முரசு கொட்டச் செல்கிறார்கள் என்றால், ஏன் உவகை கிளம்பாது? உற்சாகம் மோதாது? உல்லாசப் பண் எழும்பாது?

சூடேறிச் சுழன்றோடும் ரத்த ஓட்டத்திலே - முறுக்கேறி நிற்கும் நரம்புகளிலே - வீங்கிய மலைத் தோள்களிலே தம்பிமார்களின் ஆற்றல் நிறைந்த யுத்த முறைகளிலே தங்களுக்கு நம்பிக்கையில்லையா அண்ணா? என்று கேட்டுப் பெற்ற வரம் அல்லவா அது? புதிய உரம் பெற்றோம், போர் முனை நோக்கிப் பறந்தோம்.

இறக்கைகள் ஆகாயக் கப்பலுக்கா அல்ல, எங்களுக்கா என்றே புரியவில்லை. அவ்வளவு மிகுதியான வேகத்தை உணர்ந்தோம். போராட்டம் தொடங்க வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது என்பதைத் திருச்சி மாவட்டத்திலே உள்ள பொதுமக்களுக்கு எடுத்துச் சொல்வதற்காக மாவட்டம் முழுவதும் சுற்றுப்பயணம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஜூன் 14 ஆம் நாள் சென்னையிலே ஒரு கல்லூரியின் நிதி விழா நாடகத்திலே நடிக்க வேண்டிய பொறுப்பு இருந்தது. தமிழ்ச் சமுதாயத்தின் விழிப்புக்கும் புதிய பாதை காணும் எழுச்சிக்கும் வித்திட்ட வைர மணிவிளக்காம் தியாகராயப் பெரியவரின் பெயரால் அமைந்த தியாகராயர் கல்லூரியின் நிதிக்காகத்தான் நாடகம். பரப்பிரம்மம் நாடகம் ஏராளமான வசூல். நானும், சிவாஜி கணேசன் அவர்களும் நடித்தோம். இரவு நாடகத்தை முடித்துவிட்டு மறுநாள் திருச்சி சுற்றுப் பயணத்தைத் துவக்க வேண்டிய முக்கியத்துவம் கருதி ஆகாய வழியைத் தேர்ந்தெடுத்தோம்.

விமானப் பிரயாணிகள் எதை எதை எண்ணிக் கொண்டிருந்தார்களோ தெரியாது! நானும், சத்தியும் மேலிருந்தபடியே பூமியை நோக்கினோம். பச்சைப் பட்டாடை உடுத்திய தமிழகத் திருமாதா, தன் நதிக் கரங்களால் உழவர் பெருமக்களைச் சீராட்டிப் பாராட்டிக் கொண்டிருந்தாள். கம்பீரமான தோற்றம், கனிவு நிறைந்த கண்கள், கருணை பொழியும் வதனம், எழிலாடும் எங்கள் தாய்க்கு அணிகலன்களாக இருந்தன.

பக்கத்திலே ஒரு பாவையும், அகம் அழுவதை முகத்தால் காட்டிக் கொண்டிருந்தாள். விமானப் பிரயாணிகளை உபசரிக்கும் பொறுப்பு வாய்ந்த அலுவலில் ஈடுபட்டிருக்கும் அந்த இள

நங்கை ஏனிப்படி வாட்டமாயிருக்கிறாள் என்பது முதலில் புரியத்தானில்லை. விபத்துகளைப் பற்றி எண்ணம் வராமல், கண்ணியமான புன்னகை காட்டி, பவ்யமாகப் பத்திரிகைகளை நீட்டி, பழரசம் தந்து, பணி சில புரிந்து பாதுகாத்திட வேண்டிய பதவியிலுள்ள அந்தப் பாவை, ஏனிப்படித் துன்பக்கேணியில் தள்ளப்பட்டிருக்கிறாள் என்ற கேள்விக்கணைகள் என்னைவிட அதிகமாக என் நண்பர் சத்தியையே துளைத்தெடுத்தன.

என்ன சார் விஷயம்? என்று அவருக்கே இயல்பான துடிப்பு நிறைந்த சொற்களால் என்னைக் கேட்டார். கேட்டுக் கொண்டேயிருந்தார். பிறகு அவரே காரணத்தை எனக்கு விளக்கிடும் அளவுக்குத் தெளிவும் பெற்றார்.

அவளது சிவந்த கரங்களிலே சில கடிதங்கள் இருந்தன. நான் கடிதமென்று சொல்லுகிறேன். அதை அவள் பொற்சுரங்கமென்பாளோ? புதையல் எடுத்த தனமென்பாளோ? நானறியேன். ஏனெனில், அவைகள் அவள் காதலனின் கடிதங்கள். எங்கேயோ தூரத்தில் இருக்க வேண்டும், அந்தத் துடியிடையாளைத் துணைவியாகப் பெற்றிடத் துடித்தவன். அவன்தான் இப்போது அவளிடம் அந்தப் பழைய ஓலைகளின் மூலம் பேசிக் கொண்டிருக்கிறான்.

நினைவு எத்தனை இன்பமான வேதனை அளிக்கக்கூடியது? அதற்கு அவள் மட்டும் விதிவிலக்கா? அவள் கையிலே பழைய கடிதங்கள் - நெஞ்சிலே புதிய புதையல்கள்.

அது போலத்தான். . .

எங்கள் நினைவினிலே தமிழரின் பழைய வரலாறுகள். நிலைமையோ பூகம்பம் - எரிமலை - பிரளயம்! மாசறு பொன்னே, வலம்புரி முத்தே, காசறு விரையே, கரும்பே, தேனே என்ற விதத்தில் வர்ணிக்கப்பட்டிருக்கும் காதலனின் கடிதத்தில் . . .

பொன்னும், முத்தும், பொதிகைச் சந்தனமும், எகிப்துக்கும் ஏதென்சுக்கும் ஏற்றிச் செல்லப்பட்டன என்ற கதையைச் சொல்லும் கடிதமாகக் கூட ஆகும் பாக்கியம் பெறாத தமிழர் முன்னாள் பெருமை.

“மலையிடைப் பிறவா மணியே என்கோ
யாழிடைப் பிறவா இசையே என்கோ”

என்ற கருத்திலே பண்பாடியிருப்பான். கடிதம் தீட்டிய அவள் காதலன்.

"அக்பர் நுழையா அவனியே யென்கோ
கனிஷ்கர் நுழையாத் தரணியே யென்கோ"

என்ற புகழ்ச் சிந்தை ஆயாசத்தோடு பாடினோம் நாங்கள்.

ஆகா! நாங்கள் என்று சொல்லிக் கொள்வதிலே இப்போது எவ்வளவு பெருமையிருக்கிறது! மொழி காத்திடும் அணிவகுப்பில் நாங்களும் பெயர் தந்தோம். நாங்களும் என்பது எத்தகைய உணர்ச்சியோடு சொல்லப்படுகிறது தெரியுமா? ... விளக்க முடியாத உணர்ச்சி! சோக நிலையிலுங்கூட, அந்தப் பெண்மணி தன் அலுவலை, கடமையைச் சரிவரத்தான் செய்தாள். அதுபோலவே நாங்களும் கடமையைச் செய்யச் சிறகடிக்கும் புறாக்களாகப் பறந்து கொண்டிருந்தோம்.

மேகங்களை மிரண்டோடச் செய்தபடி பறந்து கொண்டிருந்த விமானம் திடீரென்று - பயந்து விடாதீர்கள் - விபத்து ஒன்றுமில்லை! - திருச்சி எல்லையைத் தொட்டுவிட்டது. திருச்சியிலே மத்திய சிறைச்சாலை இருக்குமிடத்திற்கு அருகிலேயேதான் விமான நிலையமும் இருக்கிறது. போராட்டத்திலே ஒருவேளை நாம் கைது செய்யப்பட்டால், நாம் வர வேண்டிய இடம் அருகிலேதான் இருக்கிறது என்று பேசிக் கொண்டே இறங்கினோம். இருவர் எங்களை இன்முகம் காட்டி எதிர்கொண்டழைத்தனர் - திராவிடப் பண்ணை முத்துக்கிருஷ்ணன், திருச்சி செயலாளர் மணி இருவரும்.

எம்.எஸ்.மணியை முன்பெல்லாம் எனக்கு அவ்வளவாகப் பிடிக்காது.காரணம் நான் எப்போது திருச்சி சென்றாலும் முத்துக்கிருஷ்ணனின் திராவிடப் பண்ணையின் மாடியிலிருந்த கழக அலுவலகத்தில் அமர்ந்து கணக்குப் பார்ப்பதும், கடிதங்கள் எழுதுவதும் ஆகிய இந்த வேலைகளை அவருக்கே உரித்தான, சுறுசுறுப்போடு செய்து கொண்டிருப்பாரே தவிர, என்னோடு சரியாகப் பேசக்கூட மாட்டார்.

பிறகு திருச்சி கழகத்திலே எனக்குத் தொடர்பு அதிகம் வலுப்பட, தோழர் மணி எனக்கு மிகவும் பிடித்தமானவராகி விட்டார். கடமையிலே அவருக்கிருந்த கருத்தும், அதற்காக அவர் எடுத்துக் கொண்ட சிரமங்களும் என் அனுதாபத்தை என்னை அறியாமலேயே பெற்றுக்கொண்டு போய் மணியின் கழுத்தில் மாலையாக்கிப் போட்டன. பத்து நாளோ, இருபது நாளோ

குடும்பத்தைப் பற்றிக் கவலைப் படாமல் கட்சிப் பணிகள் புரிந்தபடி இருப்பார். திராவிடப் பண்ணையின் மாடியிலே தலையணைகூட இல்லாத நிலையில் சுருண்டு படுத்திருப்பார்.

அவரது மகன் - பெயர் மறந்து விட்டேன். (இப்போது அவனுக்குத் திருமணம் கூட நடந்து விட்டது, என் தலைமையில்) நான் மங்கிணி என்று கூப்பிடுவேன். அவன் வந்து நிற்பான், அம்மா கூப்பிட்டார்கள் என்று கூறியபடி, மாலையில் வருகிறேன் என்று கூறி அனுப்புவார். மாலை வரும், ஆனால், கழகப் பணிபுரியக் கிளம்பி விடுவார் வேறு ஊருக்கு. இப்படி ஓர் இளம் இயந்திரம் திருச்சிக் கழகத்திற்குக் கிடைத்திருந்தது.

முத்துவும், மணியும் வரவேற்றிட, நாங்கள் விமான நிலையத்திலிருந்து புறப்பட்டோம். கார் போய்க் கொண்டிருந்தது. வழியிலே பராங்குசத்தைச் சந்தித்துப் போக முடிவு செய்தோம்.

பராங்குசத்தைச் சந்திப்பதா? அவர் என்ன, விமான நிலையத்துக்கு வரவில்லையா? என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா, அவருடன் பழகிய தோழர்களுக்கு? ஆமாம், எங்கள் விமானம் இறங்குவதற்குள்ளாகவே, வானத்தில் கொஞ்ச தூரம் பறந்து வந்து, கொஞ்சும் குரலில் வாங்கே, வாங்கே என்று ஏகாரத்தை இழுத்தாற்போலக் கூவியழைத்திடும் ஆர்வமும், அன்பும் பெற்ற அந்த நண்பரை நாங்கள் சந்திக்கப் போனதற்குக் காரணம் இல்லாமலில்லை. மாவட்ட மாநாட்டின் ஓயா உழைப்பின் காரணமாக உடற்கூறுகள் நலிவடைந்து கடுமையான நோயினால் பீடிக்கப்பட்டு பிழைப்பாரா? என்ற சந்தேகத்திற்கிடையே மருத்துவமனையில் படுத்திருந்தார் பராங்குசம்.

மருத்துவமனையில் என்னைக் கண்டதும் கண்ணீர் வடித்தார். தன் உடல் நிலை பற்றிய கவலையால் அல்ல! தானும் போர் முரசு தட்ட வர முடியவில்லையே என்று. ஆறுதல் படலம் முடிந்தது. பிறகு விடை பெற்று எங்கள் பிரயாணத் திட்டத்தை நிறைவேற்றத் துவங்கினோம்.

(தொடரும்)

அன்புள்ள,

மு.க.

3-7-2002

2775. அறப்போர் நாள்
ஜூலை 15 என அறிவிப்பு!

மும்முனைப் போராட்டம்; கல்லக்குடி களம்! (2)

(நேற்றைய தொடர்ச்சி)

ஜூன் 15ஆம் நாள், கழகத்தின் நாளேடு நம் நாடு, திரு.பொன்னம்பலனார் அவர்கள் நிர்வாகத்தின்கீழ் துவங்கப்பட்டது. அந்நாள் முதலேதான் டால்மியாபுரம் பெயர் அகற்றும் போராட்ட விளக்கக் கூட்டங்கள் நடைபெறத் துவங்கின. முதல் நாள் முரசம், மணல்மேட்டில் அதிர்ந்தது. மணல்மேடு, அழகான சிறு கிராமம். கண்கவரும் தோப்புகள். அங்கே பண்பாடும் சிறுவர்கள். அரசியல் கொந்தளிப்புகளைத் தொட்டுப் பார்க்கும் வாய்ப்புள்ளவாறு சேலம் - திருச்சி சாலையோரத்திலே அந்தச் சிற்றூர் அமைந்திருந்தது. மாலை ஆறு மணிக்கெல்லாம் நான், மணி, முத்து, சத்தி எல்லோரும் அந்த ஊருக்குச் சென்றுவிட்டோம்.

அந்தச் சிறிய ஊராம் மணல்மேடு சரிந்து விடுமோ என்கிற அளவுக்குப் பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து குழுமினர். கண்டனர் - கேட்டனர் - பயன்பெற்றனர். பலமும் தந்தனர். இரவு உணவை முடித்து விட்டு, முசிறி வழியே வந்து, அங்கு தோழர்களைச் சந்தித்துப் பேசி விட்டுச் சரியாக 1-30 மணிக்குத் திருச்சி மீண்டோம்.

அடுத்த நாள் மணப்பாறையிலே கூட்டம். அதற்காகப் புறப்பட்டுக் கொண்டிருந்தோம். அப்போது மாவட்டச் செயலாளர் அன்பில் தர்மலிங்கம் வந்து சேர்ந்தார். அன்பில் என்பது திருச்சி மாவட்டத்திலே உள்ள சிற்றூர். மைனர் பஞ்சாயத்து. அங்கே ஓர் உயர்நிலைப்பள்ளியும் உண்டு.

அன்பில் என்று சொன்னால் நமது இயக்கத்தினருக்கு அந்த ஊரின் பெயர் ஞாபகம் வராது. தர்மலிங்கத்தின் பெயர்தான் எதிர்வந்து நிற்கும். அன்பில் வந்தார் - போனார் என்றே

எல்லோரும் பேசுவார்கள். வந்தார் - போனார் என்கிறேனே, அதிலே கூட அர்த்தம் இருக்கிறது. ஓர் இடத்தில் சில மணி நேரங்கள் அவர் இருப்பது கஷ்டமான காரியம். அவ்வளவு வேலை அவருக்கு. நான் அவரைத் தேடிக் கொண்டிருப்பேன்! என்னிடத்தில் வந்து, அவரைக் கண்டீர்களா? என்று கேட்பார்கள். இயக்கக் காரியங்கள் மட்டுமல்ல, மற்றவர்களுக்கும் நலம் பயக்கும் ஒத்தாசைகள் புரிய வேண்டுமென்பதிலும், அதற்காக அலைவதிலும், முயற்சி எடுப்பதிலும் அலாதியான சுவை அவருக்கு.

யாராவது தேர்தலிலே ஜெயிக்க வேண்டுமா? அங்கே அன்பில் இருப்பார். ஊதியமில்லாமல், கொள்கைக்கு முரண் ஏற்படாமல்! யாரையும் எளிதில் நம்பி விடுவார். அதன் காரணமாக நம்பிக்கை மோசத்திற்கு ஆளாகிப் பிறகு, தன்னையே நொந்து கொள்கிற காட்சி நமக்கே பரிதாபமாகயிருக்கும். லால்குடி மாநாட்டிலே ஏறத்தாழ ஏழாயிரம் ரூபாய் மிச்சப்படுத்தி, அந்த மாநாடு ஓர் எழுச்சி ஏடு என்ற மதிப்புரையை மாவட்டத்திற்குத் தந்த பெருமை தோழர் அன்பிலைத் தலைவராகப் பெற்ற வரவேற்புக் குழுவிற்குத்தான் சாரும்.

அவர், நான், மணி, சத்தி, முத்து ஆகியோர் மணப்பாறைக் கூட்டத்திற்குப் புறப்பட்டோம்.

பொற்செல்வியும், இளமுருகும் காதற் கலப்பு மணம் புரிந்தவர்கள் என்பதும், காதலிலே, கவிதையிலே களம் போகும் பேச்சு, கணவனுக்கும், மனைவிக்கும் தாயகமே மூச்சு என்ற கவிதைக்கு இலக்கணமானவர்கள் என்பதும் நாடறிந்த ஒன்று. ஊரிலே பல இடங்களில் கொடியேற்று விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஒரு மாடி வீட்டிலே - மாடியின் உச்சியிலே - கழகக் கொடியை ஏற்றிவைக்க என்னை அழைத்தார்கள். கொஞ்சம் ஆச்சரியத்தோடு நான் தோழர் இளமுருகைப் பார்த்தேன். அவர் சொன்னார், இந்த வீட்டுக்காரர் புதிதாகக் கட்சிக்கு வந்துள்ள வாலிபர். பிரபல காங்கிரஸ்வாதியான பொன்னம்பலக் கவுண்டர் இவருக்குச் சித்தப்பா. லால்குடி மாநாட்டிற்குப் பிறகுதான் இவருக்குக் கட்சிப் பற்றே ஆரம்பம் என்றெல்லாம்.

பிறகு கொடியேற்று விழாக்கள், ஊர்வலம், ஒரு முஸ்லீம் நண்பர் தலைமையிலே மாபெரும் பொதுக்கூட்டம் எல்லாம்

இனிது நடைபெற்றன. பின்னர் அந்தக் கட்சிக்குப் புதியவர் வீட்டிலே சாப்பாடு. கட்சிக்குப் புதியவர் எங்களோடு பேசவே நாணமடைந்தார். நானும், நண்பர் சத்தியும் அவரைப் பார்த்தபோது, ஒருவருக்கொருவர் ஆச்சரியப்பட்டுக் கொண்டோம். அதைவிட ஒரு பெரிய ஆச்சரியத்தை அவர் எங்களுக்கு உண்டாக்கிவிட்டார்!

லால்குடி மாநாட்டுக்குப் பிறகு கட்சிக்கு வந்த அந்த இளந்தோழர் கல்லக்குடிப் போராட்டத்துக்கு முதல் நாள் இரவு இரண்டரை மணிக்குத் தொண்டர் முகாமில் தன்னையும் படை வரிசையில், அதுவும் முதல் படை வரிசையில், சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று துடியாய்த் துடித்தார். வயதான தாய், இளம் மனைவி, தன்னைத் தவிர வேறு யாரும் துணையில்லாத வீடு எதைப்பற்றியும் கவலைப் படாமல், எழுதிக் கொள்ளுங்கள் என் பெயரையும் அணிவகுப்பில் எனக் கர்ஜித்தார். கட்சிக்குப் புதிய அந்த மனிதர் கறுத்த மேனியும், சிரித்த முகமும் படைத்தவர். கழகத்தின் உயிரான கடமை, கண்ணியம், கட்டுப்பாடு மூன்றையும் பெற்றவர். படையில் இடம் பெற்றார். சிறையில் ஆறு மாதம் பரிசும் பெற்றார்.

எங்கள் ஐவரில் ஒருவர்தான் அந்தக் கஸ்தூரி ராஜ் என்னும் கட்சிக்குப் புதிய காளை. அவருடைய விருந்துபசாரத்திற்கு நன்றி தெரிவித்துக் கொண்டு இரவு திருச்சிக்கு இரண்டு மணிக்கு வந்தோம். தூக்கத்தையும் வருந்தி அழைத்தோம்.

மூன்றாம் நாள் அன்பிலில் ஒரு நாடகம் நடைபெற்றது. அதற்குத் தலைமையேற்றதோடு, கல்லக்குடி போர் பற்றிய விளக்கவுரையாற்றிப் போராட்டத்திற்கு ஆதரவு தருகிறோம் என்று வாக்களித்த பொதுமக்களைப் பாராட்டி, இரவே திருச்சி திரும்பினோம்.

மறுநாள், ஜூன் மாதம் 18ஆம் நாள் குளித்தலையிலே கூட்டம். கூட்டம் மாத்திரமல்ல, டால்மியாபுரம் போராட்டச் செயற்குழுவும் அங்கு கூடுவதாயிருந்தது. அந்தச் செயற்குழுவின் முடிவைத் திருச்சி மாவட்டம் மட்டுமல்ல, தமிழகமே எதிர்பார்த்தபடி இருந்தது. அதிலேதான் போராட்டத் தேதி குறிக்கப்படும் என்ற செய்தி பரவிற்று. மாலை நான்கு மணிக்குச் செயற்குழு உறுப்பினர்கள், நான், அன்பில், மணி, இளமுருகு, தம்புசாமி, மாணிக்கம், குளித்தலை ராசா ஆகிய ஏழு பேர் கூடி

இரண்டு மணி நேரத்திற்கு மேலாகப் போராட்டச் சூழ்நிலைகளைப் பற்றி யோசித்தோம்.

வெளியிலே ஏராளமான தோழர்கள் குழுவின் முடிவை ஆவலோடு எதிர்பார்த்தவண்ணமிருந்தனர். பொதுக் கூட்டத்தில் வெள்ளமெனத் திரண்டிருந்த பல்லாயிரவரும் குழுவின் முடிவைச் சொல்ல எப்போது வெளியே வருவோம் என்று வழிமேல் விழி வைத்துக் காத்துக் கிடந்தனர்.நம் கோரிக்கை கவனிக்கப் படாவிட்டால் ஜூலை மாதம் 15ஆம் நாள் போராட்டத்தைத் துவங்குவதாகவும், அதற்குப் பொதுச்செயலாளர் அண்ணாவின் அனுமதியைக் கோருவதாகவும் தீர்மானிக்கப்பட்டது. செயற் குழுவில் முடிவான செய்தியைச் சொன்னதும் கூடியிருந்தோர் ஆடியதும், பாடியதும் - அடடா! நேரில்தான் காண வேண்டும்! வார்த்தையேது வர்ணிக்க! போர் என்றேன்! புறப்பட்டோம் என்றார்கள் விழியால்.

ஜூலை 15 என்றேன்!

அவ்வளவு நாளா! என்றார்கள் பெருமூச்சால்.

கழகப் பெரும்படையின் முதற்களம் அமையும் வாய்ப்பைக் கல்லக்குடி பெற்றது என்றாலும், நாள் குறித்த இடம் என்ற பெருமையைக் குளித்தலை பெற்றுவிட்டது.

குளித்தலை இன்பம் கொஞ்சும் பேரூர். சிந்து பாடும் காவிரியின் ஓரத்திலே செழிப்பைச் சுமக்க முடியாமல், சேரன் ஏற்றிய கல்லைத் தூக்க முடியாமல் தலை குனிந்த கனக விசயர்களைப் போல, வளைந்து நிற்கும் வாழை மரச் சோலைகள், வளம் நிறைந்த பூமிகள், வாட்கண்ணும் வற்றாத வீரமும் படைத்த மறவர்கள் உலவும் வீதிகள்.

குளிரை இன்பம் என்று கூறுவர். குளிர் தழைத்த இடம்தான் குளிர்த் தழையாகி குளித்தலையாகி விட்டதோ என்னவோ என்று ஐயுறும் வகையில் அமைந்த நல்லூர். தமிழகத்தில் எத்தனையோ குளித்தலைகள் இருக்கின்றன.

இயக்கத்தின் வளர்ச்சிக்காகத் தக்கது ஏதாவது செய்ய வேண்டும் என்று எப்போதும், எந்நேரமும் எண்ணிடும் சீலங்கொண்டவர் தோழர் முத்துக்கிருஷ்ணன். இவர் மட்டுமின்றி எண்ணிறந்த தோழர்களை வீரர்களாகப் பெற்றிருக்கிறது குளித்தலை.

குளித்தலை போன்ற பல ஊர்கள் இருக்கின்றன. உழைத்திடும் உத்தமர்களும், உரம் வாய்ந்த உள்ளங் கொண்டோரும் நிறைந்து கிடக்கும் பட்டி, தொட்டிகள் பல உண்டு. அவைகள் எல்லாம் நமது பாசறை ஆக வேண்டும். சில பாசறைகளில் போர்க்கருவி அதிகமிருக்கும். அதைக் கையாள வீரர்கள் குறைவாயிருப்பார்கள். வீரர்கள் அதிகமாகவும், போர்க் கருவிகள் குறைவாகவும் உள்ள பாசறைகளும் உண்டு.

கருவிகளை அதிகமாக்கவும், கருவிக்கேற்றபடி வீரர்கள் தொகையைப் பெருக்கவும், அந்தந்த ஊர் முன்னணி வீரர்கள் முன் வர வேண்டும். போர்க் கருவிகள் என்று கழக உறுப்பினர்களையும், வீரர்கள் என்று செயற்குழு உறுப்பினர்களையும்தான் குறிப்பிடுகிறேன். அச்சத்தால் அல்ல! அரசியலில் கடைப்பிடிக்க வேண்டிய கண்ணியத்தால்.

வெஞ்சமர் வராத நேரத்திலும் வீரர்களுக்குப் பாசறைகளில் வேலையுண்டு. வேலின் கூர்மையை மழுங்காமல் பார்ப்பதும், வாளின் வலிமையைச் சோதித்துப் பார்ப்பதும், பயிற்சி பெறுவதும், படையைப் பெருக்குவதும் - இன்னோரன்ன பல கடமைகளில் கழகப் பாசறைகளும் ஈடுபட வேண்டும்.

அறப்போர்களில் கலந்து கொள்ள மட்டும் வீரர்களின் பட்டியல் பெருக வேண்டுமென்பதில்லை. ஆக்க வேலைகள் பல இருக்கின்றன. அவர்களுக்குக் கழகத்தின் பெயரால் நடத்தப்படும் அல்லது கழகத்தின் தலைமையிலிருந்து அறிவிக்கப்படும் ஆக்க வேலைகளில் மட்டுமே கலந்து கொள்ள வேண்டுமென்பது அல்ல. பொதுவாக மக்களுக்கு ஏற்படும் இடையூறுகளில்கூடப் பொதுநலத் தொண்டு புரியும் பண்பு, கழக வீரர்களுக்கு ஏற்பட வேண்டும்.

அத்தகைய படைகள் பட்டினங்களிலும், குக்கிராமங்களிலும் பெருகிட வேண்டும். கழகக் கொள்கைகட்குக் குந்தகம் விளையாத முறையிலே கழக வீரர்களிடத்திலும், கழகத்திடத்திலும், மக்கட்கு அன்பு வளர்கின்ற அளவிலே, அந்தத் தொண்டு செய்யும் நன்மை தொடர்ந்திட வேண்டும்.

சுற்றுப்பயணத்தின்பொழுது தோழர்கள் உடனிருந்தால் அலுப்பே தெரிவதில்லை. திடீரென வெடிக்கும் வேடிக்கை நிகழ்ச்சிகள், அதன் விளைவாக எழும் கிண்டல்கள், கேலிகள் வயிறு வலிக்கப் பேசவும் பயன்பட்டு, பயண உற்சாகம்

குலையாமல் அமைந்திடவும் வழி ஏற்படும்.

ஒருமுறை வட ஆர்க்காடு மாவட்டத்தில் என் சுற்றுப்பயணம் நடைபெற்றது. மாவட்டச் சார்பில் அமைக்கப்பட்ட வாடகைக் கார் ஒன்றில் நான், கவிஞர் கண்ணதாசன், முல்லை சத்தி மற்றும் சிலர் பிரயாணம் செய்து கொண்டிருந்தோம். எங்களுக்காக அமர்த்தப்பட்ட கார் மிகவும் பழைமையானது. டடட என்ற ஒலியுடன் புறப்பட்டதேயானால், மாதம் போம் காத வழி! அதுவும் டயர் பொத்துக் கொள்ளாமல், எண்ணெய் அடைத்துக் கொள்ளாமல், எஞ்சினுக்கு வலிப்பு நோய் வராமல் இருந்தால்தான்! இந்தக் கார் எத்தனை ஹார்ஸ் பவர்? என்று கேட்டார் கண்ணதாசன். ஒரே ஹார்ஸ் பவர் தான்! அதுவும் தெனாலிராமன் ஹார்ஸ் பவர்! என்றேன் நான். வயதான காலத்திலும் இப்படித் துன்பப்படுத்து கிறார்களே என்று பெருமூச்சு விட்டபடி, புகைச்சலைக் கக்கிக் கொண்டு, கார் போய்க் கொண்டிருந்தது. வழியிலே ஒரு திருப்பம். எதிரெதிரே வரும் வண்டிகள் தவறாமல் ஒலி முழங்கினால்தான் பத்திரமாக அந்தத் திருப்பத்தைக் கடந்து செல்ல முடியும்.

எதிரே ஒரு பஸ் வந்தது. எங்கள் காரும் சென்றது. இரண்டும் பெரிய விபத்துக்குள்ளாகி நொறுங்கிப் போய்விட வேண்டிய பெரிய ஆபத்திலிருந்து ஒரு நூல் இழையில் நாங்கள் தப்பித்துக் கொண்டோம். காரணம், எதிரே வந்த பஸ் டிரைவர் ஹாரன் செய்யாமல் வந்துவிட்டார். அதனால் வந்த பயங்கரம். அந்த பஸ்ஸில் ஒரு சப்-இன்ஸ்பெக்டரும் சில போலீசாரும் இருந்தார்கள். எங்கள் கார் டிரைவர் கோபமாகக் கீழே இறங்கினார். பஸ் டிரைவரைப் பார்த்தார்.

ஏனய்யா ஹாரன் பண்ணாம வர்றே? நான் வேறே பிரேக் இல்லாம வர்றேன்! என்று கத்தினார் ஆத்திரமாக! பஸ் போய்விட்டது. ஆனால் எங்களுக்குச் சிரிப்பால் ஏற்பட்ட வயிற்றுவலி போகவில்லை.

(தொடரும்)

அன்புள்ள,

மு.க.

4-7-2002

2776.எதிரிகள் கோடி இட்டழைப்பினும் தொடோம்!

மும்முனைப் போராட்டம்; கல்லக்குடி களம்! (3)

(நேற்றைய தொடர்ச்சி)

ஜூன் 21ஆம் நாள், தமிழகம் எங்கும் ராஜாஜி அவர்கள் கொண்டு வந்த கல்வித் திட்டத்தை எதிர்த்துக் கழகத்தின் சார்பில் கண்டன நாள் கூட்டங்கள் நடத்துமாறு அறிவிக்கப்பட்டது. மூன்று மணி நேரம் சிறுவர்கள் படித்தால் போதும். மீதி நேரத்தில் அவரவர்களின் தகப்பனார் தொழில்களைக் கற்றுக் கொண்டால் போதுமானது என்பதே அந்தக் கல்வித் திட்டமாகும். சிறுவர்கள் தொழில் துறையில் முன்னேற வேண்டும் என்பதை யாரும் மறுக்கவில்லை. எந்த வயதுச் சிறுவர்கள், எப்படித் தொழில் கற்றுக் கொள்வது என்ற கேள்விகளுக்குக் கிடைத்த பதில்தான் விமர்சனத்திற்கு உரியது. பதினொரு வயதிற்கு உட்பட்டவர்கள் பள்ளியில் மூன்று மணி நேரம் படித்தது போக, மீதி நேரத்தில் வீட்டிற்குச் சென்று தந்தையின் தொழிலைப் பயில வேண்டும், பள்ளியிலேயே தொழில் கல்வி போதிக்கப்படுகிறது என்று சொன்னாலும், அதிலே அர்த்தம் இருக்கிறது. தொழில் கல்விகூட மேல் நாடுகளில் எப்படிப் போதிக்கப்படுகிறது? சிறுவர்களுக்கு எந்த வேலையின் மீது ஆசை விழுகிறது என்பதை ஆராய்ந்தறிந்து, அந்தத் துறையிலேயே அவர்களைப் பழக்கிடும் தொழிற் கல்வி முறைதான் சிறந்தது என்று கொள்ளப்பட்டு, அவ்வழியிலே மேல்நாடுகள் சென்று மேன்மையுறுகின்றன.

ஆளும் வர்க்கம் - பாதுகாக்கும் வர்க்கம் - தொழில், வாணிபம் முதலிய வர்க்கம் - என அரசியலிலே மூன்று முக்கியமான பிரிவுகளைப் பிரித்துக் காட்டி பிறப்பின் காரணமாக இல்லாமல், சிறப்பின் காரணமாக அந்தந்த வர்க்கத்தில் இடம் பெற எந்த மனிதனுக்கும் உரிமையுண்டு என்பதையும் எடுத்துக்காட்டி,

அத்தகைய மூன்று பிரிவிற்கும் தேவையான கல்வியை அவர்களுக்கு இளமையில் போதிக்க வேண்டுமென்றும் - யார் எந்தப் பிரிவுக் கல்வியை விரும்புகிறார்கள் என்று பார்த்து அந்தத் துறைக் கல்வியை அவர்களுக்கு வழங்க வேண்டு மென்றும் உலகக் கல்வித் திட்டத்திற்குக் கைகாட்டியாக இருந்த பேரறிஞன் பிளாட்டோ எழுதி வைத்திருக்கிறான்.

அதற்கு மாறாகக் காங்கிரஸ் அரசு, ராஜாஜியின் தலைமையில் கொண்டு வந்த புதிய கல்வித் திட்டத்தினால், பூத்து வரும் புதிய சமுதாயம் பொட்டல் காடாகி விடும் என்று நாடு எச்சரித்தது. நல்லோர் எச்சரித்தனர். திட்டம் தந்தவரின் கட்சிக்காரர்களே கூட எதிர்த்தனர்.

எதிர்ப்பை அலட்சியப்படுத்தியதன் காரணமாக, ஜூன் திங்கள் 21ஆம் நாள், நாடு முழுவதும் புதிய தலைவரானார். கல்லக்குடி போராட்டத் தலைவனாகிய நானும் அவரும் மாநாட்டில் பேசி, பிறகு மாநாட்டில் பேரறிஞர் அண்ணா முழங்கினார்.

ஒரு தம்பியை கல்வித் திட்டப் போருக்கு அனுப்புகிறேன். மற்றொரு தம்பியைக் கல்லக்குடி களத்திற்கு அனுப்புகிறேன். களம் இரண்டோடு முடிவதில்லை. நண்பர்களே! ஜூலை 15ஆம் நாள் கல்லக்குடி களத்திலே கருணாநிதி நிற்கும்போது அந்தப் போராட்டத்தின் அறிகுறியாகவும், தென்னாட்டுத் தலைவர்களை நான்சென்ஸ் என்று இகழ்ந்து பேசிய நேருவைக் கண்டிப்பதற்கு அறிகுறியாகவும், தமிழகமெங்கும் உள்ள தமிழர்கள் புகைவண்டிகளை நிறுத்தப் போகிறார்கள் என்று அண்ணா சொன்னதுதான் தாமதம், மாநாட்டுப் பந்தலாகவா இருந்தது அது?

கேடயம் - கட்டுப்பாடெனும் கவசம் - மூன்றும் எடுத்துச் செல்க! என்றார், அம் மூன்றெழுத்துச் செல்வர் அண்ணா.

முரசு அதிர்ந்தது!

கல்லக்குடி எனும் பெயரிருக்க வேண்டிய இடத்தில் டால்மியாபுரம் எனும் பெயரா? தமிழுக்குச் செய்யப்படும் துரோகம்! என்று முரசு அதிர்ந்தது.

முத்தமிழ்ப் படைகெட - முன்னேற்றம் தடைபட - இனிவிடோம் விடோம்! என முரசு அதிர்ந்தது.

எதிரிகள் கோடி இட்டழைப்பினும் தொடோம்! தொடோம்! என முரசு அதிர்ந்தது.

ரத்தக் கடல்கள் - கொத்தும் இடர்கள் - எதையும் தாங்கும் இதயம் கொண்டோர் - எழுந்தார்! என முரசு அதிர்ந்தது.

ஜூலை 15ஆம் தேதி மும்முனைப் போராட்டத்திற்காக நாள் குறிப்பிடப்பட்டு விட்டது. அதற் கிடையில் சென்னையில் ஜூலை 11, 12 தேதிகளில் மாவட்ட மாநாடு நடைபெற்றது. 11ஆம் தேதி இரவு மாநாட்டில் நான் நடித்த பரப்பிரம்மம் நாடகம்! பரப்பிரம்மம் என்ற பெயர் புதிதாகத் தோன்றுகிறதல்லவா?

நான் எழுதிய பராசக்தி படம் தமிழ்நாட்டில் பெரும் புரட்சியை ஏற்படுத்தி நூறு நாட்களுக்கு மேல் ஓடிக் கொண்டிருந்தபோது தினமணி கதிர் இதழில் பராசக்தி படத்தின் கருத்துகளையும், வசனங்களையும் கடுமையாகத் தாக்கி மிக நீண்டதொரு விமர்சனம் எழுதப்பட்டிருந்தது. பத்துப் பக்கத்திற்குக் குறையாமல் எழுதப்பட்ட அந்த விமர்சனத்தில் வரிக்கு வரி நான் தாக்கப்பட்டிருந்தேன்.

என்னையும், பராசக்தி படத்தையும் கண்டித்து, காங்கிரஸ் கட்சி கண்டனக் கூட்டங்கள் பலவற்றை நடத்தியது. கண்டன விமர்சனம் வந்திருந்த தினமணி கதிரின் அட்டையில் பராசக்தியைக் கிண்டல் செய்வது போல் ஒரு கேலிச் சித்திரமும் வரையப்பட்டிருந்தது. ஆடை குலைந்த நிலையில் ஒரு பெண்ணின் ஓவியம் வரைந்த விளம்பரம்! அந்த விளம்பரத்தின் தலைப்பு பரப்பிரம்மம் என்பதாகும். அதன் கீழே கதை-வசவு தயாநிதி என்றும் எழுதப்பட்டிருந்தது. இதுதான் அந்தப் பத்திரிகையின் அட்டைப்படக் கேலிச் சித்திரமாகும். (இதே நிர்வாகத்தின்கீழ் இயங்கி வந்த தினமணி கதிர் தான். ஆனால் ஆசிரியர் குழு முழுவதும் வேறு!)

அதைப் பார்த்து நான் ஆத்திரப்படவில்லை. என்னைக் கிண்டல் செய்து அவர்கள் போட்டிருந்த அதே பரப்பிரம்மம் என்ற தலைப்பை வைத்து ஒரு நாடகம் எழுதினேன். முழுக்க முழுக்கக் கட்சிப் பிரசாரம் நிறைந்த இந்த நாடகத்தைப் பல ஊர்களில் நானும், சிவாஜியும் நடித்துக் காட்டினோம்.

சென்னையில் பரப்பிரம்மம் நாடகத்தினை முடித்து விட்டு ஜூலை 12ஆம் தேதி காலை சென்னையில் தாயிடமும்,

துணைவியிடமும், குழந்தைகளிடமும் விடைபெற்றுக் கல்லக்குடி களம் செல்லத் திருச்சிக்குப் புறப்பட்டேன்.

ஜூலை 13ஆம் நாள் நான் எங்கிருந்தேன் என்று போலீசாரால் கண்டுபிடிக்க முடியவில்லை. கல்லக்குடியிலேதான் போலீசாரிடம் சிக்க வேண்டும் என்பதற்காக, 13ஆம் தேதி முழுவதும் யார் கண்ணிலும் படாமல் இருந்துவிட்டு, 14ஆம் நாள் காலையில் திருவாரூர் சென்று, அங்கிருந்து புறப்பட்டு, அன்றிரவு லால்குடியில் நடைபெறும் பொதுக் கூட்டத்திற்குச் சென்றேன். செல்லும் வழியிலேயே, பொதுச் செயலாளர் அண்ணா அவர்களும், நாவலர் நெடுஞ்செழியன், என்.வி. நடராசன் முதலியோரும் செயற்குழுக் கூட்டத்தில் போலீசாரால் கைது செய்யப்பட்டார்கள் என்ற செய்தி எனக்குக் கிடைத்தது.

போர் நாள் பற்றிய கடைசிக் கூட்டம் ஜூலை 14, இரவு லால்குடியில் நடைபெற்றது. அதற்குச் சில மாதங்களுக்கு முன்பு அதே லால்குடியில் நடைபெற்ற மாநாட்டில்தான் டால்மியாபுரத்தைக் கல்லக்குடி என்று மாற்ற வேண்டும் என்ற தீர்மானம் நிறைவேறியது.

அந்த லால்குடிதான் கல்லக்குடி களத்திலே பிணமாகிப் போன நடராசனைப் பெற்றெடுத்த பெருமை படைத்த பூமியாகும். பொதுக்கூட்டத்திற்கு திரு . பழனி யாண்டி எம்.எல்.ஏ., தலைமை தாங்கினார். அவர் டால்மியா தொழிலாளர் சங்கத்தின் தலைவர். கல்லக்குடிப் போராட்டம் எவ்வளவு அவசியமானது என்பதை அவர் விளக்கினார். கூட்டம் நடந்து கொண்டிருக்கும்போதே கவிஞர் கண்ணதாசனும், காரைக்குடி இராம.சுப்பையாவும் மேடைக்கு வந்தார்கள். இருவரும் என்னுடன் போராட்டத்தில் கலந்து கொள்வதற்காக வந்திருப்பதாகக் கூட்டத்தில் முழங்கினார்கள்.

கூட்டம் முடிந்து இரவு இரண்டு மணிக்கு, மறுநாள் போராட்டத்திற்கான தொண்டர்களின் அணிவகுப்பைப் பார்வை யிட்டோம்.போராட்டத்தில் எப்படியெப்படி அமைதியோடும், கண்ணியத்தோடும், கட்டுப்பாட்டோடும் நடந்து கொள்ள வேண்டுமென்று தொண்டர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது.

ஜூலை 15. விடிவெள்ளி முளைத்தது! சேவல் கொக்கரக்கோ எனக் கூவிற்று!

அது எல்லோரும் புறப்படுங்கோ! என்பது போல் கூவிற்று.

செங்கதிரோன் எழுந்தான். வெங்குருதி தனிற் கமழ்ந்து வீரம் செய்கின்ற மூச்சோடு தமிழகமே எழுந்தது.

கடலின் கொந்தளிப்பு உள்ளத்திலே! காலைக் கதிரவனின் நிறம் கண்களிலே! சேவலின் மிடுக்கு நடையிலே!

தமிழர் பட்டாளம் எழுந்தது! எவரும் எமக்கு இணையில்லை எனக் கூறி எழுந்தது.

கண்ணீரும் கனலும் சேர்ந்து கிளம்பும் விழியுடை வீரர்கள் எழுந்தனர்.

பறந்தனர் படை முகாம்களுக்கு!

வீரர்களின் அடிச்சுவடுகளை வீணர்கள் அழித்து விட்டிருக்கலாம்! ஆனால் காலம் அவைகளைக் காப்பாற்றித்தான் வைத்திருக்கிறது. அதையும் ஒழித்துக் கட்ட முயலும் தமிழ்நாட்டு ஒதியமிலார்கள் ஒழிந்திடுக என உயர்ந்திட்டது போராட்டக் கொடி.

கறுப்பும் சிவப்பும் கலந்த கொடி, தமிழ்
நாட்டுத் தெருவெல்லாம் நிறைந்தது.

கல்லக்குடியிலே – டால்மியா தொழிற்சாலையிலே
புகை கிளம்பிற்று.

புரட்சி எரிமலையிலும் புகை எழும்பிற்று.

ஜூலை 15!

அன்றைய ஆட்சிக்காரரின் நெஞ்சிலே எஞ்சியிருந்த இரக்கமும் உலர்ந்த நாள்! ஆனால் ஆணவத்தின் தலையிலே இடி விழுந்த நாள்.

(தொடரும்)

அன்புள்ள,

மு.க.

5-7-2002

2777. குருடர்களும் பார்த்தனர்; கூனர்களும் நிமிர்ந்தனர்!

மும்முனைப் போராட்டம்; கல்லக்குடி களம்! (4)

(நேற்றைய தொடர்ச்சி)

ஆயிரக்கணக்கான மக்கள் களம் காண வந்து விட்டனர். கல்லக்குடிக்கு பாசறையிலிருந்து முதல் படை கிளம்பியது.

நான் முன்னே - என் பின்னே 24 பேர்கள் - எம்மைச் சுற்றி ஆயிரமாயிரம் தோழர்கள்.

தமிழ்த் தாயின் தலையிலே சூட்டப்பட்ட அவமானக் கிரீடத்தைக் கழற்றி எறியக் கிளம்பிற்று காண் தமிழச் சிங்கக் கூட்டம்! கிழித்தெறியத் தேடுது காண் பகைக் கூட்டத்தை!

என்றிடும் வண்ணம் நடந்தனர் வீரர்கள்! பல தெருக்களைக் கடந்தனர் தீரர்கள்!

குருடர்களும் பார்த்தனர்!

கூனர்களும் நிமிர்ந்தனர்!

செவிடர்களும் கேட்டனர்!

ஊமைகளும் வாழ்த்தினர்!

களம் வந்தது. செந்தமிழ் அன்னை புறக்கணிக்கப்பட்ட இடம் வந்தது. பெருமைக்குரிய நமது தாய், புலம்பிக் கொண்டிருந்த இடம் வந்தது.

எங்களைச் சீராட்டிப் பாராட்டிச் செந்தமிழ் ஊட்டிய சிலம்பணிந்த செல்வி மணிமேகலா தேவி - மாணிக்கக் குறள் ஒலிக்கும் மாதா - வளையாபதியுடைய குண்டலகேசி - வஞ்சகர் பூட்டிய விலங்கால் வாட்டமுற்றுக் கிடந்தாள்!

நாங்கள் விலக்க வந்த விலங்கிற்குத் துப்பாக்கி வேலி போட்டனர்.

துடித்தழும் மாதாவைத் தூரத்திலேயிருந்து பார்! தொடாதே! அவள் தொல்லையுறுவதை ரசி! என்றது அரசாங்கம்.

கோழைகள் கேட்பர் - மோழைகள் பின்னடைவர் - நாங்கள் வாழைக்குக் கன்றல்ல - ஆலுக்கு விழுதுகள் - அன்னைத் தமிழுக்கு மக்கள் - இப்படிப் பதில் தந்தோம்! ஓடினோம் அன்னையிடம். டால்மியாபுரம் என்ற பெயரை மறைத்தோம், கல்லக்குடி என்ற பெயரை அந்தப் பலகை மீது ஒட்டினோம்.

"அலறியவாறு புகை வண்டியும் வந்தது!
அந்தப் புகைவண்டி புறப்பட ஆயத்தமானது".

என் படையில் இருந்த 25 பேரை ஐந்து பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதியினரும் புகை வண்டியின் முன்னே படுப்பது என்று, தலைவன் என்ற முறையில் கட்டளையிட்டேன்.

முதலில் ஐவர்!

நான், சத்தி, கஸ்தூரி, குமாரவேல், குழந்தைவேல் - தண்டவாளத்தைத் தலையணையாக்கிக் கொண்டு இருப்புப் பாதையைப் பஞ்சு மெத்தையாக்கிப் புகை வண்டிக்குப் பக்கத்திலே சாய்ந்தோம்.

கூடி நின்ற ஆயிரமாயிரம் உள்ளங்களும் துடித்தன. ஒரே அமைதி! என்ன நடக்கப் போகிறதோ என்று மக்கள் வெள்ளம் அலையடங்கிக் கிடந்தது. துப்பாக்கி ஏந்திய ரிசர்வ் போலீசார் வளையம் வளர்ந்தது. கலெக்டர், டி.எஸ்.பி., சர்க்கிள், சப் இன்ஸ்பெக்டர்கள், மாஜிஸ்டிரேட், சார்ஜண்ட் எல்லாரும் எங்கள் பக்கம் வந்தனர்.

"ஏன் இப்படிப் படுத்திருக்கிறீர்கள்? என்றனர்.
எங்கள் இலட்சியத்தை எடுத்துச் சொல்வதற்காக!
என்றேன்".

இது பொதுஜனங்களுக்கும், பிரயாணிகளுக்கும் இடையூறான காரியம் அல்லவா?

அப்படி நீங்கள் கருதினால் வருந்துகிறோம். ஆனால் இந்தப் பொது ஜனங்களைக் கேளுங்கள். அல்லது வண்டியிலுள்ள பிரயாணிகளைக் கேளுங்கள். அவர்கள் சொல்லட்டும், டால்மியாபுரமே இருக்க வேண்டும், இந்தப் போராட்டம் கூடாது

என்று. நாங்கள் உடனே எழுந்து விடுகிறோம் என்று படுத்துக் கொண்டே பதில் சொன்னோம். பக்கத்தில் ரயில் எஞ்சின் கொதித்துக் கொண்டிருந்தது. நாங்களும்தான்! எங்களைச் சுற்றி நின்ற மக்களுந்தான்!

டால்மியாபுரம் வேண்டாம் என்றால், அதற்கு மேலிடத்திற்கு எழுதுங்களேன்!

எல்லா முயற்சிகளும் முடிந்து விட்டன. தீட்டிய கடிதங்கள் எவ்வளவு! தீர்மானங்கள் எத்தனை! தில்லியின் திருநோக்குப்படவில்லை, எம்மீது! ஆகவே அவர்கள் கவனத்தை இழுக்க இம்முறையைக் கையாள்கிறோம்.

இப்படிச் செய்வதால் வெற்றி கிடைத்துவிடுமா?

எங்களுக்கு முன்னே நிற்க வைக்கப்படும் - இந்த ரயிலின் கிரீச் என்ற சப்தமோ - அல்லது ரயில் எம்மீது ஏறி எமது எலும்புகள் மளுக் மளுக் என்று முறியும் சப்தமோ - தில்லி ஆட்சி பீடத்தின் காதில் எட்டுமோ எட்டாதோ? மக்கள் மன்றத்துக்கு எட்டும். நிச்சயமாக எட்டும். அது இந்த ஆதிபத்தியக்காரரை ஆயிரம் தேள்போலக் கொட்டும். அது போதும், எங்களுக்கு!

சொல்கிறோம் - கேளுங்கள், உடனே எழுந்து விடுங்கள்!

நிபந்தனை வேண்டும் - டால்மியாபுரத்தை மாற்றி விடுகிறோமென்று!

அதுதான் கல்லக்குடி என்று ஒட்டிவிட்டீர்களே?

ஒட்டுவதென்ன, எங்கள் ஓவியர்களை விட்டு எழுதியே தருகிறோம், கல்லக்குடி என்ற பலகையை! ஆனால் ஆட்சி, அதிகாரபூர்வமாகச் சொல்ல வேண்டும்!

அதிகாரிகளின் கேள்விகளும், என் பதில்களும் அதோடு முடிந்துவிட்டன. ஆல் ரைட் என்று கூறிவிட்டு அதிகாரிகள் அப்பால் நகர்ந்தார்கள்.

புகைவண்டி கூ என்று ஊளையிட்டது. எஞ்சினில் ஒலி கிளம்பியது. சக்கரங்கள் சுழன்றன. ஓரத்திலே நின்றிருந்த மக்கள் கண்களை மூடிக் கொண்டனர். படுத்திருந்த நாங்களும் எங்களைத் தயார்படுத்திக் கொண்டோம். தேசத் தொண்டர்கள் நடத்தும் தியாக யாத்திரைக்குத் தயாராகிவிட்டோம்.

கடைசியாக ஒருமுறை கதிரவனைப் பார்த்தேன். கல்லக்குடியைப் பார்த்துக் கொண்டேன். என்னைச் சீராட்டிய தமிழ் மாதாவை ஆசை தீரப்பார்த்துக் கொண்டேன். எதிரே நின்றவர்களையும் பார்த்துக் கொண்டேன். எல்லாம் நொடியில் முடிந்தது. கண்ணை மூடிக் கொண்டேன். சாவின் இன்ப முத்தத்திற்குக் கன்னத்தைத் தயார்படுத்திக் கொண்டோம். எல்லோரும், ஆம், ஐவரும். கடகட வெனக் கிளம்பிய புகை வண்டி நகர்ந்ததை உணர்ந்தேன்.

தமிழ் வாழ்க! என இருதயம் உச்சரித்தது. ஒரு சப்தம் மீண்டும். கண்ணைத் திறந்தேன். உயிரோடிருந்தேன். அதை உணர்ந்தேன். சிறிது தூரத்தில் புகை வண்டி என் உடலை ஒட்டினாற்போல் நின்று கொண்டிருந்தது.

மீண்டும் அதிகாரிகள் வந்தனர்.
முடிவென்ன? என்றனர்.
முடிவைத்தான் எதிர்பார்க்கிறோம்! என்றேன்.

சரி, எல்லோரும் கைது செய்யப்படுகிறீர்கள் என்றார்கள். எழுந்தோம். உடனே மிச்சமுள்ள நண்பர்கள் - என் படை வரிசையினர் படுத்தனர். அவர்களும் கைது செய்யப்பட்டனர். இருபத்தைந்து பேரும் போலீஸ் வண்டியில் ஏற்றப்பட்டோம். பொதுமக்கள் பொங்கும் எரிமலை போல் ஆயினர்.

அணையுடைத்தெழும் நீத்தம் போலக் காட்சி தந்தனர். மாணவர் - தொழிலாளர் - இளைஞர் - பெரியோர் - மங்கை நல்லார் அனைவரும் கனலும், கண்ணீரும் சிந்தினர். கடமை-கண்ணியம்-கட்டுப்பாடு என்று உரக்கக் கூவினேன். காப்போம் அதை! என்று மக்கள் சமுத்திரம் எதிரொலித்தது.

நகரும் கிளிக்கூண்டு நகர்ந்தது. பொது மக்களிடமிருந்து - அழகுமிகும் தமிழகத்து வீதிகளிலிருந்து பிரிக்கப்பட்டோம். பின்னர் கல்லக்குடி பாதுகாப்பு நிலையத்தில் அடைக்கப்பட்டோம்.

மணி பத்து அடித்தது. சர்க்கிள் இன்ஸ்பெக்டர் அவசரமாகப் போலீஸ் ஸ்டேஷனுக்குள் வந்தார். எங்களைத் தவிர, பதினாலு பேரை எழுந்து நிற்கச் சொன்னார். எழுந்தனர். நீங்கள் கைது செய்யப்படவில்லை, வெளியே போங்கள் என்றார். போய்விட்டனர்.

அடுத்த வண்டி வரும் நேரமாகிவிட்டது. இந்த முறை என்ன நடைபெறுமோ என்று ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். இரண்டாவது படை புறப்பட்டுக் களத்தை நோக்கித் தெருவிலே செல்லும் பேரொலி எங்களுக்குக் கேட்டது. இனி வெளியுலகச் செய்திகளை எப்போதாவது கேட்கத்தானே முடியும்? பார்க்கத்தான் முடியாதே!

இரண்டாம் படையின் தலைவர் இராம சுப்பையா. அவர் தலைமையிலே படை போகிறது. உழைப்பு - ஓர் உருவம் பெற்று அது ஓடியாடி வேலை செய்து கொண்டிருக்கும் அதிசயத்தை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? பார்க்கவில்லையானால் இராம சுப்பையாவைப் பாருங்கள். அந்த உழைப்புப் பெற்ற உருவம்தான் அவர். தொண்டருக்குத் தொண்டர் என்று யார் யாரோ எவ்வெப்போதோ வர்ணிக்கக் கேட்டிருக்கிறோம், யார் யாரையோ பற்றி! அது உண்மையோ பொய்யோ தெரியாது. இதோ உண்மையின் ஒளி காரைக்குடி இராம சுப்பையாவை நம்முன், காட்டுகிறது. அவர் கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் குளிர்தரு - தருநிழல் - நிழல் தந்த சுகம்.

திருச்சி சிறைச்சாலையிலே நாங்கள் நானூற்றுக்கு மேற்பட்டோர் அமைத்த ராஜ்யத்திற்கு அவர்தான் உணவு மந்திரி.

தாயுள்ளம் படைத்தவர். பேயுள்ளமும் இரங்கும்படி பேசுபவர். இன்று நேற்றல்ல, என்றைக்கோ, என்னை மட்டுமல்ல, இயக்கத்தின் முன்னணி வீரர்கள் அனைவரையும் கவர்ந்தவர். அவருடைய தலைமையிலே சென்ற படை, களத்திலே எங்களைப் போலவே அறப்போர் புரிந்து அதிகார வர்க்கத்தினரால் பிடிக்கப்பட்டது.

அவர்கள் எங்களுடன் வந்து கலந்தனர். அந்த இருபத்தைந்து பேரிலே முதலில் எங்களிடமிருந்து சர்க்கிள் இன்ஸ்பெக்டரால் பிரிக்கப்பட்ட பதினாலு தோழர்களும் இருந்தனர். போலீஸ் ஸ்டேஷனில் நாங்கள் ஐவரும் (கருணாநிதி, சத்தி, கஸ்தூரி, குமாரவேல், குழந்தைவேல்) தனியாகப் பிரிக்கப்பட்டு, உட்கார வைக்கப்பட்டோம். மற்ற 31 பேர்களும் இராம சுப்பையா உட்படத் தனியாகப் பிரிக்கப்பட்டனர்.

அவர்கள் வருமாறு :- இராம சுப்பையா, ஜெயங்கொண்டம் வேணுகோபால், மலைக்கோட்டை ரத்தினம், அரியலூர் எத்திராஜ், தமிழ்முத்து, முனுசாமி, மருதமுத்து, பாண்டியன், கலைமணி,

முருகேசன், டி.எ. கமலம், பரமானந்தம், முருகேசன், ராமு, தங்கவேல், சின்னையா, சத்தி, அனீப், இராவணன், நல்ல மணியன், காளிதாஸ், சக்ரபாணி, சோமசுந்தரம், மருதநாயகம், வளர்மதி, முகமதலி, கிருஷ்ணமூர்த்தி, பாண்டு, ராமன், சின்னதுரை, நடராசன் ஆகியோர்.

போலீஸ் கூடத்திலே, அனைவரும் அமர்ந்திருந்தோம். அந்த ஸ்டேஷன் சப்-இன்ஸ்பெக்டர் எங்களைப் பாதுகாத்தபடி, எங்கும் போகாமல், அங்கேயே அமர்ந்து எங்களை எண்ணிப் பார்த்துக்கொண்டே கணக்கு சரியாக இருக்கிறதா என்பதில் கவனம் செலுத்தியவாறு இருந்தார்.

முப்பத்து ஒன்று என அவர்களை எண்ணி முடிப்பார். பிறகு எங்களை எண்ணுவார். மீண்டும் சந்தேகம் வரும், மீண்டும் எண்ணுவார். ஒன், டூ, த்ரீ சொல்லுங்கள் என்பார். சொல்லுவோம். முப்பத்து ஆறு முடியும். யாராவது இரண்டு முறை சொல்லியிருந்தால் என்ன செய்வது? என்பார். சரி, எல்லோரும் கை தூக்குங்கள் என்று கைகளை எண்ணுவார். யாராவது இரண்டு கையையும் தூக்கியிருந்தால் என்ன ஆவது? என்பார். மீண்டும் எண்ண ஆரம்பிப்பார். அவரும் இப்படி எண்ணிக் கொண்டேயிருந்தார். நாங்களும் எண்ணிக் கொண்டேயிருந்தோம். ஆட்களை அல்ல, ஆதிக்கக்காரர்கள் அரசோச்சும் நாட்களை!

(தொடரும்)

6-7-2002

2778. மூவரை அடைக்கும் கொட்டடியில் எட்டுபேர் நாங்கள்!

மும்முனைப் போராட்டம்; கல்லக்குடி களம்! 6

(நேற்றைய தொடர்ச்சி)

கவிஞர் கண்ணதாசன் முதலிய நண்பர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்கள் என்ற செய்தி கிடைத்தது. திருச்சி கலைமகள் பிரஸ் தோழர் ராதாகிருஷ்ணன் கைது செய்யப்பட்டார். அவர் என்ன ஆனார் என்று பார்க்கச் சென்ற தோழர் ஐ.எம். ஷரீபும் காவலில் வைக்கப்பட்டார்.

தூத்துக்குடி செயல்மணிகளும்....எதையும் தாங்கும் இதயங்கொண்ட சிங்க ஏறுகளும், கண்ணியம் - கட்டுப்பாடு - கடமையுணர்ச்சிகளில் கடுகளவும் வழுவாத கழகத்தின் கண்மணிகளுமான தோழர்கள் எம்.எஸ். சிவசாமி, கே.வி.கே. சாமி முதலிய எண்பதுக்கு மேற்பட்ட தோழர்களும் சதி வழக்கில் சம்பந்தப்படுத்தப்பட வேண்டும் என்ற திட்டத்தோடு கைது செய்யப்பட்டார்கள்.

சென்னையிலே மறியல் நடத்துவதற்காகச் சென்ற ஐம்பதுக்கு மேற்பட்ட தோழர்களும், அந்த அணிவகுப்புக்குத் தலைமையேற்று நடத்திய திருமதி சத்தியவாணிமுத்து அம்மையாரும், காஞ்சி ராசகோபாலும் ஜூலை 14ஆம் தேதியன்று கைது செய்யப்பட்டார்கள். 15ஆம் தேதி மறியல் போராட்டத்திற்குத் தலைமை வகித்த வேதாசலம் முதலிய ஐம்பதுக்கு மேற்பட்ட தோழர்களும் கைது செய்யப்பட்டார்கள் சென்னையிலே!

16ஆம் நாள் - ஆயிரம் இடர் அடுக்கிவரினும் அசையாத மன உறுதிபடைத்தவரும் - வடாற்காடு மாவட்டத்தில் கட்சிக்கோர் படை போன்றவருமான போளூர் சுப்பிரமணியம் தலைமையில் ஐம்பதுக்கு மேற்பட்ட நண்பர்கள் கைது செய்யப்பட்டனர்.

சிறை நிரம்புகிறது. நிரம்பி வழிகிறது என்ற செய்திகள் செவி நிரம்ப - சிந்தையிலே துடிப்பு நிரம்ப - நாங்கள் காவலுக்கிடையே அமர்ந்திருந்தோம்.

16ஆம் தேதி காலை 10 மணிக்கு டி.எஸ்.பி. வந்தார். எங்களையெல்லாம் உடனே அரியலூருக்கு அனுப்பும்படி சொல்லி விட்டுப் போனார்.

பிற்பகல் 12 மணிக்குப் போலீசார் செலவில் சாப்பாடு போடப்பட்டது. நாங்கள் கடைசியாக இலை போட்டுச் சாப்பிட்ட சாப்பாடு அதுதான்! சாப்பாடு முடிந்தது - போலீஸ் வண்டி வந்து நின்றது. எல்லோரும் அதில் ஏறி அமர்ந்தோம். வண்டி அரியலூர் நோக்கிப் புறப்பட்டது.

ஆம், எங்களுடைய சிறை யாத்திரை துவங்கி விட்டது.

எங்கள் வண்டிக்குப் பின்னால் ஒரு மோட்டார் கார். அது சிறிது தூரம் எங்களைத் தொடர்ந்து வந்தது. உள்ளிருந்து இரண்டு மூன்று பேர் வணக்கம் தெரிவித்தனர். அந்தக் காரில் சகோதரர் அரங்கண்ணலும் இருந்தார். அவர் தன் அன்புக் கரத்தை நீட்டிச் சென்று வருக! என்று அறிவித்தார். அவர் பற்றிய நினைவு என்னை எங்கேயோ அழைத்துச் சென்றது.

.....நீண்ட சிந்தனை. போலீஸ் வண்டி புழுதியை இறைத்தபடி போகிறது. பின்னால் வந்த மோட்டார் புழுதியில் மறைந்து வேறு பக்கம் திரும்பிவிட்டது. ஆனால் அரங்கு என் மனத்தை விட்டு மறையவில்லை.

1940ஆம் ஆண்டு - திருவாரூர் பள்ளியிலே படித்துக் கொண்டிருக்கிறேன். அப்போது படிப்பிலே கவனம் சென்றதைவிட அதிகமாக இயக்கத்திலே தான் சென்றது. என்னுடைய துணையாக இருந்தும், இணையாக இருந்தும் இயக்கத்தொண்டு புரிந்தவர் வ.கோ. சண்முகம் என்ற மாவெண்கோ.

பள்ளிப் பருவத்தில் எனக்குப் பரம விரோதியாக இருந்தவர் ஒருவர்! பெயர் ரங்கசாமி. என்னைக் கண்டால் அவருக்கு வேப்பங்காய் போலத்தான்! அழுத்தமான கதர்ச் சட்டையும் - சட்டையிலே காங்கிரஸ் சின்னமும் அணிந்து கொண்டிருந்த அந்த இளம் நண்பர் .... பள்ளித் தாழ்வாரத்திலே நடந்து செல்வதைப் பார்த்தாலே போதும்.....அவரது குழுவினரோடு சேர்ந்துகொண்டு

பரிகாச வார்த்தைகளைக் கொட்டிக் கும்மாளம் போடுவார். சில நேரங்களில் சிறு கல்லும் வீசுவார்.

ஏன்தான் இந்த ரங்கசாமிக்கு என் மீது இவ்வளவு காய்ச்சலோ தெரியவில்லையென்று எனக்கு நானே ஆச்சரியப்படுவேன் - வருத்தப்படுவேன். ஆனால், ஆத்திரப்படமாட்டேன். அதன் காரணமாகத்தான் ரங்கசாமி அவ்வளவு விரைவில் அரங்கண்ணலாக மாறிட முடிந்தது.

நாங்கள் தமிழ் மாணவர் மன்ற நிதிக்காக முதன் முதல் நடித்த பழனியப்பன் என்ற நாடகத்தில் தோழர் ரங்கசாமி - இல்லை - சகோதரர் அரங்கண்ணல் - டாக்டர் வேடம் தாங்கி நடித்தார். ரங்கசாமி அரங்கண்ணலானார். அரங்கண்ணல் நாடக டாக்டரானார். இப்போது குடிசை மாற்று வாரியத்தின் சார்பில் குடிசைப் பகுதி மக்களின் நலிவு போக்கும் டாக்டர்களில் ஒருவராகி விட்டார்.

அரங்குவைப் பற்றிய என் ஆழ்ந்த சிந்தனையோட்டத்தை அரியலூர் வந்து விட்டோம் என்ற குரல் தடுத்து நிறுத்தியது. அரியலூர் சப் ஜெயில் வாசலில் ஒரே கூட்டம். நாங்கள் வரப் போகிறோம் என்பதைத் தெரிந்து மக்கள் திரளாகக் கூடியிருந்தனர். வண்டியிலிருந்து இறங்கினோம். குழுமியிருந்தோரை வணங்கினோம், வாழ்த்தினோம். உள்ளே அழைத்துச் செல்லப்பட்டோம்.

அரியலூர் சப் ஜெயிலில் இருபதுக்குட்பட்ட கைதிகளையே வைக்க முடியுமாம். அங்கு எங்களுக்கு முன்பே வேறு வகைக் கைதிகள் பலர் இருந்தனர். நாங்களும் போன பிறகு மொத்தம் அறுபதுக்கு மேற்பட்டவரானோம். எங்கள் முப்பத்தாறு பேருக்கும் நாலைந்து கூண்டுகளை ஒதுக்கிக் கொடுத்தார்கள். ஒரு கூண்டில் இரண்டு பேர் தான் சௌகரியமாக இருக்க முடியும். ஏழு பேர், எட்டு பேரை ஒவ்வொரு கூண்டிலும் போட்டு அடைத்தார்கள்.

நான் - சத்தி - கஸ்தூரி - ராம சுப்பையா - வேணுகோபால் - மலைக்கோட்டை ரத்தினம் - அரியலூர் எத்திராஜ் - மற்றுமொரு நண்பர் ஆகிய எட்டுப் பேர் அடைக்கப்பட்டோம். காலடியால் சுமார் பத்து அடி நீளமும் எட்டு அடி அகலமும் உள்ள அந்தக் கொட்டடியில் எட்டுப் பேர்!

அதிலும் பாதிக்கு மேல் பயன்படுத்த முடியாத இடம். பெண்கள் அடைபட்டிருந்த கூண்டு. நாங்கள் சென்றதும் அவர்களை வேறு இடத்திற்கு மாற்றி விட்டு அந்த இடத்தை எங்களுக்கு அளித்தார்கள். சிறுநீர் கழிக்கப்பட்டு - எங்கள் மூக்குகளை எல்லாம் கம்பிக்கு வெளியேதான் நீட்டிச் சுவாசிக்க வேண்டும் என்ற நிலைமையிலே - அங்கு துர்நாற்றம் வீசிக் கொண்டிருந்தது.

மாலை ஐந்து மணிக்கு எங்களைத் திறந்து விட்டார்கள், மலஜலம் கழிப்பவர்கள் போகலாம் என்று. கக்கூஸ் என்று சொல்லப்படும் ஓர் இடத்தைக் காண்பித்தார்கள். லாங் ஜம்ப் தெரிந்தவர்கள் தான் உள்ளே சென்று அமர முடியும்.

காரணம் கால் வைப்பதற்காகப் போட்டிருந்த அந்தக் கற்கள் ஒன்றுக்கொன்று இடையே அவ்வளவு தூரத்திலிருந்தன.

பிறகு சாப்பிடுவதற்குக் கூப்பிட்டார்கள். குப்பையும் கூளமும் சேர்ந்த ஒரு தரையிலே - ஆமாம் புழுதிமண்ணிலே - உட்காருங்கள் என்றார்கள். உட்கார்ந்தோம். உணவு வந்தது. இல்லை - இல்லை ஆளுக்கொரு சட்டி வந்தது. மண் சட்டி! பிறகுதான் உணவு வந்தது.

அறுசுவை உணவு என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். நானும் கேள்விப்பட்டிருக்கிறேன். அறுசுவை உணவு என்றால் அறுவகை ருசி நிறைந்த சாப்பாடு என்று தான் அர்த்தம் சொல்லக் கேட்டிருக்கிறோம்.

அரியலூரிலே எங்களுக்குத் தந்த அறுசுவை உணவுக்கு ஒரு புது அர்த்தமுண்டு. அறுசுவை = சுவை அறுந்த; உணவு = சாப்பாடு எனப்படும் கொடுமை!

சுவை அறுந்துபோன கொடுமையை மண் சட்டிகளில் கொட்டினார்கள். மஞ்சள் வண்ணச் சோறு! பஞ்ச வண்ணக் குழம்பு! உப்பிலும் - புளியிலும் - காரத்திலும் சேராமல் சுயேச்சையாக வந்து விழுந்த பரங்கிக்காய்த் துண்டை எடுத்து வாயில் வைத்தோம்! எப்படியோ எதிர்நீச்சல் போட்டு அது வயிற்றுக்குள் போய்விட்டது.

எல்லாத் தோழர்களும் சோற்றைத் தொடாமலே என்னையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

உம், சாப்பிடுங்கள் என்று கூறிவிட்டு நான் சோற்றைக் கிள்ளி வாயில் போட்டுக்கொண்டேன். அண்ட சராசரங்களும் சுழலுதண்ணே! அடிவயிற்றிலிருந்து குமட்டுதண்ணே என்று நாங்கள் பாடவில்லை. அகத்தின் அழகை முகத்தில் காட்டாமல் இருக்க முடியவில்லை.

சோற்று உருண்டைகளைக் கீழே கொட்டிவிட்டுச் சட்டிகளைக் கழுவி வைத்துவிட்டு-முப்பத்தாறு பேரும் அணி வகுத்தோம். நாலு நாலு பேராக!

பிறகு பழையபடி கூண்டுகளில் அடைக்கப் பட்டோம்.

எங்கள் கல்கத்தா இருட்டறையில் எட்டுப் பேர்! இரவு வந்தது. இரண்டு நாள் சரியான உணவு இல்லாத எங்களுக்குத் தூக்கமாவது வந்ததா? அதுவுமில்லை! வந்தால்தான் படுப்பதற்கு இடமேது! பூச்சிகள் வந்தன. கொசுக்கள் வந்தன. வராதவை களில் முக்கியமான ஒன்று காற்று - எட்டுப்பேர் - வியர்வையோ கொட்டுகிறது - சட்டையைக் கழற்றினால் கொசுவோ துளைக்கிறது! மூலையில் உட்கார்ந்து தூங்கினர் மூவர்! வேணு, ரத்தினம், எத்திராஜ்!

ஆபாசமாயிருந்த பகுதியில் காலை மட்டும் நீட்டிக் கொண்டு உடலைப் புழுப் போல சுருட்டிக் கொண்டார் சத்தி. அவர் கால்புறத்திலே தலையை வைத்து வளைந்து கிடந்தார் கஸ்தூரி. கலங்கிய கண்களுடனே இராம சுப்பையா என்னைப் பார்த்து, என் மடியில் சாய்ந்துகொள்ளுங்கள் என்றார். முயன்றேன். முடியவில்லை. பிறகு ஒரு வழி கண்டு பிடித்தேன். காற்றும் லேசாக வரும். உடம்பையும் உருட்டாமல் இருக்கலாம் என்ற எண்ணத்துடன் சிறைக் கம்பியைப் பிடித்துக்கொண்டு நின்று கொண்டே சிறிது நேரம் தூங்கினேன்.

இரவு இரண்டு மணி இருக்கலாம். சரியாகத்தான் நேரம் தெரிய முடியாதே! டிப்டி சூப்பரின்டெண்டெண்ட் வந்தார். ஏன் நிற்கிறீர்கள். தூங்க வில்லையா? என்றார். பரவாயில்லை என்றேன். போய்விட்டார்.

எப்படியோ வாழ்க்கையிலே அதுவரையில் தொட்டறியாத கஷ்டத்தை அந்த இரவு வேளையில் அரியலூர் சிறையில் அனுபவித்தோம். படாதபாடு பட்டு இரவை நகர்த்தினோம்.

காலையிலே அரிசிக் கஞ்சி கொடுத்தார்கள்.குடலைக் காயவிடாமல் பார்த்துக் கொண்டோம். மறுபடியும் அடைத்துவிட்டார்கள். அன்றையதினம் ஜூலை 17ஆம் தேதி! சென்னை மறியலிலே அருப்புக் கோட்டை தந்த வீரர் கவிஞர் எம்.எஸ்.ராமசாமி அவர்கள் தலைமையில் முப்பதுக்கு மேற்பட்டோர் கைது செய்யப்பட்டார்கள். கல்லக்குடியிலே தாக் குண்டு வைத்தியசாலையிலிருந்த கவிஞர் கண்ணதாசனும் கைது செய்யப்பட்டார்.

வெளியிலே என்ன நடக்கிறதோ தெரியவில்லையே என்ற ஆவலுடன் அடைந்து கிடந்தோம் கூண்டுக்குள்.

பிற்பகல் உணவுக்காகத் திறந்து விட்டார்கள். எங்களைத் திறப்பதற்காக வார்டர் கொஞ்ச தூரத்தில் வருவது எங்களுக்கு முன்பே தெரிந்துவிடும். அவர் கையிலுள்ள சாவிக் கொத்திலிருந்து எழும்பும் ஒலியைக் கேட்டதும் இராம சுப்பையா சொல்லுவார், திறக்கப் போகிறார்கள் என்று! பிற்பகல் அங்குள்ள மற்றக் கைதிகளை நாங்கள் சந்திக்க வாய்ப்பு ஏற்பட்டது.

வயதான நாலைந்து தாய்மார்கள் சிறையிலிருந்தார்கள். சாராய வழக்கிலே கைது செய்யப்பட்டவர்கள். சுமார் இருபத்தைந்து வயதுள்ள வாலிபனைக் கண்டோம். கள்ளக்காதலின் காரணமாகக் காதலியின் கணவனைக் கொன்றுவிட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டவன். கட்டுமஸ்தான தேகம் படைத்த இளைஞன். அவனுடைய காதலியும் அங்கே வேறு கூண்டில் அடைபட்டிருந்தாள். அவள் மீது அவன் கொண்ட பாசமும் அவன் மீது அவள் கொண்ட பாசமும் - கணவனைக் கொல்வது என்ற மோசத்திலே கொண்டுபோய் விட்டதாக வழக்கு! அந்த இளைஞன் சொன்னான், நானும் அவளும் ஆசைக் காதலர்கள் என்று! அவனுக்கோ வயது இருபத்தைந்து இருக்கும். அவன் ஆசை ஜோடிக்கோ - அறுபதுக்குள் தான் இருக்கும். புனிதமான காதல்! பொருத்தமான காதல்! காதலுக்குக் கண்ணில்லை என்கிற போது வயது மாத்திரம் எதற்காக? என்ற கேள்வியின் சரியான பதிலாக நின்றார்கள் அந்த இளங் காதலர்கள் - இல்லை கிழக் காதலர்கள். அதுவுமில்லை - பழுப்புத் தளிர்க் காதலர்கள். சாராயத் தொழிலைக் குடிசைத் தொழிலாகக் கொண்ட இன்னும் சில ஆண் மக்களும் அங்கே கைதிகளாக இருந்தனர். அவர்களுடன் பேசிக் கொண்டிருக்கும்போதே பிற்பகலில் உணவு வந்துவிட்டது.

அருமையான சோளக்களி. சோளத்தின் மாவிலே செய்யப்பட்ட சுவையான உணவு(?)! அதன் தலையில் கொஞ்சம் குழம்பு என்று சொல்லப்பட்ட ஏற்பாட்டையும் ஊற்றித் தொலைத்தார்கள். எண்ணெய் அபிஷேகம் செய்யப்பட்ட லிங்கப் பெருமான் போல சோளக்களி நின்று கொண்டிருந்தது சட்டியிலே!

சோறு எதுவும் கிடையாதோ? என்றோம். மாலையிலேதான் மஞ்சள் சோறு என்றார்கள். மோர் உண்டு இப்போது என்றார்கள்.

கொடுங்கள், கொடுங்கள் என்று குவளையை நீட்டினோம். மோர் சாப்பிட்டதோடு பிற்பகல் உணவு முடிந்தது. சோளக்களியை யார் தொட முடியும்? அதுதான் தொட்டாலும் அசையாத நிலையில் இருந்ததே!

மீண்டும் பூட்டினார்கள். மாலை மூன்று மணிக்குக் கொஞ்சம் மணிலாக் கொட்டையைக் கொடுத்து எல்லோரும் சாப்பிடுங்கள் என்று அன்பு பொழிந்தார்கள். பிறகு மாஜிஸ்டிரேட் வந்தார். இன்றைய தினமே உங்கள் விசாரணை இருக்கிறது என்று கூறிவிட்டுப் போனார்.

சிறிது நேரத்தில் எங்களை அழைத்தார்கள். சென்றோம்.

(தொடரும்)

8-7-2002

2779. அரியலூர் நீதிமன்றம் அளித்த தீர்ப்பு!

மும்முனைப் போராட்டம்; கல்லக்குடி களம்! (7)

(நேற்றைய தொடர்ச்சி)

நீதிமன்றம்! அங்கே நாங்கள் ஐவர் முதலில் விசாரிக்கப் பட்டோம். பின்னர் இராம சுப்பையாவும், முப்பது தோழர்களும் விசாரிக்கப்பட்டனர்.

டால்மியாபுரம் பெயரை மாற்ற வேண்டுமென்று வரி கொடுக்கும் பிரஜைகளின் சார்பாகக் கிளர்ச்சி நடத்தியது குற்றமாம்!

கல்லக்குடி எனும் தமிழ்ப் பெயரை விரும்பியது தகாத செயலாம்!

ஆகவேதான் நாங்கள் ஈடுபட்ட அறப் போருக்குக் களங்கம் கற்பிக்கப்பட்டது.

நீங்கள் குற்றம் செய்திருக்கிறீர்கள் அல்லவா?

குற்றமல்ல - குறிக்கோளை நிறைவேற்றக் கையாண்ட அமைதியான முறைதானிது!

“உங்கள் செயல் குற்றமாகத்தான் கருதப் படுகிறது”
“சட்டப்படி இருக்கலாம் - நியாயப்படி அல்ல”

நீதிமன்றம் தீர்ப்பு வழங்கத் தயாராகிவிட்டது. வெளியிலே நூற்றுக்கணக்கான மக்கள் தீர்ப்பை எதிர்பார்த்து நின்றனர், மழைக்கிடையிலேயுங்கூட!

இராம சுப்பையாவும், முப்பது தோழர்களும் இரண்டு மாதம் கடுங்காவல் அனுபவிக்க வேண்டும். முப்பத்து ஐந்து ரூபாய் அபராதம். கட்டத் தவறினால் ஒரு மாதம் சிறை! மொத்தம் மூன்று மாதத் தண்டனை!

சட்டம் கொட்டிவிட்டது அவர்களை!

எங்கள் பக்கம் திரும்பியது சட்டம்!

ஆறு மாதத் தண்டனை!
கடுங்காவல் தண்டனை!

ஒரே குற்றம் - இரண்டு விதத் தண்டனை!

போராட்டத் தலைவன் என்ற முறையில் எனக்கும் என்னுடன் சேர்ந்த நால்வருக்கும் ஆறு மாதம்.

அடுத்த படை வரிசையென்ற முறையில் மற்றவர்களுக்கு மூன்று மாதம்.

அதுவும் தவறு - அவர்களில் ஆறு பேர் முதல் படை வரிசையிலே கைது செய்யப்பட்டவர்கள்.

எப்படியோ! சட்டம் ஆறு மாதம், மூன்று மாதம் என்று பரிசுகளை அளித்து மகிழ்ந்தது!

17ஆம் நாள் மாலை 6.30 மணி சுமாருக்குத் தண்டனை பெற்றோம். தமிழர் மானத்துக்காகப் போராடியதற்குப் பரிசு பெற்றோம்.

என்ன சார்? அவர்களுக்கு மூணு மாதம், நமக்கு ஆறு மாதம்? என்று சிரித்துக் கொண்டே கேட்டார் முல்லை சத்தி.

"ஆமாம், நமக்கு ஆறு மாதம்தான்" என்றேன்.
"ஏன் அப்படி?" என்றார் வேணுகோபால்.

அதற்கு மேல் தண்டனை தர அரியலூர் கோர்ட்டுக்கு அதிகாரமில்லை என்றேன்.

தீர்ப்பைக் கேள்வியுற்ற அரியலூர் மக்கள் மாஜிஸ்டிரேட் கோர்ட்டுக்கு முன்பு திரளாக நின்றிருந்தனர். கூட்டம் கலைந்த பிறகு எங்களை அனுப்ப வேண்டும் என்ற திட்டத்துடனோ என்னவோ கோர்ட் வாசலிலேயே நல்ல இருட்டில் எங்களை உட்கார வைத்துவிட்டனர்.

ஆகாகா! ஒரு முக்கிய விஷயத்தை மறந்து விட்டேனே? மாலையில் எங்களுக்கு மஞ்சள் சோறு போட்டுத்தான் பிறகு தீர்ப்புக் கூறினார்கள்.

ஆறு மாதமென்ன - ஆறு வருடமே போடட்டும்! அரியலூர் நரகத்திலிருந்து - மன்னிக்கவும் நகரத்திலிருந்து வேறு சிறைச்சாலைக்கு அனுப்பப் போகிறார்களே என்ற

மகிழ்ச்சி எங்கள் எல்லோருக்கும். மூன்று மாதத் தண்டனை பெற்றவர்களுக்கெல்லாம் முகம் சுருங்கிவிட்டது. வாடி விட்டது. வதங்கி விட்டது! காரணம், எங்களுக்கு ஆறு மாதம் கிடைத்து விட்டதாம். அந்தப் பொறாமையால்தான் - வேறென்ன?

இரவு எட்டு மணி சுமாருக்கு எங்களில் இருபத்தைந்து பேரை ஏற்றிக் கொண்டு போலீஸ் வண்டி புறப்பட்டது. மிச்சம் பதினொரு தோழர்களுக்கு வண்டியில்லாததால், பிடியுங்கள் சாபம்! இன்னும் ஐந்தாறு நாட்கள் அரியலூர் ஜெயிலில் இருங்கள் என்று அங்கேயே அவர்களை மட்டும் வைத்துக் கொண்டனர்.

நாங்கள் இருந்த வண்டி இருட்டையும், இடையிடையே தோன்றிய மின்னலையும், மழையையும் கிழித்துக் கொண்டு திருச்சி நோக்கிப் புறப்பட்டது.

வெளியிலே எவ்வளவு மழை பொழிகிறது என்பதை எங்களால் கணக்கிட முடிந்தது. எப்படியென்கிறீர்களா? பெய்த மழை முழுதும் எங்கள் தலையிலேதான் பெய்தது.

அரியலூருக்கும், திருச்சிக்கும் இடையே உள்ள சாலை இருக்கிறதே, அடடா, தார் ரோடுதான் (20 ஆண்டுகளுக்கு முந்திய நிலை).

தார் என்றால் வண்டிக்காரர்கள் மாடுகளைக் குத்த உபயோகிப்பார்களே அந்தத் தார் எனப் பொருள் கொள்க. (வாழைத் தார் எனக் கொள்ளினும் கொள்க)

மேலே வானத்திலே இடி! எங்கள் வண்டி போகும் வேகத்திலே இங்கே ஒருவர் மேல் ஒருவர் இடி!

ஒரு தோழர் பாடினார், அவரையறியாமலே பிர்க்காக்கள் உருண்டன. அவ்வளவு அசைவற்ற நிம்மதியான சவாரி!

எவ்வளவு தொல்லைகள் இருந்தால் என்ன, அந்த அரியலூர் காராக்கிரகத்தையும், கக்கூசையும் விட்டு வந்தோமே என்ற ஆறுதல் எல்லாத் தோழர்களுக்கும் ஏற்பட்டது.

வானம் உறுமிக் கொண்டேயிருந்தது. சூடேறியிருந்த எங்கள் உடலிலே மழைத் துளி பன்னீர் போலக் கொட்டிக் கொண்டேயிருந்தது.

மழை - தமிழகத்தின் வளப்பத்தைச் சொல்லிற்று!

இடி - தமிழரின் மனக் குமுறலுக்கு அடையாளமாயிருந்தது!

இரவு ஒரு மணிக்குத் திருச்சி வந்து சேர்ந்தோம். மழை நின்றபாடில்லை. திருச்சியில் தெருவெல்லாம் மழை நீர் ஓடிக் கொண்டிருந்தது. மலைக் கோட்டையின் உச்சியிலே பச்சை விளக்கு எரிந்து கொண்டிருந்தது. நகர் முழுவதும் பூரண அமைதி நிலவிக் கொண்டிருந்தது.

நடுநிசியிலே, நகர் அடங்கிய நேரத்திலே - நாங்கள் கைதிகளாகக் கொண்டு செல்லப்பட்ட அந்தக் காட்சியைச் சித்தரிக்க இயலாதுதான். நனைந்து போன ஆடை; நடுங்கும் உடல்; ஆனால் தெளிந்த உள்ளம் - இவைகளோடு எங்கள் பயணத்தின் கடைசிப் பகுதியை முடித்தோம்.

ஈரத்தின் கனத்தையும் தூக்கிக் கொண்டு அதோ எங்கள் இலட்சியக் கொடிகள் பறந்து கொண்டிருக்கின்றன. அவை காட்டிய வழியிலே நாங்களும் பயணம் நடத்திக் கொண்டிருக்கிறோம்.

மலைக்கோட்டையின் பச்சை விளக்கு மறைந்து விட்டது.

நாங்கள் அங்கே ஒரு புதிய ராஜ்யத்தை அமைத்து விட்டோம். அந்த ராஜ்யம் இரண்டு மாத காலம் மிக அற்புதமாக நடைபெற்றது. அதற்குப் பிறகு நூறாகி - ஐம்பதாகி - மாறி விட்டோம். இரண்டு மாதம் நடைபெற்ற எமது ராஜ்ய நிர்வாகத்தைச் சொல்லாமலிருக்க முடியவில்லை. முதலில் ராஜ்ய அமைப்பைக் கூறுகிறேன். சி.பி. பிளாக் எனப்படும் - நாங்கள் அடைக்கப்பட்டிருந்த இடம் நான்கு பெரும் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு பகுதியிலும் நூறு பேருக்கு மேல் அடைக்கப்பட்டிருந்தோம். ஒவ்வொரு பிளாக்குக்கும் அதாவது சராசரி நூறு பேருக்கு ஒரு துணைத் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். நானூறு பேரும் வசதியாகக் குளிப்பதற்கும், குடிப்பதற்குமான தண்ணீரைப் பெற ஜல ஸ்தாபன மந்திரி ஒருவர் நியமிக்கப்பட்டார்.

உணவு மந்திரி ஒருவர், கடிதப் போக்குவரத்து, உள்நாட்டு விவகாரங்களைக் கவனித்து ஜெயில் அதிகாரிகளிடம் தொடர்பு வைத்துக் கொள்ள ஓர் உள்நாட்டிலாகா மந்திரியும் உண்டு. மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லுதல், தனி உணவுகளை நோயுள்ளவர்களுக்குப் பெற்றுத் தருதல் போன்றவைகளுக்குச் சுகாதார மந்திரி ஒருவர். மக்கள் மன்றம் அமைத்தல் - கூட்டுதல் - கலைத்தல் - தலைமை நிலையத்திலிருந்து இல்லை - ஆட்சி

பீடத்திலிருந்து வெளியாகும் அறிக்கைகளை உடனுக்குடன் அறிவித்தல் - முதல்வர் எனப்படும் தலைவருக்கு ராஜ்ய நிலைமையை எடுத்துரைத்தல் - ஆகிய காரியங்களுக்காக ஒரு பிரதமச் செயலாளர் உண்டு.

ஒவ்வொரு பிளாக் தலைவருக்கும் ஒரு துணைத் தலைவர் உண்டு. பிளாக் தலைவர்கள் ஒவ்வொருவரும் நூறு பேரைக் கட்டிக்காத்தல், அவர்களுக்கு ஆவன செய்தல், இதுபோன்ற காரியங்களில் ஈடுபட வேண்டும். மக்கள் மன்றம் - பேச்சு மன்றம் என்றும் அழைக்கப்படும். அது நாள்தோறும் கூடும். மன்றத்தின் ஒவ்வொரு அலுவலரும் தேர்தலில் வெற்றி பெற்றவர்களேதான்! மன்றத்தின் அனுமதியோடு பொறுப்பேற்றுப் பணியாற்றுகிறவர்கள்.

அவர்கள் வருமாறு :

தலைவர்	: மு. கருணாநிதி
துணைத் தலைவர்	: மன்னை நாராயணசாமி
முதல் பிளாக் தலைவர்	: பேராவூரணி அடைக்கலம்
துணைத் தலைவர்	: வடிவேலு
இரண்டாம் பிளாக்தலைவர்	: தஞ்சை பட்டு
துணைத் தலைவர்	: பக்கிரிசாமி, கிருஷ்ணன்
மூன்றாம் பிளாக் தலைவர்	: மாயவரம் கிட்டப்பா
துணைத் தலைவர்	: வள்ளுவதாசன்
நாலாம் பிளாக் தலைவர்	: இராம சுப்பையா
துணைத் தலைவர்	: தஞ்சை கோபால்சாமி
உணவு மந்திரி	: இராம சுப்பையா
உள்நாட்டு இலாகா	: முல்லை சத்தி
சுகாதார மந்திரி	: புகாரி சாகிப்
ஜல ஸ்தாபன மந்திரி	: அய்வநல்லூர் வேலு
பிரதமச் செயலாளர்	: வேணுகோபால்

மேற்கண்டவாறு இலாகாக்கள் பிரிக்கப்பட்டு எல்லோரும் பதவியேற்றனர். உணவு பரிமாறுதல் - தேவைகளைக் கேட்டல் - சிகிச்சைக்கு அனுப்புதல் முதலிய எல்லாக் காரியங்களையும் சிறைச்சாலை வார்டர்கள் கவனித்து வந்தார்கள். எங்கள் ராஜ்யத்தில் மட்டும் மேற்கண்ட எல்லாப் பொறுப்புகளையும் எமது மந்திரி சபையும், மக்கள் மன்றமும் ஏற்றுக் கொண்டன.

எமது ராஜ்யத்தின் ஒருநாள் நடவடிக்கைகளை முதலில் விளக்குகிறேன். சிறப்பான நிகழ்ச்சிகளைத் தனித்தனித் தலைப்புகளின் மூலம் பிறகு விவரிக்கிறேன். காலை ஆறு மணிக்கு எங்கள் கூண்டுகளின் கதவுகள் திறக்கப்படும். காலைக் கடன்களை முடித்து விட்டுக் கஞ்சி உணவுக்குப் பிரஜைகள் தயாராகி விடுவார்கள்.

நான்கு பிளாக் தலைவர்களும் வேப்ப மரத்தடியில் கூடி, இன்றைய தினம் யார் யார் கஞ்சி பரிமாறுவது, எந்த பிளாக்கிலிருந்து ஆரம்பிப்பது என்பது போன்ற அலுவல்களை ஆலோசிப்பார்கள். அதற்குள் கஞ்சி அண்டாக்கள் வந்துவிடும். அந்தப் பெரிய அண்டாக்களை அங்குள்ள கிரிமினல் கைதித் தோழர்கள்தான் தூக்கி வருவார்கள். ஒவ்வொரு பிளாக் பிரஜைகளும், க்யூ வரிசையில் நின்று கஞ்சியை வாங்கிக் கொண்டு போவார்கள்.

கஞ்சி ஒரு நாளைக்குக் கெட்டுப் போயிருந்தால் உடனே தலைவரிடம் நாலு பிளாக் தலைவர்களும் அறிக்கை சமர்ப்பிப்பர். தலைவர் அதை வார்டரின் கவனத்திற்குக் கொண்டு போவார். ஜெயில் அதிகாரம் உடனடியாகக் குறையைக் கவனிக்க முயற்சி எடுத்துக் கொள்ளும். கஞ்சி முடிந்த பிறகு, குளிக்கும் இடத்தில் பிரஜைகள் கூடுவர். ஐம்பது பேர் ஒரே காலத்தில் குளிக்க வசதியுடைய தண்ணீர்த் தொட்டி. அதில் நானூறுக்கு மேற்பட்டோரைச் சௌகரியமாகவும், எல்லோரும் குளிக்கக் கூடிய அளவுக்குத் தண்ணீரைச் சேதப்படுத்திவிடாமலும் குளிக்க வைத்திடும் பொறுப்பை ஜல ஸ்தாபன மந்திரி தானே நேரில் நின்று கவனிப்பார்.

ஒவ்வொருவரும் எத்தனை குவளைகள் ஊற்றிக் கொண்டார்கள் என்ற கணக்குப் பார்த்து, அளவுக்கு மேலாகிவிடாத

நிலையில் அங்குமிங்கும் ஆடியோடி, கட்டுப்படுத்தித் தண்ணீர் தட்டுப்பாடில்லாமல் பார்த்துக் கொள்வார்.

நீர் மேல் நடக்கலாம் என்று தாயுமானவர் பாட்டுப் படித்திருக்கிறோம். அப்படி நடந்து காண்பித்தவர் தோழர் வேலு. ஆமாம்! ஜல ஸ்தாபன மந்திரி! தண்ணீர்த் தொட்டியின் மேலேயே காலை முதல் பிற்பகல் மூன்று மணி வரையிலே நடை பழகுவார். அவர் போட்டிருந்த பனியனுக்குட்பட்ட பாகமெல்லாம் சிவப்பாகவும் மற்ற இடமெல்லாம் கறுப்பாகவும் மாறி ஆளே இரு வண்ண மனிதனாகத் தோன்றினார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன், அவர் பட்ட கஷ்டத்தை!

(தொடரும்)

9-7-2002

2780. அண்ணாவும் ஐயாயிரவரும் சிறைப்பட்ட கொடுமை!

மும்முனைப் போராட்டம்; கல்லக்குடி களம்! (8)

(நேற்றைய தொடர்ச்சி)

கஞ்சிக்கும் குளியலுக்குமிடையிலே, பிளாக் வாசல்களில் ஒரு ஒலி கிளம்பும். ஆஸ்பத்திரி! ஆஸ்பத்திரி! என்ற ஒலி. அது போன்ற சத்தம் நமது ஊர்த் தெருக்களிலே கிளம்பினால் சரிதான், சான்ஸ் எதுவும் கிடைக்காமல் யாரோ ஒரு டாக்டர், ஆஸ்பத்திரியை விலை கூறுகிறாராக்கும்! என்று நினைப்போம். சிறை ராஜ்யத்திலே வரும் இந்த ஒலி வேறு. சுகாதார மந்திரி புகாரி சாகிப் தன்னுடைய தேன் கூடு வடிவமுள்ள தாடியைத் தடவியபடி, ஆஸ்பத்திரிக்கு யாராவது வருகிறீர்களா? என்று கூவுவார். அவர் ஓர் ஐம்பது பேரையாவது தினந்தோறும் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று திரும்புவார்.

வந்த பத்திரிகையை எடுத்துக் கொண்டு பிரதமச் செயலாளர் வேணு ஓடுவார். நான்கு பிளாக்குகளுக்கும் பத்திரிகைகளை அனுப்பி அவற்றை பத்திரமாக எடுத்து வரும் வேலையை அவர் விரிவாகக் கவனிப்பார். பிற்பகல் ஒரு மணிக்குள்ளாகவே அநேகமாக உணவு வந்து விடும். வெள்ளைத் துணியால் மூடப்பட்டு நீண்ட கட்டில் எனப்படும் ஒன்றை நாலு பேர் தூக்கி வருவார்கள். முன்னே சட்டி வரும். அதிலே குழம்பு வரும். இப்படி நாலைந்து பெரும் சட்டிகளும், நாலைந்து கட்டில்களும், ஓர் அண்டாவில் மோருமாக எங்கள் ராஜ்யத்து உயிர் வாழும் பொருள் - உணவு என்னும் தண்டனை - வந்து சேரும். சிறையிலே தரப்படும் பெரிய தண்டனை உணவுதான்! சிறையிலே பெருங்குற்றம் எனக் கருதப்படுவது அதைச் சாப்பிட மறுப்பதுதான்!

சாப்பாடு முடிந்ததும் சிறிது நேரம் களைப்பாறும் படலம். உடனே உள்நாட்டு இலாகா மந்திரி சத்தியின் வேலை துவங்கும். மாதம் இரண்டு முறை தபால் கார்டு கொடுப்பார்கள். அவைகளைக் கணக்குப் பார்த்து, எழுதியவைகளை வாங்கி

அதிகாரிகளிடம் அனுப்பி, எழுதாதவைகளை எழுதச்சொல்லி, கார்டு வராதவர்களுக்குக் கார்டு வாங்கிக் கொடுத்து அந்த அலுவல்களைக் கவனிப்பார். புத்தகம் வேண்டுமென்பவர்களுக்குப் புத்தகமளித்துப் படித்தவைகளை வாங்கிக் கணக்குச் சரிபார்த்து, வாசகசாலையில் ஒப்படைக்க முயற்சி எடுத்துக் கொள்வார். இதற்குள் இண்டர்வியூ வரும். சிறையில் உள்ள தோழர்களைச் சந்திக்க நண்பர்களோ, உறவினர்களோ வருவர். அந்தத் தகவலை எடுத்துக் கொண்டு வேணுகோபால் ஓடுவார். நானூறு பேரில் அவர்களைச் சிரமப்பட்டுக் கண்டுபிடித்து இண்டர்வியூவுக்கு அனுப்பி வைப்பார். புகாரி சாகிபின் ஆஸ்பத்திரிக் கூவல் மீண்டும் கிளம்பும். மாலை நான்கு மணிக்கு மக்கள் மன்றத்தைக் கூட்டும் பொறுப்பை வேணுகோபால் சரிவரச் செய்து முடிப்பார். அந்தந்த பிளாக் தலைவர்களும், தங்கள் தோழர்களுடன் மக்கள் மன்றத்திற்கு வந்து சேருவார்கள்.

மக்கள் மன்றம் நாள்தோறும் தலைவரின் தலைமையிலே தொடங்கும். சிறைச்சாலையில் நடந்து கொள்ள வேண்டிய முறை பற்றியும், கழகத்தின் கடமை, கட்டுப்பாடு பற்றியும் சொற்பொழிவு நிகழ்த்தப்படும். தினம் ஒரு பொருளின் மீது பல தோழர்கள் உரையாற்றுவார்கள். இறுதியில் தலைவரின் முடிவுரையுடன் மன்றம் கலையும். சிறு குற்றம் செய்தவர்களும் மன்றத்தில் விசாரிக்கப்பட்டுப் பெரும் பான்மையோர் எண்ணத்திற்கு இணங்க மன்றத்தின் முன்பு மன்னிப்புக் கேட்டுக் கொள்வார்கள்.

மாலை 5.30 மணிக்கெல்லாம் இரவு உணவு வந்துவிடும். அப்போது சோளக்களி வராது. அரிசிச் சோறு அளவில் கொஞ்சம் பெரியதாய் வரும். மோர் வராது. கடலை உருண்டை வரும். குழம்பு உண்டு. சாப்பாடு முடியும். மாலை ஆறு மணிக்கெல்லாம் மூன்று மூன்று பேராகக் கூண்டுகளில் அடைக்கப் படுவார்கள். நாங்கள் பி வகுப்புக்காரர்கள். தனித்தனியே ஒவ்வொருவராகத்தான் அடைக்கப்படுவோம். சில கூண்டுகளிலேயுள்ள ஆண் குயில்கள் பாட ஆரம்பிக்கும். அந்த மகுடித் தொனி கேட்டுப் பாம்புகள் வந்து விடும். பாம்புகளுக்கு வேறுடேட்டி இருந்தால் தேள்களையாவது அனுப்பி வைக்கும். அந்தத் தேள்கள் நமது தோழர்கள் பலரை முத்தமிட்டிருக்கின்றன. இரவு பத்து மணிக்கு அநேகமாக எமது ராஜ்யம் அடங்கிவிடும்.

ஆறு மணிக்குத் தோழர்கள் அடைக்கப்பட்டதும், கைதிகளின் எண்ணிக்கை சரியாக இருக்கிறதா என்று பார்க்க ஹெட்

வார்டர் எல்லா பிளாக்கிற்கும் சென்று சுற்றிப் பார்த்து வருவார். கடைசியாக எங்கள் நாலாம் பிளாக்கிற்கு வருவார். உம், கணக்கு வந்து விட்டது என்போம் நாங்கள்.

சிறைச்சாலை முழுதும் பல இடங்களிலே சுவர்களில் ஒரு வகையான சாவி பொருத்தப்பட்டு, அந்த இடங்களுக்கு ஒரு மணிக்கு ஒரு தரம் வார்டர் சென்று, தன்னிடமுள்ள கெடிகாரத்திற்கு அந்தச் சாவியைப் போட்டுவிட்டு வரவேண்டும். வார்டர் எங்கும் நிற்கமுடியாது. சுற்றியபடியே காவல் காக்க வேண்டும். நின்றால், அவரிடமுள்ள கடிகாரம் காட்டிக் கொடுத்துவிடும். அவர் இரவு நேரத்தில் கையில் ஒரு விளக்குடன் போய்க் கொண்டிருப்பது எங்களுக்குத் தெரியும். அவரைப் பார்த்து நாங்கள் மணி தெரிந்து கொள்ளுவோம். அதற்காகத்தானோ என்னவோ, சிறையில் அவர் போனால், கடிகாரம் போகுது என்கிறார்கள்! நாங்களும் கணக்கு வருது! கடிகாரம் போகுது! என்றுதான் சொல்லுவோம்.

இப்படி எங்கள் ராஜ்யம் நடந்து கொண்டிருக்கும் போதுதான் சென்னையில் ராஜாஜி வீட்டு முன் மறியல் அறப்போரில் தலைமை வகித்த தோழர்களான முனிசாமி, வி.டி. அண்ணாமலை, எஸ். அப்பாவு, சி.வி.எம். அண்ணாமலை, ஏ.கே. சாமி, அப்போதைய வடார்க்காடு மாவட்டச் செயலாளர் ஏ.எல்.சி. கிருஷ்ணசாமி, சம்பந்தம், இன்மொழியன், நடராசன், அரசு ஆகியோரும் முன்னூறுக்கும் மேற்பட்ட தோழர்களும் கைது செய்யப்பட்டார்கள்.

பொதுச் செயலாளர் அண்ணா, நாவலர் நெடுஞ்செழியன், சம்பத், மதி, என்.வி.என். ஆகிய ஐவரும் நிபந்தனையின்றிச் சொந்த ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டு அவர்கள்மீது வழக்கும் தொடரப்பட்டது. டால்மியாபுரப் போராட்டம், புதுக் கல்வித் திட்ட எதிர்ப்புப் போராட்டம், ரயில் நிறுத்தப் போராட்டம் முதலியவற்றைத் தூண்டிவிட்டார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு வழக்கு நடைபெறத் துவங்கியது.அந்த வழக்கு திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களைத் தண்டிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு நடைபெற்றாலுங்கூடப் பெரிதும் நமக்குப் பயன்பட்ட வழக்காகவே இருந்தது. நம்மைப் பற்றிய முழு விவரங்களைப் பொதுமக்களும், மாற்றுக் கட்சிகளும் புரிந்து கொள்ளக் கூடிய விதத்திலேயே வழக்கு அமைந்தது.

இலட்சத்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டது திராவிட முன்னேற்றக் கழகம் என்பதும், கட்டுப்பாடு, கண்ணியம், அமைதி முதலியவை தி.மு.க.வின் இலட்சியம் என்பதும்,

ஆயிரத்துக்கு மேற்பட்ட கிளைகளையுடைய பெரும் இயக்கம் என்பதும், தமிழகத்தில் காங்கிரசுக்கு எதிராக நிற்கும் மாபெரும் கட்சி திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்பதும் அரசாங்கத்தைச் சேர்ந்த அதிகாரிகளின் சாட்சியங்களின் வாயிலாகவே நாட்டுக்குத் தெரிவிக்கப்பட்டன.

ஐவர்மீது தொடரப்பட்ட வழக்கு, இத்தகைய கணிசமான புள்ளி விவரத்தை மக்கள் மன்றத்திற்குத் தந்திட உதவியது. கிளர்ச்சிகளைத் தூண்டிவிட்டார்கள் என்று குற்றம் சாட்டப்பட்டு ஐவரும் மூன்று மாத வெறுங்காவல் தண்டனை பெற்றார்கள். சிறை சென்றவர் செங்கோலோச்சுவதும், செங்கோலேந்திகள் சிறை செல்வதும் சகஜமாகிவிட்ட நாட்களிலே நாம் வாழ்கிறோம். சிறையிலேயிருக்கும்போதுதான் அந்தச் செய்திகளும் நமக்குக் கிடைத்தன. ஈரான் பூமியிலே ஷா ஓட்டம், முசாதிக் வெற்றி என்ற செய்தி முதல் நாள் வந்தது. மூன்றாம் நாள் முசாதிக் கைது, ஷா ஆட்டம் என்று செய்தி கிடைத்தது. கர்ச்சித்துக் கொண்டிருந்த காஷ்மீரத்துச் சிங்கம் ஷேக் அப்துல்லா முதல் நாள் பிரதமர், மறுநாள் கைதி. சிக்கலைத் தவிர்க்க முடியாத சிலோன் பிரதமர் சேனநாயகா, சிகிச்சையும் ஓய்வும் தேவையென்று அரசு கட்டிலை விட்டு இறங்கி விட்டார். இப்படிச் சுற்றியுள்ள நாடுகளிலே சூறாவளி அடித்தது. கண்டோம் நாம். ஆனால் இங்கு சூதர்கள் சிலர் அந்தச் சூட்சுமத்தை உணராமல், அந்தச் சாம்ராஜ்ய அதிகாரம் சதமென எண்ணியிருந்தார்கள். நல்ல மரங்களிலே புல்லுருவி பாயும்போது, இந்தக் கள்ளிக்காடுகளா இருந்து வாழப் போகின்றன? அந்த நம்பிக்கை நிறைந்த ஆறுதலோடுதான் அண்ணாவும், ஐயாயிரவரும் சிறைப்பட்டிருந்த கொடுமையை ஒருவாறு சமாளித்துக்கொண்டோம், சிறையிலிருந்தபடியே. இனி எமது ராஜ்யத்தின் நிலைமைகளைப் பற்றிக் கொஞ்சம் கவனிப்போம்.

சிறைச்சாலை ஒரு கிராமம் போலவே எல்லா வசதிகளும் உடையது என்று குறிப்பிட்டிருந்தேன் அல்லவா? சலவைச் சாலை உண்டு; தொழிற்சாலை உண்டு, பள்ளிக் கூடம் உண்டு; தோட்டங்கள் உண்டு என்றெல்லாம் படித்தீர்கள் அல்லவா? அவைகளைப் பற்றி முதலில் விளக்குகிறேன். சலவைச்சாலை இருக்கிறது என்பது உண்மைதான். சலவைச்சாலை என்றதும் எல்லாக் கைதிகளும் தங்கள் உடைகளைப் போட்டு அடிக்கடி சலவை செய்து கொள்ளலாம் என்றுதானே நினைக்கிறீர்கள்? அதுதான் தப்பு!

சினிமாப் படத்திலே சலவைச் சாலையொன்றைக் காட்டி, அதிலே ஏராளமான துணிகளையும் வெளுக்கிறார்கள் என்பதைக் காட்டும்போது, எப்படி நாம் பார்த்துக்கொண்டிருக்கலாமோ அது போலத்தான் சிறையிலுள்ள சலவைச் சாலையையும் பார்த்து ரசிக்கலாம். அங்கே எல்லாக் கைதிகளின் ஆடைகளையும் சலவை செய்யமாட்டார்கள். கான்விக்ட் வார்டர்களின் உடைகள், மருத்துவமனைத் துணிகள், பி வகுப்புக் கைதிகளின் உடைகள் ஆகியவற்றைத்தான் சலவை செய்து கொடுப்பார்கள், இந்தக் குறையைக் களைய ஏற்பாடு நடைபெறுகிறது இப்போது!

தொழிற்சாலையிருக்கிறது. திருச்சி சிறையைப் பொறுத்தவரையிலே நெசவுத் தொழில் முக்கியமானது. ஒவ்வொரு கைதியும் நாளொன்றுக்கு இத்தனை கஜம் தர வேண்டுமென்று உத்தரவு போடப்படுகிறது. திருச்சியில் தயாராகும் மருத்துவ மனைக்குத் தேவையான பேண்டேஜ் துணிகள் பெரும்பாலும் திருச்சி சிறைக்கு மட்டுமின்றி, மாகாணமெங்குமுள்ள சிறைகளுக்கும், அரசாங்க மருத்துவமனைகளுக்கும் பயன்படுத்தப்படுகின்றன. இது போலவே மாகாணமெங்கும் உள்ள சிறைகளில் முக்கியமான பொருள்கள் கைதிகளின் உழைப்பைக் கொண்டே தயாரிக்கப்படுகின்றன. சேலம் சிறைச்சாலையில் தயாரிக்கப்படும் இரும்புச் சாமான்களும், பெரிய பாத்திரங்களும், அலுமினியம் தட்டு - குவளைகளும் மாநிலத்தில் உள்ள எல்லாச் சிறைகளுக்கும் உபயோகமாகின்றன. கோவையில் உள்ள சிறையில் பெட்ஷீட்டுகளும், வார்டர்கள், காவல்துறையினர் முதலியவர்களுக்கு உடுப்புத் துணிகளும் தயார் செய்யப்பட்டு, எல்லாச் சிறைச்சாலைகளுக்கும், மீதி அரசாங்க அலுவலர் களுக்கும் உபயோகமாகின்றன. வேலூரில் தயாரிக்கப்படும் செருப்புகள், பூட்ஸ்களும் அரசாங்க அலுவலர்களுக்கும் எல்லாச் சிறைச்சாலைகட்கும் உபயோகமாகின்றன. ராஜமகேந்திரபுரம் சிறைச் சாலையில் நல்ல கம்பளிகள் தயாரிக்கப்படுகின்றன.

இப்படி முக்கியத் தொழில்களும், சில்லறைத் தொழில்களும் சிறைக் கைதிகளாலேயே செய்யப்படுகின்றன. சர்க்கார் அலுவலகங்களில் இருக்கின்ற மரச் சாமான்கள் பல, கைதிகள் சிறைகளில் தயாரித்தவை. சென்னைச் சிறையில் அச்சகம் அமைக்கப்பட்டு - எல்லாச் சிறைகளுக்கும் தேவையான அச்சு வசதிகள் கவனிக்கப்படுகின்றன.

தண்டனை பெற்று வந்துள்ள கைதிகள் உழைக்காமல் இருக்கவே முடியாது. தோட்டி வேலைகளையும் அவர்களில்

சிலரே செய்ய வேண்டும். கூட்டும் கேங் என்ற குழு, கைதிகள் நிறைந்ததாயிருக்கும். அவர்கள் சிறைச்சாலை முழுவதையும் சுத்தப்படுத்திக் கொண்டேயிருக்க வேண்டும்.

குப்பையில்லாவிட்டாலும், கூட்ட வேண்டும்!

அதற்குத்தான் ஜெயில் வேலை என்று பெயர்.

பாதைகளில் முளைத்திருக்கும் புற்களையெல்லாம் அகற்றும்படி உத்தரவிடுவார்கள். மண்வெட்டி கொண்டு விரைவில் செதுக்கியும் விடலாம். செதுக்கி விட்டால் - பிறகு வேலையிருக்காதே? அதற்காகப் புல்லைப் பிடுங்கச் சொல்வார்கள். அவர்களும் மிகவும் சுறுசுறுப்பாக(!) ஆளுக்கொரு நுனிப் புல்லாகப் பிடுங்குவார்கள். அந்தப் புல் வளரும் - அவர்கட்கும் வேலையிருக்கும்! இதற்கும் ஜெயில் வேலை என்றுதான் பெயர். சிறை நிர்வாகத்தை நடத்துவதற்காக முக்கிய அதிகாரிகளும், கைதிகளைக் கண்காணிப்பதற்காக வார்டர்களும் இருக்கிறார்கள். மற்ற எல்லா வேலைகளையும் செய்கிறார்கள்.

சிறையில் குற்றம் செய்யும் கைதிகள், சிறை அதிகாரிகளால் தண்டிக்கப்படுகிறார்கள். கால் விலங்கு பூட்டுதல், கைவிலங்கு பூட்டுதல், நிலவிலங்கு மாட்டி வெயிலில் நிற்க வைத்தல் போன்ற கொடிய தண்டனைகளும் கைதிகளுக்கு அளிக்கப்படுமாம் - முன்பு!

சிறைக்குள்ளேயே திருடுபவர்கள், வேலைக்குப் பயந்து ஒளிந்துகொள்பவர்கள், சிறைச் சட்டங்களை மீறி நடப்பவர்கள் உடனடியாகத் தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள். மாடு போல ஏற்றங்களை இழுத்துத் தண்ணீர் பாய்ச்சுகிற வேலைகளையும் அவர்கள்தான் செய்யவேண்டும். எவ்வளவு குளிர் அடித்தாலும் சரி, ஒரு கால் சட்டை, ஓர் அரைக்கைச் சட்டை, ஒரு குல்லாய் இவைகளால் தடுத்துக் கொண்டுதான் படுத்துக்கொள்ள வேண்டும். நாங்கள் சிலர் பி வகுப்புக் கைதிகளாயிருந்தாலும் கூடக் கடுங்காவல் தண்டனை பெற்றவர்களாதலால் நாங்களும் குல்லாய் அணிந்துகொள்ள வேண்டும்.

(தொடரும்)

அன்புள்ள,

மு.க.

10-7-2002

2781. சிறையை ஜீவிய பூமி ஆக்கிக் கொண்டவர்கள்!

மும்முனைப் போராட்டம்; கல்லக்குடி களம்! (9)

(நேற்றைய தொடர்ச்சி)

காலையில் எழுந்ததும், நாலு நாலு பேராய் குடைநல் உட்கார வேண்டும். சாப்பிடப் போனாலும், குளிக்கப் போனாலும், வேலை செய்யப் போனாலும், காலை முதல் மாலை வரையில் பல தடவை குடைநல் உட்கார்ந்த பிறகுதான் போக வேண்டும். அப்படி குடைநல் உட்காரத் தவறுவது பெருங்குற்றம். ஏன்? தப்பித்து ஓடுவதற்கு எத்தனித்த குற்றமாகக்கூட ஆகிவிடலாம், அதற்கெல்லாம் பெருந்தண்டனைகள் கிடைக்கும். தினந்தோறும் குளிப்பதற்கு அனுமதியுண்டு. ஆனால் அவர்களுக்குத் தரப்பட்ட உடைகளை வாரம் ஒரு முறைதான் அவர்கள் துவைத்து உடுத்துகிறார்கள். அது இவர்களின் சோம்பேறித்தனமோ அல்லது சிறையின் உத்தரவு அப்படியோ தெரியவில்லை. சிறை அதிகாரிகள் நல்லவர்கள். ஆகவே சிறை உத்தரவாயிருக்க முடியாது. மாதா மாதம் ஒருமுறை எண்ணெய் தேய்த்து முழுகலாம் - அதற்கு அளவு எண்ணெய் கொடுக்கிறார்கள். ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை உண்டு. அன்றையதினம் வேலை கிடையாது. அதற்காக இஷ்டம் போல் சுற்றவும் முடியாது. அவரவர்களின் இருப்பிடத்தில் இருக்க வேண்டியதுதான்.

நான் முதலில் சிறைச்சாலை ஒரு கிராமம் போலிருக்கிறது என்று சொன்னதும் பூ! இவ்வளவு தானா? என்று நினைத்தவர்களுக்கெல்லாம் இப்போது கொஞ்சம் நடுக்கம் ஏற்படுகிறதல்லவா? ஆனால் இத்தகைய சிறைச் சாலையைத் தங்கள் ஜீவிய பூமியாக்கிக் கொண்டிருப்பவர்களும் சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். முதன்முறை சிறைக்கு வந்தவனுக்கு வெள்ளைக் குல்லாய் என்று பெயர். பலமுறை வந்தவனுக்குக் கறுப்புக் குல்லாய் என்று பெயர். சிறையில் கறுப்புக் குல்லாய்களுக்குக் குறைவேயில்லை. நிறைய இருக்கிறார்கள்.

குழந்தைப் பருவம் முதல் சிறையிலேயே இருக்கிற கைதியையும் திருச்சியில் கண்டேன். எங்கள் பிளாக் ஹெட் வார்டர் அவனைத் தஞ்சை இளங்குற்றவாளிகள் சிறைப் பள்ளியில் (Borstal School) சிறு பையனாக இருக்கும்போது பார்த்தாராம்.

அவனுக்கு இப்போது ஐம்பது வயது இருக்கலாம். கண்டமாலை நோய் ஏற்பட்டுக் குணமடைந்தவனானபடியால் அவனுக்குக் கண்டமாலை என்று பெயர் சூட்டி அழைத்தார்கள். அவனுடைய தாயார் அவனைச் சிறையிலே பெற்றெடுத்ததாகவும் சொல்கிறார்கள். சுமார் ஐம்பதாண்டு காலத்திலே அவன் ஐந்து ஆண்டுகள் கூட வெளி உலகத்திலே இருந்திருக்க முடியாதென்று அங்குள்ள கைதிகள் சொன்னார்கள். அவனைப் பற்றி அவ்வளவு விவரம் தெரிந்த கைதிகள் எவ்வளவு சிறை அனுபவஸ்தர் களாயிருக்க வேண்டுமென்பதை நீங்களே தெரிந்து கொள்ளுங்கள்! சிறையில் கறுப்புக் குல்லாய்க்காரர்கள் காலத்தைச் சுலபமாகக் கழித்து விடுகிறார்கள், பழைய அனுபவத்தை வைத்துக் கொண்டு. வெள்ளைக் குல்லாய்கள்தான் மிகவும் வேதனைப்படுகிறார்கள்.

சிறையிலே வேதனையில்லாமல் ராஜபோகமாக இருக்குமா என்று கேட்கலாம். வேதனை இருக்க வேண்டியதுதான். முதலில் வந்த கைதிகள் எச்சரிக்கப்பட வேண்டியவர்கள். ஆகவே அவர் களின் கஷ்டத்தைக் கொஞ்சம் குறைத்து, உணவு முதலியவற்றில் சலுகை காட்டும் முயற்சியில் உடனடியாகக் கவலை எடுத்துக் கொள்ள வேண்டும். சிறைக்கு வந்த மூன்று நாட்களுக்கெல்லாம் ஜெயிலர் என்னைக் கூப்பிட்டனுப்பினார். ஆங்கிலத்தில் டைப் செய்யப்பட்ட சில காகிதங்களைக் கொடுத்து, அதைத் தமிழில், உங்கள் நடையில் மொழி பெயர்த்துக் கொடுங்கள் என்றார். அவைகளை நான் தமிழில் எழுதிக் கொடுத்தேன். கடுங்காவல் தண்டனை பெற்ற கைதியாயிற்றே! மறுக்கக் கூடாது. நான் எழுதியதை மாயவரம் ஓவிய நண்பர் பி.டி. ராசன் சிறையிலுள்ள குவாரண்டைன் என்னுமிடத்தில் அழகிய முறையில் வர்ணத்தால் சுவரில் தீட்டிக் கொடுத்திருக்கிறார். அவைகளைப் படித்துப் பார்த்தால் சிறையில் உள்ள வசதிகள், சட்ட திட்டங்கள் எல்லாமே தெளிவாகும் என்று நம்புகிறேன்.

சிறையில் வார்டர்களுக்கு அடுத்தபடியாகப் பதவி வகிப்பவர்கள் காணிக்கை வார்டர்கள்தான். இவர்களுக்குச் சம்பளம் கிடையாது; வெள்ளை உடையும் வெள்ளைத் தொப்பியும்

உண்டு. வார்டர்கள் வேலை முடிந்ததும் வெளியிலே செல்வது போல் இவர்கள் செல்ல முடியாது. காரணம் இவர்களுக்கு வேலை முடிவதேயில்லை. காணிக்கை வார்டர் என்பது உங்களுக்குப் புதிராக இருக்கிறதல்லவா?

கன்விக்ட் வார்டர் என்பதுதான் இப்படித் திரிந்து, தேய்ந்து, காணிக்கை வார்டராகியிருக்கிறது. மூன்று, நான்கு வருடங்களுக்கு மேல் தண்டனை பெற்ற கைதிகள் தங்களின் நன்னடத்தையால் சிறைச் சாலையில் பெறுகிற உத்தியோகமிது! நீண்ட நாள் தண்டனை பெற்ற ஒரு கைதி, மெல்ல மெல்ல ஒரு மேற்பார்வையாளனாகப் பதவி பெற முடியும். ஓவர்சியர் என்று அந்த உத்தியோகத்துக்குப் பெயர். வெள்ளைத் தொப்பியும், கால் சட்டையும், அரைக்கைச் சட்டையும் அவனது உடுப்புகள். அவனது பார்வையிலே பல கைதிகள் கண்காணிக்கப்படுவார்கள்.

சிறுகச் சிறுக ஓவர்சியருக்குப் பதவி உயர்ந்து, அழகான வெள்ளைத் தொப்பியும், வெள்ளைக் கோட்டும், நீண்ட வெள்ளைக் காலுறையும் தரப்பட்டு கன்விக்ட் வார்டராக மாறிவிடுகிறார். ஓவர்சியர், இரவு நேரத்தில் கூண்டிலே அடைபட வேண்டும். கன்விக்ட் வார்டர் - அதாவது கைதி வார்டர் கூண்டிலே அடைபடத் தேவையில்லை. ஆனால் இரவு நேரங்களில் மாறி மாறிக் குறிக்கப்பட்ட கால அட்டவணைப்படி பிளாக்குகளில் காவல் புரிய வேண்டும். திருச்சி சிறையிலுள்ள கன்விக்ட் வார்டர்கள் பெரும்பாலும் ஆயுள்தண்டனை பெற்றவர்கள்தான். ஆயுள் தண்டனை என்பது இருபது ஆண்டுகள். ஆனால் அவர்கள் நடந்து கொள்ளும் முறை - திருந்திய நடவடிக்கை - அயராத உழைப்பு - இவைகளின் காரணமாக அவர்களுக்கு நாட் கழிவு தரப்பட்டு, இருபதாண்டுகட்குள்ளாகவே விடுதலையாகி விடும் வாய்ப்பு இருக்கிறது.

ஆயுள் தண்டனை பெற்றவர்களும் பெரும்பாலும் தூக்குமேடையிலிருந்து திரும்பியவர்கள்தான்! தூக்குமேடைக்குச் செல்லும் கைதிகளுக்காக ஒரு தனி இடம் இருக்கிறது. அதற்குப் பெயர், கண்டம் என்கிறார்கள். அதுவும் திரிந்து தெளிந்த பெயர்தான் Condemned Priso என்பதுதான் கண்டம் என்று மாறியிருக்கிறது.

அங்குவந்த மனிதனுக்கு ஒரு கண்டம் இருக்கிறது என்பதை அது குறிப்பதால், திரிந்த பெயரும் ஒருவாறு பொருந்தும்.

அந்தக் கண்டத்தில்தான் ஒரு காலத்தில் அண்ணாவும், பெரியாரும் வேறு இடமில்லாத காரணத்தால் பத்து நாட்கள் அடைக்கப்பட்டிருந்தார்கள். கண்டத்திலேயிருக்கும் கைதிகள் தனித் தனியேதான் வைக்கப்படுவார்கள். ஒவ்வொரு ஆளுக்கும் ஒரு காவல் உண்டு! அதற்குப் பக்கத்திலேயே சிறிது தூரத்தில் தூக்கு மேடையுமிருக்கிறது.

நாங்கள் சென்ற பிறகு எட்டுக் குற்றவாளிகள் அந்த மேடை மூலம் உலக விடுதலை பெற்றிருக்கிறார்கள். மிகவும் சோகமான செய்தியொன்று! ஒரு குற்றவாளிக்கு ஆயுள்தண்டனை கிடைத்திருந்தது. அவன் அதையும் மறுத்து அப்பீல் செய்தான். அப்பீலில் அவனுக்குத் தூக்குத் தண்டனை கிடைத்துவிட்டது. அவன் நிலைமை எப்படியிருக்குமென்பதை நீங்களே யோசித்துப் பார்த்துக் கொள்ளுங்கள். அக்டோபர் மாதம் 15ஆம் தேதி சூரியனைக் காணாமலே அவன் தூக்கு கயிற்றை முத்தமிட்டு விட்டான்.

கொலைக் குற்றத்தில் ஈடுபட்டு ஆயுள் தண்டனை பெற்ற கன்விக்ட் வார்டர்கள் சிறைச்சாலைக்குள்ளேயே மற்றவர்களோடு மிகவும் நன்றாகப் பழகுகிறார்கள். திருந்தி நடக்க வேண்டும் என்ற ஆசையோடு காலத்தைக் கழிக்கிறார்கள். குடிவெறியில் கொலை செய்தவர்கள் - கற்பு தவறிய மனைவியைக் கொலை செய்தவர்கள் - பங்காளிகளைக் கொலை செய்தவர்கள் - நிலத் தகராறுகளால் கொலைச் செயலில் ஈடுபட்டவர்கள் - எதிரிகள் கொடுத்த தொல்லையால் கொலை வெறிக்குத் தூண்டிவிடப் பட்டவர்கள் - ஆகியவர்களைத்தான் அதிகமாகக் காண முடிகிறது சிறைச்சாலைகளில்!

இருபது ஆண்டு சாதாரணமானதா? இளைஞனாக இருந்தால் வனப்பும், வசீகரமும் நிறைந்த வாலிபம் சிறைச்சாலையிலேயே முடிந்து விடுகிறது. நாற்பது வயதிற்கு மேற்பட்ட மனிதனாகத்தான் அவனை வெளியே பிரசவிக்கிறது சிறைச் சாலை. வாலிபத்தைக் கடந்த நிலையிலே உள்ளவன், ஆயுள் தண்டனை பெற்றால், வாழ்வின் சுகத்தை இனிமேல் அனுபவிக்க முடியாது என்ற பருவத்திலே, சக்கை மனிதனாக, அவனைச் சிறைச்சாலை வெளியே உமிழ்கிறது! ஆயுள் தண்டனையைவிட மரண தண்டனை எவ்வளவோ மேல்தான்!

ஆனால் ஆயுள் தண்டனை பெற்ற கைதிகள், வெளியில் வந்த பிறகு புதிய மனிதர்களாக மாறிக் கொலைவெறியைத் தடுக்கும் கொள்கைக்காகப் பாடுபட்டார்களேயானால், ஒரு கொலையால் வந்த பழியைப் பல உயிர்களைக் காப்பாற்றுவதன் மூலம் போக்கிக் கொள்ளலாம். அதை விட்டு வெளியில் வந்ததும், என்னிடம் யாரும் வாலாட்டக் கூடாது. நான் கொலை கேசில் ஜெயிலுக்குப் போனவனாக்கும்! என்று மீசையை முறுக்கித் தோளைத் தட்டிக் கொண்டு நின்றால், அது வீரமுமாகாது! விவேகமுமாகாது! கோழைத்தனத்தின் கூக்குரலாகவே கருதப்படும்.

எங்கள் ராஜ்யம் குறையின்றி நடந்து கொண்டிருக்கும்போது சென்னையில் அடைபட்ட அறப்போர்த் தலைவர்களும், தொண்டர்களும், வரிசை வரிசையாக விடுதலை பெற்றுக் கொண்டேயிருந்தார்கள். அண்ணாவும், அன்றைய துணைச் செயலாளர்கள் நாவலர் நெடுஞ்செழியன், மதியழகன் இருவரும் சிறையிலேயிருந்த காரணத்தால், கழகத்தின் காரியங்களைக் கவனிக்கும் பொறுப்பாளர் பதவியைத் தோழர் ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ. அவர்கள் ஏற்றுக் கொண்டார். இது நமது கழக வரலாற்றில் ஒரு முக்கியமான கட்டம் என்று கூறலாம். தோழர் கோவிந்தசாமி பொதுத் தேர்தலில் காங்கிரசை எதிர்த்து நின்று, திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒப்பந்தப் பத்திரத்திலே கையெழுத்திட்டு அதன் ஆதரவு பெற்று வெற்றி மாலை சூடியவர். வெற்றிபோதையிலே மக்களை மறந்து விட்டுப் பதவி வெறியிலே அற்பர்களாக மாறி விடும் ஒரு சில அரசியல் மோசடிக்காரர்கள் உலவும் தமிழகத்திலே, அவர்களுக்கும் தன் பொன்னான செயல் மூலம் சாட்டையடி கொடுத்தவர் கோவிந்தசாமி. கழகத்தின் முக்கியமானவர்கள் எல்லாம் சிறைக் கூண்டுகளிலே! வெளியிலேயிருந்த ஒருசில தலைவர்களும் நாடெங்கும் மின்னல் வேகத்தில் சுற்றுப்பயணம் செய்து கொண்டிருந்தார்கள்.

இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் தலைமைக் கழகப் பொறுப்புகளைத் தாங்கி நடத்திட, கோவிந்தசாமி போன்ற தகுதி மிக்கவர்தான் தேவை. பொறுப்பேற்ற கோவிந்தசாமி கழகத்திலே பல ஆண்டுக் காலம் இருந்து பழக்கப்பட்ட ஒருவரைப் போலவே கழக வேலைகளை மும்முரமாகக் கவனித்திடவும் துவங்கினார். கழகத்திற்கு அவர் ஒரு தூணாக மாறியதுமல்லாமல், தி.மு.க.வின் தேர்தல் கொள்கையை நையாண்டி செய்து வந்த கம்யூனிஸ்ட்,

காங்கிரஸ் போன்ற கட்சிகளுக்கு அசைக்க முடியாத பதிலாகவும் தன்னையாக்கிக் கொண்டார்.

கழகம் மக்கள் மனத்திலே விசாலமான இடத்தையும், சரித்திரத்திலே நிலையான இடத்தையும் பெற்றுக் கொண்டு, தென்னகத்தின் வீதிதோறும் புது நடைபோட்டு வளர்கிறது என்ற இன்பம், தேனூறும் செய்திகளாக உருவெடுத்திடுவது கேட்டுப் புளகாங்கிதமுற்றிருந்தது எமது சிறை ராஜ்யம்! நான் முன்பே கூறியிருக்கிறேன், எங்கள் ராஜ்யம் இரண்டு மாத காலம்தான் பரந்து கிடந்தது என்றும், அதன்பிறகு சிறுகச்சிறுகத் தேய்ந்து விட்டது என்றும்! அந்தத் தேயும்நிலை ஆரம்பமாகி விட்டது.

ஆகஸ்ட் 24ஆம் நாள் முதன்முறையாக எங்கள் ராஜ்யம் குறையத் தொடங்கிவிட்டது. முதலில் இருபதுக்கு மேற்பட்டோர் எம்மைப் பிரிந்து சென்றார்கள். அடுத்த இரண்டு நாட்களில் பொறையாறு அபூபக்கர் முதலிய பல தோழர்கள் ராஜ்யத்தை விட்டு வெளியேறினார்கள். எஞ்சியுள்ள தோழர்களுக்கு விடுதலை உணர்ச்சியைக் கிளப்பிவிடக் கூடிய அந்தப் பிரிவுகளால் ராஜ்யம் சோபையிழந்து விடக் கூடாதென்பதற்காகப் பேச்சு மன்றம் முன்னிலும் வேகமாகப் பணியாற்றியது. அந்த ஒன்றரை மாதத்திற்குள்ளாகவே சில நல்ல பேச்சாளர்கள் தயாரானார்கள். பலதரப்பட்ட பொருள்களின் மீது விவாதம் நடத்திப் பேச்சாற்றலை வளர்க்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பேச்சுமன்றம் புதிய புதிய கருத்துகள் பற்றி விவாதிக்கவும், விளக்கம் பெறவும், விரிவுரை நிகழ்த்தவும் தன்னைத் தயாராக்கிக் கொண்டது. குறளோவியம் பற்றி இரண்டு மூன்று நாட்கள் தோழர்கள் உரையாற்றியபின் நான் முடிவுரை கூறினேன்.

குறளின் காமத்துப் பாலின் சுவையைத் தோழர்களிடம் கூறும்போது, சிறையில் இருக்கிறோம் என்ற எண்ணத்தையும் சில நிமிடங்கள் மறந்து, குறளாசிரியரின் வர்ணனையிலே ஆழ்ந்தார்கள். ஒரு தோழர் பேசும்போது குறிப்பிட்டார், குறளுக்குச் சிறப்புச் சொல்ல வந்த யாரோ ஒருவர் வாமனாவதாரம் உலகை இரண்டடியால் அளந்தான். வள்ளுவனும் இரண்டடியாக அளந்தான் என்பதாகப் பாராட்டியிருக்கிறார் என்று! அதுபற்றி நான் குறிப்பிட்டேன்,


வாமனன் இரண்டடியால் உலகை அளந்துவிட்டு, மூன்றாவது அடியை மாபலி என்ற மனிதன் தலையிலே வைத்து அழுத்தினான்.

ஆனால் வள்ளுவன் மனிதன் தலையிலே ஏறிக் கொள்ளவில்லை. மனிதனுக்காக நீதி வகுத்தான் என்று விளக்கிச் சொன்னேன். நாற்காலி என்னும் பொருள் பற்றி ஒரு நாள் உரையாற்றினோம். இப்படி எத்தனையோ சொற்பொழிவுகள்! சிறைக்குச் சென்றாலும் அது விடுகிறதா என்ன!

நாமெல்லாம் மொழிப் பித்துக் கொண்டு அலைகிறோம் என்று அரசியல் எதிரிகள் குற்றம் சாட்டுகிறார்களே! அது எவ்வளவு தூரம் உண்மையென்று ஒரு நாள் விவாதித்தோம். மொழிப்பற்றா? பித்தா? என்று ஆராய்வதற்கு முன்பு பற்று என்பதற்கும், பித்து என்பதற்கும் உள்ள வேறுபாட்டை உணர வேண்டும். பற்றின் உச்ச நிலை தான் பித்து. அந்தப் பித்துதானே உண்டாவதில்லை.

(தொடரும்)

11-7-2002



1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

முதற்பதிப்பு 2022